

ஸ்ரீமத் திருக்குடந்தை

ஆஸ்ரமம்



ஸ்ரீ :



ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹா தேசிகாய நம :

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

பங்குனி புஷ்யம்



பதிப்புரிமையாளர்கள் :

ஸ்ரீமதாண்டவன் பெரியாச்சரமம்

ஸ்ரீரங்கம்

1981

இந்நூல் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருநக்ஷத்திரத்தன்று (ரௌத்ரி பங்குனி புஷ்யம் — ஏப்ரல் 12, 1981) பெங்களூர் ஸ்ரீ N. கிருஷ்ணன் அவர்களால் வெளியிடப்பட்டு, பெங்களூர் ஸ்ரீ T. S. ராஜம் அவர்களின் முன்னிலையில் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ **வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்** திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

பதிப்புரிமை : ஸ்ரீமதாண்டவன் பெரியாச்ரமம், ஸ்ரீரங்கம்.

Art Plates : Neo Art Press, Madras 600 014
Text : Rex Printers, Madras 600 004

ஸ்ரீ :

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம :

மதிப்புரை

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் தொன்று தொட்டு தழைத்தோங்கி வருவது, ஸ்ரீமந் நாராயணன் தொடங்கி ஆழ்வார்கள் வழியே நாதமுனி, ஆளவந்தார், ஸ்ரீபகவத் ராமானுஜர் முதலான ஆசார்யர்களை அடைந்து, அவர்களுக்கும் பின்புள்ள ஆசார்யசீலர்கள் முகமாக இச்சம்பிரதாயம் வளர்ந்து வருகின்றது.

ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார் அல்லது யாமுன முனிகள், ராமானுஜ முனிகள் இவர்களால் ஐயமற விளக்கப்பட்டு பரப்பப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தையே முனித்ரய சம்பிரதாயம் எனக் கூறுவர் பெரியோர். அதில் அவதரித்த மகான்கள் பலர். அவர்களில் ஒருவராகிய ஸ்ரீநிவாஸ மகா தேசிகன் காலத்தில், இன்றைக்குச் சுமார் 200 வருஷங்களுக்கு முன் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் நிர்மாணிக்கப்பட்டு, பின்பு பட்டத்திற்கு எழுந்தருளிய ஆசார்யர்களால் பரிபாலிக் கப்பட்டு ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தமும் அனுஷ்டானமும் மிக உயர்ந்த முறையில் பரப்பப்பட்டு வருகின்றன.

தற்காலம் அந்த ஸ்தானத்தை அலங்காரிக்கிற ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் ஸ்வாமி திருக்குடந்தையில் அவதரித்து, சிறுவயதிலிருந்தே ஸம்ப்ரதாய நூல்களைக் கசடறக் கற்றும், முக்கியமாக, ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் அதிகம் ஈடுபட்டும், ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதியில் நித்ய கைங்கர்யம் செய்தும், ப்ரவசனங்கள் செய்தும், நிறைந்த புகழுடனும், பல பெரியோர்களால் போற்றப்பட்டும் எழுந்தருளியிருந்தார். பின்பு சென்னை, பெங்களூர், கல்கத்தா, டெல்லி முதலிய நகரங்களுக்கும் சென்று ப்ரவசனம் செய்து அநேக ஸ்ரீவைஷ்ணவர்களை உஜ்ஜீவிக்கச்செய்து புகழடைந்தார். தன் தேஜஸ், ஜ்ஞானம், க்யாதி இவைகளுக்கேற்ப ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன் நியமனத்திற்கும், சிஷ்ய வர்க்கத்தினரின் ப்ரார்த்தனைகளுக்கும் இணங்கி, 1963ம் வருடம் ஆச்ரம ஸ்வீகாரம் ஏற்றுக்கொண்டார்.

அன்று முதல் இன்று வரையில் ஸ்ரீமத் ஆண்டவன் கால் நடையாகவே குமரி முதல் இமயம் வரையில் திவ்ய தேசங்கள் எல்லாவற்றிற்கும் சென்று மங்களாசாஸனம் செய்தும், ஆங்காங்கே பாடசாலைகள், ஆச்ரமங்கள். ஆசார்ய ஸந்நிதிகள், மற்றும் தேவாலயங்கள் நிர்மாணித்தும், சிஷ்ய வர்க்கங்களுக்கு ஸதுபதேசம் செய்துகொண்டும் இருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இந்த வெளியீட்டில் ஸ்ரீமத் ஆண்டவனுடைய வாழ்க்கை வரலாறு, அவர் நிர்மாணித்த ஆச்ரமங்கள் முதலியவைகளின் விவரங்கள், அவருடைய ப்ரவசனங்களுடைய கீர்த்தி இவைகள் பற்றி விஸ்தாரமாக புகைப்படங்களுடன் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு உன்னதமான ஆசார்யன் ப்ரபாவத்தை ஸ்ரீ எஸ். ராமானுஜம் சரித்திர ரூபமாக வெளியிட முற்பட்டது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கும், முக்கியமாக ஸ்ரீமத் ஆண்டவன் சிஷ்யர்களுக்கும் செய்யும் பெரும் கைங்கர்யமாகும்.

அவருக்கு ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹத்தால் ஸகல ச்ரேயஸ்ஸும் உண்டாகப் பிரார்த்திக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை தற்காலம் உள்ள காகிதக்கட்டுப்பாடு, விலையுயர்வு இவைகளுக்கிடையில் அச்சிட்டு வெளியிடப் பெரும் பண உதவியளித்த பெங்களூர் ஸ்ரீ என். க்ருஷ்ணன் அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இது அவரது உதார குணத்தையும் ஆசார்ய அபிமானத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

பொக்கிஷம் போன்ற இந்நூலை அச்சிட்டு வெளியிட உதவிய ஸ்ரீ ஆர். கே. ஸ்வாமி அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீ வைஷ்ணவ சமூகமும், ஸ்ரீமத் ஆண்டவனுடைய சிஷ்ய கோடிகளும் இந்நூலைப் படித்துப் பயனடைந்து எல்லா ச்ரேயஸ்யையும் அடைய ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்திக்கிறேன்.

பெங்களூர்
20-2-1981

டி. எஸ். ராஜம்

ஸ்ரீ :

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம :

நன்றியுரை

ஆழ்வார் அவதரித்து பெருமை பெற்ற தாமிரபர்ணீ நதிக்கரையில் சீரும் சிறப்பும் கொண்ட நல்லதொரு பரம்பரையில் பிறந்தேன். எனது திருத்தாயார் இயற்கையிலேயே தெய்வசிந்தனையும், தெய்வ வழிபாடும் நிரம்பப்பெற்றவள். நெல்லையிலுள்ள கீழ்நத்தம் என்கிற கிராமத்தில் குடிகொண்டு அங்கே கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வேணுகோபாலன் ஸன்னிதியில் தினமும் எம்பெருமானுக்கு திருவிளக்கு திருமாலைகள் ஸமர்ப்பித்தும்; கோயிலைக் கோலமிட்டுச் சுத்தம் செய்தும் வருவது அவள் வழக்கம். இளம்பிராயத்தில் ஆன்மீக சிந்தனைக்கு என் உள்ளத்திலே வித்திட்டவள் எனது திருத்தாயார் என்பதனைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறேன். அது மட்டுமல்லாமல் அந்தக் கிராமத்தில் பல மாதங்கள் உகந்து எழுந்தருளியிருந்த ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் என்கிற தேரழுந்தூர் ஆண்டவனிடத்தில் எனக்கு ஸமாச்ரயணமும், பரந்யாஸமும் செய்து வைத்தாள். இங்ஙனம் திருத்தாயாரின் பரிபூரணமான அன்பும், ஆசியும், உயரிய ஆசார்யனுடைய ஸம்பந்தமும் பெற்ற நான் வாழ்க்கையில் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றேன். தொடர்ந்து ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனது அருள் என்னை அவர்பால் ஈர்த்தது.

ஸ்ரீமதாண்டவன் கடாக்ஷம் என்மேல் விழுந்த நாள் முதல் இன்றுவரை நான் பாக்யத்தையும், நிம்மதியையும் அனுபவித்து வருகிறேன். தாய் மனங்கொண்டு எனக்கு அம்மஹான் அருளுகின்ற ஆசிகள்தான் உடல்நலம் குன்றும்போதெல்லாம் என்னைக் குணப்படுத்துகின்றன. எல்லாம் நிறைந்த ஆசார்ய வள்ளலுக்கு அவர்தாம் என்மீது சொரியும் அன்பிற்கும் அருளுக்கும் நன்றி செலுத்த முடியாது என்றாலும் அவரது பெருமைகளை நான் உணர்ந்து அனுபவித்தது போல் நாட்டிலுள்ளோரும் அறிந்து பயன்பெற வேண்டுமென்பதை எண்ணி இந்நூல் வெளியிட ஆசைப்பட்டேன்.

இம்முயற்சியில் என்னை ஊக்குவித்த ஸ்ரீ T. S. ராஜம் அவர்களுக்கும், ஒத்துழைத்த (டெலிபோன்ஸ்) ஸ்ரீ ராமானுஜனுக்கும், செயல் படுத்த உதவிய சென்னை ஸ்ரீ R. K. ஸ்வாமிக்கும், அவரது நிறுவனத்திற்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் எனது அன்பின் - பக்தியின் காணிக்கையாக ஸமர்ப்பிக்கிறேன்.

சென்னை
22-2-1981

N. கிருஷ்ணன்

ஸ்ரீ :

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம :

தொகுத்தோனது விண்ணப்பம்

ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தைப் பரப்பி வருகின்ற ஆசார்ய பரம்பரை களுள் நம்மாண்டவன் பரம்பரை அதிவிலக்ஷணமானது. "கோதற்ற குருக்கள்' கொண்ட இந்த பரம்பரையில் திருக்குடந்தை ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் இன்று நம் கண்கண்ட தெய்வமாய், பாரதம் போற்றும் பெயரும் புகழும் கொண்டு நம் புண்ணிய பூமியின்எலலாத்திசைகளிலும் நம் ஸத்ஸம்ப்ரதாயத்தின்பெருமையைப் பரப்பிவருகின்ற ஒப்பவரில்லா உயர்குருவாய் நம்மிடையே எழுந்தருளி நமக்கு அருளைப் பொழிந்து வருவது நாம் செய்த நற்தவத்தின பயனேயாம்.

அடியேனுக்கு ஆசார்யனுடைய ப்ரதம (முதல்) கடாக்ஷம் (நோக்கு) திருக்குடந்தை ஆராவமுதன் ஸன்னிதியில் கிடைத்தது முதல் சுமார் பதினேந்தாண்டுகள் இம்மஹானுடைய திருவடிவாரத்தில் ஒதுங்கி எண்ணிலாப் பேறு பெற்றேன். நல்லுரைகளையும். மெய்யுரைகளையும், தமிழ் மறையின் தெள்ளிய சுவைகொண்ட விரிவுரைகளையும் அடியேனுக்கு ஆசார்யன் வளளலாய் வாரி வழங்கியருளினர். வானேற வழிகாட்டியதுமல்லாமல் அதற்குரிய வகையதையும் அவர் வழியே பெற்றேன். இம்மைக்கும், மறுமைக்கும் அடியேன் பெற்ற இந்நன்மைகளுக்கு நன்றி பாராட்டுவது என்பது இயலாததொன்று. மேலும் என்றும் கடன்பட்டவனேயாம்.

ஆசார்யாள் உகந்தருளிய பேருதவிகளுக்கு நன்றி செலுத்துவது எப்படி என்று ஆராய்ச்சிசெய்து அதற்கு ஒரு நல்ல முடிவினை "மாயனும் காணகில்லான்" என்று ஜகதாசார்யனை ஸ்வாமி தேசிகனே கைவாங்கி நிற்கிறார். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் "எண் திசையுமறிய இயம்புகேன்", என்று மதுரகவி ஆழ்வார் தம்முடைய ஆசான் நம்மாழ்வார் தமக்கு அருளிய இன்பப்பேறுகளுக்கு கைம்மாருக அவரது அருளை பார்களறிய பறைசாற்றுவேன் என்று ஸாதித்தருளிய தொல்வழியில், "குரும் ப்ரகாசயேத் தீமான்" என்கிற கோட்பாடு வழிகாட்ட, இந்த ஆசார்ய ஸார்வபௌமனின் எண்ணிலடங்காப் பெருமைகளையும், அண்டி உய்வதற்கு உறுதுணையாய் ஸ்வாமியின்பால் காணக்கிடைக்கின்ற உயர் குணங்களையும், நாடும், நல்லார்களும், நம் பின்னேரும் அறியும் வண்ணம் தொகுத்தளித்து அடியேனுடைய நன்றிப் பெருக்கைக் காட்டி சிறிது நிறைவுபெற அடியேன் உள்ளம் விழைந்ததுவே இத்தொகுப்பிற்குக் காரணமாயிற்று.

ஆசார்ய வள்ளலுடைய பெருமையையும் அடியேனுடைய அயோக்யதை யையும் கண்டு கிடைத்த ஒரு வாயப்பினின்றும் அகலவும் பாராது, அல்லும் பகலும் அவரது அன்பினை—அருளை துணையாகக்கொண்டு, ஆசானது திருவடிகளையே தஞ்சமாகப் பற்றி, கிடைத்த குறிப்புக்களைக் கொண்டு "கடலைக் கையிட்டுக் காட்டு

மாப் போலே'' அடியேன் எடுத்துரைக்க முயலுவது விந்தையே தான் ! உலகமே கண்கூடாக அனுபவிக்கும் உண்மையை அதனிடமே சொல்ல முற்படுவது கேலிக்கும் உரியதுதான். தகைமை கொண்ட தவப் பெரியாரின் தெள்ளிய செயல்களைப் பிற்பட்டோரும் அறியட்டும் என்பதுவே இத்தொகுப்பின் குறிக்கோள்.

ஆசார்ய ஸார்வபௌமன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் திருவடி நிழலில் ஒதுங்கி வர்த்தித்த வேளைகளில் அடியேன் அனுபவித்தவைகளும், நம் ஸத்ஸம்ப்ரதாய பரம்பரையைப் பற்றி முன்புள்ளோர், தொகுத்தவைகளிலிருந்து கிடைத்த சில குறிப்புகளும், நம் ஆசிரமத்தின் வெளியீடான '' ஸ்ரீ ரங்கனுத பாதுகா''வில் அவ்வப்போது வெளிவந்த ஆசிரமச் செய்திகளிலிருந்து சேகரித்தவைகளும் இத்தொகுப்புக்கு ஆதாரங்கள். இதில் காணும் செய்திகள் ஸம்பவங்கள் அத்தனையும் நம் ஆண்டவனது அதிமானுஷ சேஷ்டிதங்கள். ஸ்ரீமதாண்டவன் செய்தருளிய இத்திருப்பணிகள் எல்லாம் மிகைப்படுத்தி எழுதப்பட்டவையல்ல. உண்மைக்குப் புறம்பானவையுமல்ல.

இங்ஙனே ஒரு நூல் வெளியிடவேண்டுமென்கிற ஆசை அடியேனுக்கு இருந்தும், அதை நிறைவேற்றி நிறைவுபெறப் போதுமான சூழ்நிலைகள் குறைவான காரணத்தால் இந்த ஆசையை உள்ளத்தில தேக்கி வைத்திருந்தேன். அதனைத் தூண்டி அடியேன் மனோரதம் நிறைவுபெற ஊக்கமளித்த பெரியார்கள் ஸ்ரீ உ. வே. T. S. ராஜம் ஸ்வாமியும, ஸ்ரீ உ. வே. நடுவக்கரை டாடா ஆயில் மில்ஸ் V. ரங்காச்சாரியர் ஸ்வாமியும் ஆவார்கள்.

இந்த மஹத்தான கைங்கர்யத்தை நிறைவேற்றித்தர ஆக்கமளித்தவர் பெங்களூர் ஸ்ரீ உ. வே. N. கிருஷ்ணன் ஸ்வாமி. இதன் வெளியீட்டைத் தன் மூச்சுக்காற்றாய் நினைத்துச் செயல்பட்டு அடியேனை அவ்வப்போது உற்சாகம் குன்றாமல் ஊக்கமும ஆக்கமும் அளித்தது இவரது ஆழ்ந்த ஆசார்ய பக்திக்கும் பண்புக்குமோர் எடுத்துக்காட்டு. இப்பெரியோர்களுக்குத் தலையல்லால் கைம்மாறில்லை.

இந்நூல் வெளியிடுவதற்கு அடியேனுடன் ஒத்துழைத்த எல்லோருக்கும் குறிப்பாக சிங்கனூர் ஸ்ரீ உ. வே. கோபால தேசிகாச்சாரியர் ஸ்வாமிக்கும், பேருதவிகள் செய்தருளிய தி. நகர் அட்வகேட் ஸ்ரீநிவாஸன் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இத் தொகுப்பின் காண்கின்ற சில அபூர்வமான புகைப்படப் பிரதிகளை அடியேனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அனுப்பிக்கொடுத்த பெரியோர்களுக்கும், அன்பர்களுக்கும் ஸ்ரீமதாண்டவன் திருவடிகளுக்கும் அடியேன் என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

இந்தத் தொகுப்பினைப் புத்தக வடிவில் கவர்ச்சியாய், வண்ணப்படங்களோடு வெளியிட்டு வழங்க ஆலோசனைகள், மற்றும் அயராத பெருமுயற்சிகள் அனைய ப்ரயோஜனமாய் எடுத்துக்கொண்டு செயல்படுத்திக்கொடுத்த ஸ்ரீ உ. வே. R. K. ஸ்வாமி அவர்களுக்கும், அவர் வழி நடந்த அவரது நிறுவனத்து ஸ்ரீமான் N. பத்மனுபனுக்கும் நன்றி சொல்ல நான் அசக்தன்.

குறுகிய காலத்தில் குறித்த நேரத்தில் சிறந்த முறையில் இந்நூலை அச்சிட்டுத்தந்த சென்னை ரெக்ஸ் ப்ரிண்டர்ஸாருக்கும், வண்ணப்படங்களை அச்சிட்டுத்தந்த சென்னை ''நியோ ஆர்ட் பிரஸு''க்கும் அடியேனது நன்றி.

இந்நூல் தன்னைப் படித்து மகிழும் பெரியார்கள் இதில் காணும் சொற் குற்றங்களை நீக்கி குணங்களையே கொள்ளவேண்டுமென விழைகிறேன். பல செய்திகளைப் பல ஆதாரங்களின் வழியே சேகரிக்கும்போது பல ஸம்பவங்கள், நிகழ்ச்சிகள் விட்டுப்போயிருக்கக் கூடும். மேலும் நம் ஸ்ரீமதாண்டவனிடத்துப் பல பெரியோர்கள் நிறைந்த பக்தியுடையார்களாய், விளம்பரமில்லாமல் ஆசார்யனுகந்தருளிய பல கைங்கரியங்களில் பலவிதமாக உபகரித்திருக்கிறார்கள். அம்மஹான்களையெல்லாம் அடியேன் உள்ளத்திறுத்தி வணங்குகிறேன். பாலகனுய் அடியேன்பால் காணும் குற்றங்களுக்கு க்ஷமை கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

உயர்ந்த இக்கைங்கர்யத்தைச் செவ்வனே நிறைவேற்றித்தர அடியேனுக்கு இன்துணை, வன்துணை, நல்துணையாயிருக்கும ஸ்ரீமதாண்டவனது நிறைந்த திவ்யானுக்கிரஹத்திற்கு கைம்மாறுக ஏழையேன் அவரது திருக்கமல பாதங்களில் பல கால் பலமுறை விழுந்து எழுந்து பணிந்து, இத்தொகுப்பினை ஆங்கே ஸமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு
தாஸன்
இராமானுஜன்
(டெலிபோன்ஸ்)

திருக்குடந்தை
27-2-1981

ஸ்ரீ:

மலரின் இதழ்கள்

பக்கம்

1 ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

4 ஸ்ரீ பாதுகா ஸேவக ராமானுஜ மஹாதேசிகன்

7 ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்

9 ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

14 ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

27 ஸ்ரீரங்கனுத மஹாதேசிகன்

28 ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

41 திருநக்ஷத்ர மஹோத்ஸவங்களும் வித்வத் ஸதஸ்ஸுகளும்

46 திவ்யதேச மங்களாசாஸனங்கள்

58 இதர திவ்யதேச மங்களாசாஸனங்கள்

74 ஸம்ப்ரோக்ஷணங்களும், ஆசிரம, கோயில் நிர்மாணங்களும் திருப்பணிகளும்

104 ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை

141 ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை—அட்டவணை

150 ஸ்ரீமதாண்டவன் நீராட்டம் கண்டருளிய புண்ய நதிகளும் நீர்நிலைகளும்

169 பதரிகாச்ரம யாத்திரை

192 ஆன்மீகத் தலைவர்களும் அண்ணல் ஸ்ரீமதாண்டவனும்

196 அரசியல் தலைவர்கள், பெரியார்களுடன் ஸ்ரீமதாண்டவன்

201 பாரதத்தின் பல பகுதிகளில் பொது வரவேற்புகள்

223 நிறுவிய அறக்கட்டளைகள்

225 ஸ்ரீரங்கம் தெற்கு கோபுர இரண்டாம் நிலை நிர்மாணம்

228 புகழ் மாலைகளும், சொல்லாரங்களும்

233 பெரியாண்டவன் மங்களம்



ஸ்ரீ :





ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம :

श्री:
मणि पादुकयो र्युगं मुरारे :
मम नित्यं विदधातु मंगलानि
अधिकृत्य चराचरस्य रक्षां
अनुकंपा क्षमयो रिवावतार:
=



ஸ்ரீ :

ஸ்ரீ ரங்கநாயகாயை நம :

ஸஹதர்மசரீ சௌரே : ஸமமக்ரித ஜகத்வரி நாம I

அனுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாத நிக்ரஹாம II



Block : Lifco

ஸ்ரீரங்கநாயகி, ஸ்ரீரங்கம்

ஸ்ரீ :

ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம :

கமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹ மேதினம் ।
ப்ரவக்தாச்சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய ய:ஸ்வயம் ॥



Block : Lifco

ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கம்

ஸ்ரீ :

ஸ்ரீமதே : நம : :

ஈசாநாம் ஜகதோஸ்ய வேங்கடபதே : விஷ்ணோ : பராம் ப்ரேயஸீம்
தத்வக்ஷஸ்தல நித்யவாஸ ரஸிகாம் தத் க்ஷாந்தி ஸம்வர்தனீம் |
பத்மாலங்க்ருத பாணி பல்லவயுகாம் பத்மாஸனஸ்தாம் ச்ரியம்
வாத்ஸல்யாதி குணோஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந் மாதரம் ||



ஸ்ரீ அலர்மேல்மங்கை தாயார்

ஸ்ரீ :

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம :

ப்ரசமித கலி தோஷாம் ப்ராஜ்ய போகாநுபந்தாம்
ஸமுதித குணஜாதாம் ஸமயகாசாரயுக்தாம் ।
சரிதஜன பரஸ்மான்யாம் ச்ரேயஸீம் வேங்கடாதரௌ
சரிய முபசினு நித்யம் ஸ்ரீநிவாஸ தவமேவ ॥



ஸ்ரீ திருவேங்கடமுடையான்

ஸ்ரீ :

ஸ்ரீ பெருந்தேவீ நாயக்யை நம :

ஆர்த த்ராண வ்ரதிபிரம்ருதாஸார நீலாம்பு வாஹை :
அமபோஜானு முஷஸி மிஷதாம் அந்தரங்கைரபாங்கை : I
யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே தேவி த்ருஷ்டிஸ்த்வதீயா
தஸ்யாம் தஸ்யாமஹமஹமிகாம் தன்வதே ஸம்பதௌகா : II



ஸ்ரீ பெருந்தேவித்தாயார், காஞ்சீபுரம்

ஸ்ரீ :

ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹரவரத பரப்ரஹ்மணே நம :

வரத விரசய கவம் வாரிதாசேஷ தோஷாம்
புனருபசித புண்யாம் பூஷிதாம் புண்ய கோட்யா ।
ஸித முதித மநோபிஸ் காவகைர் நித்ய ஸேவ்யாம
வதரிபு ஜநயோகாம் வஸ்திகாம்நஸ் ஸம்ருகதிம ॥



ஸ்ரீ தேவாதிராஜன், காஞ்சீபுரம்

ஸ்ரீ :

ஸ்ரீ கோமளவல்லீ நாயக்யை நம :

ஸாமாதி சக்ருதி கோஷிதாத்ம விபவா ஹேமாரவிந்தாஸநா
தாமாக்ஷ : க்ருத திவ்ய காஞ்சனருசிஸ்ஸோ மாபிராமாநநா ।
ராமா சார்ங்கதரஸ்ய கோமளலதா நாமாஸ்து பூமௌ ஸதா
ஸீமா ஸத்குண ஸம்பதாம விரத கேஷாய பாமாமணி : ॥

பத்யு : ப்ரபாவல்யை கௌஸ்துப வைஜயந்த்யை
ஸ்ரீவத்ஸ பூஷணமுர : பரிபூஷயந்தீ ।
துக்காப்ய ராசிகுல பங்கள வைஜயந்தீ
ஸ்ரீ கோமலாஸ்து ஸததம் ஸுகுணைர் ஜயந்தீ ॥



Block : Lifco

ஸ்ரீ கோமளவல்லித் தாயார், திருக்குடந்தை

ஸ்ரீ :

ஸ்ரீமதயர்யாப்தாம்ருத பரப்ரஹ்மணே நம :

தேவம் சார்ங்க தரம் விஷ்ணும் யே ப்ரபந்நா : பராயணம் ।
ந தேஷாம் யமலோகம் ந ச தே நரகௌகஸ : ॥

(வாமந புராணம்)

வந்த நாள் வந்தென்னெஞ்சிடம் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியான் அடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க்கென்னைச்
சேர்கொடான் இது சிக்கெனப் பெற்றேன்
கொந்துலாம் பொழில் சூழ் **குடந்தைத்** தலைக்
கோவினைக் குடமாடிய கூத்தனை
எந்தையை எந்தை தந்தை தம்மானை
எம்பிரானை எதாதல் மறக்கேனே.

(பெரிய திருமொழி 7-3-3)



Block : Lifco

ஸ்ரீ ஆராவமுதன், திருக்குடந்தை

ஸ்ரீ :

ஸ்ரீ திருநாராயண பரப்ரஹ்மணே நம :

நவ நவ பஹு போகாம் நாத நாராயணத்வம்
விரசய துரிதௌகைஸ்தாமநாக்ராத கந்தாம் ।
ஸஹஜ ஸுலப தாஸ்யைஸ் ஸத்பிரப்யர்த்தநீயாம்
யதி பரிப்ருட ஹ்ருத்யாம யாதவாத்ரேஸ் ஸம்ருத்திம் ।



ஸ்ரீ திருநாராயணன், மேல்கோட்டை

ஸ்ரீ :

ஸ்ரீ விஜயவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீஷோதிராஜ பரப்ரஹ்மணே நம :

ப்ரதி படச்ரேணி ப்ரஷ்ண வர குணஸ்தோம பூஷண
ஜனிபய ஸ்தான தாரண ஜகதவஸ்தான காரண |
நிகில துஷ்கர்ம கர்சன நிகமஸத்தர்ம தர்சன
ஜய ஜய ஸ்ரீ ஸுதர்சன ஜய ஜய ஸ்ரீ ஸுதர்சன ||



Block : Lifco

ஸ்ரீ சக்கரத்தாழ்வான், திருக்குடந்தை

ஸ்ரீ:

நின்ற வினையும் துயரும் கெட, மாமலரேந்திச்
சென்று பணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்
என்றும் இரவும் பகலும் வரிவண்டு இசைபாடக்
குன்றின் புறவில் மன்றிடை நாறும் குறுங்குடியே.

(பெரி. திருமொழி 9-7-9)



திருக்குறுங்குடி நம்பி

ஸ்ரீ :



ஸ்ரீ வகுள பூஷண மஹாதேசிகாய நம :

யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோதோ வகுளாமோத வாஸிதம் ।
சருதிகாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே ॥



நம்மாழ்வார்

(வைகாசி – விசாகம்)

ஸ்ரீ



ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம :



ஸ்ரீ பகவத் இராமானுஜர்
(1017—1137)

ப்ரணமம் லக்ஷ்மணமுநி : ப்ரதி கருஹ்ணாது மாமகம் I
ப்ரஸாதயதி யத்ஸுக்தி : ஸ்வாதீனபதிகாம் சருதிம் !!

சித்திரை — திருவாதிரை

ஸ்ரீ :



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம :



ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

1268 — 1369

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞான வைராக்ய பூஷணம் ।
ஸ்ரீமத் வேங்கட நாதார்ய கவிதார்க்கிக கேஸரீ ॥
ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய : கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

புரட்டாசி — திருவோணம்

ஸ்ரீ :



ஸ்ரீநிவாஸ மஹா தேசிகாய நம :



ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்
பெரியாண்டவன்
1801—1886

ஸ்ரீரங்கேசபதே ஸமர்ப்பிதபரம் ச்ருத்யந்த ராமானுஜ
ஸ்ரீயோகீந்த்ர குரூத்த மோக யமிந : ச்ருத்யந்த வித்யாத்மன: I
ப்ராப்த ச்ருத்யவதம்ஸ யுக்ம ஹ்ருதயம் ஸ்ரீ வாஸ ராமானுஜாத்
ஸ்ரீ ஸ்ரீவாஸ முநீந்த்ர தேசிகமணிம் ச்ரேயோநிதிம் ஸம்ச்ரயே II

மாசி—புஷ்யம்

ஸ்ரீ :



ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகாய நம :

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்
காடந்தேத்தி ஆண்டவன்

1829—1909

ஸ்ரீமச் சீரீவாஸயோகி ப்ரவரஸகருணாபாங்கஸங்காத பங்காத
வேதாந்த த்வந்த்வவித்யா மதுரஸ லஹரீ சஞ்சரீகாயமாண : I
தேஞசார்யேண ரங்க ப்ரபு சரணயுகே தத்தரக்ஷாபரஸ்ரீ :
ஸ்ரீமச் சீரீவாஸ ராமாவரஜ முனிமணிஸ் ஸ்ந்ததம் ச்ரேயஸேஸ்யாத II

ஆவணி — மூலம்

ஸ்ரீ :



ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேசிகாய நம :



ஸ்ரீபாதுகாஸேவக ராமானுஜ மஹா தேசிகன்
சின்னண்டவன்
1828—1895

ஸ்ரீமந்நாத முநீந்த்ர யாமுனமுநி ஸ்ரீ ஸம்யமீந்த்ராத்மந :
ஸ்ரீ ஸ்ரீவாஸ முநீந்தர தேசிகமணே : ப்ராப்தாகமாந்தத்வயம் ||
ஸ்ரீரங்கேசபதே ததர்ப்பிதபரம் ஸ்ரீபாதுகாஸேவக
ஸ்ரீராமானுஜ யோகிநம் குருவரம் வந்தே தயாஸாகரம் ||

கார்த்திகை—மகம்

ஸ்ரீ :



ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம :



ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
தேரழுந்தூர் ஆண்டவன் - நம்மாண்டவன்
1871—1932

ஸ்ரீமத் சீவாஸ யோகீச்வர பதவிநதம் லப்த வேதாந்த யுக்மம்
ஸ்ரீ பாதூ ஸேவி ராமானுஜ முநி திலகாத் தத்பதந்யஸ்த பாரம் ।
ஸ்ரீமச் சீவாஸ ராமாவரஜ முநி மணேர்லப்த மோக்ஷாச்ரமம் தம்
ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ யதிந்ருபதிம் ஸம்ச்ரயே ஜ்ஞாந வார்த்திம் ।।

ஆவணி—பூரட்டாதி

ஸ்ரீ:



ஸ்ரீநிவாஸ மஹா தேசிகாய நம :



ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்
ஆக்கூராண்டவன் - எங்களாண்டவன்
1880—1947

ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ யதிந்ருபதேர் லப்த வேதாந்த யுக்மம்
ஸ்ரீமத் தேவாதி நேது : சரணஸரஸிஜே தேந தத்தாத்ம பாரம் I
ஸ்ரீமச்சீவாஸ யோகீச்வர மஹித மஹா ஸம்பரதாயைக நிஷ்டம
வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வர குருமனகம வத்ஸலம் பவ்யசீலம II

புரட்டாசி—உத்திரட்டாதி

ஸ்ரீ :



ஸ்ரீரங்கநாத மஹா தேசிகாய நம :



ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன்
தென்பிரை ஆண்டவன்

1886—1963

ஸ்ரீமத் வேதவதம்ஸ லக்ஷ்மண முநே : ப்ராப்தாகமாந்த த்வயம்
தேந ஸ்ரீ ரகுபுங்கவாங்க்ரியுகளே ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம ।
ஸ்ரீமத் ஸ்ரீநிதி யோகிவர்ய கருணா லப்தாப்ஜ சத்ராங்கனம
வந்தே சாந்தி விரக்தி பூர்ணமனகம் ஸ்ரீரங்கநாதம் குரும் ॥

ஆவணி—ரேவதி

ஸ்ரீ :



ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகாய நம :



ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்
ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன்

ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ முநிகருணைலப்த வேதாந்த யுக்மம்
ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீச்வர குருபதயோரர்பித ஸ்வாத்ம பாரம் ।
ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முநிக்ருபயா ப்ராப்த மோக்ஷாச்ரமம் தம்
ஸ்ரீமத வேதாந்தராமாநுஜ முநிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம் ॥

பங்குனி — புஷ்யம்

ஸ்ரீ :

ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகாய நம :

லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாத யாமுன மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥
அஸ்மத் தேசிக மஸ்மதீய பரமாசார்யானசேஷாந் குரூந்
ஸ்ரீமந் லக்ஷ்மணயோகி புங்கவமஹாபூர்ணௌ முநிம் யாமுநம் ।
ராமம் பத்மவிலோசனம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேனேசம் ச்ரியமிந்திரா ஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே ॥
ஆபகவத்தப் ப்ரதிதாம் அநகாம் ஆசார்ய ஸந்ததிம் வந்தே ।
மனஸி மம யத்ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்யத்ரயஸ்ய ஸாரோயம் ॥
என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
யானடவே யவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் ஸேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.
ஏற்றி மனத்தெழின் ஞானவிளக்கை யிருளனைத்து
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

ஸ்ரீ :



குரு பரம்பரை

ஸ்ரீதரன்

ஸ்ரீ :

விஷ்வக்ஸேனர்
(சேனை முதலியார்)

நாதமுனிகள்

புண்டரீகாக்ஷர்
(உய்யக்கொண்டார்)

ராமமிச்ரர்
(மணக்கால்நம்பி)

ஆளவந்தார்
(யாமுநாசார்யர்)

திருக்கோட்டியூர் நம்பி (கோஷ்டிபூர்ணர்)	திருமாலையாண்டான் (மாலாதரர்)	பராங்குசதாஸர் (பெரியநம்பி) (மஹாபூர்ணர்)	திருவரங்கப்பெருமாள் (ஆளவந்தாராழ்வார்)	ஸ்ரீ சைலபூர்ணர் (திருமலை நம்பி)
	பகவத் விஷயம் (அருளிச்செயல்)	ரஹஸ்யம் பஞ்சஸம்ஸ்காரம்	திருவாய்மொழிமூலம் ஸ்தோத்ரம் நல்வார்த்தைகள்	
ரஹஸ்யார்த்த சிக்ஷைகள்				
		ஸ்ரீமத்ராமாயணம்		

ஸ்ரீபாஷ்யகாரர்
(உடையவர்)
(இராமானுஜன்)

பிரணதார்த்திஹரர்
(கிடாம்பி ஆச்சான்)

இராமானுஜப்பிள்ளான்

ரங்கராஜப்பிள்ளான்
(கிடாம்பி பத்மநாபாச்சாரியர்)

வாதி ஹம்ஸாபுதாசார்யர்
(கிடாம்பி அப்புள்ளார் இராமானுஜர்)

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

ஸ்ரீப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்

கடிகாசதம்மாள்

வரதவிஷ்ணவாசார்

மஹாதயாதீசர்

|

அஹோபிலதேசிகன் (சிரங்கட்டூர்)

|

பராங்குசஸ்வாமி (வங்கீபுரம்)

|

பஞ்சமதபஞ்சனம்தாததேசிகன்

|

வாத்ஸ்யானந்தாச்சாரியர் (கீழ்நீர்க்குன்னம்)

|

ராமானுஜாச்சார்யர்

|

வேங்டாச்சார்யர் (பரவஸ்து அண்ணு)

|

வீரராகவாச்சாரியர் (சித்தண்ணு)

|

ஸ்ரீரங்கபதிதேசிகன் (வேலாமூர்)

|

கல்யாணவஹ ஸ்ரீரங்கனாததேசிகன்

|

ஜ்ஞானநிதி - சேவதி ஸாக்ஷாத் ஸ்வாமி
(வேதாந்த ராமானுஜஸ்வாமி)

|

கோபாலார்ய மஹாதேசிகன்
(திருக்குடந்தைதேசிகன்)

|

ஸ்ரீவேதாந்தராமானுஜ மஹாதேசிகன்
(ஸ்ரீரங்கம் பெரிய வேதாந்தமுனிஸ்வாமி)
(வழுத்தூர் ஆண்டவன்)

|

ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன்
(திருத்துறைப்பூண்டி ஆண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
(பெரியாண்டவன்)

|

பாதுகாஸேவக இராமானுஜ மஹாதேசிகன்
(சின்னண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்
(காடந்தேத்தி ஆண்டவன்)

|

வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
(தேரழுந்தூராண்டவன்)
(நம்மாண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
(ஆக்கூராண்டவன்)

|

ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன்
(தெம்பிரையாண்டவன்)

|

ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
(திருக்குடந்தை ஆண்டவன்)

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் பெரியாண்டவன்)

1801—1886

நம் முனித்ரய ஸம்ப்ரதாயத்தின் ஆண்டவன் பரம்பரை ஸ்ரீகோபாலார்ய மஹாதேசிகன் என்னும் திருக்குடந்தை தேசிகன் ஸ்வாமி காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. அவரிடத்தில் ஆச்ரயித்த முதலிகளில் வழுத்தூர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் ஸ்வாமி எனப்படும் வேதாந்த ராமானுஜ ஸ்வாமி ஒருவரால் தான் இந்த பரம்பரை நிர்வஹிக்கப்பட்டு வந்தது.

இவரிடத்தில் தஞ்சை மாவட்டம் மன்னர்குடிக்கு அடுத்துள்ள விளக்குடி கிராமத்தில் ஈயுண்ணி பரம்பரையில் பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்த மஹான், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமானுஜமஹா தேசிகன் என்கிற திருநாமம் பூண்டு துரீ யாச்ரமம் பெற்று ஸம்ப்ரதாயத்தை தொடர்ந்தார். ஸ்ரீரங்கத்திலேயே எழுந் தருளியிருந்தார்.

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிக னிடத்தில் ஆச்ரயித்தமஹான் தான் பெரியாண்டவன் என்கிற ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்.

பெரியாண்டவன் இளமை

காஞ்சியில் சாண்டில்ய கோத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் என்கிற பெரி யாருக்குக் குமாரராய் அவதரித்தார். தகப்பனாரிடமே தனது பரம்பரையிலே சொத்தாகக் கருதப்பட்டு வந்த சாம வேதத்தை ஓதி உணர்ந்தார். 10 வயது நிரம்பிய குமாரனை தகப்பனார் ஸ்ரீகிருஷ்ண மாச்சாரியார் அழைத்துக் கொண்டு திருக் குடந்தைக்கு எழுந்தருளினார். அங்கு பாட்ராச்சார் தெருவில் நாவல் பாக்கம் ராகவாச்சார் என்னும் ஸ்வாமி கிருஷ்ண மாச்சாரியரையும் கூட இருக்கும் குழந்தை யையும் தன் திருமாளிகையில் எழுந்தரு ளப்பண்ணி விருந்தோம்பினார். இடை யிடையே குழந்தையின் (பெரியாண்டவன்) ஒளியையும், புலமையையும் ஸாமகானம் செய்யும் மேன்மையையும் கண்டு வியந்து போற்றி பிற்காலத்தில் ''இவன் ஒரு மேதை'' என்பதை அப்பொழுதே உணர்ந்து கொண்டு தனது உகப்பை அவனது தகப்பனாரிடம் அறிவிக்கவும் செய்தார்.

இளமையில் கல்வி

திருக்குடந்தையை விட்டு புறப்பட வேண்டு மென்கிற நேரம் வந்த பொழுது, ஸ்ரீராகவாச்சார் ஸ்வாமி குமாரனைத் தான் வைத்துக் கொண்டு சாஸ்த்ரங்களை பயில் விக்கிறேன் என்று சொல்லி குழந்தையைக் கஷ்டப்படுத்தி நடத்தி யழைத்துச்செல்ல வேண்டாமென்றும் தடுத்து விட்டார். திருத் தகப்பனாரும் அவ்வண்ணமே குழந் தையைவிட்டு யாத்திரை கிளம்பி, மூன்று மாதங்கள் திரும்பி வருவதற்குள் காவ்ய பாடங்கள் முடிந்துவிட்டன.

''என்ன நோன்பு நோற்றாள் கொலோ— இவனைப் பெற்ற வயிறுடையாள்' என்று ஆழ்வார் பெருமைப் படுவதுபோல், ''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்'' என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக ஸ்ரீகிருஷ்ணமாச்சார் தனது குமாரனை எல்லாக் கலைகளிலும் வல்ல வனாகச் சிறுபிராயத்திலேயே ஆக்கினார்.

சரணாகதியும் க்ரந்தகாலக்ஷேபமும்

பெற்ற பிள்ளையின் புலமையைக் கண்டு மனம் மகிழ்ந்து ஸ்வாமியிடம் விடை பெற்றுக்கொண்டு குழந்தையை அழைத்துக் கொண்டு காஞ்சீ எழுந்தருளினார். அங்கு பண்டிதர்களிடம் ந்யாய-மீமாம்ஸ-வியா கரண சாஸ்த்ரங்கள் பயின்ற வேளையில் சரணாகதி செய்து கொள்ளவேண்டும் என்ற வேட்கையினால் ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீரங்கம் ஸ்வாமி எனப்படும் ஸ்ரீவேதாந்த ராமானுஜ ஸ்வாமி ஸன்னிதியில் தனக்கு உபாயானுஷ்டானம் (சரணாகதி) ஆக வேண்டுமென்று பிரார்த்தித்தார். இளம்

வயதில் இவருக்கு இத்தகைய ஆசை உண்டானதில் ஆச்சரியமடைந்த ஆசார்யன் உடனே அரங்கன் சன்னிதியில் குமாரனுக்கு (பெரியாண்டவனுக்கு) ஆத்ம சமர்ப்பணம் செய்துவைத்தார்.

ஸ்ரீரங்கத்திலிருந்து கிளம்பி மறுபடியும் காஞ்சிக்கு எழுந்தருளி தாய் தந்தை யருக்குப் பணிவிடை செய்தது மட்டுமின்றி சாஸ்த்ர விசாரமும் செய்து அறிவைவளர்த் தார். அதனால் தேர்ச்சியும் நிறைவும் பெற்ற உள்ளம் ஆத்யாத்மிக கல்வியிலேயே நாட்டம் கொண்டு ஸ்ரீரங்கம் வந்து பெரிய ஸ்வாமியைத் தனக்குச் சம்ப்ரதாய க்ரந்தங் களை காலக்ஷேபம் செய்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். தன்னுடைய தளர்ந்த வயதும், நலிவுகொண்ட திருமேனி யும் பொலிவுகொண்ட இளம் பிள்ளையின் ஆவலைச் செவ்வனே செய்து தரத் திறங் கொண்ட தில்லையே என்று மனம் நொந்து, இப்பெரும் கார்யத்தைத் தன் ப்ரிய சிஷ்ய ரான ஸ்ரீநிவாச ராமானுஜ மஹாதேசி களிடம் ஒப்படைத்தார்.

ஸ்ரீநிவாஸராமானுஜ மஹா தேசிகளை சக்ரவர்த்தித்திருமகனுக்கு விச்வாமித்ரர் வாய்த்ததுபோல், கண்ணனுக்குச் சாந்தீபினி வாய்த்ததுபோல் பிரதிபையோடு கூடின (பரமாச்சார்யனை) இவ்விளம் பிள்ளைக்குக் கல்வி புகட்டுவது என்பதை ஓர் பெரிய பாரமாகக் கருதி தன்னுடைய இயலாமை யைத் - தன் அச்சத்தை ஆசார்யனுக்கு வாய்விட்டே சொன்னார். அதற்கு ஸ்ரீரங்கம் ஸ்வாமி தான் அவரிடம் புகுந்து இந்தக் கார்யத்தை நடத்தித் தருவதாக வாக் களித்து அவரது அச்சத்தையும் நீக்கினார். அதுமட்டுமல்ல. இச்சிறுவன் ஜகதாசார் யனுக விளங்கப் போகிறான் என் று ம் அனுக்ரஹித்தார். அவ்விதம் ஆசார்யன் ஆசி பெற்று இவருக்கு (பெரியாண்டவ னுக்கு) க்ர்ந்த சதுஷ்டயம், ரகஸ்யம், ரகஸ்யார்த்தங்கள் எ ல் லா வ ற் றை யும் முறையே காலக்ஷேபம் செய்து கொடுத்து ஆசாரத்தையும் சிக்ஷித்தார். அவைகளில் தேர்ந்த பாண்டித்யம் பெற்று அவர்கள் இருவரின் திருவடிகளிலும் பணிந்தெழுந்து காஞ்சிக்கு எழுந்தருளி தந்தை நிர்யாணத் திலே ஆற்றவேண்டிய புத்ரக்ருத்யத்தைச் செவ்வனே செய்து முடித்து, பரமை காந்தியாய், ஐந்து காலங்களிலும் விதிக்கப் பட்ட சாஸ்த்ரவழி வழுவாமல் கார்யங் களைக்கைக் கொண்டு, இல்லறத்தில் இருந்த காலை மனம் துறவறத்தை நாடிற்று. 14வது வயதில் சரணாகதி கிடைத்ததுபோல் சந்நியாசம் வேண்டி நின்ற இவரைக் கண்டு ஆச்சரியமடைந்தார் திருத்துறைப் பூண்டி ஆண்டவன். உற்றார் உறவினர்கள் இதைத் தடுக்கவே ஆசார்யனும் சிறிது காலம் ''போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்'' என்று அனுக்ரஹிக்க மறுபடி யும் காஞ்சீபுரம் எழுந்தருளினார்.

இல்லறத்தில் இருக்கை

இல்லறத்தில் இவருக்கு (பெரியாண்ட வனுக்கு) ஒரு குமாரத்தி பிறந்தாள். உடனே கடமை முடிந்ததாகக் கருதினார். தாயாரும் பத்தினியும் தடுத்துக் கேளாமல் இருந்த போதிலும் தாயாரின் கட்டளை யைத் தட்ட வழியில்லாமல் ஒரு நிபந்தனைக் குத் தாயாரைக் சம்மதிக்க வைத்தார். சகுனம் கிடைத்தால் போவது, இல்லை யென்றால் திரும்பி விடுவேன் என்பதுவே நிபந்தனையாயிற்று. கிளம்பினவுடன் பரத் வாஜம் -கருடன் முதலிய பக்ஷிகள் வலமாகக் காட்சியளிக்கவே தியாகச் செம்மலான திரு த்தாயார் தன்னலம் பேணாது உலகநலனை மனத்தின் முன்னிறுத்தித் தன் புத்திரனை உலகுக்கு அளித்து நிறைவு பெற்றாள். தாயாரைச் சமாளித்தவருக்குப் பத்தினி யைத் தடுத்து வருவதென்பது பெரும் பாடாய் இருந்தாலும் கடைசியில் ஸ்வாமி யின் வைராக்யமே வெற்றி பெற்றது.

துறவு பூணுதல்

துரீயாச்ரமத்திற்குத் தயார் நிலையில் வந்த இவரை திருத்துறைப் பூண்டி ஆண்ட வன் பலவாறுகச் சோதித்து பெண்-பிள்ளை-பணம் மூன்றின் ஆசையையும் விட்டுவிட் டேன் என்று கழுத்தளவு தண்ணீரில் ப்ரதிக்ஞை செய்யச் சொல்லியபோது தனக்கு சிஷ்யர்கள் சேர்க்கும் ஆசையையும் சேர்த்து விட்டு விடுவதாய்ச் சொல்லவே, ஸ்வாமியும் லோகம் உஜ்ஜீவிக்க வேண்டி அதை மாத்திரம் தடுத்து நிறுத்தினார்.

அனுஷ்டானம்

இங்ஙனம் துறவு நிலையைக் கைக்கொண்டு, துறவறநிலையிலிருந்தும் சிறிதும் வழுவாது

ஸ்ரீநிவாச மஹாதேசிகன் என்கிற திருநாமம் பூண்டு அண்டினஜனங்களை ஆண்டிடும் தன்மையால் பெரியாண்டவன் என்றே அழைக்கப்பட்டு முனிசிரேஷ்டராய் யோகியாய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்தார். ஒரு மாதத்தில் ஏழு-எட்டு நாட்களில் பாகவதோத்தமர்களாயும் பரமைகாந்தியாகவுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகையில் பிக்ஷைக்கு எழுந்தருளி, பிக்ஷான்னத்தைப் பெற்றுக் கொள்ளிடத்துக்கு (வடதிருக் காவேரி) எழுந்தருளி அந்த ப்ரசாதத்தை (சாதத்தை) நீரில் அலசி, பகவத் பாதாரவிந்தங்களில் அர்ச்சிக்கப்பட்ட துளஸியைச் சேர்த்து அதை உட்கொள்வது வழக்கம். மற்ற நாட்களில் அரசமரத்திலிருந்து உதிர்ந்த காய்ந்த சருகுகளைப் பொடி செய்து உட்கொள்வதுமுண்டு. பிறகு சிஷ்யர்களைச் சம்பாதித்து அதன்மூலம் இந்த உயரிய பரம்பரையை வளர்க்கவேண்டும் என்கிற கட்டளை பிறக்கவே, அதற்காக பெரியாண்டவன் முயற்சிக்கையில் வெகு பேர் ஸ்வாமியிடம் சிஷ்யராஞர்கள்.

அன்பில் கிராமத்து அன்பர் ஒருவர் ஸ்ரீரங்கத்தில் மேலூர் என்கிற கிராமத்தில் கொள்ளிடத்தின் தென் கரையில் ஓர் இடம் வாங்கி ஆண்டவன் தங்கியிருக்க வசதி செய்து கொடுத்தார். ஸ்வாமியும் அங்கே ஒரு பர்ணசாலை அமைத்து காலக்ஷேப சரணாகதிகளை செய்து கொண்டிருந்தார். அதுவே பெரியாச்ரமம் என்று இன்றும் காணலாம்.

சிஷ்யபரம்பரை

பிற்காலத்தில் பெரிய வித்வான்களாயும், பரமைகாந்திகளுமாக எழுந்தருளியிருந்த பல பெரியார்கள் ஸ்வாமியிடத்தில் சிஷ்யர்களாகி ஆச்ரயித்தார்கள். அவர்களில் சிலர்.

(1) திருப்புக்குழி அப்பா (2) மன்னர்குடி கோபாலண்ணா (3) வ்யாகரண வித்வான் ரங்காச்சார் (4) மீமிசல் நரசிம்மாச்சாரியர் (4) சின்னமுரங்காச்சார், (5) (திருநெல்வேலி) கோபாலஸமுத்ரம் நாராயணாச்சார் (6) சாமளா சக்ரவர்த்தி (7) புரிசை நடாதூர் ஸ்ரீரங்காச்சாரியர் முதலானோர்.

காலக்ஷேபம் ஸாதிக்கும் முறை

ஸ்ரீ பாஷ்யம் - 4 மாதங்கள் (ச்ருதப்ரகாசிகா; பாவப்ரகாசிகா; உள்பட)

கீதா பாஷ்யம் - 1½ மாதங்கள். ஸ்ரீமத் ஸாரம் - 2½ மாதங்கள்

ஸ்ரீபகவத் விஷயம்—4 மாதங்கள்; ஆக ஒரு ஆண்டு காலத்தில் காலக்ஷேப க்ரந்த சதுஷ்டயமும் நடந்துவிடும். இம்மாதிரி பெரியாண்டவன் ஸ்வாமி தேசிகனைப் போல் 30 தடவை சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்தருளினார்.

ஆசிரமத்திற்கு வரும் பொழுது சிஷ்யர்கள் நடந்து வரவேண்டும். ஆறுமாதங்கள் காத்திருக்க வேண்டும். கோவில் கட்டளைகள் சாப்பிட்டுக் கொண்டிராமல் தன் க்ருஹத்தில் ஔபாசன - வைச்வதேவ - பகவதாராதனம் செய்து கொண்டிருக்க வேண்டும். காலக்ஷேப காலத்தில் கைகால்களை நீட்டாமலும் கொட்டாவி விடாமலும் ஜாக்ரதையாக இருக்க வேண்டும் என்கிற பல நியமங்கள் உண்டு.

பால்யத்திலேயே சன்யாசியாகி ஊன்வாட, உண்ணாது கடும் தவமிருந்த காரணத்தால் சரீரம் மிக மெலிந்து நரம்புகளெல்லாம் தெரியும்படி இருந்ததால் இவருக்கு ''வத்தல் ஸ்வாமி'' என்ற பெயர் வழங்கலாயிற்று. 50 சாதுர்மாஸ்யம் கண்டருளிய மஹான்.

யாத்திரையாய் பல திவ்ய தேசங்கள் எழுந்தருளி—மைசூரில் ஹெம்பிகையென்னுமிடத்தில் பல காலம் தங்கி இருந்தார். பெரியாண்டவனது யாத்திரையை யாத்ரா விலாசம் என்கிற தனி நூலில் பரக்கக் கண்டு கொள்க.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீபாதுகா ஸேவக ராமானுஜ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் சின்னண்டவன்)

1828—1895

ஸ்வாமியின் அவதாரமும் கல்வியறிவும்

இந்த ஆசார்யன் காஞ்சிக் கருகிலுள்ள வேளிய நல்லூர் என்கிற திவ்ய தேசத்தில் அவதரித்தார். இவர் திருத்தகப்பனார் திருநாமம் ஸ்ரீக்ருஷ்ண தாதாச்சார்யர் என்பதாம். ஷடமர்ஷண கோத்திரத்தைச் சார்ந்தவர். இந்த மஹானுக்கு நமது ஆசார்யன் ஸர்வதாரி வருஷம் கார்த்திகை மாதம் மக நக்ஷத்திரத்தில் நன்மகனாய் அவதரித்தார். ஸ்வாமியினுடைய பூர்வாச்சிரம திருநாமம் ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரியார் என்பது யாவரும் அறிவர். இவரது பரமாசார்யாரான பெரியாண்டவன் பூர்வாச்ரம திருநாமமும், இவரது வழி வந்து நம் நற்பரம்பரையை நானிலம் போற்ற எண்திக்கும் புகழ் படுத்தி வழி நடத்தும் ப்ரக்ருதம் ''திருக்குடந்தை ஆண்டவனது'' பூர்வாச்ரம திருநாமமும் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் என்பதே. திருத்தகப்பனார் பக்கலில் உபநயனம் முதலான வைதிக ஸம்ஸ்காரங்களைப் பெற்று ஸாங்கமாக வேதாத்யயனமும் செய்தார். பிறகு காவ்ய நாடக அலங்கார கிரந்தங்களையும் நன்முகப் பயின்று தேர்ச்சியும் பெற்றார்.

பிறகு ந்யாய சாஸ்திரத்தின் பால் அதிக ஈடுபாடு உடையவராய், அதனைக் கசடறக் கற்கவேண்டும் என்கிற வேட்கை மிகுந்து வர, மைசூர் எழுந்தருளினார். ஆங்கு ராஜ ஸம்ஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராமாசாஸ்திரிகளிடம் ந்யாய சாஸ்த்ரத்தையும், அத்வைத வேதாந்தத்தையும் கற்று அதிவிலக்ஷண பண்டிதராய் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீசாஸ்திரிகளுக்கு சாஸ்த்ர ஆராய்ச்சி சமயங்களில் ஏற்படும் சந்தேகங்களையெல்லாம் தனது நுண்ணிய அறிவு கொண்டு விளக்க முற்படும்போது ஆசானே பார்த்து ஆச்சரியப் படுமளவிற்கு அறிவுச் சுடராய்த் திகழ்ந்தார். குறிப்பாக தர்க்க சாஸ்த்ரத்தில் அபாரமான புலமை பெற்று விளங்கினார்.

ஸ்ரீமத் பெரியாண்டவனிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்தல்

ஸாமான்ய சாஸ்த்ரத்தில் ஆழ்ந்த அறிவு பெற்ற ஸ்வாமி அத்யாத்ம சாஸ்த்ரத்தை ஸத்ஸம்ப்ரதாயமுடைய ஸதாசார்யன் பக்கலிலே சென்று காலக்ஷேபம் செய்ய வேண்டும் என்று திருவுள்ளங் கொண்டு ''அவ்னமாடுலவும் அலைபுனல் சூழ்ந்த அரங்கமாநகருக்கு'' விடை கொண்டார். ஆங்கு வடதிருக்காவேரியின் கரையில் நாணலிலேயே ஆச்ரமமாகக் கட்டிக் கொண்டு ஸத்ஸம்ப்ரதாய ஒளி விளக்கை மங்காமல் காத்துக் கொண்டு ஞானம் வைராக்யம் என்கிற இரண்டு சிறகுகள் கொண்டு பரமஹம்ஸமாய் எழுந்தருளியிருந்த பெரியாண்டவன் திருவடிவாரத்திற்கு வந்தார்.

பெரியாண்டவனுக்கு ''வத்தல்ஸ்வாமி'' என்ற பெயர் உண்டு என்பதனை முன்னே சொன்னோம். ஸ்ரீமத் பெரியாண்டவனும் தன்னை வந்தடைந்த சிஷ்யனின் அடக்கத்தையும், மேதா விலாஸத்தையும், ப்ரதிபையையும் கண்டு வியந்து சிஷ்யனுக்குரிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே குடிகொண்டுள்ள இவரைக்குளிரநோக்கி அருளினார். சிஷ்யனுக ஏற்று அவருக்கு முறையே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயம் முதலிய க்ரந்த சதுஷ்டயத்தையும், சத தூஷணீ முதலிய வாத க்ரந்தங்களையும் உபதேசித்தருளினார். காலக்ஷேபம் பூர்த்தியாகி நிறைவு கொண்டுள்ளத்தினராய் அப்யாஸ பூர்த்தியாலே தெளிவு கொள்ள வேளிய நல்லூருக்கே திரும்பி வந்து க்ருதக்ருத்யனையும், க்ருதார்த்தனையும் எழுந்தருளியிருந்தார்.

காலக்ஷேபத்தில் ஒரு நிகழ்ச்சி

ஸ்ரீமத் பெரியாண்டவனிடம் காலக்ஷேபம் செய்ய சுமார் 70க்கும் மேற்பட்ட வித்வான்கள் வருவதுண்டு. காலக்ஷேப ஸமயங்களில் ஆசார்யன் அருளுகின்றவை களை உன்னிப்புடன் கேட்பது மட்டுமல்லா மல் இடையிலே எழுகின்ற ஐயங்களைப் கால க்ஷேபத்திற்குப் பின்தான் கேட்டுக் போக்கிக் கொள்வது வழக்கம். காலக்ஷேபத்தினிடை யில் பகிரங்கமாக சர்ச்சைகளோ வாதங் களோ செய்ய மாட்டார்கள். ஒரு சமயம் ஒரு சந்தேஹத்திற்கு அவர்களுக்குள் விவா தங்கள் முற்றிப்போய் ஸ்ரீமத் பெரியாண்ட வன் ஸான்னித்யத்தையும் பொருட் படுத் தாமல் சண்டையிட்டனர். ஸ்ரீமதாண்ட வனும் மிகவும் திருவுள்ளம் கலங்கி அவர் களுக்கு ''இனி காலக்ஷேபம் சொல்லமாட் டேன்'' என்று சீற்றமாய் அருளி எழுந்து போய்விட்டார். சிஷ்யர்களனைவரும் வருத் தப்பட்டு அவரவர் இடங்களுக்குச் சென்று விட்டனர். ஆனால் வேளியநல்லூர் சிஷ்யனை இடத்தை விட்டு எழுந்திருக்க வில்லை. மாறாக சோகமே உருவாக, தவறினை உணர்ந்து, உருகி, நொந்து, ஆச்ரமத்தில் வாசலிலேயே படுகாடு கிடந்தார். அந்த ரங்கமாய் இதனை அறிந்த ஸ்ரீமத் பெரி யாண்டவனும் ஸத்சிஷ்யனை அழைத்து வரும்படி செய்து ஸ்வாமியின் ஆசார்ய ப்ரதிபத்தியையும். வைராக்யத்தையும் பார்த்து ஆனந்தங்கொண்டு மீண்டும் அவர்க்கு காலக்ஷேபம் சாதித்தருளினர்.

ஸ்வாமியினிடத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத் தின் மதிப்பு

எல்லா கலைகளிலும், வேதங்களிலும், வேத நூற்களிலும், கல்ப ஸூத்ரங்களிலும், அபாரமான பாண்டித்யம் பெற்றிருந்த ஸ்வாமியினுடைய அறிவு முதிர்ச்சியை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. இந்து சமுதாயத்தின் வாழ்க்கையினை அடிப் படையாகக் கொண்டு அதற்கேற்ப சட்ட மியற்ற வேண்டிய சமயம், இந்து தர்மத்தை நிர்ணயிக்கின்ற மனு, யாஜ்யவல்க்யர் முத லான ரிஷிகளின் ஸ்மிருதிகளில் ஆழ்ந்த அறிவுள்ள நம் ஸ்வாமியை அணுகி, சட்டங் களை இயற்றுவதில் உள்ள நுண்ணிய விஷயங்களை கேட்டறிந்தது.

ஸ்ரீமத் பெரியாண்டவனிடம் சன்யாசம் பெறுதல்

வேளியநல்லூர் சென்று பாகவதாக்ரேஸர ராய், பண்டித ஸார்வபௌமராய், பஞ்ச கால பராயணராய் ஸ்வாமி எழுந்தருளி யிருந்த போது, அரங்கமாநகரில் ஸ்ரீமத் ஆண்டவன் துறவியின் கடுமையான அனுஷ் டானங்களாலே ஊன்வாடி தளர்ச்சியுற்று ஆக்கை மெலிந்து அசக்தராளர். ஸம்ப்ர தாயமாகிற ப்ரதீபத்தை - விளக்கை - நல்ல தொரு பாத்ரத்திலே ஒப்புவிக்க வேண்டும் என்கிற ஆசையாலே உந்தப் பட்டவராய் அத்தகைய வ்யக்தியைத் தேர்ந்து எடுக்க திருவுள்ளம் பற்றி ஒரு விநோதமான பரீக்ஷை வைத்தார். அதில் தேறிவரும் உத்தமருக்கு மோக்ஷாஸ்ரமத்தைத் தந்து அருள எண்ணினர். அதற்காக ஒரு நாள் தன்னிடத்தில் ஆச்ரயித்து நன்கு கால க்ஷேபம் செய்து, நல்ல புலமை படைத்த மூன்று வித்வான்களுக்கு, ஒரு வாழைப் பட்டையில் திருமண் கட்டியை வைத்துக் கட்டி அவற்றை ஒரு அந்தரங்க சிஷ்யர் மூலம் கொடுத்தனுப்பி அம்மூவரிடமும் அதைக் கொடுக்கச் சொல்லி அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு வரும்படி நியமித்தா யிற்று. அம்மூவருள் நம் ஸ்வாமியும் (ஸ்ரீமத் சின்னண்டவன்) ஒருவர். நம் ஸ்வாமியைத் தவிர மற்ற இரண்டு ஸ்வாமிகளும் அதை வாங்கிக் கொண்டு ஸ்ரீமத் பெரியாண்டவன் அனுக்ரஹம் எனக் கொண்டு வாளா இருந்து விட்டனர். நம் ஸ்வாமியோ அதை வாங்கிப் பார்த்து திருமாளிகைக்குள் சென்று அவற்றுள்ளிருந்த திருமண் கட்டி யைக் கண்டு அதன் நுட்பத்தைப் புரிந்து கொண்டு அத் திருமண் கட்டியில் ஸ்ரீசூர்ணத்தைக் குழைத்துத் தடவி விட்டு அதை மீண்டும் அவர் கொண்டு வந்த வாழைப் பட்டையிலேயே கட்டித் திருப்பிக் கொடுத்து அதை ஸ்ரீமத் பெரியாண்டவ னிடம் சமர்ப்பித்து விடும்படி பிரார்த்தித் தார். ஸ்ரீ ஆண்டவனும் அதைப் பிரித்துப் பார்த்து திருமண் கட்டியில் ஸ்ரீசூர்ணம் தடவியிருப்பதைக் கண்டு ஆநந்தங்கொண்டு தனக்குப் பிறகு ஸம்ப்ரதாயம் வளர வகை உண்டெனத் தேறி நித்ய விபூதி கைங் கர்யத்திலே நோக்குடையராய் இருந்த

போது திருமேனியும் மிக வாட்டம் கண்டது.

சிறிது நாட்கள் கழித்து வேளியநல்லூரிலிருந்து நம் ஸ்வாமி எழுந்தருளி ஸ்ரீமத் பெரியாண்டவனே தெண்டமிட்டுத் தனக்குத் துறவறம் அளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். துரீயாச்ரமம்-நான்காவது நிலை-துறவறப் பெருநிலையினை, அடைவதற்குரிய தகுதிகள் பற்றுகள் அற்ற நிலைகள் இவைகளை ஸ்ரீமத் பெரியாண்டவனிடம் அடக்கத்தோடு எடுத்துரைத்தது மின்றி விபீஷணன் சக்ரவர்த்தித் திருமகனிடம் சொன்னதேபோல் தான் ஸர்வஸங்க பரித்யாகம் செய்து வந்திருப்பதாயும் விண்ணப்பித்து ஸந்யாசாச்ரமத்திற்கு நியமனம் வேண்டி நின்றார். ஸ்ரீமத் பெரியாண்டவனும் பரமானந்தத்தில் மூழ்கினவராய் அவருக்கு ஒரு நன்னாளில் துரீயாச்மரத்தை அனுக்ரஹித்து தன்னை க்ருதார்த்தராக எண்ணிக் கொண்டார்.

அன்று முதல் சிஷ்யர்களும் அபிமானிகளும் பெரியாண்டவன், சின்னண்டவன் என்று இரு மஹான்களையும் ஆதரவோடும் அன்போடும் அடிபணிந்தனர். அதிலிருந்து நம் ஸ்வாமிக்கு சின்னண்டவன் என்கிற திருநாமம் வழங்கலாயிற்று. இருவரும் சேர்ந்திருந்தது 6 மாத காலங்களேயாம். ஸ்ரீமத் பெரியாண்டவன் திருநாட்டை அலங்கரித்த பிறகு நமது ஸம்ப்ரதாயத்தில் தலைசிறந்த ஆசார்யராய் ஸம்ப்ரதாய ஸ்தாபனத்திற்குரிய ஸ்ரீகோசங்கள் பல வெளியிட்டருளினார். அவர் அருளிச் செய்த க்ரந்தங்கள் வருமாறு.

(1) ஆஹ்நிகார்த்த ப்ரகாசிகை (2) ஸ்ரீ ஜயந்தீ நிர்ணயம் (3) உக்த்யாசார்ய நிஷ்டா விசாரம் (4) ஸத்பதரக்ஷை (5) ஜன்மாஷ்டமீ நிர்ணயம் (6) தத்க்ரது ந்யாய விசாரம் (7) ஆசார்ய ஸம்பாவனுக்ரமம் (8) யதி தர்ம சமுச்சயம் (9) ஆசௌச ஸங்க்ரஹம். முதலானவை.

ஸ்ரீமத் சின்னண்டவனிடம் ஆச்ரயித்த மஹான்கள்

தேரழுந்தூர் மஹா வித்வான் ஈயுண்ணி வரதாச்சாரியர் ஸ்வாமி (பின் தேரழுந்தூராண்டவன் - நம்மாண்டவன்); ஸ்ரீவில்லிபுத்தூர் அம்மாளாச்சார் ஸ்வாமி; வித்வான் உக்கூர் ஸ்ரீநிவாஸ ராகவாச்சார் ஸ்வாமி; ஆக்கூர் ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமி; வித்வான் தென்பிரை ராமபத்ராச்சாரியர் ஸ்வாமி, (பின் தென்பிரையாண்டவன்) இது முதலான இன்னும் அநேக வித்வான்கள் இவரது திருவடியில் ஆச்ரயித்த மஹான்களாவர்.

ஸ்ரீமத் சின்னண்டவன் ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சீபுரம் வரை யாத்ரையாய் எழுந்தருளி ஆங்காங்கு ஸம்ப்ரதாய ப்ரவசனங்கள் செய்து திருவரங்கத்துக்கே திரும்பி எழுந்தருளி தன்னுடைய 68வது திருநக்ஷத்ரத்தில் சிஷ்யர்களை யெல்லாம் ஆராத்துயரில் ஆழ்த்திவிட்டு விஜய ஸ்ரீ தைமீ சுக்ல ஸப்தமி திதியில் திருநாட்டிற்கு எழுந்தருளினார். சாதுர்மாஸ்ய ஸங்கல்ப காலம் 18 வருடங்கள்.

ஸ்ரீமத் சின்னண்டவனது 151 திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை ப்ரக்ருதம் ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் திருக்குடந்தையில் வெகு கோலாகலமாகக் கொண்டாடி, 7 நாட்கள் ஸம்ப்ரதிவைத்ய நாதன் தெருவிலுள்ள நமது பாதுகாச்ரமத்தில் பாராயண, வித்வத் ஸதஸ்ஸைபவங்களோடு தலைக்கட்டினமை பிறிதொரு இடத்திலே காணலாம்.

ஸ்ரீமதே பாதுகாஸேவக ராமானுஜ மஹா தேசிகாய நம;

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் காடந்தேத்தி ஆண்டவன்)

1829—1909

நமது குருபரம்பரையில் ஸ்ரீபாதுகா சேவக ராமானுஜ மஹாதேசிகன் என்கிற சின்னண்டவன் பரமபதம் அடைந்தபிறகு அந்த பீடத்திற்கு வேண்டி நின்ற நம் தேரழுந்தூர் ஆண்டவனுக்கு இல்லறத்தின் கடமைகள் காரணமாக அது கிடைக்காது தாமதிக்கவே, 15 ஆண்டுகளுக்கு நமது ஆசார்ய பீடத்தில் யாருமமரவில்லை. அதேபோல் அஹோபில மடத்திலும் ஒரு நிலை ஏற்பட்டது. நமது ஆண்டவன் பரம்பரையில் தேரழுந்தூர் ஆண்டவன் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருள ஒரு இணைப்பு ஆசார்யன் இந்த ஆண்டவன்.

ஸ்ரீமதஹோபில மடத்திற்கு ஸ்ரீசக்ரவர்த்தி ஸ்வாமி ஆசார்யரானர். அவருக்கு பௌண்ட்ரீகபுரம் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடம் சந்யாசம். இவருக்கு ப்ரஹ்மசாரி நாராயணச்சார் என்பவரிடம் சன்னியாசம், ப்ரஹ்மசாரி ஸ்வாமிக்கு பெரியாண்டவனிடம் சன்னியாசம்.

இந்த நிலையில் ஆசிரமத்து சிஷ்யர்களுள் ஸோஸலே ஜோடிதார் சகோதரர்கள் ஆசிரம பரம்பரையில் ஆசார்யாள் அவதரித்தேயாக வேண்டும் என்கிற பிடிவாதத்துடன் ஆண்டவன் திருவடி பண்டிதர் சதாவதானி வரத வேதாந்தாச்சார் என்று திருநாமம் கொண்ட ஒரு மஹாசித்த புருஷரை, யோகியை, அனுஷ்டானபரரை நெருங்கிப் ப்ரார்த்தித்தார்கள். நமது பரம்பரை வழி வந்து சன்யாசம் பெற்று இலங்கிய ஸ்ரீ அழகிய சிங்கரிடம் நரசிம்மபுரத்தில் துரீயாச்ரமம் பெற்று நமது ஆண்டவன் பரம்பரையில் ஆசார்யரானர். இவருக்குத் திருமேனி பாங்கில்லாமல் போகவே ''கதாகதா'' என்று காத்திருந்த ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவனுக்கு அத்துரீயாச்ரமத்தை யளித்து திரு நாட்டையலங்கரித்தார்.

காடந்தேத்தி ஆண்டவனுக்குக் காஷாயம் அளித்தது அழகிய சிங்கர். அவ்விதமே மன்னர்குடி வ்யாகரணம் ரங்காச்சார் ஸ்வாமிக்கு அழகியசிங்கராக அமர காஷாயம் அளித்தது தேரழுந்தூர் ஆண்டவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு பரம்பரைகளும் ''பரஸ்பரம் பாவயந்த:'' என்கிற கணக்கிலே நன்கு வளர்ந்து வருகின்றன. இதை ஒரு அட்டவணை கொண்டு எளிதில் அறியலாம்.

ஸ்ரீரங்கம் ஸ்வாமி,
(வழுத்தூர் ஸ்வாமி)
ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்
ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன்
(திருத்துறைப் பூண்டி ஆண்டவன்)
ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
(பெரியாண்டவன்)
பாதுகாசேவக ராமானுஜ மஹாதேசிகன்
(சின்னண்டவன்)

---

15 வருஷம் யாருமில்லை.
பெரியாண்டவன்
ப்ரஹ்மசாரி நாராயணஸ்வாமி
பௌண்ட்ரீகபுரம் ஸ்வாமி
திருக்குடந்தை அழகிய சிங்கர்
ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன்
காடந்தேத்தி ஆண்டவன்
ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன்
நம்மாண்டவன் ஸ்ரீவேதாந்தராமானுஜ மஹாதேசிகன்

ஆசார்ய பரம்பரானுஸந்தானத்தில் காடந்தேத்தி ஆண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகனுடைய தனியனைத் தனித்து சேவித்துக் கொண்டிருந்ததை மாற்றி அவருக்குரிய ஸ்தானத்தில் தனியன் அனுஸந்தானத்தை ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் மாற்றி நம் மாண்டவன் - சின்னண்டவன் தனியன்களுக்கிடையில் அனுஸந்தானம் செய்து வரப்பணித்து அது நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காடந்தேத்தி ஆண்டவனது ஆச்சரியமான மஹிமை

ஸ்வாமி தேசிகனைப்போல் காடந்தேத்தி ஆண்டவன் ஓர் சித்த புருஷர். அது மாத்திரமன்றி அவர் ஓர் ஸ்ரீஹயக்ரீவ உபாஸகருங் கூட. ஒரு சமயம் யாத்ரையில் எழுந்தருளியிருந்தபோது ஒரு பாத்திரத்தில் தளிகை செய்த 'கொள்ளு' தானியத்தைக் கையில் ஏந்தியிருக்க ஸ்வாமியின் தோள்களில் ஹயக்ரீவன் அமர்ந்து அதனை ஸ்வீகரித்த (ஏற்றுக் கொண்ட) காக்ஷிதனைக் கண்டவர்கள் மெய் சிலிர்த்து நின்றனர்.

சித்த புருஷர் ஆதலால் ஸ்வாமி பல்லக்கில் அமர்ந்திருக்க அந்த பல்லக்கை ஒரு பக்கம் ஆட்களாலும், மற்றொரு பக்கத்தை யாருமே சுமக்காமலும், அது தானாகவே ஸ்வாமியினது மந்த்ர சக்தியினால் ஊர்ந்து செல்லுமென்றும் சொல்லுகின்றனர் பெரியோர்.

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்)

1871—1932

நமது சத் சம்ப்ரதாயமான ஸ்ரீமதாண்டவன் பரம்பரையிலே ஒரு மாணிக்கமெனத் திகழ்ந்த ஸ்வாமியிவர். தஞ்சை ஜில்லாவில் தேரழுந்தூர் எனப்படும் திவ்யதேசத்தில் பாரத்வாஜகோத்திரத்தில் ஈயுண்ணி வம்சத்தில் ஸ்ரீநிவாசாசாரியருக்குத் திருக்குமாரராக அவதரித்தவர். இவருடைய திருநாமம் ஸ்ரீவரதாச்சார் என்பதாம்.

தனது இளம் வயதிலேயே உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்கள் பெற்று நல்ல கல்விகளை நானிலம் போற்றும்படி இளமையிலே கற்று தேர்ச்சியும் பெற்றார். ஸ்ரீரங்கத்தில் அப்போது நமது பரம்பரையில் மன்னி வீற்றிருந்த ஸ்ரீபெரியாண்டவனிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றார். ஸ்ரீ உ. வே. விளக்குடி வேதாந்தாச்சார் என்பவரிடம் ந்யாய சாஸ்த்ரத்தை ஆழ்ந்து பயின்றார். இதன் காரணமாக வித்வத் கோஷ்டிகளெல்லாம் இவருடைய புலமையை மெச்சி விருதுகளும் பஹுமானங்களும் அளித்தன. குறிப்பாக மைசூர், புதுக்கோட்டை முதலிய பேர ரசவைகளிலெல்லாம் முதல் ஸம்பாவனையும் பெற்றார். அவைகளில் ஒன்று புதுக்கோட்டை சம்ஸ்தானம் இவருக்கு ரூ. 500/- அளித்துப் பெருமை கொண்டது.

பண்டிதராயிருந்த புதுக்ரஹாரம் ப்ரஹ்மஸ்ரீ குப்புசாமி சாஸ்திரிகள், ஸ்ரீசுப்பராய ஆச்சாரியர் இவர்களிடம் மீமாம்சை, வ்யாகரணம் முதலிய துறைகளில் பயின்று தேர்ச்சி கொண்டார்.

ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீபாதுகாசேவக ராமானுஜன் என்று சொல்லப்படும் சின்னண்டவனை ஆச்ரயித்து நம்பெருமாள் திருவடிகளிலே ஆத்ம சமர்ப்பணம் செய்விக்கப் பட்டார். சின்னண்டவனது திருமேனி பாங்கில்லாமல் இப்பரம்பரைக்கொரு வாரிசு வேண்டுமே என்று எண்ணி ஏங்கிய போது ''நான் தயாராக இருக்கிறேன்'' என்று இந்த ஸ்வாமி இல்லறத்தின் படியிலே ஏற இருக்கும் வேளையில் தெரிவித்தார். சின்னண்டவன் இவர் தகுதி குறித்தும், வைராக்கியத்தை எண்ணியும் வியந்து இவரை ஆசானுக்க விழையும்போது பல பேர் இவரது கடமைகளை உணர்த்தும் முறையில் வம்பு பேசினர்கள். வயதுவந்த தாய் தந்தையர்-கட்டிய இளம் மனைவி இவர்களை துன்பப்பட விட்டு வருதல் நியாயமாகுமோ என்று பேசினர். சின்னண்டவன் மனமும் துணுக்குற்று சன்னியாசம் கொடுக்காமலேயே திருநாடு அலங்கரித்து விட்டார்.

அதற்காக ஸ்ரீவரதாச்சார் ஸ்வாமி மனம் தளர்ந்து விடவில்லை. ஸ்ரீ சின்னண்டவன் பரமபதித்ததும் கைங்கர்யங்கள் பூர்த்தியான பிறகு தன்னுடைய ஊருக்குப் போகாமல் அரங்கத்திலேயே ஒரு திருமாளிகை வாங்கி தாய்தந்தையரோடு வசித்தார். பிரதி தினமும் அனுஷ்டானங்கள் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் ஆசிரமத்தில் பிருந்தாவனத்திற்கு எழுந்தருளி திருவாராதனங்களெல்லாம் செய்து முடித்து மாலையில் திருவிளக்கு சமர்ப்பித்து விட்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளுவது வழக்கம்.

பிறகு அழகிய மணவாளன் சன்னிதிக்குச் சென்று அர்த்தஜாமம் வரை சாத்திருந்து கர்ப்ப க்ருஹத்தைத் துப்புறவாகச்

செய்துவிட்டுத் தான் திருமாளிகை திரும்புவார். இவருக்கு ஒரு குமாரனும் குமாரத்தியும் பிறந்தார்கள். சன்னியாசத்துக்குரிய பக்குவம் நேர்ந்தபோது ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் என்னும் காடந்தேத்தி ஆண்டவனிடம் துரீயாச்ரமம் பெற்றார். இதன் விபரம் பிறிதொரு பகுதியில் விவரிக்கப்படுகிறது.

கம்பீரமான திருமேனி. சொக்க வைக்கும் பார்வை. அன்பு ததும்பும் கணீரென்ற குரல். நவரசங்களும் மிளிரும் வாய்ச் சொல். காண்போர், பழகுபவர், வணங்குபவர் எல்லாரும் கோபிகைகள் கண்ணன் தன்னிடத்தில்தான் அபிமானம் என்று நினைக்கும்படி எப்படி கண்ணனிருந்தாலே அவ்வண்ணமே நம்-ஆண்டவன் என்றே ஒவ்வொருவரும் நினைத்தது கொண்டே இவருக்கு நம்மாண்டவன் என்கிற திருநாமம் வழங்கலாயிற்று. பெரிய பெருமாளுக்குப் பெயர் நம்-பெருமாள். ஆழ்வார்களுள் முதன்மை இடம் பெறுபவர் நம்-ஆழ்வார். ஆண்டவன் பரம்பரையில் உயர்குருவாம் இவர் நம்-ஆண்டவன். இவரது கடாக்ஷம் ஒரு தரம் விழுந்தால் அவன் தப்பித்துப் போனுன் என்கிற வரலாறு இல்லை. காந்தத்தின் வசப்பட்டு ஈர்க்கப் படும் இரும்பு போல தன் வசமிழந்து அவரையே அண்டி நிற்பர்கள். திரு நக்ஷத்திரம் பூரட்டாதி. ஸ்ரீ வேதாந்தராமானுஜ மஹாதேசிகனென்னும் திருநாமம்.

நம்மாண்டவன் யாத்ரை மிகவும் பரந்தது. அவர் எழுந்தருளிய இடங்களில் முக்கியமாக சிலவற்றைத் தருகிறேன்.

ராயம்பேட்டை, மன்னார்குடி, வடுவூர், திருக்குடந்தை, திட்டாணிமுட்டம், வழுத்தூர், நாகப்பட்டிணம் சமீபம் பாப்பாகோவில், மைசூர், திருப்பதி, காஞ்சீ, திருவஹீந்த்ரபுரம், சிதம்பரம், நவதிருப்பதிகள், கீழ்நத்தம் (திருநெல்வேலி) ஸ்ரீவில்லிபுத்தூர் முதலியவை.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த க்ரந்தங்கள் பலவற்றுள் திருவரங்கத் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிநிலை ஆழ்வாரைத் (பாதுகை) துதித்த நூல் ''பாதுகா ஸஹஸ்ரம்'' என்பது யாவரும் அறிந்ததே. இதனுடைய பெருமை சொல்லிலடங்கா. இதில் பல ச்லோகங்களில் இஷ்டஸித்தியை கொடுக்கக்கூடிய மந்த்ரங்கள் சேர்க்கப் பட்டிருக்கிறபடியால் பாராயணம் பண்ணுகிறவர்களுக்கு அவ்வோ பலன்கள் கிடைக்கும் என்பது கண்கூடு. இந்நூல் ஸ்ரீமத் ராமாயணம் போல் பஞ்சஸம்ஸ்கார காலத்திலேயே ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் உபதேசிக்கப்பட்டு வருகிறது. நம்மாண்டவன் நம் ஸம்ப்ரதாயத்தின் வழியே வந்த அர்த்தங்களை யெல்லாம் கிடைக்கும்படி தெள்ளிய தமிழில் இப் பாதுகா ஸஹஸ்ரத்திற்கு ஒரு வியாக்யானம் அருளிச் செய்திருக்கிறார். 860 ச்லோகங்களுக்கு வ்யாக்யானம் செய்த ஸ்வாமிக்கு மிகுதியைத் தலைக்கட்டுவதற்குள் திருமேனி பாங்கில்லாமல் போய்விட்டது. மிகுதியை நம்மாண்டவனிடம் ஸார்வார்த்த க்ரஹணம் செய்தருளிய ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் பூர்த்தி செய்தார். இதுதவிர ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரச் சுருக்கம், திருவாய்மொழி கீதா பாஷ்ய வ்யாக்யானங்களை ஸ்ரீ. உ. வே. V. K. இராமானுஜாச்சாரியரைக் கொண்டு அச்சிட்டு உலகிற்கு உபகரித்த உயரிய குரு இவர்.

செய்துகந்த திருப்பணிகள் பல. அவைகளில் சில இங்கு தரப்படுகிறது. வழுத்தூர் கிராமத்தில் பூர்வாசார்யர்களது திருநக்ஷத்ர வைபவங்கள் குறையாது நடக்க பூமி ஆர்ஜிதம் செய்து கொடுத்தது. வடவூரில் சக்ரவர்த்தித் திருமகன் திருவாராதனத்திற்கென வெள்ளி வட்டில்கள், தாம்பாளங்கள், தங்க அரைஞாண், தங்கச் சங்கிலி, தங்கச் சாவிக் கொத்து சமர்ப்பித்தது. திருக்குடந்தை எம்பெருமான் ஆராவமுதனக்கு வெள்ளித் தோளுக்கினியான் சமர்ப்பித்து, எழுந்த ருளப் பண்ணத் தண்டி, பட்டுக் கயிறு வாங்கி சமர்ப்பித்தார். காஞ்சியில் ஸ்ரீதேசிகோத்ஸவ சமயம் 500 தீவட்டிகள் போட்டு ஜகஜ்ஜோதியாய் ஜகதாசார்யனை எழுந்தருளப் பண்ணினார். தேவப்பெருமாளுக்குச் சாலக்கிணறு, வெள்ளைக் குளம் இவைகளிலிருந்து நித்திய திருவாராதனத்திற்கு தீர்த்தம் கொண்டு வர ஏற்பாடுகள் செய்தார். திரு

வஹீந்தர புரத்தில் ஸ்ரீதேசிகன் திரு மாளிகையைச் செப்பனிட்டு ஜீர்ணோத் தாரணம் செய்து அவருக்கு ஒரு பல்லக்கும் சமர்ப்பித்தார். உப்பில்லியப்பனுக்குத் தங்கக்கவசம் முதலியவை சமர்ப்பித்து பலகாலம் சேவித்திருந்தார்.

தன்னுடைய நாவன்மை கொண்டும் ஆழ்ந்த அறிவு கொண்டும் அபூர்வமான விஷயங்களை அலட்டிக்கொள்ளாமல் எளிய தமிழில் மனதை விட்டு அகல முடியாமல் ஆணித்தரமாக பதிய வைக்கும் திறமை யதனை உலகுக்குக் காட்டும் வகையில் அவர் அருளிய சில பகுதிகள் தொகுத்தளிக்கப் படுகின்றன.

வெற்றியின் இரகசியம்

பிறரை அடித்துச் சில சமயம் நாம் நன்மை பெறுவது இயற்கையாகலாம். நம் நன்மையை இழந்தும் பிறருக்கு வாழ்வு தருவதே தெய்வீக குணம். இயற்கை யான மிருகத் தன்மை யடங்கி இக்குறிக் கோளை நிறைவேற்றுவதுதான் வெற்றி..

கண்ணீர் தரும் பயன்கள்

கண்ணீர் நம் சித்தாந்தத்தின் அரிய பொக்கிஷம். உயர் ஔஷதம். விலையில்லா மாணிக்கம். தேடற்கரிய சிந்தாமணி; ஈசுவரனை நிலை குலைய அடிப்பது. அனவரதம் பாபம் பண்ணிப் பரிதவிக்கும் சேதனனது திவ்யோபஹாரம். ஸர்வேச்வரனுடைய விச்லேஷத்தில் பரிதவிக்கும் ஸ்ரீவைஷ்ண வனது கண்ணீர் துளும்பும் முகம் எளிதில் கிடைக்காது. ஆனால் சேவிக்கத் தக்கது. இந்தக் கண்ணீரில்லாத ஜன்மம் கருங்கற் பாறை.

ரோகியின் இலக்கணங்கள்

காமம், க்ரோதம் முதலிய ஆறு மஹா பாதகங்களுக்கு வசப்பட்டவன் பெரிய ரோகியே (வியாதியுடையவன்). அவன் முகம், பேசும் வார்த்தை, நடக்கும் முறை எல்லாம் பயங்கரமாயிருக்கும். குஷ்டரோகி என்றால் இகழ்ந்து ஓடுகிறோம். ஆனால் கோபத்தினால் துடிக்கும் ஒருவனை, பொறு மையினால் தன்மை மாறிப் பாதகங்கள் புரியும் ஒருவனை நாம் அப்படி வெறுப்ப தில்லை. குஷ்டரோகியின் முகம் 'கோபி' யினுடைய முகத்தைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தது. . . . .

இயற்கையை ரசிப்பதெப்படி?

காரியத்தின் அழகு காரணத்தின் மேன் மையை விளக்கினால் நலம். நாம் பார்க்கும் அழகை எல்லாம் நமக்குக் கருணையுடன் அளித்து நம் இன்பம் தன் இன்பமாகக் கருதும் கருணாநிதியைப் பற்றி நமக்கு நினைப்பூட்டுமாகில் இந்த ஆகாயத்தையும், சந்திரனையும் எவ்வளவோ ரசிக்கலாம். கண் குளிரும் பொழில்களையும், பல மரங்களையும், ஆறு, மலை, சுனை, வயல் இவற்றையெல் லாம் நமக்குத் தாயினும் தாயாகி அளித்த தயாபரனைத்தான் வாழ்த்தவேண்டும்.

துன்பமே வேண்டும்!

உனக்கு வரும் கஷ்டங்களெல்லாம் உன் ஆத்ம வஸ்துவாகிய பொன்னுக்கு உறைகல் போல. சோதனைகளில் நலிவுற்றுத் தேறிய ஆத்மா - உறைகல்லில் உறைக்கப்பட்ட பொன் போல் புத்தொளி விட்டுப் புது வடிவம் பெறும். துயரம் வரவர ஆத்ம வஸ்து புஷ்டியாகும். சந்தோஷம் அடை யும். துயரத்தினால்தான் தெய்வத்தை நினைக்கும் வாய்ப்பு நேரிடுகிறது.

ஏழு வேற்றுமைகளில் ஏழு தத்துவங்கள்.

(1) நான் — என்பது ஈசுவரனால்

(2) என்னை ஆள்பவன் - உயிர்ப்பிப் பவன் ஈசுவரன்

(3) நான் ஈசுவரனால் நடக்கிறேன் (ப்ரவிருத்தி, நிவ்ருத்திகள் அவன தீனம்)

(4) என்னுடைய சத்தை (Existence) ஈசுவரன் (பொருட்டே)

(5) என்னுடைய ஸர்வம் அவனிட மிருந்தே.

(6) நான் அவனுக்கே — மற்றவர்க்கல்ல.

(7) என்னுடைய சுக-போக்ய-விச்ரமரூப மான எல்லாம் அவனிடத்தில்.

பட்டமகிஷி என்கிற சொற்றொடரில் 'பட்ட' என்கிற சொல்லின் விளக்கம்.

அவனல் திருந்தாத உலகத்திற்காகப்பட்ட மகிஷி. அவன் செய்ய வேண்டிய வேலை யைத் தான் ஏற்று அவனுக்காகத் தான் பாடு பட்ட மகிஷி. அவள் பாடுபட்டா ளென்றல் படத்தான் வந்தாள். அவளது பெண்மைக்கும், தாய்மைக்கும் லக்ஷணமான கருணை அவளை பாடுபடச் செய்தது.

ஆலயங்களுக்குச் செல்லாமல் இருக்கும் இடத்தில் தெய்வத்தை நினைத்தாலென்ன?

நமக்கு ஏது அவ்வளவு சக்தி- நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். அர்ச்சா வதாரத்தில் சகல கல்யாண குணங்களும் சூரியனின் ஒளிபோல் ஜ்வலிக்கின்றன. ஒரு க்ஷணம் பாராவிட்டாலும் மரணம் போல் தான். காலையில் பார்த்தால் மாலையில் புதிது. இன்று பார்ப்பதற்கு நாளை புதிது. ஒவ்வொரு கணமும் புதிதாகவும், அழகு நிறைந்ததாகவும், ஆனந்த மயமாகவும் இருக்கும் அர்ச்சாவடிவம். நம்முடைய சுக துக்கங்களில் ஆறுதல் அளிப்பது.

காழ்ப்புணர்ச்சி இல்லாத காம்பீர்யம் பொறுமை யற்ற பெருந்தன்மை மாற்றுக் கலையில் வெறுப்பற்ற தன்மை.

அக்காலத்தில் வடகலை ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களுள் ப்ரபத்தி செய்யும் முறை யைப் பற்றின வாதங்கள் எழ இந்தக் கல கத்தை நோக்கிய நம்மாண்டவன் மனம் நொந்து ஒற்றுமையை உணர்த்தி ஒரு சில வார்த்தைகள் யாவரும் அறியும் வண்ணம் அச்சிட்டு வெளியிட நினைத்தார்.

அச்சாபீசில் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத் திற்கேற்ற திருமண் காப்புதான் இருந்தது. உடன் இருந்த பலர் இந்த அறிக்கையை மதுரை, திருச்சி ஏதேனுமொரு இடத்தில் உள்ள அச்சாபீஸுக்கு அனுப்பி வடகலை திருமண் காப்புடன் வெளிவர வேண்டும் என்று பிடிவாதம் செய்தனர். நம்மாண் டவன் ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் ஒற்றுமை வேண்டுமென்று உபதேசித்து இந்த பெரும் முயற்சியில் வேற்றுமை வேண்டாமெனச் சொல்லி, ஸ்ரீ ஆண்டாளது திவ்விய சன்னிதி யில் உள்ள சின்னங்களுடன் அச்சிடப்பட வேண்டுமென்று உறுதியாய்ச் சொல்லி விட்டார்.

தென்கலையாரிடம் ஆண்டாள் அகப் பட்டுக் கொண்டாளே என்று ஒருவர் அங்கலாய்க்க நம்மாண்டவன் அருளிச் செய்தருளிய நல் வார்த்தைகள்.

பசித்தவனிடத்தில் பால் சென்று சேர்ந் தது. பொருளுக்குப் பதறிஎழும் தேவை எங்கிருக்கிறதோ அங்கே பொருள் சேர்ந் தது. அதற்கு யார் என்ன செய்யமுடியும்?

த்வேஷம் என்பது பெரிய பாபம். அன்பைக்கூட ஆசார்யாள் விதிக்கவில்லை. அத்வேஷமே போதுமென்றார்கள். நமது உள்ளம் ஒரு பெரிய தோட்டம். அதில் ஆயிரக்கணக்கான நல்ல மரங்கள், கொடிகள் இருந்தாலும், ஒரு விஷக் கொடியை பரவ விட்டுவிட்டால் முழுத் தோட்டத்தையும் அழித்துவிடும். தெய்வத்தைச் சார்ந்து ஜீவிக்கும் ஒரு சாராரை இகழ்ந்து அந்த தெய்வத்தையே நீயும் உபாசிப்பதாகச் சொல்லிக் கொள்வதில் என்ன அர்த்த மிருக்கிறது. சர்வேச்வரன் கருணையினால் பலபல அமைப்புகள் அமைத்திருக்கிறான். ஒருவருக்கொருவர் நலன் ஒன்றையே நாடு கின்றவர்களாய் வாழ்வதையன்றோ சர்வேச் வரன் உகப்பான்.

பொருள்படைத்ததன் பயன்

பரம்பொருள் நமக்குப் பணம்கொடுத்தது தன் சொந்த அனுபவங்களுக்காக இல்லை. அதனுடைய தர்மகர்த்தாவாக இருந்து ஏழை எளியவருக்கு இஹபர இன்பம் செய் வதற்காகவே என்பதை மறக்கக் கூடாது.

''(ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு'') என்ற மூதுரை நினைவு கொள்ளத் தக்கது.

மரணத்தைப் பற்றிய ஒரு விளக்கம்

மரணம் என்றுமில்லை. அதன் மூலம் மனிதன் அழியா வாழ்வை ஸ்ரீவரதனின் பேரருளால் அடைகிறான். உலக வாழ்க்கைக் கும் உயர்வாழ்வுக்கு மிடையில் அவற்றைப் பிணைக்கும் சிறு பாலமே மரணம். ரயிலில்

உதவியால் ஆண்டவன் சேவை ப்ராப்தமாகிறது. ஆனால் ரயிலை வெறுக்கிறோமோ என்றால் இல்லை. மரணத்தை மாத்திரம் ஏன் வெறுக்கவேண்டும்?

சங்கீதத்தில் அபார ஈடுபாடு

ஒரு சமயம் ''வானிடைவாழும்'' என்கிற ஆழ்வார் பாசுரத்தைப் பாடுமாறு திருவையாறு கல்லூரி முதல்வராயிருந்து கீர்த்தி மூர்த்தியான S. T. ஸ்ரீநிவாசாச்சாரியாரை நியமித்தாயிற்று. இரவு நேரம். நிசப்தமான தொரு சூழ்நிலை. மனமுருகி காம்போதி ராகத்தில் பாடத் தொடங்கி ''கானிடைத் திரிவதோர்'' என்கிற அடியை உச்சஸ்தாயியில் பிடித்து -தூனிடை ஆழி' என்கிற அடியை மத்யம காலத்தில் பாடவும், ஸ்ரீமதாண்டவன் கண்ணீர் ததும்பத் தலையசைத்து அனுபவிக்கிறார் உள்ளிருந்து அடுத்த வீடுகளிலிருந்தோர் கூடிவிட்டனர். அருகிலிருந்த சுவாமி ஒருவர் ஸ்ரீமதாண்டவனுடைய நித்திரைக்குக் குந்தகமென்று பாட்டை நிறுத்த ஆணையிடுகிறார். ஸ்ரீமதாண்டவன் அவரை அதட்டி

''ஏ! மட்டி! நீ பேசாமலிருடா. பதிபத்தினிகளின் சம்பாஷணைகளில் நாத்தனார் குறுக்கிடுவதுபோல் நீ எங்கடா வந்தாய்!'' என ஸாதித்தாயிற்று.

அவர் காலத்திலிருந்த மற்றைய ஆசார்ய பீடத்து ஆசார்யர்களிடம் அன்புடன் பழகி நம் ஆண்டவன் பரம்பரையில் அதிகமாக சிஷ்யார்ஜனம் செய்த ஆசார்யன். ''ரிபூணாமபி வத்ஸல:'' என்றபடி வசைபாடுகின்றவரிடத்து அதிகமான அன்பு செலுத்தும் பண்புடைய மஹான். அர்ச்சாவதார எம்பெருமான்களை அனுபவிக்கும் முறை அதி விலக்ஷணமாயிருக்கும். திருவாக்கிலிருந்து வரும் விஷயங்களெல்லாம் தத்துவங்களாயிருக்கும். நல்லவை எங்கிருந்தாலும் அவைகளை புறக்கணிக்கலாகாது என்கிற சமரசப் போக்குடையார். நமது பரம்பரையை உயர்ந்ததொரு நிலைமைக்கு கொண்டுவந்த உயர் குரு. இவரது மாற்றுருவமே என்னலாம்படி எல்லா வகையிலும் அவரையே நம் ப்ரக்ருதம் ஆண்டவன் நினைப்பூட்டும் வகையில் அவதரித்திருப்பது நாம் செய்த பெரும் பேறு.

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன்)

1880—1940

ஆக்கூர் ஆண்டவன் — எங்களாண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனைப் பற்றிச் சில குறிப்புகள்.

ஸ்ரீமதாண்டவன் காஞ்சியை அடுத்துள்ள ஆக்கூர் என்னும் கிராமத்தில் அவதரித்தார். ஸ்ரீரங்காச்சார் என்பது பூர்வாச்ரமத் திருநாமம். ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவனிடத்தில் காலக்ஷேபங்கள் செய்து, அவரால் தேவப்பெருமாள் திருவடிகளில் சரணாகதி செய்விக்கப்பட்டார். பல திவ்ய தேசங்களில் ஸ்ரீமத் பாகவத பாரத ஸ்ரீமத் ராமாயண ப்ரவசனங்கள் செய்தருளி, அனுயாஸமாக அற்புதமாக அர்த்த விசேஷங்களை ஸாதித்தருளுவார்.

நம்மாண்டவன் நோவு சாத்திக் கொண்டு ஆசார்யகத்வம் செய்தருள இவரை நியமித்தபோது தனக்கு யோக்யதை குறைவு என்று தனக்கே உரித்தான பவ்யத்தாலும் பயத்தாலும் சம்மதிக்காத காரணத்தால் ஆசார்யாள் நியமனம் ஆகாமலேயே நம்மாண்டவன் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

காஞ்சியில் எழுந்தருளியிருந்த இவர் பின் பல முக்கிய சிஷ்யர்களின் பிரார்த்தனைக் கிணங்கி ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளினார். முன்பே ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனிடம் சந்நியாசம் பெற்றுக் கொண்டிருந்த திருக்குடந்தை நாராயண - ஸ்வாமியிடமிருந்து துரீயாச்ரமத்தைப் பெற்று நம் நல்ல குருபரம்பரையில் ஆசார்யனாய் அவதரித்தருளினார்.

நம்மாண்டவனோடு ஸ்ரீமதாண்டவன் பரம்பரை நலிந்து விடுமோ என்கிற சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஆசார்ய பீடத்தை அலங்கரித்து, லாகவமாய், அடக்கத்தோடும் அகங்காரமில்லாமலும் ஆசார்யாளுக்குரிய அரும்பெரும் பெருமைகளோடு எழுந்தருளியிருந்தார்.

கம்பீரமான திருமேனி. சரஸமாய் உரையாடும் தன்மை கொண்டவர். காட்சிக்கு எளியவர். கடுஞ்சொல் அறியார். சிஷ்யர்களைச் சேர்ப்பதில் ஆர்வங்கொண்டும், திவ்ய தேசத்தெம்பெருமான்களை மங்களாசாஸனத்தில் த்வரையோடும் யாத்ரைகளும் கண்டருளினார். இவரது திருநக்ஷத்ரம் உத்திரட்டாதி. இவர் ஆக்கூராண்டவன் என்றும், எங்களாண்டவன் என்றும் அழைக்கப் பெறுவர்.

எங்களாண்டவன் விஜய யாத்ரைகள்

(நவம்பர் 1936)

தேதி	மைல்	தங்கியிருந்த இடம்
5	2	ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் விட்டுப் புறப்பாடு. விளக்குடி கோபாலாச்சாரியார் திருமாளிகை.
6	4	புது அக்ரஹாரம் சருக்கை கிருஷ்ணமாச்சாரியார் திருமாளிகை.
7	4	தென்னூர் - வரதாச்சாரியார் திருமாளிகை.
8	10	மாத்தூர் - ஒரு சத்திரம்.
9	6	நல்லூர் - ஒரு சத்திரம்.
10	8	அம்மாசத்திரம் - ஒரு சத்திரம்.
13	8	வாகப்பட்டி - ராஜமய்யங்கார் திருமாளிகை (காட்டுப்பாதை).
15	5	புதுக்கோட்டை - திவான் கிருஷ்ணமாச்சாரியார் திருமாளிகை சந்தைப் பேட்டை.

புதுக்கோட்டையில் திவான் ஸ்வாமி ஸத்காரத்தில் 3மாதங்கள் வாஸம். பின் அரியக்குடிக்குப் புறப்பாடு.

தாது-ஹூ மாசி-மீ (பிப்ரவரி 1937)

18	—	திவான் மாளிகை
	6	கம்மன் செட்டி சத்திரம் - சத்திரம்.
18	6	புலிவலம் - சத்திரம்
19	7	**திருமய்யம்** - தேசிகன் சன்னிதி.
22	5	நேமத்தான்பட்டி சத்திரம்.
23	6	கோட்டையூர் - ராகவாச்சாரியார் திருமாளிகை (உபன்யாசம் ஸாதித்தருளியது).
25	4	காரைக்குடி.
பங்குனி		ரெகுநாதாச்சாரியார் திருமாளிகை செக்காலையிலிருந்து விருதுகளுடன் காரைக்குடி எழுந்தருளுதல் - நாகநாதபுரம் கண்ணன் மங்களாசாசனம்.
2	2	அரியக்குடி - துவாதசிமடம்.

அரியக்குடியில் சுமார் 7 மாதங்கள் எழுந்தருளியாயிற்று. திருமேனியில் நோவு சாத்திக் கொண்டு திருமய்யம் டாக்டர் சுப்ரமணிய அய்யர் ஆப்ரஷேன் செய்த முறையில் குணமாயிற்று. பிறகு இராமநாதபுரம் புறப்பாடு.

(அக்டோபர் 1937)

4-10-37	7	ஆராவயல் - ஸ்ரீநிவாசராகவ அய்யங்கார் திருமாளிகை.
5-10-37	4	தேவக்கோட்டை - புது சிலம்பணி அக்ரஹாரம்.
8-10-37	4	செய்யாநந்தல் - பட்டாபிராம அய்யங்கார் திருமாளிகை.

தேதி	மைல்	தங்கியிருந்த இடம்

(அக்டோபர் 1937)

10-10-37	7	அரசூர் - கிராம முன்சீப் அண்ணத்துரை அய்யங்கார் திருமாளிகை மண்பாதை.
11-10-37	3	திருவாடானை - ஒரு தனியார் வீடு.
12-10-37	7	திருவத்தியூர் (குளத்தூர்வழி) ஒரு தனியார் வீடு (காட்டுவழி).
13-10-37	8	உப்பூர் - சத்திரம். அழகய்யங்கார் சத்காரம்.
13-10-37	6	திருப்பாலக்குடி - புதுச்சாவடி.
14-10-37	5	தேவிபட்டணம் (நவபாஷாணம்) சத்திரம். (சமுத்ரஸ்னானம்).
14-10-37	10	ராமநாதபுரம், முஹர்ணிதெரு கோபு சீனிவாசாச்சாரியர் திருமாளிகை.
15-10-37	10	**தர்ப்பசயனம்** ஸ்னானகட்டம் - சேஷகிரிராயர் சத்திரம். சேதுஸ்னானம் - விஷ்ணு புண்ய காலம்.
18-10-37	3	தர்ப்பசயனம் முகுந்தராயர் சத்திரம். புதுக்கோட்டை திவான் கிருஷ்ணமாச்சாரியர், இராமநாதபுரம் திவான் கோபால்ஸாமி அய்யங்கார், ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் இவர்களது ஆதரவாலும், பக்தி விசுவாசத்தாலும் கோவில் மரியாதைகளோடு, ஸ்ரீதேசிகன் சன்னிதியில் எழுந்தருளியிருந்து திருப்புல்லாணி எம்பெருமானை மங்களாசாஸனம் செய்தருளினர்.
26-10-37	8	உத்தரகோசமங்கை (கரடுமுரடானபாதை) ஒரு சத்திரம்.
26-10-37	12	சிக்கல் (வயல்வழி) ஒரு சத்திரம்.
27-10-37	3	கொத்தன்குளம் (காட்டு வழி) சுந்தரேசப் பெருமாள் சன்னிதி - மிக அருகில் மாமுனிகள் அவதாரஸ்தலம்.
27-10-37	4	செழுவனூர் - ஒரு பக்தர் வீடு.
27-10-37	8	சாயல்குடி - ஒரு சத்திரம்.
28-10-37	9	தங்கமாபுரம் - பஜனைமடம்.
29-10-37	8	வையார் அரியநாயகம் பிள்ளை சத்திரம் நதியை மிகவும் கஷ்டப்பட்டு தாண்டப் பட்டது காட்டாறு குறுக்குவழி.
31-10-37	10	வேடவநத்தம் - லோகல்பண்டு சத்திரம்.
2-11-37	10	ஒட்டப்பிடாரம் - வைகுண்டப் பெருமாள் சன்னிதி (தீபாவளி).
4-11-37	7	மேலதட்டப்பாரை பெருமாள் நாயக்கர் பஜனைமடம்.
5-11-37	2	கீழதட்டப்பாரை கிருஷ்ணன் சன்னிதி.
5-11-37	8	வாகைக்குளம் லோகல் பண்டு சத்திரம்.
7-11-37	12	**ஸ்ரீவைகுண்டம்** தாத்தாச்சாரியர் வக்கீல். ஸ்ரீ சோரநாதன் ஸ்ரீ சோரநாயகி மங்களாசாசனம்.
7-11-37	2	**திருப்புளியங்குடி** - ஸன்னிதி (புஷ்கரிணி நீராட்டம்).
10-11-37	1	**நத்தம்** - விஜயாசனப் பெருமாள் மங்களாசாசனம்.

தேதி	மைல்	தங்கிய இடம்

(நவம்பர் 1937)

11-11-37	5	**பெருங்குளம்** - மாயக்கூத்தன் ஸன்னிதி மங்களாசாஸனம்.
11-11-37	3	**இரட்டைத் திருப்பதி** எம்பெருமான்கள் ஸேவை.
11-11-37	1	**தென்திருப்பேரை** - மகரநெடுங்குழைக்காதர் மங்களாசாஸனம்
12-11-37	3	**ஆழ்வார் திருநகரி** தேசிகன் சன்னிதி ஸ்ரீ ஆதிநாதன்-குருகை நாச்சியார் ஆதிநாயகி., பொலிந்து நின்ற பிரான் மங்களாசாஸனம்.
15-11-37	1½	**திருக்கோளூர்** - வைத்தமாநிதி - மதுரகவிகள் மங்களாசாஸனங்கள்.
16-11-37	1½	**ஆழ்வார் திருநகரி** (ஸன்னதியில் உபன்யாஸங்கள்).
17-11-37	6	**கருங்குளம்** இரண்டு பக்தர்கள், அக்ரஹாரம்.
18-11-37	9	மூலைக்கரைப்படி ரெட்டியார் சத்திரம்.
18-11-37	9	**வானமாமலை** ராமானுஜ கூடம். வானமாமலை ஜீயர் ஸ்வாமி எங்களாண்டவன் எழுந்தருளியிருந்த 5 நாட்களுக்கும் ஆராதித்து, பரத்வாஜாச்ரம உபசாரங்கள் செய்வித்து, ஸ்ரீவரமங்கையையும், தெய்வநாயகனையும் மங்களாசாஸனம் செய்விக்கப் பண்ணி மடத்தில் பெருமாளுக்குள்ள நகைகளை யெல்லாம் காட்டித் தந்து, வந்தவர்களுக்கு எண்ணை கொடுத்துத் தேய்த்துக் கொள்ளச் சொல்லி, வண்டிக்காரர்களுக்கும், மாடுகளுக்கும் கூட தீனிகள் கொடுத்து ராஜோபசாரம் செய்து ஆராதித்தார்.
23-11-37	9	**திருக்குறுங்குடி** அஹோபிலமடம். நம்பிகள் - கலியன் பிருந்தாவனம் - உடையவர் வட்டப்பாறை ஸேவை. தென்சிந்து (நம்பி நதி).
26-11-37	5	மலைமேல் நம்பி - ஸன்னிதி (ஆகாசகங்கை போன்ற அருவி நீராட்டம்).
26-11-37	5	திருக்குறுங்குடி.
2-12-37	9	பத்மநேரி உக்குமந்தராயர் சத்திரம்.
2-12-37	12	காருக்குருச்சி - ஸ்ரீ கண்ணன் சன்னிதி.
3-12-37	8	அம்பாசமுத்ரம் - A. K. சீனிவாசாச்சாரியர் திருமாளிகை.
5-12-37	3	மன்னர்கோவில் குலசேகராழ்வார் பிருந்தாவனம் (கோவில் உள்ளே.) மூலவர் - வலதுதிருக்கை அபயப்ரதான முத்ரையோடு சீனிவாசன்.
5-12-37	3	அம்பாசமுத்ரம்.
6-12-37	5	வீரவநல்லூர் - சுந்தரராஜப்பெருமாள் சன்னிதி.
9-12-37	6	பத்தமடை - ஸ்ரீனிவாசன் சன்னிதி.
9-12-37	6	கோபாலசமுத்ரம் அம்பி அய்யங்கார் திருமாளிகை.
13-12-37	5	திருநெல்வேலி - வீரராகவபுரம் - மண்டபம்.
14-12-37	4	கீழ்நத்தம் - ஸ்ரீ வேணுகோபாலன் ஸன்னிதி நம்பி அய்யங்கார் திருமாளிகை. 10 நாட்கள் தங்கியாயிற்று.

தேதி	மைல்	தங்கிய இடம்
(டிஸம்பர் 1937)		
24-12-37	5	திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை - (Rtd.) மருத்துவ அதிகாரி ஸ்ரீநிவாச ராகவ அய்யங்கார் திருமாளிகை.
26-12-37	5	இராமய்யன்பட்டி - ஒரு சாவடி.
26-12-37	8	மானூர் கிராம முனிசீப் கோர்ட்டு.
27-12-37	5	அழகிய பாண்டியபுரம் லோகல்பண்டு சத்திரம்.
29-12-37	11	பனவடை லோகல்பண்டு சத்திரம்.
30-12-37	11	சங்கரநயினார் கோவில் - செட்டியார் சத்திரம். சப்-மாஜிஸ்ட்ரேட் நம்பி அய்யங்கார் மிகுந்த உபசாரங்கள். தென்கலை சம்ப்ரதாயஸ்தர்.
(ஜனவரி 1938)		
1-1-38	8	கரிவலம்வந்தநல்லூர். குன்னக்குடி மேல் மடம்.
2-1-38	8	சோளபுரம் - லோகல்பண்டு சத்திரம்.
3-1-38	7	இராஜபாளையம் - சம்பந்தபுர அக்ரஹாரம் ஸ்ரீவில்லிபுத்தூர் தேசிகாசாரியர் ஆராதித்தார்.
4-1-38	7	**ஸ்ரீவில்லிபுத்தூர்** - வாழைக்குளத்தெரு எல்லா சிஷ்யர்கள் - நாச்சியார், பெருமாள், தேசிகன் மங்களாசாசனம்.
18-1-38	3	மலைமேல் சீனிவாசன்
	3	ஸ்ரீவில்லிபுத்தூர்.
22-1-38	5	மல்லி - திருவாழி அய்யங்கார் திருமாளிகை.
22-1-38	9	**திருத்தண்கால்** - அப்பன் சன்னிதி.
23-1-38	7	குருமூர்த்திநாயக்கன்பட்டி - போர்டுபள்ளி.
23-1-38	7	பாவாலி - போர்டு பள்ளி.
25-1-38	9	வில்லூர் - சன்னிதி வண்டி அச்சு முறிந்து இரவுதான் சரியானது: ஸ்ரீமதாண்டவன் உள்பட கைங்கர்யபரர்கள் பட்டினி, பட்டணம் மாமா - எம்பளச்சேரி ராகவாச்சார் - தேஹூர் கிருஷ்ணமாச்சார் முதலானோர் கூட இருந்தனர்.
25-1-38	10	திருமங்கலம் - சுந்தரதாஸ் வீடு - குஜராத் அந்தணர்.
26-1-38	8	திருப்பரங்குன்றம் - குருக்கள் பங்களா.
27-1-38	6	மதுரை - வெங்கடசாமி நாயுடு அக்ரஹாரம் லக்ஷ்மீ வெங்கடேச விலாசத்தில் 2 மாதம் தங்கல். அடுத்த மாதம் பேச்சியம்மன் படித்துறை இராமேச்வர தேவஸ்தான வேதபாடசாலை.
12-2-38	8	மறவன் மண்டபம்.
12-2-38	6	**அழகர் ஸன்னிதி** - உடையவர் ஸன்னிதி கருடசேவை - கஜேந்த்ர மோக்ஷம்.
14-2-38	4	**நூபுரகங்கை** - சிலம்பாறு நீராட்டம்.

தேதி	மைல்	தங்கிய இடம்
(பிப்ரவரி 1938)		
14-2-38	4	அழகர் சன்னிதி.
14-2-38	4	பொய்கைக்கரைப்பட்டி - தெப்பம்.
14-2-38	7	ஆனைமலை.
14-2-38	3	**திருமோஹூர்** - ரங்கனுதன் சன்னிதி.
15-2-38	8	**மதுரை : கூடலழகர் சேவை** ராயர் தோட்டம். 2 மாதங்கள் தங்கல்.
12-4-38	2	அண்ணாத்துரை அய்யங்கார் பங்களா. அழகர் எதிர் சேவை. குதிரை வாகனம்.
13-4-38	4	வைகை நடுமண்டபம். சேஷவாஹன கருடவாஹன ஸேவை.
13-4-38	4	மதுரை.
16-4-38	4	அண்ணாதுரை அய்யங்கார் பங்களா.
16-4-38	4	ராமய்யங்கார் மண்டபம் - புஷ்பப் பல்லக்கு.
17-4-38	4	மதுரை.
3-5-38	9	திருவாதவூர் செட்டியார் பாடசாலை.
4-5-38	4	கொட்டகுடி - செட்டியார் சத்திரம்.
4-5-38	6	கோட்டைநத்தம்பட்டி ஒரு சத்திரம்.
5-5-38	4	உறங்காம்பட்டி - ஒரு செட்டியார் சத்திரம்.
5-5-38	9	ஏரியூர் - மண்டபம் - காரைக்குடி துரைசாமி அய்யங்கார் அவர் சஹோதரர்கள் உபசரணை.
6-5-38	4	**திருக்கோஷ்டியூர்** - தேசிகன் சன்னிதி - கருடசேவை. ஸௌம்ய நாராயணன் மங்களாசாஸனம்.
14-5-38	6	கொங்கரத்தி - வன்புகழ் நாரணன் சன்னிதி.
15-5-38	4	மாநகர் - சத்திரம் - காரைக்குடி ரகுநாதாச்சாரியர் உபசரணை.
16-5-38	6	அரியக்குடி - துவாதசி மடம். கோவில் மரியாதை - ஸ்ரீனிவாசன் ஸேவை ஒரு மாதம் தங்கி மங்களாசாஸனம்
16-6-38	2	காரைக்குடி ரகுநாதாச்சாரியர் திருமாளிகை.
17-6-38	4	கோட்டையூர் - ரெங்காச்சாரியர் திருமாளிகை.
18-6-38	5	நேமத்தான்பட்டி - செட்டியார் சத்திரம்.
18-6-38	5	**திருமய்யம்** - தேசிகன் சன்னிதி.
20-6-38	7	செட்டி சத்திரம் கம்மஞ்செட்டி.
21-6-38	6	புதுக்கோட்டை - ஸ்ரீரங்கராஜ அய்யங்கார் திருமாளிகை.
26-6-38	7	ஈச்சநாரி போலீஸ் ஸ்டேஷன்.
26-6-38	7	அம்மாசத்திரம் - கோபாலஸாமி அய்யங்கார் திருமாளிகை.
28-6-38	2	கொளத்தூர் - ஸன்னிதி.
28-6-38	7	தொண்டமான் நல்லூர் - சத்திரம்.
29-6-38	6	மாத்தூர் - நல்லூர் - சத்திரம்.

தேதி	மைல்	தங்கிய இடம்

(ஜூன் 1938)

30-6-38	10	தென்னூர். கோவாபரேடிவ் வரதாச்சாரியர்.
2-7-38	3	புது அக்ரஹாரம் - விளக்குடி கோபாலாச்சாரியர் திருமாளிகை.
3-7-38	2	பெரியாச்ரமம், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சீபுரம் புறப்பாடு.

(ஏப்ரல் 1939)

22-4-39	6	வாளாடி - அக்ரஹாரம்.
23-4-39	10	பூவாளூர் - வரதராஜன் சன்னிதி.
24-4-39	6	புள்ளம்பாடி - கணக்கப்பிள்ளை வீடு.
24-4-39	8	கள்ளகம் - பிரயாண விடுதி
25-4-39	7	கீழப்பழுவூர் - பிரயாண விடுதி.
26-4-39	8	அரியலூர் - வக்கீல் ராமானுஜாச்சாரியார் திருமாளிகை.
26-4-39	4	சாவடி - பிரயாண விடுதி.
27-4-39	5	விளாங்குடி - பிரயாணவிடுதி - பள்ளிக்கூடம்.
28-4-39	8	உடையார்பாளையம் - சீனிவாசன் சன்னிதி.
29-4-39	8	காட்டாத்தூர் - உடையார்பாளையம் ஜமீன் பங்களா.
29-4-39	3	ஆண்டிமடம் - பஞ்சாயத்து போர்டு கட்டிடம்.
30-4-39	5	ஸ்ரீமுஷ்ணம் - ஸ்வர்ணம் கிருஷ்ணமாச்சார் திருமாளிகை - வேத பாடசாலை அதீயாராதனம்.
5-5-39	7	முடிகொண்டான் நல்லூர் - குருசாமி அய்யர் வீடு.
6-5-39	4	சேத்தியாத்தோப்பு - லோகல் பண்டு சத்திரம்.
6-5-39	4	புன்னலூர் - சாவடி.
7-5-39	5	வடலூர் - குருக்கள் சத்திரம்.
7-5-39	3	குறிஞ்சிப்பாடி - பிரயாணவிடுதி.
8-5-39	8	குள்ளன்சாவடி - செட்டியார் சத்திரம்.
8-5-39	5	பெரியராமபுரம் - சாவடி.
8-5-39	6	திருவஹீந்திரபுரம் - ஆசிரமம்.
10-5-39	8	மேல்பட்டாம்பாக்கம் - நெல்லிக்குப்பம் வழி பெருமாள் சன்னிதி.
11-5-39	8	கண்டர்க்கோட்டை - பெருமாள் சன்னிதி.
12-5-39	8	வெங்கடாத்ரி அகரம் - பொய்கைப்பாக்கம் வெங்கடாச்சார் திருமாளிகை.
13-5-39	6	பொய்கைப்பாக்கம் - மணியம் கிருஷ்ணமாச்சார் திருமாளிகை.
16-5-39	8	விக்ரவாண்டி - வரதராஜன்கோவில்.
17-5-39	8	சென்னூர் அக்ரஹாரம்.
17-5-39	8	சிங்கனூர் - அக்ரஹாரம்.
18-5-39	12	வெள்ளிமேடு - தேவனாதாச்சாரியர் திருமாளிகை.

தேதி	மைல்	தங்கிய இடம்

(மே 1939)

19-5-39	3	தையார் - பெருமாள் சன்னிதி.
19-5-39	8	வந்தவாசி. போலீஸ் கோபாலாச்சார் திருமாளிகை.
20-5-39	6	புரிசை - பாஷ்யம் ராமானுஜாசார் திருமாளிகை.
21-5-39	5	மேல்மா - கல்யாணமய்யங்கார் திருமாளிகை.
22-5-39	9	மாங்கால் மண்டபம் - ஆக்கூர் மஹாஜனங்கள் வரவேற்பு.
22-5-39	9	காஞ்சி தூப்புல் - தேசிகன் சன்னிதி ஜடாப்ரஹ்மசாரி ததீயாராதனை.
23-5-39	2	பாதுகாச்ரமம் ஸ்ரீரங்கராஜ வீதி. காஞ்சி. 5 மாங்கள் தங்கியது.

காஞ்சீபுரத்திலிருந்து மேல்கோட்டை திருநாராயணபுரம் - சோஸலே புறப்பாடு.

(அக்டோபர் 1939)

21-10-39	8	மாகரல் - ஸன்னிதி.
23-10-39	8	உத்திரமேரூர் - கிருஷ்ணமாச்சாரியர் திருமாளிகை (ராமாயண - பாகவத சில்லரை ரஹஸ்ய காலக்ஷேபங்கள்).

(ஜனவரி 1940)

16-1-40	8	மாகரல் - ரெவின்யூ அதிகாரி கிருஹம்.
17-1-40	8	காஞ்சீபுரம் - பாதுகாச்ரமம். திருப்புட்குழி, கூரம் மங்களாசாஸனம்.
29-1-40	12	நீரஞ்சூர் - ஒரு வீடு.
30-1-40	13	ஸ்ரீபெரும்பூதூர் - உடையவர் மங்களாசாஸனம்.
31-1-40	7	பாக்குப்பேட்டை.
1-2-40	6	திருவள்ளூர் - வசந்தோத்சவ பங்களா பெருமாள் தாயார் மங்களாசாஸனம். ரூ150/- பெறுமானமுள்ள பட்டு அஸ்மானகிரி (மேல்கட்டு) பெருமாளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
5-2-40	7	ஓதப்பை கிராமம் - சாவடி.
6-2-40	8	போந்தவாக்கம் - பெருமாள்கோவில்.
7-2-40	12	நாகலாபுரம் - பெருமாள்கோவில்.
8-2-40	7	கொப்பேடு - ஒரு வைஷ்ணவர் திருமாளிகை.
9-2-40	9	நாராயணவனம் - பெருமாள் ஸன்னிதி.
9-2-40	3	புத்தூர் பஜனைமடம்.
10-2-40	8	வடமலைப்பேட்டை பஜனைமடம்.
11-2-40	7	திருச்சானூர் தேவஸ்தான சத்திரம் (தாயார் மங்களாசாஸனம்). சத்திரத்திலிருந்து ஸ்ரீமதாண்டவனை மேளவாத்ய விருதுகளோடு பெரிய ஜீயர் மடத்திற்கு ப்ரதக்ஷணமாய் ஏளப்பண்ணிக் கொண்டு போய் ஸ்ரீசடாரி ஸன்னதியிலிருந்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து சடாரி ஸாதித்து தாயார் ஸேவை. முதல் மரியாதை.
13-2-40	3	கீழத்திருப்பதி - அஹோபிலமடம். ரெயில்வே கேட்டுக்கு முன்பே 2 யானை, 2 குதிரை, குடைகள் மேள வாத்ய எடுபிடி சாமான்கள் எதிர்கொள்ள சன்னிதி முகப்பில் ஸ்ரீசடாரி எதிர்கொள்ள கோவிந்தராஜன் ஸேவை. மாடவீதி வழியில் ஊர்வலம்.

தேதி	மைல்	தங்கிய இடம்
(பிப்ரவரி 1940)		
14-2-40	9	திருமலை - அஹோபில மடம். கோவில் முதல் மரியாதை. ஸ்ரீமதாண்டவனுக்கு 25′ நீளம் 4½′ அகல முள்ள தகடி, குடை, முதலியன வழங்கப்பட்டது. பெருமாள் சேவை. ஸ்ரீசடாரி எதிர்கொண்டது. ஊர்வலமாய் அழைப்பு. ரூ. 250/- சிலவில் பெருமாளுக்குத் திருக்கல்யாண உத்ஸவம். ஸ்ரீராகவாச்சார் (சர்வே) ஏற்று நடத்திவைத்தார்.
16-2-40	9	கீழத்திருப்பதி - அஹோபிலமடம்.
17-2-40	3	திருச்சானூர் - தேவஸ்தான சத்திரம்.
21-2-40	3	கீழத்திருப்பதி - அஹோபிலமடம்.
21-2-40	11	ஹைதபல்லி - ஒருகோயில்.
22-2-40	9	கல்ரோட்டுபல்லா - ஒரு பள்ளி.
22-2-40	8	ஹனுமந்தராயன் ஓட் - சாவடி.
23-2-40	3	கொத்தக்கோட்டா - பள்ளிக்கூடம்.
24-2-40	5	புதலப்பட்டு - சத்திரம்.
24-2-40	5	முத்துரேவல் - பள்ளி.
26-2-40	8	குப்புராயர் சத்திரம்.
26-2-40	6	வேங்கடகிரி - பெருமாள் கோவில்.
27-2-40	5	மொகிலி - சத்திரம் - காட்டுப் பாதை. 2 ஜோடி மாடுகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டது.
27-2-40	7	பல்மனேரி - முனிவெங்கடப்பா சத்திரம்.
28-2-40	8	பத்திகொண்டா - தோட்டம்.
29-2-40	7	கொண்டராய பல்லி - சாவடி.
29-2-40	5	நங்கிலி - ஒருதோப்பு.
1-3-40	6	கப்பல் மடுகு-ஒரு கோயில்.
2-3-40	3	நரசிம்ம தீர்த்தம்-ஒரு சத்திரம்.
2-3-40	8	தேவராய சமுத்திரம்-ஒரு சத்திரம்
3-3-40	4	தம்பேஹல்லி-பெரிய சத்திரம். கண்ட்ராக்டர் வரதப்பா ஸஹாயம்-ஒத்தை மாட்டு வண்டி கூட அனுப்பியது.
3-3-40	7	வடகோர்-கண்ட்ராக்டர் சீனிவாசய்யர் வீடு.
3-3-40	4	கோலார் ஆஞ்சநேயர் சன்னதி.
6-3-40	2	கொண்டராஜ பள்ளி ஆஞ்சனேயர் சன்னிதி.
6-3-40	9	நர்ஸபூர் - பெள்ளூர்-ஜோடிராமராவ் உபசரணை.
7-3-40	8	முக்பால்-சத்திரம் போலீஸ் ஸ்டேஷன்.
7-3-40	8	ஹுஸ்கோடா-பயணவிடுதி.
8-3-40	12	பெளிக்யாஜஹள்ளி-பள்ளி.

தேதி	மைல்	தங்கிய இடம்
(மார்ச்சு 1940)		
8-3-40	10	பெங்களூர் சிடி-ஏ. மாதவ அய்யங்கார் திரு மாளிகை (½ மைலில் தோட்டத்தில் நீராட்டம்).
11-3-40	7	கங்கேரி-மண்டபம்.
11-3-40	5	கும்பளக்கோடு-பிரயாண விடுதி.
12-3-40	7	பிடாத்தி-இராமன் சன்னிதி.
12-3-40	10	க்ளோஸ் பேட்-ராமமந்திரம் சத்திரம். காகாசுரவதம்-பக்கத்தில் உள்ள மலையில் ஹவிஸு போட்டால் 3 மைல் விஸ்தீர்ணத்திற்குக் காக்காய்கள் வருவதில்லை. மலையில் ராமனும் ஸீதையும் எழுந்தருளியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.
13-3-40	4	ஆஞ்சனேயர்-கோவில்.
13-3-40	5	மஸூர்-அப்ரமேயன் ஸன்னிதி. (எங்களாண்டவன் மிக உகந்த இடம்)
14-5-40	7	நிடகெட்டா., சத்திரம்.
14-5-40	4	மத்தூர் நருஸிம்மன் ஸன்னிதி.
15-3-40	5	ஹனகரே-புகையிலை ஆலை.
15-3-40	7	மாண்ட்யா-டெங்கனிக்கோட்டை சிஷ்யர் பத்திரிகை நிருபர் ராமசாமி அய்யங்கார் திருமாளிகை.
16-3-40	11	துக்தா-பெருமாள் சன்னிதி.
17-3-40	14	திருநாராயணபுரம்-ஸோஸலை ஜோடிதார் திருமாளிகை. முதல் மரியாதை-**செல்லபிள்ளை** வைரமுடி சேவை.
25-3-40	8	தொண்டனூர்-பெருமாள் ஸன்னிதி. உடையவர் எழுந்தருளி ஜைனர்களை ஜெயித்தது. ராஜாபிட்டி தேவன் பெண்ணுக்கு பிரஹ்ம ராக்ஷஸ் ஓட்டியது.
26-3-40	4	ஆஞ்சனேயர் மடம்.
26-3-40	8	ஸ்ரீரங்கப்பட்டிணம்-ரங்கன் ஸேவை. (எங்களாண்டவன் திருமார்பில் உள்ள முண்டில் வலி அதிகம்)
4-4-40	3	கரிகட்டம்.
5-4-40	7	மண்டியாக் கொப்பல் - இராமன் ஸன்னிதி.
5-4-40	7	பன்னூர்-இராமன் ஸன்னிதி.
6-4-40	5	உக்கிலிகரே-இராமன் ஸன்னிதி. ஜோடிதார் M. ரெங்காச்சாரியார் மாந்தோப்பு பங்களா.
8-4-40	2	ஸ்ரீரங்கனுதபுரம்-சரித்திரக் கோவில் ஸோமனுத்புரம் தங்கனு ஆச்சாரி கட்டிய கோவில்.
10-4-40	3	ஸோஸலை; ஸோஸலை கிருஷ்ணமாச்சாரியர். (வண்டி ரிப்பேர் செய்யப்பட்டது)

தேதி	மைல்	தங்கிய இடம்
(ஏப்ரல் 1940)		
14-4-40	2	T. நர்சிப்பூர்-அஹோபில மடம். பலபேர்கள் ததியாராதனை. இந்த இடத்தில் ஸ்ரீமதாண்டவனின் திருமார்பில் இருந்த கட்டியால் வலி பொறுக்க முடியாமல்போய் எந்த சமயத்தில் வெடித்து விடுமோ என்று பயந்ததால் மைசூரிலிருந்து டாக்டர் வந்து 15-4-40 மாலை 3 மணிக்கு ஆபரேஷன் வெகு சுலபமாய் செய்தார். ஒரு இஞ்சக்ஷன் மூலம் அந்தக் கட்டியிலிருந்து துர்நீரை வெளிப்படுத்தி அந்தப் பொந்தில் ஒரு மருந்தைப் போட்டு மூடிவிட்டார். ஆண்டவனுக்கு வலி சிரமமில்லை. ஆபரேஷன் ஆன அரை மணிக்கெல்லாம் காவேரியில் நீராட்டத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமதாண்டவன் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது செல்லப்பிள்ளை எங்களாண்டவன் ஸ்வப்னத்தில் எழுந்தருளி, ஸ்ரீமதாண்டவன் பக்கத்தில் உட்கார்ந்து மார்பில் இருந்த கட்டியை வடுக்கென பிடுங்கி எறிந்ததாக தனக்கு ஸ்வப்னம் என ஸ்ரீமதாண்டவன் சாதித்தாயிற்று.
19-4-40	7	ஹெம்பிகை-பெரியாண்டவன் வர்த்தித்திருந்த இடம்.
20-4-40	3	தலைக்காடு-
21-4-40	7	கொள்ளேகாலம்-பெருமாள் சன்னிதி. உடையவருக்கு ஸமாச்ரயணம் செய்த இடம்.
22-4-40	8	ஸத்யாகாலம்-வரதராஜப் பெருமாள். 12 வருஷம் தூப்புல் தேசிகன் வர்த்தித்திருந்த இடம்.
22-4-40	3	சிவசமுத்ரம்-பாலரங்கநாதப் பெருமாள் ஸன்னிதி.
23-4-40	6	பிளக்குவாடி-ஜோடிதார் சுந்தராச்சார்.
24-4-40	6	சர்கூர்-ராமமந்திரம்.
25-4-40	6	கிருஷ்ணபுரம் கோவில்.
25-4-40	4	லோஸலை-நதீபுரம் ரங்காச்சாரியார் திருமாளிகை.
30-4-40	4	டி. நர்சிபூர்-அஹோபிலமடம்.
30-4-40	6	கஜ்ஜன ஹள்ளி-ஒரு தனிவிடு.
1-5-40	18	ஹெடுதலை-ஸ்ரீநிவாசாச்சாரியார் திருமாளிகை.
6-5-40	10	பண்டாரவாடி-ஏரிக்கரை மண்டபம்.
6-5-40	10	சாமராஜநகர்-நாராயணன் சன்னிதி.
7-5-40	5	வெங்கடய்யன் சத்திரம்-கோயில்.
8-5-40	4	ஸ்ரீநிவாசபுரம்-காவேரிப்பாக்கம்.
8-5-80	9	புளிஞ்சானூர்-காட்டிலாகா வீடு.
9-5-40	10	டிம்பம்-பிரயாணமாளிகை.
10-5-40	9	பன்னரி-பிரயாணமாளிகை.
11-5-40	8	சத்யமங்கலம்-பெருமாள் கோவில்.
12-5-40	5	கொடுவேரி-ஹனுமார் கோவில்.

தேதி	மைல்	தங்கிய இடம்

(மே 1940)

13-5-40	8	பங்கார்புதூர்-சத்திரம்.
14-5-40	5	நல்லகவுண்டன்பாளையம்-கிருஷ்ணமாச்சாரியர் திருமாளிகை.
16-5-40	11	கவுண்டப்பாடி-சாவடி.
17-5-40	9	பவானி-அக்ரஹாரம். காவேரி-பவானிசங்கமம்-வண்டிகள் 10 மைல்கள் சுற்றிவந்தன.
18-5-40	9	ஈரோடு ஐங்ஷன்; வக்கீல் சுதர்சனாச்சாரியர் திருமாளிகை.
21-5-40	7	சாவாடிப் பாளையம்-சாவடி.
22-5-40	3	கணபதிபாளையம்-பள்ளி.
22-5-40	6	கோளாநெல்லி-பெருமாள்கோவில்.
22-5-40	9	கொடுமுடி விளக்குடி ரங்கனதய்யங்கார் திருமாளிகை.
24-5-40	8	வெள்ளிக்கிழமை சத்திரம்-சத்திரம்.
25-5-40	8	கரூர்-சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநிவாஸ கோபாலய்யங்கார் திருமாளிகை.
27-5-40	7	புலியூர்-கோவில்.
28-5-40	6	மணவாசி - செல்லம் அய்யங்கார் திருமாளிகை.
28-5-40	6	மஹாதானபுரம்-ஸ்டேஷன் அருகிலுள்ள பாடசாலை.
29-5-40	10	குளித்தலை-அக்ரஹாரம்.
30-5-40	11	திருப்பராய்த்துறை. குணசீலம் பெருமாள்-முக்கொம்பு ஆஞ்சனேயர் மங்களாசாஸனம்.
31-5-40	8	பெரியாச்ரமம், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீமத் எங்களாண்டவன் யாத்திரை (1936—1940)

நவ. 1936—டிசம்பர் 36 45 மைல் ஸ்ரீரங்கத்திலிருந்து புதுக்கோட்டை

பிப். 1937—மார்ச்சு 37 30 மைல் புதுக்கோட்டையிலிருந்து அரியக்குடி

4-10-1937 — 3-7-1938 617 மைல் அரியக்குடியிலிருந்து ஸ்ரீரங்கம்

வழி : இராமநாதபுரம்-நவதிருப்பதி-திருக்குறுங்குடி - வானமாமலை-திருநெல்வேலி-சங்கரன்கோவில்-ஸ்ரீவில்லிபுத்தூர்-மதுரை-காரைக்குடி-புதுக்கோட்டை.

22-4-1939 — 23-5-1939 230 மைல் ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சீ

வழி: (அரியலூர்-சேத்தியாத்தோப்பு-அயிந்தை வந்தவாசி)

21-10-1939—30-5-1940 731 மைல் காஞ்சியிலிருந்து ஸ்ரீரங்கம்

வழி : புத்தூர்-திருப்பதி-பெங்களூர் - திருநாராயணபுரம் - ஸத்யாகாலம் - டிம்பம்-ஈரோடு-கரூர்-குழித்தலை.

இது தவிர அவ்வப்போது யாத்திரையாய் எழுந்தருளி தேரழுந்தூர், திருநகரி, நாகப் பட்டிணம் சமீபமுள்ள பாப்பா கோவில், கீழையூர், சாக்கை, எம்பிளச்சேரி, விளக்குடி, மன்னர்குடி, வழுத்தூர், விண்ணுற்றங்கரை முதலிய இடங்களில் இருந்து கொண்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்பங்களை அனுஷ்டித் தருளினார்.

ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் செய்தருளிய சில திருப்பணிகள்

தஞ்சைக்கடுத்திருக்கும் விண்ணுற்றங் கரை என்கிற திவ்யதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் நீலமேகன் சன்னிதியில் த்வஜஸ்தம்பம் நிறுவியும், தாயாருக்கு ஸ்ரீ சடாரி முதலியதுகளும் செய்வித் தாயிற்று. கோவிலடி என்று விளங்கும் அப்பக் குடத்தான் ஸன்னிதியில் தாம்பரத் தினால் த்வஜஸ்தம்பம் செய்து ஸமர்ப்பித் தார். பூர்வாசார்யர்களது நித்ய ஆராதனை கைங்கர்யங்களுக்கு வேண்டிய பூமிகள் சேகரித்து வைத்தருளினார்.

நம்மாண்டவன் பிருந்தாவனம் கண்டருளி யிருக்கும் காஞ்சீ பாதுகாச்ரமத்தில் விசேஷ திருமண்டபங்களோடும், திருமடைப் பள்ளி களோடும் வேணுகோபாலன் ஸன்னிதி யோடும், அப்பிருந்தாவனத்தைக் கட்டி வைத்தார். இவை எங்களாண்டவன் திருக்குடந்தையில் இரண்டு வருஷ கால மிருந்தபோது நடத்தி வைத்தவை.

காஞ்சி தேவாதிராஜனுக்கு எங்களாண் டவன் விலை மதிக்க முடியாத ஸாளக்கிரா மங்களை சேகரம் செய்து, மேற்கொண்டு சிலவுசெய்து மதுரையில் வல்லவர்களைக் கொண்டு அதையொரு அழகிய மாலையாக்கி சிஷ்யர்கள் மூலமாய் சாத்தியருளியாயிற்று. அந்த எம்பெருமானிடத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த ஆண்டவன் எம்பெருமான் திருமண்காப்பு களவு போனதைக் கேட்டு மிகவும் பரிதபித்து குறுகிய காலத்தில் திருமண்காப்பைப் பண்ணச்செய்து சாத்தித் திருமுகமண்டலத்தைக் கண்டு ஆநந்த பரிதரானார். புதிதாக ஒரு அஸ்மான கிரி (மேல்கட்டு)யும் சமர்ப்பித்தார்.

நம்மாண்டவன் எழுந்தருளியிருந்தபோது நிறைவேற்ற முடியாமல் விட்டுப்போன வரதன் திருமஞ்சனவேதியை தன் பார்வை யில் துரைஸாமி முதலியார் எஸ்டேட் ஸத்ரவ்யத்தைக் கொண்டு பட்டிணத்தி லிருந்து ஆசாரியை வரவழைத்து தங்க வேலைப் பாட்டுடன் செப்பனிட்டு தங்கத் திலை அழகுபடச் செய்து சுமார் 20 நாளில் சமர்ப்பித்தார்.

அந்த திருமஞ்சன வேதியை சகலபிரு களுடன் காஞ்சீ பாதுகாச்ரமத்திலிருந்து புறப்படச் செய்து 4 மாடவீதிகளிலும் ஊர்வலமாய் புறப்பாடு செய்து ஸன்னதிக்கு எழுந்தருளப்பண்ணி அதில் அந்த மாலை திருமஞ்சனத்தை கண்டருளப் பண்ணி க்குதார்த்தரானார்.

ஸ்ரீதெம்பரையாண்டவன் ஸ்ரீரங்கநாத மஹா தேசிகனிடம் ஸம்ப்ரதாய விளக்கை மாற்றிக் கொடுத்தருளினார்.

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீரங்கஸ்தை மஹாதேசிகன்

(ஸ்ரீமத் தென்பிரையாண்டவன்)

1866—1963

தஞ்சை ஜில்லாவில் மன்னர்குடிக்கடுத்த தென்பிரை என்கிற கிராமத்தில் அவதரித்தவராகையால் தென்பிரை ஆண்டவன் என்று வழங்கப் பெற்ற மஹான்.

நான்கு சாத்திரங்களிலும் தெளிந்த ஜ்ஞானமுடையோர். பஞ்சகால பராயணர். பரம சாந்தர். ''தேவு மற்றறியேன்'' என்று மதுரகவி அனுஷ்டித்தவாறே பூர்வாசார்யர்களுடைய பாதுகையைத் தவிர வேறொன்று மறியார். வைராக்கிய சீலர். வைராக்ய பஞ்சகத்தில் ஸ்வாமி தேசிகன் எடுத்துறைத்தவாறு செல்வத்தின் செருக்குக்கு இலக்காகாமல் லாபநஷ்டங்களில் சந்தோஷ துக்கமின்றி வாழ்ந்து காட்டிய தியாகச் செம்மல்.

எங்களாண்டவனிடமிருந்து துரீயாச்ரமத்தைப் பெற்று தர்மம் வழுவாது முனிவராய் முக்கோல் கொண்டு ஆசிரமத்திலேயே எழுந்தருளியிருந்து ஆசார்யகத்வம் செய்த உயர்குரு. திருமேனியின் அசக்தம் காரணமாக யாத்ரைகள் மேற்கொள்ளாது ஸ்ரீரங்கம் பாதுகாச்ரமத்தில்எழுந்தருளியிருந்துஸம்ப்ரதாய ப்ரதீபத்தை மிகவும் உயர்ந்த சத் சிஷ்யனுக்கு மாற்றியருளி நீங்காப் புகழ் கொண்டு நீள் விசும் பெய்திய நீர்மையோன்.

ஆசார-அனுஷ்டானங்களில் பெரியாண்டவன் போலே திகழ்ந்த பெருமானுர். பெரியாண்டவன் 160ம் திருநக்ஷத்ரத்தை பிரபலமாக நடத்தினர்.

திருநக்ஷத்ரம்: ரேவதி.

॥ ஸ்ரீ : ॥

ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

(ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்)

அர்ச்சாவதாரங்களில் அதிகமாய் ஆழங் கால்பட்ட ஆழ்வார், கலியன் என்னும் திருமங்கையாழ்வார். இவருடைய கவிதைப் பனுவல் கொண்டு எண்ணரும் எம்பெரு மான்கள் ஏற்றம் அடைந்திருக்கிறார்கள். அவனுடைய பெரிய திருமொழி முதலிய அருளிச்செயல்கள் எல்லாம் தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியமென்றும், வேதஸாரம் என்றும் கொண்டாடப் படு கின்றன. அத்தகைய பெருமை வாய்ந்த பெருமான் கலியன், திருக்குடந்தை எம் பெருமானை அனுபவிக்கும்போது அவனது திருவடிவின் அழகை - பெருமையை, உயர்வை, மதிப்பைப் புகழ்ந்து பாட முயற்சிக்கிறான். முடியவில்லை. எம்பெருமா னிடத்திலேயே ''ஸர்வார்த்த க்ரஹணம்'' பண்ணிய ஏற்ற மிகு பெருமையை உடைய ஆழ்வார் தனது இயலாமையைக் கண்டு மிக வருத்தமுற்று தன் தோல்வியையும் பறை சாற்றுகிறான். அனுபவத்திற்கு இலக்கான வஸ்துவின் நேர்த்தியையும், அனுபவிக்கும் தன்னுடைய ஆற்றுமையையும் இணைத்துப் பேசுவதான ஒரு பாசுரத்தில்

''மூவரில் முதல்வனுய ஒருவனை உலகம்
கொண்ட
கோவினை குடந்தை மேய குருமணித்
திரளை இன்பப்
பாவினை பச்சைத்தேனை பைம்பொன்னை
அமரர்சென்னிப்
பூவினை புகழும் தொண்டர் என்சொல்லிப்
புகழ்வர்தாமே....''

உயர் குணங்களையெல்லாம் ஒருங்கே கொண்ட குடந்தையில் குடிகொண்டிருக்கும் கோமானை - கோமானின் பெருமையை எப்படி எதைச் சொல்லிப் புகழ்ந்து பாடுவது என்று அலமந்து போய், சோற்றையே யறியாத ஒருவனுக்கு ஆதர வுடன் அபரிமிதமான அன்னத்தையும் வகைவகை உண்டிகளையும் அவன் முன் படைத்துச் சாப்பிடும்படி சொன்னால் அவன் மனப்பாங்கும் ஆத்திரமும் எங்ஙனே யிருக்குமோ அந்த நிலை கலியனுக்கு ஏற் பட்டதில் வியப்பில்லை. ''பொன்னுர் சார்ங்க முடைய அடிகளை இன்னரென்று அறியேன்'' என்று நிலை குலைய வைக்கும் அமுதன் உருவம். ''பாடக மெல்லடியார்'' வணங்கப் பல்மணி முத்தோடு இலங்கு சோதியான ஆராவமுதன் அழகு கலியனை மயக்கமுறச் செய்தது போலும்! எம்பெருமானது மாதுர்யம் என்கிற குணம் குடமூக்கிலே ப்ரவஹித்தது. அதனைப்பருக தனக்கு செய லில்லையே என்று கலியன் கைவாங்கி நிற்கி றான். அதுபோலத்தான் திருக்குடந்தை எம்பெருமானது மாதுர்யமே வடிவெடுத்து வந்து வையமெல்லாம் மறைவிளங்க உருவங் கொண்டதோ என்று சொல்லும்படி அவன் உறையும் ஸன்னிதியில் அவதரித்த ஸ்ரீம தாண்டவன் பெருமையை என் சொல்லிப் புகழ்வது என்று கைவாங்கி நிற்பதைத் தவிரவழியில்லை. ஆனாலும் ஸ்வாமியின் அவதாரத்தைப் பற்றிப் பேசுவதில் ஸத்தை பெறுவது என்பது குறிக்கோள். பீதக வாடைப்பிரான் ஆராவமுதன் திருக் குடந்தை ஆண்டவன் என்கிற ஆசார்ய ஸார்வபௌமனாய் அவதரித்திருக்கிறான் என்பதில் துளியும் ஐயமில்லை.

திருவவதாரம்

அன்னங்கள் உலவும் அலைபுனல் கொண்ட பொன்னி-காவேரியின் கரையில், வம்புலாம் சோலைகள் கொண்ட தஞ்சை மாவட்டத்தில், அரன் சாபத்தைப் போக்கிய எம் பெருமான் உறையும் திருக்கண்டியூர் அடுத்துள்ள ''காருகுடி'' என்றும் திவ்ய தேசத்திலே ஸ்ரீஉபவே பத்மநாபாச்சார் ஸ்வாமிக்கும் ஸ்ரீ கோமளவல்லீ தேவியார் அவர்களுக்கும் பங்குனி புஷ்ய நன்னாளில் திருக்குமாரராய் அவதரித்தார் நம் ஆண்டவன். மகன் பிறந்த நேரத்தில் எல்லாம் மங்களகரமாய் இருந்தன. உலகுய்ய உத்தமன் பிறந்த அவ்வேளையில் கண்டியூர் எம்பெருமான் தெய்வப் புள்ளேறி வந்து தெய்வீகமான குழந்தையைக் குளிர கடாக்ஷித்தான். திருத்தகப்பனார் நல்ல பரமைகாந்தி. ஆசார்ய கடாக்ஷம் பெற்றவர். பல தரம் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்திற்கு ஆசார்யர்களுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவங்களில் பாராயணங்களில் அன்வயிக்க எழுந்தருளுவர். அப்போது ஸ்ரீம தாண்டவன் பரம்பரையில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்தவர் காடந்தேத்தி ஆண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் ஆவார். யோகமும் முக்காலமும் அறியும் ஆற்றலும், மந்த்ர சக்தியும் கொண்ட பெரிய மஹான். ஸ்ரீ ஹயக்ரீவன் அருளே நேரிலேயே (ப்ரத்யக்ஷமாய்) பருகும் பெருமையுடைய பெருந்தகையான். 1907ம் ஔ மாசி மீ திருப்புஷ்யத்தில் ஸ்ரீமத் பெரியாண்டவன் திருநக்ஷத்திரத்திற்கென திருக்குடந்தையினின்றும் ஸ்ரீ பத்மநாபாச்சார் ஸ்வாமியும் அவருடன் (பிற்காலம் தேரழுந்தூர் ஆண்டவன் என்னும் நம் ஆண்டவன் ஸ்வாமி) ஸ்ரீ வரதாச்சார் ஸ்வாமியும் பெரியாச்ரமத்திற்கு எழுந்தருளியிருந்தனர்.

திருப்புஷ்ய வைபவங்கள் முடிந்த பின்பு சின்னச்ரமத்தில் இரு திருநாமங்களும் ஸ்ரீமதாண்டவனுக்கு வேண்டிய நற்பணிகளையெல்லாம் ஓரிரு நாட்கள் செய்திருக்கும் வேளையில் ஒரு நாள் உதயம் 4மணி அளவில் ஸ்ரீகாடந்தேத்தி ஆண்டவன் இரண்டு ஸ்வாமிகளையும் எழுப்பி அவர்களுள் பத்ம நாபாச்சார் ஸ்வாமியிடம் ''உமக்கு நாளது புஷ்யத்தில் ஒரு புத்ரன் பிறக்கப் போகிறான்'' என்றும், வரதாச்சாரியர் ஸ்வாமி (பின்னிட்டு தேரழுந்தூர் ஆண்டவன்) யைப்பார்த்து அவருக்கு ஹஸ்தத்தில் ஒரு பிள்ளை பிறப்பானென்றும் திருவாய் மலர்ந்தருளி பின்பு அவர்களை ஸ்வப்பனத்தின் பலம் போகாமலிருக்க இனி தூங்க வேண்டாமெனவும் பணித்தார், அவ்வண்ணமே இருவர்களுக்கும் புத்ரர்கள் பிறந்தார்கள். பங்குனி புஷ்யத்தில் பிறந்த பிள்ளை தான் மாநிலம் போற்றும் மஹானுபாவ நம்மிடையே உலவிவரும் ஆசார்யன் ஸ்ரீமதாண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்.

இளமை:

தவமிருந்து பெற்ற பிள்ளை. நம் ஸ்வாமிக்கு 5 வருஷம் முன்பு பிறந்த இவரது ஸஹோதரி காலமாகி விடவே இக்குழந்தையிடத்தில் அளவற்ற அன்பும் பாசமும் வைத்து ஸ்ரீபத்மநாபாச்சார் வளர்த்தார். கண்ணின் இமைபோல் காத்தார். கண்ணனெனப் பேர் வைத்தார். வடிவழகைக் கண்டு இராமன் எனப்பெயர் வைத்தார் வசிட்டன் என்றான் மஹாகவி. அதிமானுஷ, அத்யத்புத, காரியங்களைச் செய்யவிருக்கும் இக்குழந்தைக்கு பொருத்தமான பெயரை தந்தை அன்றே வைத்தார். ''ஸ்ரீநிவாஸராகவன்'' என்ற திருநாமமிருந்தும் கண்ணன் என்றே கூப்பிடுவது. அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தவன் கண்ணன். இந்த கண்ணன் நல்வார்த்தைகள் காலக்ஷேபம் செய்தருளப் போகிறான். அக்கண்ணன் சாட்டை கையில் கொண்டு ஆநிரை காத்தான். இவன் நிட்டையைக் கைக்கொண்டு சேதனரைக் காக்க இருக்கிறான். கண்ணனையும் விஞ்சிய ஆற்றலிருப்பினும் கண்ணனின்றும் வேறுபட்ட ஒரே ஒரு குணம் நிக்ரஹம் என்பதை நம் ஸ்வாமி அறியவே அறியாததது. ஆசானுபாவ அவதரித்து அந்த குணத்தைக் கண்டவர்கள் பலபேருண்டு. இன்றும் கண்ட வண்ணமிருக்கிறார்கள்.

பால்யத்தில் சில நிகழ்ச்சிகள்

நல்ல தேஜஸ்ஸோடு கூடிய குழந்தையை கூட்டிக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளுவார் அவர் தந்தை. அங்கே

பாதுகாராதனம் செய்யும் முறையைக் கண்ணுற்ற சிறுவன் திருக்குடந்தையில் தன் வயதொத்த சிறுர்களுடன் விளை யாடும் விளையாட்டு ஆசார்யன் விளையாட்டுத் தான். துணியை முழங்காலுக்கு மேல் கட்டிக்கொண்டு ஒரு கோலக் கையில் பிடித்துக் கொண்டு நான் ஆண்டவன் என்று சொல்லிக் கொள்ளுவதில் சிறுவன் பெருமைப் படுவான். கொட்டாங்கச்சியில் தீர்த்தம் நிறைத்து தன்னுடன் கூடவே விளையாடும் பட்டர் பையன்களுக்கு ஸ்ரீ தேரழுந்தூராண்டவன் தீர்த்தம் சாதிப் பதுபோல் (கண்ணை ஒரு பக்கமாக்கி) சாதிப் பது வழக்கம். அப்பாவுக்குத் தெரியாது.

பையன்கள் யாரும் அப்பா இருக்கையில் பையனைத்தேடி வரமாட்டார்கள். பைய னும் தந்தையின் முன் நின்றதே கிடையாது. நிற்பதே இல்லை என்ரூல் எங்ஙனே பேசுதல் முடியும்? அவ்வளவு மரியாதையும் அச்சமும் ஸ்வாமிக்குத் தந்தையிடமிருந்தது. சிறு பிராயம் முதலே ஆராவமுதனிடம் அபார மான ஈடுபாடு. காவேரிக்குப் போய் மற்ற சிறுவர்கள்போல் தனியே குளிக்கத் தந்தை அனுமதிக்கமாட்டார். திருவிழாக் காலங் களில் குழந்தையை அழைத்துச் செல்லவும் மாட்டார். நம் ஸ்வாமியே தெப்பம் முதலிய மஹோத்ஸவ காலங்களில் வெளியே சென்ரூல், தந்தைக்குத் தெரிந்ததும், உடனேயே தன் துணைவியாரை அனுப்பி அழைத்து வரச் சொல்வார். கண்ணன் வெளியே போய் திரும்பி வரும்வரை யசோதை அன்று பட்டபாடு ஏகதேசமா யிற்று. இவற்றிற்கெல்லாம் காரணம் நம் ஸ்வாமிக்கு 10 வயதிருக்கும்போது அவருக்கு ஒரு தம்பி பிறந்து 10 மாத மிருந்து மறைந்து போயிற்று. ஆகவே நம் ஸ்வாமியிடம் அதிகமான பாசம் அவர் தந்தைக்கு இருந்ததில் வியப்பில்லை. நம் ஸ்வாமியே கூறுவதுண்டாம். இந்தப்பிள்ளை உயிரோடு இருந்திருந்தால் தனக்கு இவ்வளவு கட்டுப்பாடு இல்லாதிருக்குமே என்று. ஸ்ரீ பத்மநாபாச்சாரியர் தன்குல தனமான ஆழ்வார்கள் அருளிச்செயலை தனது குமாரனுக்கு அத்யயனம் செய்வித்து அது வளர்த்த அர்ச்சையின் ஆவலைத் தூண்டியும் விட்டார். ஆராவமுதன் ஸன்னிதியில் திருமாளிகை அமைந்திருந்த தால் அமுதனுக்கு அத்யாபக கைங்கர் யத்தை வழுவாதுதான் கடைப் பிடித்தது மட்டுமன்றித் தன் தனையனையும் அவ் வண்ணமே வளர்த்தார். 14 வயது முடியு முன்பே நாலாயிரமும் நாவசப்படுத்திய நாவலரானூர் நம் ஸ்வாமி. கொட்டையூரில் (காவேரி அக்கரை) ஸ்ரீ சேஷசாயீ என்பவ ரிடமும் சாஸ்த்ரங்கள் பயின்ரூர்.

சாஸ்திரங்களில் பயிற்சியும் புலமையும் பெற தனது பையனைத் திருக்குடந்தை காமாக்ஷி ஜோஸ்யர் தெருவிலுள்ள ராஜா பாடசாலையில் சிலகாலம் விட்டார். பின் தேவனூர் விளாகம் ஸ்வாமியிடம் தர்க்க மீமாம்ஸா வ்யாகரணசாஸ்த்ரங்களை நவநீதம் ஸ்வாமியின் குமாரர் கீர்த்திமூர்த்தியான சேஷாத்திரியாச்சாருடன்கூட அதிகரித்தார். அபார ஜ்ஞானமும் அடக்கமான ஸ்வபாவ மும் கொண்டு இவர் குடத்திலிட்ட விளக் காய் இருந்தார். திருவையாறு வடமொழிக் கல்லூரி வழியில் சிரோமணியிலும் தேர்ச்சி பெற்ரூர். எங்களாண்டவன் நம்மாண்டவன் முதலானோர் திருக்குடந்தைக்கு எழுந்தருளி யிருந்தசமயத்தில் எல்லாம் அத்யாத்ம சாஸ்த்ரங்களை காலக்ஷேபம் செய்து அதிலே முதிர்ந்த தேர்ச்சி பெற்ரூர். அமுதன் ஸன்னிதியில் எங்களாண்டவன் ஆத்ம ஸமர்ப்பணம் இவருக்குச் செய்து வைத் தார்.

ஸ்ரீமதாண்டவனுய் அவதரித்ததற்குப் பிறகு இன்றும் திவ்யதேச எம்பெருமான் களுக்கென்றுசெய்து வருகின்ற திவ்ய தேசத் திருப்பணிக்கு தன்னைச் சிறு வயதிலேயே ஆட்படுத்திக் கொண்டவர் இம் மஹான். ஸ்வாமி வசித்திருந்த ஸன்னிதித் தெரு திரு மாளிகையில் ஒரு மூதாட்டி குடியிருந்தாள். மிகவும் தார்மீக சிந்தையுடையாள். உகந் தருளின திவ்யதேசங்களுக்கு அநேகவித கைங்கர்யங்கள் செய்து வந்தாள். அவள் அமுதனுக்கு தங்கத்தில் சார்ங்கம், திருமண் காப்பு, திருவிண்ணகரப்பனுக்குத் துளசி மாலை, சாளக்ராமமாலை முதலியதுகள் சமர்ப் பித்தது மட்டுமின்றி அமுதன் கருடவாஹ னத்திற்கு வெள்ளிக்கவசம் பண்ணி சமர்ப் பித்தாள். அன்றைய நிலையில் கருடன் ஒரு சிறகுக்கு 56 கிலோ வெள்ளி பிடித்ததாம். இதனையெல்லாம் கூட இருந்து செய்து சரி பார்த்துக் கணக்குச் சொல்லிச் சமர்ப்பிப்பது

நம் கண்ணன்ஸ்வாமி தான். இந்தப்பாட்டிக்குக் ''கருடவாஹனப் பாட்டி'' என்றே பெயர் வழங்கலாயிற்று.

இல்லற வாழ்க்கை

14 வயதிற்குள் திவ்யப்ரபந்த அத்யயனம் முடிந்து அத்யாபக கோஷ்டியுள் திறம்படச் சொல்லும் தீரரான நம் ஸ்வாமிக்குத் திராவிடச்ருதிதர்சகனை அமுதனிடம் ஈடுபாடு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. கைங்கர்யம் என்று சொன்னால் என்னுனுலும் அதை விடமாட்டார். நல்ல ப்ரதிபையும் புலமையும் கொண்ட இவருடைய 16வது வயதில் 7 வயது கொண்ட ஸ்ரீ வேதவல்லி அம்மாள் துணைவியானாள். நெடுந்தெரு கிருஷ்ணசாமி அய்யங்கார் ஆருவது குமாரத்தி இவரது தேவியார். இல்லறம் செவ்வனே நடந்தது. வருவாய்க்கு வகை செய்ய வேண்டுமென்கிற நிர்பந்தத்தில் ஸ்வாமி ப்ரவசனம் செய்வதை மேற்கொண்டார்.

இது நடுவே ஞாயிறு தோறும் தஞ்சையில் ஸ்ரீரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியைத் தலைவராகக்கொண்ட கீதா சபாவிற்குச் சென்று கீதா காலக்ஷேபம் சாதித்து வருவது வழக்கம். கடைசி பஸ்ஸிலோ-ரயிலிலோ அகத்திற்கு வந்து விடவேண்டும். வரவில்லை என்றாலோ தாமதமானாலோ தந்தையார் பஸ் நிலையத்திற்கோ இரயில் நிலையத்திற்கோ சென்று காத்திருப்பார். பையன் இறங்குவதைக் கண்ணுற்றவுடன் பேசாமல் திரும்பி விடுவார். இவர் அகத்துக்குள் நுழைந்தவுடனேயே பையன் வந்து விட்டான் என்று அறிவர்கள் வீட்டிலுள்ளோர். தாயார்தான் உணவு பரிவுடன் என்றும் பரிமாறுவார். மிகவும் செல்லமாய், செல்வமாய் தாய்தந்தையர் வளர்த்து வந்தனர். நம் ஸ்வாமிக்கு 4 குமாரர்களும் இரண்டு குமாரத்திகளும் பிறந்தார்கள். அப்போதே குழந்தைகளைத் தெப்பம் முதலான விழாக்களுக்குக் கூட்டிக் கொண்டு போகமாட்டார். குழந்தைகள் போயிருந்தால் ஸ்வாமியின் தாயார் தான் போய் அழைத்துவருதல் வழக்கம். பற்றற்ற நிலையின் படியோ என்னவோ?

சமுதாயத்தொண்டு

திருக்குடந்தையில் வலங்கிமான் முன்சீப் ஸ்ரீ உவே ராமஸ்வாமி அய்யங்காரைத் தலைவராகக்கொண்டு நம் ஸ்ம்ப்ரதாய விஷயங்களைப் பரப்ப ஒரு ஸபை நிறுவப் பட்டது. அதன் பெயர் ''பராங்குச பக்த ஸபை'' என்பதாம். அதில் தனது சகா ஸ்ரீ இளயவல்லி ஸ்வாமியோடு பல காலம் பங்கேற்றுப் பணியாற்றினர். அதன் மூலம் ஒரு சஞ்சிகையையும் வெளியிட்டு அரிய விஷயங்களை ப்ரசுரித்தார். அவ்வப்போது புதுக்கோட்டை முதலான ஸம்ஸ்தானங்களுக்குச் சென்று வித்வத் சபைகளில் அன்வயித்துஸம்பாவனையும் பெற்றுவந்தார். வருவாய் போரவில்லை. தனக்கு நண்பரான பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களது துணைகொண்டு திருவனந்தபுரம் சென்று மஹாராஜா ஸதஸ்ஸில் தன்னுடைய புலமையைக் காட்டி தங்கமெடலும் ஸம்பாவனையும் பெற்று வந்தார். தந்தை காலமான பிறகு திருக்குடந்தையில் இருந்தால் குடும்ப சம்ரக்ஷணைக்கு வருமானம் போராது என்கிற நிலையில் ஆசார்ய நியமனம் கொண்டு சென்னை செல்ல தீர்மானித்தார். எங்களாண்டவன் சென்னையில் குங்குமம் வியாபாரம் செய்து கொண்டிருந்த ஆக்கூர் ஸ்ரீஉ-வே ஏ. எஸ். வரதாச்சார் ஸ்வாமிக்கு ஒரு ஸ்ரீமுகம் ஸாதித்து அதில் ஸ்வாமியின் அறிவையும் புலமையையும் பயன் படுத்திக் கொண்டு வருவாய்க்கும் வகை செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சென்னை புறப்பாடு

சென்னை சென்ற நம் ஸ்வாமியை ஆக்கூர் ஸ்வாமி ஆதரித்துத் தன் திருமாளிகையிலேயே இருக்கச்செய்து பல ஸபைகளில் காலக்ஷேபங்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார். முதலில் வெளியிலிருந்து புதிதாக வந்த ஸ்வாமிக்கு உடனுக்குடன் அவகாசம் கிடைக்கவில்லை. ஒரு சபையில் வழக்கமான உபன்யாஸகர் வரவில்லை என்றால் அவர் வர முடியாத நாட்களில் நம் ஸ்வாமியின் உபன்யாஸம் இருக்கும். எளிதில் அந்தத் துறையைப் பிடிக்க முடியவில்லை என்றாலும் உறுதி தளராமல் இருந்து வந்தார். ஸ்வாமி சென்னையிலும் குடும்பம் குடந்தையிலுமாக ஒரு சில ஆண்டுகள் கஷ்டமுண்டு.

திருப்பாவை காலக்ஷேபம் ஸாதித்த அழகு பலரை மயக்கியது. அக்காலத்தில் கார்ப்பங்காடு வெங்கடாச்சாரியார் ஸ்வாமியும், காஞ்சி வித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார் ஸ்வாமி முதலானோர்களிடம் திருப்பாவை கேட்ட ரசிகர்களை எங்ஙனம் தம்மால் ஈர்க்க முடியும் என்கிற நிலையில், ஆசார்ய கடாக்ஷம் பரிபூர்ணமான தொரு சூழ்நிலையில் அருளிச்செயலின் அருமையும் இவர் அதனைக்கையாளும் முறையும் ரஸிகர்களைக் கூட்டின. உபந்யாஸத்தில் ஒரு புரட்சியையே உண்டு பண்ணினர்.

நம்மாண்டவனது நயமான நல்வார்த்தைகளும், எங்களாண்டவன் ராமாயண காலக்ஷேபங்களில் சேகரித்த நல்முத்துக்கள் போன்ற அரிய பொருள் நயங்களையும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்குப் பூர்வாசார்யர்கள் செய்தருளியிருக்கின்ற வ்யாக்யான பங்க்திகளையும் கொண்டு உபந்யாசம் செய்வதில் ஒரு புது திருப்பத்தை உண்டாக்கி கேட்போர் சிந்தையும் செவியும் ஒருங்கே குளிரும் வண்ணம் சொல்மாரி பொழியத் துவங்கினர்.

ஸ்வாமியின் உபந்யாஸ முறை

நம் ஸ்வாமியின் உபந்யாஸமுறை யாரையும் அனுசரித்ததல்ல. தன்னேற்றம் பெற்றது. ஸ்வாமியின் மென்மையான தேனினுமினிய இன்னிசைக் குரல் ஸ்வாமிக்கோர் அருட்செல்வம். திருவாக்கினின்றும் வெளிவருகின்ற சொல்லில் தெளிவும், எளிமையும் இருக்கும். காடின்யமிருக்காது. கேட்போரைச் சிரிக்க வைக்கும் வேடிக்கையான கதைகள் இருக்கும். ஆனால் புண்படுத்தும் பான்மையிருக்காது. தான் தனது பேச்சை ரசிக்காது தானும் சிரிக்காது ஹாஸ்யமாய்ப் பேசுவார். மறை கூறும் மிகவும் கடினமான தத்துவங்களை உபந்யஸிக்கையில் ஸ்வாமி திருவுள்ளத்தில் அவை பொங்கிவரும்போது அவைகளை நாட்டில்-வீட்டில் உலவுகின்ற மிகச் சாதாரணங்களான உதாஹரணங்களாலே (எடுத்துக் காட்டுகளாலே) தெளியவைப்பார். செவி மடுப்போர் உள்ளத்தில் அப்படியே பதிய வைக்கும் அவருடைய திறமை ஒரு தனித் தன்மை வாய்ந்தது.

திருமேனி நலிவு படாமலும், அங்க அசைவுகள் இல்லாமலும், ஆர்ப்பாட்டங்கள் இல்லாமலும், சொல் ஒலியில் ஏற்றத் தாழ்வு இல்லாமலும் உவகையுடன் கேட்பாரின் உள்ளக் கிடக்கைகளை அடியொற்றி அன்றைய உபந்யாஸத்தின் போக்கினைக் கையாளும் புலமை இயற்கையிலேயே அமையப் பெற்றிருந்தார். இவையெல்லாவற்றிற்கும் மேலாக கால வரையறைக்குக் கட்டுப் பட்டுப் பேச்சை நிறுத்துகின்ற கட்டுப்பாடு. குறித்த சமயத்தில் தொடங்குவதும், குறிப்பிட்ட நேரத்தில் சொற் பொழிவை நிறுத்துவதும் ஸ்வாமிக்கு மிகவும் கைவந்த கலை. கேட்போர் இன்னும் கேட்க மாட்டோமா என்கிற எண்ணத்துடன் நிகழ்ச்சி மண்டபத்தை விட்டு வெளியேறுவதும் மறு நாள் குறித்த நேரத்திற்கு முன்பே மேடைக்கருகில் இடம் பிடிக்க ரஸிகர்கள், சிஷ்யர்கள் விரைவாக வருவதிலிருந்தும் எவ்வளவு தூரம் ஸ்வாமியின் உபந்யாச சைலி (Method) அவர்களைக் கவர்ந்திருக்கிறது என்பது புலனாகும். சுருங்கச் சொன்னால் சொல்லின் செல்வனாய், சொல்-பொருள் இரண்டினையும் தன்வசமாக்கித் தான் பேசுகின்றபொழுது செவிமடுக்கின்றவர் அத்துணை பேரையும் சித்திரப் பாவைகளாய், தேனுண்ட வண்டுகள்போல் திளைக்க வைத்து விடுவார் நம் ஸ்வாமி. இவையனைத்தும் புகழுரை மட்டுமல்ல. மெய்யுரையுங் கூட.

லௌகிக ஸாமர்த்யம்

பரம விலக்ஷணமான வைதிகராய்த் திகழ்ந்த ஸ்வாமிக்கு லௌகிக ஸாமர்த்யம் மிகமிகவுண்டு. தான் ப்ரவசனம் துடங்கிய நாளிலிருந்து பிறர் உபந்யாஸங்களைக் கேட்பதில்லை. நிகழ்ச்சி நிர்ணயம் செய்திருக்கும் இடங்களுக்கு நிகழ்ச்சி குறிப்பிட்ட சமயத்திற்கு இரண்டொரு நிமிடங்கள் முன்புதான் எழுந்தருளுவார். முன்பே போய் கேட்போர் வரும்வரை காத்திருப்பதில்லை. அதிலும் காரில்தான் போய் இறங்குவது வழக்கம். இன்னொரு மேன்மையான விஷயம் என்னவென்றால் தனது அறிவுச் செல்வத்தைக் கண்ட அரஸிகர்கள் கூட்டத்திலே சிதறவிட்டதில்லை. ஸ்வாமியின் உபந்யாஸங்களுக்கு ரசிகர்கள் கூட்டம்

ஸ்ரீமதாண்டவன்
—பூர்வாச்ரமம்



திவ்ய ஸூக்தி திவாகர
பகவத் விஷய ரத்ன தீப
உபய வேதாந்த வித்வான்
ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரியார்
என்கிற
ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி



திருக்குடந்தை பராங்குச பக்த ஸபை—தந்தையும (த) குமாரரும (கு)

சென்னை காலக்ஷேப கோஷ்டி—பூர்வாச்ரமம்



மிகுதியாய் வரத் தலைப்பட்டன. குறிப்பாக திருப்பாவை உபந்யாஸ மென்றால் ஏராளமான ஆடவரும் பெண்டிரும் கூடிக் கேட்டு இதுபோல் அவர் இவர் கூட சொல்வதில்லை என்று விமர்சிக்கிற அளவிற்கு திருப்பாவை காலக்ஷேபங்கள் அமைந்தன. பல ஸபாக்களில் ஒரே சமயங்களில் உபந்யாஸம் செய்ய அழைப்புகள் வந்தமையால் அவைகளைப் புறக்கணிக்காது எல்லா ரஸிகப் பெருமக்களையும் திருப்திபடுத்தினார்.

பஸ்ஸால்லாரோடு சமாஜத்தில் காலையில் காலக்ஷேபம் தவறுமல் உண்டு. ஞாயிறு தோறும் மௌபரீஸ் ரோடிலுள்ள ஸபையிலும் அம்பத்தூர் ஸபையிலும் முறையே மாலை 6 மணியும் 4 மணியும் காலக்ஷேபம் ஸாதிக்க வேண்டிருந்தமையால் துரிதமாகச் சென்றுவர ஒரு கார் வாங்கி வைத்துக் கொண்டார். பொருளும் வசதியும் பெருகின.

ஆக்கூர் ஸ்வாமியின் துணைகொண்டு பரோடா தெருவில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி கிருஹப்ரவேச வைபவமும் ஆயிற்று. பின் 1950ம் வருஷம் குடந்தையிலுள்ள ஜாகையைக் கலைத்துக் குடும்பத்தோடு சென்னை வந்து குடியேறினார். 1952ல் கார் வாங்கினதும் எல்லாவித இடங்களிலும் சென்று சொன்மாரி பொழிந்து புகழ் பெற்றார்.

எழும்பூர் ஸாகேத நிலையம், புரசவாக்கம், சிந்தாதிரிப்பேட்டை, இலக்ஷ்மிபுரம் முதலிய இடங்களிலுள்ள ஸபாக்களில் தினந்தோறும் அல்லது ஞாயிறுதோறும் ஸ்ரீமத்ஸார காலக்ஷேபம் பலமுறை பலருக்கு ஸாதித்தருளிக் கொண்டு இடையிடையே ஸ்ரீரங்கம் விடை கொண்டு ஆசிரம கார்யங்களிலும் அன்வயித்துக் கொண்டும் இருந்தார்.

சென்னைவிட்டுச் செல்லும் சமயங்களிலெல்லாம் அனுஷ்டானங்களில் எள்ளளவும் குறையாது, ஆடம்பரமில்லாது எளிய நடையராய், பாரதத்தின் பல பாகங்களுக்கும் சென்று ஸத்ஸம்ப்ரதாய கோட்பாடுகளைப் பரப்பிப் பல நண்பர்களைச் சேர்த்து கூடவே பொருளையும் ஈட்டினார். இக்காலங்களில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் உறுதுணையாயிருந்து உதவி புரிந்தவர் ''வீகம்ஸீ'' என்று பெயர் பெற்ற ஸ்ரீ பி. வி. ராஜகோபாலாச்சார் ஸ்வாமி.

ஈன்றெடுத்த மக்கட் செல்வங்களுக்குக் காலத்தையொட்டின பள்ளிப் படிப்பினையை அளித்து தந்தைக்குரிய கடமையினைச் செய்தார். தன் மனமறிந்து ஒழுகும் மனையாளும், அறிவுள்ள மக்கட் செல்வமும், பயனுள்ள பொருளும், வளமுள்ள வயலும் பெற்று இல்லறத்தை இன்புற நடத்தி பரமபாகவத அக்ரேஸரராய், ''கண்ணன் ஸ்வாமி'' என்று ப்ரஸித்தராய், சென்னை கோடம்பாக்கத்தில் உண்ணுமலை அம்மன் தெருவில் ஒரு நவீன திருமாளிகையைச் சொந்தமாகக் கட்டி அங்கே குடியேறினார். பரோடா தெரு வீட்டை விட்டு வர மனமில்லை. நல்ல ராசியான வீடு என்று அடிக்கடி சொல்லுவது மட்டுமன்றியும், அங்கு யமன் வரப்பயப்படுகின்ற இடமென்றும் சொல்லுவார். தென் புலர்க்கு சேர்கொடாத பேறு சார்ங்கனது மெய்யன்பர் ஸ்வாமி ஆதலால் அவருக்கு மட்டுமன்றி அவர் இருக்கைக்கும் அப் பெருமை எல்லை நிலமாயிற்றுப் போலும்! உள்ளத்தின் அடித்தளத்தில் வேரூன்றியிருந்த ஆசார்ய பக்தி நம் கண்ணன் ஸ்வாமியை அடிக்கடி திருவரங்கத்திற்கு விடை கொள்ளும்படி தூண்டிக் கொண்டே இருக்கும். தென்பிரையாண்டவன் இவரை ஆசிரம நிர்வாகத்தைத் திறம்பட நடத்தித்தர பணித்தது மட்டுமன்றி நிரந்தரமாய் ஆசிரமத்திலேயே இருக்கவும் நியமித்தார். ஒரு சமயம் தென்பரையாண்டவன் மனோரதித்த வாறே ஸ்ரீமத் பெரியாண்டவன் 160வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை சீரும் சிறப்புமாக நடத்திவைத்து ஆசார்யர்கள் திருவுள்ளம் குளிரும்படியாய் அவருடைய நியமனங்களையெல்லாம் நிறைவேற்றித்தந்தார். சித்ரகூடம் விஜயராகவாச்சாரியார் ஸ்வாமியும் கூட ஸ்வாமிக்கு உறுதுணையாயிருந்தார்.

தர்பலமாயுள்ள திருமேனி கொண்ட தென் பிரையாண்டவன் தனக்குப் பிறகு ஸம்ப்ரதாயம் தழைத்தோங்க ஆசார்ய

பீடத்தில் தகுதியான ஒருவரை நியமிக்கத் திருவுள்ளம் பற்றியபோது நம் கண்ணன் ஸ்வாமியின் ஞானமும், திருமேனி வடிவும், பண்புள்ள குணங்களும், ஆசார அனுஷ்டான சீலமும், அடக்கமான பரிமாற்றமும், ஆடம்பரமில்லா ஆசார்ய பக்தியும், ஒரு தலைவனுக்குரிய நிர்வாஹத் திறனும், புண்படுத்தாத மென்மைப் பேச்சும் ஆக இத்தனை குணங்களும் தென்பரையாண்டவனை கண்ணன் ஸ்வாமி பால் ஈர்த்தன. பட்டாபிஷேகத்திற்குத் தகுதியான ராமனை ''தம் ஏவம் குண ஸம்பந்நம்'' என்றும், ''ஜ்யேஷ்டம் ச்ரேஷ்ட குணைர்யுக்தம்'' என்றும் இராமனிடத்தில் தகுதிபோலே ஆசார்யனுக்குரிய இலக்ஷணங்களெல்லாம் ஒருங்கே இவரிடத்தில் கண்டார். தன் எண்ணத்தை நேரிடையாகவும் சொன்னர். கண்ணன் ஸ்வாமியும் தன்னுடைய இசைவைத் தெரிவிக்கா விட்டாலும் மறுத்துச் சொல்லாத காரணத்தால் ஸ்ரீ தெம்பரையாண்டவன் மேலும் நம்பிக்கையுடனே இருந்தாயிற்று.

சென்னையிலிருந்த நம் ஸ்வாமிக்கோ நிம்மதி இல்லை. தெம்பரை யாண்டவனின் நியமனம் நெஞ்சில் உறுத்திய வண்ணமே யிருந்தது. ஒருநாள் திருமாளிகையில் ஸ்வாமியின் கடைசி புதல்வன், காலையில் நீராடி மடியாகக் கொடியில் உலர்த்தி யிருந்த திருப்பரியட்டத்தை (வேஷ்டியை) எடுக்க வந்த ஸ்வாமியை ஒரு கேள்வி கேட்டான். அரையில் துண்டு மாத்திரம் உடுத்திக் கையில் கோலுடன் பார்த்த அவரைப் பார்த்தவுடன் பையனுக்கு அன்று பள்ளியில் வந்த சங்கராச்சாரியர் நினைவு வந்தது. தான் 4 அணை கொண்டு வந்து கொடுக்க வேணும் என்ற ஆசிரியரின் ஆணையை நினைவு கூர்ந்து அப்பாவை தன்னை 4 அணை கொண்டு வரச்சொன்ன காரணம் என்ன வென்பதைக் கேட்டான். நம் ஸ்வாமி ஸன்யாஸியான அவருக்கு பழம் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பதற் காகத்தான் 4 அணை கேட்டார்கள் எனச் சொல்லிவிட்டு நானும் சங்கராச்சாரியார் போலப் போகப் போகிறேன் என்றும் சொன்னர். அதற்கு ஒன்று மறியாப் பேதைக் குழந்தை சங்கராந்திக்கு நிறையப் பழம் கொண்டு வந்து இனி யார் தனக்குக் கொடுப்பார்கள் என்று ஏக்கத்துடன் கேட்க உன் அண்ணன்மார் கொடுப்பார்கள் என்று சொன்னதினால் சந்நியாசம் கொள்ள அன்றே தன்னைத் தயாராக்கிக் கொண்டமை புலனாகும்.

துறவறம்

ஸ்ரீ தெம்பரையாண்டவனது அன்புக் கட்டளை ஒருபுறம். அன்புச் செல்வங்களின் அரவணைப்பு மற்றொரு புறம். உற்ற தொண்டர்கள் மண்டியிடும் தூய திருமேனி ஒரு புறம். பெற்ற மக்களைப்பேணி வளர்க்கும் அழியும் ஆக்கை ஒருபுறம், தான் நலிந்து பிறர்க்குதவும் பண்புள்ளம் ஒருபுறம், பிறர்வாழத் தானழியும் பந்தம் மற்றொரு புறம், வானளிக்க வழி காட்டும் வண்ணமிகு பீடம் ஒரு புறம், பெற்றெடுத்த பிள்ளைகளை வாழ வைக்கின்ற எழிலகம் மற்றொரு புறம். ஆக இவ்விரண்டு கோடிகளும் சந்யாசம் பெறத் தனதுள்ளத்தில் ஒரு போராட்டத்தைத் தொடங்கியது என்றாலும் முடிவு உலகுய்ய ஆசார்ய பீடம் ஏறுவது என்பதுதான்.

தேரழுந்தூர் ஆண்டவன் ஆக்கூர் ஆண்டவனுக்கு ஸந்யாஸம் ஸாதித்தருளும்போது பேசத் தெரிய வேண்டுமே என்று கவலைப் பட்டு ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனது அழகிய காலக்ஷேப முறையை பலர் சிலாகிக்கக் கேட்டுப்பின் தூரியாச்ரமம் அருள முற்பட்டது போல் நம் ஸ்வாமிக்கு அத்தகைய பரீக்ஷையோ அன்றி எந்த வித பரிசீலனையோ தேவையில்லாமல் தெம்பரையாண்டவன் என்று ஆச்ரமஸ்வீகாரம் செய்து கொள்ள கண்ணன் ஸ்வாமி எழுந்தருளுவார் என்று காத்திருந்தார்.

ஊண் விஷயத்தில் ஸ்வாமிக்கு என்றுமே ஒரு ஆசையில்லை. ருசி பார்த்துச் சாப்பிடுவதில்லை. ஆனால் எம்பெருமான்களுக்கு தளிகை ஸமர்ப்பிக்குங்காலையில் அதற்குத் தான் சொல்லும் முறைகளும் அதன்படி செயல்படுத்திக் காட்டும் போதும் ஸ்வாமியின் திறமையும் அந்தரங்க பக்தியும்

புலனுகும். அல்வா சமர்ப்பிக்க வேண்டும் என்று சொன்னுல்! ''கோந்து மாதிரி அல்வா இருக்கக்கூடாது. தாம்பாளத்தில் கொட்டித் தட்டினுல் அதைப் பார்த்தால் கண்ணுடி போல் அதில் முகம் தெரியவேண்டும்'' என்பார்.

இல்லறத்திலேயே துறவிக்குரிய எல்லா குணங்களும் தன்னிடையே வளர்த்துக் கொண்ட நம் ஸ்வாமி அதற்குரிய காலம் வந்தவுடன் ஸ்ரீ தெம்பரையாண்டவன் திருக்கரங்களாலேயே திரிதண்டத்தைப் பெற்று நம் ஸத்ஸம்ப்ரதாய பரம்பரையின் ஆசார்யனுனர். ஸ்ரீ வேதாந்த ராமானுஜன் என்கிற திருநாமத்தோடு சுபகிருது வருஷம் பங்குனி மீ 26ஒ ஸ்ரீமத் புஷ்ய திருநக்ஷத்ரம் கூடிய சுக்ல த்வாதசி நன்னுளில் சாஸ்த்ர விதிப்படி நம்மாண்டவன் மறு அவதாரம் என்று சொல்லலாம்படி ஆசார்ய பீடத்தில் அமர்ந்தார்.

அனுஷ்டான முறை

விடியற்காலை 4 மணி அளவில் எழுந்து அவகாஹஸ்னானம் கண்டருளி ஜபங்களும், சந்த்யாவந்தனமாகி பகவதாராதனமும் பூர்வாசார்யர்களுடைய பாதுகாராதனமும் ஒருங்கே நடத்தி, திருப்பாவை சாற்று முறையாகி கோஷ்டிக்கு பெருமாள் தீர்த்தமும், பாதுகா தீர்த்தங்களும் ஸாதிக்கப்படுகிறது. ஆசார்யர்களுடைய திரு நக்ஷத்ரமானுல் அன்று ஸம்பாவனை ஒரு விசேஷ அம்சமாயிருக்கும்.

கோஷ்டியில் பூர்வாசார்ய தனியன்கள் அனுஸந்தானமும், ஸ்ரீபகவத் ராமானுஜரின் கத்யத்ரயமும் அனுஸந்தானம் செய்யப் படுகிறது. ஸ்ரீமதாண்டவன் ஆசார்ய பீடத்தில் அமர்ந்து ஸ்ரீபாதுகாஸஹஸ்ர பாராயணம் கம்பீரமாக நடக்கிறது. பரதன் பாதுகையின் பெருமையைப் பறை சாற்றி நாட்டின் நலனைக் காத்ததுபோல் தன் சிஷ்ய பரம்பரையின் நலனை, பூர்வா சார்யாளான பாதுகைகளை அன்றன்று ஆராதித்து, அவர்களிடம் ஸ்ரீமதாண்டவன் பிரார்த்தித்து வருவது நம் பரம்பரைக்கே உரித்தான ஒரு சிறப்பு. அவதாரம் தொடங்கி இன்று வரை ஒரு தடங்கலன்றி யில் பாதுகாராதனம் நடந்து வருவது பூர்வாசார்யர்கள் நம் ஸ்வாமியிடத்தில் பொழிகின்ற பரமானுக்ரஹம் எனக் கொள்ளத் தட்டில்லை.

பிறகு இன்முகத்தோடு வந்திருக்கும் சிஷ்யர்களின் க்ஷேமலாபங்களை வினவி, அன்றைய வைதிக கர்மாக்களான ஸமாச்ரயண - பரன்யாசங்கள் செய்யப்படு கின்றன. முன்பெல்லாம் பல நாட்கள் ஆசிரமத்தில் தங்கி இருந்து ஸ்ரீமத் ஆண்டவன் நியமனம் ஆகிப் பிறகு தான் ஸமாச்ரயண பரன்யாஸாதிகள் நடக்கும். ஆனுல் ஸௌலப்யமே வடிவான ஸ்ரீமதாண் டவன் அவதரித்த பிறகு சுலபமாகச் செய்து கொள்ள முடிகிறது.

ஸ்ரீமதாண்டவன் திருவவதாரத்திற்கு முன்பு ஆசிரமத்தில் பூர்வாசார்யர்களுடைய திருநக்ஷத்ர சமயத்தில்தான் ததியாராதனை விசேஷமாயிருக்கும். ஆனுல் இன்று ஒவ்வொரு நாளும் ஸ்ரீமதாண்டவன், ஆசிரமத்திலோ, சஞ்சாரமாய் காட்டிலோ, மலையிலோ, வீடுகளிலோ எங்கிருந்தாலும் ஒரு சாதாரண தினத்திலேயே 50 திரு நாமங்களுக்குக் குறைவில்லாமல் ததியா ராதனை தவறுவதே இல்லை.

மாலை வேளையில் ஸந்த்யா வந்தன அனுஷ்டானமாகித்தானை திவ்யப்ரபந்த சந்தை சிஷ்யர்களுக்கு அருளுவர். கால க்ஷேபமிருந்தால் காலையிலும் மாலையிலும் நடக்கும்.

இதுவரை ஸ்ரீபாஷ்ய, பகவத் விஷய, ஸ்ரீகீதாபாஷ்ய, ஸ்ரீமத் ஸார க்ரந்தசதுஷ்டய காலக்ஷேப கோஷ்டியில் ஆடவரும் பெண்டிரும் ஏராளமாய் அன்வயித்து நற்கல்வி பெற்றுள்ளனர்.

ஸஞ்சாரம்

பூர்வாச்சார்யர்களில் ஸ்ரீ தேரழுந் தூராண்டவனும், ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனும், மேல்கோட்டை, மைசூர், காஞ்சி, அரியக் குடி, சேது முதலிய இடங்களுக்கு யாத் திரையாய் போகும் போது நடந்தே சென் றனர். வாஹனங்களில் ஏறுவதில்லை. பெரியாண்டவன் போல்வாரைப் பற்றிச்

சொல்லவே தேவை இல்லை. ஸஞ்சாரம் போகும் போது போகுமிடமெல்லாம் பாதுகா ஆசார்யர்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோவது வழக்கம். ஓலைப் பெட்டிகளில் அந்தந்த ஆசார்யாள் பாதுகை வைக்கப்பட்டு அவைகளை ஒவ்வொரு கைங்கர்யபரர் சிரசில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோவது வழக்கம். வழியில் அவைகளைக் கீழே வைக்கக் கூடாது. வைக்கவும் மாட்டார்கள். மாற்ற வேண்டுமென்றால் பாதுகை எழுந்தருளப் பண்ணத் தகுதியுடைய வேறொரு கைங்கர்யபரர் வருமளவும் காத்திருக்க வேண்டும். அல்லது நதீதீரம், புஷ்கரணி தீரங்கள் கண்டால் அங்கே சுத்தமாக்கிய இடத்தில் வைக்க வேண்டும். தளிகைக்கு வேண்டிய சாமான்கள் வண்டியில் போகும்.

அத்தகைய நிலையை இன்று வரை ஸ்ரீமதாண்டவன், சஞ்சாரத்தைக் கால் நடையாகவே ஸ்ரீதென்பரையாண்டவன் நியமனத்தையும் பூர்வாசார்யர்களுடைய வழியையும் பின்பற்றிக் கைக்கொண்டு ஆஸேது ஹிமாசலம் சென்று வருவதை எப்படி வர்ணிப்பது? பாதுகாசார்யர்களை எழுந்தருளப் பண்ண ஒரு மேனி தயார் செய்து அது மிகவும்கனமாயும் பாதுகைகள் சரிந்தும் அபசாரப் படுவதாயிருந்ததை, மதுரையில் சஞ்சாரமாய் எழுந்தருளியிருந்த போது ஸ்ரீ T. S. கிருஷ்ணஸ்வாமி ஒரு அழகாய மேனி தயார் செய்து, அதிக பளு இல்லாமலும் இடையே ஒரே மரத்தினாலேயேயான தோளுக்கினியானையும் இணைத்துக் கொடுத்தபின், அதிலேயே ஒவ்வொரு ஆசார்ய பாதுகைக்கும் தனித் தனி அறைகளையும் அமைத்துக் கொடுத்த பின் மிக லாகவமாய் பாதுகாசார்யர்கள் ஸஞ்சாரத்தில் எழுந்தருளுகிறார்கள்.

பல கடினமான யாத்திரைகள் போக வேண்டிய நிமித்தம் சாமான்களும், கைங்கர்யபரர்களும் ஏறிச்செல்லப் பாங்காய் ஒரு வேன் (பஸ்) உபயோகப்படுத்தி அதிலேயே பாதுகாசார்யர்களது பல்லக்கு வைக்க இடமளிக்கப் பட்டிருக்கிறது.

சிஷ்யர்கள் ஏராளமானவர்களைச் சம்பாதித்து ஏராளமான பொருளீட்டி, எண்ணிறந்த நற்பணிகள் செய்து, ஆசிரமங்கள் நிறுவி, பூர்வாசார்ய வழிகளினின்றும் கடுகளவும் பிறழாது காலமெல்லாம் சிஷ்யர்கள் நலனுக்கே தன் வாழ்வை முழுமையும் அர்ப்பணித்திருக்கும் ஆசார்ய வள்ளல் பெருமையினை விளக்கும் பகுதிகள் க்ரமேண தரப்படுகின்றன.

நித்யானுஷ்டானம்



நீராட்டம்



திருமண்காப்பு—தாம்ரபர்ணீ தீரம்



காலை அனுஷ்டானம்



ஸந்தயா அனுஷ்டானம்



அஷ்டாக்ஷர ஜபம்

பாதுகாராதனம்





பாதுகா ஸஹஸ்ர பாராயணம்

பெருமாளும் பாதுகைகளும் ஆசார்யனும்





பூர்வாசார்யர்களது பாதுகைகளை தரித்தல்

காலக்ஷேப கோஷ்டிகளுடன்



கீதாபாஷ்ய காலக்ஷேப கோஷ்டி, சென்னை

ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப கோஷ்டி, பெங்களூர்





ஸ்ரீமத்ஸார பகவத்விஷய காலக்ஷேப கோஷ்டி, மயிலை

பெண்டிர் காலக்ஷேப கோஷ்டி, மயிலை



॥ ஶ்ரீ : ॥

சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்

''த்விஜன்'' அதாவது இரு பிறப்பாளன் என்று சொல்லப்படுகிற அந்தணனுக்கு உபாகர்மா (ஆவணி அவிட்டம்) எவ்வளவு சிறப்புடையதோ அதுபோல் துறவிகளுக்கு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் என்கிற வ்ரதம் மிகவும் இன்றியமையாதது.

ஒரு துறவி வயதில் சிறியவராய் இருந்தாலும் சாதுர்மாஸ்யம் கூடுதலாகக் கண்டருளியிருந்தால் குறைவான சாதுர்மாஸ்யம் கண்டருளிய வயது முதிர்ந்த துறவி முன்னவரைத் தெண்டனிட்டு வணங்க வேண்டுவது சாஸ்திர விதி. அப்படியே அனுஷ்டித்தும் வருகிறார்கள்.

வர்ஷருது, சரத்ருது இந்த இரண்டு ருதுக்கள் கொண்ட ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் ஆர்யாவர்த்தமாகிய நம் தேசத்தில் மழை பெய்யும். வெள்ளம் நதிகளில் மிகுத்து வரும். அப்போது பூச்சி, புழு முதலிய கிருமிகள் அதிகமாக உற்பத்தியாகி பூமியிலே ஊர்ந்து வரும். நடக்கின்றவர்கள் அவைகளைக் கண்டோ காணுமலோ அதற்கு இடையூறு செய்வது மட்டுமன்றி அவர்களால் அவைகள் நசுக்குண்டு மடிவது முண்டன்றே! யதிகளுக்கு அவர்களது அனுஷ்டானங்களில் மிகுதியாய்ப் பயன்படுவது ''ம்ருத்'' (மண்). ம்ருத்துக்களில் அதிகமான புழுக்கள் இருக்கக்கூடும். ஆகவே துறவிகள் இந்த மாரிக் காலங்களில் ஸஞ்சாரம் மேற் கொள்ளாது ஓரிடத்திலேயே தங்கித் தவமிருப்பார்கள். இந்த வ்ருதத்தின் போது தான் உண்டிசுருக்கல், நீர்நிலை நிற்றல் முதலிய சிரிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம்தம் உயிர்களுக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பிறவுயிர்களை ஓம்புதல் முதலிய நற்பணிகளைக் கைக்கொள்கின்றனர். மேலும் துறவிகள் மேற் கொள்ளும் தவத்திற்கு இலக்கணம் கூறுகின்ற வள்ளுவர்,

''உற்ற நோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'' என்று
''உயிர்க் குறுகண் செய்யாமை''

அதாவது பிறவுயிர்களுக்கு துன்பம் விளைவிக்காத ''அஹிம்ஸா தர்மமே'' தவத்தின் வடிவு என்கிறார். இதனைக் கருத்தில் கொண்டு யதிகள் இக்காலங்களில் ஒரே இடத்திலேயே எழுந்தருளியிருந்து 4 மாதங்கள் (சாதுர்மாஸ்யம்) தவமியற்றுகின்றனர்.

ஒரு கிராமத்தில் ஒரு இரவு என்கிற கணக்கில் நிலையற்றுப் பயணம் செய்கின்ற ஒரு யதி காலத்தின் கொடுமையினால் 4 மாதங்கள் ஒரு இடத்தில் இருப்பது என்பது மிகக் கடினமானது. நான்கு பக்ஷங்கள் ஒரு இடத்தில் இருத்தலையே நான்கு மாதங்கள் இருத்தலாகக் கணக்கிடுகிறார்கள்.

''பக்ஷாவை மாஸா:'' என்கிற வேதவாக்கியம் இந்த ஒழுக்குக்கு ஒத்ததாய் அமைந்திருக்கிறது. ஆகையால் ஒரு பக்ஷத்தை ஒரு மாதமாக நினைக்கலாம்-கணக்கிடலாம் என்பதாகிறது. இந்த சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தைத் துறவிகள் சாந்த்ராயண ரீதியாய் ஆஷாட மாத (ஆனிமாத) அமாவாஸைக்குப் பிறகு வரும் பௌர்ணமியன்று ஆரம்பித்து பாத்ரபத மாத (ஆவணி மாத) அமாவாஸைக்குப்பிறகு வரும் பௌர்ணமி அன்று முடித்துக் கொள்ளுகிறார்கள். இது ஒரு பெரிய வேள்வி எனவே கொள்ளவேணும். புனிதமானதொரு வ்ரதமுங்கூட. தன்னைச் சார்ந்த சீடர்களும் அவர்களது பரம்பரையும், வாழையடி

வாழையென ஓங்கி வளர வேண்டுமென இறைவனே இடையருது இறைஞ்சி வழி பட்டு வ்ரதத்தை அனுஷ்டிக்கின்றனர். இங்ஙனம் நமக்கு உயரிய உபகாரத்தைக் கைம்மாறு கருதாது காலமெல்லாம் அளிக் கின்ற ஆசார்யர்கள் மிகவும் சாலச் சிறந்த பெரியோர்கள்.

ம்ருத் ஸங்க்ரஹணமும் பூவராஹ ஆராதனமும்

யதிகள் இந்த ஆஷாட பௌர்ணமி யன்று செய்ய வேண்டிய நித்யகர்மாக்கள், பகவதாராதனம் இவைகளைச் செவ்வனே முடித்துக் கொண்டு எந்த இடத்திலிருந்து இந்த 4 பக்ஷகாலங்களுக்கு வேண்டிய ''மண்'' எடுத்துக் கொள்ள தேர்ந்தெடுக்கப் பட்டதோ அந்த இடத்திற்கு சிஷ்யர்கள் சூழ எழுந்தருளுவார்கள். அந்த இடம் முன்னமேயே மாவிலை தோரணங் களாலே அலங்கரிக்கப் பட்டு அழகாயிருக் கும். அந்தத் தலத்தை ஸ்ரீவராஹப் பெரு மானுல் ஸமுத்ரத்திலிருந்து உத்தரணம் செய்யப் பட்டு மீண்டும் ஸ்தாபிக்கப் பட்ட ஸ்ரீபூமாதேவியாகத் தியானித்து ''நில மடந்தை தனை இடந்து புல்கிக் கோட்டிடை வைத்தருளிய எங்கோமான்'' என்ற படி ஸ்ரீபூவராஹப் பெருமானது ஆராத னத்தை சாஸ்திர விதிப்படி செய்தருளுவர். கூடவே குழுமியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் பூஸூக்த பாராயணம் செய் வார்கள். புதியதான மண்வெட்டிக்கு அலங்காரம் செய்துப் பின் பூமியை ப்ரார்த் தித்து முதலில் யதிவரர் தன் திருக்கரங் களால் ம்ருத்தைத் தோண்டி எடுத்து ஒரு புதியதான கூடையில் நிறைத்தருளுவர். பிறகு அவருக்குப்ரத்யேகமாய் பணிவிடை புரியும் சிஷ்யர்கள் அத்துறவி மஹானுக்குத் தினப்படி வேண்டிய மண்ணைக் கணக்கிட்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் முடியும் வரை யிலான 4 பக்ஷங்களுக்கு 60 நாட்களுக்கு வேண்டிய மண்ணை ஆராதித்த புனித இடத்திலிருந்து எடுத்துத் துறவி அனுஷ்டா னம் கண்டருளும் சுத்தமான இடத்தில் சேர்த்து சேகரித்து வைப்பார்கள்.

திருமுடி விளக்கமும் ஸங்கல்பமும்

பிறகு யதி (துறவி) திருமுடிவிளக்கம் (க்ஷவரம்) கண்டருளி விதிப்படி நீராடி விட்டு விசேஷ பகவதாராதனம் செய்வர்; இதற்குப்பின் அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்கோ அல்லது ஒரு மண்டபத்திற்கோ எழுந்தருளுவர். மறுபடியும் சிரேறு மறை யாளர்கள் ''பஞ்ச சாந்தி'' பாராயணம் செய்வார்கள். பாராயணம் முடிந்ததும் ''ஸங்கல்பம்'' செய்து கொள்வர். ''ஸங் கல்பம்'' என்பதற்கு ''உறுதி கொள்ளுதல்'' என்பது பொருள். அந்த உறுதியினை சிஷ் யர்கள் நிறைந்த இடத்தில் உரக்க உரைத் திடுவர் ஆசார்ய யதிவரர். அந்த உறுதி யாவது:—

''ஆஷாட பௌர்ணமாஸீமாரப்ய
பாத்ரபத
பௌர்ணமாஸீ பர்யந்தம் சாதுர்மாஸ்ய
வ்ரதம் ஸ்தாஸ்யே' —அதாவது

(ஆடி பௌர்ணமீ தொடங்கி ஆவணி ''பௌர்ணமீ வரை'' சாதுர்மாஸ்ய வ்ரத மிருப்பேன்) என்று திருவாய் மலர்ந்தருள உடனே குழுமியிருக்கும் சிஷ்யர்வர்க்கங் கள் எல்லோரும் ஒரு முகமாக

''நிவஸந்து ஸுகேனைத்ர கமிஷ்யாம:
க்ருதார்த்ததாம்॥
யதாசக்தி ச சிக்ருஷாம் கரிஷ்யாமோ
வயம் முதா''॥

''அதாவது (நீங்கள் இங்கேயே சுகமாய் எழுந்தருளியிருக்க வேணும். நாங்களும் எங்களுடைய திறனுக்குத் தக்கவாறு உள்ளக் களிப்போடு தங்களுக்குப் பணி விடைகள் செய்து தந்து பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றவர்களாவோம்...)'' என்று பதில் அளித்து தங்கள் நலம் பேணும் உத்தமரை வேண்டிடுவார்கள். இதுதான் ஸங்கல்பத்தின் உட்கருத்தாகும்.

ஆஷாட பௌர்ணமியின் பெருமை

ஒன்றுக இருந்த வேதத்தை ருக், யஜுர், ஸாம, அதர்வ வேதங்களாகப் பிரித்து உத வியவரும், வேதங்களின் உட்பொருள் விளங்க ''வியாஸன் விரித்த நன்னூல்''

எனப் போற்றப்படும் ''ப்ரஹ்ம ஸூத்ர''த்தின் ஆசிரியரும், ஐந்தாவது வேதமெனப் போற்றப்படும் ஸ்ரீமஹாபாரதத்தையும், ஸ்ரீபாகவதம் முதலான 18 புராண கர்த்தாவும், ''வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே'' என்று புகழப் படுபவரும் ''வையமெல்லாம் இருள் நீக்கும் மணி விளக்காய் மன்னிய நான்மறை மௌலி மதியே கொண்டு மெய்யலது விளம் பாத வியாஸன் காட்டும் விலக்கில்லா நன்னெறியே விரைந்து செல்வீர்'' என்று தூப்புல் வள்ளல் திருவாக்கினால் பெருமை படப்பேசப்பட்டவருமான ஸ்ரீவேதவியாஸ பகவான் அவதாரம் செய்த புனித நாள் ஆஷாட பௌர்ணமீ.

இந்த சுபதினத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியர், மத்வாச்சாரியர் முதலிய மஹான்கள் 'ஸ்ரீவியாஸ' பகவானை ஆவாஹனம் செய்து விசேஷமாக பூஜை செய்து ஸ்ரீப்ரஹ்ம ஸூத்ர பாராயணம் செய்ய ஆரம்பம் செய்வது கொண்டு இதனை வியாஸபூஜை என்றும் சொல்லுகிறார்கள்.

இத்தகைய புனித விரதத்தை ஆசிரம ஸ்வீகாரம் செய்த ஆண்டு தொடங்கி இற்றை வரை 18 ஆண்டுகள் கைக் கொண்ட நமது ஆசார்யன் ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் கண்டருளிய ஸங்கல்ப இடங்களையும், காலங்களையும் வரிசைப் படுத்தியிருப்பதைக் காண்க.

சாதுர் மாஸ்ய ஸங்கல்பங்கள்

1963-ம் வது தஞ்சை மாவட்டம் மன்னார்குடிக்கும் தஞ்சைக்குமிடையில் வடுவூரில் வேம்பு அய்யங்கார் திருமாளிகையில் கண்டருளியது.

24-7-1964 சென்னைக் கடுத்த உகந்தருளின திவ்யதேசமான திருநீர்மலையில் இரண்டாவது ஸங்கல்பம். ஸ்ரீ ஹரிகல்யாண மண்டபம்.

13-7-1965 கர்நாடக பிரதேசத்தில் பெங்களூரில் மல்லேஸ்வரம் என்கிற பாகத்தில் எதிராஜ மடத்தில் மூன்றுவது ஸங்கல்பம்.

2-7-1966 மதுரை மாவட்டம் சொக்கிகுளம் T.V.S. சகோதரர்களுள் ஒருவரான ஸ்ரீ T.S. ஸ்ரீநிவாஸன் அவர்களது திருமாளிகையில் நான்காவது ஸங்கல்பம்.

21-7-1967 தஞ்சை மாவட்டம் மன்னார்குடி ஹரித்ராநதி வடகரையில் 5வது சாதுர்மாஸ்யம்.

10-7-1968 கர்நாடக பிரதேசம் பெங்களூர் மல்லேஸ்வரத்தில் 6வது நெடுஞ்சாலை ''படங்கர் ஹவுஸ்'' என்கிற திருமாளிகையில் 6வது சாதுர்மாஸ்யம்.

29-7-1969ஷி இடம் தான், 7வது சாதுர்மாஸ்யம்.

18-7-1970 ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் 8வது ஸங்கல்பம்.

8-7-1971 கர்நாடக பிரதேசம்-பெங்களூர் ஜயநகரில் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் 9வது ஸங்கல்பம்.

26-7-1972 சென்னை மயிலாப்பூர் தேசிகாச்சாரியர் சாலையிலுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் 10வது சாதுர் மாஸ்யம்.

15-7-1973ஷி மயிலை ஆசிரமத்தில் 11வது ஸங்கல்பம்.

4-7-1974 பெங்களூர் - ஜயநகர் ஆசிரமத்தில் 12வது சாதுர்மாஸ்யம்.

23-7-1975 ஆந்திர பிரதேசத்தில் அலர்மேல்மங்கை யுறைகின்ற திருச்சானூர் (திருச்சுகனூர்) என்கிற திவ்ய தேசத்தில் ஸன்னிதி தெருவிலுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் 13வது ஸங்கல்பம்.

11-7-1976 உத்திர பிரதேசத்தில் ரிஷிகேசம் ''பரத்மந்திர்'' என்கிற திருமாளிகையில் 14வது சாதுர்மாஸ்யம்.

30-7-1977 சென்னை மயிலை தேசிகாச்சாரி ரோடு ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் 15வது ஸங்கல்பம்.

20-7-1978 திருவரங்கம் ஸ்ரீமதாண்டவன் பெரியாச்சிரமத்தில் 16வது ஸங்கல்பம்.

9-7-1979 பெங்களூர் ஜயநகர் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் 17வது ஸங்கல்பம்.

27-7-1980 தஞ்சை மாவட்டம் திருக்குடந்தை புதுப்பாலத்தருகில் காவிரி கரை தெரு 13நெ. திருமாளிகையில் 18வது ஸங்கல்பம்.

சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்



ஸங்கல்பம்—பூவராஹ ஆராதனத்திற்கு எழுந்தருளல்



பூவராஹ ஆராதனம்



பூவராஹ ஆராதனம்



பூவராஹ ஆராதனம்

ம்ருத்ஸங்க்ரஹணத்திற்கு முன்





ம்ருத்ஸங்க்ரஹணம்

திருமுடி விளக்கத்திற்குப் பிறகு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்



வித்வத் ஸதஸ்



ஸ்ரீரங்கம், ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் வித்வத் ஸதஸ்:





ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம்



ஆசார்யனுக்கு பண்டிதராஜரின்
வரவேற்புரை



காலக்ஷேப ஸம்பாவனை

ஸ்ரீ :

திருநக்ஷத்ர மஹோத்ஸவங்களும் வித்வத் ஸதஸ்ஸுகளும்

''பவோ ஹி லோகாப்யுதயாய'' என்று மஹாகவி காளிதாஸன் சொன்னதுபோல் மஹான்களுடைய அவதாரங்கள் எல்லாம் உலகம் உய்வதின் பொருட்டேயன்றே! கைம்மாறு கருதாது கால மெல்லாம் ஏக சிந்தையராய், திருவடிதனில் மண்டியிட்டு நிற்கும் ஸம்ஸாரிகளுக்குக் கண்ணன் கழல் இணையைக் காட்டித் தந்து என்றும் இன்பமே பெற வகை செய்யும் வள்ளல்களுடைய அவதார தினங்கள் எம்பெருமான்களது அவதார தினங்களைக் காட்டிலும் மிகவும் விலக்ஷணமானவை. ஸ்ரீராமநவமி என்றும், ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி என்றும் எம்பெருமானுடைய அவதார தினங்களைக் கொண்டாடுவதுபோல் ஆசார்ய வள்ளல்களுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைக் கொண்டாடுவது கடமை மட்டுமின்றி, நமது நன்றி உணர்ச்சியின் ஒரு சிறு வெளியீடும் ஆகும்.

ஸ்ரீமதாண்டவன் அவதாரத்திற்குப் பின்பு, அவரது திருநக்ஷத்ர தினத்தை பக்தி கொண்ட ஸத்சிஷ்யர்களும், அன்பர்களும் பலவாறாக பல இடங்களில் கொண்டாடிய வாறு இப்பகுதியில் தொகுத்தளிக்கப் படுகின்றன.

இதன் அங்கமாக திருநக்ஷத்ரதினத்திற்கு முன்பு வேதபாராயண திவ்யப்ரபந்த பாராயணங்கள் துவங்கி, 5 தினங்களோ- அல்லது 10 தினங்களோ தொடர்ச்சியாய் நடந்து திருநக்ஷத்ரதினத்தில் சாற்றுமுறை செய்யப்படுவது வழக்கம். க்ரமமாக ஸம்பாவனைகள் நடக்கும். சௌனக முனிவர் போல் அர்ச்சாவதார எம்பெருமான்களிடத்தில் ஆராத காதலும், பக்தியும் கொண்டவரானதினால், ஸ்ரீமதாண்டவனை எல்லா எம்பெருமான்களுமே ஆசாஸிக்க எழுந்தருளுகின்றனரோ என்று எண்ணலாம்படி திவ்யதேசத்து எம்பெருமான்களது உடுத்துக்களைந்த பீதகவாடைகள், பூந்தண் மாலைகள் இவைகளைத் தாங்கிவரும் அந்த ஸேத்தமர்கள் வரிசையாக எழுந்தருளி ஸ்ரீமதாண்டவனுக்கு அருளிப்பாடிட்டு மாலைகளைச் சாத்தி ஆசாஸிப்பது வழக்கமாயிருக்கிறது. இந்த வைபவம் ஒரு கண் கொள்ளாக் காட்சி. ஜனவெள்ளத்தின் நடுவே புன்னகை ததும்ப அடியார்களை ஆசீர்வதித்து மந்த்ராட்சதை வழங்கும் ஸ்ரீமதாண்டவனது திருமேனிக்கு அன்று பல்லாண்டு கூறுதாரில்லை. ததீயாரதனை செவ்வனே நடந்து அன்வயித்த வித்வத் கோஷ்டிகளைத் தக்க முறையில் பஹுமானம் செய்வதும் இதன் சிறப்பு.

ஸ்ரீமதாண்டவன் திருவவதாரம் செய்த பின்னர், ஸ்வாமி நடத்தியருளும் பல புதிய நற்பணிகளில் ஒன்று அறிஞர் பெருமக்களைக் கூட்டி ஆன்மீக உரைகளை நிகழ்த்தியருளச் செய்வது மட்டுமன்றி, மதக்கோட்பாடுகளை அவர்களைக் கொண்டு ஆழ்ந்த விசாரமும் ஆய்வும் செய்ப்பித்து தன்னிறைவு கொள்ளுதல். மூதறிஞர்களைக் கொண்டு ஸம்ப்ரதாயத்தில் இளையவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு ஆசியும் பொருளும் வாழ்த்தி வழங்குவது ஸ்ரீமதாண்டவனின் தனிச் சிறப்பு.

அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒருங்கே திரட்டித் தருகிறது இப்பகுதி.

23-3-64 57வது திருநக்ஷத்ரம்

காஞ்சீ பாதுகாச்ரமத்தில் கொண்டாடப் பட்டது.

வித்வத்ஸதஸ் விசேஷாம்சம் காஞ்சீ மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராச்சார் ஸ்வாமி அந்வயித்தது. ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாச்சாரியரும் எழுந்தருளியிருந்தார்.

10-4-65 58வது திருநக்ஷத்ரம்

மைசூர் மாநிலத்தில் ஸோஸலேயில் ஜோடிதார் ஸ்ரீ ரெங்காச்சாரியார் ஸ்வாமி திருமாளிகையில் கொண்டாடப்பட்டது.

31-3-66 59வது திருநக்ஷத்ரம்

திருக்குடந்தை : காமாக்ஷி ஜோஸ்யர் தெரு வெங்கடராயர் சத்திரம்., ஸ்ரீ ஆராவமுதன் ஆண்டாள் ஸன்னிதியில் பல திவ்யதேசத்து எம்பெருமான்களது அனுக்ரஹங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன.

18-4-67 60வது திருநக்ஷத்ரம் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீரங்கம் சின்னுச்ரமத்தில் வெகு விமரிசையாகவும் கோலாகலமாயும் கொண் டாடப்பட்டது. இவ்வைபவப் பொறுப்பை சென்னை ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் அய்யங்கார் அவர்களைப் போஷகராகவும், பெங்களூர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் (T. V. S.) அவர்களைத் தலைவராகவும், சென்னை வழக்கறிஞர்கள் ஸ்ரீ R. கோபால ஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ திண்டுக்கல் இராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ S. K. வெங்கடரங்க அய்யங்கார் இவர்களைத் துணைத்தலைவர்களாகவும், ஸ்ரீ N. G. கிருஷ்ண அய்யங்கார் அவர்களைச் செயலராகவும், ஸ்ரீ சித்ரகூடம் ஸ்வாமி, முதலிய ஆறு பேர் கொண்டோர் விழாவின் துணைச் செயலர்களாகவும், 52 பேர் மெம்பர்களாகவும் கொண்ட ஒரு குழு ஏற்றது.

அவ்வமயம் ஸ்ரீமதாண்டவனது பெருமை யைப் பாருக்கு உணர்த்திட ஒரு அழகிய மலர் வெளியிடவும் தீர்மானித்து அதற்கென ஒரு மலர்க்குழு அமைத்ததில், சென்னை வழக்கறிஞர்கள் R. G. ஸ்வாமி, ஸ்ரீ D. R. ஸ்வாமி, ஸ்ரீ S. S. அய்யங்கார், ஸ்ரீ D. ஆராவமுதன், ஸ்ரீரங்கநாதபாதுகா வித்யா லயா முன்னாள் முதல்வர் ஸ்ரீ K. R. அப்புள் ளாச்சார் அதில் அங்கம்வஹித்தார்கள். திரு நக்ஷத்திர தினத்தன்று பக்தர்கள் சிஷ்யர்கள் அன்பர்கள் கூட்டம் எண்ணிலடங்காது. தண்ணீர் வரண்ட காலமானாலும் ப்ரத்யேக மாகக் கொள்ளிடத்தில் தண்ணீர் வர வழைத்து ஆசிரம புஷ்கரணியை நிரப்பி னார்கள். பல வித்வான்களின் விசேஷக் கட்டு ரைகளும், சமுதாயத்தில் பல துறையில் உள் ளோரது வாழ்த்துரைகளும் கொண்ட ஒரு மலரும் வெளியிடப்பட்டது. தொடர்ந்து வித்வத்ஸதஸ்ஸும் நடந்தது. பிரபல மஹாவித்வான்கள் எழுந்தருளியிருந்து சிறப்பித்தார்கள். பல திவ்ய தேசங்களி லிருந்தும் குறிப்பாக ஸ்ரீரங்கம், திருமலை பெருமாளகோவில், திருக்குறுங்குடி, வான மாமலை, திருக்குடந்தை, ஸ்ரீ வில்லிபுத்தூர் முதலிய இடங்களிலிருந்து கோயில் மரியாதைகள் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமர்ப் பிக்கப்பட்டன. அன்று காலை 11மணி அளவில் ஆரம்பித்த பாகவத ததியாராதனை மதியம் போய் மாலை 4மணி வரை நடந்து கொண்டிருந்தது.

வித்வத்ஸதஸ்ஸின் விசேஷம் என்ன வென்றால் அந்நாள் நமது ஸ்ரீவைஷ்ணவ மரபு தன்னில் விபுலமாயும், பரந்தபுகழ் கொண்டும், ஆழ்ந்த ஜ்ஞானமும் கொண்ட மஹாவித்வான்களான ஸ்ரீ உவே. D. T. தாத்தாச்சார், மதுராந்தகம் வீரராகவாச் சார், Prof. A. ஸ்ரீ நிவாசராகவன் (புதுக் கோட்டை), நவநீதம் ஸ்ரீராமதேசிகாச் சாரியர், மீமாம்ஸகேசரி அல்லுண்டு ஸ்ரீநிவாஸாச்சாரியர். திருக்குடந்தை அய்யங்கார் தெரு ''பிச்சை ஸ்வாமி'', Prof. R. ராமானுஜாச்சாரியர். ஸ்ரீ S. S. அய்யங்கார், ஆழ்வார்திருநகரி இளைய வல்லி சடகோபாச்சாரியர், ஸ்ரீ கோபுவாத் யார் என்கிற M. S. ராஜகோபாலாச்சார் முதலானோர் ஸதஸ்ஸில் பங்கு கொண் டனர். அந்த ஸபை நாம் காணுத நித்ய ஸூரிகள் கொண்டதொரு ஸபையைப்போல் பூமண்டலத்தில் காண அன்று கிடைத்தது.

1963ம் வருஷம் துரீயாச்ரமம் பெற்று, அவ்வாண்டு தொட்டு யாத்திரையாகக் கிளம்பி அநேகமாய் தென் தேசம் முழுவதும் நடந்து ஸஞ்சாரம் செய்த காரணத்தால் அதற்குள்ளே ஏராளமான சிஷ்யர்கள் ஸ்ரீமதாண்டவனை ஆச்ரயித்தார்கள். அவர் களெல்லாரும் வந்திருந்து ஸ்ரீமதாண் டவன் திருநக்ஷத்திர வைபவத்தில் பங்கு பெற்றார்கள்.

ஸ்ரீமதாண்டவன் விபவத்தில் இது ஒரு மஹத்தான உத்ஸவம்.

ஸ்ரீமதாண்டவனது ஷஷ்ட்யப்த பூர்த்தி 22-3-67 அன்றுதான் என்றாலும், யாத்ரை யில் இருந்ததாலும், இந்நாளைக் கோலாகல மாகக் கொண்டாடுவதில் ஸ்வாமிக்கு திருவுள்ள உகப்பு இல்லாததாலும் முன்பே மதுரை சொக்கிகுளம் ஸ்ரீ T. S. ஸ்ரீனிவாசன் (T.V.S.) பங்களாவில் எளிய முறையில் கொண்டாடிய பிறகு, ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவக் கமிட்டியின் நிர்பந்தம் கொண்டு ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கம் விடை கொண்டபடி.

7-4-68 61வது திருநக்ஷத்திரம்

இங்கும் கடந்த ஆண்டேபோல் சென்னையில் ராயப்பேட்டை, ஸ்ரீபுரம் கமலாம்மாள் க்ருஹத்தில், திருநக்ஷத்திர கமிட்டி ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் அய்யங் கார் தலைமையில் கொண்டாடப் பட்டது. ஸதஸ்ஸும் நடந்தது. பீஹார் முன்னாள் ஆளுநர் ஸ்ரீ M. அநந்தசயனம் அய்யங்கார் தலைமையில், கார்ப்பங்காடு வெங்கடாச் சார் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்து, மஹா வித்வான்களான வேப்பத்தூர் சுப்ரமணிய சாஸ்த்ரியாரும், பாலசுப்ர மண்ய அய்யரும் வந்திருந்து ஸபை முழுமை பெற்றது.

28-3-69 62வது திருநக்ஷத்திரம்

பெங்களூர் மல்லேச்வரம் 15வது கிராஸ்-6வது மெயின், 59ம் நெ திருமாளிகையில் வெகு விமரிசையாய்க் கொண்டாடப் பட்டது.

ஸ்ரீமதாண்டவன் பெங்களூரை விட்டு மைசூர் மாநிலத்தின் உட்பகுதியில் ஸஞ்சாரத்தில் எழுந்தருளியிருந்தபடியால், இவ்வைபவத்தின் தொடக்கம் 'டிப்டூர்' என்னுமிடத்திலேயே ஆகி, பாராயணம் கூடவே நடந்து வந்தது.

இதன் அங்கமாக வழக்கம்போல் வித்வத் ஸதஸ்ஸும் நடந்தது. இங்கு மூன்று மத வித்வான்களும் குழுமியிருந்தனர்.

பெங்களூர் சிஷ்யர்களில் பெரும் பாலா னோர் ராஸக்யம் உள்ளவர்கள். வாக் யார்த்த விஷயங்களை கூடவே இருந்து அறிய ஆசை கொண்டவர்கள். அவர் களும் எளிதில் அறியும் வண்ணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறையில் பலகாலம் பேராசிரிய ராகப் பணியாற்றிய Prof. ராமானு ஜாச்சாரியர் ஸ்ரீபாஷ்யத்தில் ''பாஞ்சராத் ராதிகரண''த்தை ஆங்கிலத்தில் அழகாக எடுத்துச் சொல்லிக் கேட்போர் செவி களையெல்லாம் குளிரவைத்தார். திரு நாராயணபுரம் எம்பார் நரசிம்மாச்சாரி யரும், பரகாலமடம் வித்வான் ஸ்ரீ E. S. வரதாச்சாரியார் ஸ்வாமியும் எழுந்தருளி யிருந்தது குறிப்பிடத்தக்கது.

18-3-70 63வது முடிந்து (64வது திரு நக்ஷத்திரம்).

ஸ்ரீரங்கம் கீழ உத்திரவீதியிலிருக்கும் ஆச்ரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீரங்கநாத பாதுகா வித்யாலயத்தில் கொண்டாடப் பட்டது.

ஸ்ரீ D. T. ஸ்வாமி., ஸ்ரீகார்யம் சித்ர கூடம் ஸ்வாமி. மைசூர் ஸ்ரீ E. S. வர தாச்சார் ஸ்வாமி இவர்களோடு ஸ்ரீரங்கம் ஸ்ரீமந்நாராயண ஜீயரும் எழுந்தருளியிருந் தனர். வித்வத்ஸதஸ் மன்னர்குடி K. R. M. எஸ்டேட் மானேஜிங்டிரஸ்டி ஸ்ரீபால கிருஷ்ண முதலியார் அவர்கள் மன்னர்குடியில் நடத்திக்கொடுத்தார்.

4-4-71 65வது திருநக்ஷத்திரம்

பெங்களூர் ஜயநகர் ஸ்ரீ ஆண்டாள் ஸன்னிதி திருக்கல்யாண மண்டபத்தில் பக்தி சிரத்தையோடு கொண்டாடப் பட்டது.

இவ்வாண்டின் வித்வத் ஸபையும், வேத திவ்யப்ரபந்த பரீக்ஷைகளும் 8-3-71 முதல் 14-3-71 வரை பெங்களூருக்கடுத்த

ஆவலஹள்ளி என்னுமிடத்தில், பெங்களூர் இண்டர்நேஷனல் இன்ட்ஸ்ருமெண்ட்ஸ் லிமிடெட் கம்பெனியின் நிர்வாக இயக்குனரான திருவாளர் N. கிருஷ்ணன் பரந்த எஸ்டேட்டில் நடந்தேறியது. இந்த ஸ்வாமியின் உள்ளத்தின் கனிவை, ஆழத்தை, பாசத்தை, பண்பை, நேர்மையை, எளிமையை பறைசாற்றிப் பாருக்கு உரைப்பது போன்று அமைந்திருந்தது அந்த ஸபை. எல்லாவிதத்தாலும் ஸபையில் அன்வயித்தோரை ஆராதித்த பெருமை எழுத்தில் அடங்காது. ஸபையின் சிலவினைத் தாங்கியதே போல் அவர்களுடைய ஆசிகளையும் பெற்றுக் கொண்டார்.

யஜுர் வேதத்தில் மன்னர்குடி கனபாடி தேசிகாச்சாரியர், காஞ்சீ ராமஸ்வாமி சர்மா, பெரியமாமா இவர்களைப் பரீக்ஷகர்களாகவும், ரிக்வேதத்தில் தர்மக்ஞ ப்ரஹ்மஶ்ரீ M. ராமனுத தீக்ஷிதரையும், ரிக்வேதத்தில் ப்ரஹ்மஶ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்த்ரியாரையும், திவ்யப்ரபந்தத்தில் சித்ரகூடம் ஸ்வாமி, S.S. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமியையும் கொண்ட பரீக்ஷைக்குழு வேதத்தில் 37 வித்வான்களையும், திவ்யப்ரபந்தத்தில் 8 வித்வான்களையும் பரீக்ஷித்து தேர்ச்சி நடத்தியது. ஶ்ரீமதாண்டவன் ஸம்பாவனை செய்து அனுக்ரஹித்தார்.

27-3-71ல் வித்வத் ஸதஸ் ஜயநகர் ஆசிரமத்தில் நடந்தது.

24-3-72 66வது திருநக்ஷத்திரம்.

ஶ்ரீரங்கம் நம் பெரியாண்டவன் ஆசிரமத்தில் கொண்டாடப் பட்டது. ஶ்ரீ பவுண்ட்ரீகபுரம் ஆசிரமத்தை அலங்கரித்திருந்த ஶ்ரீமத்பரமஹம்ஸைத்யாதி விண்ணூற்றங்கரை ஸ்வாமி எழுந்தருளியிருந்து ஶ்ரீமதாண்டவனை ஆசாஸித்தருளினர்.

அறிஞர் மன்றம் (வித்வத் ஸபை) ஶ்ரீபாதுகா வித்யாலயா, ஶ்ரீரங்கத்தில் நடந்தது. சுமார் எண்பது வித்வான்கள் பங்கு கொண்டு பஹுமானம் பெற்றனர்.

19-10-72 மயிலை ஆசிரமத்தில் நியாய சித்தாஞ்சனத்தில் பரீக்ஷை நடந்தது. 5 விஞ்தாள்கள் 3 நாட்கள் நடைபெற்றன. சோதனையில் பரீக்ஷகர்களாக, ஶ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாச்சார் ஸ்வாமி D. T. தாத்தாச்சார் ஸ்வாமி, வில்லிவலம் நாராயணாச்சார் ஸ்வாமி முதலானோர் இருந்தனர்.

திருப்பதி யூனிவர்ஸிடியில் பணிபுரியும் நாவல்பாக்கம் ராமானுஜாச்சாரியர் முதன்மையாகத் தேறினர்.

10-1-73 வித்வத் ஸதஸ் ஒன்று கூட்டி 19-10-72 அன்று நடந்த நியாயஸித்தாஞ்சனம் என்கிற பரீக்ஷையில் தேறிய ஸ்வாமிகளுக்கு மணிஆர்டர் மூலம் ஸம்பாவனை அனுப்பிய செய்தியை வெளியிட்டுப் பின் ஶ்ரீமதாண்டவன் ஆசிரமத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட மூதறிஞர், வழக்கறிஞர் ஶ்ரீ உவே R. கோபாலஸ்வாமி அய்யங்காரைக் கொண்டு பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிய திருப்பதியில் பணிபுரியும் மத்திய அரசு கேந்த்ர வித்யா பீடத்தில் சம்ஸ்கிருதப் பேராசிரியாய் பணியாற்றும் நாவல்பாக்கம் இராமானுஜாச்சார்யருக்கு ரூ 1000/- பணமுடிப்பும். ஒரு சால்வையும் ஸம்பாவனை செய்தருளினர்.

மும்மதத்து வித்வான்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

11-4-73 67வது திருநக்ஷத்திரம்

சென்னை மயிலை தேசிகாச்சாரி ரோடில் இருக்கும் பாதுகாச்ரமத்தில் கொண்டாடப் பட்டது. ஶ்ரீ உவே உத்தமூர் ஸ்வாமி, மதுராந்தகம் ஸ்வாமி, மைசூரைச் சார்ந்த E. S. வரதாச்சார், ஸரகூர் வரதாச்சார், முதலானோர் ஸபையை அலங்கரித்திருந்தனர்.

பரகாலமடத்தில் தத்காலம் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஶ்ரீமத் பரம ஹம்ஸைத்யாதி அபிநவராமானுஜ ப்ரஹ்ம தந்த்ர பரகால யதீந்த்ர மஹா தேசிகன் எழுந்தருளி வேதாந்த விசாரங்களிலும், வாக்யார்த்தங்களிலும் கலந்து கொண்டு ஆநந்தித்தார்.



ஆசார்யனும் மஹாவித்வான்களும்—ஸ்ரீ தேசிக பவனம், மயிலை

பரகால மடம் ஸ்வாமியுடன் மயிலையில் வித்வத் ஸதஸ்





வித்வத் ஸதஸ்ஸில் ஸ்ரீ உவே D. T. ஸ்வாமி



கார்ப்பங்காடு வெங்கடாசாரியர்



ாஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. பிரதிவாதி
யங்கரம் அண்ணங்கராச்சாரியர், வேளுக்குடி வரதாச்சாரியர்

சுமார் 100 வித்வான்களோடும் இந்த இரண்டு முனித்ரய மஹான்களுடனும் சேர்ந்த சேர்த்தி கண்ணுக்கு விருந்தளித்தது மாத்திரமன்றி காதுகளுக்கும் வேண்டிய உணவு அளித்தது.

25-3-74 68வது திருநக்ஷத்திரம்

பெங்களூர் ஜயநகர் ஆசிரமத்தில் நடந்தது. ஸதஸ்ஸுடன் உடுப்பி அஷ்ட (எட்டு) மடங்களில் ஒரு மடத்து அதிபதி வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தார்.

23-3-75 69வது திருநக்ஷத்திரம்

பங்களூர் ஜயநகர் ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணமண்டபத்தில் நடந்தது.

ஸ்ரீ ரங்கநாத பாதுகா வித்யாலயாவின் காப்பாளரும், T. V. S. சஹோதரர்களுள் ஒருவரும், நமது ஆசிரமத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் தன் துணைவியுடன் காலமெல்லாம் பணியாற்றிய ஸ்ரீ T.S. கிருஷ்ணமறைவு காரணமாக வித்வத்ஸதஸ் கூட்டப்படவில்லை. ஸம்பாவனைகள் யதாக்ரமம் வித்வான்களைத் தேடிச்சென்றன.

9-4-76. 70வது திருநக்ஷத்திரம்

பம்பாய் செம்பூர் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்த தேசிக பவனத்தில் கொண்டாடப்பட்டது. வித்வத்ஸதஸ்ஸும் உண்டு.

ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ அஹோபில மட எம்பெருமான்களுக்கென ரூ1001/- திருநக்ஷத்திர தினத்தன்று ஸமர்ப்பித்தார்.

30-3-77. 71வது திருநக்ஷத்திரம்

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் கொண்டாடப் பட்டது. சுமார் 500 வித்வான்களுக்கும் அந்தணர்களுக்கும் திருப்பரியட்டங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன.

வித்வத்ஸதஸ் சின்னஞ்ச்ரமத்தில் நடந்தது.

20-3-78 பெரியாச்ரமம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமதாண்டவனது எழுபத்திரண்டாவது திருநக்ஷத்திரம் கொண்டாடப்பட்டது.

3-5-78 முதல் 11-5-78 வரை பெரியாச்ரமத்தில் நடந்த வித்வத் ஸதஸ் ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்திரத்தன்று முடிவுற்றது.

இந்த திருநக்ஷத்திரத்தின்போது 5½ பவுன் எடையுள்ள பவுன் சங்கிலியை ஒரு பெண்மணி மனமுவந்து ஆசிரமத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ வேணுகோபாலனுக்கு ஆபரணமாக்கியபோது கண்டவர்கள் மெய்சிலிர்த்தனர்.

6-4-77 73வது திருநக்ஷத்திரம்

மதுரையில் சொக்கிகுளம் ஜவஹர்ரோடு 9ம் நெ திருமாளிகை (T. S. சீனிவாசன் பங்களா)யில் கொண்டாடப் பட்டது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழுகின்ற கொடைவள்ளல்-தர்மத்தின் உரு-தர்மத்தின் காவலன், ஸ்ரீமான் T. S. ராஜம் ஸ்வாமி திடீர் அஸௌக்யத்தால் நலிவு பெற்று மதுரையில் தங்கியிருந்த ஸமயம் அவரது அஸௌக்யம் ஸ்ரீமதாண்டவனது அனுக்ரஹ ப்ரார்த்தனைகளால் தீர்ந்துபோய் ஆரோக்யம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இத்திருநக்ஷத்திரம் கீழ்நத்ததில் கொண்டாட வேண்டுமென்று அந்த இடத்து சிஷ்யர்களுள் முக்கியமாக ஸ்ரீ N. கிருஷ்ணன் வேண்டுகோள் ஸ்ரீமதாண்டவனிடம் விடுத்தாரெனினும், பின் ஆசிரமத்தின் வளர்ச்சியிலே அனைத்துமீந்து அனவரதமும் அதனைக் கட்டிக்காக்கின்ற தடஸ்தர்களுள் அக்ரேஸரராய் அன்பே உருவான திருமேனி ஸ்ரீ T. S. ராஜம் பல்லாண்டாய் வாழவேண்டுமென தன்னுடைய ஆவலை மனத்தில் கொண்டு ஸ்ரீமதாண்டவனுடைய திருநக்ஷத்திரத்தை மதுரையிலேயே கொண்டாடுவதின் மூலம் அம்மூதறிஞர் ஸ்ரீ T. S. R. திருமேனிப் பாங்குதன்னில் தனக்குள்ள அக்கரையை வெளிப்படுத்தி, மதுரைக்குத்தானும் வந்து இருவரையும் வணங்கி வாழ்த்துப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஸதஸ் 9-8-79 முதல் 11-8-79 வரை பெங்களூர் ஆசிரமத்தில் நடந்தது.

26-3-80. 74வது திருநக்ஷத்திரம்

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் கொண்டாடப் பட்டது. இவ்வருஷத்திய வித்வத் ஸதஸ் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டியதொன்று.

ஸ்ரீமதஹோபிலமடம் அழகிய சிங்கர் தலைமைதாங்கி பல வித்வான்களோடு ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திற்குச் சொந்தமானவடக்குச் சித்திர வீதியிலுள்ள தேசிகன் ஸன்னிதியில் நடந்திக்கொடுத்தார்.

ஸ்ரீ :

திவ்யதேச மங்களாசாஸனங்கள்

ச்ரிய:பதி நாராயணனுடைய திவ்யாயுதங்களின் அம்சங்களாகவும், நித்யஸூரிகளுடைய அம்சங்களாகவும், எம்பெருமானுடைய திருவுள்ளத்தை அனுஸரித்து, பகவத் பக்தியில் அதிகமாய் ஈடுபட்டு, இவ்வுலகத்தோரை நல்வழியில் நடத்தி பகவானை அடைவிப்பதற்காக ''மயர்வற மதி நலம்'' அருளப்பெற்ற ஆழ்வார்களால் அவர்களது அருளிச்செயல்கள் மூலம் மங்களாசாஸனம் செய்யப்பட்ட (பாடப்பட்ட) க்ஷேத்திரங்களே திவ்யதேசங்களெனப் பெருமைபெற்றன.

அவ்வண்ணமே ஆசார்ய வள்ளல்களான ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார் முதலானோர் அவதரித்த புனித பூமிகளை அந்தந்த ஆசார்யர்களின் திருநாமங்களைச் சொல்லி அவர்களுடைய ''அவதாரஸ்தலங்கள்'' எனப் புகழ்படப் பேசுகிறோம்.

எம்பெருமானார் முதலிய ஆசார்யர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலங்களை ஆசார்யர்கள் உகந்த க்ஷேத்ரங்கள் எனவும் கௌரவிக்கப் பட்டு தொழுதற்குரியன.

அத்தகைய திவ்யதேசங்களை ஸ்ரீமதாண்டவன் அவதாரம் செய்த பின்னர் மங்களாசாஸனம் செய்தவாறு இப்பகுதியில் தொகுத்து அளிக்கப்படுகிறது.

25-4-64 சோளிங்கபுரம் நருஸிம்மன் மங்களாசாஸனம்.

ஸ்ரீமதாண்டவன் அவதாரம் செய்தருளின பிறகு உகந்தருளின திவ்யதேசங்களில் உறையும் எம்பெருமான்களின் மங்களாசாஸனத்தில் பெருத்த ஆவலுடையவராயும், ஸ்ரீமத் தெம்பரையாண்டவனது பரிபூர்ணமான நியமனத்தை முன்னிட்டு சிஷ்யார் ஜனத்தை மனத்தில் கொண்டும், நிலையானமுறையில் பரம்பரை வளரவகை செய்ய போதிய நிதி கூடச் சேர்க்கத் திருவுள்ளங்கொண்டும் ஸஞ்சாரம் மேற்கொண்டபோது, திருவரங்கத்துறையும் இன்துணைவன் நம்பெருமாளையும், ஸ்ரீரங்கநாச்சியாரையும் கண்ணீர் கைகளால் இரைக்கும்படி தொழுதார். ஸம்ப்ரதாயம் தழைத்தோங்க ஆசார்யன் அன்புக்கட்டளையைப் புறக்கணிக்க இயலாத தொரு சூழ்நிலையில் ஸாஹஸமான கார்யமாய் எழில்பீடம் ஏறியுள்ள தனக்கு ஸ்ரீபாதுசார்யர்களோடு திவ்யதம்பதிளும் துணைநிற்க வேண்டுமென்று மனமுருகி யாசித்தார்.

அவ்வாறு வழிபட்டு வருகையில் 1963 முதல் 1964 வரை மங்களாசாஸனம் செய்தருளிய திவ்யதேசங்கள் பின்வருமாறு;

தஞ்சை மாமணிக்கோவில்; மணிக்குன்றன்; நீலமேகப்பெருமாள்; திருக்கண்ணமங்கை; நாகை அழகியார் (ஸௌந்தரராஜப்பெருமான்); திருக்கண்ணபுரம்; சிறுபுலியூர்; தலைச்சங்காடு; பார்த்தன் பள்ளி; திருநாங்கூர் (ஏழுதிவ்ய தேசங்கள்); திருநகரி; காழிச் சிராம விண்ணகரம் (சீர்காழி); திருச்சித்ரகூடம் (சிதம்பரம்); திருவஹீந்திரபுரம்; திருக்கோவிலூர்; காஞ்சியில் திவ்யதேசங்கள்: திருப்புட்குழி; ஆகியவை.

11-5-64 திருச்சானூர் (திருச்சுகனூர்) அலர்மேல் மங்கைத் தாயார் மங்களாசாஸனம்.

12-5-64 திருவேங்கடமுடையான் மங்களாசாஸனம்; முதல்கிரேட் மரியாதை. திருவேங்கடநாதன் அலர்மேல் மங்கை. ஆனந்த விமானம், ஸ்வாமி புஷ்கரிணி.

18-5-64 காஞ்சீ தேவாதிராஜன் மங்களாசாஸனம்.

27-7-64 திருநீர்மலை நீர்வண்ணன் மங்களாசாஸனம்.

24-9-64 திருவல்லிக்கேணி பார்த்த ஸாரதி மயிலை பேயாழ்வார் ஸன்னிதி.

28-9-64 திருவிடந்தை பூமி பிராட்டி ஸமேத பூரவாஹமூர்த்தி, கோமளவல்லித் தாயார் ஸமேத நித்ய கல்யாண ஸ்வாமி.

15-10-64 திருவஹீந்திரபுரம் தெய்வ நாயகன். ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்.

10-2-65 திருக்கோவலூர் எம்பெரு மான்-திருவிக்ரமன்.

11-3-65 பெங்களூர் எண்டோமெண்ட கமிஷன் மெமோ நெ. B 3 GL *11009/64-65/27-2-65* தேதியிட்ட உத்திரவுப்படி மேல்கோட்டை, செல்லபிள்ளை திரு நாராயணன் - யதுகிரி - உடையவர் - மண வாள மாமுனிகள்-பரமபத நாதன்-நரஸிம்ஹ மூர்த்தி ஸ்வாமிதேசிகன் மங்களாசாஸனம். முதல் கிரேட் மரியாதை ஏராளமான பொருள் செலவில் விசேஷ திருமஞ்சனம். உடையவர் திருமேனியை ஸ்ரீமதாண்டவன் ஏகாந்தமாக அனுபவித்தது.

14-3-66 திருக்குடந்தை கோமளவல்லி நாயிகாஸமேத அபர்யாப்தாம்ருதன்என்கிற ஆராவமுதன். ஸ்ரீமதாண்டவன் அவதாரத் திற்கு முன்பு கைங்கர்யம் செய்துகந்த திவ்ய தேசம். துரீயாச்ரம ஸ்வீகாரத்திற்குப் பிறகு முதன் முதலில் மங்களாசாஸனம்.

22-3-66 நாதன் கோயில் என்கிற நந்தி புரவிண்ணகரம் ஸ்ரீ சம்பகவல்லித் தாயார், ஜகன்னாதப்பெருமாள்.

23-3-66 திருவெள்ளியங்குடி கோலவில்லி ராமன் ஸ்ரீசிங்காரவல்லி நாச்சியார்.

4-4-66 திருக்குடந்தை சக்கரத்தாழ் வான்.

5-4-66 ஆதனூர் ஆண்டளுக்கும் ஐயன், திருமண்டங்குடி ஸ்ரீரங்கனுதன் தொண்டரடிப்படி ஆழ்வார் ஸன்னிதி (அவதார ஸ்தலம்)

5-4-66 புள்ளம்பூதங்குடி (பூதபுரி) ஹேமாப்ஜநாயகீ-வல்விலிராமன்.

6-4-66 கபித்தலம் பராசர க்ஷேத்திரம்; கஜேந்திர புஷ்கரணிக் கரையில் கோயில் கொண்டுள்ள கஜேந்திர வரதராஜன் ஆதிமூலப் பெருமாள். ஆற்றங்கரை கண் ணன்.

7-4-66 கூடலூர் அம்பரீஷ சக்ர வர்த்திக்கு ப்ரத்யக்ஷம். புஷ்பவல்லித் தாயார்-ஜகத்ரக்ஷகன்.

9-4-66 திருக்குடந்தையிலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள **நாச்சியார் கோயில்** ஸ்ரீநிவாசன் மஞ்சுளவல்லித் தாயார். திருமங்கை மன்னன் மடலூர்ந்த திவ்ய தேசம். ஸ்ரீமதாண்டவனுக்கு அத்யாபக மிருசு உள்ள இடம்.

9-4-66 திருச்சேறை நாச்சியார் கோவிலிலிருந்து குடவாசல் பஸ் மார்க் கத்தில் 2 கிலோ மீட்டர் தூரமுள்ளது. பஞ்ச ஸாரம் அதாவது ஐந்து உயர்தன் மைகள் கொண்ட திவ்யதேசம்.

ஸாரக்ஷேத்திரம்-ஸாரபுஷ்கரணி-
ஸாரநாதன்-ஸாரநாயகி-
ஸாரவிமானம் கொண்டது.

அர்ச்சாவிக்ரஹத்தில் தவழ்ந்த கண்ணன் ஆச்சரியமான ஸேவை. ''மாமதலாய்'' என்று கலியன் மங்களாசாஸனம்.

22-4-66 திருமையம்: புதுக்கோட்டை யிலிருந்து மதுரை போகும் வழி ஸத்ய நாயகித்தாயார் - ஸத்யகிரீசன். மூலவர் சயன திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சி.

23-4-66 திருக்கோட்டியூர் திருமா மகள் நாச்சியார்-ஸௌம்யநாராயணப் பெருமாள். அபூர்வமான அஷ்டாங்க விமானம்.

சிறப்பு: கல்வெட்டுக்கள், வாயிற்கால் கோபுரப் படிக்கட்டுகள் விமானம் முதலிய

இடங்களில் ஸ்ரீபகவத் இராமானுஜர் தாம் கற்ற திருமந்திரத்தின் உண்மைப் பொருள் களை பிறருக்கு உபதேசித்த முறைகள் காணப்படுகின்றன.

எம்பெருமானார் ஆசார்யன் திருக்கோட்டியூர் நம்பியின் அவதாரஸ்தலத்தையும் சேர்த்து மங்களாசாஸனம்.

25-4-66 திருமோகூர் மேகலாநாச்சியார்; காளமேகப் பெருமாள்.

3-5-66 திருமாலிருஞ்சோலை கள்ளழகர் மங்களாசாஸனம்.

மதுரையில் கள்ளர் கோலத்தில் திருப்பல்லக்கில் புதூர் அருகிலுள்ள நாயுடு மண்டபத்தில்.

4-5-66 வண்டியூர்; வீரராகவப் பெருமாள் ஸன்னிதி, குதிரை வாஹனத்தில்.

5-5-66 இராயர் மண்டபத்தில்

(1) திருமஞ்சன முத்தங்கி ஸேவை
(2) தசாவதார ஸேவை
(3) அமிர்த கலசத்துடன் மோஹினி அவதார ஸேவை.

6-5-66 மைசூர் மண்டபத்தில் திருமஞ்சனமாகி பல்லக்கில் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம்.

7-5-66 புஷ்ப பல்லக்கில்.

25-5-66 (திருநெல்வேலி மாவட்டம்) **திருப்புளியங்குடி.** இது தூத்துக்குடி - ஸ்ரீவைகுண்டம் மார்க்கத்திலுள்ளது. நவதிருப்பதிகளுள் ஒன்று. வானமாமலை ஜீயர் சொந்தக் கோயில். காய்சினவேந்தன் - பத்மோத்பவ நாச்சியார்.

25-5-66 வரகுணமங்கை வரகுணவல்லி - விஜயாஸனப் பெருமாள். நவதிருப்பதியுள் ஒன்று.

25-5-66 ஸ்ரீவைகுண்டம் வைகுந்தவல்லி - கள்ளர்பிரான் திருவேங்கடமுடையான் ஸேவை நவ திருப்பதியுள் ஒன்று.

25-5-66 பெருங்குளம் திருக்குளந்தை எனப் பெயருமுண்டு பாலவல்லித்தாயார்-மாயக் கூத்தன், நவதிருப்பதியுள் ஒன்று

27-5-66 தென் திருப்பேரை நவதிருப்பதியுள் ஒன்று. குழைக்காது வல்லி, மகர நெடுங்குழைக்காதர். கருடன் விலகியிருக்கும் இடம். நவதிருப்பதியுள் ஒன்று.

28-5-66 ஆழ்வார் திருநகரி திருக்குருகூர்) ஆதிநாதன் - பொலிந்து நின்ற பிரான் ஆதிநாயகி; நவதிருப்பதியுள் ஒன்று.

28-5-66 — 2-6-66 ஆழ்வார் உத்ஸவம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம்

4-6-66 வானமாமலை (ஸ்ரீ வரமங்கை) நாங்குனேரி, பத்மாக்ஷித்தாயார் - தெய்வநாயகன் (அம்புஜலோசனன்).

5-6-66 திருக்குறுங்குடி சுந்தர பரிபூர்ணன் (நம்பி) குறுங்குடிவல்லி.

9-6-66 மலைமேல் நம்பி.

10-6-66 ஊர்கோடியிலுள்ள வயலுள் அமைந்திருக்கும் கலியனது பிருந்தாவனம்.

24-6-66 ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் - ஆண்டாள் அவதாரஸ்தலம் வடபத்ரசாயி (ரங்கமன்னார்), ஆண்டாள் (கோதா), ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளும் போது ஆண்டாள் ஹம்ஸவாஹனத்திலும் ரங்கமன்னார் கருடவாஹனத்திலுல் ஸேவை ஸாதித்தார்கள்.

26-6-66 திருத்தண்கால் உஷா ப்ரத்யும்னன் ஸேவை.

2-10-66 திருமாலிருஞ்சோலை காலை 4 மணி அளவில் நூபுர கங்கைக்கு எழுந்தருளி சிஷ்யர்களுக்குத் தானே ஸங்கல்பம் செய்து வைத்துப் பிறகு ஏற்பட்ட ஒரு ஆச்சர்யமான நிகழ்ச்சி. காலை பாதுகாராதன ஸமயத்தில், சாளக்ராமமூர்த்திகளுக்கு தனித்தனியே உபசாரங்கள் ஸமர்ப்பிக்கும் போது ஸ்வாமிக்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எதையோ தேடுவது போன்ற ஒரு நிலை. எம்பெருமான்களை எண்ணி எண்ணிப் பார்த்தும் ஸ்ரீமதாண்டவனுக்கு நிம்மதி இல்லை. ஒரு சாளக்ராமமூர்த்தியைக் காணவில்லை. அதைத் தேடி மறுபடியும் அருவியை அணுகினர்.

சிலம்பாறு என்னும் அருவி ஒரு வெண்கீற்றுப் போல் 100 அடி தூரத்திலிருந்து



திருக்குறுங்குடி நம்பி அனுக்ரஹம்



சூடிக்கொடுத்த நாச்சியார் அனுக்ரஹம்

திருக்குறுங்குடி



திருநாராயணபுரம்



ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் திவ்ய தேசத்து எம்பெருமான்கள் அனுக்ரஹம்



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவிலில் வரவேற்பு



திருப்பதிக்குச் சிஷ்யர்களுடன்



திருச்சானூரில் வரவேற்பு



ஸ்ரீ அழகர் ஸேவை



மேல்கோட்டையில்
கோவில் மரியாதையுடன் வரவேற்பு



ஸ்ரீமதஹோபிலத்தில்
சிஷ்யர்களுடன்



பெங்களூர் ஸ்ரீ ஆண்டாள் கல்யாண
மண்டபத்தில் ஸ்ரீமதஹோபில மடம்
ஸ்ரீமாலோல லக்ஷ்மீந்ருஸிம்மனுடு
எம்பெருமான்கள் மங்களாசாஸனம்



திருச்சானூரில் ஸ்ரீஸூக்த யாகம்



பம்பாய் ஸ்ரீலக்ஷ்மீ நாராயணன் கோவில்



மயிலை ஆச்ரமத்தில்
பரகாலமடம் ஸ்வாமியுடன்
ஸ்ரீ ஹயக்ரீவன் மங்களாசாஸனம்.



ஆழ்வாரும், மதுரகவிகளும்



திருமங்கை மன்னன்

விழுகிறது. அதை கல்தொட்டி ஒன்றில் விழ வைத்து அதினின்றும் குழாய்கள் மூலம் வெளியே தண்ணீரை விழச் செய்கிறார்கள். அதில் ஜனங்கள் புனித நீராட்டம் செய்கின்றனர்.

ஸ்ரீமதாண்டவனுக்கு நேரே விழும் அருவிக்கருகேயே கதவைத் திறந்துவிட்டார்கள். தான் ஆராதிக்கும் சாளக்ராம மூர்த்திகளை கைத்தலத்திலேயே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் சிலம்பாற்றின் அருவியிலேயே நேரிடையாக திருமஞ்சனமாட்டினார் ஸ்ரீமதாண்டவன். அருவி விழும் கல்தொட்டி சுமார் 10′ × 5′ × 5′ கொள்ளளவுள்ளது. சிறு தடாகம் போன்றது. ஸ்ரீமதாண்டவன் கைத்தலத்தோடு திருமஞ்சனம் கண்டருளிய மத்ஸ்ய மூர்த்திக்குத் தீர்த்தத்தில் திளைத்தவுடன் துள்ளலில் ஆவல் போலும்! அருவியின் வேகத்தில் கைத்தலத்தினின்றும் தண்ணீருக்குள் நழுவிய மத்ஸ்யமூர்த்தியை ஸ்ரீமதாண்டவன் பார்க்கவில்லை. பாதுகாராதன ஸமயத்தில்தான் கவனித்தார். அதனால்தான் பரபரப்பு ஏற்பட்டு அருவியின் அருகே வந்து தொட்டிக்குள் துழாவினார். கூட இருந்தவர்களுக்கு ஸ்ரீமதாண்டவன் எதைத் தேடுகிறார் என்று புரியாமல், கூட இருந்தோர் அனைவர் முகத்திலும் வியப்புப் குறிகள் தோன்றின! யாருக்கும் ஸ்ரீமதாண்டவனிடம் கேட்டுத் தெளியத் தைரியமில்லை. ஸ்ரீமதாண்டவன் சற்று நின்று நிதானித்து தொட்டியில் விழுகின்ற அருவி தொட்டியின் நீரை மேலும் கீழுமாய்ப் புரட்டுகின்ற பொழுது அதன் நடுவே அந்த மத்ஸ்ய மூர்த்தி நீந்துகின்றதைக் கண்டு அதனை முயற்சியோடுக் கைப்பற்றிப் பேருவகை கொண்டுநடந்ததை அனைவருக்கும் விரித்துரைத்தார்.

மற்றுமொரு அபூர்வமான நிகழ்ச்சி

ஸ்ரீபகவத் ராமானுஜன் ஆண்டாள் பாரித்தபடியே திருமாலிருஞ்சோலை மணாளனுக்கு நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் ஸமர்ப்பித்து தன்னிறைவு கொண்டதுபோல ஸ்ரீமதாண்டவனும் 100 பாத்திரங்களில் அக்காரவடிசில் ஸமர்ப்பித்து ஸுந்தரபாஹுவின் திருமுகத்தைக் கண்டு பேருவகையும் கொண்டார் ஸ்ரீமதாண்டவன்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஆடிப்பூர நன்னாளிலெல்லாம் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் இன்று வரைக்குறைவில்லாமல் நூறு தடா அக்காரவடிசில் வேணுகோபாலன் கண்டருளுகிறார்.

3-10-66 நூபுரகங்கையினின்றும் தீர்த்தம் கொணர்ந்து அழகனுக்குத் திருமஞ்சனம்.

25-10-66 அழகன் ஸேவை.

26-10-66 தைலக் காப்பு தீர்த்தவாரி உத்ஸவத்தில் சிஷ்யர்களுடன் அழகன் ஸேவை.

1-11-66 திருப்புல்லாணி மங்களாசாஸனம். ஜகன்னுதன் - பத்மாஸனித் தாயார்.

மலைநாட்டுத் திருப்பதிகள்

31-1-67 திருநாவாய் (கேரளா ஆரம்பம்).

30-1-67 திருவித்துவக்கோடு

6-2-67 திருமூழிக்களம் ஸ்ரீசூக்தி நாதன் - மதுரவேணித் தாயார்.

8-2-67 திருகாட்கரை: கபில தீர்த்தத்தில் நீராடி விட்டு அப்பன் - வாத்ஸல்ய வல்லித்தாயார் வாமன மூர்த்தி - பெருஞ் செல்வநாயகி என்றும் அழைப்பர். நம்பூத்ரி அர்ச்சகர். (மேச்சாந்த நாராயண நம்பூத்ரி).

13-2-67 திருக்கடித்தானம் செங்கணூச்சேரி சமீபம் அற்புத நாராயணன் கற்பகவல்லித் தாயார். உத்ஸவர்-சீவேலி.

வீற்றிருந்த திருக்கோலத்தில் கருட வாஹனத்தில் இடது பக்கத்தில் மஹாலக்ஷ்மியுடன் அழகான ஸேவை. தீர்த்தக்கரையில் யோக நருஸிம்மன் ஸேவை, நம்பூத்ரி அர்ச்சகர் (மேச்சாந்த வாஸுதேவன் நம்பூத்ரி).

13-2-67 திருவல்லவாழ் அலங்கார தேவன்; கோலபிரான் என்கிற திருநாமத்தோடு அதி மோஹன ஸேவை. தாயார் வாத்ஸல்யா தேவி. இந்த எம்பெருமான் வடிவத்தைக் கண்டு பெண்கள் மோஹித்து நிலை கலங்கி விடுவதால் இங்கே கொடிமரத்திற்கப்பால் பெண்கள் அனுமதிக்கப்

படுவதில்லை. ஒரு ஆண்டில் இரண்டு நாட்களே அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீமதாண்டவன் மல்கு நீர்க் கண்களோடு மையலுற்ற மனத்தினராய் தொழுதேத்த, எம்பெருமானைப்பற்றி திருமங்கை மன்னன் பாசுரங்களான ''தந்தை தாய் மக்களே'' என்று தொடங்கும் பதிகம் ஸ்ரீமதாண்டவன் திருவாக்குகளில் ப்ரவஹிக்கையில் அவரது கண்களினின்றும் கங்கை ப்ரவஹித்தது. வைராக்யமாநிதி என்பதனைக் கண்டவர்களே அதிர்ஷ்டசாலிகள்.

14-2-67 திருவண்வண்டூர் கமலநாதன் (பாம்பணையப்பன்) கமலவல்லித் தாயார். ஸமீபத்தில் கிடைத்த கண்ணனுக்குத் தனிக் கோயில். அர்ச்சகர் கோவிந்தன் நம்பூத்ரி.

14-2-67 திருச்சிற்றாறு ; (திருச்செங்குன்னூர்) இமையவரப்பன் - செங்கமலவல்லித் தாயார். சங்கு சக்ரம் இடவலமாக ஸேவை ஸாதிக்கும் கிருஷ்ணனையும் மங்களாசாஸனம்.

15-2-67 திருவாறன்விளை. திருக்குறளப்பன் என்று ஆழ்வாரால் மங்களாசாஸனம் பெற்ற பார்த்தஸாரதி. தர்ம புத்திரரால் பிரதிஷ்டை. பெரிய கோவில். பெருமாளை மூங்கிலால் கட்டப்பட்ட சிறு கப்பல் போன்ற வாஹனத்தில் எழுந்தருளப் பண்ணி பம்பா ஆற்றின் நீரோட்டத்தில் தெப்பம் கண்டருளப் பண்ணி ஒரு நாள் உத்ஸவம் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். -ஆறம்முளை' எனச் சிறப்புப் பெயர் கொண்ட திவ்ய தேசம்.

பத்மாஸனித் தாயார்.

18-2-67 வர்கலை (ஜனார்தனப் பெருமாள்) வஞ்சிக்குளம் அருவியில் நீராடி நின்றதிருக்கோலத்தில் ஜனார்த்தனப் பெருமாள் மங்களாசாஸனம். பிறகு சிஷ்யர்களோடு சமுத்திரக் கரைக்கு எழுந்தருளி ஸ்ரீமதாண்டவனே ஸங்கல்பம் ஸாதித்தருளி நீராட்டம் தானும் கண்டு தமரையும் செய்விப்பித்த இடம்.

20-2-67 திருவனந்தபுரம் தங்கத்தாலான உயர்ந்த கொடிக் கம்பமும், அதன் பின்னே ஹேமகூடவிமானம் ஓங்கி நிற்கிறது. சிற்பங்கள் நிறைந்த மண்டபங்கள் உள்ளன. கோயிலைச் சுற்றி உள்ள வீதிகள் விசாலமாயும் அதனைச் சுற்றி சோலைகளும், வாபிகளும், மாடமாளிகைகளும், திட்டிவாசல்களும் காட்சியளிக்கின்றன.

கிழக்கு முகமான மூன்று வாயில்களால் ஸேவிக்கும்படி ஆதிசேஷனுகிய திருப்பள்ளி மெத்தையில் பரந்து பெருமான் கிடக்கும் ஸேவை. அநந்தபத்மநாபன் என்னும் திருநாமம். கர்பூரார்த்தியில் ஸேவார்த்திகள்அருகில் இருந்து ஸேவிக்க முடியாது.

முதல் வாசல் (திருமுடி வாசல்)

ஆதிசேஷனது ஏழு திருமுடிகளும், அதற்கு மேல் ஆதவனும் வணங்கி நிற்க கிரீடதாரியாய் வடகலைத் திருமண் பிரகாசிக்க, புன்முறுவல் பூத்த இதழுடன் தாமரைக் கண்களும் கொண்ட திருமுகமண்டலமும் திருச்செவிகளில் ஒளி வீசும் மகரகுண்டலங்களும், தங்க வளையல்களுடன் கூடிய நீண்ட வலக்கை ஆதிசேஷன் மடியின் மீது அமைந்து, மணிக்கட்டும் நகங்களும் பொலியும் திருக்கரத்தால் அடிவாரத்திலிருக்கும் சிவலிங்கத்திற்கு அபயமளிக்கும் காட்சியும் கூடிய ஸேவை.

இடது கையை திருமுடிவரை முடக்கிக் கரத்தில் பத்மத்துடன் காட்சியளிக்கிறார்.

நடுவாசல் அனந்த பத்மநாபன் திருமார்பில் ரத்னமயமான ஹாரங்கள், மாலைகள், பதக்கங்கள், முப்புரி நூல் இவைகள் பொலிந்து நிற்கின்றன. நாபி (தொப்புள்) கமலத்திலிருந்து உயர்ந்த கொடியின் மேலுள்ள தாமரையில் நான்முகனும், அருகில் கின்னர, கிம்புருஷ, அஷ்டவஸுக்கள், நாரதர், ஸனக ஸனந்தனாதிகள், சுகர், கருடன் முதலானோர் தொழுது நிற்கும்காட்சியைக் காண்கிறோம்.

அதற்குக் கீழே உபயநாச்சிமார்கள் பக்கமிருக்க சதுர்புஜங்களுடன் சொக்கத் தங்கத் திலான திவ்ய மங்கள விக்ரஹம் உத்ஸவமூர்த்தி காணலாம். பட்டுப் பீதாம்பரங்களுடன், முக்தாஹாரங்களுடன் துல்யமான திருமாலையுடன் இயற்கை யெழில் குன்றாது ஸேவை ஸாதிக்கிறார். அதற்கு வலத்தில் வடக்கு முகமாக ஸ்ரீதேவியும், பக்கத்தில்

திவாகர முனியும் தெற்குமுகமாக பூதேவியும் பகவானை அஞ்சலிஹஸ்தர்களாக ஸேவித்து கொண்டிருக்கிறார்கள்.

3-வது வாசல் பத்மனுபனின் இரண்டு திருவடிகள் தாமரையின் மேல் மிகப் பொலிவுடன் ஸேவையாகிறது. மேலே சந்திரனும் கீழே பொதிகை முனி வ்யாஸரும் கைகூப்பிய வண்ணம் ஸேவை ஸாதிக் கிறார்கள்.

மற்றுமுள்ள சுற்றுக் கோவில்களையும் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் செய் தருளினார்.

23-2-67 திருவாட்டாறு கேசவப் பெருமாள் - பத்மினி தேவி.

25-2-67 திருவண்பரிசாரம் கேரளா-நாகர்கோவில் ஊருக்கு சமீபம் திரு வாழ்மார்பன் - கமலவல்லித் தாயார். நம்மாழ்வார் அர்ச்சையில் சிறுவராய் ஸேவை ஸாதிக்குமிடம். நம்மாழ்வார் திருத் தாயார் பிறந்தகம். அழகாய புஷ்கரணீ-ரம்யமான திவ்ய தேசம்-நம்பூதிரி அர்ச்சகர்.

5-3-67 திருக்கோளூர் (நவ திருப்பதி களுள் ஒன்று வைத்தமாநிதி - பல்லவநாயகி (திருக்கோளூர் நாச்சியார்)

7-4-67 ஸ்ரீரங்கம் ஸ்ரீஅழகிய மண வாளன் மங்களாசாஸனம், கோயில் மரி யாதைகள் எதிர்கொள்ள அம்மா மண்டபத் துறையிலிருந்து ஸ்ரீமதாண்டவனை ஊர்வல மாக அழைத்து வந்து அரங்க நகரப்பன் அரங்கநாயகி மங்களாசாஸனம்.

27-9-67 திருவிண்ணகர் ஸன்னிதி ஒப்பிலா அப்பன் பூமிதேவித் தாயார். எம் பெருமான் தளிகையில் உப்பு கிடையாது. பிராத்தனைத் தலம். கலியன் பாசுரங்களில் பல எம்பெருமான் திவ்ய தேசங்களுக்கு ''அரிமேய'', ''வைகுண்ட'', ''நந்திபுர'' விண்ணகரம் என்று காணும் அடை மொழித் தொடரில்லாது இதனை திருவிண்ணகர் என்றே அனுஸந்தானம் பண்ணப் பெற்ற பெருமையுடையது.

22-10-67 நாச்சியார்கோயில்

ஸ்ரீநிவாஸன் வஞ்சுளவல்லி. ஸ்ரீதேசிகன் உத்சவ சாத்துமுறைக்கு எழுந்தருளி முதல் தீர்த்த மரியாதை பெற்று திருக் குடந்தை திரும்பி எழுந்தருளினார்.

9-11-67 தேரழுந்தூர் மேல் திசை நின்ற அம்மான் ஆமருவியப்பன் மங்களா சாஸனம் செங்கமலவல்லித் தாயார்.

நம்மாண்டவன் என்றும், தேரழுந்தூர் ஆண்டவன் என்றும் நம் ஸத்ஸம்ப்ரதாய ஸதாசார்ய பீடத்தை அலங்கரித்திருந்த ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனது அவதாரஸ்தலம்.

12-11-67 திருவிந்தளூர் பரிமளரங்கன் (ஸுகந்தவன நாதன்) ''வாழ்ந்தே போம் நீரே'' என்று கலியன் சூளுரை உரைத்த பெருமாள். பஞ்சரங்கங்களுள் ஒன்று. துலாஸ்நானம் விசேஷம்.

16-11-67 திருச்சித்திரகூடம் (சிதம் பரம்) கோவிந்தராஜன் புண்டரீகவல்லி: திருவீதியில் புறப்பாடு கண்டருளும்போது கலியன் பாசுரங்களை அனுஸந்தித்துக் கொண்டு ஸேவை.

9-12-67 காஞ்சி பெருந் தேவித் தாயார் - பேரருளாளப் பெருமாள்.

12-12-67 தீபப்ரகாசர் அஷ்டபுஜப் பெருமாள் யதோக்தகாரி-மங்களாசாஸனம்.

18-6-68 பாண்டவதூதர் ஸன்னிதி. தேப்பெருமாள்.

26-3-70 ஸ்ரீரங்கம் வட திருக்காவிரி யில் நதீப்ரவாஹ சமீபம் பெரிய பந்த லில் **திருவெள்ளறை** பெருமாள் புண்டரீ காக்ஷன் - பங்கயச் செல்வி மங்களாசாஸ னம்.

27-3-70 திருப்பேர்நகர் பெருமாள்.

28-3-70 திருக்கண்டியூர் - ஹரசாப விமோசனப் பெருமாள் கமலவல்லி நாச்சி யார்.

29-3-70. வெண்ணெற்றங்கரை

தஞ்சை மாமணிக்கோயில்

நீலமேகன்

மணிக்குன்றன் பெருமான்கள்.

17-2-73. மாசிமகத்தை முன்னிட்டு சென்னை மயிலை ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திலிருந்து ஸ்ரீமதாண்டவன் ஸமுத்ரஸ்னானத்திற்கு எழுந்தருளியாயிற்று. திருவல்லிக்கேணித் துறையில் ஸ்ரீபார்த்தஸாரதி கருட வாஹனத்தில் எழுந்தருளி வந்து நின்று ஸேவை ஸாதித்தார். ஸ்ரீமதாண்டவனும் கடலில் நீராட்டம் கண்டருளினர். சென்னையிலுள்ள பல சிஷ்யர்கள் அனுயாத்ரையாய் ஸ்ரீமதாண்டவனுடன் சென்று கடல் நீராடினர்.

28-9-73. திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிப் பெருமாள் மங்களாசாசனம்.

26-10-73. சோளசிம்ஹபுரம்

நரஸிம்மன். ஸ்ரீமதாண்டவன் முன்ஸஞ்சாரத்தில் ஒன்பது ஆண்டுகளுக்கு முன் மங்களாசாஸனம் செய்த பெருமாள். பெரியமலை - சின்னமலை இரண்டுக்கும் எழுந்தருளி ஸ்ரீநரஸிம்மன் - சிறியதிருவடி - சக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீரங்கநாதன் மங்களாசாஸனம். நான்குநாள் அங்கேயே முகாமிட்டிருந்து ஸேவை செய்தருளினர்.

18-11-73. அஹோபிலம் மங்களாசாஸனம்.

''தெய்வமல்லால் செல்ல வொண்ணு என்றும்'', ''சென்று காண்டற்கரிய கோயில்'' என்றும், ''தினைத்தனையும் செல்ல வொண்ணு'' என்றும் இப்படிப் பல விதத்தாலும் சிரமப்பட்டு ஸேவிக்க வேண்டும் திருப்பதி என்று கலியன் பாசுரமிட்டருளிய சிங்கவேள்குன்றத்தை ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம். யாத்ரையில் துவ்வூர் - சாகலமர்ரி இவை வழியே ஆலகட்டா போகாமல் குறுக்கு வழியிலே ஸ்ரீ அஹோபிலம் எழுந்தருளினர். முத்ரகர்த்தா ஸ்ரீ லக்ஷ்மிநாராயண அய்யங்கார் பூர்ண கும்பத்தோடு வரவேற்றார். அன்றிரவு பெருமாள் - தாயார் மங்களாசாஸனம்.

மறுநாள் ஸ்ரீமதாண்டவன் ப்ரஹ்லாத வரதன், ஜ்வாலா நரஸிம்மன், உத்ஸவர், உபயநாச்சிமார்கள், அம்ருதவல்லித் தாயார் எல்லோருக்கும் ஸ்நபனம் செய்வித்து முத்ரைகள் ஸமர்ப்பித்தும் விசேஷமாக திருமஞ்சனம் கண்டருளப் பண்ணி ஸேவித்தார்.

ஸ்ரீமதஹோபிலமடம் 44வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹாதேசிகன் நிர்மாணித்த இராஜ கோபுரத்தையும் அதன் கண் காணும் மிக அழகிய பிம்பங்களையும் கண்ணுற்று ஆவியுள்குளிர அகங்குழைந்தார்.

3வது நாள் அஹோபிலம் சென்று ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனையும், செஞ்சு லக்ஷ்மியையும் ஸேவித்தருளினர். சென்னையிலிருந்தும் பங்களூரிலிருந்தும் பல சிஷ்யர்கள் வந்திருந்தனர்.

மூன்று ஆராதகர்கள் மாறி மாறி மிகுந்த பக்தி - சிரத்தை ஆசாரம் இவைகளுடன் அங்கு எம்பெருமானை ஆராதிக்கின்றனர்.

7-3-74 திருமலையில் மங்களாசாஸனம்

ஹைதராபாத்திலிருந்து மதனப் பள்ளி வழியாக வந்த ஸ்ரீமதாண்டவன் திருவேங்கடமுடையான் வரவேற்ற காட்சி வரலாறு காணாதது. கோவில் அதிகாரிகள் ஸ்ரீ சடாரியை முன்னிறுத்தி ஸகல மரியாதையுடன் நம் ஸ்வாமியை வரவேற்றனர். பெருமிதமும் புன்முறுவலும் முகத்தில் ஒளி வீச கதிரவன் போல் காட்சி தந்தார் ஸ்ரீமதாண்டவன்.

ஒருவாரம் திருமலையில் தங்கிருந்து திருமலையப்பனை, திருவேங்கடமுடையானை பல ப்ரகாரத்தாலும், பல அவஸரங்களிலும் ஸேவித்தார். ஒவ்வொரு நாளும் அவன் கண்டருளும் ஆராதன க்ரமங்களையெல்லாம் அந்தரங்கமாக அனுபவித்தருளினர்.

தெப்போற்ஸவம், புஷ்பாலங்காரம் இவைகளிலெல்லாம் திருவேங்கடமுடையான்



திருவிடந்தை எம்பெருமான்



நாமக்கல் ஆஞ்ஜனேயர்



திருவிண்ணகர்ப்பன் (ஸ்ரீ உப்பிலியப்பன்)



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி மங்களாசாஸனம்



காஞ்சியில் திருநக்ஷத்ரநாளன்று
ஸ்ரீ தேவப்பெருமாள்
மங்களாசாஸனம்



ஸெகண்டராபாத்தில் வரவேற்பு



மயிலேலயில் மத்திய அரசு நீர்ப்பாசன மந்திரிக்கு வரவேற்பு



ஸ்ரீபுரத்தில் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோவில் மரியாதை





புதுவையில் அரசு சார்பில் தலைமைக் காரியதரிசி வரவேற்புரை



திருக்குடந்தையில் வரவேற்பு

வடிவழகை அனுபவித்தார். கர்பக்ருஹத்தில் குலசேகரப் படிக்குள்ளேயிருந்து கொண்டு திருமஞ்சனம் பாலபிஷேகம் முதல் முடிவு வரை கண்டனுபவித்தார். ''காரார் திருமேனி காணுமளவும் போய் சீரார் திருவேங்கடமே'' என்று திருமடலில் கலியன் அனுஸந்தித்து அனுபவித்த திருமேனியன்றே! ஸ்ரீமதாண்டவன் இவ்வனுபவத்தில் ''தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே'' என்கிற வேதவாக்யத்தை நினைவு கூர்ந்தார்.

ஆராதகர்கள் பெருமாளுடைய திருமுடி, திருவபிஷேகம், திருக்காதுகள், ஆழி சங்கேந்தும் தடக்கைகள், திருமார்வில் ''அகலகில்லேன்'' என்றுறையும் பெரிய பிராட்டியார் திருவரை, திருவடிகள், கடிஹஸ்தம் வைகுண்டஹஸ்தம், இவைகளைத் தனித்தனியே ஸேவை பண்ணி வைத்தார்கள். திருவாபரணங்கள் ஸமர்ப்பித்த பின்பும் ஸேவித்தாயிற்று. என்றுமே மறக்கவொண்ணுத ''நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்றும் நீங்காத திருமேனியின் அழகு ''தேஜஸாம் ராசிமூர்ஜிதம்'' என்று ஸ்ரீமதாண்டவன் அனுபவித்தாயிற்று.

''நின்ற வேங்கடம் நீணிலத்துள்ளது சென்று தேவர்கள் கை தொழுவார்களே'' என்கிற பாசுரம் நினைவில் வர அவ்வளவு பெருமை கொண்ட எம் பெருமானை தாம் அருகிருந்து அண்டினவர் அல்லல்கள் அகலவேண்டி பிரார்த்திக்கும்படி தனக்கு ஸேவிக்க ப்ராப்தமாயிற்றே என்று நினைந்துருகி, அவனது இந்த பரமக்ருபைக்கு ''என் நன்றி செய்தேன் நான் என் கண்ணில் நிகழ்வதுவே'' என்று தனது நன்றிப் பெருக்கை தன் கண்ணநீர்களால் காட்டியருளினார் நம் நிதியான ஸ்ரீமதாண்டவன்.

மறுநாள் விச்வரூபத்தில் தெளிவாகிய தேவனைத் தேசுடைச் செம்மல் வணங்கி வழிபட்டு வந்த வழியே திரும்பியாயிற்று.

14-7-75. திருநின்றவூர் பக்தவத்சலன் மங்களாசாஸனம்

மதராஸிலிருந்து திருச்சானூர் எழுந்தருளுகிற வழியில் திருநின்றவூர் எழுந்தருளி, ''நின்றவூர் நித்திலத் தொத்தை'' என்று திருமங்கை மன்னன் மங்களாசாஸனம் பண்ணின திவ்யதேசத்திற்கு எழுந்தருளி வருணதீர்த்தம் அருகே உத்பல விமானத்தில் கோயில் கொண்டிருக்கும் பக்தவச்ஸலனையும் - தாயாரையும் மங்களாசாஸனம் செய்தருளினார்.

16-7-75. ''எவ்வுள் கிடந்தானே'' என்று கலியனும், மற்றும் திருமழிசை ஆழ்வாரும் மங்களாசாஸனம் செய்திருக்கும் **''திருவெவ்வளூர்''** என்கிற திவ்ய தேசத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீமதஹோபிலமடம் சொந்தக் கோயில். ஸன்னிதி நிர்வாஹகர்கள் ஸன்னிதி வீதியில் தேரடிவரை ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து ஸ்ரீமதாண்டவனை ஸ்ரீ சடகோபன் ஸாதித்து ஸகல மரியாதைகளுடன் அழைத்து மங்களாசாஸனம் செய்வித்தார்கள்.

20-7-75. திருச்சுகனூர் (திருச்சானூர்)

அலர்மேலுமங்கை மங்களாசாஸனம்.

16-9-75. கீழ்திருப்பதி கோவிந்தராஜன் புண்டரீகவல்லித்தாயார்.

1-10-75 — 4-10-75 திருமலையில் திருவேங்கடமுடையான் மங்களாசாஸனம்.

5-10-75 — 10-10-75 திருச்சானூர், பத்மாவதீ பிராட்டியை நவராத்திரி மஹோத்சவத்தில் மங்களாசாஸனம்.

10-10-75 — 11-10-75 திருவேங்கடமுடையானை நாச்சியார் திருக்கோலத்தில் திருமலையில் ப்ரஹ்மோத்சவ ஐந்தாம் உத்ஸவத்தில் மங்களாசாஸனம். திருவிருத்த சேவையை அனுபவித்தபடி. கருடஸேவை.

17-6-76. மதுராவில் (வடமதுரை)

கிருஷ்ணன் திருவவதாரஸ்தலத்திற்குச் சென்று ஸேவித்து, பெரியாழ்வார் அனுஸந்தித்த ''வண்ணமாடங்கள் சூழ்'' என்கிற பதிகத்தை நெஞ்சுருகிக் கண்ணீர் சோர ஸ்ரீமதாண்டவன் அனுஸந்தானம் செய்தார். இதற்கு எதிரில் வஸுதேவன், தேவகியை கம்ஸன் சிறை வைத்த இடத்தையும் கடாக்ஷித்தாயிற்று. கிருஷ்ணவதார ஓவியங்கள் சிறப்புமிக்கவை. பின்பு

துவாரகாநாத் கோயிலுக்குச் சென்று கிருஷ்ணனுக்குச் செய்யும் சைத்யோப சாரங்கள் ஸேவித்தார். கம்ஸவதம் ஆனதும் கண்ணன் சிரமபரிஹாரம் செய்து கொண்டதான ''விச்ராந்திகாட்'' சென்று யமுனை நதியில் நீராட்டம் கண்டருளினர். கைங்கர்ய பரர்கள் அருகிலுள்ள கோகுலம் சென்று ஸேவித்து வந்தனர். இதர ஜாதிகள் கலப்பில்லாமல் யாதவர்களிருக்குமிடம். வழி காண்பிக்கப் பண்டாக்கள் உண்டு.

அன்று மாலை 4.30 மணி அளவில் பிருந்தாவனுக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியாயிற்று.

பிருந்தாவனத்தில் பிர்லாமந்திர்

வெள்ளைப் பளிங்கு கற்களால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயண மூர்த்தி, கருடாழ்வார், சலவைக் கற்களாலான ப்ராகாரங்கள், சுவர்களில் அவதார சித்ரங்கள் கொண்ட சிறிய கோயில். பசுமாடமும் பசுக்களும் இங்கு ஏராளம்.

ஸ்ரீமதாண்டவன் பிருந்தாவனத்திற்கு எழுந்தருளி கோபிகா வஸ்த்ராபஹரணம், காளிங்க நர்த்தனம், யமுனைநதி, ஸேவாகஞ்ச் முதலிய இடங்களை ஸேவித்தார்.

ஸேவாகஞ்ச் கட்டிடத்தில் 7 மணிக்கு மேல் யாத்ரீகர்களை அனுமதிப்பதில்லை. இங்கு இந்த நேரத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும் ராதையும் யோகத்திலிருப்பதாக ஐதிகம்.

கண்ணன் ''சீரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி, ஆராத வெண் ணெய் விழுங்கி''- என்கிறபடியே வெண் ணெயுண்டு கையை ஒரு மரத்தில் துடைக்கவும், மரத்தில் இவனது திருக் கை பட்ட இடம் சாளக்ராம மூர்த்தியாய் ஆகிவிட்ட வரலாறு கொண்ட மரத் தையும் மங்களாசாஸனம் செய்தருளினர். அருகிலுள்ள மற்றுமொரு கட்டிடத்தில் கண்ணன் ஸேவை அத்யத்புதம். ஒரே சலவைக்கல் கொண்டு நிர்மாணம் செய் திருக்கும் கொடி போன்ற தூண்கள் அதிசயமானவை.

பிறகு ஏழு பெரிய மதில்களும் ப்ராகாரங்கள் கொண்டதுமான பெரிய கோவிலுக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந் தருளியாயிற்று. ஸ்ரீமதாண்டவன் எழுந் தருளியதும் பரம்பரை டிரஸ்டி ஸ்ரீ ஸ்ரீரங்கச்சாரிஸ்வாமியும் ஸ்ரீவில்லிபுத்தூர், வானமாமலையைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ கைங்கர்யபரர்கள் பூர்ண கும்ப சத்ர சாமர பேரீ ம்ருதங்க தாள வாத்யங்களோடும், வேத கோஷங்களோடும் வரவேற்றுக் கோவிலுக்கு வலமாக எழுந்தருளப் பண்ணினர்கள்.

மாலை கோவில் புஷ்கரணியில் நீராட்டம் கண்டருளி கோவிலுக்குள் ப்ரவேசித்து முதலில் கண்ணுடியறையைக் கண்டார். கண்ணுடிக் குமிழிகள், மரக்கதவுகள், கண்ணுடி மஞ்சம் இவைகளைக் கடாக் ஷித்துக் குளிர்ந்தார். பிறகு ஸுதர்சனழ்வான், ஸ்ரீனிவாசன் ஸன்னிதிகளை ஸேவித்து விட்டு, ஸ்ரீ ஆண்டாள், ரங்கமன்னர், பெரிய திருவடி இவர்களை மங்களா சாஸனம் செய்தருளினர்.

மூல விக்ரஹங்கள் சாளக்ராம சிலைகள், கோயிலுக் குள்ளேயே யாத்ரீகர்கள் தங்கு வதற்குப் பல கட்டிடங்களுண்டு. இந்தக் கோவில் கட்டி 125 ஆண்டுகள் ஆகின்றன.

13—3—76. தேவப்ரயாகை பெரியாழ் வார் மங்களாசாஸனம் செய்தருளியது. சக்ரவர்த்தித் திருமகன் - பிராட்டி மங்களாசாஸனம். விபரம் பிறிதொரு இடத்தில் காண்க.

21—9—76, 27—9—76 திருப்பிருதி எம்பெருமான் மங்களாசாஸனம்.

22-9-76. பத்ரிகாச்சிரமம் எம்பெருமான் மங்களாசாஸனம்.

இத் திவ்ய தேச மங்களாசாஸனத்தில் ஸ்ரீமதாண்டவனது நெடுநாளைய அவா பூர்த்தியாகிறது.

இது இமயமலையில் கிழக்கு நோக்கி கங்கையை நோக்கி அமைந்திருக்கிறது. ரோடிற்கு மேல் சுமார் 10' உயரத்தில் கட்டப் பட்டிருக்கிறது.

படிகளை ஏறிச்சென்றதும் நடுவில் தங்க முலாம் பூசப்பட்ட ஒரு தூண், உயரே

ஒரு பெரிய மணியும் இருக்கின்றன. இவை எல்லாப் பாதுகாப்புப் படையினரால் ஞாபகார்த்தமாக அளிக்கப்பட்டவை.

அடுத்த வாயில் தாண்டிச் சென்றதும் சிலா உருவத்தில் பெரிய திருவடி (கருடன்) எம்பெருமானை நோக்கி எழுந்தருளியிருக்கிறார். பிறகு உள்ளே தெற்கு ப்ராகாரத்தில் முதலில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி, ஸன்னிதியில் சாளக்ராமசிலா ரூபத்தில் ஸேவை சாதிக்கிறாள். திருநாமம் ஸ்ரீ ''அரவிந்தவல்லித் தாயார்'' என்பதாம்.

தாயார் ஸன்னிதிக்கு எதிரிலுள்ள வழியாய் பெருமாள் ஸன்னிதிக்குச் செல்ல வேண்டும். கர்ப்பக்ருஹத்தில் பெருமாள் விமானத்தின் கீழ் நடுவில் சாளக்ராம சிலையில் திருமுகம் மட்டும் ஸேவையாகி எழுந்தருளியிருக்கிறார். திருநாமம் பதரீநாராயணன். முழுத்திருமேனியைத் திருமஞ்சன சமயத்தில்தான் ஸேவிக்க முடியும்.

பெருமாளுக்கு வலது பக்கத்தில் கருடன் நின்ற திருக்கோலத்திலும், அதற்கடுத்தாற்போல் குபேரன் பெரிய திருமுகமும், பெருமாளுக்கு இடது பக்கத்தில் ஸ்ரீ பத்ரீநாராயணன் - திவ்ய மங்கள விக்ரஹம் உபயநாச்சிமார்களுடன் நின்ற திருக்கோலத்தில் சுமார் 3' உயரத்தில் உற்சவ மூர்த்தியாய் ஸேவை ஸாதிக்கிறார்.

அதற்கடுத்து உத்தவர் ஸேவை ஸாதிக்கிறார். இவர் கண்ணன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது அவரால் நியமிக்கப்பட்டு பதரீகாச்ரமம் வந்ததாக வரலாறு கூறுவது. அவருக்குக் கீழே நாரத பகவான். அதற்கடுத்து வடக்குக் கோடியில் சிலா ரூபத்தில் ''நர நாராயண'' இரண்டு மூர்த்திகள் நின்ற கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்கள். பனிக் காலத்தில் திருக்கோயில் மூடும்போது, உத்ஸவ விக்ரஹ மூர்த்திகளான பதரீ நாராயணன், உத்தவர், நாரதர் கருடன் இவர்களை பாண்டுகேஷ்வருக்கு எழுந்தருளப் பண்ணுகிறார்கள்.

பெருமாளை ஸேவித்துவிட்டுத் தெற்குப் ப்ராகாரம் வந்தால் ஆதிசங்கரர் ஸன்னிதியைக் காணலாம். இந்த பிம்பம் வெள்ளை சலவைக் கல்லில் வீற்றிருந்த திருக்கோலத்தில் காணப்பெறுகிறது. பக்கத்திலேயே ஸ்ரீபாஷ்யகாரர் விக்ரஹ ரூபத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

சங்கராச்சாரியார் சிலைக்குப் பின்மேடையில் இருக்கும் பதரீ நாராயணன் மூலவரைப்போல் வெள்ளியில் சுமார் 22' உயரத்தில் மிகவும் கம்பீரமாய் சதுர்புஜங்களுடன் (4 கைகளுடன்) பத்மாஸனத்தில் தவக்கோலத்தில் வீற்றிருக்கிறார்.

பிறகு வலமாய் வரும்போது ப்ராகாரத்தின் வடமேற்கு மூலையில் தெற்கு கோலத்தில் வெள்ளை சலவைக் கல்லில் செதுக்கப்பட்ட சிறிய திருவடி (ஆஞ்ஜனேயர்) ஒரு கையில் சஞ்சீவி மலையுடனும், மற்றொரு கையில் கதையுடனும் ஸேவை சாதிக்கிறார். கோவில் மண்டபங்களைக் குளிரிலும் மழையிலும் வீணாகாமல் தகரத்தால் வேயப்பட்ட கூரை காப்பாற்றுகிறது.

திருச்சானூரில் தெப்போற்சவம்

ஆந்திரப்ரதேசத்தில் கடப்பையிலிருந்து திருச்சானூர் சுமார் 138 கி.மீ. தூரத்திலுள்ளது. 27-5-77 கடப்பையிலிருந்து ஸ்ரீமதாண்டவன் திருச்சானூரில் கோயில் கொண்டிருக்கும் அலர்மேல் மங்கைத் தாயாரின் தெப்போத்ஸவத்தின் கடைசி நாளான 1-6-77 அன்று தெப்பத்தில் பிராட்டியை எப்படியும் மங்களாசாஸனம் செய்யவேண்டும் என்கிற பேரவா உந்தித் தள்ள 5 நாட்களில் திருச்சானூர் வேகமாக எழுந்தருளினர். அழகான ஸேவை. தெப்பத்தில் ஜோடனை மிகவும் நேர்த்தியாய் அமைந்திருந்தது. 5 சுற்றுக்கள் தெப்பம் குளத்தில் வந்தது. முதல் இரண்டு சுற்றுகளில் நாதஸ்வர இசையும், பாக்கி 3 சுற்றுக்களில் வேதபாராயண கானமும் நடைபெற்றன.

ஸ்ரீமதாண்டவன் இரவு 7.30 மணிக்கு புஷ்கரணிக் கரைக்கு எழுந்தருளி தெப்பத்தில் தாயாரை மங்களாசாஸனம் செய்தார். தெப்பம் முடிந்தபின் தாயார்

தங்க கருடவாஹனத்தில் புறப்பாடு கண்டருளினபோதும் ஸேவித்தார். தாபம் தீர்ந்தது.

8-6-77. திருமலை திருவேங்கடமுடையான் மங்களாசாஸனம்.

10-6-77. கீழத்திருப்பதி கோவிந்தராஜன்.

14-6-77. திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் கனகவல்லித்தாயார் மங்களாஸாசனம்.

23-1-78. திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிப்பெருமாள்.

10-2-78, 11-2-78 காஞ்சீ பேரருளாளப் பெருமான் - பெருந்தேவித்தாயார் அழகிய சிங்கர், சக்கரத்தாழ்வான்.

11-2-78 மதியம் 3 மணிக்கு **தூப்புல் நிகமாந்த மஹாதேசிகன்**. தீபப்ரகாசர், மரகதவல்லி.

21-2-78. திருவஹீந்திரபுரம் தெய்வநாயகன்.

10-3-78, 11-3-78. திருக்குடந்தை: ஆராவமுதன்.

12-3-78. கபித்தலம் - கண்ணன். ஆதிமூலப்பெருமாள்-பொற்றுமரையாள். மாலை - **திருக்கூடலூர்.**

13-3-78. திருக்கண்டியூர்; ஹரசாப விமோசனப் பெருமாள். கமலவல்லித்தாயார்.

14-3-78. அப்பக்குடத்தான், (கோவிலடி) திருப்பேர் நகர் என்ற திவ்யதேசம். அப்பக்குடத்தின் மேலே திருக்கரத்தை வைத்துக் கொண்டு சயனத்திலிருப்பதால் அப்பக்குடத்தானெனத் திருநாமம். பஞ்சரங்கங்களுள் ஒன்று. காவேரிக் கரையிலுள்ள பஞ்சரங்கங்களுள் ஸ்ரீரங்கப் பட்டிணம் ஒன்று தவிர மற்ற ரங்கங்களுக்கு ஆழ்வார்கள் பாடலுண்டு.

பஞ்சரங்கங்களாவன.

1. ஸ்ரீரங்கம் - நம்பெருமாள்.
2. அப்பக்குடத்தான் - அப்பக்குடத்தான்.
3. திருக்குடந்தை - ஆராவமுதன்.
4. ஸ்ரீரங்கப்பட்டிணம் - ரங்கநாதன்.
5. திருவிந்தளூர் - பரிமளரங்கன்.

15-3-78. ஸ்ரீரங்கம் நம்பெருமாள் ஸேவை. விஜயயாத்ரை முடிந்து பட்டிணப் ப்ரவேசம்.

27-3-78. ஸ்ரீரங்கத்தில் வடதிருக் காவேரியில் எழுந்தருளியிருந்த திருவெள்ளரை பெருமாள் ஸ்ரீ புண்டரீகாக்ஷன்.

8-4-78. யுகாதி பண்டிகை. நம் பெருமாள்.

20-7-78. சாதுர்மாஸ்ய தினம். நம் பெருமாள்.

10-11-78. அப்பக்குடத்தான்.

26-11-78. திருவிண்ணகர் - (தேனுர் விளாகம்) ஒப்பிலியப்பன்.

நாச்சியார் கோவில் ஸ்ரீநிவாசன்.

28-11-78. திருவெள்ளியங்குடி.

இந்த திவ்ய தேசம் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளமுகந்த திவ்யதேசம். திருக்குடந்தையிலிருந்து சென்னைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சோழபுரத்திற்குக் கிழக்கில் 4 கி.மீ. தூரத்தில் ரோடு மார்க்கத்தில் அமைந்துள்ளது. சோழபுரத்தில் இறங்கி வாஹனங்களில் செல்லலாம்.

இந்தத் திவ்யக்ஷேத்ரத்தில் நவக்ரஹ மூர்த்திகளுள் ஒருவரான சுக்கிரன் எம்பெருமானைத் தவம் செய்து தான் வேண்டியவை பெற்றார். சுக்கிரன் இத்தலத்தில் சித்தி பெற்றமையால் திருவெள்ளியங்குடி என்று அழைக்கப் படுகிறது. அதே போல் நான்முகனும் கிழக்கில் ஒரு குளத்தை ஏற்படுத்தி அதில் நீராடி எம்பெருமானை வழிபட்டு ஸித்திபெற்றதால் இத்திவ்ய தேசம் ''திருவெள்ளியங்குடி'' என்று அழைக்கப் படுகிறது. இக்குளத்தில் நீராடினால் எல்லா பாபமும் போகும்.

இத்திருக்கோயில் அசுர சிற்பியான மயனுல் புஷ்கலா வர்த்தக விமானத் துடன் நிர்மாணிக்கப் பட்டது என்று புராணங்கூறும். கோலவில்லிராமன் என் னும் திருநாமம் எம்பெருமானுக்கு வழங்குகிறது. ஸ்தலவிருக்ஷம் செவ்வாழை. கட்டாந்தரையில் ப்ராகாரத்தில் இன்றும் அழியாமல் வாழையடி வாழையாக வளர்ந்து வருகிறது. இவ்வாழைக்குக் கலியன் மங்களாசாஸனம் ஒரு தனிச்சிறப்பு.

''ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் ஊழ்த்து வீழ்ந்தன உண்டு'' என்பது கலியன் திருவாக்கு.

மூலவர் ஆதிசேஷன்மேல் சயனத்திருக் கோலத்திலும் உத்ஸவர் ச்ருங்கார சுந்தர தன்வா (கோலவல்விலியுடையான்) வாகக் காட்சி தருகிறார். மரகதவல்லித்தாயார்-தனிக்கோவில் நாச்சியார்.

ஜீர்ணமாக இருந்த இந்த திவ்ய தேசத்தை ஸ்ரீமதாண்டவன் ரூ 1,50,000 சிலவில் ஜீர்ணோத்தாரணம் செய்து ஸம்ப் ரோக்ஷணத்தை திருக்குடந்தையில் 18வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் எழுந்தருளி யிருந்தபோது ஸம்ப்ரோக்ஷண கமிட்டி ஒன்று அமைத்து அதன் மூலம் செய்து வைத்தார்.

3-2-79. திருமோகூர் - காளமேகன் - மோஹனவல்லி.

ஸ்ரீ :

இதர திவ்யதேச மங்களாசாஸனம்

16-4-64. வாலாஜாபேட்டை ஸ்ரீநிவாஸப் பெருமாள்.

7-5-64. கீழ்திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள்.

24-9-64. மயிலை ஸ்ரீனிவாசன்.

13-11-64. தமிழ்நாடு - தென்னற்காடு மாவட்டம், சிங்கர் கோவில் 16 புயங்க ளோடு நரஸிம்மன் - கனகவல்லித் தாயார்.

14-11-64. புதுவையில் வரதராஜப் பெருமாள்.

16-11-64. ஸ்வர்ணபுரி வரதராஜன்-பெருந்தேவித்தாயார்.

5-12-64. தென்ஆற்காடு மாவட்டம் புதுப்பாளையம் ஸ்ரீ ராஜகோபாலன்.

8-2-65. விழுப்புரம் வைகுண்டப்பெரு மாள்.

20-2-65. — 1-1-66. கிருஷ்ணகிரி. வேணுகோபாலன்.

1-3-65. பெங்களூர் **பரகாலமடம் ஹயக்ரீவன் மங்களாசாஸனம்.**

1-3-65. மல்லேஸ்வரம் க்ருஷ்ணன்; எதிராஜமடம்.

7-3-65. அரவந்தவல்லி ஸமேத அப்ர மேயன்.

7-3-65. பாலகிருஷ்ணன் - மஹூர் கர் நாடகம்.

8-3-65. மத்தூர் - நரஸிம்மன், வரத ராஜன். 24′ உயரமுள்ள கம்பீரமான தோற்றம்.

8-3-65. மாண்ட்யா - ஜனார்தனன்.

9-3-65. துக்தா - நரஸிம்மன்.

21-3-65. கர்நாடகா - தொண்டனூர் வேணுகோபாலன்.

22-3-65. ஸ்ரீரங்கப்பட்டிணம் ஸ்ரீரங்க ஞதன். ஐந்து ரங்கங்களில் ஒன்று. ஆக்கூர் ஆண்டவன், தேரழுந்தூர் ஆண் டவன் மங்களாசாஸனம் செய்த திரு மேனி. கர்நாடகா சரித்திரச் சான்றுகள் உள்ள இடம்.

23-3-65. கொப்பல் சக்ரவர்த்தித் திருமகன்.

24-3-65. பன்னூர் சக்ரவர்த்தித் திருமகன். சரித்திர முக்யத்வம் கொண்ட இடம்.

30-3-65. T. நரஸிப்பூர் நரசிம்மன்.

3-4-65. மைசூர் - தலைக்காடு கீர்த்தி நாராயணமூர்த்தி.

4-4-65. கொள்ளேகாலம் ஸௌம்ய நாராயணன்.

6-4-65. ஸத்யாகாலம் வரதராஜப் பெரு மாள். ஸ்ரீ தூப்புல் நிகமாந்த தேசிகன் பலகாலம் எழுந்தருளியிருந்த இடம்.

7-4-65. சிவஸமுத்ரம் ஜகன்மோஹன ரங்கன்; மத்யரங்கம் எனப்பெயர் பெற்ற ஸ்தலம். இரண்டு காவேரிக் கிடையில் உள்ள புனிதஸ்தலம்.

8-4-65. கர்நாடகா - கிருஷ்ணபுரம் (பெலகவாடி சமீபம்) ஸ்ரீ வேணு கோபாலன்.

22-4-65. **ஹெம்பிகை** (கர்நாடகா) ஸ்ரீ வரதராஜப்பெருமாள் - பெருந்தேவித் தாயார் ஸன்னிதி. **ஸ்ரீமத் பெரியாண்டவன் ஸ்ரீனிவாஸமஹாதேசிகன் நீண்ட நாள் எழுந்தருளியிருந்து மங்களாசாஸனம் செய்த** திவ்ய தேசம்.

25-4-65, 22-11-65. ச்வேதாத்ரி சம்ப காரண்யம் (பிளிகிரி ரங்கன் மலை) 900′ உயரத்தில் திருவேங்கடமுடையான் ஸன்னிதி, ராஸக்ரீடா வாகனத்தில் ஸ்ரீநிவாஸன் ஸேவை. ஸ்ரீமதாண்டவன் பல காலங்கள் இந்தப் பக்கத்தில் சஞ்சாரம் செய்தபோதெல்லாம் உள்ளம் குளிர பல நாட்கள் தங்கியிருக்கும் உன்னத மான இடம், திருமஞ்சன ஸேவை. பார்க்கவ நதிக்கரையில் சுமார் இரண் டாயிரம் ஆண்டு வயதுள்ள எண்பது அடி சுற்றளவுள்ள சம்பகமரத்தை மிகவும் கடினமான பாதையில் நடந்து சென்று கண்டருளியாயிற்று.

30-4-65. மாரேஹபள்ளி ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன்.

சரித்திரப் பெருமை கொண்டது. ஒதுக்குப் புறமான இடம். நாகேந்த்ரன் (அனந்தன்) தினந்தோறும் வந்து ஸேவிப் பதாய் நம்பப்படுகிறது. ஒரு அழகிய கோவிலுக்குரிய லக்ஷணங்களெல்லாம் ஒருங்கே அமைந்திருக்கும் கோவில்.

1-5-65. மத்தூர் - நரஸிம்மன்; ஸ்தன்யபானம் பண்ணும் யசோதை க்ருஷ்ணன்., மலைமேல் வரதராஜன் 24′ உயரம் கம்பீரமான ஸேவை.

2-5-65. கண்வ நிர்மலா நதிக்கரையில் கோயில் கொண்டுள்ள நரஸிம்ம - கோபாலகிருஷ்ண ஸ்ரீராமன் ஸன்னிதி. மஹூர் - மைசூர் பிரதேசம்.

சரித்திர வரலாறு
அப்ரமேயன் ஸன்னிதி:

இவ்வூரை ஆண்ட மன்னன் கிராமப் பாசன வசதிகளுக்கு ஒரு ஏரியை அமைத் தான். கிராமத்தின் வடக்கில் அமைந்த ஏரி மேட்டுப் பாங்கான இடத்திலும் ஊர் பள்ளத்திலும் இருந்ததால் ஒரு சமயம் மழை பொழிந்து ஏரி நிரம்பி உடைந்து ஊருக்கு அபாயம் நேர்ந்த பொழுது அப்ரமேயனை அரசன் துதித்து கன்னட பாஷையில்

"அபற புத்தி மாடிதேனல்லோ அப்ர மேயா" என கதறினன். பெருமாளும் ப்ரத்யக்ஷமாகி **"நான் ஏரி நோடிக் கொள்ளத்தேனே, பயப்பட பேடா"** என்று சொல்லி, சொல்லிய வண்ணமே காத்தான். ஜைன அரசனை அவன் பின் ஸ்ரீவைஷ்ணவனாகி முன்பே உதங்க மஹாராஜாவினால் கட்டப்பட்ட இக் கோவில் நிறைவு பெறுமல் இருந்ததை மண்டப, கருவறை, விமானங்களோடு கட்டிப் பூர்த்தி செய்தான்.

இவ்வரசனது உருவச்சிலை அவனது தர்மபத்னி (விஜயாம்பிகை)யுடன் கோயில் ப்ராகாரத்தில் இன்றும் காணலாம்.

இங்கு செய்யும் பித்ரு கைங்கர்யங்கள் காசியில் செய்கின்ற பலனைப் பெறு வதாய்ச் சொல்லப் படுகிறது.

மழைச்சூர் என்றால் வியாதிகள் அறும் இடம் என்று பொருள். இது காலக்ரமத்தில் மருவி மஹூர் என்றானது என்பர்.

இவ்வூர் எம்பெருமான் அப்ரமேயனை சிவராத்ரியில் ருத்ரன் ஆராதித்து உத் ஸவம் நடத்துவதாக ஐதீகம்.

3-5-65. விடுதியில் இராமபிரான்.

16-6-65. தும்கூர் கர்நாடகா ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன்.

18-6-65, 19-9-65 கடப்பா - கர்நாடகா. ஸ்ரீ லக்ஷ்மீஜானகீ தனன்.

20-6-65. மாயசந்த்ரா - (கர்நாடகம்)- ஹஸ்ஸன் மார்க்கத்திலுள்ளது ஆதிமாதவ கிருஷ்ணன்.

21-6-65. கதப்பள்ளியில் காவேரி ரங்கன்.

22-6-65. துக்கேஹள்ளி நரசிம்மன்.

24-6-65, 4-7-65 சாந்திக்ராமம்- நரசிம்மன்.

26-6-65. ஹாஸன் - ஹனுமார்.

30-6-65. பேலூர் விஜய நாராயணன்

சரித்திர வரலாறு :

எம்பெருமானர் பிரதிஷ்டை செய்த 5 நாராயணன் ஸன்னிதிகளில் இது ஒன்றாகும். அவையாவன.

(1) திருநாராயணபுரம் (மேல் கோட்டை) செல்லநாராயணன் (செல்ல பிள்ளை).

(2) தொண்டனூர் (நம்பிநாராயணன்)

(3) பேலூர் (விஜயநாராயணன்).

(4) தலைக்காடு (கீர்த்தி நாராயணன்).

(5) கதக் (வீரநாராயணன்). இந்த 5 நாராயணன் ஸன்னதிகளையும் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள எம்பெருமான் கேசவன் என்னும் திருநாமமுடையான்.

1-7-65. பங்களூர் ஹாஸன் மார்க்கம். மாதஹள்ளி ஸௌம்யகேசவன்.

4-7-65. சாந்திக்ராமம் - நரஸிம்மன்.

26-9-65. மஸூர் - தேசிகன் ஸன்னிதி.

27-9-65. மத்தூர் நரஸிம்மன்.

30-9-65. பச்சிமவாஹினி; வேணு கோபாலன். கிழக்கு முகமாக ஓடும் காவிரி இங்கு மேற்கு முகமாக ஓடுகிறது. மைசூர் பேரரசர் மும்முடி கிருஷ்ணராஜ வாடியார் தான் கிழக்கு நோக்கிக் காவேரியில் தீர்த்தமாடுவதற்கு இணங்கக் காவேரியை இப்படி திருப்பியதாகக் கூறப்படுகிறது. நீராழி மண்டபத்தின் நடுவில் காவேரி ஓடுகிறது. இராஜ தம்பதிகள் மழையில் நனையாமல் நீராடும் இரமணீயமான மண்டபம்.

1-10-65. மைசூர் - பரகாலமடம்; ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவன். ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன்.

8-10-65 - 12-10-65. மைசூர் அரண்மனை; கோட்டை ஸ்ரீ பூவராஹஸ்வாமி.

15-10-65. ஹம்பாபுரம் - (மைசூர்) லக்ஷ்மீநாராயணன்.

16-10-65. மைசூர் - சாளக்ராமம்; ஸ்ரீ அரவிந்த நாயகீ ஸமேத யோக நரசிம்மன்.

17-10-65. ஸ்ரீமதாண்டவன் சாளக்ராமம் கால்வாய் மேலுள்ள ஸ்ரீ பாஷ்யகாரர் ஸன்னிதிக்கு எழுந்தருளுதல். ஸ்ரீபாஷ்ய காரர் ஸ்ரீ பாததீர்த்த திருக்குளத்தில் ஸ்ரீமதாண்டவன் தன் பொற்கரங்களால் சிஷ்யர்களுக்குத் தீர்த்தப்ரோக்ஷணம் பண்ணி முதலியாண்டானையும் வடுக நம்பியையும் மங்களாஸாசனம் செய்தருளியது.

இதன் சரித்திர வரலாறு

இங்கிருக்கும் ஸ்ரீபாத தீர்த்த திருக்குளம் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீபாத தீர்த்தம் கொண்டது. எம்பெருமானர் தானே நிர்மாணித்த திருக்குளம். இதனை தன் முதல் சீடரும் சஹோதரி குமாரருமான ஸ்ரீ முதலியாண்டானிடமும், சிஷ்யர்களில் மிக உயர்ந்த சிஷ்ய இலக்கணங்கள் பொருந்திய வடுக நம்பியிடமும் ஒப்படைத்து வருங்கால சிஷ்ய பரம்பரைக்கு இதனைப் பயன் படுத்துமாறு எம்பெருமானர் பணித்துப் போந்தார். பின் அவருடைய சிஷ்ய ஸந்ததிகள் இந்தக் கட்டளையை நிறை வேற்றி இப்புனிதமான குளத்தை அசுத்தப்படாமல், இதனைக் காப்பாற்றித் தங்களுக்கீந்த ஸ்ரீ முதலியாண்டான், ஸ்ரீ வடுகநம்பிக்குக் கோயிலெடுத்து அதில் அவர்களை அர்ச்சையில் வடிவுகொடுத்து வழிபடும் தெய்வங்களாக்கினர். இதனை பக்தர்கள் ஸேவித்தும் ஸ்ரீபாத குளத்தில் ஸ்ரீபாத தீர்த்த ப்ரோக்ஷணம், ப்ராசனம் செய்தும் அருள் பெற இதுநாள் வரை மைசூர் அரசு பராமரித்து வருகிறது.

இதனை அசுத்தப்படுத்த முயன்ற ஒருவர் மிகக்கடும் வியாதிக்கு ஆளானார்.

அவ்வியாதி அவர் இந்த திருக்குளத்தின் ஆசார்யர்களை 48 நாள் வழிபட்டுத் தான் தீர்ந்தது. அந்த நபரின் சந்ததி இக்குளத்தை பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வருவதும் இதன் மற்றுமொரு சிறப்பு.

ஸ்ரீமதி ஜானகிபாய் என்கிற நேபாள மாது தனது பணக்கார தசையிலும் இந்த திருக்குளத்தின் மேன்மையில் மயங்கி இதன் கரையில் 20 ஆண்டுகள் வழிபாடு செய்து கொண்டிருக்குமவள் ஸ்ரீமதாண்டவனை ஸேவித்தாள். சபரி இராமனை ஸத்காரம் செய்த நிகழ்ச்சியை ஸ்ரீமதாண்டவன் நினைவு கூரும்படி செய்தது.

18-10-65. மைசூர் சிஞ்சள்கட் இராமன் ஸன்னிதி.

இங்கு 'குளம்' என்று அழைக்கப்படும் நீர்தேங்கிய ஒரு மடு இருக்கிறது. இதை ஸீதை குளிப்பதற்கென்று இராமன் கட்டனைக் கிணங்க இலக்குமணன் ஒரு அம்பு தன்னில் பூமிதன்னைக் குடைந்து ஏற்படுத்தினதாய் ஐதிகம். இதில் நீராடினால் 360 புண்யதீர்த்த நீராட்ட பலன் தர வல்லது என்று கூறுகிறார்கள்.

21-10-65 கிருஷ்ணராஜஸாகர் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன்.

25-10-65 மைசூர் எலிவாலம் ஸ்ரீ வேணுகோபாலன், ஒண்டிக்கொப்பல் ஸ்ரீநிவாஸன்.

13-11-65 மைசூர் பாகாலமடம்- ஸ்ரீஹயக்ரீவன்.

9-12-65 மேல்கோட்டை; மலையில் யோக நரஸிம்மன் மிக ரமணீயமான இடம்.

26-1-66 பங்களூர் துளசித் தோட்டம் கோபாலகிருஷ்ணன்.

29-1-66 பங்களூர் கோட்டை ஸ்ரீனி வாஸப் பெருமாள்.

30-1-66 பங்களூர் கண்டோன்மெண்ட் சக்ரவர்த்தித் திருமகன்.

3-2-66 சித்தஹாலஹள்ளி ஸ்ரீநிவாஸப் பெருமாள்.

4-2-66 ஹோசூர் - சக்ரவர்த்தித் திருமகன்.

25-2-66 சேலம் - கோட்டை ஸ்ரீ ஸௌந்தராஜப் பெருமாள் ஸ்ரீ வரதராஜப் பெருமாள்.

27-2-66 சேலம் - ஏதாபூர் - ஸ்ரீ லக்ஷ்மீ கோபாலன்.

28-2-66 ஆத்தூர் - ப்ரஸந்ந வேங்க டேசன்.

5-3-66 **'ஸ்ரீமுஷ்ணம்;** அம்புஜவல்லீ ஸமேத பூவராஹன். கண்ணுடி யறையைக் கண்டு ஸ்ரீமதாண்டவன் போர உகந்தார். ஸ்வயம் வ்யக்த திவ்யதேசம். 32 கோணங் களில் கண்ணுடியறை நிர்மாணம்.

6-3-66 மன்யுக்ஷேத்ரம் என்று புகழ் பெற்ற ''காட்டுமன்னர்குடி'' என்கிற திவ்ய தேசத்தில் ஸ்ரீ மரகத வல்லீ ஸமேத வீர நாராயணப் பெருமாள் மங்களா சாஸ னத்தோடு பரமாசார்யர்களான ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் (யமுனைத் துறை வன்) அவர்களது அவதாரஸ்தலத்தில் அவர் களையும் சேர்த்து ஸ்ரீமதாண்டவன் மங் களாசாஸனம் செய்த நன்னாள்.

7-3-66 காட்டு மன்னர்குடி அருகி லுள்ள எய்யலூரில் கொள்ளிடத்தில் காட்டுமன்னர்குடி ஸ்ரீ சுந்தர கோபாலன் தீர்த்தவாரி மஹோத்ஸவத்தில் அன்வயித் தாயிற்று.

8-3-66 தஞ்சை மாவட்டம் - காளிக் ராமத்தில் ஸ்ரீநிவாசப் பெருமாள்.

25-3-66 தஞ்சை மாவட்டம் மாங்குடி இராமன்

5-4-66 இன்னம்பூர் ஸ்ரீரங்கநாதன்

5-4-66 திருமண்டங்குடி திவ்ய தேசத் திற்கு அடுத்துள்ள நரசிம்ஹபுரம் எழுந் தருளி அகோபிலமடத்து 25, 26, 28, 37, 38 பட்டங்களை அலங்கரித்திருந்த அழகிய சிங்கர் பிருந்தாவனங்களை தெண்டனிட் டது.

8-4-66 தஞ்சை மாவட்டம்; கிழ வழுத்தூர் அம்பரீஷவரதன் ஜகத்ரக்ஷகன். நெடுந்தெரு கோபாலன்.

11-4-66 மன்னர்குடி-தஞ்சை மாவட்டம் செம்பகாரண்ய க்ஷேத்ரம். ஹேமாப்ஜ நாயகீ, ரக்தாப்ஜ நாயகீ, செங்கமலவல்லித் தாயார், ஸ்ரீ வித்யா ராஜகோபாலன். ஹரித்ராநதி என்கிற புஷ்கரணி மிகவும் விசாலமானது.

13-4-66, 14-4-66 விளக்குடி ராஜ கோபாலன். ஆண்டவன் திருவடிகள் அதிக முடையதும், ஆசார்யர்கள் உகந்து வர்த் தித்த திருக்கிராமம்.

15-4-66 **தென்பிரை** ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவேதாந் ராமானுஜ மஹாதேசிகனுக்கு துரீயாச்ரமம் வழங்கிய தென்பிரையாண்ட வன் ஸ்ரீரங்கனுத மஹாதேசிகன் அவதரித்த திவ்யதேசம். ஸ்ரீமதாண்டவன் பக்தி புரஸ்ஸரமாய் ஸ்ரீருக்குமணி ஸத்யபாமா ஸமேத நவநீத கிருஷ்ணனையும், உத்ஸவ மூர்த்தி காளிங்க நர்த்தனனையும் மங்களா சாஸனம் செய்து தென்பிரையாண்டவன் அவதார ஸ்தலத்தையும் கடாக்ஷித்துத் தெண்டனிட்டது.

மாலை திருமக்கோட்டை ஸ்ரீரங்கனுதன்.

16-4-66 பட்டுக்கோட்டை, ஸ்ரீனிவா ஸப்பெருமாள்.

19-4-66 அறந்தாங்கி, ஸ்ரீசுந்தர ராஜப் பெருமாள் ஸௌந்தரவல்லித் தாயார்.

20-4-66 அரிமளம் சக்ரவர்த்தித் திரு மகன்.

14-5-66 பந்தல்குடி ஸ்ரீஅரவிந்த வல்லீ ஸமேத அழகர் பெருமான்.

3-6-66 கருங்குளம் - திருநெல்வேலி மாவட்டம் (வேங்கடகிரி) மலைமேல் திரு வேங்கட முடையான் - திருமேனி தாரு ரூபம் (மரக்கட்டை) பிரார்த்தனைத் தலம்; பிரஸித்தமானது.

15-6-66 ஸ்ரீ வேதநாராயணன் - கோபாலன் - பாளையங்கோட்டை திரு நெல்வேலி மாவட்டம்.

16-6-66 கீழநத்தம் - திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவேணுகோபாலன்.

19-6-66 திருநெல்வேலி மாவட்டம். அனந்தகிருஷ்ணபுரம் ஸ்ரீ இலக்ஷ்மீ நாராய ணன் - வேணுகோபாலன்.

21-6-66 திருநெல்வேலி அழகிய பாண் டியபுரம்; ஸ்ரீசுந்தரராஜப் பெருமாள்.

25-6-66 முகவைமாவட்டம்; கோவிந்த புரம் திருவேங்கடமுடையான்.

25-6-66 மல்லியில் கிருஷ்ணன்.

16-11-66 திருபுவனம் அடுத்த மண லூரில் ஸ்ரீவேணுகோபாலன்.

25-11-66 அம்மை நாயக்கலூர் கதளி நரஸிம்மன்.

27-11-66 திண்டுக்கல் ஸ்ரீநிவாஸப் பெருமாள்.

29-11-66 பழனி - ஸ்ரீ லக்ஷ்மீநாராய ணன்.

8-2-67 குருவாயூர் - கிருஷ்ணன் (கேரளா) துடக்கம்.

16-2-67 திருச் சிற்றாறு அடுத்துள்ள கிருஷ்ணபுரம் கிருஷ்ணன்.

19-2-67 கழக் கூட்டம்; கேரளா. திரு வனந்தபுரம் சமீபம். இங்கே கலைக்கோட்டு மஹரிஷி தவம் பண்ணிய இடத்துப் பாறை யும் அதனருகில் தானே ஊறும் அருவியும் உள்ளது. மனோரம்யமான ஸ்ரீமதாண்டவன் உகந்த இடம்.

21-2-67 திருவனந்தபுரம் தெற்கு ராஜ வீதியிலுள்ள தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளி குலசேகராழ்வார் திரு நக்ஷத்ர ஸேவை சாத்துமுறையில் அன்வயித்தா யிற்று.

4-3-67 திருநெல்வேலி மாவட்டம் கீழ் நத்தமருகில் பழைய நாரணம்மாள்புரம் என்கிற கிராமத்திற்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி, தாமரபர்ணி ஆற்றங்கரை யிலுள்ள மரமடர்த்தியாயுள்ள தனியான ஒரு காட்டு பிரதேசத்தில் கோயில் கொண் டிருக்கும் காட்டு இராமனை மங்களா சாஸனம் ஸ்ரீமதாண்டவன் செய்தருளினார்.

ஜடாயுவிற்கு ஸேவை ஸாதித்த லக்ஷ்மீ நாராயணன் ஸன்னிதியையும் மங்களா சாஸனம் செய்தாயிற்று. சக்ரவர்த்தித் திருமகன் (இராமன்) தனக்கு பித்ருஸ்தா ஏத்தில் இருந்து பேருபகாரம் செய்தருளிய ஜடாயுவிற்குப் பிள்ளைக்கடனுய்ப் தர்ப்பணம் செய்த இடமென்று இத்தலம் கூறப்படு கிறது. இதில் இராமன் நிவீதி பண்ணிக் கொண்டு (பூணூலை தர்பணம் செய்யும் போது மாற்றிக் கொள்வது போல்) தனித் துக்கோயில் கொண்டுள்ளார்.

நாரணம்மாள்புரத்தில் புதிய அக்ரஹா ரத்தில் உபயநாச்சிமார்களோடு வெங்க டேசப்பெருமாள் ஸேவை. ஜடாயு தீர்த்தம் என்கிற அருவி தாமிரபர்ணியில் கலக் குமிடத்தையும் கடாக்ஷித்தருளினர்.

6-3-67 திருநெல்வேலி மாவட்டம் கிருஷ்ணபுரம் என்கிற இடம். வெங்கடேசப் பெருமாள்; அபூர்வமான கலைச் சிற்பங் கள் அடங்கிய சரித்திர முக்கியத்துவமுடைய கோயில். அழகான கிராமம் - புஷ்கரிணி. புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் பார்வையிலுள்ளது.

11-3-67 சேரன்மா தேவி இராமன் ஸன்னிதி.

13-3-67 காருகுரிச்சி அக்ரஹாரத்தில் ஸ்ரீமதஹோபிலமடம் 41வது பட்டம் அழகிய சிங்கர் பூர்வாச்ரம திருமாளிகைக்கு எழுந்தருளினர்.

13-3-67 அம்பா சமுத்ரம் லக்ஷ்மிநாரா யணப் பெருமாள்

14-3-67 வீரகேரளம்புதூர்; நவநீத கிருஷ்ணன். இங்கே கிருஷ்ணன் இரண்டு கைகளிலும் வெண்ணை வைத்துக் கொண்டு ஸேவை. அபூர்வமானது.

18-3-67 ஸ்ரீவில்லிபுத்தூர் அழகிய சிங்கர் ஸன்னிதி.

31-3-67 சோழவந்தான் (மதுரை மாவட்டம்) ஸ்ரீ இராமன் சன்னிதி

23-3-67 தஞ்சை ஜில்லா திட்டாணி முட்டம் ஸ்ரீவரதராஜப் பெருமாள். ஸ்ரீமத் பெரியாண்டவன் அர்ச்சா விக்ரஹமுள்ள திருக்கோவில்.

8-10-67 திருக்குடந்தை பெரியதெரு வீலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீஆதிவண் சடகோபஸ்வாமி திருநக்ஷத்ர சாத்துமுறை கோஷ்டியை அலங்கரித்தது.

10-10-67 திருக்குடந்தை வராஹப் பெருமாள் ஸன்னிதி வீதி ஸ்ரீசேஷாச்சார் திருமாளிகையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஹயக்ரீவன் ஸன்னிதிக் கெழுந்தருளி ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் திருநக்ஷத்ர பாரா யண கோஷ்டியை அலங்கரித்து அன்வயித்தது

17-10-67 நமது ஆசிரமத்து ஆராத்யப் பெருமாள் ஸ்ரீவேணுகோபாலன் உபய நாச்சிமார்களில் ஸத்யபாமா விக்ரஹ ஜீர் ணோத்தாரணம் பண்ணி அந்த விக்ரஹத்தை திருக்குடந்தை ஆராவமுதாழ்வான் ஸன்னி தியில் எழுந்தருளப் பண்ணி, பிரதிஷ்டை செய்து, சத்ர சாமர வாத்யங்களுடன் பட்டுப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி, பாராயண கோஷ்டிகளுடன் நான்கு பெரிய வீதி வலமாக வந்து, திருக்குடந்தை ஸம்ப்ரதி வைத்யநாதன் தெருவிலிருக்கும் ஆசிரமத்திற்கு எழுந்தருளப்பண்ணி விசே ஷத்திருமஞ்சனம் கண்டருளப் பண்ணி மங் களா சாஸனம் செய்தருளினர் ஸ்ரீமதாண் டவன்.

21-10-67 திருக்குடந்தை தேசிகன் ஸன்னிதியில் ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்ர சாத்து முறை உத்சவத்தில் ஸர்வ திவ்யாபரண பூஷிதரான ஸ்ரீஆராவமுதன் கோமள வல் லித்தாயார் சேர்த்தியை மங்களாசாஸனம் பண்ணி சாத்துமுறை கோஷ்டியில் அன்வயித்து பரமசந்தோஷபரிதராஞர் ஸ்ரீமதாண்டவன்.

22-10-67 நாச்சியார் கோவில் தேசி கன் ஸன்னிதிக்கு எழுந்தருளி ஸ்வாமி தேசி கனுடு ''இன்னிள வஞ்சிக் கொடியுடன்'' நம்பியை மங்களா சாஸனம் செய்தருளி சாத்து முறையில் தீர்த்த மரியாதையான பிறகு இரவே திருக்குடந்தை எழுந் தருளினது.

29-10-67 திருக்குடந்தையில் சக்ர வர்த்தித் திருமகன்.

10-11-67 திருவிந்தளூர் ஸ்ரீதேசிகன்

22-11-67 திருவஹீந்திரபுரம் தெய்வ நாயகன் ஸன்னிதியில் குலசேகராழ்வார் திருநக்ஷத்ர சாத்துமுறையில் முதல் மரியாதை பெற்றது.

25-11-67 திருவஹீந்திரபுரம் ஔடத மலையில் ஹயக்ரீவன்

5-12-67 **ஆக்கூர்** வட ஆற்காடு ஜில்லாவிலிருக்கும், ஆக்கூர் ஆண்டவன் எங்களாண்டவனென்னும் ஸ்ரீநிவாச மஹாதேசிகன் அவதார ஸ்தலமான இவ்வூரில் வேதநாராயணப் பெருமாள் ஸன்னிதி மங்களாசாஸனம்.

22-12-67, 14-6-68 ஸ்ரீபெரும்பூதூரில் புண்யகோடி விமானத்திலுள்ள உடையவர் ஸன்னிதிக் கெழுந்தருளி ஸ்வாமி தேசிகன், நம்மாழ்வார் தேவப் பெருமாள், எதிராஜவல்லித் தாயார் மங்களாசாஸனம். ஸ்ரீபாஷ்யகாரர் அவதார ஸ்தலம்.

உடையவர் பெருமைகள் கொண்ட சிற்பங்கள்

தயிர் கொடுத்த கோபிகா ஸ்திரீக்கு மோக்ஷம். சாலக்கிணறு. வேடுவன் வேடுவிச்சிக்கு ப்ரத்யக்ஷம், திருவேங்கட முடையானுக்குச் சங்கு சக்கரம் ஸமர்ப்பித்தல் திருக்கோட்டியூரில் கோபுரத்தின் மேல் நின்று மந்த்ரோபதேசம் செய்தல்;

க்ருத யுகத்தில் அநந்தனுய், த்ரேதா யுகத்தில் லக்ஷ்மணனுய்; துவாபர யுகத்தில் பலராமனுய், கலியுகத்தில் பாஷ்யகாரராய் ஸேவை ஸாதித்தல், காசிராஜன் மகளுக்கு யாதவப்பிரகாசர் ப்ரஹ்ம ராக்ஷஸை ஓட்டல், மரக்கிளையை முறிக்கும் காட்சி முதலியவைகளே முன் மண்டபத்தில் கடாக்ஷித்தாயிற்று.

24-12-67 பூவிருந்தவல்லி தேவப் பெருமாள், ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கநாதன் ஒருங்கே குடிகொண்டிருக்கும் ஸன்னிதிக்கு எழுந்தருளி அவர்களுடைய கருணையைப் பாராட்டி, வயோதிக காலத்தில் தினமும் காஞ்சி தேவாதி ராஜனே ஸேவித்துவர இயலாத மஹதாசார்யனுக்கு நித்ய சேவை ஸாதித்தருள அங்கே குடிகொண்டு இருக்கும் அவர்களது நீர்மையை நினைவு கூர்ந்து கண்ணீர் சோர ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம்.

15-1-68 சென்னை-மயிலை -ஸ்ரீநிவாசன்

15-1-68 ஸ்ரீபெரும்பூதூரை அடுத்த நீர்வளூரில் லக்ஷ்மீநாராயணன்.

14-2-68 மகாமகத்தில் சமுத்ர ஸ்நானம். வங்கக்கடல் திருவல்லிக்கேணி.

25-2-68 வன போஜன உத்ஸவத்தில் மயிலை ஸ்ரீநிவாஸன்.

20-6-68 பூண்டியை அடுத்த திருப்பாற்கடல் ரங்கநாதன் வெங்கடேசப் பெருமாள்.

22-6-68 பூண்டி-ருக்மணி ஸத்யபாமா ஸமேத வேணுகோபாலன்.

28-6-68 ஆந்திர - சித்தூரை யடுத்த வேங்கடகிரியில் கோதண்டராமன்.

30-6-68 ஆந்திரா - முலபாகல் - பிரார்த்தனை மூர்த்தியான ஆஞ்சனேயர் அவரைச் சுற்றி ஸ்ரீநிவாசன் வரதன், இராமன்.

2-7-68 கர்நாடகா - கோலார் - கோதண்டராமன்.

4-7-68 கர்நாடகா - கல்கொண்டை - ஸ்ரீரங்கநாதன்.

5-7-68 பங்களூர் - கன்டோன்மெண்ட் இராமன்.

6-7-68 சேஷாத்ரிபுரம் - இராமன்.

6-7-68 மல்லேஸ்வரம் - வேணுகோபாலன்.

23-9-68 பங்களூரில் சுபாஷ்நகர் டாங்க் பண்டு ரோடுதனிலுள்ள (Tank Bund Road) பரகாலமடத்திற்கு எழுந்தருளி சீதாலக்ஷ்மண ஹனுமத் ஸமேத ரகுநாத னனுக்கும், ஹயக்ரீவ, நிகமாந்த மஹாதேசிகனுக்கும் நடை பெற்ற திருமஞ்சன திருவாராதனங்களே ஸ்ரீமதாண்டவன் ஸேவை. இரவு வீதி புறப்பாட்டில் கோஷ்டியை அலங்கரித்தாயிற்று.

5-2-69 மைசூர் ஒண்டிக் கொப்பல் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள்.

7-2-69 மைசூர் அஹோபில மடம். ஸ்ரீ லக்ஷ்மீநரசிம்மன்.

7-2-69 மைசூர் பரகால மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனையும் ஆசார்யர்களையும் மங்களாசாஸனம்.

16-2-69 கர்நாடகா - கொஸஹள்ளு-ஸ்ரீநரசிம்மன்.

19-2-69 கர்நாடகா - சாந்திக்ராமம் ஸ்ரீநரசிம்மன்.

22-2-69 கர்நாடகா - மாதஹள்ளி-வரதராஜன்.

22-2-69 கர்நாடக சஞ்சாரத்தில் பேலூர் யதிராஜ மடத்தில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளினார். இங்கு ஒரு தேவஸ்தானமுள்ளது. அதில் ஸௌம்ய நாயகியோடு ஸௌம்ய கேசவப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். இந்தக் கோவிலை நிர்மாணித்தவன் விஷ்ணுவர்த்தனன். பல சித்திர வேலைப் பாடுகளுடனும், மண்டபங்களுடனும் கூடிய இக் கோயிலை கட்டின அரசன் ஜைன மதத்தைத் தழுவியவனாய் இருந்தான். எம்பெருமானார் இவனை ஸ்ரீவைஷ்ணவனாகத் திருத்திப் பணி கொண்டார். கோயில் கட்டி முடித்த பின்னர் மூர்த்திகளின் ப்ரதிஷ்டா வைபவங்களுக்கு வர முடியாத எம்பெருமானார் தன் சிஷ்யனை முதலியாண்டானையிட்டு அக்காரியத்தைப் பூர்த்தி பெறச் செய்தார். ஆகையால் எம்பெருமானார் முதலியாண்டான் இருவரும் இங்கே அர்ச்சையில் ஸேவை ஸாதிக்கிறார்கள். பெருமாள் ஸௌம்ய கேசவப் பெருமாள் பத்மாசுரனை அழிக்க மோஹினி வடிவில் ஸேவை ஸாதிப்பதும், உத்ஸவ மூர்த்திகளுடைய வடிவழகும் சொல்லுக்கு அப்பாற்பட்டது. கண்களுக்கு விருந்து.

24-2-69 ஹிரோமக்களூர் ஸ்ரீ இராமன்

இது பேலூரிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது. இதற்கு மேல் 12 மைல் தூரத்திலுள்ள சக்கரபட்டினம் என்கிற ஊரை ஏகாதசி மாகாத்ம்யத்தில் வரும் ருக்மாங்கதன் ஆண்டான் என்று கூறப்படுகிறது. இங்கு சொல்லப்படும் சம்பவங்களாவன.

ருக்மாங்கதனுக்கு இரண்டு பெண்கள். இவர்களின் விவாஹத்தின் போது இருவருக்கும் இரண்டு ஊர்களைச் சீதனமாகக் கொடுத்தான். மூத்தவளுக்கு கொடுத்தது ஹிரோமக்களூர், இளையவளுக்குக் கொடுத்தது சிக்கமகளூர். இரண்டு ஊர்களுக்கு மிடையே தூரம் ஒரு மைல்தான்.

ஹிரோமக்களூரில் மற்றுமொரு விசேஷம்; ஜனமேஜயராஜா இங்கு தான் 'ஸர்ப யாகம்' செய்ததாகக் கூறுவர். யாகத்தின் யூபஸ்தம்பம் இங்கு காணலாம். இது கல்லாலானது. இந்த கல் தூண் ஒவ்வொரு ஆண்டும் ஒரு சுண்டுவிரல் கனம் வளர்கிறது. அண்மையில் ஒன்பது யோகிகள் சித்தியடைந்த புனிதத்தலமிது. அந்த கல்தூணருகே ஒரு ஸித்த புஷ்கரிணி இருக்கிறது. யாருக்காவது பாம்பு கடித்தால் இந்த குளத்தை மூன்று தரம் வலம் வந்து குளத்தில் மூன்று முறை ஜலத்தைக் கையால் பருகின பிறகு அந்த யாகத்தூணை மூன்று முறை வலம் வந்து தொட்டால் பாம்புகடியால் ஏற்பட்ட விஷம் போய் விடுகிறது. இன்றும் இது நடைகுமுறையிலிருக்கிறது. இங்கு இருக்கும் இராமனை ஜனமேஜயன் பிரதிஷ்டை செய்தது.

4-3-69 கர்நாடகா - பத்ராவதி லக்ஷ்மீ நாராயணன்.

5-3-69 ஷிமோகா - துங்கா நதிக்கரை-இராமன்.

12-3-69 பீரூர் - சக்கரவர்த்தித் திருமகன்.

16-3-69 தேவனூர்-கர்நாடகா - லக்ஷ்மீ நிருஸிம்மன் இலக்ஷ்மீச கவி என்று பிரஸித்தரான கவி கன்னட பாஷையில் மஹாபாரதம் செய்தவர் அவதரித்த ஊர். அவர் இங்குள்ள லக்ஷ்மீகாந்தன் ஸன்னிதியில் பெருமாள் ஸன்னிதியிலேயே ஸாயுஜ்யம் பெற்றதாய் வரலாறு.

23-10-69 மைசூர் மண்ட்யா பச்சிம வாஹனிக்கு ½ மைல் தூரத்தில் கௌதம க்ஷேத்திரத்தில் அகண்ட காவேரியில் நீராட்டமாகி நதிக்கரையில் வேணுகோபாலன் மங்களாசாஸனம்.

துலாமாஸ கைங்கர்ய ஸபா ஒன்று 30 நாளும் ததீயாராதனை செய்கிறது.

27-10-69 மைசூர் - ஹெம்பாபுரம் லக்ஷ்மீநாராயணன்.

28-10-69 சின்சிங்கட்டை இராமன் ஸன்னிதியில் எழுந்தருளியிருக்கும் இராமனுக்குத்திருத்தேர் 31-10-69 ப்ரதிஷ்டை செய்த நாளன்று பங்களூரிலிருந்து இந்த உத்ஸவத்தை நடத்திக்கொடுக்கவே எழுந்தருளியது.

1-11-69 T நர்சிப்பூர் அடுத்து வெங்கடேசன் சத்திரம் ஸ்ரீனிவாசன் மங்களாசாஸனம்.

27-11-69 ஸத்யமங்கலம் கல்யாண வெங்கடேசன் மங்களாசாஸனம், பவானி நதியில் அனுஷ்டானம். இந்த ஊர் மிகச் சிறப்புற்ற ஊர். இங்கே ஸ்வாமி தேசிகன் எழுந்தருளியிருந்தார். இங்கிருந்து 6 மைல் தூரத்திலிருக்கும் ''தனநாயகத்தன் கோட்டை'' என்ற கிராமத்திலுறையும் ஸ்ரீமாதவபெருமாள் ஸன்னிதியில் ஆசார்ய வள்ளல் எழுந்தருளி யிருந்தார். அடுத்து ஓடுகின்ற பவானியாறு ''வாணியாறு'' என்று அக்காலத்தில் அழைக்கப் பெற்றது. அதன் மேல் புறம் அமைந்த இவ்வூரில் வாஸம் செய்த மஹான் இதனைப் பற்றி ''பரமதபங்கம்'' என்கிற தம்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்தவாதநூல் இங்கேயே இயற்றப் பட்டதென்றும், திருவயிந்தை நகரில் இயற்றப்பட்டது என்றும் கூறுவர். இதில் சர்ச்சை உண்டு.

30-11-69 ஈரோடு - நல்லகவுண்டன் பாளையம் ஸ்ரீவேணுகோபாலன். கோபி செட்டி பாளையம் ஸ்ரீநிவாசப் பெருமாள்

1-12-69 ஈரோடு - கருங்கல்பாளையம் ஸ்ரீவேணுகோபாலன்

6-4-70 மன்னர்குடி - ராஜகோபாலன்.

30-6-70 வடலூர் - கோதண்டராமன்.

14-11-70 குணசீலம் - ஸ்ரீநிவாஸப் பெருமாள்

15-11-70 தொட்டியம் - வரதராஜன்

15-11-70 மேல்கோட்டை திருநாராயணபுரம் ஸ்ரீ ஆதிநாயக பெருமாள்.

17-11-70 நாமக்கல்-நாமகிரித் தாயார் ஸமேத நரஸிம்ம பெருமாள்.

14-11-71 மைசூர்-ஸ்ரீரங்கப் பட்டிணம் ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதி ஸ்ரீநிகமாந்த தேசிகன் கந்தவடி உத்ஸவம். பரகால மடத்து ஸ்வாமியுடன் ஸஹயோக ஸேவை.

18-11-71 - 20-11-71 மேல்கோட்டை எழுந்தருளி முன்பே நமது ஆசிரமத்தில் பிரதிஷ்டை செய்த லக்ஷ்மீஹயக்ரீவன், ஸாக்ஷாத் ஸ்வாமியையும் மங்களாசாஸனம் செய்து திருநாராயணன் யதுகிரி நாச்சியார் மலைமேல் நரஸிம்மனையும் ஸேவித்தபடி.

20-11-71 தொண்டனூரில் ஸ்ரீவேணுகோபாலன் - நாராயணன் - உடையவர் மங்களாசாஸனம்.

22-11-71 மைசூர் - பரகாலமடம்-ஸ்ரீஹயக்ரீவன் நிகமாந்த மஹாதேசிகன்.

30-11-71 மைசூர் ஒண்டிக் கொப்பல் ஸ்ரீநிவாசன்.

4-12-71 சோஸலே ஸ்ரீனிவாசன் ஸன்னிதியில் உத்ஸவருடைய விக்ரஹம் திருடு போயிற்று. அதைக் கேட்டவுடன் ஸ்ரீமதாண்டவன் மிக வருந்தி ஒரு மாதத்தில் திருக்குடந்தையில் வார்ப்பிட்டுக் கொடுக்கத் திருவுள்ளம் பற்றி நிறைவேற்றி வைத்தாயிற்று. பிரபு அல்லவா! அவருடைய படைப்பு இச்சாமாத்திரமே!

11-12-71 மைசூர் ஸத்யாகாலம் வரதராஜப் பெருமாள். ஸ்ரீதேசிகன் எழுந்தருளியிருந்த ஜ்ஞான அச்வத்த மரங்களை ஸேவித்துக்கொண்டு சிவசமுத்ரம் எழுந்தருளி ஸ்ரீஜகன்மோஹன ரங்கநாத பெருமாளை மங்களாசாஸனம்.

13-12-71 மாரஹள்ளியில் நரஸிம்மன்

10-2-72 நாமக்கல் - ந்ருஸிம்மன்-நாமகிரித் தாயார்.

10-3-72 திருச்சி கரூர் ரோடில் இருக்கும் கொடியாலம் கிராமத்தில் வேணுகோபாலன் ப்ரஹ்மோத்ஸவத்தில் 4 நாள் எழுந்தருளி மங்களாசாஸனம்

13-5-72 ஸ்ரீ முஷ்ணம் பூவராஹப் பெருமான்.

13-6-72 தென் ஆற்காடு - ஸ்வர்ணபுரி வரதராஜப் பெருமாள்.

19-6-72 மதுராந்தகம் - சக்ரவர்த்தித் திருமகன்.

22-6-72 காஞ்சி தேவாதிராஜன்

26-6-72 சென்னை, மயிலை ஸ்ரீநிவாசன் கருட சேவை.

8-10-72 சென்னை - நங்கநல்லூர் ஹயக்ரீவன்.

5-3-73 சென்னை நங்கநல்லூர் ஹயக்ரீவன்.

23-5-73 காஞ்சி ஸ்ரீ தூப்புல் நிகமாந்த மஹாதேசிகன் ஸன்னிதியில் ஸ்ரீமதாண்டவனுக்கு மரியாதையுடன் ஆசார்யவள்ள லுடைய பஹுமானமாக விலையுயர்ந்த பொன்னுடையுடன் வரவேற்பு. ஸ்ரீதாசரதி ஸ்வாமியோடு ஸ்ரீதேசிகன் மங்களாசாஸனம்.

3-6-73 ஸ்ரீமதாண்டவன் மதுராந்தகத்தில் சக்ரவர்த்தித் திருமகன் ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. பட்டர் அண்ணூர் இராஜகோபாலாச்சாரியர் சத்ர சாமர பரிஜனங்களுடன் த்வஜஸ்தம்பத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு மரியாதை பண்ணினார்கள். பெருமாளுக்கு பங்காளூர் ஸ்ரீ கிருஷ்ணன் மூலம் கல் இழைத்த கிரீடமும் ஹால்ஸ் ரோடு, ஸ்ரீனிவாசன் மூலம் யக்ஞோபவீதமும் விசேஷ உபஹாரங்களுடன் ஸமர்ப்பிக்கச் செய்து மங்களாசாஸனம்.

4-6-73 பொன் விளைந்தகளத்தூர் - கோயில்.

14-10-73 செட்டிபுண்யம் தேவனுதன்

15-10-73 திருமுக்கூடல் (பாலாறு) ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள்.

16-10-73 உத்திரன் மேரூர் சுந்தர வரதன்.

20-10-73 காஞ்சி தேவாதிராஜன் - பெருந்தேவித் தாயார்

15-11-73 துவ்வூர் - ஸ்ரீராமன்; இரம்மியமான இடம். (நீரருவி புஷ்கரிணியுள்ள இடம்)

29-11-73 கர்னூல் - ஹைதராபாத் மார்க்கம் - பீசப்பள்ளி ஆஞ்ஜனேயர்.

1-12-73 கோபாலப்பேட்டை - இராமன் (சிறந்த புஷ்கரிணி) தமிழ்நாட்டில் போல் சிறந்த கோயில். ஸ்ரீமதாண்டவனை மிகவும் கவர்ந்த இயற்கையெழில் சொறியும் இடம்.

2-12-73 பாலம்; வெங்கடேசப் பெருமாள்- புதியகோவில்; ஏரிக்கரை.

3-12-73 ஜட்செர்லா; வெங்கடேசப் பெருமாள்.

3-12-73 இரங்க ரெட்டி கூடம் லக்ஷ்மீ நாராயணன்.

4-12-73 ஷம்ஷாட்நகர் வெங்கடேச்வராலயம்.

8-12-73 ஸீதாராமபாக் ஸ்ரீவரதராஜப் பெருமாள்.

1-11-74 கர்நாடகா - மஹூர் - அப்ரமேயன்.

3-11-74 ஸ்ரீரங்கப்பட்டிணம் - வேணுகோபாலன் தேசிகன் கந்தவடி உத்ஸவம்.

16-11-74 மைசூர் தலைக் காட்டிலுள்ள ஸ்ரீபாஷ்யகாரரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட கீர்த்தி நாராயணப் பெருமாள்.

18-11-74 மைசூர் - ஸத்யாகாலம்- பெருமாள், தாயார் ஆழ்வார் - ஸ்வாமி தேசிகன் எல்லோருக்கும் திருமஞ்சனம் கண்டருளப் பண்ணி ச்வரணத்தில் காவேரியில் அவபிரதம்.

20-11-74 T. நர்சபூர் காவேரி - கபிலா சங்கமத்தில் குஞ்சா நரசிம்மன்.

22-11-74 மைசூர் பரகாலமடத்தில் ஹயக்ரீவன்.

16-7-75 கனக்கம்மா சத்திரம் ஸ்ரீநிவாசன்.

14-10-75 ஆந்திரா - மதனப்பள்ளி வெங்கடேசப் பெருமாள்.

17-10-75 மதனப் பள்ளியிலிருந்து 18 கி.மீ. தூரத்திலுள்ள ஹார்ஸ்லி ஹில்ஸ் இதனில் அமரநாராயணன்.

20-10-75 ஆந்த்ரா - கதிரி - ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மன்.

21-10-75 காளசமுத்ரம் - ஸ்ரீராமன்.

24-10-75 அநந்தபூர் - சென்னகேசவப் பெருமாள்.

27-10-75 பொன்னஹோபிலம் என்கிற இடத்திற்கு எழுந்தருளி பென்னை நதியில் நீராட்டம் கண்டருளி பாதுகாராதனம் செய்த பிறகு மரங்களின் நடுவே அநேக மண்டபங்களும் குளங்களும் அருவியுமாக மிக அழகான ஓர்சூழ்நிலையில் அமைந்திருக்கும் இம்மலையின் மீது நாற் புறமும் மதில்களும் கோபுரங்களும் அதன் நடுவில் அற்புதமான தீபஸ்தம்பத்துடன் காட்சி தரும் இத்திருக்கோயிலின் மூலஸ்தானத்தில் ஸ்ரீநரஸிம்மனின் ஒரு திருப்பாத மட்டுமே ஸேவை ஸாதிக்கக் கண்டு இதில் ஒரு மஹாத்ம்யம் பொதிந்து கிடக்கிறது என்று ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தார்.

27-10-75 பெல்லாரி லக்ஷ்மீநாராயணப் பெருமாள்

31-10-75 குடிதினி ஆஞ்ஜனேயர்.

4-11-75 லக்குண்டி. லக்ஷம் குண்டங்கள் வைத்து யாகம் நடத்தியதால் இப்பெயர் வழங்குகிறது. இரவு கதக் நகரில் ஸ்ரீபகவத் ராமானுஜரால் கர்நாடக பிரதேசத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப் பட்ட - 'பஞ்ச நாராயண க்ஷேத்திரங்களில்' ஒன்றான ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று.

20-11-75 ஹட்டர்கி ஆஞ்ஜனேயர்.

21-11-75 யமகரணி ஆஞ்ஜனேயர்.

23-11-75 கரவீரக்ஷேத்ரம் என்று பிரஸித்தி பெற்ற ''கொல்காபூரில்'' பஞ்ச கங்காவில் நீராட்டம் கண்டருளினார். தக்ஷிணகாசி என்றும் இதனை அழைக்கின்றனர். இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமகாலக்ஷ்மித் தாயாரை ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்.

24-11-75 ஸ்தல விசேஷத்தாலும் தாயாரின் வடிவழகாலும் ஸ்ரீமதாண்டவன் மிகவும் ஈர்க்கப்பட்டு அங்கேயே ஒரு நாள் வாஸம் செய்ய திருவுள்ளமுகந்து தாயாருக்கு நூதன வஸ்த்ரம் ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் செய்தாயிற்று.

போகவதி, துளஸி, சரஸ்வதி, தூத் கங்கா, வேதகங்கா ஆகிய ஐந்து நதிகள் சங்கமித்து (ஒன்று கலந்து) பஞ்ச (ஐந்து) கங்கை என்ற பெயருடன் ப்ரவஹிக்கிறது. இந்த சங்கமம் ''ப்ரயாகையைப் போல்'' இப்பிரதேசத்தில் பிரஸித்தி பெற்றது.

தாயார் கொல்காஸுரனை வதம் செய்த தன் பொருட்டு இதற்கு இப்பெயர் வந்தது எனக் கூறுவர்.

இரவு கினி ஆஞ்ஜநேயர்.

25-11-75 காமெரி-கிருஷ்ணன்

26-11-75 கராட் ராமன் (கிருஷ்ணை-கொய்னை நதிகள் சங்கமம்)

27-11-75 உம்ராஜ் ஆஞ்ஜனேயர்.

1-12-75 கத்ரஜ் ஆஞ்ஜனேயர்.

7-12-75 தேஹூ. பரமபக்தர் ஸ்ரீ துக்காராம் த்யானம் செய்து ஸித்தியடைந்ததாகச் சொல்லப்படும் இந்த்ராணி என்கிற நதிக்கரையிலுள்ள விட்டல் ஸன்னிதி.

17-4-76 பாத்துகை விட்டல் மந்திர்.

20-4-76 இகாத்புரி இராமன்.

30-4-76 ராக்தோபா - ஹனுமார்.

22-6-76 டெல்லி - ராமகிருஷ்ணபுரம் ஸ்ரீவைகுண்டநாதன் (ஆச்ரமக் கோவில்)

9-9-76 ரிஷிகேசத்தில் திருமலை - திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான வேங்கடேசப் பெருமாள்.

9-9-76 புஷ்கரமந்திரம் - சக்ரவர்த்தித் திருமகன் சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட அழகிய கோயில்.

11-9-76 ரிஷிகேசம் சிவானந்த ஆசிரமம் பக்கத்திலுள்ள சத்ருக்கனன் கோவில்.

9-1-77 டெல்லி லோடி காலனியில் இராமன், (அப்படியே ரமண கேந்த்ரா விற்கு எழுந்தருளியது)

31-1-77 டெல்லியிலிருந்து அலஹாபாத் போகும் வழியில் கான்பூர் ஓர் பெரிய நகரம். இதன் பக்கத்தில் கங்கைக் கால் வாய் ஓடுகிறது. இங்கே J. K. நிறுவனத் தார் கட்டியிருக்கும் ஸ்ரீ இராதாகிருஷ்ண மந்திர் சென்று மங்களாசாஸனம்.

கோவில் தன்னில் காண்கின்ற மூன்று ஸன்னிதிகளில் உள்ள விக்ரஹங்கள் எல்லாம் சுமார் 5' உயரம் வெள்ளியிலானவை. கதவுகளெல்லாம் வெள்ளித் தகட்டால் வேயப்பட்டவை. 30' உயரமுள்ள கோபுரம். அழகான சலவைக் கற்களாலான வேலைப்பாடு. கோயில் முன்பு நந்தவனமும் அதன் புறமும் திருக்கோவிலும் மிகவும் சுத்தமாய்க் காக்கப்படுகின்றன.

21-2-77. காசி - த்வாரகாநாத் காட்டில் ஒரு வடகலை ஸ்ரீவைஷ்ணவ ஆலயம்.

27-2-77. காசி - நாக்பூர் போகும் வழியில் ஹனுமானுவிலிருந்து காதாரி போகும் போது நடுவில் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண மந்திரில் சுமார் 6' உயரத்தில் சுதையால் (சுண்ணும்புக் கலவை) நிர்மாணிக்கப்பட்ட பதினறு திருக்கைகளில் ஸர்வாயுதங் களுடன் மிகவும் உக்ரரூபத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ நருஸிம்ம மூர்த்தியை மங்களாசாஸனம். அது தவிர எம்பெரு மானின் விச்வரூபம்; ராதாகிருஷ்ணன், லக்ஷ்மீநாராயண பிம்பங்கள்; அழகான ஸேவை. ஸ்ரீ நருஸிம்மனுடைய இத்தகைய மூர்த்தி வேறெங்குமில்லை.

5-3-77. காசி - நாக்பூர் வழியில் 'நா ரேரா' ஸ்ரீராம் மந்திரில் எழுந்தருளி, ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனும் பிராட்டியும் நின்ற திருக்கோலத்தில் திருவனந் தாழ்வான் குடை பிடிக்கவும், பிராட் டிக்குச் சற்று தூரத்தில் இளைய பெரு மாளும், பெருமாளுக்கு அருகில் சிறிய திருவடியும் ஸேவை ஸாதிக்கிறார்கள்.

13-4-77. நாக்பூர் - ஹைதராபாத் மார்க்கம்.

அர்குல் : வெங்கடேசப்பெருமாள்.

உத்ஸவர் : ஸ்ரீநிவாஸன், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர் ஸேவை, அத்யத்புதம்.

14-4-77. இண்டல்வாய் அருகில் திரு மணப் பள்ளியில் ஸ்ரீனிவாஸப் பெருமாள்.

21-4-77. ஆல்வால் வெங்கடேசப்பெரு மாள்.

இங்கிருந்து செக்கண்டராபாத் போகும் வழியில் ஒரு விசேஷமான ஹனுமான் கோவில் மங்களாசாஸனம். இந்த கோயிலில் சூர்யன் ஏழு குதிரை பூட்டிய ஒரு காலுடைய இரதத்தில் வீற்றிருந்து அவனுக்கு முன்னால் ஆஞ்ஜனேயர் கல்வி பயிலும் காட்சி மிக அழகான பிம்பமாக செதுக்கப் பட்டுள்ளது. ஸ்ரீமதாண்டவன் மிகவுகந்தது.

11-5-77. ஸெகண்டராபாத் - திருப்பதி யாத்ரையில் ஷாட் நகரில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் மங்களாசாஸனம். பெரிய கோவில். ஸ்ரீநிவாசன், வேணுகோபாலன், ரங்கநாதன், சக்ரவர்த்தித் திருமகன், பிராட்டி, இளையபெருமாள், யோகந்ரஸிம் மன், ஞானப்பிரான் மற்றும் பல மூர்த்திகள் அழகாய் ஸேவை ஸாதிக்கிறார்கள்.

12-5-77. ரங்கா ரெட்டி கொடா என்கிற ஊரில் ஸ்ரீ லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோவில் மங்களாசாஸனம். இந்தக்கோயில் கர்ப்பக்ருஹ விமான கலசத்தோடு அங்கே சக்ரத்தாழ்வானையும் சேர்த்து பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இது ஒரு அபூர்வமான நிகழ்ச்சி.

28-5-77. ஆந்திரபிரதேசத்தில் கடப்பா வைக்கிடந்து 25 கி.மீ. தூரத்திலுள்ள (திருப்பதி மார்க்கம்) வொண்டிமிட்டா

(Vondimitta) என்ற ஊரில் கோதண்ட ராமஸ்வாமி கோவிலில் தங்கினர். கருங் கல் தூண்களோடும் அழகிய சித்திரங் களோடும் மிகவும் பழமையான கோவில் போத்தண்ணு என்ற பெரியார் தெலுங்கில் ஸ்ரீ பாகவதமியற்றி இந்த கோவில் எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்ததாகக் கூறுவர். வடகலைக் கோயில். இதற்குப் பல கைங்கர்யங்களைச் செய்தவர் ''ஆந்திர வால்மீகி' என்று மிக மரியாதையுடன் அழைக்கப்படும் Vavilli Kolanu ''வாவில்லி கொலனு'' ஸ்ரீ சுப்பராவ்'' அவரது திருவுருவப் படம் அங்கு காணப்படுகிறது.

11-6-77. திருச்சானூர் மதரஸ் மார்க்கத்தில் புத்தூருக்கு அடுத்துள்ள நாராயணவரம் வரும்போது அங்கு கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கல்யாண வெங்கடே சனையும் பத்மாவதித் தாயாரையும் மங் களாஸாசனம் செய்தபடி. கோயிலில் ஸர்வ மரியாதையுடன் ஸ்ரீமதாண்டவன் வர வேற்கப்பட்டார்.

இத்தலமஹிமையைப் பற்றிய வரலாறு

பிரணயகலஹத்தின்போது எம்பெருமானை விட்டுப் பிரிந்த தாயார் பெருமானை அடைய வேண்டி கொல்ஹாபூரில் தவம் செய்து பிறகு ஆகாசராஜாவின் புத்திரியாய் பத்மாவதி என்கிற திருநாமத்தோடு இந்த நாராயணவரம் க்ஷேத்திரத்தில் அவதரித்து இவளைப் பிரிந்த எம்பெருமான் எங்கும் தேடி அலைந்துப் பின் நாராயணவரத்தில் இருப்பதையறிந்து வேடுவன் வேஷத்தில் வந்து ஆகாசராஜாவைக் கண்டுவணங்கி பத்மாவதியை பாணிக்ரஹணம் செய்து கொண்டதாக வரலாறு.

திவ்யதம்பதிகள் திருக்கல்யாணத்தின்போது மாவு அரைக்க உபயோகிக்கப்பட்ட, 5 அடி குறுக்களவுள்ள பெரிய கருங்கல் இயந்திரம் மூடியோடு இன்றும் இங்கு காணலாம்.

13-6-77. நாகலாபுரம் வேதநாராயணப்பெருமாள்.

3-7-77. சென்னை மயிலை சித்ரகுளம் வடகரை ஸ்ரீநிவாசன் திருப்பாவாடை ஸேவை.

18-11-77. சென்னை மயிலை ஆசிரமத் திலிருந்துப் புறப்பட்டு சமுத்திரக் கரை யிலிருக்கும் ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி கோவிலுக்கு எழுந்தருளும்போது அடையாறு ஸ்ரீ அஷ்டலக்ஷ்மீ கோவில் தேவஸ்தானத்தார் மரியாதையோடு வரவேற்றனர். பிறகு அஷ்டாங்க விமானங்களில் கோயில் கொண்டிருக்கும் மகாலக்ஷ்மி தாயார்களை ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் செய் தருளினர்.

அன்று கோரமான புயற்காற்று அடித்தது. இரண்டு தென்னைமர உயரத்தில் கடலலைகள் கொந்தளித்து எழுந்து கோயிலைத் தாக்கின. போலீஸ் உயர் அதிகாரிகள் அபாயத்தை உணர்த்தி அப்புறம் செல்ல கெடுபிடி செய்தனர். சிறிதும் அச்சமின்றி அன்றிரவு ஓலமிடும் ஓதத்தின் அருகே ஓய்யாரமாகத் தங்கி, ஓதமும் தாமும்உறங்காதிருந்து, ஓரணுவும் நலிவின்றி அங்கேயே சுழித்தார். நமது ஆண்டவனுக்கு பாதுகாசார்யர்களது காப் பன்றோ என்றும் துணை நிற்கிறது!

25-1-78. நங்கநல்லூர் (சென்னை) ஸ்ரீ லக்ஷ்மிஹயவதனப் பெருமாள். மஹா மண்டபம் நிர்மாணத்திற்கு அடிக்கல் ஸ்ரீமதாண்டவன் நாட்டியது.

31-1-78. செட்டி புண்யம்; தேவனுதன் ஹேமாப்ஜநாயகி.

1-12-78. செங்கல்பட்டு. தேசிகன் - ஸ்ரீநிவாஸப் பெருமாள் மாலை கோதண்ட ராமன்.

4-2-78. பொன்விளைந்தகளத்தூர் - நருஸிம்மன். கோதண்டராமன் ஸன்னிதி - தர்ப்பசயன ராமன்.

6-2-78. உத்திரமேரூர் - அஷ்டாங்க விமானம் - சுந்தரவரதன்.

9-2-78. உத்திரமேரூர் - ஸ்ரீ வைகுண்ட நாதன். பழையகாலத்து தேர்தல் முறை களைப் பற்றின கல்வெட்டுக்களைக் கடாக்ஷித் தாயிற்று.

9-2-78. மாகரல் கோயில்.

14-2-78. மதுராந்தகம் - கோதண்ட ராமன் - கருணாகரன் - ஜனகவல்லி, ஆண்டாள், ஸேவை.

இங்குதான் பெரிய நம்பி எம்பெருமானுர்க்கு மந்த்ரோபதேசம் செய்த இடம். பெரிய நம்பி ஆசார்யனுகவும், எம்பெருமானுர் சிஷ்யனுகவும் ஸேவை ஸாதிக்கிறார்கள். இந்த ஒரு ஸன்னிதியில் தான் ஸ்ரீ பாஷ்யகாரர் க்ருஹஸ்தராய் வெள்ளோப் பரியட்டம் (வேஷ்டி) சாத்திக் கொண்டு ஸேவை ஸாதிக்கிறார்.

19-2-78. புதுச்சேரி வரதராஜப்பெருமாள்.

23-2-78. புதுப்பாளையம் இராமன்.

25-2-78. ஸ்வர்ணபுரி வரதராஜன்.

6-3-78. வளையமாதேவி கமலவல்லி நாயிகாஸமேத ஸ்ரீவேதநாராயணன்.

7-3-78. **ஸ்ரீமுஷ்ணம்** பூவராஹன்.

கோயில்களில் ஒருவகை ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரம் என்பதாம். அவ்விதத்திருக் கோயில்கள் எட்டு.

1. வானமாமலை
2. திருவரங்கம்
3. ஸ்ரீமுஷ்ணம்
4. திருப்பதி
5. புஷ்கரம்
6. நைமிசாரண்யம்
7. பதரிகாச்ரமம்
8. ஸாளக்ராமம்.

புஷ்கரணி கரையில் அரசமரம் - கண்ணுடி அறை - 16கால் புருஷஸுக்த மண்டபம் அத்யத்புதம். பரவசத்தோடு ஸேவித்தார்.

9-3-78. குருகைக்காவலப்பன் ஸன்னிதி மங்களாசாஸனம் வீரநாராயணப் பெருமாள் - மரகதவல்லி.

நமது ஸம்ப்ரதாய குரு பரம்பரையிலே ''தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்'' என்று வாய்விட்டுப் பெருமையோடு ஸ்வாமி தேசிகனுல் கொண்டாடப்படுகிற நாத முனிகள் திருவடிகளை ஆச்ரயித்த முதலிகளுள் ஒருவர் ''குருகைக்காவலப்பன்'' எழுந்தருளியிருக்கும் திவ்யதேசமிது. ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸுக்திகள் பின்வருமாறு:

''நாதமுனிகள் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்த முதலிகள்; உய்யக்கொண்டார், குருகைக் காவலப்பன், நம்பி கருணாகரதாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவி ஆண்டான். உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூர் ஆழ்வான் ஆக எண்மர்''.. (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், குருபரம்பராதிகாரம்).

இந்த ஆசார்யனுடைய திருக்கோவில் ஸ்ரீமதாண்டவனது பரிபூர்ண அனுக்ரஹத்தாலே 8-7-76ல் மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது. ஆசார்யனை ஸேவிப்பதில் அயராத ஆசையுடைய அண்ணல் ஸ்ரீமதாண்டவன், உடல் நலிவும் பாராது, திருக்கோளூரிலிருந்து ஸ்ரீமதுரகவிகள் தனது ஆசார்யன் ஆழ்வாரை ஸேவிக்கப்புறப்படுவதைப் போன்று, குருகைக்காவலப்பனை ஸேவிக்கச் சென்ற காட்சி தரப்படுகிறது.

5-3-78, 6-3-78. ஏகாதசி, சிரவணத்வாதசி இரண்டு நாளைய உபவாஸத்தால் திருமேனி வாட்டம் கொண்டது. அரங்கம் போக விழையும் வேகம் ஒருபுறம். ஆவியுள் குளிர, நெடுங்கண்கள் பனிமல்க, ஒல்கி ஒல்கி நடந்து, ஒசிந்த நுண்ணிடைமேல் கையை வைத்து நொந்து நொந்து, கசிந்த நெஞ்சினராய், ஈரியாய் ஸ்ரீமதாண்டவன் ஆசார்யன் ஸன்னிதியை அடைந்தார்.

ஆசார்யர்கள் பரம்பரையில் இவ்வுத்தம ஆசார்யனை குருகைக் காவலப்பன் யோக சாஸ்த்ரத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தவரே. இவரைப் பற்றின சுவையான ஐதிகத்தை ஸ்ரீமதாண்டவன் அன்று அருளிச் செய்தாயிற்று.

திருவாய்மொழி இரண்டாம் பத்தில் ஆரும்பதிகத்தில் 'சிக்கென' என்று தொடங்கும் இரண்டாம் பாசுரத்தின் இறுதி அடியிலே காணும் ''பக்கம் நோக்கறியான்'' என்கிற பதங்களுக்கு வியாக்யானமருளுகிற

ஈடு முப்பத்தாறுயிரப் படியில் இந்த ஐதிகம் காண்கிறது.

''இங்கே ஆளவந்தார்க்குக் குருகைக் காவலப்பன் அருளிச்செய்ததாக அருளிச் செய்யும் வார்த்தை''.

''அப்பன் ஸ்ரீ பாதத்திலே ஒரு ரகஸ்யமுண்டு.'' என்று மணக்கால் நம்பி அருளிச்செய்ய, அது கேட்க வேணும்'' என்று ஆளவந்தாரும் எழுந் தருள, கங்கைகொண்ட சோழபுரத் தேற, அப்பனும் அங்கே ஒரு குட்டிச் சுவரிலே யோகத்திலே எழுந்தருளி யிருக்க, ''இவரை ஸமாதி பங்கம் பண்ண வொண்ணுது'' என்று சுவ ருக்குப் புறம்பே பின்னே நிற்க, அப்பனும் யோகத்திலே எழுந்தருளி யிருக்கிறவர் திரும்பிப் பார்த்து ''இங்குச் சொட்டை குலத்திலாரேனும் வந்தாருண்டோ'' என்று கேட்டருள, 'அடியேன்' என்று ஆளவந்தாரும் எழுந்தருளி வந்து கண்டு ''நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க இங்ஙன் அருளிச் செய்கைக்கு ஹேதுவென்?'' என்ன, நானும் தானுமாக அனுபவியா நின் ருல், பெரிய பிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருங்கியணைத் தாலும் அவன் முகங்கூட பாராத ஸர்வேச்வரன், என் கழுத்தை யமுக்கி நாலு மூன்றுதரம் அங்கே எட்டிப் பார்த்தான்; இப்படி அவன் பார்க்கும்போது ''சொட்டைக் குடி யிலே சிலர் வந்தாருண்டாக வேணும்'' 'என்றிருந்தேன் காணும்' என்று அருளிச் செய்தார்..... இதன் அர்த்தத்தை விவரித்து எழுதுகிறேனிங்கு.

சொட்டைக் குலத்தவரான நாதமுனி களின் பேரன் ஆளவந்தார் தன்னுடைய ஆசார்யன் மணக்கால் நம்பி ஸ்ரீ பாதங் களிலே ரகஸ்யார்த்தங்களைக் காலக்ஷேபம் செய்தார். அப்போது ''அப்பன்'' என்று அழைக்கப்படும் ''குருகைக்காவலப்பன்'' விஷயமாக ஸாதித்தருளும்போது அப் பனிடம் ரஹஸ்யமொன்று இருக்கிறது என்று ஸாதித்தார். இதனை நேரிடை யாகக்கேட்டுத் தெரிந்து கொள்ள ஆளவந்தார் குருகைக்காவலப்பன் இருக்கும் கங்கை கொண்ட சோழபுரம் எழுந் தருளினார். அது சமயம் குருகைக் காவலப்பன் யோகத்தில் ஆழ்ந்திருந்தார். அப்பனுடைய தவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று ஆளவந்தார், யோகம் செய்து கொண்டிருந்த குட்டிச் சுவருக்குப் பின்னே நின்று நிஷ்டை கலைந்துவர நோக்கியிருந்தார். ஆனால் எதிர்பாராமல், அப்பன் யோகம் கலைந்து திரும்பி சொட்டைக்குலத்தைச் சேர்ந்த யாரேனும் அங்கு வந்திருக்கிறார்களா? என்று கேட்டார். சொட்டைக்குல திலகரான ஆளவந்தாருக்கு இக்கேள்வி ஆச் சரியத்தையளித்தது. உடனே அடியேன் என்று தன்னுடைய பவ்யதை தோன்ற கைகூப்பி, வாய்புதைத்து, மடியொடுக்கி, அப்பன் முன்னே தெண்டனிட்டு அடக்கமும் பணிவும் தோன்ற தான் வந்தமை அறிவித்தருளினார். மேலும் தான் வந்தது தெரியாமல் ஒளிந்து பின்னே நிற்கச் செய்தே தன்னைப் பற்றியும், தன் குலத்தைப் பற்றியும் அப்பன் அது அறிந்து சொன்னதெப்படி? என்று குருகைக் காவலப்பனை ஆளவந்தார் வினவினர். அப்போது அப்பன் ரஸமாக ஒரு விஷயம் ஸாதித்தார்.

''நான் யோகத்திலே எழுந்தருளி யிருக்கும்போது நானும் ஸ்ரீய: பதியும் உரையாடுதல் வழக்கம். அதுபோல அன்றும் எம்பெருமானும் நானும் அனுபவித்துக் கொண்டிருந்தோம். இரு வரும் மனம் நிறைவுபெற இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது 'அகிலகில்லேன்' என்று எம்பெருமான் மார் பகத்திலே குடிகொண்டிருக்கும் பிராட்டி தன் முலைத்தடங்களாலே அவனை அமுக்கி நெருக்கி அணைக்க நினைத்த அந்த அவஸரத் திலும் அவ்வின்பத்திலே கண்-மனது செலுத் தாது என்னிடம் காணும் இன்பத்தில்தான் அவன் திளைத்தான். அந்த பிராட்டியின் இணக்கத்தைப் புறக்கணித்தான். இதனைக் கண்டுப் பெருமைப் பட்டுப் பூரிப்படைந்து முன்னிலும் பாரித்து அவனை அனு பவிக்கும்போது திடீரென்று எதிர்பாராமல் என்னுடைய கழுத்தையமுக்கி பல முறை நாலு திசைகளிலும் பார்த்தான்.

பிராட்டியிடம் கூட கண் செலுத்தாத எம்பெருமான் என்னிடம் மையல் கொண்டு என்னையே அனுபவிக்கும் சபலமுடைய அவனது அச்செய்கை என்னைத் தூக்கிவாரிப் போட்டது என்றாலும் உடனே என் கலவி இன்பத்தைவிட்டு இத்தகைய மாற்றம், கௌரவம் மரியாதை எம்பெருமானுக்கு ஏற்படவேண்டுமானால் நாதமுனி வம்சஸ் தருள் ஒருவருக்கே இத்தகைய பெருமை அஸாதாரணமாகக் கிடைக்கக் கூடியது என்று முன்பே அறிந்திருக்கிற நான், அவ்விதம் நாதமுனி குலமாகிய சொட்டை குலத்தவர் நிச்சயம் அங்கே வந்திருக்க வேண்டுமென்பதை ஊகித்தறிந்தேன் என்று ஸாதித்தருளினர்.''

இதனால் ஈச்வர ஸாக்ஷாத்காரம் செய்த மஹான் குருகைக் காவலப்பன் என்பது புலனாகிறது. ஆளவந்தாருக்கு அருளிச் செய்தது போலவே அந்த ஸத்ஸம்ப்ரதாய வழியிலே நடையிடும் நல்லவன் ஸ்ரீமதாண்டவனையும் குளிரக் கடாக்ஷித்த அந்த நிகழ்ச்சி பொன்னேட்டிலே பொறிக்கப்பட வேண்டியது.

இந்த திவ்ய தேசத்தில் ஸ்ரீ ஆள வந்தார் ராஜ்யபாரம் செய்தருளினர். ஸ்ரீமந் நாதமுனிக்கு இந்த திவ்ய தேசத்தில்தான் நிஷ்டையில் 'யோகோ ஞ்தே தனுத்யஜாம்' என்று காளி தாஸன் சொன்னதேபோல் பரமதப்ராப்தி. ஸ்வாமியை திருப்பள்ளி படுத்திய இடத்தில் பிராட்டி இளவலோடு (இலக்குவன்) சக்ரவர்த்தித் திருமகன் சிலாரூபத்தில் ஸேவை ஸாதிக்கிற இடமிது.

13-3-78. கல்யாணபுரம் ஸ்ரீநிவாஸப் பெருமாள் மங்களாசாஸனம்.

13-5-78. வடுவூர் இராமன்.

19-2-79. திருநெல்வேலி பாளையங் கோட்டை கோபாலன்.

21-2-79. திருக்குறுங்குடி மடம் செல்வ நாராயணன், தேவப்பெருமாள், லக்ஷ்மி நருஸிம்ஹன் ஸ்ரீ எம்பெருமானர் இவர் களை மங்களாசாஸனம்.

25-2-79. திருநெல்வேலி மாவட்டம் கருங்குளம் ஸ்ரீ வேங்கடாசலப் பெருமாள் தாரு ரூபமாய் எம்பெருமான் ஸேவை ஸாதிக்கிறார். பிரார்த்தனை ஸ்தலம். திருமலை போக முடியாதவர்கள் இங்கேயே பிரார்த்தனைகளை செலுத்தலாம் என்று கூறுவர்.

27-2-79. ஆழ்வார்திருநகரி எம்பெருமானர் மங்களாசாஸனம்.

1-3-79. திருநெல்வேலி மாவட்டம் - கிருஷ்ணபுரத்தில் ஸ்ரீ திருவேங்கடமுடையான்; பொதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கோவில் புராதன சிற்பங்களைப் பாதுகாத்து வருகின்றனர். அழகான சிலைகள் மண்டபம் காண வேண்டியவை.

16-3-79. 17-3-79. அநந்தகிருஷ்ணபுரம் லக்ஷ்மீநாராயணன் - வேணுகோபாலன். மங்களாசாஸனம்.

1-4-79. ஸ்ரீவில்லிபுத்தூர் அடுத்துள்ள கிருஷ்ணன்கோயில் என்கிற ஊரில் கிருஷ்ணன்.

16-4-79. மதுரையை அடுத்து சோழவந்தான் என்கிற திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள ஜனக நாராயணன், ஜனகவல்லி மேலும் சக்ரவர்த்தித் திருமகன் மங்களாசாஸனம்.

26-4-79. மதுரையை அடுத்துள்ள வட மதுரையில் ஸ்ரீ ஸௌந்தரவல்லி ஸமேத ஸௌந்தரராஜ பெருமாள் மங்களாசாஸனம்.

15-5-79. ஸ்ரீரங்கம் தசாவதார ஸன்னிதியில் ஸ்ரீமத் அஹோபிலமடம் எம்பெருமான்கள் மங்களாசாஸனம்.

23-6-79. நாமக்கல் ஹனுமார் மங்களாசாஸனம்.

24-6-79. அங்கு அனுமாருக்கு விசேஷத் திருமஞ்சனம்.

5-7-79. ஹோசூர் இராமன் ஸன்னிதி.

மீண்டும் சஞ்சாரங்களில், முன்பு மங்களாசாஸனம் செய்தருளிய திவ்ய தேசங்கள் ஆதலால் 1980 வரையுள்ள திவ்ய தேசங்கள் இவ்வளவே.

ஸ்ரீ:

ஸம்ப்ரோக்ஷணங்களும் ஆசிரம, கோயில் நிர்மாணங்களும் திருப்பணிகளும்

ஜனவரி 1964

"ஸ்ரீரங்கநாத பாதுகா" என்கிற மாதப் பத்திரிக்கையை மீண்டும் புதுப்பித்தல்.

ஸ்ரீமதாண்டவன் ஆசிரம வெளியீடாக வந்து கொண்டிருந்த "ஸ்ரீரங்கநாத பாதுகா" என்கிற மாதப்பத்திரிகை நமது ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் தமது பூர்வாச்ரமத்தில் ஆசிரம கைங்கர்யத்தில் துரந்தரராய் இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டு சில காரணங்களால் வெளியீடு தடைபட்டுப் போயிருந்தது. ஆசிரம ஸ்வீகாரம் ஆனவுடன் எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டி மறுபடியும் அந்த பத்திரிகை வெளியீட்டை துவக்கிட திருவுள்ளம் பற்றினர்.

திருவஹிந்திரபுரம் (Asst Manager Rtd. Parry& Co., Madras). ஸ்ரீராமானுஜாசாரியர் ஸ்வாமியை வெளியிடுபவராயும். அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்ரீராமானுஜாச்சாரியரை ஆசிரியராயும், 'சுதேசமித்திரன்' என்கிற சென்னை நாளிதழ் அச்சகத்தில் அச்சிட்டுத்தரவும் ஸ்ரீமதாண்டவன் நியமித்தருளினர்.

அன்றுமுதல், இன்றுவரை இப்பத்திரிகை ஆஸ்திகர்கள், சிஷ்யர்கள், எல்லோருக்கும் பலவகையிலும் உதவி புரிந்து வருகிறது. இப் புத்தகத் தொகுப்புக்கு இன்றியமையாத பல கருத்துக்கள், ஸம்பவங்கள் செய்திகள் இவையனைத்துக்கும் இப் பத்திரிகை தான் ஆதாரம் என்பதே இதன் பெருமைக்கோர் சான்று.

15-6-64 திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வானுடைய மஹா ஸம்ப்ரோக்ஷணத் தன்று ஸ்ரீமதாண்டவன் யாத்ரையில் சென்னையில் எழுந்தருளியிருந்தார். ஸம்ப்ரோக்ஷணத்தில் அன்வயித்த வேத பாராயண அத்யாபக ஸ்வாமிகளுக்கு இரண்டு வேஷ்டிகளிலும் தத்தியாரதனைகளோடு ஸம்பாவனையும் திருப்பரிவட்டமும் அனுக்ரஹித்தருளினர்.

24-9-65 திருவஹிந்திரபுரம் ஸ்ரீதேவனுதனுக்கு ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி கல்லிழைத்த "அபய ஹஸ்தம்" ஸமர்ப்பிக்கப்பட்டது.

1-10-65. மைசூர் பரகாலமடம் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுக்கு புலிநகம் சேர்த்த தங்கச் சங்கிலி ஸ்ரீமதாண்டவன் ஸமர்ப்பித்தார்.

12-11-65 மைசூர் ஸ்ரீவைஷ்ணவஸபா போஷகர் பதவியை தாம் அங்கீகரித்து ஸபைக்கு ரூ. *1001/-* நன்கொடை அளித்தார்.

13-11-65 மைசூர் வித்யாரண்யபுரத்திலுள்ளதும் ஸ்ரீ இராமச்சந்திராச்சாரியாரால் துவக்கப்பட்டு நிர்வஹிக்கப்பட்டதுமான பாதுகாச்ரமத்தை ஸ்ரீமதாண்டவன் நமது ஆசிரம நிர்வாஹத்தின் கீழ் கொண்டு வந்தார். இதன் நிர்வாஹம் பதினேறு மெம்பர்கள் கொண்ட கமிட்டியால் பரிபாலனம் செய்யப்படுகிறது.

8-12-65 மைசூர் மாநிலத்திலுள்ள மேல்கோட்டை என்கிற திருநாராயணபுரத்தில் தேசிகன் ஸன்னதிக்கு மேற்புறத்தில் ஒரு

மனை ஆர்ஜிதம் செய்யப்பட்டு அங்கு ஆசிரமம் நிர்மாணிக்கக் கட்டிட மனை முகூர்த்தம் செய்த நன்னாள்.

14-3-66 இரண்டு வெள்ளி சாமரங்கள் - புளிநகம் புதைத்த செயின், ஒரு யானைக் குட்டி இவைகளை திருக்குடந்தை அமுதனுக்கு ஸமர்ப்பித்தார்.

2-67 பராபவ ஆவணி மீ 8 முதல் 10 ஆ வரை

ஸ்ரீமதாண்டவன்ஸன்னிதி சின்னஞ் சிரமத்தில் ஸ்ரீமதாண்டவனது ஆசார்யன் **தென்பிரையாண்டவன் ஸ்ரீ ரங்கராஜ மஹாதேசிகன் திவ்ய மங்கள விக்ரஹ ப்ரதிஷ்டை** 10ஆ காலை புஷ்ய நக்ஷத்ரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் மஹா ஸம்ப்ரோக்ஷணம்.

ரித்விக்குகள்; ஸ்ரீநரசிங்கப் பட்டர் என்கிற கோபு பட்டர்., ஸ்ரீநிவாஸபட்டர்.

உதவி: ஸ்ரீநிவாச ராகவன் என்கிற எலிக்கண்ணன்.

உபயம்: கொடியாலம் ஸ்ரீநாராயணய்யங்கார்.

பௌண்ட்ரீகபுரம் ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்பரமஹம்ஸைத்யாதி விண்ணூற்றங்கரை ஸ்வாமி தமது ஆசிரமத்திலிருந்து எழுந்தருளி ப்ரக்ரியைகளை யெல்லாம் கூட இருந்து கடாக்ஷித்தது குறிப்பிடத்தக்கது.

11-6-67 ஸ்ரீரங்கநாத பாதுகா ஸம்ஸ்க்ருத கலாசாலை திவ்யப்ரபந்த வகுப்பை விஷ்வக்ஸேனராதனத்துடன் ஆரம்பித்த நாள்.

9-7-67 திருகண்ணமங்கை திவ்யதேசத்தில் கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீநிகமாந்த தேசிகன் ஸன்னிதி ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்ட அன்று ஸ்ரீமதாண்டவன் பிம்பங்களின் பிராணப்ரதிஷ்டை தளிகையமுது, திருமஞ்சனம் இவைகளை தமது ஸத்ரவ்யத்தாலே நடத்திக் கொடுத்தார்.

25-6-67 ஸ்ரீரங்கம் சின்னஞ்சிரமத்தில் 10 ஏழைக் குழந்தைகளுக்கு உபநயனம்.

17-10-67 நமது பாதுகாச்ரமத்தில் இன்று ஆராத்யராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீருக்மிணி ஸத்யபாமா ஸமேத ஸ்ரீவேணு கோபாலன் திருக்குடந்தை தேசிகனால் ஆராதிக்கப்பட்ட பெருமாள். உபய நாச்சிமார்களில் ஸ்ரீ ஸத்யபாமா விக்ரஹம் ஜீர்ணமாயிருந்ததைப் பழுது பார்த்து திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸன்னிதியில் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டு ஸ்ரீமதாண்டவன் திருக்குடந்தை சம்ப்ரதி வைத்ய நாதன் தெருவிலிருக்கும் கோமளவல்லி கல்யாண மண்டபத்தில் எழுந்தருளியிருந்த போது, அங்கு கோவிலிலிருந்து பிம்பத்தை எல்லா பிருதுகேளாடும் எழுந்தருளப் பண்ணி, ஆசிரமத்தில் உபயநாச்சிமாரோடு வேணுகோபாலனுக்கு திருமஞ்சனம் கண்டருளப் பண்ணி திருவுள்ளம் உகந்த தினம்.

1-12-67 முதல் 3-12-67 சென்னை மாநிலத்தில் வட ஆற்காடு ஜில்லா ''தையார்'' என்கிற கிராமத்தில் ஸ்ரீராமன் ஸன்னிதி சம்ப்ரோக்ஷணத்தை ஸ்ரீமதாண்டவன் கருணையோடு நடத்தித்தந்தருளினார். இதற்காகக் கடுக எழுந்தருளவும் செய்தார். இதற்குக் காரணமாயிருந்தவர் அப்போதைய ஸ்ரீமதாண்டவன் கைங்கர்யக் குழுவில் விலக்ஷணமாய் எழுந்தருளியிருந்த விஞ்சிமூர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஸ்வாமிதான். இந்த ஸ்வாமியிடத்தில் இருந்த ப்ரீதி விசேஷத்தால் யாத்ரையாக எழுந்தருளி காஞ்சி தேவாதிராஜன் ஸன்னிதி ஸ்ரீ வரதராஜபட்டரைக் கொண்டு ஸம்ப்ரோக்ஷணத்தை குறித்த காலத்தில் சிறப்பாகத் தலைக் கட்டி வைத்தார். ஸ்ரீமதாண்டவன் ஆத்ரேய கோத்ரத்தில் அவதரித்த ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும் திருக்குடந்தை தேசிகனுக்கும் தனி ஸன்னிதிகளுள்ள திவ்யதேசம்.

6-12-67 ஸ்ரீரங்கநாத பாதுகா வித்யாலயாவின் தொடக்கமும் தோற்றமும் (சின்ன) காஞ்சீ ஸ்ரீரங்கராஜ வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீமதாண்டவன் பாதுகாச்ரமத்தில் நடந்தது, ஸ்வாமி தேசிகன் தூப்புல் திவ்ய தேசத்திலிருந்து திருப்புறப்பாடு கண்டருளி' மாஸ திருவோண மஹோத்ஸவ நன்னாளா

கையால் அன்று தேவாதிராஜனே மலைமேல் மங்களாசாஸனம் செய்தருளிய உகப்புடனே பாதுகாச்ரமத்திற்கு எழுந்தருளினார். வாசலில் அலங்காரமான பந்தல் அமைத்து ஸ்வாமி தேசிகனுக்கு மஹோன்னதமான வரவேற்பும் மரியாதைகளும் ஸ்ரீமதாண்டவன் நடத்திக் கொடுத்தார். அன்றுதான் ஸ்ரீரங்கநாத பாதுகாவித்யாலயத்தின் தோற்றம். முறைப்படி துவக்கவிருந்த அந்த வைபவத்தை ஸ்வாமி தேசிகன் நேராக குளிரநோக்கி அருள் பாலித்தது மிகவும் ஏற்றமாயிருந்தது. ஸ்வாமி தேசிகனே தோற்றுவித்த வித்யாலயம் என்றே சொல்லும்படி இருந்தது.

வித்யாலய தொடக்கத்தை முன்னுள் மத்திய அரசு நிதி அமைச்சர் ஸ்ரீ T. T. கிருஷ்ணமாச்சாரியர் செய்தார். வித்யாலயக் குழுத்தலைவர் ஸ்ரீ T. S. ராஜம் அவர்களும் (Chairman T. V. S. Groups) வித்யாலயத்தின் முதல்வர் ஓய்வு பெற்ற முன்னுள் சென்னை மாநில கல்வித் துறையில் ப்ரஸித்தரான ஸ்ரீ K. R. அப்புள்ளாச்சாரியரும் ஸ்ரீமதாண்டவனே விழா நடக்கும் பாதுகாச்ரம மண்டபத்திற்கு எழுந்தருளப் பண்ணினார்கள். பல ஆஸ்திகர்களுடைய ஸான்னித்யம் நிறைந்த அந்த ஸபையில் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் பல துறைகளில் அலுவல் கொண்டிருந்த அன்பர்களிடமிருந்தும் வந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப் பட்டன.

முதல் வித்யார்த்திகளுக்கு முன்னுள் ஆசிரமத்து ஸ்ரீகார்யம் ஸ்ரீசித்ரகூடம் விஜயராகவாச்சாரியர் காவ்ய பாடத்தையும் மன்னார்குடி வித்வான் கனபாடி ஸ்ரீதேசிகாச்சாரியரும், ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ புரிசை (பெரியமாமா) கல்யாண வெங்கடாச்சாரியரும், வேதபாடத்தையும் ஆரம்பித்து வைத்தனர். ஸ்ரீமதாண்டவன் வந்திருந்த அனைவரையும் அனுக்ரஹித்தருளினார்.

திருக்குடந்தை மஹாமக உத்ஸவத்தில் பாகவத ததீயாராதனே

திருக்குடந்தை (கும்பகோணம்) திவ்ய தேசத்தில் மஹாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. அன்று காவிரியிலும், பொற்றாமரை புஷ்கரிணி முதலான பல தீர்த்தங்களில் பாரதத்தின் புண்ய நதிகளெல்லாம் ப்ரவஹிக்கின்றன என்பது நம்பிக்கை. அன்று இந்த தீர்த்தங்களில் நீராட்டம் கொள்ளுகை சாலச் சிறந்தது புனிதமானதுங்கூட என்று எண்ணி ஏராளமான யாத்ரீகர்கள் இத்திவ்ய தேசத்துக்கு விடை கொள்ளுதல் வழக்கம்.

அவ்வண்ணம் 9-2-68 முதல் 14-2-68 முடிய திருக்குடந்தையில் மஹாமக உத்ஸவத்தின் போது ஸ்ரீமதாண்டவன், அங்கு எழுந்தருளிய பாகவதோத்தமர்களுக்கு ஸம்ப்ரதி வைத்யனுதன் தெருவிலிருக்கும் ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீகோமளவல்லீ கல்யாணமண்டபத்திலும் அமுதன் ஸன்னிதித் தெருவில் ஸ்ரீமதாண்டவன் அவதாரம் செய்த திருமாளிகையிலும், ததீயாராதனே செய்து தனது உள்ள நிறைவு கொண்டார். பல ஆயிரம் ரூபாய்கள் செலவு ஆயிற்று என்றாலும், ததீயாரதனையிலே நோக்குடையர் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாயிற்று.

15-2-68 ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி திருக்குடந்தையில் ஏகாதசி திருமஞ்சன மண்டபத்தில் அமுதனே எழுந்தருளப் பண்ணி, உபயநாச்சிமார்களோடும், தாயாரோடும் ஸஹஸ்ர கலச ஸ்நபனத்தோடு விஷேச திருமஞ்சனத்தை ஸ்ரீகார்யம் சித்ரகூடம் ஸ்வாமி நடத்தி வைத்தார்.

18-2-68 சென்னை ஸ்ரீபுரம் ஆசிரமத்தில் ஐந்து வித்யார்த்திகளுக்கு உபநயனம்.

3-3-68 ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கநாத பாதுகாவித்யாலயத்தை தாத்காலிகமாக திருக்குடந்தை ஸம்பரதி வைத்யநாதன் தெருவிலுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் நடத்தும்படி நியமித்து அருளினார். திவ்யப்ரபந்த பாடத்தை ஸ்ரீரங்கநாத பாட்டராச்சாரியர் ஒதுவிக்கவும் பணித்தார்.

14-4 68. ஸ்ரீரங்கம் நமது ஆண்டவன் ஆசிரமத்தில் ஆசிரம கைங்கர்ய துரந்தரரான பட்டணம் மாமா, துரீயாச்ரமத்தில் ''பாதுகா ஸேவக யதி'' என்கிற திருநாமத்தோடு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி

ஸ்ரீ பாதுகா வித்யாலயா



ஸ்ரீ பாதுகா வித்யாலயா தொடக்கம்-
காஞ்சீ பாதுகாச்ரமத்தில் ஸ்வாமி தேசிகன்

காஞ்சீ ஸ்ரீ பாதுகா வித்யாலயாவில் மத்திய அரசு முன்னுள் மந்திரி
ஸ்ரீ உ. வே. T. T. K. ஸ்வாமி தொடக்க உரை





ஸ்ரீ பாதுகா வித்யாலயா தொடக்க விழாவில்

ஸ்ரீ ரங்கநாத பாதுகா வித்யாலயம், ஸ்ரீரங்கம்





ஸ்ரீ பாதுகா வித்யாலயாவின் முதல் வித்யார்த்திகள்

ஸ்ரீ உ.வே. D. R. ஸ்வாமி தலைமையில்
ஸ்ரீ ரங்கனுத பாதுகா பத்திரிகை துவக்க விழா





வானமாமலை

காஞ்சீ பேரருளாளப் பெருமாள் அனுக்ரஹம்



யிருந்தார். பூர்வாசார்யர்கள் எழுந்தருளி யிருந்த ஸமயம் அவர்களுக்குக் கைங்கர் யங்கள் பல செய்து தந்த பெரியார். அந்த ஸ்வாமி திருநாட்டை அலங்கரித்ததை யொட்டி அவரை எல்லா மரியாதை களோடும் சாஸ்த்ர முறைகளோடும் வட திருக்காவேரி தென்கரையில் ப்ரத்யேகமாக அமைக்கப்பட்ட திருப்புக்குழியில் எழுந் தருளப்பண்ண நியமித்து, ஸ்ரீமதாண்டவன் யாத்திரையாய் எழுந்தருளி இருந்ததாலே, ஆசிரம கைங்கர்ய பரர்களான ஸ்ரீகார்யம் சித்ரகூடம் ஸ்வாமி, புரிசை பெரியமாமா, ஸ்ரீ S. K. (நரசிம்ம) தாத்தாச்சாரியர் முதலியோரை உடனே ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பியாயிற்று.

16-4-68. காஞ்சியில் தூப்புல் க்ஷேத்ரத்தில் ஸ்வாமி தேசிகனுக்குத் திருத்தேர் நிர்மாணித்துத்தர அதற்கான வேலைகள் தொடங்கப்பெற்று, தேர் நிர்மாணத்திற் குரிய மரச்சக்கரங்கள், தூண்கள் முதலான வைகளை மயிலையில் ஆக்கூர் ஸ்ரீ A. S. V. வரதாச்சாரியர் திருமாளிகையில் அவருடைய மேற்பார்வையிலேயே வைத்துக் கோர்த்து உருவாக்கியதை ஸ்ரீமதாண்டவன் நேரில் சென்று கடாக்ஷித் தருளினார்.

29-9-68. ஆசார்ய ஸார்வபௌமன் ஸ்வாமி தேசிகனின் 700 வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை யொட்டி முன்பே சொன்னபடி திருத்தேர் சுமார் ரூ 10,000 மதிப்பில் ஸ்ரீ உ.வே. ஆக்கூர் A. S. V. வரதாச்சாரியரைக்கொண்டு நிர்மாணித்து, ஸ்வாமி தேசிகனுக்கு ஸ்ரீமதாண்டவன் ஸமர்ப்பித்தருளினார். அன்று தூப்புலில் திருத்தேரில் ஆசார்யனை எழுந்தருளப் பண்ணி, உத்ஸவம் கொண்டாடப்பட்டு, ஸ்ரீ உ. வே. (ராம) தாசரதி ஸ்வாமியால் தலைக்கட்டிவைக்கப்பட்டது. சென்னை அட்வகேட் ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸன் சென்னை யிலிருந்து எழுந்தருளியிருந்தார்.

திருவஹிந்திரபுரத்தில் கோயில் கொண் டிருக்கும் நம் ஸ்வாமி தேசிகனுக்கு திருவேங்கட முடையானது மதிப்பற்ற உடுத்துக்களைந்த பட்டு ஒன்றை திருமலை யிலிருந்து கொண்டு வரச்செய்து ஸகல மரியாதைகளோடும், பிருதுகளோடும் ஊர் வலமாக எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்து ஆசார்யனுக்கு ஸமர்ப்பிக்கவும் செய்தார் ஸ்ரீமதாண்டவன்.

ஸ்ரீரங்கத்தில் உத்திரவீதியில் ஆசிர மத்திற்குச் சொந்தமான ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியிலும் 7வது நூற்றுண்டு விழா விமரிசையாய் கொண்டாடப்பட்டது.

அதுமட்டுமன்றி தமிழ்நாட்டில் கோயில் கொண்டுள்ள எல்லா தேசிகன் ஸன்னிதி களிலும் இவ்வுத்ஸவம் கொண்டாடும் வண்ணம் திருவுள்ளம் கொண்டு, ஸ்ரீமதாண்டவன் போதிய திரவிய சஹாயத்தைச் செய்து க்ருதார்த்தராளினார்.

13-11-68. பெங்களூரில் ஸஹஸ்ர ப்ராஹ்மண போஜனம்.

ஸ்ரீமதாண்டவன் பெங்களூரில் மல்லேஸ் வரத்தில் தமது மஹாபாரத ப்ரவசனத்தின் பூர்த்தியையொட்டி ஸஹஸ்ர ப்ராஹ்மண போஜனம் செய்துவைக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றியருளினார். ப்ரவசனக் கமிட்டியார் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்து வைத்தனர்.

முதல்கட்டம்: 250 திருநாமங்கள்.,

இடம்: வாஸவி கல்யாண மண்டபம். (மத்வஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு)

இரண்டாவது கட்டம்: 250 திருநாமங்கள்.,

இடம்: ஆசிரமம்., மல்லேஸ்வரம். (பல பக்தர்கள் உபயம்).

மூன்றுவது கட்டம் : 250 திருநாமங்கள்.,

இடம்: ஹெப்பார்ஸ்ரீ வைஷ்ணவ ஸபா கமிட்டி: சேஷாத்திரி ரோடு., பெங்களூர்.

நான்காவது கட்டம் : 250 திருநாமங்கள்.,

இடம்: 8வது மெயின் ரோடு, மல்லேஸ்வரம்., பங்களூர்., ஸ்ரீநிவாஸ கல்யாண மண்டபம்.

29-11-68: ஹனுமான் ஸன்னிதியில் ஸ்ரீ ஸீதாஸமேத ஹனுமான்– இராம லக்ஷ்மண திவ்யமங்கள விக்ரஹ ப்ரதிஷ்டை- மஹாஸம்ப்ரோக்ஷணம்.

ஜெயநகர், 2வது ப்ளாக் கருத்மான் பார்க்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ B. G. ஆச்சார்யா என்கிற கனவான் அங்கிருக்கும் ஹனுமத் ஸன்னிதியை ஸ்ரீமதாண்ட வனுக்குச் சாஸனம் செய்து கொடுத்தார். இந்த ஸன்னிதியில் இராம - லக்ஷ்மண- ஸீதா - ஹனுமான் இவர்களுக்கு மூல, உத்ஸவ திவ்யமங்கள விக்ரஹங்களை உரு வாக்கிப் பிரதிஷ்டை செய்ய ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம் பற்றினார். இந்த இடத்தில் முன்பே ஒரு கற் பாறையில் இயற்கையாக சிறிய திருவடி (ஹனுமான்) திருமேனி பொதிந்திருக் கிறது. அந்த ஸன்னிதியிலேயே சக்ர வர்த்தித் திருமகனையும் (இராமனையும்) இளய பெருமாளையும் (இலக்குவனையும்) பிராட்டியையும் (ஸீதையையும்) மூல, உத்ஸவர் இரண்டு வடிவங்களிலும் தக்க ஸ்தபதிகளைக் கொண்டு உருக்கொடுத்து திருக்குடந்தையிலிருந்து பங்களூருக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளப்பண்ணினார். அத்துடன் ஸன்னிதிக்கு ஸ்ரீ சடாரியையும் திருக்குடந்தையில் செய்யச் சொல்லி ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸன்னிதியில் ப்ரதிஷ்டை செய்ய வைத்து பெங்க ளூருக்கு எழுந்தருளப் பண்ணினார். இதன் மஹாஸம்ப்ரோக்ஷணத்தையொட்டி ஸ்ரீமதாண்டவன் பங்களூர் ஜயநகருக்கு 26-11-78 எழுந்தருளினார்.

ஸம்ப்ரோக்ஷணம் திருவரங்கம் பெரிய கோவில் ஸன்னிதி ஆராதகர் ஸ்ரீ கோபு பட்டர் ஆசார்யகத்தில் நடந்தது. பெங்களூர் ஸம்பத்குமார பட்டர் தனது ஸஹோதரர்களுடன் ஸாதகாசார்யர்களாக இருந்தனர். 29-11-78 அன்று காலை 10 மணிக்கு மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. அன்று ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி கண்கொள்ளாக் காட்சியா யிருந்தது.

ஸ்ரீமதாண்டவனது ஆசிரமம் இங்கே நிலைத்து நிற்க அடிகோலியது இந்த விக்ரஹ ப்ரதிஷ்டைகளும், இராமாஞ்ஜனேய ஆலயமுமாம்.

2-2-69 ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷணம்

ஸ்ரீ பாஷ்யகாரரின் அவதாரஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதூரில் புஷ்கரணியின் வடக்கே பெரியநம்பி திருமாளிகைக்கு அருகில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஸன்னிதியில் பழைய கர்ப்பக்ருஹத்தை ஒட்டினாற் போல் புதிய கர்ப்பக்ருஹங்களும், கருட மண்டபமும் ஸ்ரீமதாண்டவன் நியமனப் படி அவரது திருவுள்ளமுகக்கும் வண்ணம் T. V. S. ஸ்தாபனத்தார் பொருளுதவி யுடனும், பல பக்தர்களின் ஸஹாயத் துடனும், நிர்மாணிக்கப்பட்டன.

ஸ்ரீ பகவத் ராமானுஜரின் அர்ச்சா மூர்த்தி அவதாரதினமான தை மீ புஷ்யத்தன்று (2-2-69) ஞாயிற்றுக் கிழமை அந்த கர்ப்பக்ருஹங்களில் ஸ்ரீநிவாஸன் அலர்மேல் மங்கைத்தாயார், ஸ்ரீ தேசிகன், கருடாழ்வான் முதலிய மூல மூர்த்திகள் பிரதிஷ்டையாயிற்று. ஸம்ப்ரோக்ஷணமும் நடந்தேறியது.

இந்த கைங்கர்யத்தை ஸ்ரீமதாண்டவன் தன் திருவடியான இளையாண்டுப்பட்டு கைங்கர்ய ஸார்வபௌமனான ஸ்ரீ பாலகிருஷ்ணபிள்ளையைக் கொண்டு யாகசாலை ஹோமம், உபயவேதாந்த ஸ்ரந்தபாராயணம் இவைகளோடு ஸ்ரீபெரும் பூதூரில் அஹோபிலமடத்தில் வைத்து நடத்தியாயிற்று. பாகவத ததீயாராதனம் மாலை வீதி மஹோத்ஸவம் முதலியனவும் சிறப்புற நடந்தது.

6-6-69. பங்களூர் ஜயநகரில் ஆசிர மத்திற்குச் சொந்தமான இராமாஞ்ஜனேயர் ஸன்னிதியில் நம்மாழ்வார், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்; ஸ்ரீமத் பெரியாண்டவன் மூல விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்த நாள்.

20-6-69. பங்களூர், பதங்கர் அவுஸில் ஸ்ரீமதாண்டவன் மூன்று முஹூர்த்தங் களில் 25 பையன்களுக்குத் தர்மோப நயனம் அனுக்ரஹித்தல்.

22-6-69. மைசூர் மேல்கோட்டை செல்லப்பிள்ளை நித்ய நிவேதனத்திற்கு ரூ. 1000/- ஸமர்ப்பித்தார்.

20-7-69. பெங்களூர், பதங்கர் ஹவுஸில் புருஷஸூக்த, ஸ்ரீ ஸூக்த மஹா ஸுதர்சன மந்த்ர ஜபங்கள் நடத்தி வைத்தது. பம்பாய் கதாதர ஸோமானிஸேட் திரவ்ய ஸஹாயம் செய்தார்.

13-10-69. பெங்களூர், ஜயநகர் ஸ்ரீராமாஞ்ஜனேய ஸன்னிதியை அடுத்து ஸ்ரீ ஆண்டாள், ரங்கமன்னார் ஸன்னிதி நிர்மாணமும் அதனையொட்டி ஒரு கல்யாண மண்டபமும் கட்ட திருவுள்ளம் பற்றி அதற்கான கால்கோள்விழா (foundation — stone Laying) விழா மதுரை T. V. S. சேர்மன் ஸ்ரீ T. S. ராஜத்தைக் கொண்டு செய்விப்பித்தது.

1-1-70. திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிக்கு ரூ. 3500/- விலையுள்ள அங்கியும், திருவள்ளூர் வீரராகவனுக்கு பல்லக்கும் ஸமர்ப்பித்தது.

6-2-70. ஸ்ரீரங்கத்தில் ஆசிரமத்திற்குச் சொந்தமாய் வடக்குச் சித்திர வீதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியில் ஆசார்யன் மஹோத்ஸவத்தில் வீதி புறப்பாடு கண்டருள ஒரு யானை வாஹனம் சமர்ப்பித்து திருவீதி உத்ஸவம் கண்டருளியது.

15-2-70. தஞ்சாவூர் ஜில்லா, மன்னார் குடியில் ஹரித்ராநதி மேல்கரையில் 24நெ கிருஹத்தில் நமது பாதுகாச்ரமமொன்று நிறுவியது.

1-4-70. திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதாழ்வானுக்கு அழகிய கண்ணுடி அறையை உள் வடக்கு ப்ராகாரத்தில் சேனை முதலியார் ஸன்னிதிக்கு இடது புறம் மேற்கு நோக்கிக் கட்டப்பட்டது. 1-4-70 அன்று காலை அதன் திறப்புவிழா. T. V. S. ஸ்தாபன சேர்மன் ஸ்ரீ T. S. ராஜம் திறந்து வைத்தார். சென்னை அறநிலைய டிப்டி கமிஷனர் தலைமை தாங்கினார். கண்ணுடி யறையில் அமுதனும் தேசிகனும் சேர்ந்து எழுந்தருளியது. திருக்குடந்தை கால்டெக்ஸ் ஸ்வாமிமூலம் இத்திருப்பணி நடந்தது.

26-4-70. திருக்குடந்தை ஸம்பரதி வைத்யநாதன் தெருவிலிருக்கும் ஆசிரம கோமளவல்லி கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ ஆராவமுதன், சக்ரவர்த்தித் திருமகன், சக்கரத்தாழ்வான் எம்பெருமான்களை எழுந்தருளப் பண்ணியது.

17-5-70 நாச்சியார் கோவிலில் ஸ்ரீ வஞ்சுள வல்லித்தாயார் மஹா ஸம்ப்ரோக்ஷணம்.

இந்த திவ்யதேசம் திருக்குடந்தையிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ளது. திருமங்கை மன்னனுக்குத் திருவிலச்சினை (ஸமாச்ரயணம்) செய்து வைத்த திவ்யதேசமென்பர். அவனால் 100 பாசுரங்கள் பாடப் பெற்ற பெருமை படைத்த திருத்தலம். செங்கணச் சோழன் என்கிற சோழமன்னனால் மணிமண்டபங்கள் கட்டப்பட்ட திருக்கோயில். மணிமுத்தாறு என்கிற சிற்றாறு இந்த ஸன்னிதியை அணைத்துச் செல்லுகிறது. ''நாச்சியார் கோவில்'' என்று இத்தலம் வழங்கி வருதலால் இங்குறையும் ''வஞ்சுளவல்லித் தாயாரின்'' ஏற்றம் சொல்லாமலே விளங்கும். வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன் என்கிற வ்யூஹமாய் ப்ரஹ்மாவோடு ஸேவை ஸாதித்தருளும் நம்பி தன் இன்னிளவஞ்சிக் கொடியோடு நிற்கிற இத்தலத்தின் ஸம்ப்ரோக்ஷணத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு மட்டற்ற ஈடுபாடும் மகிழ்ச்சியும் உண்டு. சிலாரூபங்களான இந்த பிம்பங்களுக்குத் திருமஞ்சனம் இல்லாமையாலேயும், தொடர்ந்து பல ஆண்டுகள் தைலக் காப்பிட்டதாலேயும், இந்த திருமேனிகளில் அசடு ஏறி ஏறி, பிம்பங்களின் உண்மை உருவமும் அழகும் மறைந்து பருத்துக் காட்சியளித்தன. இந்த கசடு, அசடுகளையெல்லாம் சில்பிகள் களைந்து அகற்றிப் பார்த்தபோது, உண்மையிலேயே மிக அழகான சிலை உருவங்களாக வெளிப்படுத்தித் தந்தனர். 'நம்பி' என்கிற சொல்லின் நிறைவை, உண்மையை பிம்பத்தின் வடிவழகிலே காணலாம்படி இருக்கிறது.

இதன் அங்கமாக ஸ்ரீமதாண்டவன் யாக சாலைக்குப் பொன்னடிசாத்தி திவ்ய ப்ரபந்த ஸேவா காலங்களைத் தொடங்கி வைத்தார். 17-5-70 ஸம்ப்ரோக்ஷண தினத்தன்று காலையில் நம்பியை மங்களாசாஸனம் செய்திடப் புறப்பட்டபோது, கலியன் புகழ்ந்துரை செய்தபடியே, ''குலையார்ந்த பழுக்காயும், பசுங்காயும், பாளைமுத்தும், தலையார்ந்த இளங்கமுகின்'' கொத்துக்களும் தொங்கக் குலிங்கிட விளங்கும் அலங்காரப் பந்தலைக் கண்டுப் பூரித்தவண்ணம் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளினார்.

யாகசாலையில் உருக்குறு நறு நெய் கொண்டு ஆரழலில் அந்தணர்கள் ஆஹுதிகள் செய்கின்ற போது அதினின்றும் எழுகிற கொழும்புகை வானை மூட, நம்பி தம் நங்கை நல்லாளுடன் இதனை நோக்கி நிற்க, தூய பெருநீர் கொண்ட வேள்விக்குடங்களைத் தலைகளிலே தாங்கி அந்தணர் முன்னே செல்ல அவர்களுடே ஸ்ரீமதாண்டவன் அசைந்தசைந்து செல்ல, ஸம்ப்ரோக்ஷண வைபவம் இனிதே நடந்தேறியது. ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ வைஷ்ணவ குழாங்களுடனே பொலிந்து நின்ற நம்பியைப் பாடி பல்லாண்டு இசைத்த போது நம்பி மன நிறைவு கொண்டான் என்பதனை இயற்கை அன்று அறிவித்த விதம் அத்யாச்சரியமாயிருந்தது. அதுவரை மழை இல்லாமலிருந்து கோடையின் கடுமை அதிகமாய் அனுபவிக்கும்படி இருந்த இந்த திவ்யதேசத்தில் ஸம்ப்ரோக்ஷணத்தன்று மாலை வானம் குளிர்ந்து பூமியெல்லாம் கரைபுரண்ட வெள்ளக் காடாய்க் காட்சி அளிக்கும் வகையில் மழை கொட்டியது.

அன்றிரவு கல்கருடன்மேல் நம்பியையும், அன்னத்தின் மேல் ஸ்ரீவஞ்சுளவல்லித் தாயாரையும் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் செய்தருளினார். தாயார் பெருமாள் புறப்பாடு நடந்தது. நம்பி ''அணங்கெழு மாமலை போலத் தெய்வப் புள்ளேறி'' வருவதையும், ''கலையிலங்கு மகலல்குல் கமலப்பாவை கதிர்முத்த வெண்ணகையாள் கருங்கணைய்ச்சி'' வஞ்சிக் கொடி அன்னத்தில் அசைவதையும் கண்ணுரக்கண்ட ஸ்ரீமதாண்டவன் தம் வசமிழந்து கண்ணீர் மல்க இந்த சேர்த்தியின் அழகை கலியன் ''பெடை யோடன்னம் பெய்வளையார் தம்பின் சென்று நடையோடியலி நாணியொலிக்கும் நறையூரே'' என்று அனுஸந்தானம் செய்ததின் உண்மையை, அருமையை எண்ணி எண்ணி உருகின உள்ளத்தினராளர். அன்றைய நாதஸ்வர இசையிலும் அதிக ஈடுபாடு கொண்டு இசையை அனுபவத்தருளினார்.

31-5-70 இன்னம்பூர் ஸம்ப்ரோக்ஷணம்

தஞ்சை ஜில்லா திருக்குடந்தைக்கு அடுத்துள்ள இன்னம்பூர் என்கிற இடத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸன்னிதி ஜீர்ணோத்தாரண சம்ப்ரோக்ஷணைக்காக ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி, முற்றிலும் கூடவே இருந்து, இந்த வைபவங்களை எல்லாம் அனுக்ரஹித்து நடத்தி வைத்தார். கண்ணன் என்கிற ஸ்ரீ இராஜகோபாலய்யங்காரும், ஸ்ரீ அப்பு ஐயங்கார் ஸ்வாமியும் விசேஷ ச்ரத்தையுடன் ஸ்ரீமதாண்டவனையும், ஸம்ப்ரோக்ஷண கார்யங்களையும் திறம்பட நிர்வஹித்தார்கள்.

5-70. தஞ்சை ஜில்லா மன்னார்குடியை அடுத்துள்ள விளக்குடி என்கிற கிராமத்தில் ஸ்ரீகஸ்தூரிரங்கன் ஸன்னிதியில் கோயில் மதில் சுவர் கட்டுவதற்கு ஆரம்ப முஹூர்த்தம் ஸ்ரீமதாண்டவன் செய்தருளினார்.

3-9-70 தமிழ்நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ''திருக்குறுங்குடி'' என்கிற திவ்யதேசம் நம்மாழ்வார் முதலான நான்கு ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டிருக்கிறது. வராஹபுராணத்தில் வரும் கைசிக மாஹாத்ம்யத்தை எம்பெருமான் பூமிப்பிராட்டிக்கு எடுத்துரைத்த திவ்ய சரித்திரம் பொலிந்த திவ்யதேசம். நம்மாழ்வாரது அவதார விருத்தாந்தத்தாலும், திருமங்கையாழ்வார் திருமேனி ஸம்பந்தத்தாலும், ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்ப்ரதாயத்தாலும் மிகப்பெருமை வாய்ந்தது.



பெங்களூர் ஸ்ரீ இராமாஞ்ஜநேய
ஸன்னிதியில் ஸ்ரீ பகவத் ராமானுஜர்,
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் பெரியாண்டவன்

மயிலை ஸ்ரீ தேசிக பவனத்தில் வரவேற்பு





மதுராந்தகம் ஸ்ரீராமனுக்கு கிரீடம் ஸமர்ப்பிக்குமுன் ஊர்வலம்

பெங்களூர் - ஸ்ரீ இராமாஞ்ஜனேய கோவில் மூலவர்களும், உத்ஸவர்களும்





திருநாராயணபுரம் –
மேல்கோட்டை



பெங்களூர்
ஸ்ரீ பாதுகாச்ரமம்





பெங்களூர் ஸ்ரீ ஆண்டாள் ஸமேத ஸ்ரீ ரங்கமன்னர் ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷணம்

திருவரங்கத்தில் 60வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்



இவ்வளவு பெருமை கொண்ட திவ்ய தேசத்தில் உகந்து ஸேவை ஸாதித் தருளும் வடிவழகுநம்பியின் வடக்கு மாடவீதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ தேசிகன் ஸன்னிதி, பரகால மடத்தின் கீழிருந்ததை ஸ்ரீமதாண்டவன் தன் நிர் வாஹத்துக்குப் பெற்று ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியை ரூ 10,000 செலவில் ஸத்சிஷ்யர்களான T. V. S. ஸ்தாபனத்தார் உதவியைக் கொண்டு ஜீர்ணோத்தாரணம் செய்து 3-9-70 அன்று ஸம்ப்ரோக்ஷண வைபவத்தை நடத்தும்படி அனுக்ரஹித் தருளினர்.

21-8-70. ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீரங்கனா வித் யா ல யத் தி ன் முதல்வர் ஸ்ரீ அப்புள்ளாச்சார் ஸ்வாமி ஓய்வு பெற்று அவரது ஸ்தானத்தில் கன்னங்குளம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் ஸ் வா மி யை முதல்வராய் ஸ்ரீமதாண்டவன் நியமித்தார். இவர் ஓர் ஓய்வு பெற்ற உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர். இவரது பாட்டிதான் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீமதாண்டவனுகந்த ''கருடவாஹனப் பாட்டி'' என்பது குறிப் பிடத்தக்கது.

23-8-70. ஸ்ரீமதாண்டவன் திருவரங்க னுக்கு முத்தும் மணியும் பதித்த கஜலக்ஷ்மி பதக்க மொன்றை ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் செய்தருளினர். உபயம் மதராஸ் ஸ்ரீ T. M. ரகுநாதன் அவர்கள்.

28-8-70 ஸ்ரீ ரங்கனுதன் திவ்யமணி பாதுகையைப் புதுப்பித்தது.

திருஅரங்கநகரப்பனது பாதுகைகள் தான் நமது ஸ்ஸம்ப்ரதாயத்தின் முத்திரை-இலச்சினை. (Emblem) ''ரங்கனுத திவ்ய மணி பாதுகாப்யாம் நம:'' என்றே நாம் நாள்தோறும்தொழுதேத்துவது. பாதுகா ராதனம் ஒன்றே நமது ஆசிரமத்தின் தனிச்சிறப்பு. அரங்கனது திவ்யமணி பாதுகைகளின், தங்கக் கவசம் காலத்தால் நலிந்து போய், அதனைப் புதுப்பிக்கவேண்டி ஸ்ரீரங்கனுததேவஸ்தான டி ர ஸ் டி கள் யாத்ரையில் இருந்த ஸ்ரீமதாண்டவனை மைசூரில்கண்டுநிறைவேற்றித்தர வேண்டிய போது ஸ்ரீமதாண்டவன் உடனே ரூ 10,000 உவந்தருளினர். டிரஸ்டிகள் தங்களது பொறுப்பிலேயே அவைகளைச் செப்ப னிட்டு நன்கமைத்த கவசங்களை 28-8-70 அன்று அரங்கனுடைய திருவடிகளில் பொருத்தினர்கள். ஸ்ரீமதாண்டவன் தனது சிஷ்யர்கள் குழாங்களோடு பெரியாச்ரமத் திலிருந்து எழுந்தருளி அழகிய மண வாளனை மங்களா சாஸனம் செய்தருளி னர்.

17-10-70 திருவரங்கத்தில் ஸ்ரீதேசிகன் ஸன்னிதி ஜீர்ணோத்தாரணம்

நமது பெரியாச்ரமத்திற்குச் சொந்தமாய் திருவரங்கம் வடக்குச் சித்திர வீதியில் தூப்புல்வள்ளல், ஸ்வாமி தேசிகனின் ஸன்னிதியொன்று இருக்கிறது. அதன் முகப்பும் சுற்றும் புறமும் மிகப் பழுதடைந்து விட்டது. மேலும் ஸன்னிதியின் முன் தோற்றம் மிடுக்கிலாமலும் இருந்தது. ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளிய சிஷ்ய க்ருத்யங்களுக்கு ஒரு இலக்கணமாய்த் திகழ்ந்து, ஸதாசார்யர்களுடைய மேன் மையை, பெருமையை, அவர்கள் காட்டிக் கொடுத்த தொல் வழியை, காலமெல்லாம் நடந்து சென்று ஞாலமெல்லாம் சாற்றி வளர்த்துவரும் ஸ்ரீமதாண்டவன் இந்த ஸன்னிதியின் முகப்பிலே ஒரு மண்டபம் கட்டி, விமானத்தில் பழுதுபோன பிம்பங் களைச் சரி செய்து ஆசார்யன் ஸன்னிதியை ஜீர்ணோத்தாரணம் செய்தருள திருவுள்ளங் கொண்டார்.

அரசாங்கத்துணைப் பொறியாளராய்ப் (Assistant Engineer) பணியாற்றி ஓய்வுபெற்ற திருவரங்கம் ஸ்ரீ அரங்கநாத அய்யங்கார் ஸ்வாமியின் ஆலோசனையும், துணையும் கொண்டு விசாலமான காங்க்ரீட் மண்ட பமும், மண்டபத்தின் முகப்பில் வலுவுள்ள இரும்பு கிராதிகளும், கட்டி முடித்து விமானமும் பழுது பார்க்கப்பட்டு, பிம்பங் களும், சரி செய்யப்பட்டன. ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷணம் 17-10-70 சனிக்கிழமை தொடங்கி 19-10-70 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் 10-30மணிக்குள் நடந்த தேறியது. பாராயணங்களில் அந்வயித்த வ்யக்திகளுக்கு வாரி வழங்கினர் ஸ்ரீமதாண் டவன்.

ஒவ்வொரு திங்கள் சிரவணம் தோறும் ஸ்வாமி தேசிகனுக்குத் திருவீதி புறப்பாடு நடத்தி வருவதால், வாரைகள் தேய்ந்து போய், தோளுக்கினியானும் பழமையாய் நலிந்து போனதாலே அவைகளைப் புதுப் பித்துத்தர திருவுள்ளம் பற்றிய ஸ்ரீமதாண்டவன் இதற்கான செயலை முன் கூட்டியே திட்டமிட்டார்.

நமது ஆசிரமத்தில் வழக்கில் இல்லாத வெள்ளிப்பாத்திரங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தன. 10 கிலோ எடையுள்ள வெள்ளிப் பாத்திரங்களை ஒன்றுகத் திரட்டிக் கொடுத்து இத் திருப்பணியைச் செய்ய நியமித்தாயிற்று. இங்ஙனம் ஸ்வாமி தேசிகனுக்கு வெள்ளியில் தோளுக்கினி யானைச் செய்ய திருக்குடந்தையில் ஆசிரம சிஷ்யர்களும்-ஷராப் வியாபாரிகளுமான-(K. G. S. & Sons) நிறுவனத்தில் ஒப்படைத் தாயிற்று. அன்றைய விலையில் அதன் மதிப்பு ரூ 10,000 ஆகும்.

தோளுக்கினியானுக்குரிய வாரையை 19-3-70 முதல் 25-3-70 வரை திருக் குடந்தைக்கடுத்த நடுவக்கரை ஸ்ரீ வங்கீ புரம் (சோகத்தூர்) டாடா ஆயில் மில்ஸ் V. ரங்காச்சாரியார் திருமாளிகையில் எழுந்தருளியிருந்தபோது தனது பார்வை யில் பட்ட வயது முதிர்ந்த ஒரு ஆலமரத்தின் பருத்த விழுதுகளைக் கொண்டு அதற்குத் தேவையான நீளத்தில் வெட்டிப் பதனிட்டு (seasoning) திரு வரங்கத்திற்கு T. V. S. லாரி மூலம் அனுப்பி யாயிற்று.

ஸ்ரீ தேசிகன் ஸன்னிதி ஸம்கூப்ரோணத் தன்று ஆசார்யனை புது வெள்ளித் தோளுக்கினியானில் எழுந்தருளப்பண்ணி, மன்னர்குடி பெருநிலக்கிழார் K. R. M. எஸ்டேட் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ G. பால கிருஷ்ண முதலியார் மனமுவந்து அனுப்பிய இரண்டு டின் இலுப்பை எண்ணெயைக் கொண்டு ப்ராசீனமான முறையில் தீவட்டிகள் பிடிக்கச் செய்து ஒளியை அள்ளி எங்கும் வீசும்படி பண்ணி ஸ்வாமி தேசிகனுக்கு புறப்பாடு கண்டருளப் பண்ணினர்.

ஸ்ரீரங்கம் பெரிய கோவில் அர்ச்சக மிராசு ஸ்ரீ இராகவபட்டரும், ஸ்ரீ ரங்கராஜப்பட்டரும் பிரதிஷ்டைகளையும், ஸம்ப்ரோக்ஷணத்தையும் வைதீக முறையில் மிகவும் சிரத்தையோடு செய்தார்கள்.

29-11-70 பெங்களூரில் ஸ்ரீஆண்டாள் ஸன்னிதி பிரதிஷ்டையும் கோயில் நிர்மாணமும்

பங்களூர் ஜயநகரில் சிறிய திருவடிக்கு ஒரு கோவிலும், அந்த ஸன்னதிக்கு எதிரில் மண்டபத்திலேயே சக்ரவர்த்தித் திருமகனுக்கு ஒரு கோவிலும் முன்பே ஸ்ரீ கருடாச்சாரியர் உபகாரத்தினால் கட்டி முடித்து பிரதிஷ்டையானது பிறிதொரு இடத்தில் அறிவித்தாயிற்று. மற்றுமொரு தார்மிகர் அதன் பக்கத்திலேயே 120 அடி 45 அடி பரப்பளவுள்ள ஒரு இடத்தை வாங்கி ஸ்ரீமதாண்டவனிடம் ஸமர்ப் பித்தார். பெங்களூர் ஆஸ்திகப் பெரு மக்கள் ஸ்ரீமதாண்டவனது திருப்பாவை சொற்பெருக்கில் திளைத்தவர்களாதலால் ஸ்ரீ ஆண்டாள் ஸன்னிதியொன்று கட்டித்தர வேண்டுமென்று பிரார்த்தித் தனர். ஸ்ரீமதாண்டவன் திருக்குடந்தை யிலிருந்து சிறந்த சில்பிகளைக் கொண்டு ஆண்டாள்-ரங்கமன்னர் உத்ஸவ விக்ர ஹங்களை எழுந்தருளப் பண்ணினார். மூல விக்ரஹங்களை பங்களூரிலேயே உருவாக் கும்படி பணித்தார். முன் சொன்ன இராமாஞ்ஜநேய ஸன்னிதியின் தென் பாகத்தில் இந்த ஆண்டாள் ரங்கமன்னர் ஸன்னிதியும் கட்டியாய்விட்டது.

மேலும் மஹாமண்டபம், கல்யாண மண்டபம், ஸன்னிதி முகப்பில் கம்பீரமான இராஜகோபுரம் இவைகளைக் கட்ட வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி அதற் குரிய வருமானத்தை வேண்டி விசேஷ மலர் (Souvenir) ஒன்றை பல வித்வான்களுடைய அறிவுதரும் மொழி களுடன், ஈகை மனம் படைத்த பல பெரியோர்களுடைய தொழில் விளம்பரங் களுடன் அச்சிட ஏற்பாடு செய் தருளினர். அதற்குரிய முயற்சிகளில் T. V. S. அதிபர் ஸ்ரீ T. S. ராஜம் அவர்கள் பெரிதும் உதவினர். கொடுப்பதொன்றையே அறிந்த ஸ்வாமியே தன் கைப்பட விளம் பரங்கள்கேட்டு வேண்டுகோள் விடுத்த தால் வேண்டிய விளம்பரங்கள் குவிந்தன.

மேற்கொண்டு ஸன்னிதி நிதிக்காக ஒரு இன்னிசைக் கச்சேரியும், ஒரு நாட்டியக் கச்சேரியும் ஏற்பாடு செய்தனர். இன்னிசையை ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மியும், நாட்டிய விருந்தை ஸ்ரீ T. S. ராஜம் அவர்களின் பேத்திகளான குமாரிகள் ''அநீதா''வும்; ''ப்ரீதா''வும் வழங்கினர். இந்நிகழ்ச்சிகள் இரண்டும் பெங்களூர் டௌன்ஹாலில் நடந்தன. நிகழ்ச்சிகளைத் தலைமைதாங்கி நடத்திக் கொடுத்தவர்கள் அந்நாள் கர்நாடக மாநில ஆளுநர் ஸ்ரீ தர்மவீராவும், முதலமைச்சர் வீரேந்தபட்டீலும் ஆவார்கள். விசேஷ மலரையும் அவர்களே வெளியிட்டனர்.

இந்த ஆலய பிரதிஷ்டைக்காக ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கத்திலிருந்து வெகு வேகமாக 29-11-70 அன்று பெங்களூர் எழுந்தருளினர். ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீமான்கள் ராகவபட்டர், கோபுபட்டர் ரங்கராஜபட்டர், பெங்களூர் சம்பத் குமாரபட்டர் முதலியோர் குழுவாக சாலைப் பொறுப்புடன் மஹா ஸம்ப்ரோக்ஷண பிரதிஷ்டைகளைச் செய்து தந்தனர். வேதபாராயண, திவ்யப்ரபந்த பாராயணுதிகளுக்கு ஏராளமான வ்யக்திகள் பல ஊர்களிலிருந்தும் ப்ரஸன்னமாயிருந்தனர். ததீயாராதனை யதேஷ்டமாய் நடந்தன.

3-12-70 அன்று வழக்கமான பூஜைகளுக்குப்பின் கும்போத்தாபனம் பண்ணி மஹாஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீமதாண்டவன் முன்னிலையில் விமரிசையாய் நடந்தேறியது. இரவு ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் புறப்பாடு ஸ்பெஷல் நாதசுரக்கச்சேரியோடு நடந்தேறியது.

இந்த ஸன்னிதிகளின் நிர்வாஹத்தை இன்றும் ஒரு கமிட்டி ஸ்ரீ T. S. ராஜம் அவர்களின் தலைமையில் திறம்பட, வளர்ச்சியுற நடத்திக்கொண்டு வருகிறது.

நிர்வாஹஸ்தர்கள் வருமாறு:

ஸ்ரீமான்கள்.

1. T. S. ராஜம்
2. N. கிருஷ்ணன்
3. B. G. கருடாச்சார்.
4. அட்வகேட் கீழையூர் சாரங்கபாணி அய்யங்கார்.
5. டாம்கோ ரங்காச்சாரியார்.
6. டாக்டர் கஸ்தூரிரங்க அய்யங்கார்.
7. B. K. சீனிவாஸமூர்த்தி.
8. M. இராமஸ்வாமி அய்யங்கார்.
9. இஞ்சினியர் கிருஷ்ணமூர்த்தி.
10. இன்சினியர் கருடாச்சார்.
11. இன்சினியர் ராமண்ணா.
12. டாக்டர் கோரூர்.
13. H. R. இராமஸ்வாமி அய்யங்கார் முதலானோர்.

27-2-71. பங்களூருக்கு மேற்கே சுமார் 50 கி.மீ. தூரத்திலிருக்கும் ஸ்ரீ ராம நகரத்தில் ஸ்ரீ ராமன் ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷணத்திற்கென்றே எழுந்தருளி அனுக்ரஹித்தது.

28-8-71 நம்மாண்டவன் நூற்றுண்டு மஹோத்ஸவம்.

28-8-71 நம்மாண்டவன் நூற்றுண்டு விழா.

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் என்று தொடங்கி ஸத்ஸம்ப்ரதாய ஸம்ருத்தி பொங்க பொலிந்து நிற்கின்ற நமது பரம்பரையில், மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த மஹதாசார்யர்களுள் திலகமென விளங்கிய - தேரழுந்தூர் ஆண்டவன்; நம்மாண்டவன்; ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் என்றெல்லாம் அன்போடும், பக்தியோடும் அழைக்கப் பெற்ற ஆசார்யவள்ளலுக்கு அவரது நூறு ஆண்டு நிறைவு திருநக்ஷத்ரத்தைக் கொண்டாட அவருடைய மறு அவதாரமே என்று போற்றப்படுகிற ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம் பற்றினர். இந்த மஹோத்சவம் சுமார் 2 லக்ஷரூபாய் செலவில் திட்டமிடப்பட்டது. அதில் பெங்களூர் சிஷ்யர்களும், சென்னை அன்பர்களும் சிஷ்யர்களும் முக்கிய பங்கேற்றனர்.

அவர்களுக்குள்ளே ஒரு கமிட்டி நியமித்து கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நம்மாண்டவன் ஆசார்யரான ஸ்ரீ பாதுகாஸேவக இராமானுஜ மஹாதேசிகனது (சின்னண்டவன்) ஸ்ரீ கோசங்களை அச்சிட்டு வெளியிடுதல்.

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீமத் ரகஸ்யத்ரயஸாரமென்ற நன்னூலை ''ஸாராஸ்வாதினீ'' என்கிற வ்யாக்யானத்துடன் அச்சிடுவது.

நம்மாண்டவன் அவதாரஸ்தலத்தில் (தேரழுந்தூரில்) ஆமருவியப்பன் ஸன்னிதி தெருவில் ஒரு திருமண்டபம் நிர்மாணித்தல்.

அஷ்டாக்ஷர யாகம் நடத்துதல்.

ப்ரஹஸ்பதிகளுக்கென்று ஒரு ஸபையைக் கூட்டி அவர்களைக் கௌரவித்தல்.

வேத, திவ்யப்ரபந்த ஸேவா கோஷ்டிகளை கௌரவித்தல்.

பாதுகாச்ரமம் உள்ள திருவரங்கம், காஞ்சீ, மன்னார்குடி, பம்பாய், டில்லி முதலிய இடங்களில் இம்மஹோத்ஸவத்தை விமரிசையாகக் கொண்டாட திரவிய ஸஹாயமளித்தல்.

எதிர்பார்த்திருந்தபடி பொருள் வந்து குவிந்தது. சிஷ்யர்களுடையவும், அன்பர்களுடையவும், பக்தர்களுடையவும் ஊக்கமும், ஆக்கமும் கரைபுரண்டோடின. புத்தக வெளியீடுகள் திறம், செயல் கொண்டோர் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்ரீமத்ஸார வெளியீடு இன்றுவரை நிறைவேறவில்லை. ஸ்ரீ மதாண்டவன் நடத்திக்காட்டின இந்த பெரு வேள்விப் பெருவிழா தன்னில் ஸ்வாமியின் அபாரமான சக்தி எத்தகையது என்பது எல்லோருக்கும் புலனுயிற்று. அவற்றின் சில சிதறல்கள் இங்கே விவரிக்கப் படுகிறது.

அஷ்டாக்ஷர மஹாயாகம்.

பங்களூரில் நமது ஆசிரம நிறுவனத்திற்குக் காரணமாய் இருந்த ஸ்ரீமான் கருடாச்சார் ஸ்வாமியே இதற்கும் மனதந்து உதவினர். நமது 'ஆசிரமத்திற் கடுத்த மனையிலே வானுந்துகின்ற அழகிய திடமான பந்தலமைத்து அதில் சுமார் 5000த்துக்கும் மேல் பக்தர்கள் அமர வகைசெய்து, அதன் நடுவே 9 ஹோம குண்டங்கள் உருவாக்கினர்கள். வண்ண முள்ள மின் விளக்குகளும், பசுமையான பூந்தொட்டிகளும், அலங்காரமான தோரணங்களும், யாகத்தின் குறிக்கோள்களை விளக்கும் அட்டைகளும் (Card-boards) எம்பெருமான்கள் எழுந்தருளி வீற்றிருக்க ஒரு மணி மண்டபமும், ஆகிய இவையெல்லாம் விழாப்பந்தலுக்கு அழகும், பொலிவுமூட்டின.

கம்பீரமாக வடகலைத்திருமண் காப்பு பந்தலின் முகப்பிலே பிரகாசித்தது. ''நமோ நாராயணாய'' என்று வடமொழியில் தொகுத்த சொற்றொடர் ஒரு நியான் மின் விளக்கால் முகப்பில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மஹோத்ஸவக் கமிட்டித்தலைவர் ஸ்ரீ T. S. ராஜம் அவர்கள். தீவிர பங்கு பெற்றவர்கள், ஸ்ரீமான்கள் N. கிருஷ்ணன், டாம்கோ ரங்காச்சாரியர், H.R. ராமஸ்வாமி அய்யங்கார், H. K. இராமானுஜம், Dr. கஸ்தூரி, சென்னை வழக்குரைஞர்கள் K. சீனிவாசன், M. சீனிவாசன், ஸ்ரீனிவாஸ வரதாச்சார், M. V. இராமசேஷன் (UCO Bank) முதலானோர்.

பந்தலமைப்பு அலங்காரம் முதலியவற்றின் பொறுப்புகளை T. V. S. ஸ்தாபனத்து ஸ்ரீனிவாஸ கோபாலனும், அப்பண்ணவும் ஏற்றார்கள். அலுவலக, நிதிப் பொறுப்புகளை விளக்குடி ரங்கராஜனும், ஸ்ரீராகவனும், வைதிக ஹோம கர்மாக்களை திருவரங்கம் ஸ்ரீ ராகவபட்டர் தலைமையில் 9 பட்டர்கள் ஏற்று நடத்தித் தந்தனர்.

விழா நிகழ்ச்சிகள்.

தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் இருநூற்றுக்கும் மேலான ஸ்ரீ வைஷ்ணவ பாகவதோத்தமர்கள் அழைக்கப் பெற்று வந்திருந்தனர். 28-8-71



முன்னுள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பாவுடன்

தொழிலதிபர்களுடன்





பெங்களூர் ஜெயநகர்
ஸ்ரீ இராமாஞ்ஜனேய ரங்கமன்னர்
ஸன்னிதி இராஜகோபுரம்



பெங்களூர்
ஸ்ரீரங்கமன்னர் ஸ்ரீ ஆண்டாள்
திவ்யமங்கள விக்ரஹங்கள்



அஷ்டாக்ஷர யாக
ஆலோசனைக் குழு



சென்னை, 'ஸ்ரீ பாதுகா சாரிடீஸ்' நடத்தும் ஸுஜாதா தர்ம மருத்துவ சாலை'யை கவர்னர் ஸ்ரீ பிரபுதாஸ் பட்வாரி திறப்பு



ஸ்ரீமதழகியசிங்கரோடு திருவரங்கம்
இராஜகோபுர நிர்மாண ஆரம்ப
மஹோத்ஸவத்தில்



கர்னாடக அரசு ஸ்ரீமதாண்டவனுக்கு அளித்த
கஜேந்த்ரன்



பெங்களூரில்
ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப கோஷ்டி



சென்னை ஆளுநர் ஸ்ரீகாட்டியாவுடன்



வீணை பாலசந்தருக்கு ஸம்பாவனை



அஷ்டாக்ஷரயாகம்–பெங்களூர் யாகசாலை
அடுத்துள்ளது ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்



அஷ்டாக்ஷர ஜபம்

தொடங்கி 5-9-71 வரை ஒவ்வொரு நாள் காலையிலும் இவர்கள் எல்லோரும் யாக மண்டபத்திற்கு எழுந்தருளி, அங்கு அஷ்டாக்ஷரஜபம் செய்து, அஷ்டாக்ஷர ஹோமத்தில் அன்வயித்து, பசும்பாலில் அஷ்டாக்ஷரதர்ப்பணம் செய்து, கடைசியில் புருஷஸூக்த ஹோமமும், ஸ்ரீஸூக்த ஹோமமும் செய்த பின்னர், பூர்ணஹ்ருதியோடு அன்றைய யாகம் பூர்த்தியாயிற்று. மதியம் 3 மணிக்கு, வேத திவ்யப்ரபந்த சுரந்த பாராயணங்கள் முடிந்து, ஸாயம் அனுஷ்டானங்களுக்குப் பிறகு ஹோமமும் காலையில்போலே நடந்து பூர்ணஹ்ருதியோடு அன்றுட நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

யாக மண்டபத்தின் மிடுக்கு.

கம்பீரமான முறையில் ஓதப்படுகிற வேத-திவ்யப்ரபந்தசுரந்த பாராயணங்களின் இன்னிலையும்; யாகங்கள் செய்கின்ற போது ரித்விக்குகளின் மந்த்ரோச்சாரண நல்லொலியும்; யாகத்தைக் கண்டுகளிக்க வந்த எண்ணிலடங்கா எழிலரசிகளின் சிரிப்பொலியும், சிலம்பொலியும், மிழற்றொலியும்; பக்தர்களைத் தாங்கி வரும் விதவிதமான எழில்மிகு ஊர்திகள் உண்டாக்கும் விசித்திர ஒலியும்; அந்தணர்கள் கேட்கும் யாகப்பொருள்களை அவ்வப்போது விரைவாக வழங்கிவரும் தொண்டர்களின் பரபரப்புமிக்க ஒலியும்; ஜனநெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கும் ஒலிபெருக்கியின் அலற்றொலியும்; போட்டி போட்டுக்கொண்டு பொன்னும், பொருளும் வழங்கும் அன்பர்களின் ஆர்வமிகு ஒலியும்; யாக மண்டபத்திலே பிரதிபலிக்க, இவையெல்லாம் சேர்ந்த இம்மண்டபம் ஸாமகானம் ஒலித்துக்கொண்டிருக்கும் நித்யசூரிகள் நிரம்பிய நீள் பெரு விசும்பு (ஸ்ரீவைகுண்டம்) இம்மண்டபத்தில் நிலங்கொண்டதோ என்னும்படி இருந்தது.

யாக ஸங்கல்பம்

மஹாயாகத்தின் ஸங்கல்பத்தை ஸ்ரீமதாண்டவனே ஸாதித்தருளினார். பாரத தேசத்தில் சாந்தி நிலவவும், மக்களிடையும், நாடுகளிடையும் நல்லுறவுகள் நீடிக்கவும், நல்லோர்கள் நலம் பெறவும், ஆஸ்திகர்களிடையில் அறம் ஓங்கி, அழுக்காறு அகலவும், வடமொழி அதன் வளம் குன்றாது பொலிந்து நிற்கவும் இவ்வாஷ்டாக்ஷர ஜபம், யாகம், தர்ப்பணம் செய்யப்படுகிறது என்கிற பெருநோக்கு கொண்டதாயிருந்தது இப்பெரு வேள்வியின் உன்னத உறுதியும் குறிக்கோளும்.

விருந்தோம்பல்

இதில் பங்குகொண்ட பாகவதோத்தமர்களுக்கு புத்தாடை வழங்கியதும், அவர்களுக்கு அறுசுவை உண்டி உவந்து அளித்ததும், பாராயண ஸமயங்களில் அந்தணர்களுக்குச் சூடான பசும்பால் தவறாமல் தந்தருளியதும், அகனமர்ந்து இவர்களது வேண்டுகோளைச் செவிசாய்த்து முகனமர்ந்து அவைகளைச் செய்து கொடுத்ததும், யாகம் நடத்துதற்குரிய இலக்கணமேயன்றோ! அவைகளில் ஒன்றுகூட நழுவாமல் செய்து தந்தார் ஸ்ரீமதாண்டவன்.

27-8-71 அன்று ஆரம்பித்து திருமடப் பள்ளியிலே தீ மூட்டிய அடுப்புகள் 6-9-71 விழா பூர்த்தியாகும் வரை ஜ்வலித்துக்கொண்டே இருந்தது. அணைக்க முடியவில்லை. சுமார் 25 பேர் கொண்ட சமையல் குழுவினர் அறுசுவை உண்டியை அவ்வப்போது ஆக்கிப்படைத்ததும், ஒரு ஆள் உயரம் உள்ள பல பாத்திரங்களில் பதார்த்தங்கள் வற்றாது இருந்தமையும், அவைகளைப் பகிர்ந்து வயிறுறப்பரிமாறிய சீர்மையையும் கண்கூடாய்க் கண்டவர்கள் இவையெல்லாம் மனிதநிலையில் செய்யப்படுவன அல்ல என அன்று பேசிப் பரவசப் பட்டனர். சாலகங்களில் கழிநீர்களுடன் நெய்யும் கலந்து போனது. அது இரவுகளில் தோய்ந்து நெய்யாறு போல் தோற்றமளித்தது. மேலும் சாலகங்களில் தண்ணீர் பெருக்கு இதனால் தடைப்பட்டுப் போனதால் வெந்நீரைக் காய்ச்சி சாலகங்களில் ஊற்றி தண்ணீர் போக ஒவ்வொரு நாளும் வகை செய்யவேண்டி இருந்தது.

யாகசாலைகளுக்கு வேண்டிய நைவேத்யங்கள், பக்ஷ்யங்கள் முதலியவறைத் தனியே

கோயில் திருமடப்பள்ளியில் செய்துதர ஏற்பாடாயிற்று.

ஆஸ்திகர்கள் கட்டுப்பாடு

இங்ஙனே பாகவத ததீயாராதனம் குறைவின்றியிருக்க குழுமியிருந்த ஜனத் திரள் நடுவே அவர்களுக்குப் பிரஸாத வினியோகம் செய்யும்போதும், அவர்களே வரவேற்று அமரச்செய்து எல்லோரும் யாகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் காணவகை செய்யும்போதும், நிகழ்ச்சிகள் முடிவுற்று நெரிசலோ அல்லது நலிவோ யாருக்கும் ஏற்படா வண்ணம் குழுமி யிருந்தோரில் குழந்தைமுதல் குவலயங் கண்ணியரோடு கோமான்கள் வரை சுகமாய் வெளியேறவும் வகை முறைகள் மிக நேர்த்தியாகக் கையாளப்பட்டன.

ஸ்ரீமதாண்டவன் ஸான்னித்யம்

யாகப்பந்தல் நடுவே நடுநாயகமாய் எழுந்தருளி, செங்கோலுடைச் சீரரங்கன் போல முக்கோல் பிடித்த முனிவன் ஸ்ரீமதாண்டவன் யாகசாலையினூடே உலவி வந்து, ''எளிமை'' என்கிற குண விசேஷம் ஓர் வடிவு கொண்டதோ என்னும்படியாய் காட்சிக்கு மிக அளிய னாய், எளியனாய், யாககார்யங்களில் யாவற்றிலும் துல்லியமாய் கண்ணும் மனமும் செலுத்தி, கண்ணன் போல் புரையறக் கலந்து பரிமாறி, இராமன் போலே வேள்வியைக் காத்து, பொங்கிலங்கு புரி நூலும் காவியுடையும் தாழ, அந்த யாகசாலையில் ஒளிவீசும் கதிரவ னெனக் காட்சிதந்து, யாகத்தின் ஒவ்வொரு அம்சமும் குறைவற்றிருக்க வேண்டுவன எல்லாம் செய்துதந்து, ஸத்யஸங்கல்பனை எம்பெருமான் உருவெடுத்து நம்மிடையே உலவுகின்றானே என்று எண்ணுமளவிற்கு கற்பனைக்கு மெட்டாத வகையில் அதிமானுஷசேஷ்டிதமாய் இந்த மஹா யக்ஞத்தைத் தலைக்கட்டி, ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியிலே அகமகிழ்ந்து, விருந்தோம் பலில் நம்மாண்டவன் திருவுள்ளத்தை அப்படியே செயல்படுத்தி, மண்ணும் விண்ணும் வியக்கும் வண்ணம் ஒவ்வொரு நாளும் அருளுரைகள் ஸாதித்தருளி, ஒப்பாருமிக்காருமில்லா ஸதாசார்ய ஸார்வ பௌமனாய் காட்சிதந்த ஸ்ரீமதாண்டவன் பண்பை - பெருமையைப் பேசவோ அன்றி எழுத்தில் வடிக்க இயலவே இயலாது.

பூர்ணாஹுதி

பூர்ணாஹுதி தினமான 5-9-71 அன்று பக்தர்களின் ஆர்வமும், எண்ணிக்கையும் கட்டுக்கடங்காத வகையில் பெருக் கெடுத்துத் திகழ்ந்தன. இதன் நடுவே காணிக்கையிட்டு நிற்கும் அன்பர்கள் சாந்தமும், பூவும், பொன்னும் மணியும், தேனும் பாலும், அணிகலமும், ஆடையும், பொருளும் தானியமும், ஓங்கி யெழும் நிறை வேள்விச் சுடரிலிட்டு தாங்கள் நிறைவுபெறத் தேங்கியிருந் தார்கள். குறிப்பிட்ட நேரம் வந்தபோது ரித்விக்குகளின் ஒருமித்தகோஷம் வானைப் பிளக்க, பேரிகைகள் முழங்க, ஜனங்கள் எல்லோரும் ஒருமுகமாய்ச் சரண்யனுடைய திருநாமங்களே ஓங்கி உரைத்திட பூர்ணாஹுதி நடந்தேறியது. பூர்ணாஹுதி யின் ஜ்வாலை சுமார் 18 அடி உயரம் கொழுந்துவிட்டுப் பிரகாசித்தது. ஹோமத்துக்குரிய உறுக்குறு நறு நெய் காவேரியில் தண்ணீர்போலே தட்டுப் பாடில்லாமல் கரைபுரண்டோடியது.

அவபிருதம்

பூர்ணாஹுதி முடிந்து கும்பங்களில் நிறைந்த தீர்த்தத்தால் கூடியிருந்த சுமார் 15,000க்கும் மேலான மக்களின் நடுவே, நாற்திசையும் சுற்றி வந்து ஸ்ரீமதாண்டவன் அவர்களே ப்ரோக்ஷித் தருளி, வைதிகர்கள், ரித்விக்குகள், அன்பர் கள் இவர்கள் நடுவே நாதசுவர இசை முன்னே வர லால்பாக் தோட்டத்திலுள்ள மடுவில் ஸ்ரீமதாண்டவன் அவபிரத ஸ்னானம் கண்டருளினார். கட்டுக்கடங்காத உணர்ச்சியுள்ள ஜனத்திரளே ஸ்ரீ T. S. கிருஷ்ணா கட்டுப்படுத்தினார். இவ்வண்ணம் அஷ்டாக்ஷரயாகம் சிஷ்யர்களின் ஏகோபித்த ஒத்துழைப்பாலும், ஆசார்யர்களுடைய அருளினாலும் ஸ்ரீமதாண்டவனது புனித மிகு ஸான்னித்யத்தாலும் இனிதே நடந் தேறியது. பாகவதோத்தமர்களுக்குக்

கைநிறைய ஸம்பாவனையோடு யாகசாலையில் அன்வயித்த ஸ்வாமிகளை வைத்து எடுத்த ஒரு புகைப்படமும் ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹித்தருளினார்.

இதற்கு அடுத்த நாளே 6-9-71 தொடங்கி ஸ்ரீமதாண்டவனுக்குக் கண் எச்சில் (த்ருஷ்டி) பட்டதேபோல் பிரமாதமான நோய் சாத்திக்கொண்டு ஒரு மாத காலம் மிகவும் சிரமப்பட்டார்.

சென்னை மயிலையில் ஆசிரமம்

15-9-71 அன்று சென்னை மயிலாப்பூர் தேசிகாச்சாரியர் ரோடில் ஸ்ரீமதாண்டவன் நூதன ஆசிரம மனை முஹூர்த்த விழா ஸ்ரீ ஸுதர்சனமய்யங்கார், ஸ்ரீ T. S. ராஜம் அவர்களால் செய்யப்பட்டது.

8-10-71. திருநாராயணபுரத்தில் ஆசிரமம் ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவன், ஸாக்ஷாத் ஸ்வாமி பிரதிஷ்டை

மைசூர் மாநிலத்தில் திருநாராயணபுரம் என்றும் மேல்கோட்டை என்றும் சொல்லப்படுகிற இடம் எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் முதலான பரமாசார்யர்களுக்குப் பல காலம் புகலிடம் கொடுத்து பெருமைவாய்ந்த திவ்யதேசம். ஸ்ரீமதாண்டவன் ஆசார்ய பரம்பரையில் அனுஸந்தானம் பண்ணப்படுகிற ஸாக்ஷாத் ஸ்வாமி என்கிற ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அவதரித்த புண்ணியபூமி. ''இருபத்துநாலாயிரப்படி'' என்று நமது பரம்பரையில் காலக்ஷேபம் பண்ணப்படுகிற திருவாய்மொழியின் வியாக்யானகர்த்தா. இந்த ஸ்வாமி பிருந்தாவனம் கண்டருளியது தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியை அடுத்த வடுவூர் என்கிற சிற்றூர். இந்த திவ்யதேசத்தில் ஸ்ரீ செல்லப் பிள்ளை ஸன்னிதி தெருவில் இருக்கும் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியை யொட்டி ஒரு ஆசிரமம் நிறுவப்பட்டது. இதற்கு சென்னை M. D. பிரதர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனமய்யங்கார் ஸ்வாமி திரவியஸஹாயம் செய்தருளினார். இந்த ஆசிரமத்தில் தினந்தோறும் பகவதாராதனம் செய்யவேண்டுமென்றும் அங்கு அவதரித்த ஸாக்ஷாத் ஸ்வாமிக்கு அர்ச்சையில் பிம்பம் பிரதிஷ்டை செய்யவும் திருவுள்ளம் பற்றி, கோவில் ஸ்ரீ ஸம்பத்குமார பட்டரைக் கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனையும், ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமியையும் பிரதிஷ்டை செய்வித்தார்.

பிரதிஷ்டைக்கு மைசூர் வித்வான் கோபாலாச்சாரியரும் மாண்ட்யா இராம ஸ்வாமி அய்யங்காரும் கூட இருந்து பிரதிஷ்டா கார்யங்களை நிர்வஹித்தனர். உபய வேத பாராயணமும் நடந்தது. ஸ்ரீமதாண்டவன் 9-2-70ல் இங்கு பொன்னடிசாத்தி அனுக்ரஹித்தாயிற்று.

நவம்பர் 71. ஸ்ரீமதஹோபிலமடம் ஸ்ரீமதழகிய சிங்கருக்கு வரவேற்பும் முதல் சந்திப்பும்.

18-10-71 அன்று பெங்களூருக்கு அஹோபிலமடத்து ஜீயர் ஸ்ரீமதழகிய சிங்கர் எழுந்தருளி துளசி தோட்டத்தில் முகாமிட்டு இருந்தார். ஜயநகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாண்டவனைச் சந்திக்க வேண்டுமென்கிற தன் ஆவலை ஸ்ரீமதாண்டவனுக்குத் தனது ஸ்ரீ கார்ய ஸ்வாமி மூலம் அறிவித்தார் ஸ்ரீமதழகிய சிங்கர். இதனைக்கேட்ட ஸ்ரீமதாண்டவன் மறுநாள் காலையிலேயே பாதுகாராதனம் முடிந்த பிறகு ஜயநகரிலிருந்து ஸ்ரீமதழகிய சிங்கர் முகாமிட்டிருக்கும் துளசி தோட்டத்திற்கு சிஷ்யர்கள் புடை சூழ எழுந்தருளியாயிற்று. முகாமின் முகப்பில் ஸ்ரீமதாண்டவனை சத்ர சாமர மரியாதைகளோடும் பூர்ணகும்பத்தோடும், ஸ்ரீ மடத்து ஆஸ்தான வித்வான்கள், ப்ரமுகர்கள், சிஷ்யர்கள், அன்பர்கள் உத்ஸாகமாய் வரவேற்க, திருச்சின்னமும் மங்கள வாத்யமும் முழங்க ஸ்ரீமடத்துக்குள் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளிய ஸமயம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸமாச்ரயண-உபதேசாதி கார்யங்களில் ஈடுபட்டு இருந்தமையால்தான் ஸ்ரீமதாண்டவனை எதிர்கொள்ள இயலாமல்போயிற்று என்று சமாதானத்தோடு முகமன் கூறி ஸ்ரீமதாண்டவனை வரவேற்றார்.

பிறகு ஸ்ரீ மாலோல நருஸம்ஹனின் அபிகமன ஆராதனத்தை ஸ்ரீமத் ஜீயர் வெகு விமரிசையாக நடத்தினர். ஸ்ரீமதாண்டவனே மிகுந்த வாத்ஸல்யத்தோடு அருகே அழைத்து திவ்ய தேசத் தெம்பெருமான்களையும், அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் மற்றும் ஆசார்ய வள்ளல்களையும் ஸேவிக்கப் பண்ணினர். பின் ஸ்ரீமதாண்டவனே தன் பக்கலில் எழுந்தருளப்பண்ணி அளவளாவினர். ராமானுஜ தர்சனத்தின் இரண்டு கண்க ளென ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற இரு ஆசார்யர்களுடைய சேர்த்தி அன்று வெகு நேர்த்தியான அபூர்வமான காக்ஷியாய் அமைந்தது.

ஸ்ரீமதழகியசிங்கர் பல காரணங்களை தனக்கே உரித்தான ஹாஸ்யத்தோடும், மிடுக்கோடும் ஸாதித்தருளி ஸ்ரீமதாண்ட வன் ஸஞ்சாரத்தைக் கால்நடையாகவே நிர்வஹித்தருளுவதை நிறுத்தித் திரு மேனிக்கு நலிவும் சோர்வும் இல்லாமல் வாஹனத்திலே தன்னைப்போல் செல்லலா மென்று பாசமும் பரிவும் ததும்ப வேண்டினர். ஸ்ரீமதாண்டவன் ஒரு புன் சிரிப்பால் அதனை அங்கீகரித்து உகந்து போற்றி தமக்கென்றுதாம் பரிபாலித்து வரும் ஒரே ஒரு புகழுக்குரிய ஸாதனையை விட்டு வாஹனங்களில் ஏறி யாத்ரையைத் தொடர்ந்தால் நாளடைவில் மதிப்பு குன்றிப் பின் அது இல்லாமலும் போய்; ஆசார்ய நியமன உல்லங்கன மஹா பாபத்திற்கும் ஆளாக நேரிட்டுவிடும் என்பதனை வெளியிட்டு அருளினர். ஸ்ரீமதழகியசிங்கர் விடுவதாய் இல்லை. பிறகு ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்வாமி வாசல் வரை கூடவே வந்து வழிவிட்டு தனது வாஹனத்தையும் அதிலுள்ள விமானத்தை யும், அமருமிடங்களையும், ஸ்ரீமதாண்ட வனுக்குக் காட்டித் தந்தார். இப்படியே இந்த வண்டியை புறப்பட வைத்தால் என்ன செய்வீர்கள் என்று ஸ்ரீமதழகிய சிங்கர் கேட்டபோது, அம்மாதிரி ஒரு ஸன்னிவேசத்தைத்தான் எதிர்நோக்கி யிருந்ததேபோல் அப்படியே குதித்து விடுவேன் என்று பட்டென்று ஸ்ரீமதாண்ட வன் பதில் சொன்னர். குரலில் ஸ்ரீமதாண் டவனது உறுதி தென்பட்டது. ஸ்ரீமதழகிய சிங்கரும் இதைக்கேட்டு மிகவும் வியப்புற் றார். ஸ்ரீமதாண்டவனும் ஸ்ரீமதழகியசிங்கரை கூட இருந்த பிரமுகர்களோடும், வித்வான் களோடும் பெங்களூர் ஜயநர் பாதுகாச்சிரம மத்திற்கு பொன்னடி சாத்தவேண்டுமென்று பிரார்த்தித்தார். அழகியசிங்கரும் ஸ்ரீமதாண் டவனது வேண்டுகோளை அங்கீகரித்தார்.

மறுநாள் இரவு 8 மணி அளவில் ஜயநகர் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத் திலிருந்து சுமார் 4 பர்லாங் தூரத் திலிருக்கும் லால்பாக் தோட்டத்து வாசலில் ஆசிரம சிஷ்யர்கள், அன்பர்கள் புடை சூழ ஸ்ரீ T. S. ராஜம் அவர்கள் முன்னிருந்து பூர்ணகும்ப மரியாதை களோடு ஸ்ரீமதழகியசிங்கரை வர வேற்றார்.

அழகிய சிங்கருக்கு அழகிய ஊர்வலம்

அகலமான தெருவானதால், தெருவின் இரு மருங்கிலும் வண்ணமுள்ள விளக்கு கள் நடுவே, ஆடவரும் பெண்டிரும் திர ளாய் வர, பாண்டு (Band) மெல்லிசை யும் ஒலித்துவர நாதஸ்வர இசை மல்லாரி யையும், ''கம்பீர நாட்டை''யையும் பொழிய, செவிக்கினிய வேத ஒலி பின்னணி யிலே திகழ, அந்தணர்கள் கைகோர்த்து ஸ்ரீமதழகியசிங்கருக்குக் கட்டியங்கள் கூறி வர, விமானத்தில் ஸ்ரீமதழகிய சிங்கர் எழுந்தருளியிருந்தார். விமானத்தின் முன்னே வண்ணமுள்ள சித்திரப் பூக்களைச் சொரியும் மத்தாப்புகள், தரையிலிருந்து ஆகாசத்தை நோக்கி தவழ்ந்து போகும் அழகிய ராக்கெட்டுகள், சிங்கக் குரல்போல் கர்ஜனை செய்து சீறியெழுகின்ற அதிர் வேட் டுகள் ஆகிய இவைகளிலிருந்து தோன்றிய பேரொளி இரவைப் பகலாக்கியது. ஒரு மஹோத்ஸவத்தின் தோற்றம் அங்கே காணக் கிடைத்தது. போக்கு வரத்தின் நெருக்கமதிகமுள்ள வீதியாதலால் இத னல் போக்கு வரத்து தடைப் பட்டு ஜனங்கள் இரு மருங்கிலும் வரிசையாக நின்று ஊர்வலத்தைக் கண்டு களித்தனர். ஸ்ரீ T. S. ராஜம் ஸ்வாமியை மிகவும் நிர்பந்தித்து விமானத்தில் தன்னோடு ஸ்ரீமத ழகிய சிங்கர் அமர்த்திக் கொண்டார்.



பூர்ணஹுதி, அஷ்டாக்ஷர யாகம்



லால்பாக் நீரோடையில் அஷ்டாக்ஷர யாக அவபிருத நீராட்டம்



அஷ்டாக்ஷரயாகத்தில் எம்பெருமான்கள்



அஷ்டாக்ஷர வேள்வியைக் காக்கின்ற பணியில்
ஸ்ரீ மதாண்டவன்

ஆசிரமத்தில் வரவேற்பு

இராமாஞ்ஜனேய ஸன்னதி முகப்பில் ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணி ஸ்ரீமதாண்டவன்(திருமேனி பாங்கில்லாமல்) ஸ்ரீமதழகிய சிங்கரை எதிர் கொண்டுஸகல மரியாதைகளோடும் அருளிப் பாடிட்டு, மாலையும், பரிவட்டமும் சாத்தி கட்டியங்கூறி தண்டனிட்டு வரவேற்றார். ஜனத்திரள் இந்த அபூர்வமான காட்சி தனைக் காண ஈண்டி முண்டி யடித்ததின் விளைவாக நெரிசல் ஏற்பட்டது. ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமதழகிய சிங்கரை ஸன்னிதிகளுக்கு எழுந்தருளப் பண்ணி, தீர்த்த சடாரிகள் ஸாதித்து கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளப் பணினினர்.

அங்கு வடமொழியிலும், தமிழிலும், கன்னடத்திலேயும் ஸ்ரீமதழகிய சிங்கருக்கு வரவேற்புரைகள் வாசித்தளிக்கப் பட்டன. ஸ்ரீமதாண்டவன் ஜீயர் ஸ்வாமிக்கு வரவேற்புரை நிகழ்த்தியபின் ஸ்ரீமதழகிய சிங்கர் ப்ரபத்தியின் மேன்மையை தெள்ளிய தமிழில் உபந்யஸித்தார். இரவு சுமார் 12 மணி அளவில் இவ்விழா இனிதே முடிந்தது.

மறுநாள் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ஹன் திருமஞ்சனம், அபிகமன ஆராதனம் இவை முதலான வைகள் கண்டருளும் போது ஸ்ரீமதாண்டவன் கூடவே இருந்து ஸேவித்தார். ஸ்ரீமதாண்டவனுக்கு உயர்ந்த சால்வையும் திருமாலையும் சாத்தி ஸ்ரீமதழகிய சிங்கர் கௌரவித்தார். அன்று கண்ணனும் டோலோத்ஸவம் கண்டருளினன்.

அன்று மதியம் கல்யாண மண்டபத்திலிருந்து ஸ்ரீமதழகிய சிங்கர் நமது பாதுகாச்ரமம் எழுந்தருளி பாதுகாசாரியர்களை ஸேவித்து ஸ்ரீமதாண்டவனோடு ஏகாந்தமாய் சுமார் இரண்டு மணி நேரம் ஸம்பாஷித்தருளினர். இரவு சுமார் பத்து மணி அளவில் ஸ்ரீமதாண்டவன் அழகிய சிங்கரை பிரியா விடை கொண்டார்.

இவ்விரு ஆசார்யவள்ளல்களது சந்திப்பில் ஏற்பட்ட நன்மைகள் மிகப் பல. இரு பகவர்களும் தங்களுக்குள் மனம் விட்டுப் பேசியும் பழகியும் ஒருவருடைய உள்ளக் கிடைக்கையை மற்றொருவர் அறியும் வாய்ப்பினை இது நல்கியது. ஒருவருக்கு கொருவர் ''ஸௌஹார்தம்'' இந்த ஸஹ யோகத்தால் வளர்ந்தது. மாசுகள் அகன்றன. தேசு பொலிந்த இந்த சேர்த்தியிலே ஸ்ரீரங்கஸ்ரீ நிறைந்திருந்தது.

28-11-71. மைசூரில் ஸ்ரீமதாண்டவன் ஆஸ்திக சபையின் கட்டிடத்துக்காக அஸ்திவாரக்கல் நாட்டினர்.

10-1-72. ஜயநகர் ஸ்ரீராமன் ஸன்னிதியில் பகல்பத்து இராப்பத்து இயற்பா சாற்று முறை நடந்தது. ''கூடாரை வெல்லுஞ்சீர்'' பாசுர அனுஸந்தானத்தின் போது பெண்டிர் இரண்டு ஸன்னிதிகளிலும் இருநூறு பாத்திரங்களில் அக்கார வடிசில் ஸமர்ப்பித்து பெருமாளுக்குக் கண்டருளப் பண்ணினதை ஸ்ரீமதாண்டவன் உகந்தருளினது.

21-1-72. ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் பெரியாச்ரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னர் ஸன்னிதி 3-12-70 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேற் சொன்ன ஸன்னிதி முன் மஹாத்வாரம், இராஜகோபுரம் கட்ட வேண்டும் என்று ஸ்ரீமதாண்டவனது திருவுள்ளம். அதன்படி சிறந்த தார்மிகரும், ஜெயநகர் ஸ்ரீகுசலாம்பாள் கல்யாண மண்டபம் உரிமையாளரான ஸ்ரீமான் சக்ரபாணி செட்டியார் தன் ஸஹோதரருடன் கோபுரகைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டார்.

அதன்படி ஸ்ரீமதாண்டவன் தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் முத்துக்குமார ஸ்தபதியைக் கொண்டு இராஜ கோபுரத்தைக் கட்டச் செய்து 21-1-72 அன்று மஹாஸம்ரோக்ஷணம் நடந்தேறியது. திருவரங்கம் பெரிய கோவில் இராகவ, கிருஷ்ண பட்டர்கள் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரோக்ஷணத்தை நடத்திக் கொடுத்தார்கள்

முப்பது அடி உயரமும், அழகான பிம்பங்களுடன் கூடிய தான கோபுரமிது. இதன் கைங்கர்யங்களில் இண்டர் நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் உரிமையாளர்

ஸ்ரீ N. கிருஷ்ணன் அவர்களும் பெரும்பங்கு எடுத்துக் கொண்டு பொருளுதவியும் செய்தார்

18-3-72. மைசூர் பரகாலமடத்து ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்வாமி ஜெயநகர் எழுந்தருளி ஒரு இரவு தங்கி ஹயக்ரீவனுக்கும் ஸ்வாமி தேசிகனுக்கும் விசேஷ ஆராதனம் செய்து ஆசிரமத்தின் நேர்த்தியையும், கல்யாண மண்டபம் முதலியவற்றையும் கண்டு போற்றி உகந்தார்.

5-5-72. ஸ்ரீரங்கம் நம்பெருமாள் ''விருப்பந் திருநாள்'' நான்காவது உத்ஸவம் கருடஸேவை மண்டபத்திற்கு எழுந்தருளும் போது நடுவில் மேலூர் சாலையில் இருக்கும் ஆசிரமத்திற்குச் சொந்தமான மண்டபத்தில் உபயம் கண்டருளப் பண்ணினது.

16-5-72. ஸ்ரீமதாண்டவன் திருவஹிந்திரபுரம் ஸ்ரீதெய்வநாயகன் ஸன்னிதி ஜீர்ணோத்தாரண ஸம்ப்ரோக்ஷணத்தில் அன்வயித்து அன்று வேத திவ்யப்ரபந்த சாற்றுமுறை நடந்தது. சாற்றுமுறை கோஷ்டியை ஸ்ரீமதாண்டவன் அலங்கரித்தருளினார்.

அகில இந்திய வானொலி பாண்டிச்சேரி நிலையத்தில் இந்த ஸம்ரோக்ஷண நேர்முக வர்ணனையை ஒலிபரப்பியபோது ஸ்ரீமத் தாண்டவன் முகவுரையும் ஒலிப்பரப்பாயிற்று.

2-6-72. திருவஹிந்திரபுரத்தில் ஸ்ரீம தாண்டவன் திருவோண நன்னாளில் ஸ்வாமி தேசிகன் திருமுகப்பே ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் 100 ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக ஷி உத்ஸவ கமிட்டியாரால் வெளியிடப்பட்ட ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ''ஸ்ரீபரமதபங்கம்'' என்கிற ஸ்ரீகோசம் (புத்தகத்தை) வெளியிட்டருளினார்.

15-6-72. தென் ஆற்காடு ஜில்லா பொய்கைப்பாக்கம் கிராமத்தில் பெருமாள் ஸன்னிதியில் புதியதாக சடாரி, பெருமாளுக்கு லக்ஷ்மி பதக்கம் பிரதிஷ்டையை நேரில் நடத்திக் கொடுத்தது, ஸ்ரீமதாண்டவன்.

19-6-72 மதுராந்தகம் வடமொழிக் கல்லூரிக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி மாணவர்களை விசேஷமாக போற்றியருளியது.

22-6-72. காஞ்சி ஸ்ரீரங்கராஜ வீதியிலுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தில் ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் உத்ஸவமூர்த்தி விக்ரஹ பிரதிஷ்டையை ஸ்ரீதேவாதிராஜன் ஸன்னிதி ஸ்ரீவரதபட்டரைக் கொண்டு செய்துகந்த நாள்.

28-6-72. ஸ்ரீபெரும்புதூரில் புஷ்கரணியின் வடகரையில் உள்ள ஸ்ரீதேசிகன் ஸன்னிதி கர்ப்பக்ருஹம் விமானம் மஹாமண்டபம் இராஜ கோபுரம் இவைகள் ஜீர்ணோத்தாரணம் செய்யப் பட்டு ஸம்ப்ரோக்ஷணம் நடந்தது. ஸ்ரீமதாண்டவன் கூடவே இருந்து வைதிக கார்யங்கள் எல்லாவற்றையும் நியமித்தருளியதுமன்றி தர்மகர்த்தாக்கள் குழுவின் முக்கியஸ்தரான இளையாண்டுப்பட்டு பாலகிருஷ்ண பிள்ளையின் பக்தி சிரத்தையையும் வெகுவாக பாராட்டியருளினார்.

17-11-72 புது டெல்லி இராமகிருஷ்ணபுரத்தில் ஆசிரமும், கோவிலும்.

பாரதத்தின் தலைநகரான புது டில்லியில் இராமகிருஷ்ணபுரம் என்கிற இடத்தில் நமது பாதுகாச்ரமம் நிறுவி அங்கே ஒரு வைகுண்ட நாதன் ஸன்னிதியும் பிரதிஷ்டை செய்தருளினார்.

ஸ்ரீவைகுண்ட நாதன், ஸ்ரீதேவி, பூதேவி மூல விக்ரஹங்கள், ஸ்ரீரங்கநாதன் உபய நாச்சியார் உத்ஸவமூர்த்திகள், ஸ்வாமி தேசிகன் உத்ஸவ மூர்த்தி ஆகிய விக்ரஹங்கள் ஸ்ரீமதாண்டவன் நியமனப் படி 17-11-72 பிரதிஷ்டை செய்விக்கப் பட்டது. ஸ்ரீமதாண்டவனது அனுக்ரஹமும் நியமனமும் பெற்று ஆகம பண்டிதர்கள் ஸ்ரீரங்கம் ராகவ பட்டர், ஸ்ரீரங்கராஜ பட்டர், காஞ்சி வரதராஜ பட்டர், ஸ்ரீநிவாஸ பட்டர் முதலானோர் எழுந்தருளியிருந்து ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்வித்தார்கள். ஸாதாகாசாரியராக கல்கத்தா சுந்தராச்சார் எழுந்தருளியிருந்தார். எலிக்கண்ணன் கைங்கர்யமும் சேர்ந்தது.

சென்னையிலிருந்து வேத திவ்யப்ரபந்த பாராயண ஸேவைக்கு பல திரு நாமங்கள் எழுந்தருளியிருந்தனர். டெல்லியிலுள்ள வைதிக ஸபை ஸ்வாமிகளும் பாராயணத்தில் அன்வயித்தார்கள். மஹாஸம்ப்ரோக்ஷணம் வெகு சிறப்பாக நடந்தது. ஸ்ரீமான்கள் T. S. சந்தானம் (T.V.S.) பங்களூர் N. கிருஷ்ணன் (International Instruments Ltd). கல்கத்தா நரசிம்ம பாபு, சென்னை கீழ்பாக்கம் ஹால்ஸ் ரோடு R. சீனிவாசன் T. K. சேஷாத்ரி முதலிய பிரமுகர்கள் வந்திருந்து சிறப்புற நடத்தித் தந்தனர்.

புத்தகங்கள் வெளியீடு

27-11-72. சின்னண்டவன் திருநக்ஷத்ர மஹோத்ஸவ தினம் மயிலாப்பூர் ஆசிரமத்தில் ஸ்ரீதேரழுந்தூராண்டவன் நூற்றுண்டு திருநக்ஷத்திர கமிட்டியின் முடிவின்படி சின்னண்டவன் 80 வருஷங்களுக்கு முன் அருளிச் செய்த ஆசார்ய ஸம்பாவனை விசாரம், ஸ்ரீஜயந்தி நிர்ணயம், தத்வ க்ரது ந்யாய விசாரம் என்கிற நூல்கள் அச்சிட்டு அன்று ஸ்ரீமதாண்டவன் வெளியிட்டு அருளினர்.

மேலும் சுமார் ஒரு நூற்றுண்டு முன் மைசூர் மஹாராஜாவினால் ஆதரிக்கப்பட்டு மைசூரில் எழுந்தருளியிருந்த ''கரூர் ஸ்வாமி'' என்று புகழ் பெற்ற திருவரங்க மாண்டான் திருமலை ஸ்ரீதேசிகாச்சாரிய ஸ்வாமியால் அருளிச் செய்யப் பட்ட ''ராமானுஜ சித்தாந்த ஸங்க்ரஹம்'' என்று 500 சுலோகங்களடங்கிய ஸ்ரீகோசத்தை (புத்தகத்தை) அச்சிட வைத்து அதையும் ஸ்ரீமதாண்டவன் வெளியிட்டருளினர்.

10-1-73. மயிலை ஆசிரமத்தில் ஸ்ரீமதாண்டவன் திருப்பாவை தொடர் கால க்ஷேபத்தின்போது ''கூடாரை வெல்லுஞ் சீர்'' திருப்பாவை அனுஸந்தானத்தின் போது 108 பாத்திரங்களில் அக்காரவடிசில் ஸ்ரீ ஆண்டாள் மனோரதத்தித்தபடியே ஆசிரமத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ வேணுகோபாலனுக்குக் கண்டருளப் பண்ணி க்ருதார்த்தர்களானார்கள் ''ஒப்பவரில்லா மாதர்கள்'' என்று கலியன் புகழ்ந்து ஆசாஸித்த மயிலை மங்கையர்கள்.

கூரத்தாழ்வான் அவதார ஸ்தலத்தில் அமைந்திருக்கும் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியை ஆசிரமத்தின் கீழ் கொணர்ந்தது.

காஞ்சி - இராணிப்பேட்டை ரோடில் காஞ்சியிலிருந்து 6 மைல் அல்லது 10 கி.மீ. தூரத்தில் கூரம் என்கிற திவ்ய தேச மிருக்கிறது. அப்புண்ணிய பூமியில் தான் **''ஸ்ரீ வத்ஸாங்க மிச்ரர்''** என்று வழங்கப் படுகிற ஸ்ரீபகவத் ராமானுஜரின் அந்தரங்க சிஷ்யரான ''கூரத்தாழ்வான்'' அவதரித்தது. ஆங்கு ஆழ்வான் ஸன்னிதிக் கருகில் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியுண்டு. அங்கிருக்கும் தேசிக பக்தர்கள் ஆசார்யாள் ஸன்னிதியை ஸ்ரீமதாண்டவன் நிர்வஹிக்க வேணுமென்று பிரார்த்தித்து சொற்ப தொகையோடு நிர்வாஹத்தை ஸ்ரீமதாண்டவனிடம் மாற்றிக் கொடுத்தனர். அவர்களில் ஆக்கூர் சேட்லூர் வரதாச்சாரியர், அட்வகேட் D. இராமஸ்வாமி அய்யங்கார், எர்ணகுளம் கூரம் க்ருஷ்ணஸாமி அய்யங்கார்; கூரம் நரசிம்மாச்சாரி, R. T. தாத தேசிக தாத்தாச்சாரியர் முதலானோர் முக்யஸ்தர்கள்.

ஸ்ரீமதாண்டவன் அவர்களது வேண்டுகோளை அங்கீகரித்து 15-2-73 புஷ்ய நக்ஷத்திரத்தில் காஞ்சி வரதபட்டர் ஸ்ரீநிவாஸ பட்டர் இவர்களைக் கொண்டு 'லகு' சம்ப்ரோக்ஷணம் செய்து ஆசார்ய வள்ளலுக்கு நித்ய ஆராதனை நடந்து வர அடிகோலியாயிற்று.

ஏப்ரல் 73. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாள் சைதாபேட்டைக்கு எழுந்தருளி இரவு திரும்பி எழுந்தருளும் போது மயிலையில் பாதுகாச்ரமத்திற்கு எழுந்தருளினர். ஆசிரமத்தில் பெருமாளுக்கு விலையுயர்ந்த தகடிகளும் விதவிதமான உபஹாரங்களும் ஸமர்ப்பிக்கப்பட்டன. அரைமணிக்குமேல் எம்பெருமான் எழுந்தருளியிருந்துப்பின் திருவல்லிக்கேணிக்குப் புறப்பாடு கண்டருளினர்.

12-4-73. மயிலை மாதவப் பெருமாள் சித்ராபர்வ மஹோத்ஸவத்திற்காக மாம்பலம் எழுந்தருளிய போது மயிலை பாதுகாச்ரமத்தில் மண்டபம் கண்டருளினர்.

பெருமாளுக்குத் திருப்பரிவட்டங்கள் உபஹாரங்கள் எதேஷ்டமாக ஸமர்ப்பித்து ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸனம் செய்தருளினர்.

11-7-73. ஸ்ரீரங்கம் பாதுகா வித்யாலயத்தில் நான்கு பையன்களுக்கு தர்மோபனயனம் செய்து வைத்தது. ஆசிரம சிலவு.

நாலாயிர திவ்யப்ரபந்த புத்தக வெளியீட்டு விழா

17-8-73. விழுப்புரம் அருகுள்ள ஸ்வர்ணவூர் சந்தான ரெட்டியார் நல்ல தார்மிகர். ஸ்ரீமதாண்டவனிடம் பக்தி கொண்டவர். பல தர்ம கார்யங்களை மனமுவந்து தனது ஸத்ரவ்யங்களைக் கொண்டு நடத்தித்தரும் சீலமுள்ளவர். அவர் புதூர் வெங்கிடசாமி ரெட்டியார் துணைகொண்டு புதிதாக 4000 திவ்யப்ரபந்த நூலை அச்சிட்டார். இதனை அருளிச் செயலுக்கு ஓர் பெட்டக மெனத் திகழும் ஸ்ரீமதாண்டவனைக் கொண்டு உலகுக்கு வழங்க விழைந்தார். இம்மஹோத்ஸவம் நமது மயிலை பாதுகாச்ரமத்தில் நடந்தது. தமிழக உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி கனம் வீராசாமி தலைமை வகித்தார். நீதிபதிகள் கனம் மஹாராஜன் கனம் K. S. வெங்கடராமன் I.C.S. இவர்கள் பாராட்டுரைகள் வழங்க ஸ்ரீமதாண்டவன் புத்தகத்தை வெளியிட்டருளினர். ஸ்ரீபுரம் அட்வகேட் K. ஸ்ரீநிவாசன் வந்தனோபசாரத்தோடு விழா இனிது முடிந்தது. பிரதிகள் சீக்கிரத்தில் செலவு ஆனதினாலே மேடி புத்தகத்தை நிரந்தரமாக ப்ளாக் செய்து மலிவு விலையில் கொடுக்க முயற்சிகள் ஸ்ரீரெட்டியார் எடுத்துக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

16-10-73. காஞ்சிக்கடுத்த உத்திரன் மேரூர் என்கிற தலத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸுந்தரவரதப் பெருமாளது மிகவும் அபூர்வமானதும் பிரஸித்தி கொண்டதுமான அஷ்டாங்க விமானத்து ஜீர்ணோத்தாரண சம்ப்ரோக்ஷணத்தை ஸ்ரீமதாண்டவன் 4 நாள் எழுந்தருளியிருந்து நடத்திக் கொடுத்தார். இந்நகர் வாசிகளது பக்தியும் சிரத்தையும் ஸ்ரீமதாண்டவனை பலகால் இங்கு எழுந்தருளப் பண்ணியிருக்கிறது.

கர்நாடகத்தில் பிளிகிரி ரங்கனுக்கு மண்டபமும் நந்தவனமும்.

1965 முதல் *1980* வரை ஸ்ரீமதாண்டவன் கர்நாடகத்தில் சஞ்சாரம் செய்யும் போதெல்லாம் ''ஸ்வேதாத்ரி'' என்னும் பிளிகிரி ''ரங்கன் மலைக்கு'' எழுந்தருளாமல் இருப்பதில்லை. அதன் அழகு பிறிதொரு இடத்திலே விவரிக்கக் காண்க. 10 மைல் உயரமுள்ள மலையில் ''ஸ்ரீநிவாஸன்'' கோயில் கொண்டுள்ளான். ஸ்ரீமதாண்டவனுக்கு இந்த திவ்யதேசத்தில் மிகுந்த ஈடுபாடு.

அம்மலையில் இராமண்ணு என்பவரிடம் ஒரு $\frac{1}{4}$ ஏக்கர் நிலம் வாங்கி அதில் பூந்தோட்டம் அமைத்து அதில் துளஸி புஷ்பங்கள் வளர்த்து பெருமாள் திருவாராதனத்திற்கு அன்றுடம் ஸமர்ப்பிக்க ஏற்பாடு செய்தாயிற்று.

அங்கேயே கருங்கல்லால் 4 கால் மண்டபம் கட்டிக் கொடுத்து பெருமாள் திருத்தேர் உத்ஸவம் கண்டருளிய பின்பு அம்மண்டபத்திற்கு எழுந்தருளி விடாயாற்றி கண்டருள வகை செய்திருக்கிறது.

திருக்குறுங்குடி தேசிகன் ஸன்னிதியை ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்து நிர்வாஹத்தின் கீழ் கொணர்ந்தது.

ஸ்ரீமதாண்டவன் ஸஞ்சாரத்தில் மைசூர் எழுந்தருளியிருந்த போது ஸ்ரீபரகால மடத்து ஸ்வாமி, தேசிகன்ஸன்னிதியை தன்னால் நிர்வஹிக்க முடியாததின் நிலைமையை விளக்கி ஆசார்யன் ஸன்னிதியில் ஆராதனம் குறைவற்று தொடரவேண்டி ஸ்ரீமதாண்டவனை ஸன்னிதியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பிரார்த்தித்த படியே அதனை தம் நிர்வாஹத்தில் ஏற்று ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி திருவாராதனத்தை குறைவற ஏற்படுத்தி அதனை T.V.S. அறக்கட்டளை உதவியையும் பெற்று நடத்த ஏற்பாடு சேய்தருளினர். ஆசார்ய வள்ளலுக்கு உத்ஸவங்கள் அவ்வப்போது விமரிசையாய் கொண்டாடப்படுகிறது.



ரிஷிகேசத்தில் ஸ்ரீ பாதுகாச்ரமம்



மாடபூசி ஸ்ரீ உவே ஸுதர்சனமய்யங்கார் ஸ்வாமியுடன்



டெல்லியில் ஸ்ரீ வைகுண்டநாதன்
கோயில் ராஜகோபுரம்



பெங்களூரில்
ஸ்ரீமதாண்டவன் உபன்யாஸம்

ஸோஸலே வேணுகோபாலன் ஸன்னிதி

கர்நாடகத்தில் மைசூர் மாநிலத்தில் ஸோஸலே என்ற ஸ்ரீக்ராமம் ஸ்ரீமதாண்டவன் நம்மாண்டவன் எங்களாண்டவன் பல காலம் வர்த்தித்திருந்த இடம், இங்கு கோயில் கொண்டிருக்கும் வேணுகோபாலன் ஸன்னிதி நிர்வாஹத்தை ஸ்ரீமதாண்டவன் ஏற்று அங்கு ஸ்ரீபாஷ்யகாரர், தாயார் விக்ரஹம் எழுந்தருளப் பண்ணி பிரதிஷ்டை செய்தாயிற்று.

திருநறையூர் என்கிற நாச்சியார் கோவில் திவ்யதேசத்தில் கோவில் அத்யாபக மிராசு பெற்றது.

கலியன் தம்மால் களிப்போடும், சிறப் போடும் 100 பாசுரங்கள் பாடப்பெற்றதும், அவன் தன்னுல் அத்திவ்ய தேசத்து எம் பெருமான் மேல் மடலெடுத்து அவன் மையலுற்ற பெருமைகொண்டதுமான திருநறையூர் நின்ற நம்பியின் ஸன்னிதியில் வடகலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மட்டிலுமே அத்யாபக பாத்யதை இருக்கிறது. அப்பாத் தியதையை யுடைய மிராசுதாரர் அதன் ஒரு பகுதியை ஸ்ரீமதாண்டவனுக்கு உகந்து அளித்து அதை அரசு பதிவு செய்து கொடுத்தார். ஸ்ரீமதாண்டவன் தனது பிரதிநிதியாக ஒரு ஸ்வாமியை நியமித்து நித்யானுஸந்தானுதி கைங்கர்யங்கள் தவரு மல் நடக்க வகை செய்து திருவத்யயன உத்ஸவத்தில் அருளிச் செயல் பாராயண மும், ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் இரண்டு நாள் மண்டபமும் செய்யும்படி மூலதனம் நிறுவியருளினர்.

ஆசிரமத்தில் வேணுகோபாலனுக்கு வெள்ளி ஊஞ்சல் ஸமர்ப்பித்தல் : ஆசிர மத்தில் டோலாத்ஸவம் தொடக்கம்.

சென்னே மாநகரத்திலுள்ள ஸ்ரீமதாண்ட வன் திருவடிகள் மீகுந்த பக்தியும், சிரத் யும், கனிவும் கொண்டு ரூ. 10,000 சிலவில் ஒரு ஊஞ்சல் (டோலே) வெள்ளியில் செய்து ஸ்ரீவேணுகோபாலனுக்கு ஸமர்ப்பித் தார்கள். சென்னே சுபாஷ் சந்திர போஸ் ரோடில் பிரபலமான ''வீகம்லி'' என்கிற புகழ்பெற்ற தங்க நகை வெள்ளி பாத்திர வியாபாரிகள் செய்து கொடுத்தார்கள், டோலே சுற்றிலும், தசாவதாரப் பிம்பங் களுடனும், உட்புறம் ஆழ்வார்கள், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்வாமி தேசிகன் பிம்பங் களுடன் பிரகாசிக்கிறது. அந்த டோலே போடுவதற்கான ஸ்டாண்டு (Stand) கள் குறுக்குச் சட்டங்கள், முதலியவைகளே T. V. S. ஸ்தாபனத்தார் உயர்ந்த தேக்கு மரத்தால் செய்து கொடுத்தார்கள். ஸ்ரீ திருக்குடந்தை தேசிகனுல் ஆராதிக்கப்பட்டு வருகிறவரும், பல வருஷங்களாய் நமது பூர்வாசார்யர்களால் ஆராதிக்கப்படு கிறவருமான ஸ்ரீருக்குமணீ ஸத்யபாமா ஸமேத ஸ்ரீவேணுகோபாலனுக்கு ஸமர்ப் பிக்கப் பட்டது. 16-1-74 அன்று முதன் முதலாக புஷ்யநக்ஷத்ர மஹோத்ஸவ நன்னு ளில் ஸ்ரீமதாண்டவன் ஸான்னித்யத்தோடு ஸ்ரீவேணுகோபாலன் மிக விமரிசையாய் டோலே கண்டருளினன்

13-1-74. ஹைதராபாத் ஸ்ரீ தேசிக ஸபை கமிட்டியார் உவந்தளித்த திருப் பாவை காலக்ஷேப ஸம்பாவனே ரூபாய் பத்தாயிரத்தையும் டெல்லி ஆசிரமத் திற்குச் சொந்தமான ஸ்ரீ வைகுண்ட நாதன் ஸன்னிதியில் ஆஞ்ஜனேயர் (சிறிய திருவடி) ஸன்னிதி நிர்மாணம் செய்யும்படி வழங்கியருளியானது.

23-7-74. ஜயநகர் ஆசிரமத்தில் 108 சுமங்கலி ஸ்திரீகளுக்குப் புடவையுடன் இரவிக்கைத் துண்டு மஞ்சள் குங்குமம் புஷ்பம் இவைகளேத் திருஆடிப்பூரத்தில் வள்ளல் ஸ்ரீமதாண்டவன் வழங்கினது.

12-11-74. கர்நாடக மாநிலத்தில் ஸ்ரீரங்கபட்டிணத்தில் காவேரியில் ஸ்ரீமதாண்டவன் துலாஸ்நானம் கண்டருளி ஸோஸலே எழுந்தருளினர். அதுபோது நமது ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீநிவாஸ - வேணுகோபாலன் ஸன்னிதி பெருமாள் தாயார் விமானங்களில் கலசங்கள் பழுது அடைந்து ஜீர்ண மாயிருந்தபடியால், இரண்டு பெரிய தாமிர கலசங்களே திருக்குடந்தையிலிருந்து (ரூ 1000. பொறுமான முள்ளவை) தருவித்து விமானங்களில் ஸ்தாபனம் செய்து ஸம்ப்ரோக்ஷணமும் செய்தருளின நாள்.

22-1-75 பெங்களூர் மல்லேஸ்வரம் ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி, ஸ்ரீராமநவமி உத்ஸவத்திற்கு ரூ. 500/-ம், ஸ்ரீராம மந்திரத்திற்கு ரூ. 500/-ம் அளித்தார்.

29-1-75. ஆசிரமகல்யாண மண்டபத்தில் 8 பையன்களுக்கு தர்மோபநயனம் செய்து வைக்கப்பட்டது. ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹித்தாயிற்று.

...

9-8-1975: ஆந்திரத்தில், கீழ் திருப்பதி திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதீ தாயார் ஸன்னிதியில் திருவாடிப்பூரத்தையொட்டி ஸ்ரீ ஆண்டாள் திருவுள்ளமுகக்க 108 சுமங்கலிகளுக்குப் புடவை இரவிக்கைத் துண்டு குங்குமம் இவைகள் ஸ்ரீமதாண்டவன் சிஷ்யர்களும், அபிமானிகளும் வழங்கினர்.

திருச்சானூரில் ஸ்ரீஸூக்த மஹாயாகம்

புராண வரலாறு

''திருச்சானூர்'' என்று வழங்கப்படுகிற ''திருச்சுகனூர்'' என்கிற இந்த திவ்ய தேசம் மிக்க பெருமை வாய்ந்தது. துவாபரயுகத்தில் ஸ்ரீ பலராமனும், கிருஷ்ணனும், தீர்த்தயாத்திரை செய்து கொண்டு வருகையில் இத்திவ்யதேசத்திற்கு வந்தவாறே இதன் நிறைவையும், எழிலையும் கண்டு மண்ணில் இதுபோல் நகரில்லையென நிர்ணயித்து இதனையே வாஸத்துக்குரிய நல்லதொரு இடமாகக் கொண்டனர் என்று புராணங்கூறும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு கைகளையும் இப்புண்ணிய பூமியைக் காட்டும் வகையில் அர்ச்சாரூபியாய் நிற்கிறான். ''மஹாலக்ஷ்மி'' என்று அனுஸந்திக்கப்படுகிற பெரிய பிராட்டியார் இவ்வூரிலுள்ள ''பத்மசரோவரம்'' என்னும் திருக்குளத்தில் ''அலர்மேல் மங்கையாய்'' அவதாரம் செய்து ஆகாச ராஜனுக்குப் புத்திரியாகி திருவேங்கடமுடையானைத் திருமணம் செய்து கொண்டாள் என்பது புராணங்கூறும் வரலாறு.

அலர்மேல் மங்கை பத்மாவதீ என்கிற திருநாமத்துடன் அர்ச்சாரூபத்துடன் ஸ்வதந்த்ர வீரலக்ஷ்மியாய் விளங்க நின்று விண்ணோரும், மண்ணோரும் வணங்க அருள்பாலிக்கிறாள். திருவேங்கடமுடையானும் ''இறையும் அகலகில்லேன்'' என்கிற பத்மாவதியை மகிழ்விக்க ''போக ஸ்ரீநிவாஸன்'' என்கிற திருநாமத்தோடும் அழகிய திருமேனியுடனும் இவளது இடதுபுறம் நிற்கிறான். பிராட்டி திருவுள்ளமுகக்க இத்தலத்தில் ஸ்ரீஸூக்த ஹோமம் செய்து பிராட்டியை ஆராதிக்க ஸ்ரீமதாண்டவன் பாரித்தருளினார்.

யாகசாலை நிர்மாணம்

இதனைச் செயல் படுத்த மிகுந்த பக்திமான்கள் கொண்ட குழு ஒன்று பொறுப்பேற்றது. திருச்சானூர் தாயார் ஸன்னிதியின் இராஜகோபுரத்தை நோக்கியுள்ள மண்டபத்தின் முன்பாகம் இவ்வேள்விக்குரிய இடமாயிற்று.

யாக சாலைப் பந்தலை உறுதியாக அமைத்து, தோரணங்களாலும் பல வண்ண மின் விளக்குகளால் அலங்கரித்து, தொண்டர்களும், ஸேவார்த்திகளும் அவரவர் இருக்குமிடத்திலிருந்தே சிரமமின்றி வேள்வியின் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வண்ணம் பாங்காகக் கட்டி முடித்து, அதற்குள் எட்டு வேள்விக் குண்டங்கள் அமைத்து, அவைகளுக்கு முன் ஒரு பிரதான குண்டமும் அமைத்தார்கள். இவைகளைச் சுற்றி ஸ்ரீ ஸூக்த ஜப பாராயணம் செய்ய நிற்கும் அந்தணர்த்தமர்கள் அமரும் வண்ணம் யாகசாலையின் நான்கு மருங்குகளிலும் வழி வகுக்கப்பட்டது.

யாகசாலையை எதிரில் உள்ள திருமண்டபத்தில் எம்பெருமான்கள் எழுந்தருள ஒரு ஆஸ்தானம் நிர்மாணித்தாயிற்று. பரிவார தேவதைகளின் பிரதிஷ்டைக்காக அவைகளின் வண்ண ஓவியங்கள் வேள்விச்சாலையின் எல்லாத்திக்குகளையும் அலங்கரித்தன.

கோவில், திருமலை, பெருமாள் கோயில் என்று நம் ஸித்தாந்தத்திற்குக் கண்களே போன்றுள்ள திவ்யதேசங்களின் பிரதிஷ்டாக்ரமங்களையும், ஸ்ரீமதாண்டவன் அவதாரஸ்தலமாகிய

திருக்குடந்தை திவ்யதேசத்து ஸ்ரீகோமள வல்லியினுடையவும், ஸ்ரீமதாண்டவன் அபிமான ஸ்தலமான ஸ்ரீ ஜயநகர் ஆண்டாளுடையவும் பிரதிநிதிகளாக முறையே கோபு பட்டர், M. G. சாரி பட்டர்., வரது பட்டர்., சீமா பட்டர்; ஸ்ரீநிவாஸ பட்டர்., ஸம்பத்குமார பட்டர் ஆகிய இவர்கள் யாகத்தை நடத்தித் தந்தனர். ஏராளமான பொருள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து குவிந்தன. வேதம் வந்த நல்லார்களும், சாத்திர வல்லுனர்களும், தொண்டர்களும், அன்பர்களும் கூடிய இந்த யாகம் 14-9-75 ஞாயறு மாலை 06.30 மணி அளவில் தொடங்கியது.

வேள்வித்துடக்கம்

ஸ்ரீ அலர்மேல் மங்கைத் தாயாரையும், புஷ்கரிணியையும் பிரதக்ஷிணம் செய்து, பின் ஸுதர்சன ஆழ்வானை எழுந்தருளப் பண்ணி வேத கோஷ்டி பின் தொடர திருச்சானூர் ஸன்னிதி தாயார் தோட்டத் தினின்றும் ''ம்ருத்ஸங்க்ரஹணம்'' செய்து கொண்டு யாகசாலை ப்ரவேசம் செய்தா யிற்று. அடுத்து அங்குரார்ப்பணம், ரித்விக்வரணம் முதலியன நடந்தன.

15-9-75 அன்று காலை 7 மணிக்கு 8 ஹோமகுண்டங்களில் அஷ்டலக்ஷ்மிகளை ஆவாஹனம் செய்து நடுவே ஸ்ரீ பத்மாவதீ தேவியை ஆவாஹனம் செய்து யாகம் தொடங்கியது.

''உறுக்குறும் நறு நெய் கொண்டு ஆழலில் இருக்குறும்'' அந்தண அர்ச்சகர்கள் ஹோமகுண்டங்களின் முன் கம்பீரமாய் வீற்றிருக்க, அவர்களது பின்னணியில் இருநூறு திருநாமங்கள் ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ பொலிய தங்களது கம்பீரமான குரல்கொண்டு ஸ்ரீஸூக்த இருக்குகளைக் கோஷித்திருக்க, அவர்களில் சிலர் ஸ்ரீ வால்மீகி, வ்யாஸ, பராசர, சுக, சௌனக, பகவத் ராமானுஜ, ஸ்வாமி தேசிகன் முதலான உயரிய மஹரிஷி, மஹதாசார்யர்களின் செவிக் கினிய செஞ்சொற்களை செவி குளிர செப்பி ஒலித்திட, இவைகளையெல்லாம் அனுபவித்து அனுக்ரஹிப்பவள் போல் அலர்மேல் மங்கை அருகே அரியாஸனத் தில் அண்ணல் போக ஸ்ரீனிவாஸனோடு அமர்ந்திருக்க, அந்த சேர்த்தியில் தூய குங்குமங்கொண்டு அர்ச்சித்து நிற்கும் அர்ச்சகர்களின் திருமுகங்களிலிருந்துவரும் பிரணவத்தினொலி மண்டபனத்தும் எதிரொலித்து நிற்க, இவைகளின் நடுவே தனது நல்லெண்ணம் நல்ல முறையில் பிராட்டி தலைக்கட்டி வைப்பதைக் கண்டு பெருமையோடு, பூரிப்போடு, வேள்விச் சாலை நடுவே முக்கோலும், புரி நூலும், காவியுடையும் கொண்டு ஸ்ரீமதாண்டவன் யாகத்தின் எல்லாக் காரியங்களையும் நேரே குளிரக் கடாக்ஷித்து நிற்க, இவ்வின்ப ஒலிகள் எல்லாம் சேர்ந்து வேள்விச் சாலையோ இது அன்றி விழுமிய வைகுந்தமோ என்னலாம்படி இருந்தது. மண்ணில் இதுபோன்றதொரு வைபவம் கண்டதில்லை என்று இதனைக் கண்டவர் மனமாரப் பாராட்டினர்.

மாலையில் வேத திவ்ய பிரபந்த பாராயணங்கள் நடந்தன. முதலிரண்டு நாட்களில் காலை 10 மணியளவிலும் இரவு 7 மணியளவிலும் பூர்ணாஹுதிகள் செய்யப்பட்டன. இங்ஙனம் ஸ்ரீ பத்மாவதித் தாயார் ஜப, ஹோம, அர்ச்சனைகளாலே அருமை பெருமை யோடு ஸ்ரீமதாண்டவனால் ஆராதிக்கப் பட்டாள்.

ததீயாராதனம்

வேள்விக்கு வந்திருந்த அனைவரது வயிறுகள் சிறிதும் வாட்ட மடையாமல் அறுசுவை அமுது ஆதரவோடு வழங்கினர். இருந்து இளைப்பாற இட வசதிகளும் செய்து தரப்பட்டன. மூன்று நாட் களிலும் சுமார் 2000 திருநாமங்கள் அமுது செய்தனர். யாகசாலைப் பண்டங்க ளெல்லாம் சுத்தமாயும் நிறைவுடனு மிருந்தன.

தாயார் திருமஞ்சனம்

14-9-75., 15-9-75., இரண்டு தினங் களிலும் மதியம் சுமார் 3 மணிக்கு தாயா ரைத் திருமஞ்சன வேதியில் எழுந்தருளப் பண்ணி திருமஞ்சனம் கண்டருளப் பண்ணியாயிற்று. தூய வெண்ணிற ஆடை

யுடன் மங்கள மூர்த்தியாய் ஸேவை ஸாதித்த தாயாரின் திருப்பொலியும் திவ்ய மங்கள விக்ரஹத்தைக் காணக் கண்கள் கோடி வேண்டும். இதனை மனமார வாழ்த்தும்போது ஆயிரம் சுடர் வாய் கொண்ட அனந்தனும் அயர்ந்தே போவான். மிராசு M. G. சாரி பட்டர் செய்வித்த இந்த திருமஞ்சனம் கண்ணை யும் நெஞ்சையும் விட்டு நீங்காதது. பட்டர் ஸ்வாமி ஒவ்வொரு திருமஞ்சன த்ரவ்யத்தையும் தாயார் முன் வீற்றி ருக்கும் ஸ்ரீமதாண்டவனது ஆணையை முன்னிட்டு பக்தியோடும் விநயத்தோடும் பிராட்டிக்கு ஸமர்ப்பித்தது காண்போரது உள்ளங்களைக் கரைய வைத்தது. அவ் வெழில்மிகு காட்சி ஸ்வாமி தேசிகனின் ''அக்ரேபர்த்து:'' என்கிற ஸ்ரீ ஸ்துதி ஸ்லோகத்தை அனுபவிக்கச்செய்து நினைவில் நிறுத்தியது. இரண்டாம் நாள் உள்ளமும், உடலும் மிகக்குளிர்ந்த நிலையில், பத்மாவதித் தாயார் தனது இன்பப் பெருக்கினைக் காட்டும் முறையில், வரண்டு போயிருந்த நிலத்தில் குளிர்மாரி பொழியச் செய்து உவகை பெற்றுள். வற்றின கிணறுகளும் குளங்களும் நிறைந்தன.

தாயார் திருவீதிப் புறப்பாடு

அன்றிரவு அலர்மேல் மங்கைத் தாயார் தனது செம்பொன் செய் திருவுருவும், மான் ஒத்த நோக்குகளை உதிர்க்கும் குவளையொண் மலர்க்கண்களும், கோல நீள் கொடி மூக்கும், செவ்வாயும், வளைக்கைகளும், மெல்விரல்களும், சிற்றிடையைச் சிங்காரித்து நிற்கும் பாங்கான வெண்பட்டாடையும், மொய்ய நீள் குழல் தன்னில் தவழுகின்ற நாக ஜடையும், வெண்தாமரை மாலையும், சென்னியில் சூடிய பொன் முடியும், கொண்டு பட்டமகிஷியாய்-கம்பீரமாய் தங்கத்தாலான தோளுக்கினியானில், மங்கள வாத்யங்கள் முன்னேயும், ஸ்ரீமதாண்டவன் முன்னிட்ட எண்ணிறந்த சீரேறு மறையாளர்கள் நிறைந்த நல்வேத கோஷ்டி பின்னேயும் பல்லாண்டிசைக்க, பல கண்கள் கண்ணநீர்கள் மல்க காணவும், பல கைகள் தொழவும், திருவீதிகளூடே, - ''பெண்ணரசி நாடாய்த்து'' எனப் பறை சாற்றுவது போல், பிராட்டித் திளைத்து பவனி திருவீதிகளில் வந்தபோது, உள்ளங்களை உருக்கியுண்ட இந்த அத்யத்புதக் காக்ஷியைக் கண் ணுற்றோர் எவரோ அவரே கண்கள் படைத்த பயனைப் பெற்றனர் என்று சொன்னல் சிறிதும் மிகையில்லை. ஸ்ரீ பட்டரின் ''லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா'' என்கிற ஸ்ரீஸூக்தி இங்கு நினைவு கொள்ளத் தக்கதாய் இருந்தது.

பூர்ணாஹுதியும், யாக பூர்த்தியும் ;

17-7-75 அன்று 10.30 மணியளவில் யாகம் பூர்த்தியாகி பூர்ணாஹுதி நடந் தேறியது. பொன்னும், பட்டும் ; முத்தும், மணியும்; அகிற்குறடும், சந்தனமும் ; இவைகளோடு நெய் சேர்த்து பிரதான குண்டத்தில் ஸ்ரீ பத்மாவதித் தாயாருக்குக் காணிக்கையாக அக்னியிலே ஸமர்ப்பித்தாயிற்று. பின் பூர்ணகும்பங் களில் நிறைத்திருந்த புனித தீர்த்தங் களாலே கூடியிருந்தோரை ப்ரோக்ஷித்தும் புனிதர்களாக்கி அவர்களோடே ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திற்கு எழுந் ருளியாயிற்று. ஆசிரமத்தில் பெருமாள் சம்பாவனை தொடங்கி வந்திருந்த மறை வல்லுனர்கள் வரை எல்லோருக்கும் வண்கை கொண்டு வாரி வழங்கிஞர் ஸ்ரீமதாண்டவன். நிர்வாஹக் குழுவினர் களுக்குப் பொற்காசு வழங்கி கௌர வித்தார்.

யாகத்தின் எல்லா அம்சங்களையும் பகுதிகளையும் புகைப்படமாயும், திரைப் படமாயும் ஆந்திர மாநில விளம்பர இலாகா குழுவினர் எடுத்தனர். தனிப் பட்டோரும் இவ்வண்ணமே புகைப் படங்களெடுத்தனர்.

பம்பாயில் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திற்கு வாங்கப்பட்ட மனையில் ஸ்ரீமதாண்டவன்

16-4-1976

பம்பாய் டோம்பிவில்லியில் ''தக்குர்லி'' என்கிற இடத்தில் சர்வே நெ 208-A ல்., சுமார் 8300 ச.கெ விஸ்தீர்ணமுள்ள ஸ்தலத்தில் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஒரு கிளையும், பாட சாலையும், கல்யாண மண்டபமும்,



ஸ்ரீஸூக்த யாகம் - திருச்சானூர்
ஸ்ரீ அலர்மேல்மங்கைத்தாயார் மங்களாசாஸனம்



ஸ்ரீஸூக்த யாகம், திருச்சானூர்



ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம்
பெரியாண்டவன் ஸன்னிதி புஷ்கரிணி



ஸ்ரீரங்கம் ஆசிரமத்து ஸ்வாமி
தேசிகன் மங்களாசாஸனம்



ஸ்ரீ வேணுகோபாலன் – டோலை



மதுராந்தகம் ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகனுக்கு
கிரீடம் ஸமர்ப்பித்தல்



ஸ்ரீ வரதராஜன் – பெரியாச்ரமம்



சென்னை ஸ்ரீ பாதுகாச்ரமத்தில்
திவ்யப்ரபந்த புத்தக வெளியீட்டு விழாவில்
கனம் பிரதம நீதிபதி ஸ்ரீ K. வீராசாமியும்
நீதிபதி ஸ்ரீ K. S. வெங்கட்ராமனும்



மயிலை யுவ வாலிபர் சங்கத்தில்
நீதிபதி ஸ்ரீ K. S. வெங்கட்ராமன் வரவேற்பு

ஸ்ரீனிவாஸன் ஸன்னிதி ஒன்றும் நிர்மாணிக்க வாங்கியிருக்குமிடத்திற்கு ஸ்ரீமதாண்டவன் பொன்னடி சாத்தி அனுக்ரஹித்தருளினார்.

10-11-1976. டெல்லியில் ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீ வைகுண்ட நாதன் ஸன்னிதியில் ஸுதர்சனாழ்வான் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

புஸ்தக வெளியீடு

9-9-1977 அன்று ரீஷீகேசத்தில் சென்னை க்ரோம்பேட்டை சிங்கனூர் ஸ்ரீ S. N. கோபாலதேசிகாச்சாரியரைக் கொண்டு அச்சிடப்பட்ட ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாய ''ஸேவை - சாத்து முறை'' க்ரமங்கள் அடங்கிய புத்தகத்தை பரத் மந்திர் பாடசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீ T. S. ராஜம் அவர்களைக் கொண்டு வெளியிட்டார்.

ரீஷீகேசத்தில் காணும் சிலாசாஸனம்

ஸ்ரீமதாண்டவன் பதரி வணங்கப் போகும் வழியில் ரீஷீகேசத்தில் ஒரு சாதுர்மாஸ்யம் கண்டருளி, பின் எண்ணியபடியே பதரீ நாராயணனைக் கண்டுப் பின் விஜய யாத்ரையை விக்னமன்றித் தலைக்கட்டி வைத்த இப் பெருமையைக் காலமெல்லாம் நினைவில் நிறுத்திப் போற்றி யுகக்கும் வண்ணம் இவ் விடத்தை ஸ்ரீமதாண்டவனுக்கு உள்ள முகந்தளித்து உயர்ந்த ஸ்த்காரங்கள் செய்து, ஸ்ரீமதாண்டவன் ஆசிரமமொன்றையும் நிறுவ இடமும் அளித்த மஹான் ''அசோக் ப்ரபன்னாச்சார்'' என்கிற ''மஹந்த்'' என்பதைக் காண்க.

இந்த நிகழ்ச்சியைக் கல்வெட்டில் பொறித்து வைக்க எண்ணம் கொண்ட மஹந்த் வெள்ளைச் சலவைக் கல்லில் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் சிலாசாஸனம் செய்து வைத்தார். சிலாசாஸனத்தில் காணும் ஆங்கில வாசகங்கள் வருமாறு:-

''His Holiness Srimad Andavan Shri VEDANTA RAMANUJA MAHADESIKAN Swamiji performed His 14th CHATURMASYA SANKALPAM in this building from 11—7—1976 to 9—9—1976. Offering daily pooja to ASHRAMAM DIETY SRI VENU GOPALA BAGWAN and ACHARYA'S PADUKAS. On his return Padayatra from BADRINATH, Swamiji stayed here for a few days. Swamiji and sishyas immensely enjoyed their stay in this building.''

ரீஷீகேசத்தில் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமம், கால்கோள்விழா

முன்பு அறிவித்தபடியே' ஸ்ரீமதாண்டவன் ரிஷீகேசத்தில் 14வது சாதுர்மாஸ்யம் கண்டருளிய ''பரத் மந்திர்'' என்கிற புனிதத் தலத்தின் நிர்வாஹி மஹந்த் ''அசோக ப்ரபன்னாச்சார்'' என்கிற மஹான் ஸ்ரீமதாண்டவனது ஸ்வரூப-ரூப-விபவ-அனுஷ்டான-அதிமானுஷ-அத்யாச்சர்யமான செயல்களில் மிகவும் ஆழங்கால் பட்டு ஈர்க்கப் பட்டு, சாச்வதமாக ஆச்ரம பாதுகாசார்யர்களது கருணைநோக்குப் பாரத் மந்திர்க்குப் பொலிய வேண்டுமென்று நினைத்து, பாரத் மந்திர்க்கு அடுத்துத் தனக்குச் சொந்தமான ஒரு இடத்தை ஸ்ரீமதாண்டவனுக்கு மனமுவந்தளித்தார்.

ஸ்ரீமதாண்டவன் அந்த வேண்டுகோளுக் கிசைந்து அத்தலத்தைப்பெற்று 8-10-76 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி அளவில் பாதுகாராதனம் கண்டருளப் பண்ணிய பிறகு பதரீகாச்ரமம் திரிதண்டி ஸ்வாமி, கைங்கர்யபரர்கள், மஹந்த்., அவர்களுடைய தாயார்., ஸகோதரர் மற்றவர்களுடன் அந்த இடத்திற்கு எழுந்தருளி காலை 7.15க்குள் மஹா முஹூர்த்தம் செய்தருளினார்.

இந்த இடம் பரத்மந்திர் கட்டிடத் திற்குக் கீழ்புறம், கங்கையின் சமீபத்தில் ரமணீயமான சூழ்நிலையில் இருக்கிறது.

மதுராந்தகத்தில் சக்ரவர்த்தித் திருமகனுக்கும் தம்பி லக்ஷ்மணனுக்கும் கிரீடங்கள் ஸமர்ப்பித்தல்

ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி, பெங்களூர் இண்டர்நேஷனல் இன்ஸ்ட்ரு மெண்ட்ஸ் என்கிற நிறுவனத்தின் ஸ்தாபகரும், நிர்வாஹ இயக்குனருமான ஸ்ரீமதாண்டவன் திருவடி N. ஸ்ரீமான் கிருஷ்ணன் அவர்கள் டெல்லிக்கு விடை

கொண்டு மதுராந்தகத்தில் கோயில் கொண்டிருக்கும் இளைய பெருமாளுக்குச் சாத்த இருக்கும் கல்லிழைத்த கிரீடத்தை ஸ்ரீமதாண்டவனது கடாக்ஷம் பெறச் செய்து அதனைச் சாத்தினர். இந்த ஸ்வாமி ஏற்கெனவே பிராட்டிக்கும், சக்ரவர்த்தித் திருமகனுக்கும் கிரீடங்கள் ஸமர்ப்பித்து இருக்கிறார். இந்த நிகழ்ச்சி 28-12-76ல் நடந்தது.

டெல்லி ஆசிரமத்திற்குச் சொந்தமான ஸ்ரீவைகுண்டநாதன் ஸன்னிதியில் ஸுதர்சன ஹோமம்.

நமது ஆசிரமத்திற்குச் சொந்தமான டெல்லி ஸ்ரீ வைகுண்டநாதன் ஸன்னிதியில் ஸ்ரீ ஸுதர்சன ஆழ்வானை 10-11-76 அன்று சாஸ்திர விதிகளின்படி பிரதிஷ்டை செய்தாயிற்று.

இம்மூர்த்திக்கு ஸான்னித்யம் பெருகவும், உலகத்தில் நலமோங்கவும், பிணி, வறுமை முதலானவை அகலவும், ஸ்ரீ ஸுதர்சனாழ்வானது அருள் வேண்டி ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ஸுதர்சன ஜபமும், ஹோமமும் நடத்த திருவுள்ளம் கொண்டார். இவரது நியமனத்தின்படி அன்பர்களும் சிஷ்யர்களும் கிடைத்த பெரும் பொருள் கொண்டு 1-1-1977 புத்தாண்டு ஆரம்ப தினத்தில் ஸ்ரீ ஸுதர்சன ஜபத்தைத் தொடங்க உதவினர். 20க்கும் மேலான அந்தணர்கள் இதில் பங்கேற்றனர். மறுநாள் 2-1-77 அன்று ஸ்ரீ ஸுதர்சன ஹோமம் நடந்தது. பூர்ணாஹுதியின் போது பலவகைப் பொருள்களோடு பொன்னும், மணியும் ஆஹுதியில் சேர்த்தார்கள். இரு வேதபாராயணங்கள் நடந்தன. ஸ்ரீமதாண்டவன் அன்வயித்த எல்லோரையும் அமோகமாய் நிறைந்த ஸம்பாவனையோடு அனுக்ரஹித்தார்.

இந்த ஸுதர்சன ஹோமம் ஸன்னிதி வாசலில் ராஜகோபுரம் கட்டப்பட விருக்கும் அஸ்திவார மேடையில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

10-1-77. டெல்லி திருப்பாவை காலக்ஷேப கோஷ்டியில் ''கூடாரை வெல்லுஞ்சீர்'' பாசுர நாளன்று வழக்கம் போல் 250 பாத்திரங்கள் நிறைய ''கூரான்னம்'' ஸமர்ப்பிக்கப்பட்டது.

5-2-77 ஸ்ரீமதாண்டவன் டெல்லி ஸ்ரீரங்கனுத பாதுகாச்ரமம், அதற்குச் சொந்தமான கோவில் முதலானவைகளது நிர்வாஹத்தை, 1976 அக்டோபரில் அக்கால நிர்வாஹக்குழு ராஜினாமாவிற்குப் பிறகு 5-2-77 தேதியிட்ட ஆணையின்படி 11 மெம்பர்கள் கொண்ட நிர்வாஹக் குழுவின் நிர்வாஹத்தின் கீழ் இயங்கி வரும்படி நியமித்தார். ஸ்ரீ R. V. ராஜகோபாலனும், ஸ்ரீ K. கிருஷ்ணமூர்த்தி இருவரும் தத்காலம் செயலாளர்கள்.

ரிஷீகேசத்தில் பாதுகாச்சிரமம் நிறுவுதல்

ஸ்ரீமதாண்டவன் 14வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் கண்டருளிய ரிஷீகேசம் பரத்மந்திர் என்னும் புனித பூமியின் நிர்வாஹகரான வடகலை ஸ்ரீ வைஷ்ணவர் ஸ்ரீ அசோக ப்ரபன்னாச்சார் என்கிற மஹந்த் (Mahant) ஸ்ரீமதாண்டவனது கல்யாண குணங்களில் ஈடுபட்டவராய், ஈடில்லா ஒரு இடத்தை ஈகையுள்ளம் கொண்டு பரத்மந்திருக்குக் கீழ் புறம் கங்கைக் கரையோரம் பாதுகாச்ரமம் நிறுவுவதற்கு மனமுவந்து அளித்த இடத்தில் 8-10-76 அன்று ஸ்ரீமதாண்டவனது திருமுன்பே கால்கோள் விழா நடந்ததை முன்பே வாசித்திருப்பீர்கள்.

இந்த இடத்தில் மிகக் குறுகிய காலத்தில் அன்பர்களது மிக்க பேராதரவினால் அழகானதொரு ஆசிரமம் ஒரு விசாலமான கட்டிடத்தில் கட்டி முடிக்கப் பட்டது. இதன் திறப்பு விழா 2-3-77 புதன்கிழமையன்று ஸ்ரீமத் பரமஹம்ஸத்யாதி ஸ்ரீ பெரியாண்டவன் திரு நக்ஷத்ர தினமான புஷ்யத்தன்று நடந்தது. நமது ஆசிரம சிஷ்யர்களுள் தலையானவரும், ஹிதைஷியாகவும், வயோ - சீல - ஜ்ஞான-விருத்தருமாயும் பரமவைதிகாக்ரேஸராயும் எழுந்தருளியிருந்த ந்யாயவாதி விளக்குடி ஸ்ரீ R. கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி சென்னையிலிருந்து தனது திருக்குமாரரும், சென்னை ஸ்ரீ பாதுகா சாரிடீஸ் செயலருமான ஸ்ரீ M. ஸ்ரீனிவாஸனோடு எழுந்தருளி, ஸ்ரீமதாண்டவன் நியமனத்தை முன்னிட்டு, லௌகிக மரபின் வழியே நுழைவாயிலில் கட்டியிருந்த நாடாவைக்

கத்தரித்துக் கட்டிடப்பரவேசம் செய்தார். இந்நிகழ்ச்சிக்கு முன்பேயே சாத்திர முறைப்படி கட்டிடத்தில் கிரஹப்பரவேச ஹோமம் நடந்தது. அந்த நல்ல நேரத் திலேயே கட்டிடத்தின் பிறிதொரு பகுதியில் பகவதாராதனமும் மற்றொரு பகுதியில் பெரியாண்டவன், இப்போது நம்மிடையே நிலவிவரும் ஸ்ரீமதாண்டவன் பாதுகைகளுக்கும் ஆராதனமும் நடந்தன. டெல்லியிலிருந்து ஒரு தனிப் பேருந்து (Bus) மூலம் சுமார் 60 சிஷ்யர்கள் எழுந்தருளியிருந்து இப்பெரு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

துவாதசீ என்கிற பேச்சு எழுந் தாலேயே டெல்லி உட்லண்ட்ஸ் அதிபர் பொய்கைப்பாக்கம் ஸ்ரீ சுந்தராச்சாரியர் நினைவு ஆசிரமத்தில் உள்ளோர்களுக்கு உடனே வரும். அந்த முறையில் எங்கும் என்றும் (துவாதசீ) ததீயாராதன கைங்கர்ய துரந்தரரான இந்த ஸ்வாமி டெல்லியிலிருந்து எதேஷ்டமான பதார்த் தங்களுடன் வந்து அன்று ததீயாராதனம் செய்து நிறைவு கொண்டார்.

இவை யெல்லாவற்றிற்கும் பிரதானமும் முக்கிய காரண கர்த்தாவாயும் இருந்தவர், மூர்த்தியில் சிறியவரானாலும் கீர்த்தியிலே பெரியராய், பண்பிலே பாரத இமயமலையின் சிகரமாய், பேச்சிலே மிகமிதமாய், கார்யத் திலே சூரனாய், பரதனையும் மிஞ்சுகின்ற ஆசார்ய கைங்கர்ய ப்ரவணரான ஸ்ரீ T.D.R. என்று அன்போடு அழைக்கப் பெறும் ஸ்ரீ T. D. ரங்கராமானுஜம் அவர்களது அயரா உழைப்பும், ஆசார்ய ப்ரதி பத்தியும்தான் என்ற எழுதப்புக்கால் அது ஒரு பாரதமாம்.

24-5-77 ஸ்ரீமதஹோபிலம் நரஸிம்ஹன் கண்டருளுகிற ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸப்தாவர்ண திருமஞ்சனத்தன்றைய உபயத்தை ஸ்ரீமதாண்டவன் ஏற்று நடந்து வருகிறது.

8-6-77 : ஸ்ரீமதாண்டவன் பதரீ காச்ரம விஜய யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி திருமலை எழுந்தருளி திருமலையப்பனுக்கு ஸஹஸ்ர கலசாபிஷேகம் செய்விப்பித்து கண் குளிர அனுபவித்த நாள். டெல்லியிலிருந்து ஸ்ரீ T.D.R. ஸ்வாமி, பங்களூரிலிருந்து ஸ்ரீ T.S.R. டாம்கோ ஸ்ரீ ரெங்காச்சாரியர் இவர் களது ஸஹயோகம் குறிப்பிடத்தக்கது.

9-6-77 மறுநாளும் திருமலையப்பனுக்கு தனது பதரிகாச்சிரம யாத்ரையை வெற்றியோடு தலைக்கட்டி வைத்ததற்கு நன்றியுணர்வுடன் திருப்பாவாடை ஸமர்ப்பித்தருளி தன் சிஷ்யர்களோடு மங்களாசாஸனம் செய்தருளினார்.

16-7-77, தக்ஷிணாயன புண்ய காலத்தில் கடக ஸங்க்ரமண நன்னாளில் ரிஷீகேசம் ஸ்ரீமதாண்டவன் பாதுகாச் ரமத்தில் தினப்படி 100 ஸாதுக்களுக்கு ரொட்டி, பருப்பு, அரிசி முதலியவைகள் அளிக்க மூலதனம் நிறுவி அதனைச் செயல்படுத்தி வருவது சிறப்பான அம்சம்.

16-8-77. சென்னை, மயிலை ஆசிர மத்தில் ஆடிப்பூர மஹோத்ஸவத்தில் வழக்கம்போல் 175 சுமங்கலிகளுக்கு புடவை, ரவிக்கை, மஞ்சள் பழங்கள் அளித்து உகந்தது.

ஸ்ரீமதாண்டவன் (தமது ஆசிரமம்)

புடவைகள்		20
ஸ்ரீ பாதுகா சாரிடீஸ்., மயிலை	,,	20
ஹால்ஸ்ரோடு., ஸ்ரீனிவாசன்	,,	50
பெங்களூர்., T. S. ராஜம்	,,	25
பல்லாவரம்., விளக்குடி ரங்காச் சாரியர்	,,	12
பெங்களூர் N. கிருஷ்ணன்	,,	11
ஸ்ரீபுரம் அட்வகேட் K. ஸ்ரீனிவாசன்	,,	6
தி. நகர். M. ஸ்ரீனிவாசன்	,,	4
மற்றும் பலர்	,,	27
மொத்தம்		175

6-11-77. ஸ்ரீமதாண்டவன் சென்னையின் ஒரு பகுதி நங்கநல்லூருக்கு எழுந்தருளி யாயிற்று. அங்கே கோயில் கொண் டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதனப் பெருமாள் மூலவர்க்கு கிரீடமும், கவசமும், ஸ்ரீ தேசிகன் உத்ஸவர் மூல வர்க்கு கிரீடமும் ஸ்ரீமதாண்டவன் முன்னிலையில் சத்ர சாமர சகல மரியாதை களுடன் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு

போய் எம்பெருமானுக்கும் ஆசார்யனுக்கும் ஸமர்ப்பித்துகந்த நாளிது. உபயம் மௌண்ட் ஸ்ரீ P. S. ஸ்ரீநிவாஸய்யங்கார் (L.I.C.) ஸ்வாமி. பல விதங்களில் பல கைங்கர்யங்களுக்கு விளம்பரமேயில்லாமல் ஸ்ரீமதாண்டவனிடம் த்ரவ்யம் ஸமர்ப்பித்து மனநிறைவு பெறும் பரம பாகவதரிவர்.

6-11-1977
புதுடெல்லி ஸ்ரீவைகுண்டநாதன் ஸன்னிதி இராஜகோபுர நிர்மாணமும் ஸம்ப்ரோக்ஷணமும்.

1969ம் வருஷத்தில் புது டெல்லியில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தின் கிளையொன்று நிறுவப்பட்டு 1971-ல் ஸ்ரீரங்கனுதன் I.C.S. (Retd.) M.P. அவர்களது பேருதவியால் ராமகிருஷ்ணபுரம் 4 வது ஸெக்டார் ஸமீபம் இதற்கான நிலம் வாங்கப்பட்டது.

பெங்களூர் தொழிலதிபரும் ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி சிஷ்யரும் வள்ளலுமான ஸ்ரீ N. கிருஷ்ணன் அவர்கள் 4-6-71ல் ஸ்ரீ வைகுண்டநாதன் ஸன்னிதிக்காக அடிக்கல் நாட்டினர். மூலவர் ஸ்ரீபூமி நீளா ஸமேத வைகுண்டநாதன், உத்ஸவர் ரங்கனுதன் ஸன்னிதி நிர்மாணிக்கப்பட்டு 17-11-72ல் ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது. பிற்பாடு மிகக் குறுகிய காலத்திலேயே அர்த்த மண்டபமும் மஹா மண்டபமும் நிர்மாணமாயின. ஸ்ரீமதாண்டவன் பதரீயாத்ரையில் 22-2-76 முதல் 26-6-76 வரையிலும், 18-11-76 முதல் 14-1-77 வரை, இவ்விடமே எழுந்தருளியிருந்து க்ரந்த காலக்ஷேபங்கள் ஸாதித்து, திருப்பாவை காலக்ஷேபமும் ஸாதித்தருளி எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளினர். 10-11-76ல் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் ஸ்ரீ ஆஞ்ஜனேய ஸன்னிதிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

அடுத்து 76 நவம்பரில் உட்லண்ட்ஸ் ஹோட்டல் வகையரு நிர்வாஹ இயக்குனர் ஸ்ரீ R. சுந்தரம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இராஜகோபுர திருப்பணி ஸ்ரீமதாண்டவன் திருமுன்பே, வாலாஜாபாத் (தமிழ்நாடு) ஸ்ரீ இராமச்சந்திர ஸ்தபதியால் தொடர்ந்து வேலைப்பாடுகள் செய்யப்பட்டு அழகாய் நிர்மாணிக்கப்பட்டது. தலைநகரில் முதலாவது இராஜகோபுரம் இந்த ஆசிரம கோவிலுக்குத்தான் என்கிற பெருமையையும் பெற்றது.

மஹா ஸம்ப்ரோக்ஷணம் 6-11-77 அன்று ஏராளமான பக்தர்கள் வெள்ளங்களினூடே (காலை) 8.40 மணியளவில் நடந்தது.

11-1-78 சென்னை மயிலை நமது ஆசிரமத்தில் ''கூடாரை வெல்லுஞ்சீர்'' பாசுர காலக்ஷேப கோஷ்டியில் 175 புதிய பாத்ரங்களில் அக்காரவடிசில் கண்டருளப்பண்ணி வேணுகோபாலனுக்கு ஸமர்ப்பித்தது.

ஹைதராபாத்தில் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமம்

11-3-78. ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி அவரது அனுக்ரஹ விசேஷத்தால் 11-3-1978 சனிக்கிழமை காலை 4 மணிக்கு மேல் 5 மணிக்குள்ளாக செக்கண்ட்ராபாத் மாரட்ஹள்ளி 121ம் இலக்கமுடைய திருமாளிகையில் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமும் கல்யாணமண்டபமும் நமது ஆசிரமத்தின் பிரதான சிஷ்யரும் பிரபல தொழிலதிபருமான ஸ்ரீ T. S. ராஜம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

13-3-1978 தஞ்சாவூர் மாவட்டம் திருக்கண்டியூர் என்கிற திவ்யதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் ''ஹரசாப விமோசனப் பெருமாள்'' ப்ரஹ்மோத்ஸவத்தில் முதல் திருநாள் த்வஜாரோஹண மண்டபத்தை ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி கைங்கர்யமாகச் செய்யவேணும் என்று திருவுள்ளம் பற்றி அதற்கான பொருளை நிர்வாஹ அதிகாரியிடம் ஸ்ரீமதாண்டவன் ஸமர்ப்பித்தார். இந்தக் கோவிலுக்கு ஜீர்ணோத்தாரண திருப்பணி செய்து மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம் பற்றியிருக்கிறபடி.

12-4-1978 மயிலையில் ஸ்ரீமதாண்டவன் நியமனத்தோடும் அனுக்ரஹத்தோடும் 10 பையன்களுக்கு தர்மோபனயனம் நடத்திய நாள்.

24-11-78. ஸ்ரீமதாண்டவன் திருக்குடந்தை அமுதனுக்கு ஒரு பச்சைக்கல் அட்டிகை ஸமர்ப்பித்து மங்களாசாஸனம்.



பெங்களூர் ஜயநகர் கோயில் எம்பெருமான்களுக்கு விசேஷ திருமஞ்சனம்



பெங்களூரில் ஸ்வாமி தேசிகன்
7வது நூற்றாண்டு மலர் வெளியீடு


ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை
பெங்களூர் – மதுரை
வழி: கிருஷ்ணகிரி-சேலம்-விருத்தாசலம்–
மன்னார்குடி
1966
நடந்த தூரம்:375 கி.மீ.
பெங்களூர்
சித்தஹான ஹள்ளி
காமன் தொட்டி
ஹோசூர்
பழக்கோட்டை
சூளகிரி
புளியஞ்சேரி
கிருஷ்ணகிரி
காவேரிப்பட்டிணம்
காரிமங்கலம்
தர்மபுரி
பாகல்பட்டி
தொப்பூர்
பூசாரிப்பட்டி
ஓமலூர்
சேலம்
ஏத்தாப்பூர்
மேட்டுப்பட்டி
ஆத்தூர்
தலைவாசல்
அடரி
விளங்காடு
நயினார் பாளையம்
விருத்தாசலம்
ஸ்ரீ முஷ்ணம்
தொண்டசமுத்திரம்
காட்டுமன்னார் கோவில்
எய்யலூர்
காளி
தேரழுந்தூர்
நடுவக்கரை
திருக்குடந்தை
திருவெள்ளியங்குடி
ஒப்பலியப்பன்
நாதன் கோவில்
இன்னம்பூர்
புள்ளம் பூதங்குடி
கபிஸ்தலம்
ஆடுதுரை
நாச்சியார் கோவில்
வழுத்தூர்
திப்பிராஜபுரம்
திருச்சேறை
மன்னார்குடி
நீடா மங்கலம்
மருதயனம்
விளக்குடி
திருமக்கோட்டை
தெம்பிரை
பட்டுக்கோட்டை
மதுக்கூர்
பேராவூரணி
ஒட்டன்காடு
அரிமளம்
ஆயன்குடி
புதுக்கோட்டை
கடயக்குடி
திருமய்யம்
ஆருங்கல்
நெடுமரம்
திருக்கோட்டியூர்
எஸ். எஸ். கோட்டை
மேலூர்
திருமோஹூர்
மதுரை
வ
மே
கி
தெ

ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை

மதுரை-மதுரை

வழி: கோயம்புத்தூர்–குருவாயூர்-எர்ணகுளம்
திருவனந்தபுரம்-திருநெல்வேலி–ஸ்ரீவில்லிபுத்தூர்
1966-1967
நடந்த தூரம்: 1400 கி.மீ.





ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம் திறப்பு விழா – ஸெகண்டராபாத்



ஸெகண்டராபாத் ஆசிரமத் திறப்பு விழா



நெல்லி கீழ்நத்தத்தில்
ஸ்ரீ ஆண்டாள், சக்கரத்தாழ்வான் பிரதிஷ்டை





காஞ்சியில் தூப்புல் ஆசார்யனுக்கு
ஸமர்ப்பிக்கப்பட்ட திருத்தேர்

சென்னை ஸ்ரீ பாதுகா சாரிடீஸ் செயற்குழு



15-2-79 முதல் 18-2-79 முடிய திருநெல்வேலி கீழ்நத்தத்தில் ஸ்ரீ வேணு கோபாலன் ஸன்னிதியில் தனிக்கோவில் நாச்சியார், ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ சக்கரத் தாழ்வான் பிரதிஷ்டையும் மஹா ஸம்ரோக்ஷணமும்.

கீழ் நத்தம் என்பது தமிழ் நாடு மாநிலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி-பாளையங்கோட்டைக்கு 5 கி.மீ. அடுத்துள்ள சிறப்புமிக்க அழகிய கிராமம். தாமிரபர்ணி இதனருகில் தவழ்ந்து போகிறது. யோகிகள் அமர்ந்து தவமியற்றப் பாங்கான திவ்யதேசம். குளிர் சோலைகளும், வற்றுத தண் பொருநல் நதியும், கவரி வீசும் செந்நெல் வயல்களும், நீர்வளத்தைப் பறை சாற்றும் வாழைத் தோட்டங்களும், இயற்கை அன்னையின் எழிலணித்துங் கொண்ட காட்சிகளும் இந்த இடத்தின் மாண்பினைப் பன்னியுரைக்கும்.

கண்ணன் நாட்டியமாடிய பிரதேசமாகையால் இதற்கு ''கிருஷ்ண நிருத்தம்'' என்ற அப்பெயர் நாளடைவில் மருவி கீழ்நத்தம் என மாறியது. கோவில் முன்புள்ள அக்ரஹாரம் ஸன்னிதிக்கு மேலும் அழகூட்டும். வேணுகோபாலன் ஸன்னிதி மிக அழகு. நம்மாண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் பல கால் உகந்து வர்த்தித்த திவ்ய தேசம். பெரும்பாலும் ஸ்ரீமதாண்டவன் திருவடிகள் நிறைந்த இடம். நமது ஆண்டவன் பரம்பரை ஆசார்யர்களுடைய முக்கிய அபிமான ஸ்தலங்களில் முதன்மை பெற்றது.

இந்த திவ்யதேசத்தில் ஸ்ரீ வேணு கோபாலன் ருக்மணீ ஸத்யபாமையோடு கோயில் கொண்டிருக்கிறான். இதற்கு 1925-ல் ஸம்ப்ரோக்ஷணம் ஆகியிருக்கிறது. 1978-ல் ஸ்ரீ ஆண்டாள் ஸன்னிதி புதிதாக அமைக்கப்பட்டு மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கீழ்நத்தம் அருகில் பிறந்தவரும் பெங்களூர் International Instruments என்று பெருமை வாய்ந்த 'Yenkey' என்கிற ஆலையின் அதிபரும், நிர்வாஹ இயக்குனருமாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தன் இளவயது முதல் இந்த ஆலயத்தோடு இணைந்தவர். இள வயதில் இக்கோவிலுக்குக் கைங்கர்யம் செய்த பாக்கியவான். ஏழ்மை நிலைமையிலிருந்த இவரையும் இவரது குடும்பத்தையும் இங்குறையும் வேணுகோபாலன் முன்னுக்குக் கொணர்ந்தான் என்பதுவே இவருக்கு இந்த தெய்வத்தின் பால் விசேஷ ஈடுபாடு. தன்னுடைய துணைவியின் ஆசையை நிறைவு செய்ய திருவுள்ளங்கொண்டு நல்ல தசையில் இருக்கும் தன்னுடைய நன்றிப்பெருக்கினை வெளியிட அக்கோவில்தனில் ஒரு தனிக் கோவில் நாச்சியார் (செங்கமலவல்லி) மூலவர், உத்ஸவர்., ஸ்ரீ ஆண்டாள் உத்ஸவமூர்த்தி., ஸ்ரீ மஹா ஸுதர்சனும் வார் மூலவர் இவர்களை பிரதிஷ்டை செய்ய ஏராளமான பொருள் கொடுத்தார். ஸ்ரீமதாண்டவன் பொற்கரங்களைக் கொண்டும், ஸான்னித்யத்தோடும் மஹா ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும் என்கிற இவரது வேண்டுகோளைத் தலைக் கட்டவே அரங்கத்தினின்றும் அண்ணல் ஸ்ரீமதாண்டவன் கீழ்நத்தம் எழுந்தருளினார்.

15-2-79 முதல் 18-2-79 முடிய வேள்விகள் கழிந்து 18-2-79 அன்று ஸ்ரீமதாண்டவன் முன்னிலையிலும் பல பக்தர்கள் முன்னிலையிலும் மஹா ஸம்ப்ரோக்ஷணம் விமரிசையாய் நடந்தது. ஏராளமான ஸ்ரீ வைஷ்ணவ திரு நாமங்கள் எழுந்தருளியிருந்தனர். திருப் பரிவட்டத்தோடு விசேஷ ஸம்பாவனைகள் வழங்கப்பட்டன. இம்மூர்த்திகளை வடித்துத் தந்தது திருநெல்வேலி மாவட்டம் களக்காடு கருவேங்குளத்திலுள்ள முத்து ஆர்ட் செண்டர் திரு முத்துசாமி ஸ்தபதி என்பது குறிப்பிடத்தக்கது.

20-5-79 அன்று ஸ்ரீரங்கம் நம் பெருமாள் தெற்கு கோபுர வாசல் இராஜகோபுர நிர்மாண கால்கோள் விழாவில் ஸ்ரீமதாண்டவன்.

ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தைப் பார் முழுவதும் தழைத்தோங்கச் செய்ய தளர்வயதில் அயராது, உள்ளத்தில் பக்தியூற்றுக்குன்றாது, எண்ணியதை எண்ணிய வாறு செயலாக்கிப் படைப்பதில்

மஹாப்ரபுவாய், அள்ளிக் கொடுப்பதில் கர்ணனுய், அறிவுச் சுடராய், ஆசார்ய வள்ளலாய் ஸ்ரீமதஹோபிலமட ஸத் ஸம்ப்ரதாய ஆசார்ய பரம்பரையில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கர் எப்போதுமே துணிந்து செயல்படும் தீரர் என்பதனை நாடே நன்கறியும்.

கலியன் கட்டி முடிவடையாத ஸ்ரீரங்க ஞதனது தெற்கு வாசல் மொட்டை கோபுரத்தை 13 நிலை கொண்ட இராஜகோபுரமாக நிர்மாணிக்கத் திருவுள்ளங் கொண்டு அதன் துவக்க விழா 20-5-79 ஞாயிறு காலை 9 மணி அளவில் நடந்தது. ஸ்ரீமதாண்டவனும் ஏராளமான சிஷ்யர்களோடே தெற்கு வாசல் எழுந்தருளியாயிற்று.

இதற்கு முன்பே 50' மேல் தளத்திற்கு ஸ்ரீமத் ஜீயர் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமதாண்டவனும் உயர்ந்த படிக்கட்டுகளில் ஏறி இருவருடைய முன்னிலையில் ஆரம்ப விழா நடந்தது.

ஸ்ரீமதாண்டவன் பல ப்ரகாரங்களில் இந்தகைங்கர்யத்திற்கு உபகரித்தது மன்னினியில் கணிசமான பொருளும் ஈட்டி அளித்தது மன்றிக்கே, ஜீயர் ஸ்வாமி நியமனத்தின்பேரில் இரண்டாவது நிலையை சுமார் 8 லக்ஷ ரூபாய் மதிப்பீடுடையதை தாமே சிலவழித்துக் கட்டித் தருவதாய் ஒப்புக் கொண்டு ஸ்ரீரங்கம் விடை கொள்ள இருக்கிறபடி.

27-7-79. திருவாடிப்பூரமாகிய அன்று வழக்கம் போல் ஸுமங்கலிகளுக்குப் புடவை, ரவிக்கைத் துண்டு மஞ்சள் குங்குமம் வழங்கப் பெற்றது.

ஆசிரம சாத்துமுறை ஆசார்ய தனியன்கள் அனுஸந்தானக்ரமத்தில் மாற்றம்.

1-9-79. காடந்தேத்தி ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் 151வது திருநக்ஷத்ரத்தை மிக விமர்சையாய்க் கொண்டாடி அதன் ஞாபகார்த்தமாய், இதுவரையில் அந்த மஹானுடைய தனியனை தனியாக அனுஸந்தித்து வருவதை மாற்றி, நம்மாண்டவன், தேரழுந்தூர் ஆண்டவன் தனியனுக்குப் பிறகு காடந்தேத்தி ஆண்டவன்து தனியனை ''ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகி ப்ரவரஸ்'' என்று தொடர்ந்து அனுஸந்திக்கும்படி நியமித்தாயிற்று.

தனியன்கள் முடிந்து குருபரம்பரானுஸந்தானக்ரமத்திலும் நம்மாண்டவன் ''ஸ்ரீ மதே வேதாந்த ராமானுஜ மஹா தேசிகாய நம:'' என்பதற்கு அடுத்தே ''ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹா தேசிகாய நம;'' என்றும் அன்று முதல் அனுஸந்திக்கப்படுகிறது.

17-1-80. பெங்களூர் மல்லேச்வரம் நவநீத க்ருஷ்ணன் கோவிலில் ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ஹனுமத்ஸமேத சக்ரவர்த்தித் திருமகன் பிரதிஷ்டை மஹோத்ஸவம் ஸ்ரீமதாண்டவன் ஸான்னித்யத்தோடு சிறப்புற நடந்தது.

1-3-80. மாசி-மகம் மஹாமகம்., ஸ்ரீமதாண்டவன் திருக்குடந்தை எழுந்தருளி உத்ஸவ 10 நாளும் கோவிலில் வருகின்ற யாத்ரீகர்களுக்குக் குறைவில்லாமல் தானதர்மாதனை செய்து உகந்தாயிற்று.

1-6-80. ஸ்ரீமதாண்டவன் முன்னிலையில் வரலாற்றுப் புகழ் மிக்க சோழ நாட்டின் தலைநகராக விளங்கும் தரணி புகழ்த் தஞ்சையில் திருமங்கை மன்னனுல் அஷ்டாரக்ஷ மந்திரத்தின் உட்பொருளை தன்னுடைய முதல் 10 பாசுரங்களால் உணர்ச்சி மயமாக மங்களாசாஸனம் செய்யப் பட்ட ''தஞ்சை மாமணிக் கோவில்'' எம்பெருமானின் ஜடிபந்தனஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் 1-6-80 ஞாயிறு சிறப்பாக நடந்தது. ஸ்ரீமதாண்டவன் மஹோத்ஸவத்தைப் பூர்த்தி செய்து கொடுத்து, பக்த மஹாஜனங்களையும் அனுக்ரஹித்தார்.

திருவெள்ளியங்குடி கோலவில்லிராமன் ஜீர்ணோத்தாரணம்

தமது 18வது சாதுர்மாஸ்யம் கண்டருளும் ஸ்ரீமதாண்டவன் திருக்குடந்தையில் எழுந்தருளியபோது 11-9-80 நடந்த திருவெள்ளியங்குடி எம்பெருமானின் மஹாஸம்ப்ரோக்ஷணைக்கு சுமார் 1,50,000 சிலவில் தம்பொறுப்பில் ஏற்று நடத்திக் கொடுத்தாயிற்று.

ஸ்ரீமதாண்டவன் ஆசிரமங்கள் உள்ள இடங்கள்:

1. பெரியாச்ரமம் - கொள்ளிடக்கரை-மேலூர்-ஸ்ரீரங்கம்.

2. பாதுகா வித்யாலயா, 155, கீழ உத்தரவீதி ஸ்ரீரங்கம்.

3. சின்னச்ரமம், கொள்ளிடக்கரை - மேலூர்-ஸ்ரீரங்கம்.

4. பாதுகாச்ரமம்: இரண்டு இடங்கள் ஹரித்ராநதி மேலவீதி, மன்னர்குடி, தஞ்சை ஜில்லா.

5. (a) பாதுகாச்ரமம், 13 காவேரிக்கரை புதுப்பாலம் கும்பகோணம், தஞ்சை ஜில்லா. (b) பொற்றுமரை வடகரை.

6. பாதுகாச்ரமம்: ஸ்ரீரங்க ராஜ வீதி சின்ன காஞ்சிபுரம்.

7. பாதுகாச்ரமம், திருமலை ஹில்ஸ், திருப்பதி (A. P)

8. பாதுகாச்ரமம், டோம்பிவிலி, பம்பாய்.

9. பாதுகாச்ரமம், ஜெயநகர் பெங்களூர்.

10. பாதுகாச்ரமம், வித்யாரண்யபுரம், மைசூர்.

11. பாதுகாச்ரமம், ஸோஸலே-மைசூர்.

12. பாதுகாச்ரமம், ஸன்னிதி வீதி, மேல்கோட்டை, மைசூர்.

13. பாதுகாச்ரமம் ஸன்னிதி வீதி, திருச்சானூர் (A. P.)

14. பாதுகாச்ரமம், மாரட் ஹள்ளி, செகண்ட்ராபாத் (A. P.)

15. பாதுகாச்ரமம், கீழ்நத்தம் கிராமம், திருநெல்வேலி மாவட்டம்

16. பாதுகாச்ரமம்,தேசிகாச்சாரி ரோடு, மயிலை, சென்னை.

17. பாதுகாச்ரமம், R.K.புரம் டெல்லி.

18. பாதுகாச்ரமம், பரத்மந்திர் சமீபம், ரிஷீகேசம்.

இவைகளில் 1,3,6,7 தவிர மற்றவை திருக்குடந்தையாண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் நிர்மாணித்தவை.

ஸ்ரீ :

ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை

அக்டோபர் 1963

4-10-63. **நாகப்பட்டிணம்** - திருநாகை.

5-10-63. கீவளூர் தாமோதராச்சாரியர் திருமாளிகை.

6-10-63. ஆமூர்.

7-10-63. **திருக்கண்ணபுரம்.**

9-10-63. **சிறுபுலியூர்.**

10-10-63. மாயவரம்.

14-10-63. மஹாராஜபுரம் வழியாக **தலைச்சங்காடு.**

16-10-63. **அண்ணன் கோவில்** காவேரிப் பட்டிணம் வழியாக நாங்கூர் செல்லுகை.

17-10-63. **நாங்கூரி**லிருந்து தண்ணீர்ப் பந்தல்.

19-10-63. மங்க மடம் வழியாக **திருநகரி**

22-10-63. **சீர்காழி.**

23-10-63. சிதம்பரம் அருகில் ஆயங் குடிப்பள்ளம் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் திருமாளிகை.

24-10-63. **சிதம்பரம்;** மேலவீதி வக்கீல் சீமா ஸ்வாமி திருமாளிகை.

31-10-63. புவனகிரி.

3-11-63. செம்பா ரெட்டி பாளையம் வழியாக **திருவஹிந்திரபுரம்.**

ஏப்ரல் 1964

9-4-64. பூண்டி.

16-4-64. வாலாஜா ஸ்ரீநிவாஸபெருமாள் ஸன்னிதி.

18-4-64. ராணிப்பேட்டை வெங்க டாத்ரி ஸ்வாமி திருமாளிகை.

19-4-64. லாடபுரம்.

20-4-64. அம்மூர்.

24-4-64 பெருங்காஞ்சி., **சோளிங்கபுரம்.**

29-4-64 தரணி, புத்தூர், வடமால் பேட்டை.

திருச்சானூர் எழுந்தருளுதல்

மே 1964

12-5-64 முதல் 7-5-64 **திருமலையில்** பாதுகா ஆசிரமத்தில் எழுந்தருளிருந்தது.

10-5-64 முதல் 12-5-64 **திருச்சானூர் ஸன்னிதி.**

13-5-64. புத்தூர் கிராமம்.

14-5-64. நகரி.

15-5-64. திருத்தணி.

16-5-64. அம்மனூர்.

17-5-64. **காஞ்சீபுரம்.** பாதுகாச்ரமம் ஸ்ரீரங்கராஜ வீதி. சின்ன காஞ்சிபுரம்.

ஜூன் 1964

10-6-64 பழைய சீவரம்.

11-6-64. வடக்குப்பட்டு.

12-6-64. கரிச்சங்கால்.

13-6-64. க்ரோம்பேட்டை, மதுரை ரயில்வே நிலையம் எதிரில் தேரழுந்தூர் ஸ்ரீ சுந்தரம் அய்யங்கார் திருமாளிகை.

5-7-64 — 8-7-64 பல்லாவரம்-விளக்குடி கோபால தேசிகாச்சாரியர் திருமாளிகை ''துவாரகா''

8-7-64 — 10-7-64 நங்கநல்லூர் - காலனி

12-7-64 — 16-7-64. பல்லாவரம் - விளக்குடி கோபால தேசிகாச்சாரியர் திருமாளிகை.

ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை

ஸ்ரீரங்கம்-திருநீர்மலை

வழி: நாகப்பட்டிணம்-சிதம்பரம்-கடலூர்-விழுப்புரம்-காஞ்சீபுரம்-சோளலிம்மபுரம்-திருமலிபுத்தூர்-அரக்கோணம்

1963-64

நடந்த தூரம்: 1020 கி.மீ.



ஸ்ரீமதாண்டவன் விஜய யாத்திரை

திருநீர்மலை - பெங்களூர்

வழி: மஹாபலிபுரம்-உத்திரன்மேரூர்-
விழுப்புரம்–திருவஹீந்திரபுரம்-பாண்டிச்சேரி-
விழுப்புரம்-திருக்கோவிலூர்-திருவண்ணுமலை-
கிருஷ்ணகிரி–ஹோசூர்

1965

நடந்த தூரம்:739 கி.மீ.



17-7-64 — 23-7-64. க்ரோம்பேட்டை ஸுந்தரமய்யங்கார் திருமாளிகை.

23-7-64. திருநீர்மலை - ஹரிகல்யாண மண்டபம்.

ஜூலை 24, 1964

இரண்டாவது சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்

22-9-64. உத்தானம், பல்லாவரம் கோபால தேசிகாச்சாரியர் திருமாளிகை.

23-9-64—25-9-64. **திருவல்லிக்கேணி** வஸந்தோத்ஸவ பங்களா.

26-9-64. செம்மஞ்சேரி கோவில். சிறுச்சேரி.

27-9-64. **திருவிடந்தை ஸன்னிதி**

28-9-64. **கடல் மல்லை (மஹாபலிபுரம்)**

29-9-64. குளத்தூர்.

30-9-64. சிங்கப்பெருமாள் கோவில்.

1-10-64. புலிப்பாக்கம்.

3-10-64. பொன் விளைந்த களத்தூர் அக்ரஹாரம் (ஒத்தவாக்கம் புகைவண்டி நிலையம்)

5-10-64. மணப்பாக்கம்.

6-10-64. உத்திரன்மேரூர்.

8-10-64. பாதிரி - எண்டத்தூர் வழி.

9-10-64. ஓரத்தி - சோத்துப் பாக்கம் தொழுப்பேடுவழி.

10-10-64. சிங்கனூர்.

12-10-64. விக்ரவாண்டி; கண்ட்ரக் கோட்டை போய் பெண்ணையாறு ப்ரவாஹம் கடாக்ஷித்து திரும்பி வந்த வழியே வந்து அகரம் சேர்தல்.

13-10-64. வெங்கடாத்ரி அகரம் ராகவாச்சாரியர் ஸ்வாமி திருமாளிகை.

13-10-64. ஸ்வர்ணவூர்; நெல்லிக்குப்பம்.

14-10-64 — 24-10-64. **திருவஹிந்திரபுரம்**. C. R. ராமானுஜாச்சாரியர் திருமாளிகை.

25-10-64 மஞ்சக்குப்பம் ஸம்பத் அய்யங்கார் திருமாளிகை,

12-11-64. சிங்கர்கோவில் புருஷோத்தம ரெட்டியார் க்ருஹம்.

13-11-64. புதுச்சேரி (பாண்டிச்சேரி)

22-11-64. ஸ்வர்ணவூர் தாமோதர ரெட்டியார் க்ருஹம்.

25-11-64. நெல்லிக் குப்பம் சடகோ பாச்சாரியர் திருமாளிகை.

1-12-64 — 6-12-64. புதுப்பாளையம் V. R. ஸ்ரீனிவாஸாச்சாரியர் திருமாளிகை டாக்டர் ராமஸ்வாமி அய்யங்கார் திருமாளிகை.

5-12-64. திருவஹீந்திரபுரம் C. R. இராமானுஜாசாரியர் திருமாளிகை.

ஜனவரி 1965

18-1-65. திருப்பாப்புலியூர் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேப சாத்துமுறை.

25-1-65. சொரப்பூர்

26-1-65. புராணசிங்க பாளையம் மதகடிப்பட்டு வழி E. N. பாலகிருஷ்ண பிள்ளை ஸத்காரம்.

29-1-65. திருமங்கலம்.

31-1-65. வளவனூர் புதூர்வழி. சி. வெங்கடசாமி ரெட்டியார், V. கேசவ ராமானுஜம் வரவேற்பு.

1-2-65. ஸ்வர்ணவூர்.

2-2-65. நெல்லிக்குப்பம்.

3-2-65. கண்ட்ரக்கோட்டை. (பட்டாம்பாக்கம்; வெளிமேடுவழி)

4-2-65. வெங்கடாத்திரி அகரம்.

5-2-65. நெல்லிக்குப்பம் (பொய்கைப் பாக்கம் வழி)

6-2-65. விழுப்புரம்.

8-2-65. விழுப்புரம் ஸ்ரீவைகுண்டப் பெருமாள் ஸன்னிதி, அந்திலி ஸ்வாமி ததியாராதனம்.

10-2-65. **திருக்கோவலூர்** (மாம்பழப் பட்டு வழி)

13-2-65. விரையூர்.

14-2-65. திருவண்ணமலை - 15-2-65 இராஜாசத்திரம் (வக்கீல் ஸ்ரீனிவாஸாச் சாரியர் ததீயாராதனம்) ஸ்ரீமதாண்டவன் மிகவும் உகந்து அருளினது.

15-2-65. கோளப்பாடி.

16-2-65. கொட்ட குளம் சேர்மன் நாயுடு க்ரஹம். மேல் சங்கம்.

17-2-65. சிங்காரப்பேட்டை வேன் டயர்கள் பழுதுபட்டன T. V. S. ஐயா துரைஸாமி தக்க ஸமயத்தில் செய்த எதிர்பாராத உதவியால் புதுப்பிக்கப் பட்டு யாத்திரை தொடங்கியது.

18-2-65. சாமல்பட்டி தோட்டம், T. S. சௌந்தரராஜன் திருமாளிகை. ரமணீய மான ஸ்தலம். ஸ்ரீமதாண்டவன் மிக்க உகந்தது.

19-2-65. மத்தூர் தொரக்கப் பள்ளி வழி, கிருஷ்ணகிரி; P. T. வெங்கடாச் சாரியர்; N. கோபாலய்யங்கார்; ராம ஸ்வாமி அய்யங்கார் ததீயாராதனம்.

21-2-65. சூளகிரி பேராண்டஹள்ளி

22-2-65. ஹோசூர்.

23-2-65. கித்தஹானஹள்ளி.

23-2-65. பெங்களூர் டபிள்ரோடு ஜகன் னாதாசாரியர் திருமாளிகை.

1-3-65. பர்கால மடம்.

2-3-65. T.V.S. சேர்மன் T. S. ராஜம் ஸவாமி திருமாளிகை. பின் எதிராஜகூடம், மல்லேஸ்வரம்.

மார்ச் 1965

மேல்கோட்டை திருநாராணயபுரம் புறப்பாடு

3-3-65. கவிபுரம் மாதவ அய்யங்கார் திருமாளிகை. ஸோஸலே கிருஷ்ணய்யங்கார் திருமாளிகை

4-3-65. கங்கேரி ரங்கநாயகி அம்மாள் தோட்டம். விடுதி இராமன் ஸன்னிதி.

5-3-65. இராமநகர்-R. A. அய்யங்கார் திருமாளிகை.

7-3-65. மலூர் அப்ரமேயப் பெருமாள் ஸன்னிதி

8-3-65. மத்தூர் நரஸிம்மன் ஸன்னிதி. மண்ட்யா ஜனார்த்தனப் பெருமாள் ஸன்னிதி ராமஸ்வாமி அய்யங்கார் ததீயாராதனம்.

9-3-65. துக்தா; நரஸிம்மன் ஸன்னிதி ராகவாச்சாரியர் ததீயாராதனம்.

10-3-65 — 20-3-65. **மேல் கோட்டை திருநாராயணபுரம்** பாரி வேட்டை மண்டபம்.

21-3-65. தொண்டனூர் கண்ணன் ஸன்னிதி ஸ்ரீரங்கப்பட்டிணம்; நரஸிம்மாச் சாரியார் திருமாளிகை.

23-3-65. மண்ட்யா கொப்பல் இராமன் ஸன்னிதி வெங்கடாச்சாரியர் ஸ்வாமி ததீயாராதனம். பன்னூர் இராமன் ஸன்னிதி ராஜமய்யங்கார் ததீயாராதனம்.

25-3-65. உக்கலகரே; ஸோமநாத் சரித்திரக் கட்டிடம், ஜோடிதார் ராஜ கோபாலாச்சாரியர். திருமாளிகை ஸ்ரீரங்க ராஜப்பட்டிணம், வரதாச்சாரியர் திருமா ளிகை.

26-3-65 — 29-3-65. பழய ஸோஸலே ஜோடிதார் ரங்காச்சாரி திருமாளிகை.

30-3-65. T. நரஸிப்பூர் ஸ்ரீநிவாஸவர தாச்சாரிய திருமாளிகை.

ஏப்ரல் 2, 1965

ஹம்பிகை கிராமத்தில் ஸ்ரீமத் பெரியாண்டவன் எழுந்தருளியிருந்த திருமாளிகையை ஸேவித்தருளியது.

3-4-65 தலைக்காடு; சுந்தரதாத்தாச் சாரியர் திருமாளிகை. கொள்ளேகாலம் ஸ்ரீராம மந்திரம்.

6-4-65. தேசிகன் எழுந்தருளியிருந்த ஜ்ஞான மரத்தடியில் துவாதச புண்ட்ரம் தரித்து ஜபதபாதிகள் முடித்தார். ஸ்வாமி தேசிகன் எழுந்தருளி காலக்ஷேபம் ஸாதித்த கூர்மாஸனத்தையும் ஸேவித்தார்.

6-4-65. ஸத்யாகாலம் வரதராஜப் பெருமாள் ஸன்னிதி (பரகாலமடம் ஜீயர் நியமனப்படி ஸம்பத் ஸ்வாமி ததீயாரா தன - ஸத்காரங்கள்.

7-4-65. சிவஸமுத்ரம்; ககனசுகி பர் ஜுகி. காவேரியின் நீர்வீழ்ச்சியில் நீராட் டம்.

8-4-65. பெலக்வாடி சேஷாத்திரி அய்யங்கார் திருமாளிகை. (ஷியார் ஷஷ்ட்யப்தபூர்த்தி) கிருஷ்ணபுரம் திருநாராயணய்யங்கார் திருமாளிகை. ஸோஸலே ஜோடிதார் ராஜகோபாலாச்சாரியார் திருமாளிகை.

15-4-65. **உக்கலகரே**-ஜோடிதார் ராஜகோபாலாச்சாரியார் திருமாளிகை.

ஊருக்கு தென்மேற்கில் நம்மாண்டவன் எங்களாண்டவன் பலகாலம் உகந்து வர்த்தித்து ஆராதனுதிகள் கண்டருளிய பர்ணசாலேபோன்ற ரமணீயமானதும் - புனிதமானதுமான ஸ்தலம்; இன்றும் ப்ரத்யேகமாகப் பாதுகாக்கப்படுவதைக் கடாக்ஷித்து போரவுகந்து தாமும் அங்கேயே வர்த்தித்திருந்தபடி;

ஏப்ரல் 22, 1965.

ஹெம்பிகை வரதராஜன் ஸன்னிதி; பெரியாண்டவன் பலகாலம் எழுந்தருளியிருந்த ஸன்னிதி; மாதவ மந்திரி, அணைக்கட்டு காவேரி மீறி வழியும் காட்சி, ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளமுகந்த இடம்.

23-4-65. தலைக்காடு சுந்தரதாத்தாச்சாரி திருமாளிகை.

24-4-65. குமாரனபுரம் K. V. வெங்கடாச்சாரியார் திருமாளிகை.

25-4-65. பிளகிரி; (ச்வேதாத்ரி - செம்பகாரண்யம்) பர்ணசாலே ஒன்று ஸ்ரீமதாண்டவன் வாஸத்திற் கென்றே ப்ரத்யேகமாய்க் கட்டப்பட்டது. வக்கீல் வெங்கடரங்க அய்யங்கார் கைங்கர்யம்.

28-4-65. குமாரனபுரம்; K. V. வெங்டாச்சாரியர் திருமாளிகை.

29-4-65. கொள்ளேகாலம்; ஸ்ரீநிவாஸய்யங்கார் திருமாளிகை.

30-4-65. மாரேஹள்ளி லக்ஷ்மி நரஸிம்மன் ஸன்னிதி. காளமுந்தன் தொட்டி, தங்குகை.

1-5-65. மத்தூர் நரஸிம்மன் ஸன்னிதி.

2-5-65. மஸூர் இராமன் ஸன்னிதி.

3-5-65. ராம்நகர் வக்கீல் R. அய்யண்ணையங்கார் திருமாளிகை T. V. S. ஏஜண்டு. R. A. தெய்வசிகாமணி அய்யங்கார் விடுதி இராமன் ஸன்னிதி.

4-5-65. கங்கேரி அரங்கநாயகி அம்மாள் எஸ்டேட் கட்டிடம் பெங்களூர் காந்தி நகர் வெங்கடரங்க அய்யங்கார் திருமாளிகை.

5-5-65. பொதுவரவேற்பு; 11வது கிராஸில் T.S. ராஜம் ஸ்வாமி திருமாளிகை பின் எதிராஜமடம்; மல்லேஸ்வரம்.

ஜூன் 1965

ஹாஸன் புறப்பாடு

2-6-65. மல்லேச்வரம் சேஷாத்ரி அய்யங்கார் திருமாளிகை.

3-6-65. ராஜாஜிநகர் S. M. கிருஷ்ணமாசாரியர் திருமாளிகை

4-6-65. ராஜாஜிநகர் G. நரசிம்மாச்சாரியர் திருமாளிகை.

8-6-65. கவிபுரம் வேதாந்த ஐயங்கார் திருமாளிகை.

8-6-65. ஸோசலே கிருஷ்ணமாச்சாரியர், ரங்காச்சாரியர், கருடாச்சாரியர், ஜகந்நாதாச்சாரியர் திருமாளிகை.

9-6-65. துரைசாமி ஐயங்கார் திருமாளிகை.

12-6-65. டபிள் ரோடு; பெங்களூர்-திருக்குடந்தை ஜகன்னாதாச்சாரியர் திருமாளிகை.

தாஸரஹள்ளி ராமத்யாணிபங்களா

13-6-65. நிலமங்களா.

14-6-65. தியாக குண்டலு ரங்கனதய்யங்கார் திருமாளிகை.

15-6-65. ஹீரேஹள்ளி தங்குகை (Regional Arecanut research station.)

16-6-65. தும்கூர் லக்ஷ்மி நாராயணன் ஸன்னிதி. குன்னஹள்ளி உயர்நிலைப் பள்ளி.

17-6-65. குப்பி சென்ன ப்ரஸவப்பாசத்திரம். கடப்பம் எழுந்தருளுதல், ராமலக்ஷ்மீ ஜனார்த்தனன் கோவில்.

19-6-65. வடவன்கட்டா.

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
1-7-76 } 15-10-76	டெல்லி - ரிஷிகேசம்	உத்திரபிரதேசம்	காடௌலி (Katauli)	கங்கையிலிருந்து பிரிந்து வரும் நதி	புள்ளிமான்கள் பார்க் அழகிய மான்கள் காணுமிடம்
2-7-76	,,	,,	புகார் (Pukarh)	,,	கங்கை ஓடை சாப்ராவுக்கும் - புகா ருக்குமிடையில் 8 கி.மீ. தூரமுள்ளது
3-7-76 } 12-10-76	,,	,,	ரூர்கீ (Roorkee)	கங்கைக் கால்வாய்	5கி.மீ. தூரத்திற்கு வரிசையாக படிகட்டுகள். 5 ஸிம்ஹங்கள் செதுக்கி யுள்ளது
3-7-76	,,	,,	பாகத்ராபாத்	,,	ஸாயம் அனுஷ்டானம்
4-7-70	,,	,,	ஹரித்வார்	கங்கைநதி	பரிவாரங்களுடன் ஸங்கல்பம் செய்து வைத்து நீராட்டம் பிரஹ்மகுண்டம் ஸ்நானம்
7-7-76 10-10-76 11-10-76 }	,,	,,	ஹரித்வார்	,,	கங்கைக் கால்வாய்க்குத் கீழ்புறம் 1½ கி.மீ. தூரத்தில் ஓடும் சுத்த கங்கை
9-7-76 முதல் இரண்டு மாதங்கள்	,,	,,	ரிஷிகேசம்	கங்கைநதி	திரிவேணீ காட்

12-9-76 4-10-76	ரிஷிகேசம்-பதரி		பியாலி	கங்கை அருவி	
13-9-76 3-10-76	,,	,,	தேவ பிரயாகை	திரிவேணி ஸங்கமம்	பாகீரதி-அளகநந்தா ஸரஸ்வதி அந்தர்வாஹினீ மஹாபரணி புரட்டாசித் திருவோணம்
14-9-76	,,	,,	பக்வான்	அளகநந்தாநதி	பாதையின் கீழே 50' இறங்கி நீரோட்டம் சரிவு - அபாயம்
15-9-76	,,	,,	ஸ்ரீநகர்	அளகநந்தா	ஸ்ரீஜயந்தி மஹோத்ஸவம்
16-9-76 2-10-76	,,	,,	,,	அளகநந்தா	புரட்டாசி மாதப் பிறப்பு ஜயந்தி பாரணை
17-9-76 1-10-76	ரிஷிகேசம் - பதரி	உத்திரபிரதேசம்	ருத்ரபிரயாகை	அளகநந்தா நதி மந்தாகினி சங்கமம்	கேதாரிநாத் போகுமிடம்
18-9-76 30-9-76	,,	,,	கர்ணபிரயாகை	அளகநந்தா பிண்டர்நதி சங்கமம்	கர்ணன் தகனம் செய்த இடம்
19-9-76 29-9-76	,,	,,	சோமோலி (Chomali)	அளகநந்தா	மிகுந்த குளிர் 4300' (A.S.L.)
20-9-76 28-9-76	,,	,,	ஹீலாங்	கங்கை நீர்வீழ்ச்சி	
22- 9-76 27- 9-76	,,	,,	பாண்டுகேச்வர்	,,	பாண்டவர்கள் மஹாப்ரஸ்தானம் புறப்பட்ட இடம்
23- 9-76	,,	,,	பதரிகாச்ரமம்	அக்னி குண்ட தீர்த்தம்	

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
28- 9-76	பதரீ - ரிஷிகேசம்	உத்திர பிரதேசம்	ஷிலாங்	கருடகங்கா	கங்கைக் கரையில் கருடன் சிலாரூபியாய் கோவிலில் ஸேவை. நதியிலிருந்து கற்கள் எடுத்துவந்து வீட்டில் வைத்தால் விஷ ஜந்துக்கள் வாராது
29- 9-76	,,	,,	சோமோலி (Chomali)	நந்தபிரயாகை நந்தாகினி	மாலை 5-30 மணி ஸ்நாநத்தோடு அனுஷ்டானம்
13-10-76	ஹரித்வார் - டெல்லி	,,	புர்காஸி	கிணறு	
18-1-77	டெல்லி - அலஹாபாத்	,,	ஸிகந்த்ராபாத்	கங்கை கால்வாய்	அமாவாஸை (தை)
21-1-77	,,	,,	நாராயண்	,,	
23-1-77	,,	,,	சாகேஞ	,,	
30-1-77	,,	,,	கான்பூர்	,,	J. K. இராதாகிருஷ்ண மந்திர்., வெள்ளி விக்ரஹங்கள்
4-2-77 12-2-77	,,	,,	அலஹாபாத் V.I.P. காட்டேஜ்	கங்கை - யமுனை ஸங்கமம்	கும்பமேளா - அஷ்டகா அன்வஷ்டகா; மாசி மாதம் பிறப்பு
17-2-77 21-2-77	அலஹாபாத் - காசி	,,	காசி ஹனுமான் காட்	கங்கை	மாசி அமாவாஸை தெற்கு - வடக்கு ஓட்டமுள்ள கங்கை (உத்தர வாஹினி)

22-2-77	அலஹாபாத் - காசி	,,	காசி அலிகாட்	கங்கை	த்வாரகாமந்திர் தரியாராதனை
23-2-77	காசி - நாக்பூர்	,,	நாராயண்பூர்	கங்கைக் கால்வாய்	
24-2-77	,,	,,	மிர்ஸாபூர்	கங்கைக் கால்வாய்	கங்கை ப்ரவாஹஸ்நானம் இதுவரைதான் - மலை பிரதேசம்
25-2-77	,,	,,	லோஹன்பூர்	குளம் (படிக்கட்டுகள்)	
26-2-77	,,	,,	லால்கஞ்சு	நீரோடை	
27-2-77	,,	உத்திரபிரதேச-மத்திய பிரதேச எல்லை	ட்ராமண்ட் & ஹனுமானுக்கும் நடுவில்	ஜ்வாலா நதி	
28-2-77	,,	மத்யபிரதேசம்	மௌகஞ்சு	நீரோடை	பெரியாண்டவன் திருநக்ஷத்ர ஸேவை துடக்கம்
4-3-77	,,	,,	காரிஹி	குளம்	
5-3-77	,,	,,	அமர்பத்தன்	குளம்	மாசிமகம் திருமுடிவிளக்கம்
6-3-77	காசி - நாக்பூர்	மத்யபிரதேசம்	நாரோரா	ஏரிபோன்ற அகண்டமான குளம்	
7-3-77	,,	,,	பாலா	குளம்	
8-3-77	,,	,,	கட்னி	விசாலமான கிணறு	
9-3-77	,,	,,	தங்கான்	குளம்	

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
10-3-77	காசி - நாக்பூர்	மத்தியபிரதேசம்	காந்திகிராமம் (பட்ஜார்)	ஏரி	
11-3-77	,,	,,	ஜபல்பூர்	கிணறு	நல்ல தீர்த்தம் (15' ஆழம்)
14-3-77	,,	,,	பேதாகாட் (Beda Ghat)	நர்மதை நதி	இயற்கைக் காட்சிகள் சலவைக்கல் மலைகள் பங்குனி மாதப் பிறப்பு
15-3-77	,,	,,	தில்ஹாராகாட்	நர்மதை	
17-3-77	,,	,,	டிரஸ்ட் தர்மசாலை	நர்மதை	ஆக்கூராண்டவன் கைங்கர்யம்
18-3-77	,,	,,	ஹோல்கி	கிணறு	
19-3-77	,,	,,	லக்கனடான்	கிணறு	அமாவாஸை
20-3-77	,,	,,	ச்சாப்லா	வார்ணி கங்கை என்கிற நதி	
22-3-77	,,	,,	கோரை	தாமரைக் குளம்	
23-3-77	,,	,,	கட்டா	கிணறு	
25-3-77	,,	மஹாராஷ்ட்ரா	நாக்பூர்	கிணறு - குளம் இரண்டு முண்டு	தண்ணீர் சுமாரான சுவை
2-4-77	நாக்பூர் - ஹைதராபாத்	மஹாராஷ்ட்ரா	போரி	ஓடும் ஒரு நதி	

4-4-77	நாக்பூர் - ஹைதராபாத்	மஹாராஷ்ட்ரா	ஹன்கன்காட்	குளம்	ராவ்ஜி பாய் படேல் தனியார் திருமாளிகை
5-4-77	,,	,,	யார்லா	ஒரு நதி	
6-4-77	,,	,,	தோகி	நிர்மலமான நதி	
8-4-77	,,	ஆந்திர பிரதேசம்	பிம்பல்குடி	பன்கங்கா நதி	ஆந்திரா-மஹாராஷ்ட்ரங் களை பிரிக்கும் நதி
10-4-77	,,	,,	நீர்திகொண்டா	வாய்க்கால்	
11-4-77	,,	,,	நிர்மால்	பெரிய ஏரி	
12-4-77	,,	,,	ஸோன்	கோதாவரி-மஹாநதி	ஏழு புண்ய நதிகள் நீராட்ட பூர்த்தி
13-4-77	,,	,,	அர்குல்	குளம்	
14-4-77	,,	,,	இண்டல்வாய்	வாய்க்கால்	
16-4-67	,,	,,	காமரெட்டி	வாய்க்கால்	
18-4-77	,,	,,	மாஸைப்டு	வாய்க்காலும் ஏரியும்	சூரியக்ரஹணம்
21-4-77	,,	,,	ஆல்வால்	பெருமாள் புஷ்கரிணி	அக்ஷயத்ருதியை
21-4-77	,,	,,	ஹனுமார்கோவில் செகண்ட்ராபாத் அருகில்	கோவில் கிணறு	பட்டிண பிரவேசம்
22-4-77	,,	,,	செகண்ட்ராபாத்	நடபாவி	மாரட்ஹள்ளி ஆசிரமத்திலிருந்து 1 கி.மீ.

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
11-5-77	நாக்பூர்-ஹைதராபாத்	ஆந்திர பிரதேசம்	ஷாட்நகர்	நடபாவி	
12-5-77	,,	,,	ரங்கரெட்டி கொடா	நடபாவி	
13-5-77	,,	,,	திம்மாஜிபேட்டை	நடபாவி	
15-5-77	,,	,,	கோபால் பேட்டை	இராமன் ஸன்னிதி புஷ்கரணி	
16-5-77	செகண்ட்ராபாத்-திருப்பதி	ஆந்திரா	பீச்சபள்ளி	கிருஷ்ணநதி	புதியபாலம் 3100' நீளம்
17-5-77	,,	,,	கட்டிகாலிபடு	கோவில்புஷ்கரணி	அமாவாஸை
18-5-77 19-5-77	,,		கர்னூல்	துங்கபத்ராநதி	
20-5-77	,,	,,	புக்கை	ஊற்றுள்ள ஒரு நீரோடை	குரங்குகள் மிகவுண்டு
21-5-77	,,	,,	பண்யம்	ஏரி	
22-5-77	,	,,	நந்த்யால்	நதி	
27-5-77	,,	,,	கடப்பை	பெண்ணையாறு கால்வாய்	
28-5-77	,,	,,	வோண்டி மிட்டா	நீரூற்றுக் குளம்	
1-6-77 6-6-77	,,	,,	திருச்சானூர்	தாயார் புஷ்கரணி	

7-6-77	செகண்ட்ராபாத் - திருப்பதி	ஆந்திரா	திருப்பதி	ஆழ்வார் தீர்த்தம்	
14-6-77	,,	தமிழ்நாடு	பெருஞ்சேரியிலிருந்து 13 கி மீ. தூரம்	ஆழமான கால்வாய்	திருவள்ளூர் 7 கி.மீ.
14-6-77 6-10-77	,,	,,	சென்னை - மயிலை ஆசிரமம்	நடவாபி	
29-1-78	சென்னை - செங்கல்பட்டு	தமிழ்நாடு	பெருங்களத்தூர்	குளம்	
31-1-78	,,	,,	செட்டி புண்யம்	ஏரி	
10-2-78 12-2-78	செங்கல்பட்டு - ஸ்ரீரங்கம்	தமிழ்நாடு	விஷ்ணுகாஞ்சி	கோவில் அம்ருதஸரஸ்	
14-2-78	காஞ்சி - மதுராந்தகம்	,,	மதுராந்தகம்	ஏரி	பெரிய நம்பிகள் எம்பெருமானுர்க்கு மந்த்ரோபதேசம் செய்த இடம் ஏரிகாத்த ராமன்
21-2-78 22-2-78	பாண்டி - ஸ்ரீரங்கம்	,,	திருவஹீந்ரபுரம்	கருடநதி	
23-2-78	,,	,,	புதுப்பாளையம்	வங்கக்கடல்	ஸமுத்ரம் - தேவநாதன் தீர்த்தவாரி
25-2-78	,,	,,	சொர்ணவூர்	பெண்ணையாறு	
8-3-78	,,	,,	ஸ்ரீமுஷ்ணம்	நித்ய புஷ்கரணி	அமாவாஸை
9-3-78	,,	,,	குருகைக்காவலப்பன்	கோயில்தாமரை புஷ்கரணி	கங்கை கொண்ட சோழபுரம் கல் வெட்டுகள்
10- 3-78 11- 3-78	பாண்டி - ஸ்ரீரங்கம்	,,	திருக்குடந்தை	காவேரி	பாதுகாச்ரமம்

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
12- 3-78 14- 3-78	பாண்டி - ஸ்ரீரங்கம்	தமிழ்நாடு	கபிஸ்தலம் இராயம்பேட்டை தில்லைஸ்தானம்	காவேரி	பங்குனி மாஸப்பிறப்பு
15- 3-78	,,		ஸ்ரீரங்கம்	திருமஞ்சன காவேரி	விஜய யாத்ரை பூர்த்தி
16- 3-78	,,	,,	ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம்	வடதிருக்காவேரி	
29- 1-79	திருச்சி - மதுரை	,,	அளுந்தூர்	கோபாலகிருஷ்ண அய்யர் தோட்டம் கிணறு	
31- 1-79	,,	,,	துவரங்குறிச்சி	நீரோடை	
1- 2-79	,,	,,	பள்ளப்பட்டி	பாலாறு குடிநீர் வழங்கும் நதி	
2- 2-79	,,	,,	மேலூர்	குளம்	
3- 2-77	திருச்சி - மதுரை	தமிழ்நாடு	திருமோகூர்	திருப்பாற்கடல் புஷ்கரணி	
9- 2-79	மதுரை - திருநெல்வேலி	,,	திருமங்கலம் -	சுனை நீர்த்தடாகம்	
11- 2-79	,,	,,	சாத்தூர் -	ஊர்வரும் வழியில் குளம்.	
12- 2-79	,,	,,	நாலாட்டின் புதூர் -	கோயில் திருக்குளம்	

13- 2-79	மதுரை-திருநெல்வேலி	தமிழ்நாடு	கயத்தார்	K. S. கல்யாண சுந்தரமய்யர் தென்னந்தோப்பு கிணறு.	
14- 2-79	,,	,,	தாழையூத்து	ஏரி.	
15- 2-79	,,	,,	கீழ்நத்தம்	தாமிரபர்ணி	அஷ்டகா.
20- 2-79	திருநெல்வேலி - திருக்குறுங்குடி	,,	பொன்னக்குடி	பெரியகுளம்	அன்வஷ்டகா.
21- 2-79	,,	,,	திருக்குறுங்குடி	சிற்சுறு சிந்துச்சுஹ	ஸ்ரீ பாஷ்யகாரர் அனுஷ்டானப் பிறை - கலியன் பிருந்தாவனம்
23- 2-79	திருக்குறுங்குடி - திருநெல்வேலி	,,	வானமாமலை	சேற்றுத்தாமரை	
25- 2-79	,,	,,	கருங்குளம்	தாமிரபர்ணி	
26- 2-79	,,	,,	ஆழ்வார்திருநகரி		அமாவாஸை
28- 2-79	வானமாமலை - திருநெல்வேலி	,,	ஸ்ரீ வைகுண்டம்	தாமிரபர்ணி	
31- 3-79	திருநெல்வேலி-மதுரை	,,	ஸ்ரீவில்லிபுத்தூர்	திருமுக்களம்	
16- 4-79	மதுரை - ஸ்ரீரங்கம்	,,	சோழவந்தான்	வைகை	
20- 4-79	மதுரை, ஸ்ரீரங்கம்	தமிழ்நாடு	குழித்தலை	அகண்ட காவேரி	

ஸ்ரீமதாண்டவன் நீராடிய புண்ய நீர்நிலைகள்—(தொடர்ச்சி)

தேதி	செல்லும் வழி	மாநிலம்	தலம்	புண்ணிய நீர்நிலைகள்	முக்கிய அம்சங்கள்
12- 2-80	பெங்களூர் - ஸ்ரீரங்கம்	தமிழ்நாடு	குழித்தலை	அகண்ட காவேரி	
13- 2-80	,,	,,	ஸ்ரீரங்கம்	அம்மா மண்டபம் காவேரி	
16-2-80	,,	,,	,,	வடதிருக்காவேரி	சூர்யக்ரஹணம்.
21- 2-80 14- 3-80	ஸ்ரீரங்கம் - திருக்குடந்தை	,,	,,	வடதிருக்காவேரி	அமாவாஸை
16- 3-80	,,	,,	கீழ வழுத்தூர்	குடமுருட்டி	
17- 3-80	,,	,,	தில்லஸ்தானம்	காவேரி	யுகாதி பண்டிகை
18- 3-80	,,	,,	திருப்பேர்நகர்	காவேரி	
19- 3-80	,,	,,	பெரியாச்ரமம் ஸ்ரீரங்கம்	வடதிருக்காவேரி	



ஸ்ரீ பத்ரீ நாராயணன்

ஸ்ரீ :

வந்தே ப்ருந்தாவநசரம் வல்லபீஜன வல்லபம் ।
ஜயந்தீ ஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம் ॥



ஸ்ரீ வேணுகோபாலன்

ஸ்ரீ:

பதரிகாச்ரம விஜய யாத்திரை

பம்பாயிலிருந்து பத்ரிநாத் (பத்ரிகாச்ரமம்) ஸ்ரீமதாண்டவன் யாத்திரையின் போது ஸ்ரீமதாண்டவன் கண்டருளிய இயற்கையின் சில எழிற் தோற்றங்களும், வரலாற்றின் முக்கியத்வம் கொண்ட இடங்களும், மற்றும் ஸ்ரீமதாண்டவனுக்கு ஏற்பட்ட பல அனுபவங்களும் இப்பகுதியில் தொகுத்தளிக்கப்படுகின்றன.

22-4-76 பஞ்சவடி கோதாவரீ நதிக்கரை

பஞ்சவடி பம்பாயிலிருந்து சுமார் 200 கி.மீ. தூரத்தில் உள்ளது. பம்பாயிலிருந்து ஷஹாபூர் (Shahapur) இகத்புரி (Igatpuri) வழியாக நாஸிக் போய் அங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் கோதாவரீ நதிக்கரையை அடையலாம்.

சக்ரவர்த்தித் திருமகன் கரன், தூஷணன் இருவர்களோடு யுத்தம் செய்யப் புறப்படும் போது இலக்குவனைப் பார்த்து ஸீதையை பாதுகாப்பாக ஒரு குகையில் இருக்கும்படி செய்ய வேண்டும் எனப் பணித்தார். ''குஹாமாச்ரய சைலஸ்ய துர்காம் பாதபஸங்குலாம்'' என்பது அந்த உத்தரவு. இந்தக் குகையை ஸ்ரீமதாண்டவன் கண்டு தொழுது நின்றார். இக்குகை மிகக் குறுகிய நுழைவு வாயில் கொண்டது. சுமார் 30 அடி நீளமுடையது. குனிந்து தவழ்ந்து தான் செல்ல வேண்டும். ஸ்ரீமதாண்டவன் மற்றவர்கள் பின் தொடர குகைக்குள் ஊர்ந்து கொண்டு வேறு வாயில் வழியாக வெளிவந்தார். இராவணன் ஸீதையை அபஹரித்த இடம், தபோவனம் ஒன்றில் இரண்டு பெரிய ஆல மரங்கள் அடியில் இளைய பெருமாள், இலக்குவன் தவம் செய்கின்ற கோலம், எதிரில் சூர்ப்பணகை பங்கமடையும்காட்சி, பிராட்டியை இலங்கை மன்னன் கவர்ந்து சென்ற அக்னி குண்டம் என்கிற இடம்; அதற்கடுத்து பிரம குண்டம், சிவ குண்டம், விஷ்ணுகுண்டம் ஆகிய இடங்களையெல்லாம் கடாக்ஷித்தாயிற்று. பிரம குண்டத்தில் நுழைந்து, சிவ குண்டத்தில் ஏறி, விஷ்ணு குண்டம் வழி வெளி வந்தோற்கு வயிற்றுக் குழியில் உழைக்கும் படியான கர்ப்பவாஸம் இல்லை என்று கருதப்படுகிறது. பக்கத்தில் கபிலை நதி கம்பீரமாக ஓடுகிறது. கபில முனிவர் சிலை வடிவில் எழுந்தருளி யிருக்கிறார். இளைய பெருமாள் சூர்ப்பணகைக்குச் செய்யும் மூக்கறுக்கும் காட்சி சிலையாக மிக பொலிவுடன் வடிக்கப் பட்டுள்ளது. இராம மந்திர், கிருஷ்ண மந்திர், இராமானுஜ மந்திர் என்கிற இடங்களையும் கடாக்ஷித்தாயிற்று.

கோதாவரியில் இராம குண்டம், இலக்ஷ்மண குண்டம், ஸீதா குண்டம், என்கிற மூன்று நீராடும் துறைகள் உண்டு. இக் குண்டங்கள் எல்லாம் புண்ணிய ஸ்தலங்களாக யாத்ரீகர்கள் கருதுகின்றனர். இவற்றில் இராம குண்டம், ஸீதா குண்டம்என்கிற இரண்டு துறைகளில் மட்டிலும்தான் நீராடுகிறார்கள். இலக்ஷ்மண குண்டத்திலிருந்து இளைய பெருமாள் பிராட்டிக்கும், பெருமாளுக்கும் தீர்த்தம் கொண்டு கொடுத்ததால் இதை மிகப் பரிசுத்தமாகக் கருதி இன்று வரை அதன் புனிதத் தன்மை குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. இதில் யாரும் நீராடுவதில்லை. இதில் நித்ய கர்மானுஷ்டானங்கள் செய்யலாம். தடையில்லை.

வாடலி பாய் (Vadalibhoi) என்கிற ஊரில் நூதன வரவேற்பு

25-4-76. இந்த ஊர் நாஸிக்கிலிருந்து சந்தூர் போகிற வழியில் 50 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கு ஆஸ்திகர்கள் 100 பேர்களுக்கு மேலாக நெற்றியில் திலகமும் தலைகளில் தூய வெண்ணிறக் குல்லாயும் அணிந்து கொண்டு ஸ்ரீமதாண்டவனை எதிர்கொண்டு ''குரு மஹராஜ்க்கு ஜே! ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமிக்கு ஜே!'' என்று கோஷமிட்டுக்கொண்டு ஆடிப் பாடி சந்தோஷ ஆரவாரங்கள் செய்து குதூகலத்துடன் வரவேற்றார்கள். பிறகு ஸ்ரீமத் ஆண்டவன் முன்னே எழுந்தருள அவர் பின் பஜனை செய்து கொண்டு வந்தார்கள்.

சந்தூர் சரித்திர வரலாறு

27-4-76 இது நாஸிக்கிலிருந்து சுமார் 66கி.மீ தூரத்திலுள்ளது. இங்கு மராட்டிய ஸாம்ராஜ்யத்தின் கோட்டையும் அரண்மனையும் இருக்கின்றன. இவ்விடத்தில் இருந்து கொண்டுதான் சத்ரபதி சிவாஜி மொகலாய அரசுக்கு நிராத தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். இவ்விடத்தை ''அஹல்யாபாய்'' என்கிற வீராங்கனை கீர்த்தியுடன் அரசாண்டதாய் சொல்லப்படுகிறது.

1-5-76 தூலியாவின் ஸ்ரீமதாண்டவனுக்குப் பக்தர்கள் அருளிப்பாடிட்ட அபூர்வ கட்டியங்கள்.

பணிராஜ அவதார ப்ரபல பாஷண்ட
தமோ நிவாரண பானே! ஜய விஜயீ பவ!
ஸத் குரு மஹராஜ்! ஜய விஜயீ பவ!
தர்ம ஸ்வரூப மஹராஜ்! ஸத்குரோ!
ஜய விஜயீ பவ!

(இதன் கருத்து)

ஆதிசேஷ அவதாரமாய் பலத்த பாஷண்ட
மதமாகிற இருட்டைப் போக்குகின்ற
கதிரவனே!
நீ வெல்க! வெற்றிவாகை சூடுக!
உயர் குருவே! நீ வெல்க!
தர்மத்தின் உருவே! உயர்ந்த அரசே!
உயர் குருவே! நீ வெல்க!

பாகநீர்—பீரோ Bakaner Ghat and Bhero Ghat என்கிற மலைப் பிரதேசங்கள், மத்ய பிரதேசத்தில் இகத்புரி—இந்தூர் மார்க்கத்தில் பாலாசியா என்கிற ஊரிலிருந்து 8 கி.மீ தூரத்திலுள்ளது. இரண்டு வரிசைகளிலும் மரங்கள் அடர்ந்த காடுகள் வழியாக ஏறியும், இறங்கியும் வளைந்தும் செல்கின்ற நடைபாதை வெகு கவர்ச்சிகரமாய் உள்ளது. 20-4-76-ல் கஸாராவிலிருந்து இகட்புரி வரை உள்ள மலைப்பாதை போன்று ஏற்றம் அதிகம் தெரியாமல் சிரமமில்லாமல் நடந்த மலைப்பாதை இது. இங்கு வாஹனங்கள் இடையூறில்லாமல் போய் வர தரமான தார் ரோடு இருக்கிறது. இந்த பாதையின் அழகு நம் நாட்டு பொறியியல் வல்லுனர்களின் திறமையின் மேம்பாட்டைக் குறிக்கிறது. சமவெளிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் கிணற்றில் நீர்த்தம் வெகு ஆழத்திலும், மலைப்பிரதேசமான உயர்ந்த இடங்களில் கிணற்றில் நீர்த்தம் வெகு அருகில் இருப்பதும் எம்பெருமானின் ஸர்வ வல்லமைக்கோர் எடுத்துக் காட்டு.

மோடித் தோட்டம்

இந்த இடம் மத்ய பிரதேச மாநிலத்தில் இகத்புரி - இந்தூர் செல்லும் பாதையில் மான்பூரிலிருந்து 20 கி.மீ தூரத்திலுள்ள மாஹௌள (Mahow) என்கிற ஊரில் இருக்கிறது. இது ''மோடி'' என்கிற தனியார் குடும்பத்தினரால் நிறுவப்பட்ட தர்ம ஸ்தாபனம். இவர்களுக்கு இது போன்று ரிஷீகேசம், டெல்லி முதலிய ஊர்களில் இடங்கள் உள்ளன. வெகு நல்ல முறையில் சுத்தமாகப் பராமரிக்கப்படுகின்றன. இங்கு ஸ்ரீமத் ஆண்டவன் 13-5-76 சந்திர கிரஹணத்தன்றும்; 14-5-76 திருமுடி விளக்கத்தன்றும் பக்கத்திலுள்ள தெளிந்த நீரோடையில் நீராட்டம் கண்டருளினார். மாமரங்களும் மற்றுமுள்ள பழ மரங்கள் பல பூத்துக் குலுங்கும் ரமணீயமான பெரிய தோப்பு. இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் தோட்டம்.

''மாஹௌள'' என்கிற ஊர் இராணுவ முக்யத்வ முள்ளது. இங்கு தான் இராணுவப் பயிற்சி அளிக்கின்ற கலா

சாலைகளும்; இளநிலை வகுப்புகளிலிருந்தும், முதுநிலை முக்ய இராணுவ அதிகாரி களுக்கும் பயிற்சிக் கூடங்களும்; பள்ளி ஆசிரியர்களுக்குக் குடியிருக்க அழகாய பங்களாக்களும், அவர்களுக்கென்று தனியே மருத்துவ மனைகளும் உள்ளது.

இந்தூரில் ஸ்ரீமதாண்டவன்

மத்ய பிரதேசத்திலுள்ள ஒரு முக்கிய நகரம். பம்பாய்க்கு அடுத்து தொழிற் கூடங்கள், பெரிய கட்டிடங்கள் உள்ள பெரிய ஊர். ஸ்ரீமதாண்டவன் தங்கிய இடம் கீதாபவன் என்று பெயர் கொண்டது.

கீதா பவன் நுழைவு வாயிலில் ஒரு பெரிய வளைவு (Arch) இருக்கிறது. இதன் நடுவே மும்மூர்த்திகளின் அழகிய பிம்பங் கள் காண்கின்றன. அதற்கு அடுத்துள்ள மண்டபத்தில் மஹிஷாஸுரமர்தனி, சஞ்சீவி மலையுடன் பெரிய ஹனுமான், பத்ரீ நாராயணன் பிம்பங்களைக் காணலாம். அவ்வண்ணம் பிறிதொரு பக்கத்தில் ருத்ரனும், உமையும், இலக்குமி, ஸரஸ்வதியும் காட்சியளிக் கின்றனர். இவைகள் யாவும் சலவைக் கற்களைக் கொண்டு செதுக்கப்பட்ட நேர்த்தியான பிம்பங்கள்.

இதனுள்ளே இராமனுக்கு ஒரு கோவில் உண்டு. சுமார் 5 அடி உயரமுள்ளவை களான சக்ரவர்த்தித் திருமகன், பிராட்டி யோடு ஸிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்க வும், இருமருங்கிலும் அதே அளவில் இலக்குமணனும் தம்பி பரதனும் கைகூப்பி நிற்கவும், சத்ருக்னன் மண்டியிட்டும், அனுமனும் அங்ஙனேயும் காட்சியளிப்பது மிக அத்புதம். அதற்கடுத்து ருத்ரன்; ஆதிசங்கரரை முதலை கவ்வுகின்ற காட்சி; ஐந்து முகத்துடன் காயத்ரீ தேவி, அன்னபூரணி; யசோதா, கண்ணன் முதலிய பிம்பங்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன.

பிறகு நான்கு பக்க சுவர்களிலும் கீதோபதேசம், திரௌபதி வஸ்த்ராப ஹரணம், மத்வாசார்யர், நம்பெருமாள் (அரங்கநாதன்) ஸ்ரீ பாஷ்யகாரர்; சிபிச் சக்ரவர்த்தி பக்ஷிக்கு சரீரத்தை அறுத்துக் கொடுக்கும் காட்சி, இன்னும் அநேக புராண நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஸ்ரீமதாண்டவன் திருவுள்ள முகந்த ஊர். நம் தென்னாட்டுக் குடும்பங்கள் பலர் பல துறைகளில் பணியாற்றுகிறார்கள்.

ஷாஜாபூரில் ஸ்ரீமதாண்டவன்.

மத்திய பிரதேசத்தில் ஒரு மாவட்டத் தின் தலைநகரம். ஸ்ரீமதாண்டவன் இங்கு எழுந்தருளின போது பாலக்காட்டைச் சேர்ந்த ஒரு அன்பர் அதன் தலைவராய் இருந்தார். இங்கே ஸ்ரீமதாண்டவன் அருளிய சில நல்வார்த்தைகள் நெஞ்சில் கொள்ளத்தக்கவை யாதலால் தொகுத் தளிக்கப்படுகின்றன.

எம்பெருமானே வழிபட முன்னோர்கள் வகுத்த வழிமுறைகள் ஒன்பது. அவ்வழியில் ஒவ்வொரு துறையிலும் வழிபட்டு மேன்மைபெற்ற பெரியார்கள் வருமாறு.

1. ச்ரவணம் : (கேட்டல்) — சிறிய திருவடி (அனுமான்)
2. கீர்த்தனம் : (துதித்தல்) — வான்மீகி
3. ஸ்மரணம் : (நினைத்தல்) — அஹல்யை
4. அர்ச்சனம் : (பூசித்தல்) — சபரி
5. வந்தனம் : (பணிதல்) — தண்டகாரண்ய முனிவர்கள்
6. தாஸ்யம் : (அடியராயிருத்தல்) — இளையபெருமாள் (இலக்குவன்)
7. பாதஸேவனம் : (திருவடித்தொண்டு) — பரதன்
8. ஸக்யம் : (தோழமை) — குஹன்.
9. ஆத்மநிவேதனம் : (தன்னை அர்ப்பணித்தல்) — விபீடணன்.

இலக்குவனின் உண்மைப் பணியின் மேன்மையை விளக்கி ஸ்ரீமதாண்டவன் ஷாஜாபூரில் அருளிச் செய்த சுவை கொண்ட வரலாறு

காட்டிலே இராமன், இலக்குவன், ஸீதை மூவரும் பர்ணசாலையிலே இனிது காலத்தைப் போக்கினர்கள் அல்லவா? ஒரு நாள் பிராட்டி இராமனை அந்தக் கோரமான காட்டில் இலக்குவன் எப்படி பர்ணசாலைக்குக் காவலிருக்கிறான் எனக் கேட்கிறாள். ஸீதையை ஒரு நாள் இரவு இராமன் பர்ணசாலையிலிருந்து நடு ராத்ரியில் வெளியில் அழைத்து வந்து பர்ணசாலையைப் பார்க்கச் சொன்னான். அப்போது பிராட்டி பர்ணசாலை முழுவதையும் ஒரு பாம்பு சுற்றிக்கொண்டு வாசல் பக்கத்தில் அப்பாம்பே தன் பெரிய படத்தை விரித்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதையும் கண்டாள். வியந்தாள். இராமனை வினவினாள். இராமனும் அப்பாம்பு தன் ஸஹோதரன் இலக்குவன் தான் பாம்பு வடிவில் இரவில் காத்த வண்ணம் இருக்கிறான் என்பதை தெளிவு படுத்துகையில் அபூர்வமான ஒரு ரஹஸ்யத்தை வெளியிடுகிறான். அடிமைபூண்டு இருந்து பணிவிடை செய்கிற காரணத்தாலேயே ''சேஷன்'' என்கிற காரணப் பெயர் கொண்ட ஆதிசேஷன் அவதாரமாய் இலக்குவன் இருப்பதையும், ஸ்ரீ வைகுண்டத்தில் செய்யும் பணி விடையையே இங்கும் செய்த வண்ண மிருப்பதையும் விளக்கினான்.

இந்த கைங்கர்யத்தை இலக்குமணன் பதினான்கு வருடம் தொடர்ந்து செய்த படியால் தூக்கம் என்பது அவனுக்கில்லை. அவன் அங்ஙனம் தூங்காமல் இருந்து இராமனுக்குக் கைங்கர்யம் செய்ததில் ஒரு காரணமும் உண்டு. இந்த காரணத்திலை தான் வலிமை மிக்க இராவணன் பிள்ளை இந்திரஜித்தை வதம் செய்யத் தகுதி பெற்றான் இளையவன். தவ வலிமையினால் இந்திரஜித்தைத் தன்னை யாரும் போரில் வெற்றி பெறுதவ வண்ணம் ஒரு வரத்தை மிக யோசித்துப் பின் யாசித்துப் பெற்றான். பதினான்கு வருஷம் எவனொருவன் உறக்கமில்லாதிருக்கிறானே அவனால் தான் தனக்கு மரணம் உண்டாக்க முடியும் என்பதாகப் பெற்ற அந்தவரத்தால் தன்னை யாரும் வெல்ல முடியாதென இறுமாந்திருந்ததுமில்லாமல் மிகுந்த பராக்ரம சாலியாயும் இருந்தான். இந்த காரணம் கொண்டு தான் இராமனது படையை அழிக்க நிகும்பிலையில் யாகமியற்றப் போனதும் வரலாறு. இலக்குமணன் தூங்காதிருந்த காரணத்தால் அவன் இந்தரஜித்தை வென்றான். இவன் உறங்காமலிருக்கையில் இலக்குமணனின் மனைவி ஊர்மிளை கணவனைப் பிரிந்து அதனால் மயக்க முற்று 14 வருஷம் உறங்கியே யிருந்தாள்.

இம்மாதிரி கதைகள் எத்தனையோ சொல்லி ஸ்ரீமதாண்டவன் கேட்போரைச் சித்திரப்பாவைகளாய் ஆக்கியேயிருந்தபடி.

உண்மைகளை விளக்க ஸ்ரீமதாண்டவன் கையாளும் சுலபமான உதாரணங்களுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு. பொய்வண்ணம் எம்பெருமானை வழிபடு பவர்களை யாரும் வணங்குவதுமில்லை. பெருமைபட நினைப்பதுவுமில்லை என்கிற உண்மை நிலையினை எடுத்துச்சொல்லி கீழ்க்காணும் உதாரணங்களைக் கொண்டு விளக்கியபடி.

கையாளும் முறை	அதற்குரிய கருவிகள்	செய்பவை
அனுஷ்டானம்	நீர்வழி வகுப்பது	மீன்
காற்றைப்புசித்தல் (வாயு பட்சணம்)	நற்தவ நெறி	பாம்பு
வீழ் இலை புசித்தல்	,,	ஆடு
நெற்றியில் நாமம் அணிதல் (புரண்ட்ரதாரணம்)	,,	உளுந்து
திருநீறு அணிதல் (சாம்பல், விபூதி தரித்தல்)	,, ,,	சாம்பலில் புரளும் ஜந்துக்கள்

மீன், பாம்பு, ஆடு, உளுந்து, ஜந்துக்கள் பக்திக்குரிய சாதனங்களையும் கையாளுவதற்கான வசதியும் இயற்கையிலேயே பெற்றிருந்தபோதிலும் இவர்களை யாரும் வழிபடுவதில்லை.

சாரங்பூரின் சரித்திரப் பெருமை

இந்தூரை அடுத்து குவாலியர் போகும் பாதையில் இருக்கும் இடமிது. இந்த இடத்தில் ''காளிஸிந்தி'' என்கிற ரம்மிய மான நதி ஓடுகிறது. இங்கு ஸ்ரீமதாண்டவன் நீராட்டம் கண்டருளினார். இங்கு மொகலாயச் சக்ரவர்த்தியான ஷாஜஹானே அவர் பிள்ளை ஔரங்கசீப் சிறை வைத்த கோட்டை இன்றும் இருக்கிறது.

ஆவானில் ஸரஸ பட்சிகள்

இந்தூரிலிருந்து குவாலியர் செல்லும் வழியில் கட்கியாவுக்கு 10 கி.மீ தூரத்திலுள்ள ''ஆவான்'' என்கிற ஊரை அணுகும்போது சரஸபட்சிகள் ஒரு பத்தியாக வானில் பறந்து வந்தன. இவைகள் பசுமையான வயல்களில் இறங்கி மிக அழகாக நடந்ததைக் கண்டனர். இப் பறவைகள் காண்பதற் கரியனவை. அன்னம் (ஹம்ஸம்) இனத்தைச் சேர்ந்தவை. சரஸ பக்ஷிகளின் நடைகளைக் கூர்ந்து கவனித்து மகிழ்வு கொண்டது இன்னெரு உயர்ந்த அன்னம். இந்த உயர்ந்த அன்னம் நடையிலேயே நாட்களைக் கழிப்பதால் பழக்கப்பட்ட இதன் நடையை அன்னப் பட்சிகளும் கூர்ந்து கவனித்தன.

பறவைகளோ வெறும் அன்னங்களே. ஆனல் அவைகள் கண்ட அன்னமோ பரமஹம்ஸம். உயர்ந்த இனம். பறவைகளான அன்னங்களின் நடை, பரமஹம்ஸமான ஸ்ரீமதாண்டவன் நடை இந்த இரண்டு நடைகளைச் சீர் தூக்கியபோது அன்னப்பறவைகள் தோற்றுப் போய்ச் சலித்துத் தளர்ந்த நடையாய்ச்சென்றது போல அவைகள் மெதுவாக வயலில் நடந்த காட்சியைக் கண்டனர். அப்போது ஸ்ரீமதாண்டவன்

''பெடையோடன்னம் பெய்வளையார்
தன் பின் சென்று நடையோடியலி நாணி
ஒளிக்கும் நறையூரே''

என்கிற கலியன் பாசுரத்தை அனுஸந்தித்து, வஞ்சுளவல்லியின் நடையினையும், அவளது கொழுநன் நம்பியின் நடையினையும், பற்றிக் கலியனது கருத்தை கூட வந்தவர்களுக்கு நயம்பட நவின்று கொண்டே நல்லதொரு தூரத்தைக் கடந்தார்.

குவாலியர் கோட்டை

குஜராத் மாநிலத்தின் முக்கிய நகரமிது. இங்கு ஸ்ரீமதாண்டவன் 8-6-76-ல் எழுந்தருளினார். இதில் காணும் சரித்திரத்தின் சின்னங்களைக் கண்டு அக மகிழ்ந்தார். 600 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கோட்டை இங்கே இருக்கிறது. இதன் மேல் தளத்திலிருந்து குவாலியர் நகர முழுமையும் காணலாம்.

இங்கொரு மியூஸியம் உண்டு. கண்ணாடியால் செய்யப்பட்ட நாற்காலி, மேஜைகளும், மிகப்பெரிய மூன்று கண்ணாடி அடுக்கு விளக்குகளும் (Cluster Lamps) குவாலியர் மன்னர்கள் உபயோகித்த மரத் தளவாடங்களும் இங்கே காணலாம். கண்ணாடியாலான நீர்வீழ்ச்சி ஸ்டாண்டும், பெரியதொரு மரத்தில் கருடன் மேல் தனது இரு தேவி மார்களுடனும் கஜேந்திராழ்வானுக்கு அருள் செய்ய வந்த எம்பெருமானது திருக்கோலத்தை அற்புதமாய் செதுக்கியிருக்கும் சிற்ப வேலைப்பாடுகளும் கண்களுக்கோர் விருந்து.

மொரீனுவில் மயில்கள்

பம்பாய் - ஆக்ரா பாதையில் குவாலியரிலிருந்து 45 கி.மீ. தொலைவிலிருக்கும் மொரீனு (Morena)வின் மயில்கள் சரித்திரப் பெருமை பெற்றவை. செழுமையான இடம். ஸ்ரீமதாண்டவன் உள்ளமுகந்த இடங்களில் இதுவுமொன்று.

ஸ்ரீமதாண்டவனின் மனவுறுதியின் மாண்பும் மயிர்க்கூச்சலெறியும் ஸாகஸமும்

பம்பாய் - ஆக்ரா பாதையில் மத்ய பிரதேச மாநிலத்தையும், இராஜஸ்தான் மாநிலத்தையும் சம்பல் நதி பிரிக்கிறது. மத்யபிரதேச எல்லையில் பான்பூர் என்கிற ஊரும், சம்பலின் மறுகரையான இராஜஸ்தான் எல்லையில் தொல்பூர் என்கிற ஊரும் இருக்கிறது. நதியைக் கடந்து செல்ல ஒரு பாலமுண்டு. அது ஸ்ரீமதாண்

டவன் எழுந்தருளின ஸமயம் பெரு மழை காரணமாக இடிந்துபோய் விட்டது. வாஹனங்களின் போக்குவரத் தெல்லாம் நதியில் நீராவியால் இயங்கு கின்ற சிறு விசைக்கலங்களில் ஏற்றப் பட்டு அக்கறைக்குக் கொண்டு செல்லப் பட்டன. ஜனங்கள் போக நதியின் குறுக்கே ஒரு மிதக்கும் பாலம் போடப் பட்டிருந்தது. அதுவும் துரதிர்ஷடவசமாய் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்தபோது கடு மழையினால் நதியின் பெருக்கு மிகவாகி அந்த தொங்குபாலத்தை 2 கிலோ மீட்டர் கிழக்கே அடித்துச் சென்றுவிட்டது. அதனால் நதியைத் தாண்ட வழி இல்லை.

ஆசிரமவேன் - ஜீப் இரண்டில் ஆசிரம வேனில் ஆசிரம கைங்கர்ய பரர்கள் பாதுகா சார்யர்களைத் தாங்கிய பல்லக்கு, யாத்ரைக்கான தளவாடங்கள் இவற்றை ஏற்றி விட்டு ப்ரேக் அப்ஸ் செய்தது பிடிக்காமல் அப்படியே பின்னேக்கி நகர ஆரம்பித்ததைப் பார்த்த அனைவரும் என்று கூச்சலிட்டனர். ஸ்ரீமதாண்டவன் அருள் அவர்களுக்கு அபயமளித்தது. அந்த வேனுக்கு ஏற்பட இருந்த பேராபத்தையும், கைங்கர்ய பரர்களோடு ஆசிரமத்திற்கு ஏற்பட இருந்த பெரு நஷ்டத்தையும் தனது பரம சக்தியாலே தடுத்தாட்கொண்டார். வேன் நதியைக் கடந்து அக்கரை சென்று விட்டது.

ஸ்ரீமதாண்டவன் நினைத்திருந்தால் கூடவே அந்த விசைக் கலத்திலேயே ஏறி அக்கரை சேர்ந்திருக்கலாம். ஆனால் தனது உறுதியான குறிக்கோளுக்கு ஒரு முறிவு ஏற் படுவதைத் தன் உள்ளத்தில் கொணர்ந்து இதுவும் ஓர் சோதனையென்று நினைத்தார். தவிர மறுகணமே அதனை அவர் பொருட் படுத்தவில்லை. பல காத வழிகள் கஷ்டப் பட்டு நடந்து வந்து, கானகங்களில் வெம்பி, காட்டாற்று வெள்ளங்களூடே கடந்துவந்து இதுகாறும் தனது கட்டுப்பாட்டிற்குக் களங்கம் ஏற்படாதது பாதுகாசார்யர் களின் பரமானுக்ரஹத்தாலே என்கிற முழு நம்பிக்கையுள்ளவர் நமது ஆண்டவன். அந்த நம்பிக்கைதான் வேன் ஆபத்தைத் தவிர்த்தது. அவர்களது துணைகொண்டே நதியையும் கடக்க திருவுள்ளம் பற்றினர்.

ஸ்ரீ அழகிய சிங்கர் பெங்களூர் துளஸித்தோட் தில் இரண்டாண்டுகளுக்கு முன் அன்பாக ஆணையிட்டு வாஹனத்தில் ஏறி ஸஞ் சாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்ட பொழுது கூட உறுதி தளராத நம் உத்தம ஆசார்யன், வெள்ளம் கொண்டு ஓடும் அந்த நதியினை அதன் குறுக்கே செல்லும் ஒரு இருப்புப் பாதை பாலத்தில் வழியேதான் கடக்க முடியும் என்று அறிந்து கொண்டார். அது ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்த இடத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது. அதன் முகப்பை அடைய நதிக்கரையோரம் முள் நிறைந்த ஒற்றை யடிப் பாதை வழியாய்த்தான் செல்ல வேண்டியிருந்தது. புதை மணல் நிறைந் திருந்தது. அஸ்தமன வேளையாதலால் வேகமாக நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. இந்த இருப்புப் பாதை பாலத்தின் அடிவாரத்திற்கு மாலை ஏழு மணி அளவில் ஸ்ரீமதாண்டவன் வந்து சேர்ந்தார். பாலத்தின் உயரம் தரை யிலிருந்து 30 அடி உயரமும், அதன் நீளம் 2700 அடியும் உள்ளது. அதில் ஏறுவது திருப்பதியில் காளி கோபுரத்தில் ஏறுவது போலுள்ளது. செங்குத்தானப் படிக்கட்டு கள் கொண்டது. அன்று லேசாக தூறிக் கொண்டிருந்தது. தனது மனவுறுதியையும், பாதுகாசார்யர்களின் அனுக்ரஹத்தையும் உறுதுணையாகக் கொண்டு புன்முறுவலோடு அனாயாசமாக ஸ்ரீமதாண்டவன் பாலத்தின் படிக்கட்டுகளின் மீது ஏறினார். ஸ்ரீமத் ஆண்டவனது நம்பிக்கை எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதியாய் அவரது மென் பாதங்கள் பாலத்தின் படிக்கட்டு களைப் பற்றி நடந்தன. பாலத்தின் மறு கோடி வந்த பிறகு கீழே பார்க்கும்போது ''சோ'' என்று பேரிரைச்சலோடு செல்லும் பெரு வெள்ளம் மயிர் கூச்சல் உண்டாக்கும். ரயில் பாலத்தில் நடப்பதற்கென ஒரு ஓரத் தில் நடைபாதை இருந்தாலும் பலமான காற்று அடித்ததினால் உறுதியாய் பயமில் லாமல் நடக்க முடியாது. 14 கணவாய் கொண்ட இப்பாலத்தில் எல்லா கண வாயிலும் தண்ணீர் உந்திச் செல்வதை பார்த்தால் மயக்கம் தான் வரும். கரையின் இரு மருங்கிலும் 40 அடி ஆழமுள்ள

பள்ளத்தாக்குகள். ஆங்கு காணப்படும் சிறு மலைக்குன்றுகள், காடுகள் அழகாக இருந்தாலும் அச்சமூறுத்தின. 2700 அடி கடந்து அந்த முள் நிறைந்த இருப்புப் பாதைக் கரையில் ஒத்தையடிப் பாதையில் 5 கிலோ மீட்டர் நடந்த பின்பே டோல்பூர் சேரவேண்டும். அன்று பௌர்ணமியாதலால் மதியின் நிலவில், சுருதியின் காவலனை நமது ஸ்ரீமதாண்டவனது சுந்தரத்திருமேனி திவ்யமாய்க் காட்சியளிக்கவும், நிர்மலமாய், ஆனந்தமாய், பதட்டமில்லாமல் நடந்து செல்வதைப் பற்றிக் கூட இருந்தோர் சொல்லும் போது கேட்போர் யாரும் நாணத்தான் வேண்டும்.

பெற்றவள் இருந்திருந்தால் நிச்சயம் பரிதபித்திருப்பாள். இத்தகைய வீர ஸாஹஸம் வேண்டாமென வெகுண்டிருப்பாள். இராவண வதம் ஆனபின் இராமனது வீரச்செயல்களைச் செவி சாய்த்த கௌஸல்யாதேவி பெருமைப் படுவதற்கு மாறுக தன்னைப் போன்ற தாய்மார்கள் இராமனைப் போன்ற வீரனைப் பிள்ளையாய்ப் பெற ஆசைப்படக் கூடாது என்றுள் என்பதை காளிதாஸன் ''ந வீரஸூ சப்தம் அகாமயேதாம்'' என்று ரகுவம்சத்தில் வைத்துக் காட்டுகிறுன். அது போலே ''நடந்து போவேன்'' என்கிற உறுதியும் வேண்டாம். இம்மாதிரி பதைக்க வைக்கும் ஸாகஸச் செயலும் வேண்டாம் என்றே சொல்லத் தோன்றுகிறது. என்றுலும் ''பீதகவாடைப் பிரானுர் பிரம குருவாகி வந்து'' என்கிற கணக்கில் எம்பெருமானின் அவதாரமாகவே ஆசார்யனைக் கொள்ளுவதாலேயே எம்பெருமானின் கோலச் செயல்களுள் ஒன்றுக இதையும் கொண்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும். தெம்பரையாண்டவன் திருவுள்ள முகந்திருக்கும். அவராசியும் உறுதுணையாயிருந்திருக்குமன்றே!

ஸ்ரீமதாண்டவனும் கொள்ளைக் கூட்டமும்

சம்பல் நதியை அடைவதற்கென 80 கி.மீ நடைபாதை நல்ல காட்டு வழியே இருக்கிறது. அதில் கொள்ளைக் கூட்டத்தினர் இன்று முண்டு. ஆனுல் ஸ்ரீமத் ஆண்டவன் இந்தக் காட்டு வழியைக் கடக்கும்போது அவர்களால் ஒரு தொந்தரவும் அடையவில்லை. மாறுக அவர்கள் சாதுவென மதித்து ஸ்ரீமதாண்டவனை வணங்கி வழிபட்டுச் சென்றுர்கள். மேலும் ஸ்ரீமத் ஆண்டவனுக்குப் பாதுகாப்பாக மத்ய பிரதேச சர்க்கார் காவல் படையினரைக் கூடவே அனுப்பித்தார்கள்.

ஆக்ராவில் ஸ்ரீமதாண்டவன்

14-6-76 அன்று ஸ்ரீமதாண்டவன் ஆக்ராவில் பிரவேசித்தார். ''பாலாகஞ்சு இம்பீரியில் டாக்கீஸுக்கு'' எதிரிலுள்ள 'ஸனுதன தர்ம சபா மந்திர்' என்கிற இடத்தில் தங்கி, சுமார் 3½ கி.மீ தூரத்தில் ஓடுகிற யமுனையில் நீராட்டம் கண்டருளினர். இது பெரிய கட்டிடம். இதில் ஒரு லட்சுமி நாராயணன் ஸன்னிதி உள்ளது. இதில் கிணறு இல்லை. 1 கி.மீ தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அனுஷ்டானங்களாயிற்று.

சரித்திரப் பெருமை வாய்ந்த ஆக்ரா கோட்டையை கைங்கர்ய பரர்கள் கண்டு களித்தனர். இது அக்பர் காலத்தில் ஆரம்பித்து படிப்படியாய் ஔரங்கசீப் வரையுள்ள மொகலாய மன்னர்களால் கட்டப்பட்டது. சிவந்த பாராங்கற்களாலும் வெள்ளை சலவைக் கற்களாலும் அழகாகக் கட்டப்பட்ட கோட்டை. தர்பார் மண்டபம், தொழுகை இடங்கள், மண்டபங்கள் காணச்சிறந்தவை. உலகப் புகழ் வாய்ந்த தாஜ்மஹால் இங்கு தானிருக்கிறது. நமது பாரதத்தின் ராணுவத்தின் முக்கிய அலுவலகங்கள், பயிற்சிக் கூடங்கள் உள்ள இடம். 1971ம் வருடம் பாகிஸ்தான் பாரதத்தோடு போர் தொடுத்தபோது குண்டு போட்ட இடம் இங்குதான் இருக்கிறது.

ஹரித்வாரில் ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீமதாண்டவன் புனித யாத்ரையாகிய பதரிகாச்ரம யாத்ரையின் முதல் கட்டமாக 4-7-76 அன்று ஹரித்வாருக்கு விஜயம் செய்து ''J. K. ஹவுஸ்'' என்று கங்கைக் கரையிலுள்ள மாளிகையில் தன் சிஷ்ய குழாங்களுடன் வந்தருளினர். கங்கைக் கரையில் ப்ரஹ்ம குண்டம் என்கிற ஸ்நான கட்டத்திலும், அதற்கு 12 கிலோ

மீட்டர் கீழ்புறமுள்ள சுத்த கங்கை யிலும், அதற்கு வடக்கில் இரண்டு நதிகளாய்ச் சேருமிடத்திலும் கங்கையில் நீராட்டம் கண்டருளினர். மூன்று கால அனுஷ்டானுதிகளை யெல்லாம் தங்கியிருந்த ஐந்து நாட்களில் முறையே கங்கை யிலேயே அனுஷ்டித்தருளினர். ஸ்ரீமத் ஆண்டவன் திருவுள்ளம் மிக வுகந்த இடம். தனது யாத்ரையின் சோர்வும் நலிவும் இந்த அழகான சூழ்நிலையில் மறந்தே போயிற்று.

யாத்ரீகர்கள் நீராடும் புனித இடமிது. கரையை ஒட்டி ஏராளமான கட்டிடங் களும், தர்ம சாலைகளும் உள்ளன. கட்டிடங்கள் எல்லாம் அவற்றின் முகப் பில் படிக்கட்டுகள் கொண்டதாய் அங் கிருந்தே கங்கையில் நீராடப் பாங்காய் அமைந்திருக்கின்றன. ஏராளமான புனித யாத்ரீகர்கள் கூடுமிடம். நகரத்தின் கடை களில் வேலைப்பாடுள்ள அழகிய மரத் தாலான பொருள்களும், பிரம்பாலான பொருள்களும் காட்சியளிக்கின்றன. கங்கை தீர்த்தம் அடைக்கப்பட்ட பாத்திரங்கள் சிறியது முதல் பெரியது வரை வகை வகை யாய் விற்பனைக்குத் தயாராய் இருக் கின்றன. அமாவாஸை, பௌர்ணமீ காலங் களில் ஜனக்கூட்டம் அதிகமாய் இருக்கும். மேஷ, மகர ஸங்க்ரமண காலங்களிலும் அவ் வண்ணமே இருக்கும்.

வைகாசி மீ சுக்ல ப்ரதமை முதல் தசமி வரை பத்து நாட்களிலும் ''கங்கா-தாரா'' என்று கங்கையின் அவதார உத்ஸவ மாகக் கொண்டாடுகிறார்கள். பனிரெண்டு ஆண்டுகளுக்கொரு முறை மேஷஸங்க் ரமணமும் சித்ரா பௌர்ணமியும் சேர்ந்து வருகிற நாளை ''மேளா'' என்று விசேஷ மாகக் கொண்டாடுகிறார்கள். லக்ஷக்கணக் கான யாத்ரிகர்கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து நீராடுகின்றனர். 1974ல் ஒரு மேளா நடந்திருக்கிறது. பத்ரீநாத் - கேதார்நாத் முதலிய புனித யாத்ரா ஸ்தலங்களுக்கு இங்கிருந்தே தனியார் சர்க்கார் போக்குவரத்து பஸ்கள் விடப்படுகின்றன. மேலும் பல யாத்ரீக ஏஜன்ஸிகளும், டாக்ஸி, மினி பஸ்களின் மூலம் யாத்ரீகர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறார்கள்.

இங்கு சென்னை திரு ப. பெருமாள் செட்டி and Co., ஸ்தாபனத்தாரால் கட்டப் பட்டுள்ள தர்ம சாலையிலும் யாத்ரீகர்கள் தங்க வஸதி உண்டு.

ரிஷீகேசத்தில் முக்கோல் பிடித்த முனிவன் ஸ்ரீமதாண்டவன்

''வதரி வணங்குவமே'' என்கிற கலிய னின் கருத்துரையைப் பின் பற்றி காவி யுடையுடனும், கம்பீரமான நடையுடனும் தூய அந்தணர்களது குழாமுடனும் கடிதாக கால் கடுக்க, ஆனால் நடுங்காது, நடந்து வருகின்ற நமது புண்ணியன், புனிதன், அண்ணல், ஆசான் ஸ்ரீமதாண்டவன் ஹரித் வாரில் புனித நீராடி அதற்கு அடுத்தபடி யாக ரிஷீகேசத்திற்கு 7-9-76 வெள்ளி அன்று மாலை விஜயம் செய்தார்.

''பரத்மந்திர்'' என்கிற இடத்தைத் தனது ஆசிரமமாகக் கொண்டார். இந்த இடம் ''பரத் மந்திர்'' என்று அழைப் பதற்குப் புராண வரலாறு உண்டு. முதல் யுகத் (கிரேத) தில் இருடீகேசன் என்ற பெயரோடும், த்ரேதா யுகத்தில் வாமனன் என்கிற பெயரோடும், த்வா பரத்தில் கிருஷ்ணனையும், கலியுகத்தில் பரதன் என்கிற திருநாமத்தோடும் எம் பெருமான் ஸேவை ஸாதிக்கிறான் என் பதற்கு

''ஆத்யே யுகே ஹ்ருஷீகேச: த்ரேதா யாம் வாமநாமக: | த்வாபரே க்ருஷ்ண ஸம்ஜ்ஞக: கலௌ பரத நாமச''

என்கிற புராண வசனம் பிரமாணம். இந்தப் பிரமாணத்தின்படி ஸ்ரீமந்நாராய ணன் பரதன் என்கிற திருநாமத்துடன் இவ்விடம் ஸேவை ஸாதிப்பதால் இந்த இடம் ''பரத் மந்திர்'', பரதன் கோவில்'' என அழைக்கப்படுகிறது. தேசிக ஸம்ப்ரதாய வடகலைக் கோவிலிது. ''மஹந்த்'' அசோக ப்ரபன்னாச்சார் என்ப வரது குடும்ப தர்மஸ்தாபனத்தின் ஆளுகைக்குட்பட்டது. இந்தப் பெரிய வரின் சிறிய தகப்பனார் ''சாந்தி ப்ர பன்ன சர்மா'' என்பவர் உத்திரபிரதேச அரசில் மந்திரி பதவியில் இருந்தவர். இந்த அறக்கட்டளையின் கீழ் பரத் மந்திரில் ஒரு சுக்ல யஜுர் வேத பாடசாலையும்,



திருப்பிருதி



பெங்களூர் ஜெயநகர்
கற்பாரையில் ஸ்ரீ ஆஞ்ஜநேயர்
எனனதி ஆழ்வார் அசார்யர்கள்



“ கண்டமென்னும் கடிநகரே ”

சஞ்சாரத்தில் பாதுகாசாரியர்களும் ஸ்ரீமதாண்டவனும்



வடமொழிக் கல்லூரியும் அநேக பள்ளி களும் நடந்து வருகின்றன. இந்த இடம் கங்கையில் நீராடும் கட்டங்களில் முக்கிய கட்டமான ''த்ரிவேணீ காட்டுக்கு'' வெகு ஸமீபத்தில் இருக்கிறது. மனத்தைக் கவரும் இயற்கையழகு குலுங்குமிடம். பொழி லும், வனங்களின் எழிலும் வண்ணமும் வளமும் பூத்துக் குலுங்கி இயற்கையின் இன்பமிகு ஏற்றத்தை இங்கே என்றும் காணலாம். புனித கங்கையில் தீபம் ஏற்றி மிதக்க விட்டுக் கங்கையைத் தொழுகின்ற னர். ரிஷிகுண்ட்டிலிருந்து பெருகி வரும் யமுனையும், ஸரஸ்வதியும், கங்கையில் கலக்குமிடம் ஆதலால் இதற்கு ''த்ரி வேணீகாட்'' என்கிற பெயர் ஏற் பட்டது. ஆயிரத்திற்கும் மேம்பட்ட துறவிகள் தங்கித் தவமிருக்கும் புனித இடம்.

இதனைச் சுற்றி பல தர்மசாலைகள் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று ஆந்த்ரா ஆச்ரமம். சக்திக்குத் தகுந்தாற் போல் எல்லா வஸதிகளுடன் வாடகைக்கு அறைகள் இங்கு கிடைக்கின்றன. இந்த ஆந்திரா ஆசிரமத்தில் தான் ஸ்ரீ அஹோபில மடம் 43வது பட்டம் தேவனூர் விளாகம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் சாதுர்மாஸ்யம் கண்டருளினது.

பரத்மந்தரில் நம் திருக்குடந்தை ஆண் டவன் தனது 14வது சாதுர்மாஸ்ய ஸங் கல்பத்தை 11-7-76 அன்று கண்டருளினர்.

நடையின் ஏற்றமும் கொள்கையின் பிடிப்பும்

தம் தாள் பற்றிய தமரெல்லாம் தார ணியில் துன்பமகன்று நாளும் இன்பமே எய்திட வேண்டும் என்று எந்நாளும் எம் பெருமான்களையும், பாதுகாசார்யர்களையும் வேண்டி இரண்டு திங்கள் தவமிருந்து ரிஷீகேசம் பரத்மந்திரை விட்டு பதரி யாத்ரையைத் தொடர திருவுள்ளம் கொண்டாயிற்று. முன்பு சொன்ன ஆந்திர ஆசிரமத்திற்கு விஜயம் செய்த ஸ்ரீமதாண் டவனை ஆசிரம நிர்வாஹிகள் வரவேற்று பாதயாத்ரையின் இன்னல்களை எடுத் துரைத்தது மன்னியில் அதனைச் சுலபமாய் செய்திடலாம் என்பதற்கு ஒரு வழியும் வெளியிட்டனர்.

காஞ்சி காமகோடி மடத்தின் பீடத்தில் ஆசார்யாளாய் அமர்ந்திருக்கும் புதுப் பெரியவாள் ஸ்ரீஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சமீபத்தில் பத்ரிநாத் - கேதாரி நாத் யாத்திரையின் போது உபயோகித் துப் போந்த பல்லக்கு அந்த ஆசிரமத்தில் வைத்துப் பாதுகாக்கப் பட்டு வருகிறது. அது போலவே ஸ்ரீமதாண்டவனும் ஒரு பல்லக்கு நிர்மாணித்து கூலி ஆட்கள் உதவியுடன் யாத்ரை செய்யலாம் என்றும், திருமேனிக்கும் சிரமமிருக்காது என்றும், அன்போடும், ஆதரவோடும் விண்ணப் பித்தார்கள். அவர்களது அன்பைப் பாராட்டி ஆனால் அவர்களது வேண்டு கோளை ஏற்றுக்கொள்ளவில்லை. கொள் கையில் விடாப் பிடிப்பும், ஏற்றத்தில் ஒரு தனி பாணியும் கொண்டவர் ஆனதினாலே நடையிலேதான் ஸ்ரீமதாண்டவனுக்கு நாட்டம் என்பதனை உணர்த்தினர். முன்பு பெங்களூர் துளசித் தோட்டத்தில் முகாமிட் டிருந்த ஸ்ரீமதழகியசிங்கர் இது போன்ற ஒரு வழியை வகுத்துத் தம்மை வேண்டிய பொழுது அதற்கு ஸ்ரீமதாண்டவன் இசைவு கொடுக்கவில்லை என்பதையும் இங்கு மறு முறையும் குறிப்பிடுவது பொருத்தமே.

தேவப்ரயாகையில் நம் தேசுடைச் செம்மல்

இயற்கை அன்னையின் எழிலுருவத்தை எண்ணிலடங்காக் காட்சிகளிலும், வனப்பு களிலும், தோற்றங்களிலும் கண்டு அதைத் தொடர்ந்து செழுமையான பொழில்கள், பசுமையான மரங்கள், சுத்தமான நீரோட்டங்கள், சோவெனக் கொட்டும் அருவிகள் இவைகளையும் கண்டு களித்த வண்ணம் இதுவரை இதுபோன்ற தொரு ஆசார்யன் அவனியில் அவதரித்த தில்லை என வானும், மண்ணும் மகிழ்ந் தேத்த ''உலகத்துக் கூரை'' என முழங்கும் இமயத்தின் உச்சியில் கோயில் கொண் டிருக்கும் நாராயணனைத் தொழுதேத்த அவனது மாற்றுருவாம் நம் அண்ணல் தமது புனித யாத்ரையின் முதல் கட்டமாக தேவப்ரயாகைக்கு 13-9-76, அன்று எழுந்தருளினர். இந்த இடம் ரிஷீகேசத்தி லிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ளது. இங்கு மேல்கரையிலிருந்து கீழ்க்கரைக்குப் போகத் தொங்கும்பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இதனைக் கடந்து ஸ்ரீமதாண்டவன் பாகீரதியும் அளகனந்தாவும் கலக்கும் இடத்தில் அருகிலுள்ள கட்டிடத்தில் எழுந்தருளியாயிற்று.

தெய்வலோகத்தில் பெருகிய கங்கையை பகீரதன் பெரு முயற்சியோடு தவமுமியற்றி தனது முன்னோர்களது சாபம் தீர பூமிக்கு கொண்டுவந்தான் என்பதும் அதனாலே கங்கைக்குப் ''பாகீரதி'' என்ற பெயர் ஏற்பட்டது என்பதும் வரலாறு. ''தவம் புரிந்துயர்ந்த மாமுனி கொணர்ந்த கங்கை'' எனக் கலியன் தனது பெரிய திருமொழியில் நினைவு கூறுகிறான். இதுபோலவே மற்றுமொரு வரலாறும் உண்டு. பதரிகாச்ரமத்தில் தவத்திலிருக்கும் ஸ்ரீபதரி நாராயணனது திருவடிகளை குபேரன் தனது தலைநகர் அளகாபுரியில் பெருகிவரும் நதியின் தீர்த்தத்தைக் கொண்டு திருமஞ்சனம் செய்ய, அதன் பெருக்கு பூமியில் ''அளகநந்தா'' என்ற பெயருடன் ப்ரவஹிக்கிறது. ஆக பாகீரதி, அளகநந்தா என்ற இந்த இரண்டு நதிகளும் தேவப்ரயாகையில் கலக்கின்றன. அதன்பின் கங்கை யெனப் பெயர் கொண்டு பெருகி வருகிறது. கிழக்கிலிருந்து வரும் அளகநந்தா இங்கே மேற்கு முகமாய்த் திரும்பி வடக்கிலிருந்து வந்து தெற்கு முகமாய்ப் பெருகும் பாகீரதியுடன் கலக்கின்ற காட்சி மிக அற்புதம். மூன்றுவது நதியானது ஸரஸ்வதீ எனப் பெயர் கொண்டது. அது அந்தர்வாஹனியாய் (கண்ணுக்குப் புலப்படாமல்) பாகீரதி அளகநந்தாவுடன் இந்த இடத்தில் கலக்கிறது. பாகீரதி, அளகநந்தா, ஸரஸ்வதீ என்கிற மூன்று புண்ணிய நதிகள் சேருகின்ற இந்த இடத்திற்கு ''திரிவேணீ'' ஸங்கமம் என்று பெயர். இதற்கு ''ஸுதர்சன க்ஷேத்ர மென்றும்,'' கண்டீவனம்'' என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர்.

மேலும் பிரமனும் அவன் இல்லாள் ஸரஸ்வதியும் இந்தச் சங்கமத்தில் புனித நீராடி ஸ்ரீபதரிகாச்ரமத்துள்ளானை வழிபட்டதை ''பிரம்ம குண்டம்'' ''ஸரஸ்வதி குண்டம்'' என்கிற நீராடு துறைகள் தெரிவிக்கின்றன. தேவசர்மா என்னும் ஒரு முனிவர் தவமியற்றி எம்பெருமானை நேரிலேயே கண்டதால் இந்த இடத்தை அம் முனிவரின் பெயர் கொண்டு தேவப்ரயாகை என்றும் வழங்கி வருகிறது என்பாருமுண்டு. ''ப்ரயாகை'' என்கிற சொல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நதிகள் கலக்குமிடம் என்று பொருள்படும்.

மஹாபரணி-பஞ்சமீ (மஹாளய பக்ஷம்) புனித நன்னாளில் புடைசூழ எழுந்தருளிய ஸ்ரீமதாண்டவன் தாமே தம் திருவாக்கிலால் தம் சீடர்களுக்கு ஸங்கல்பம் செய்து வைத்து சங்கமத்தில் நீராட்டம் கண்டருளினார். அனுஷ்டான, பாதுகாராதனத்திற்குப் பின் சுமார் 100 அடி உயரத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனை மங்களா சாஸனம் செய்தருளினர். இந்தக் கோயில் வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களால் ஆராதிக்கப் பட்டு வருகிறது. பெரியாழ்வார் மங்களா சாஸனம் செய்தருளியது.

இராமனும், கண்ணனும் தாம் தாம் செய்த வதங்களுக்குப் பரிஹாரமாய், ப்ராயச்சித்தம் செய்து கொண்ட புனிதமிடமிது எனப் பெரியோர் பணிப்பர். இவ்ய பெருமாள்-இலக்குவன் இவ்விதம் ப்ராயச்சித்தம் செய்து கொண்ட தலம் ரிஷீகேசத்தில் இருக்கிறது. அதற்கு ''லக்ஷ்மண ஜூலா'' என்று பெயர்.

கீர்த்தி நகரில் தொங்கும் பாலம்

இந்தப் பாலம் தேவப்ரயாகையிலிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் பக்வானுக்கும் ஸ்ரீநகருக்கும் இடையிலுள்ளது. இந்தப் பாலம் வழியாக பாலத்தில் வண்டிகள் லாரிகள், பஸ்கள் போகலாம். உறுதியானது. அளகநந்தா மேல் கட்டப் பட்டிருக்கிறது. லக்ஷ்மணஜூலாவில் போல் மனிதர்கள் மாத்திரம் கடப்பதற்கில்லாமல் யாவரும் எதுவும் கடக்கலாம்படி இருக்கும் இப்பாலம் நம் நாட்டுப் பொறியியல் வல்லுனர்களின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. 14-9-76 அன்று ஸ்ரீமதாண்டவனின் புனிதத்திருவடிகள் இப்பாலத்தைக் கடந்தன.

ருத்ரப்ரயாகையின் மாஹாத்மயம்

இது தேவபிரயாகை யிலிருந்து சுமார் 71 கி.மீ. தூரத்திலுள்ளது. காலியாஸர் என்கிற இடத்தில் நமது பாரதத்தின் ஒரு

முக்கிய இராணுவத் தளவாடக் கிடங்கு இருக்கிறது. அதற்கு 19 கி.மீ. தூரத்தில் ருத்ரபிரயாகை இருக்கிறது. அளகநந்தா என்கிற ஆறும், மந்தாகினி என்கிற நதியும் சங்கமமாகும் இடமிது. இங்கு நதியின் நீரோட்டம் மிக வேகமும் அபாயகர மானதுங்கூட. பிடித்துக் கொண்டு நீராட பிடிப்பு ஏதும் இங்கே கிடையாது.

இவ்விடம் நாரத பகவான் ருத்ரனைக் குறித்துத் தவமியற்றி சங்கீதக் கலையையும் அதன் நுட்பங்களையும் ருத்ரனிடமிருந்து பெற்றதாக வரலாறு. பிறை தங்கு சடையான் நாரதனுக்கு அருள் செய்த இடமாகையால் ''ருத்ரப்பிரயாகை'' எனப் பெயர் பெற்றது. இவ்விடமிருந்து கேதாரி நாத்துக்குச் செல்ல வேண்டும். இதற்குச் செல்ல மலையைக் குடைந்து குகையின் வழியே ஒரு பாதை இருக்கிறது. இங்கு ஸ்ரீமதாண்டவன் 17-9-76 அன்று எழுந்தருளினர்.

கர்ணபிரயாகையில் ஸ்ரீமதாண்டவன்

இந்த இடம் தேவபிரயாகை யிலிருந்து சுமார் 100 கி.மீ. தூரத்திலும் ருத்ர பிரயாகையிலிருந்து சுமார் 32 கி.மீ. தூரத்திலும் இருக்கிறது. சமுத்ரமட்டத்திற்கு மேல் 2000 அடி உயரத்திலுள்ளது. அளகனந்தாவும் பிண்டர் என்கிற இரண்டு நதிகளும் ஒன்றுகக் கலக்குமிடம். இதற்கு 18-9-76 ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளினர். தளிகை ஆராதனங்களுக்குத் தீர்த்தம் பிண்டர் நதியிலிருந்து 50 அடி ஆழத்திலிருந்து கொண்டுவர வேண்டும்.

கர்ணன் பாரத யுத்தத்தில் அடிபட்டு வீழ்ந்த வுடன், யாவரையும் இதுவரையில் தஹனம் செய்து வரும் புனிதமற்ற இடத்தில் செய்யாமல், யாரையும் தஹனம் செய்யாததொரு ருத்ரபூமியில் தனக்கு ஈமச் சடங்குகள் செய்யப்படவேண்டும் என்று வேண்டியபடியே இவ்விடத்தை ஆய்ந்து எடுத்து கர்ணனது ஈமச்சடங்குகள் நடத்தப் பட்டன என்பதால் இதற்கு கர்ணபிரயாகை என்ற பெயர் வந்தது.

பாதாள கங்கையில் ஸ்ரீமதாண்டவன்

கர்ணபிரயாகையிலிருந்து ஜோஷிமட் டுக்குச் செல்லும் வழியில் சுமார் 70 கி.மீ. தூரத்தில் ''ஹீலாங்'' என்கிற சிற்றூர் உள்ளது. இது சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் 5000' உயரத்திலுள்ளது. பதரி செல்லும் சாலை இங்கிருந்து மலைகளைச் சுற்றி வளைந்து வளைந்து செல்லுகிறது. சாலை குறுகலாகவும், செங்குத்தாகவும் அபாயகரமாகவும் உள்ள இடம். மலைகள் அடிக்கடி சரிந்து விழுமிடம். உச்சியிலிருந்து கங்கை இரண்டு செங்குத்தான மலைகளின் நடுவே கீழ்நோக்கிப் பாய்கிறது. இதுவே ''பாதாளகங்கை'' எனப்படுகிறது. இந்த இடத்தை ஸ்ரீமதாண்டவன் 20-9-76 அன்று கடந்தார்.

''காரணந்தன்னுல் கடும் புனல் கயத்த
கருவரைப் பிளவெழக்குத்தி வாரணம்
கொணர்ந்த கங்கை.....''

என்று கலியன் அனுஸந்தானம் செய்த இடம் இதுவே போலும்! என்று ஆழ்வாரது உரையை கருத்தில் கொண்டு இவ்விடத்தைக் கடந்தார்.

மரத்திலுலான பாலங்களும் நீர்வீழ்ச்சிகளும், ரோடுகளின் குறுக்கே அதிகம் உள்ள பிரதேசம்.

வதரி வணங்குதுமே ! வதரியாச்சிரமத்துள்ளானே !

மேற்சொன்ன இடத்திலிருந்து 14 கி.மீ. தூரத்திலுள்ள ஜோஷிமட் என்கிற ஊரை அடைந்தாயிற்று. அன்று மாலை பிரதோஷமாகையால் அந்த ஊர் போன வுடனேயே கோவில் கொண்டிருக்கும் திருப்பிரிதி எம்பெருமானை மங்களாசாஸனம் செய்ய ஸ்ரீமதாண்டவன் புறப்பட்டாயிற்று. கலியன் மங்களாசாஸனம் செய்தருளிய திவ்விய தேசமிது.

கோயிலுக்கு முகப்பிலேயே பெரிய திருவடி (கருடன்) பித்தளையால் வார்க்கப் பட்ட தோற்றத்தில் எம்பெருமானின் ஆணையை எதிர்நோக்கியிருக்கிறார். துவாபர யுகத்தில் கிருஷ்ண பகவானுல் பிரதிஷ்டை செய்யப்பட்டதாய்ச் சொல்லப்படும் ஸ்ரீவாஸுதேவன் இங்கு ஸேவை ஸாதிக்கிறார். இதற்கு எதிரிலுள்ள ஸன்னிதியில் சாளக்கிராம சிலா ரூபத்தில் ஸ்ரீநரசிம்ம மூர்த்தியும், பக்கத்தில் பதரீ நாராயணன் இராம லக்ஷ்மண விக்ரஹங்களும் பரிவார

தேவதைகளுடன் எழுந்தருளியிருக்கிறார் கள். 15 வருஷங்களுக்கு முன் வரை பனிக்காலங்களில் பதரிகாச்ரமம் கோவிலிலுள்ள உத்ஸவ மூர்த்திகளை இங்கு எழுந்தருளப் பணணியிருந்தார்கள். இந்த எம்பெருமான் விஷயமாய் திரு மங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பட்ட ''வாலிமாவலத்து'' (பெரிய திரு மொழி 1-2) என்னும் பதிகத்திலுள்ள பாசுரங்களை நெஞ்சுருக ஸ்ரீமதாண்டவன் அனுஸந்தானம் செய்து கொண்டே மங் களாசாஸனம் செய்தாயிற்று.

இப்பதிகத்தில் 9வது பாசுரத்தில் ''ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவற்கு உறுதுய ரடையாமல் ஏதமின்றி நின்றருளும் நம் பெருந்தகையிருந்த நல் இமயத்து'' என்று இந்த திவ்யதேசத்து எம்பெருமா னது ஏற்றம் சொல்லப் படுவதை ஸ்ரீம தாண்டவன் கருத்தில் கொண்டு, கூட இருந் தாரோடு ஸஹஸ்ரநாம பாராயணம் செய்து உகந்தாயிற்று.

மறுநாள் 22-9-76 காலை ஜோஷிமட்டி டிலிருந்து புறப்பட்டு 22 கி.மீ. தூரத்தி லுள்ள ''பாண்டுகேச்வர்'' என்கிற இடத் தில் அழகானதொரு நீர்வீழ்ச்சியில் நீராட்டம் கண்டருளி ''ரிஸர்வ் என்ஜினி யிரிங்'' கோட்டைக் கட்டிடத்தில் பாது காராதனம் கண்டருளி ஐந்து பதரிகளில் ஒன்றான இந்த ஊரில் கோயில் கொண் டுள்ள ''யோகநாராயணன்'', லக்ஷ்மீ நாராயணன் இருவரையும் மங்களா சாஸனம் செய்தபடி. இவ்விடத்தில் தான் பாண்டு மஹாராஜா சாபம் பெற்று இங்கிருந்தே வீடு பெற்ற தாய் வரலாறு கூறுகிறது. இந்த இடத்திலிருந்து தான் பாண்டவர்கள் ''மஹாப்ரஸ்தானம்'' புறப்பட்டார்கள் எனக் கூறப்படுகிறது. பரீக்ஷித் அரசன் இந்தப் புனித மான இடத்தைத் தான் தன் மூதாதையர்களின் ஞாபகார்த்தமாக நிர்மாணித்ததால் இதற்கு பாண்டுகேச்வர் எனப் பெயர் வழங்கலாயிற்று.

பாண்டுகேஷ்வரிலிருந்து 22 கி.மீ. தூரத்திலுள்ள பதரிகாச்ரம திவ்ய தேசத் திற்கு இரவு 8 மணி அளவில் ஸ்ரீமத் ஆண்டவன் எழுந்தருளினார். உடனே கோயிலுக்குச் சென்று மங்களாசாஸனம் செய்தருளினபடி **''கதா, கதா''** (எப் பொழுது-எப்பொழுது) என்கிற வேட்கை யோடும் வேகத்தோடும் வெம்பரல் களிலெல்லாம் தன் மெல்லடிகள் நலிவுபடும் படி நாட்கணக்கில் நடந்து வந்த உத்தமன், நமது அருந்தவப்பயனுய் அவதரித்த அன் புடை ஆசான், அந்த கலிப்பெல்லாம்தீர ஸ்ரீ பதரீநாராயணனைக் கண்ணுரக் கண்டரு கினார். கண்கள் நீரைச் சொரிந்தன. திருமேனி சிலிர்க்க, கூப்பிய கரத்தினராய் எய்தற்கரிய பெரும் பேற்றினைப் பெற்ற திருவுள்ளத்தராய் ஸ்ரீபாஷ்யகாரரது பெருமையை நினைவூட்டும் வகையில் இமயத் தின் உச்சியிலே செங்கோல் பிடித்த இளவரசன் போல் முக்கோல் கையில் கொண்டு கம்பீரமாகக் காட்சி தந்தார். எம்பெருமானைப் பிரிய மனமில்லை. கசிந்து கசிந்து அழுதார். தொழுதார். பிறகு திருக்கோயிலுக்குப் பக்கத்தில் கீதா மந்திர் என்கிற கட்டிடத்தில் தங்கியாயிற்று. இதன் நிர்வாஹி ''ஆத்மராம் ஸ்வாமிஜீ'' ஸ்ரீமதாண்டவனை மிக்க அன்போடு வரவேற்றார்.

மறுநாள் 23-9-76 பதரியில் அக்னி குண்ட தீர்த்தத்துக்கு எழுந்தருளி ''முரளீதர சாஸ்திரி'' என்கிற ஸ்ரீவைஷ்ணவர் ஸங்கல்பம் செய்து வைக்க நீராட்டம் கண்டருளி, பாதுகா ராதனமாகி ஸ்ரீபதரீநாராயணனை திருமஞ் சனக் கோலத்தில் ஸேவிக்கக் கோவிலுக்கு எழுந்தருளியாயிற்று. வாத்ய கோஷங் களோடு ஸ்ரீமதாண்டவனை ''கணபதி நம்பூதிரி'' என்கிற ரவால் (அர்ச்சகர்) வரவேற்று பெருமானை ஸேவிக்கச் செய் தார்.

அடுத்த நாளும் கோயிலுக்கு ஸ்ரீமதாண் டவன் எழுந்தருளி மங்களா சாஸனத் தின் போது விலையுயர்ந்த சாதராவை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து அதனை திருமேனியில் சாத்தக்கண்டு கண்குளிர ஸேவித்து ''அம்ருத ஸாகராந்தர் நிமக்ன ஸர்வாவயவராய்'' (அமுதக் கடலில் மூழ்கிய எல்லா உடலுறுப்பு



பத்ரி யாத்திரை



துவாரகை :
கண்ணன் ஸன்னிதி



"வதரி வணங்குவமே"



கங்கையில்
சிஷ்யர்களுடன்
நீராட்டம்



ஜோஷிமட் இராணுவ அதிகாரிகளுடன்



பத்ரியில் தப்த குண்டத்தில் நீராட்டம்



இமயத்தினுச்சியில்



கங்கையின் கரைதனிலே

கும்பமேளா
உ. பி. த்ரிதண்டி ஸ்வாமிகளுடன்
உடகார்ந்திருப்பவர் : வலதுகோடி
ஸ்ரீமதாண்டவனிடம் ஸன்யாஸம்
பெற்றவர்





கர்ணப்ரயாகையில்

களே உடையராய்) உடையவர் போலே, தாம், பாரித்தபடியே ''வதரியாச்சிரமத்துள்ளானே'' ஸேவித்தப் பேருவகை உள்ளத்திலே தேங்கிய வண்ணம் இமயத்தின் விளிம்பில், உயர்ந்த பரம்பரையில் உன்னத ஆசானுய் சீர்மல்க மிடுக்காய் நின்ரூர் ஸ்ரீமதாண்டவன்.

பாரளந்த, பாரதமளந்த பொன்னடிகளே சரணம்.

ஸ்ரீபதரீகாச்ரமத்தைப் பற்றிய சில விபரங்கள்

நீராட்டம் கண்டு புனிதமடைய பதரிகாச்ரமம் இமயத்தில் 5 பிரயாகைகள் கொண்டுள்ளது. அவை யாவன.

1. **தேவ பிரயாகை**

   பாகீரதி நதியும் அளகநந்தாவும் சேருமிடம்.

2. **ருத்ர பிரயாகை**

   மந்தாகினியும், அளகநந்தாவும் சேருமிடம்.

3. **கர்ண பிரயாகை**

   பிண்டார் நதியும் அளகநந்தாவும் சேருமிடம்.

4. **நந்த பிரயாகை**

   நந்தாகினி நதியும், அளகநந்தாவும் சேருமிடம்.

5. **விஷ்ணு பிரயாகை**

   தௌலி நதியும் அளகநந்தாவும் சேருமிடம். மானஸீகமாக நீராட்டம் தான். ஏனெனில் நீர்த்தாமாடுவதற்கு வசதி இல்லை.

ஸ்ரீபதரி ஐந்து வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவைகளாவன.

1. ஸ்தூலபதரி
   ஹரித்வாரத்திலிருந்து தேவபிரயாகை வரை.

2. மத்ய பதரி
   நந்தபிரயாகையிலிருந்து ஜோஷிமட் வரை.

3. யோக பதரி
   ஜோஷிமட்டிலிருந்து பாண்டு கேஷ்வர் வரை.

4. ஸூக்ஷ்ம பதரி
   பாண்டுகேஷ்வரிலிருந்து பதரி வரை.

5. சுத்த பதரி
   பதரிகாச்ரமம் முழுவதும்.

பதரிகாச்ரமம் ஐந்து மலைகளுக்கிடையில் அமைந்திருக்கிறது. அம்மலைகளாவன.

1. கருடசிலா
2. நரநாராயணசிலா
3. நாராயணசிலா
4. வராஹசிலா
5. ந்ருஸிம்ஹசிலா

தேவபிரயாகையில் சக்ரவர்த்தித் திருமகன் கோயில் கொண்ட திவ்யதேசம். பெரியாழ்வார் ''கண்டமென்னும் கடிநகர்'' என்று தனது திருமொழி 4ம்பத்து, 7ம் திருமொழியில் மங்களாசாஸனம் செய்தருளிய திவ்ய தேசம்.

கலியன் ''வாலிமாவலத்து'' என்று தொடங்கி தனது பெரிய திருமொழி (1ம் பத்து 2ம் திருமொழி முதல் 4ம் திருமொழிவரை) யில் திருப்பிருதி என்றும், பதரிகாச்ரமம் எனவும், அனுஸந்தானம் செய்கிறான்.

விஷ்ணு பிரயாகையில் சாளக்ராம சிலையில் விஷ்ணு எழுந்தருளியிருக்கிறார்.

வஹ்னி குண்டம் (அக்னி குண்டம்)

இது விசேஷமானதொரு நீராடும் இடம். பதரி காச்ரமத்து கோயிலுக்கருகில் இருக்கிறது. ''தப்த குண்ட'' மென்றும் அழைப்பர். வெந்நீர் எப்பொழுதும் ஆவி பறக்கக் காணும் நீர் நிலை. நீருறையும் சீதோஷ்ணமும், மிகக் குளிருமுள்ள இந்த இடத்தில் இங்ஙனேயொரு உஷ்ணமுடைய நீர்நிலை யாத்ரீகர்களுக்கு மிகவும் போக்யமாயிருக்கிறது. இது எம்பெருமானது ஒரு பேரருள் எனக் கொள்ளலாம். இயற்கையளித்த அற்புதமான தொரு சூழ்நிலை. இதில் ஸங்கல்பம் செய்து கொண்டு புனித நீராட்டம் கொள்கின்

றனர். அதற்கென்று பண்டாக்கள் (புரோஹிதர்கள்) உண்டு. பத்துவகை தானங்கள் செய்து கொடுத்து, ஸங்கல்பம் செய்து கொண்டு புனித நீராடல் இங்கு செய்தால் எல்லா பாபங்களும் அகலுகின்றன. பத்து சதுரடி விஸ்தீர்ணமுள்ள இந்த குண்டம் மிகுந்த குளிரில் சில்லென ஓடுகின்ற அளகநந்தா நதிக்கருகில் இருக்கிறது ஒரு அதிசயம்.

ப்ரஹ்ம கபாலம்; பிண்டம் போடுமிடம்

இது அளகநந்தா நதியின் மேல்கரையில், நதியை ஒட்டினாற்போல் கோவிலிலிருந்து சுமார் 50 கெஜ தூரத்திலுள்ள ஒரு மேடான பாறை கொண்ட இடம். யாத்ரீகர்கள் இந்தப் பாறையின் மேல் தங்களுடைய இறந்த முன்னோர்களுக்குப் பிண்டம் போடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் ஸ்ரீபதரீநாராயணன் திருமஞ்சனம் கண்டருளி அவன் கண்டருளிய அமுதைப் பிண்டம் போட இருக்கின்றவர்களுக்கு இரண்டு ரூபாய் கட்டணம் பெற்றுக் கொண்டு கோயிலார் கொடுக்கிறார்கள். கட்டணத் துகையை முதல்நாளே கோயிலில் கட்டி ரசீது பெற வேண்டும்.

புராண வரலாறு

அயன், அரன், இருவருக்கும் ஒரே தலைகள் ஐந்திருந்தமையால் ஒருவரை யொருவர் அடையாளங் கண்டு கொள்ள சிரமப்பட வேண்டியிருந்தது. ராஜஸ ப்ரக்ருதியான அரன் அயனது ஐந்தாவது தலை யைக் கொய்துவிட்டான். அறுபட்ட அயன் தலை அரன் கையிலேயே ஒட்டிக் கொண்டது. என்ன செய்தாலும் கீழே விழவில்லை. அப்பொழுது ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு ஒலித்தது. அந்த பிரஹ்மாவின் மண்டை ஓடு எப்பொழுது நிறையுமோ அப்பொழுதுதான் ப்ரஹ்ம கபாலம் ருத்ரன் கையை விடும் என்று அசரீரி கூறியது. அரன் ப்ரஹ்மாவின் மண்டையோட்டை கையில் ஏந்தி பிச்சை பல திக்குகளில் எடுத்தும் அது நிறையவில்லை. இவன் பிக்ஷாடன மூர்த்தி யாய்த் திரிந்ததை கலியன் தன்னுடைய அருளிச் செயல்களில் கீழ்க்கண்டவாறு அழகாகச் சித்தரிக்கிறான்.

''பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ணும் முண்டியான்'' என்றும்,

''முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலி திரிவோன்'' என்றும்,

''ஆறும், பிறையும், அரவமும் அடம்பும் சடைமேலணிந்து உடலம் நீறும் பூசி ஏறாறும் இறையோன் சென்று குறை யிரப்ப'' என்றும்,

''ஊனமர் தலையொன்றேந்தி உலகெலாம் திரியும் ஈசன்'' என்றும்,

''வெந்தாரென்பும் சுடுநீறும் கையில் பூசி கையகத்தோர் சந்தார் தலைகொண்டு உல கேழும் திரியும் பெரியோன்'' என்றும்,

இப்படி பல பாசுரங்களால் கலியன் இந்த பிட்சாடனமூர்த்தியைக் குறிப்பிடு கிறான். எத்தனை வருஷங்கள் எங்கெங்கும் சுற்றியும் கபாலம் நிறையவில்லை. பதரிகாச்சிரமம் வந்து பதரியாச்சிரமத் துள்ளானை வணங்கி தன் குறை தீர வேண்டுமென்று பிரார்த்தித்தான். ஸ்ரீபதரிநாராயணனும் கருணையோடு தன் மார்பிலிருந்து அமுது தாரையைப் பெய் வித்தான். சிவன் கையில் இருந்த கபாலம் நிறைந்தது. அக்கணமே அவன் கையை விட்டது. ருத்ரனும் ''பிரஹ்மஹத்தி'' பாபம் நீங்கி தூய்மை பெற்றான். பதரி நாராயணனின் பெருமை உயர்ந்தது. இவனது பெருமையை பலவாறு கலி யன் துதிப்பதைக் கீழ்க்கண்ட பாசுரங் களிலே காணலாம். அவைகள் வருமாறு:

''இறையான் கையில் நிறையாத முண்டம் நிறைத்த எந்தை'';

''அரன் கொண்டு திரியும் முண்டமது நிறைத்து அவன்கண் சாபமது நீக் கும் முதல்வனவன்;''

''ஒருவனைச் சாபம் நீக்கி உம்பராள் என்று விட்டான்''

''மாருன்றில்லா வாசநீர் வரை மார் வகலத் தளித்துகந்தான்''

''பெரியோன் தான் சென்று என் எந்தாய் சாபம் தீரென்ன, இலங்கு அமுதநீர் திருமார்பில் தந்தான்'' என்பன சிலவாம்.

பதரிகாச்சிரமத்துள்ளுறையும் எம்பெரு மானது கருணையினாலே ருத்ரன் சாபம்

நீங்கி தூய்மை பெற்றது போலே இந்த கபாலத்தில் தங்கள் தங்கள் பித்ருக்களை உத்தேசித்து யார் பிண்டம் போடுகிறார்களோ அவர்களும், அவர்களால் நிர்ணயிக்கப் பட்டுக் குறிப்பிட்டுப் போடுகிறவர்களுக்கும் எல்லா பாபங்களும், தோஷங்களும் நீங்கி ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து நாராயண ஸாயுஜ்யத்தை அடைந்து நித்ய ஆனந்தத்தில் திளைக்கிறார்கள் என நம்பப்படுகிறது. ஆகவே இங்கு பிண்டம் போடுதல் சாலச் சிறந்தது.

பிண்டதானம் ஆனதும் அளகநந்தா நதிக்கரையில் பித்ருக்களை உத்தேசித்துத் ''தர்ப்பணம்'' செய்வதும் பிறிதுமொரு அங்கமாகும், கயாச்ராத்தம் செய்வதே போல் பிள்ளைகள் செய்ய வேண்டிய தலையாய கடமைகள் இதுவும் ஒன்று.

ஸ்ரீமதாண்டவன் இக்கார்யங்கள் இரண்டையும் பரமகருணையோடு முன்னின்று தன் சிஷ்யர்களில் தகுதியுடையோரைச் செய்விக்கப் பண்ணினார்.

ஸ்ரீ திரிதண்டி ஸ்வாமி என்கிற யதிகளுடன் ஸ்ரீமதாண்டவன் ஸமாகமம்

இந்த ஸ்வாமி ஒரு ஸன்யாசி. பதரிகாச்ரமத்தில் கோயிலுக்குப் போகிற ஸன்னதி வீதியில் ''வேதாந்தகுடீரம்'' என்கிற ஆசிரமத்தில் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வேதாந்த ராமானுஜ யதிகள் என்றும், திரிதண்டி ஸ்வாமி என்றும் அழைக்கப்படும் துறவி. ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீபதரிகாச்ரமத்தில் எழுந்தருளியிருந்த ஐந்து நாட்களிலும் ஸ்ரீமதாண்டவரோடு ஸஹயோக, ஸம்பாஷண, ஸாயுஜ்யத்தை ஒருங்கே அனுபவித்த மஹான். ஸ்ரீமதாண்டவனுக்கு வேண்டிய உபகாரங்களையும் ஸௌகர்யங்களையெல்லாம் செய்து கொடுத்த உத்தமர். தன்னுடைய ஆசிரமத்திற்கு ஸ்ரீமதாண்டவனே எழுந்தருளப் பண்ணி ஸ்ரீமதாண்டவனுக்குச் சால்வையும், ஸம்பாவனையும் செய்து க்ருதார்த்தராளர்.

இந்த ஸ்வாமி மைசூர் ஸ்ரீபரகால ஸ்வாமியிடம் பஞ்ச ஸம்ஸ்காரமும், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்க ராமானுஜ மஹா தேசிகன் என்கிற கோழியாலம் ஸ்வாமியிடம் க்ரந்த காலக்ஷேபமும், ஆத்மஸமர்ப்பணமும் செய்விக்கப் பட்டவராய், பால்யத்திலேயே ஸ்ரீகோழியாலம் ஸ்வாமியிடம் ஸந்யாஸாச்ரமத்தைப் பெற்று, பதரிகாச்சிரமத்திலேயே பல வருஷங்களாய் வசிக்கப் பேறு பெற்ற ஸாத்வீகத் துறவி.

''மாணா'' மாதாதேவி

பதரிகாச்சிரமத்திலிருந்து 5 கி.மீ. தூரமுள்ள 'மாணா' என்கிற திருத்தலத்தை ஸ்ரீமதாண்டவன் சென்று ஸேவித்தார். இங்கு கோயில் கொண்டிருக்கும் மாதா தேவி என்கிற பிராட்டி நரநாராயணர்களது தாயாராகக் கருதப்படுகிறது.

வஸுதாரையும் வியாஸர் குகையும்

மேற் சொன்ன மாதாதேவி கோவிலுக்கு கொஞ்ச தூரத்தில் உயரமான மலையுச்சியிலிருந்து ''வஸுதாரை'' என்கிற நீர் வீழ்ச்சி தென்படுகிறது. இது மலையிலிருந்து கீழே விழும் பொழுது எட்டு தாரைகளாக விழுகிறது.

இங்கிருந்து கொஞ்ச தூரம் சென்று கங்கையின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் தொங்கும் பாலம், (Wire Bridge) மூலம் கங்கையின் மறுகரையில் போனால் வியாஸர் குகை என்கிற இடமிருக்கிறது. இதையும் ஸ்ரீமதாண்டவன் சென்று கடாக்ஷித்தார். இந்தப் பாலம் மிகவும் குறுகியது. நடக்கும்போது ஆடிக் கொண்டேயிருக்கிறது. நடக்க பயமாயிருக்கும். வியாஸர் குகைக்குப் போகுமுன் ''கணேசர் குகை'' என்கிற இடத்தில் ஒரு தும்பிக்கை யாழ்வாரும். (பிள்ளையார்) ஆஞ்ஜனேயரும் எழுந்தருளியிருக்கிறார்கள். இந்த விநாயகர் தான் வியாஸர் சொன்ன மஹாபாரதக் கதையை எழுதியதாகச் சொல்லப் படுகிறது. இங்கிருந்து ½ கி.மீ. தூரத்தில் வியாஸர் குகையை அடைந்து வெள்ளை சலவைக் கல்லிலே செதுக்கப் பட்ட வ்யாஸபகவானின் திருவுருவினை ஸ்ரீமதாண்டவன் ஸேவித்தார்.

இந்த இடம் நமது பாரதத்தின் முக்கிய இராணுவ முகாம். திபேத்-சீனா எல்லை

யிலுள்ளது. சாதாரணமாய் யாரும் அணுகிப் போகமுடியாது. ஸ்ரீமதாண்டவன் 'மானு' எழுந்தருளினபோது உயர் இராணுவ அதிகாரிகள் எதிர் கொண்டழைத்து ஏராளமான பழங்களையும் மாலைகளையும் காணிக்கைகளாக்கிப் பெரிதும் வழிபட்டனர். கூட இருந்தோருக்குப் பாலும் வழங்கினர்.

தேவப் பிரயாகையில் கங்கையில் நீராட்டம் கண்டருளும்போது அனுஸந்தானம் செய்யப்படும் சுலோகங்கள்

1. துஷார மஞ்சீகர புஞ்ஜ மஞ்சுளாம்
விஹார கல்யாண தரங்க மங்களாம்|
விசுத்த விக்ஜ்ஞானகராம் பராம் சிவாம்
நமாமி கங்காம் ஜகதீச்வரீம் தாம்||

(நீர்த்திவலைகளின் கொத்துக்களின் சிதறல்களில் அழகைச் சொரிகின்றவளும் விளையாடுகின்றனைபோல் துள்ளித் துள்ளி ஓடும் மங்களகரமான அலைகளையுடையவளும், தூய அறிவினை அளிக்கின்றவளும், ஒப்பற்றவளும், உயர்வினை அளிப்பவளும், லோகநாயகியுமான கங்கையை வணங்குகிறேன்)

2. பாபஹாரி துரிதாரி தரங்கதாரி
சைலப்ரஸாரி கிரிராஜ குஹாவிதாரி |
ஜங்கார காரி ஹரிபாத ராஜோபஹாரி
காங்கம் புநாது ஸததம் ஸுகநாரிவாரி ||

(பாபங்களை நீக்குகிறவளும், வேகமாகப் பாய்கிறவளும், அலைகளைத் தாங்கி வந்து கருவரைகளிலே சுற்றி குகைகளைப் பிளக்கின்ற தாலே பேரோசையுடையவளும், எம்பெருமானின் திருவடித்துகளுகளைக் கொண்டு வருபவளும், மங்களத்தின் அதிதேவதையாயுமுள்ள பெண்ணமுதமான கங்கையினது நீர் என்றும் (நீராடுமவரை) புனிதமாக்கட்டும்.)

ஆழ்வார்கள் புகழ்ந்து பாடிய கங்கையின் பெருமை

''கங்கை கங்கை என்ற வாசகத்தாலே
கடுவினை களைந்திடுகிற்கும்''

''நலம்திகழ் சடையான் முடிக்கொன்றை
மலரும் நாரணன் பாதத்துழாயும்
கலந்திழி புனலால் புகர்படு கங்கை''

''சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில்
சங்கரன் சடையினில் தங்கி கதிர்முக
மணிகொண்டிழிபுனல் கங்கை''

''இமவந்தம் தொடங்கி இருங்கடலளவும்
இருசுரை உலகிரைத்தாட கமையுடைப்
பெருமைக் கங்கை''

''ஈண்டிய பாவம் இறைப் பொழுதளவினி
லெல்லாம் கழுவிடும் பெருமைக் கங்கை''

''கலப்பைகள் கொழிக்கும் கங்கை''

''கற்பக மலரும் கலந்திழி கங்கை''

''இரண்டு கரை புரை வேள்விப்புகை கமழ் கங்கை''

''தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்
கரைமரம் சாடிக் கடலினைக் கலங்கக்
கடுத்திழி கங்கை''

கங்கையின் கரைகளில் ஸ்ரீமதாண்டவன்



கும்பமேளா - நீராட்டம்



கும்பமேளா - VIP காட்டேஜ் பாதுகாராதனம்



ஸ்ரீ வேணுகோபாலனுககு
கங்கையில் திருமஞ்சனம்



ஸங்யாஸம் பெற்றவருடன்–ஸ்ரீமதாண்டவனுக்கும்
திரிதண்டி ஸ்வாமிக்குமிடையில் இருப்பவர்
(அடையாளமிட்டவர்)



திருச்சானூர்
ஸ்ரீஸூக்த யாகத்தில்
ஹோம பாராயணங்கள்



கீழத்தம்
ஸ்ரீ வேணுகோபாலன்
மங்களாசாஸனம்

''கான்தடம் பொழில்சூழ் கங்கை''

''பொங்கொலி கங்கை''.....

என்று பெரியாழ்வாரும்;

''நான்முகன் குண்டிகைநீர்பெய்து, மறைகொண்ட
மந்திரத்தால் வாழ்த்தி, கறைகொண்ட கண்டத்தான்
சென்னிமேலேறக் கழுவினன்.''.....

என்று திருமழிசைப்பிரானும்;

''அங்கை நீரேற்றூற்று அலர்மேலோன் கால்கழுவ''
கங்கை நீர் கான்ற கழல்.....

''தெய்வ நறுமலர் கொணர்ந்து வானவர்
வணங்கும் கங்கை''

''பெருகு வானிடை முதுநீர்க் கங்கை''

''வலந்தரு மணிநீர்க் கங்கை''

''அணிமலர்க் குழலார் அரம்பையர் துகிலும்
ஆரமும் வாரிவந்து அணிநீர்
மணி கொழித்திழிந்த கங்கை''

''காரணந்தன்னில் கடும்புனல்கயத்த கருவரை
பிளவெழக் குத்தி வாரணம் கொணர்ந்த கங்கை''

''மந்திரத்திழிந்த கங்கை''

''தவம் புரிந்துயர்ந்த மாமுனிகொணர்ந்த கங்கை''

''அண்டமூடறத்து அன்று அந்தரத்திழிந்து
அங்கு அவனியாள் அலமர பெருகு
மண்டு மாமணிநீர்க் கங்கை''

''வருந்திரை மணிநீர்க் கங்கை''

''அங்கையால் அடிமூன்று நீரேற்று அயன்
அலபகொடு தொழுதேத்த கங்கை''

என்று திருமங்கை மன்னனும்

பரக்கப் பேசிப்பாடிப் புகழ்ந்த கங்கை, புனிதன் நீராட்டங்களாலே மிகப்புனித மாயிற்று.

திருப்பிருதி, பதரிகாச்ரமம் என்கிற திவ்யதேசங்களைத் திருமங்கை மன்னன் அனுஸந்தித்தவாறு

திருப்பிருதி

''பீலிமாமயில் நடஞ்செயும் தடஞ்சுனைப்பிருதி''

''வேழங்கள் துயர்கூர பிலங்கொள்
வாளெயிற்றரியவை திரிதரு பிருதி''

''கடிகொள் வேங்கைகள் நறுமலரமளியின்
மணியறைமிசை வேழம் பிடியினெடு
வண்டிசை சொலத் துயில் கொளும் பிருதி''

''பிறங்கு மாமணியருவியொடிழிதரு பிருதி''

''வரைசெய்மாக்களிறு இளவெதிர் வளர்முளை
அஃமிகு தேன்தோய்த்து பிரசவாரி தன்னிளம்
பிடிக்கு அருள்செயும் பிருதி''

''பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டிசை
சொலும் பிருதி''

''இமையோர்கள் பேர்களாயிரம் பரவி நின்றடி
தொழும் பிருதி''

''பேதை வண்டுகள் எரியென வெருவரு பிருதி''

''களிறென்று பெரிய மாசுணம் வரையெனப்
பெயர்தரு பிருதி''

பதரிகாச்சிரமம்

''மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி''

''அன்பாய் ஆயிரநாமம் சொல்லி வெறிகொள்
வண்டு பண்கள் பாடும் வதரி''

''அலங்கலாய தன்துழாய்கொண்டு ஆயிரநாமம்
சொல்லி வலங்கொள் தொண்டர் பாடியாடும் வதரி''

''வண்டு தண்தேனுண்டு வாழும் வதரி''

பிரயாகை (திரிவேணிசங்கமத்தில்) கும்பமேளாவும் ஸ்ரீமதாண்டவன் ஸான்னித்யமும்

தை மாதத்தில் மகர ராசியில் சூரியனும், சந்திரனும், மேஷ ராசியில் குரு பகவானும் சேரும் தினத்தைப் புனித நாளாகக் கொண்டு அதனை ''கும்பமேளா'' எனப்பெயரிட்டு அந்நாளில் பொங்கி வரும் புனித ஆறுகளில் நீராட்டம் கொள்ளுதல் புண்ணியம் தரும் எனப் பெரியோர் பணித்திருக்கின்றனர். பாரதத்தின் பல புண்ணியத் தலங்களில் நடந்து வரும் ''கும்பமேளாக்கள்'' எல்லாவற்றிலும் சிறந்தது அலஹாபாத்தில் கங்கா - யமுனை - ஸரஸ்வதீ நதிகள் ஒன்றுகக் கலக்கும் (ஸங்கமமாகும்) இடந்தான். இது 12 ஆண்டுகளுக்கொரு முறை வருகிறது. தென் பாரதத்தில் திருக்குடந்தையில் (கும்பகோணத்தில்) மஹா மஹத்திற்கு வரும் யாத்ரீகர்கள் போல் சுமார் 100 லக்ஷம் யாத்ரீகர்கள் அன்று நீராடுகிறார்கள். அதிலும் 1977-ம் ஆண்டு மிக மிக உயர்ந்தது. முக்கிய காரணம் ஸ்ரீமத் ஆண்டவன் அங்கு வருகை தந்தது. இது ''மஹா கும்பமேளா''என்று விசேஷமாகக் கொண்டாடப்படுவது. பன்னிரெண்டு கும்பமேளாக்களுக்கு ஒரு முறை அதாவது 144 ஆண்டுகளுக்கொரு முறை இது மாதிரி ஒரு புனித நாள் வருகிறது. இதற்குப் பாரதத்தின் பல பாகங்களிலிருந்தும் பல மதத்தின் மடாதிபதிகள், துறவிகள் கூடி நீராட்டம் கொள்கின்றனர்.

இந்த விழா 5-1-77 பௌர்ணமியில் ஆரம்பித்து 16-2-77 வரை நடந்தது. முக்கியமான தினங்கள் தை பௌர்ணமி 5-1-77, மகர சங்கராந்தி தினம், 14-1-77; தை அமாவாஸை, 19-1-77; வஸந்த பஞ்சமி, 24-1-77; இவை விசேஷ தினங்கள். இதற்கு ஸ்ரீமதாண்டவன் 4-2-77 வந்து சேர்ந்த நிகழ்ச்சி மிகவும் மெய்சிலிர்க்க வைக்கும்.

அன்று வெள்ளிக்கிழமை. டெல்லியை விட்டு புறப்பட்டது 15-1-77. அலஹாபாத் வந்தடைந்தது 4-2-77. இவற்றிற்கு இடையிலுள்ள தூரம் 648 கிலோ மீட்டர்கள். 21 நாட்களில் கடக்க வேணுமென்றால் உள்ள உறுதியும் உடலுறுதியுமில்லாமல் முடியாது. உத்திரபிரதேச ஆளுநர் ஸ்ரீ சென்ன ரெட்டியின் நேர்முக ஒத்துழைப்பும், டெல்லி ஸ்ரீ T. D. ரங்கராமானுஜம் அவர்களின் ஆக்கபூர்வமான யாத்திரை

அமைப்புகளுமே ஸ்ரீமதாண்டவனுக்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்தன. ஸாகஸமான நடையின் பிரதிபலிப்பு திருமுகத்திலும் திருமேனியிலும் காணமுடிந்தது. சோர்வுகொண்ட நடையாலுலும் உள்ளம் சோரவில்லை.

ஆளுநரின் அலுவலர்கள் ஸ்ரீமத் ஆண்டவனை ஆளுநரின் குருவாக நினைத்து வேண்டிய உபசாரம் செய்கிறதாகக் கொண்டு பெரிய அரசு விருந்தினர்கள் தங்கும் ஒரு மாளிகையில் நவீன வஸதிகள் செய்து வைத்து ஸ்ரீமதாண்டவன் சிறப்புறத் தங்க எதிர்நோக்கி இருந்தனர். ஸ்ரீமதாண்டவன் கனிப்போடு அந்த ஆடம்பரமான மாளிகையைப் பார்த்தபோது உள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டார். அம் மாளிகையை அத்தகைய வஸதிகளோடு அமைத்து வைத்தவர்களது அன்பின் ஆழத்திலே, உள்ள நெகிழ்ச்சி கொண்டார். கணநேரத்தில் குரு மஹராஜ் தங்குவதற்கு இது பாங்கில்லை என்பதைக் குறிப்பால் உணர்ந்துகொண்டு அந்த அரசு சிப்பந்திகள் சங்கமத்திற்கு அருகில் ஒரு இடத்தை இராட்சத இயந்திரங்களைக் கொண்டு செப்பனிட்டுப் பர்ணசாலை போலொரு ஆசிரமத்தை சிருஷ்டி செய்து தந்தனர்.

ஸ்ரீமதாண்டவன் அங்கு எழுந்தருளும் போது மழை காற்றுடன் குளிரும் கடுமையாயிருந்தது. இவைகளைப் பொருட்படுத்தாமல் மஹா கும்பமேளாவின் கடைசி தினத்தில் பௌர்ணமியில் கைங்கர்ய பரர்கள், பக்தர்கள், அன்பர்கள் புடைசூழ சாஸ்திர முறைப்படி ஸங்கல்பம் செய்து கொண்டு புனித நீராட்டம் கண்டருளினார்.

ஸங்கமத்தில் பெருகும் மூன்று நதிகளும் அன்றைய தினம் அசக்தராய் வெகுதூரம் அன்புடன் வருகை தந்திருக்கும் இப்புண்ணியனின் திருமேனி தங்கள் மேல் ஸ்பர்சிக்க அவர் கஷ்டப்படாதவாறு, தலையான பிரவாஹத்திலிருந்து அன்றைய மழை காரணமாக பிரிந்து ஒரு பிரவாஹம் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்திற்கு அருகில் பெருகி வந்து அவர் நீராட்டம் கண்டருள உதவியது. நீராட்டம் கண்டருளி எழுந்திருந்த பொழுது ஸ்ரீமத் ஆண்டவன் அப்படியே சோர்ந்து விழுந்தபடி. அருகிருந்தோர்கள் கூக்குரலிட்டனர். ஸ்ரீமதாண்டவன் பரம்பரையின் ஆதவன் அஸ்தமித்து விடுவானே என்று வாயடைத்துப் போயினர். திருமேனி துவண்டு சில்லென்றிருந்தது. விரைத்த விரல்களில் சலனமில்லை. நினைவுமில்லை. இதனைக் கண்ட அருகிருந்த ஒரு இராணுவ அதிகாரி உடனே குப்பைக் கூளத்தை சேகரித்து அதில் பெட்ரோலை ஊற்றி நெருப்பு உண்டாக்கிக் கொடுத்தார். அதன் வெப்பத்தில் ஒத்தடம் கொடுத்ததின் பின் ஸ்ரீமதாண்டவன் நினைவு கூர்ந்தார். கூடியிருந்தோர் நெஞ்சம் குளிர்ந்தது. உடனே பாதுகாராதனத்திற்கு எழுந்தருளி தனக்கு உறுதுணையாய் நின்று வரும் பாதுகாசார்யர்களுக்கு நன்றி செலுத்தியாயிற்று.

ஸ்ரீமதாண்டவன் கைங்கர்ய பரர்களுக்குப் பொருளும், புத்தாடைகளும் அளித்தார். மேலும் ஓராயிரம் ரூபாய்க்கு புத்தாடைகள் வாங்கி சுமார் 70,80 பிரயாகை யாத்ரீகர்களுக்கு அனுக்ரஹித்தார்.

இப்புனிதத் தலத்தின் பெருமை என்ன வென்றால் இச்சங்கமத்தில் பெருகும் நதிகளின் தீர்த்தங்களில் பித்ருக்கள் வாஸம் செய்து வருவதாகச் சொல்லப் படுகிறது. இங்கு வரும் யாத்ரீகர்கள் க்ஷவரம் செய்து நீராடி, சங்கல்பம் செய்து கொண்டு, ஹிரண்ய ரூபமான சிரார்த்தம் செய்து அதற்கு அங்கமாக தில(எள்) தர்ப்பணம் செய்கிறார்கள். தர்ப்பணம் செய்யும் போது பித்ருக்களுக்கு ஆவாஹனம் கிடையாது. ஏனெனில் பித்ருக்கள் ஜலத்திலேயே எழுந்தருளியிருப்பதாக ஐதிகம். ருக்குகளை மட்டும் சொல்லி தர்ப்பணம் செய்தால் போதும்.

ஸாதுக்களோடும் ஸந்யாசிகளோடும் ஸங்கமத்தில் ஸமாகமம்

பிரயாகையிலுள்ள கங்கைக் கரையில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்த V.I.P. காட்டேஜ் காம்ப்க்கு அருகில் திரிதண்டி மடம் ஸ்ரீ தேசிக ஸேவா சங்கத்தாரால் கும்பமேளாவிற்காக அமைக்கப் பட்ட பந்தலில் பிருந்தாவனம், அயோத்தி முதலிய இடங்களிலிருந்து வந்து கூடியிருந்த ஸ்ரீ தேசிக ஸம்பரதாய முனிச்ரேஷ்டர்களும், அநேகவட நாட்டு வைணவத் துறவிகளும் கொண்டதொரு வித்வத்

ஸதஸ்ஸில் அழகான தெள்ளிய வடமொழியில் ஸ்ரீ வைஷ்ணவ மதம், பஞ்ச ஸம்ஸ்காரம், பரஸமர்ப்பணம் இவற்றைப் பற்றி ஸ்ரீமதாண்டவன் உபன்யஸித்தார். ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலபேர்களுக்கு 'பரன்யாஸம்'' செய்துவைத்தார்.

அலஹாபாத் ''தாராகஞ்ச்'' என்கிற இடத்திலிருக்கும் திரிதண்டி மடத்திற்கு எழுந்தருளும்போது அங்கிருந்த 5 தேசிக ஸம்ப்ரதாய யதிகள் பூர்ணகும்ப மரியாதையுடன் ஸ்ரீமதாண்டவனை வரவேற்றார்கள். மாலையில் லக்ஷ்மிநாராயண மந்திர் சென்று, வழியிலுள்ள வெங்கடேச மந்திருக்கும் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினர்.

நைஷ்டிக ப்ரஹ்மசாரிக்கு ஸந்யாஸம் அளித்தது

அலஹாபாத் தாராகஞ் என்கிற இடத்தில் இராமானுஜவாடாவில் உத்திரதேச ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவர் வித்வானும், நைஷ்டிக ப்ரஹ்மசாரியாயும் ''ஸங்கர்ஷணச்சாரியர்'' என்கிற திருநாமத்தோடு எழுந்தருளியிருந்தார். வடநாட்டு யாத்ரையில் ஸ்ரீமதாண்டவன் டெல்லியில் எழுந்தருளியிருந்தபோது, நமது ராமகிருஷ்ணபுரம் ஆசிரமத்தில் ஸ்ரீமத் ஆண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்தார். அப்போது தனக்கு துரீயாச்ரமம் (ஸந்யாஸம்) வழங்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஆண்டவனைப் ப்ரார்த்தித்த பொழுது அவருடைய ஸம்ப்ரதாய பரம்பரையையும் அவரைப் பற்றியும் அறிந்து கொண்டார்.

ஸ்ரீ ஸங்கர்ஷணச்சாரியர் உத்தர தேசம் சித்ர கூட வாஸி, நைஷ்டிக ப்ரஹ்மசாரி. ஸ்ரீராமதேசிகாசாரியர் ஸ்வாமியிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டவர். மைசூர் பரகால மடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீமதபிநவ ஸ்ரீரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபங்கள் செய்து அந்த ஸ்வாமியிடமே பரஸமர்ப்பணமும் செய்து கொண்டவர். அலஹாபாத் தாராகஞ்சு இராமானுஜவாடாவில் ''மஹந்த்''தாக ஸ்ரீபரகால ஸ்வாமியால் நியமிக்கப் பட்டவர்.

இவரது உள்ளக் கிடக்கையை அறிந்து கொண்ட ஸ்ரீமதாண்டவன் தான் பதரீயாத்ரை வரப்போவதையும் அந்த ஸமயம் அவரது ஆவலைப் பூர்த்தி செய்வதாய் அருளியிருந்தார். ஸ்ரீமதாண்டவன் பிரயாகை எழுந்தருளினவுடன் ஸங்கர்ஷணச்சாரியர் தன்னுடைய ஆவலை மீண்டும் புதுப்பித்துத் தண்டனிட்டார்.

அவருக்கு 5-2-77 அன்று ஸந்யாஸம் வழங்க முன்னேடியாக யதாக்ரமம் ''ஜீவச்ரார்த்தம்'' முதலியன நடத்தி வைத்து, 6-2-77 சங்கமத்தில் நீராடச் செய்து, மோக்ஷாசரமத்தை யளித்து, காஷாயம், திரிதண்டம் முதலியவைகளை அனுக்ரஹித்து ''ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகன் என்கிற தாஸ்ய நாமமிட்டு அவரை அனுக்ரஹித்தார் ஸ்ரீமதாண்டவன்.

செம்பகாரண்ய க்ஷேத்ரம் என்கிற இராஜமன்னர்குடி அண்ணஸ்வாமி அய்யங்கார் வேதபாடசாலை கனபாடி வேத வித்வான் வீரவல்லி ஸ்ரீதேசிகாச்சாரியர் ஸ்வாமியும், ஆசிரம ஸ்ரீ கார்யம் மைசூர் வித்வான் கோபாலாச்சாரியரும் கூட இருந்து ஸாஸ்திர முறைப்படி ஸ்ரீமதாண்டவன் நியமனத்தோடு ஸந்யாஸ ஆசிரமத்திற்கு வேண்டிய வைதிக கார்யங்களை நடத்தித் தந்தனர்.

யோகீச்வரர் ஸ்ரீ ப்ரஹ்மர்ஷி தேவரஹா பாபா ஸ்வாமிஜீயும் ஸ்ரீமதாண்டவனும்.

12-2-1977. கும்பமேளா மஹோத்ஸவத்தில் திரிவேணீ சங்கமத்தில் நீராடி முத்திதரும் நகர்களில் உயர்ந்ததான காசியைக் காண அலஹாபாத்திலிருந்து புறப்பட்டு குறுக்கு வழியாய்க் கங்கையைக் கடந்து மறு கரையில் தங்கி ஆங்கு பூமியிலிருந்து 10 அடி உயரத்தில் பரண்கட்டிக் கொண்டு வசித்து வரும் ப்ரஹ்மர்ஷி தேவரஹாபாபா என்கிற தபஸ்வியை ஸ்ரீமதாண்டவன் காணச்சென்று ஸம்பாஷித்தார். வயோவிருத்தர். சுமார் 140 வயது என்கிறார்கள். கோரக்பூரைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர். தேசிக ஸம்ப்ரதாயஸ்தர் என்பது இவர் ஸ்வாமி தேசிகனது

ஸ்தோத்ரங்களையும், ஆளவந்தார், கூரத் தாழ்வான் ஸ்தோத்ரங்களையும் கணீ ரென்று சொல்லுவதிலிருந்து தெரிந்து கொள்ளமுடியும். இந்த மஹனீயர் ஸ்ரீமத் ஆண்டவனுடன் சுமார் 30 நிமிட நேரம் ஹிந்தியில் ஸம்பாஷித்தார். ஸ்ரீமத் ஆண்டவனுக்கு நல்ல மான்தோல், முந்திரி, பழங்கள், சால்வை வஸ்த்ரங்களை ஸமர்ப் பித்ததோடு மற்ற கைங்கர்ய பரர் களுக்கும் அவ்வண்ணமே அளித்துகந்தார். இவ்வளவு வஸ்துக்களை அந்த சிறிய இடத்தில் சேகரித்து வைத்த ஆச்சரி யத்தை எழுதி முடியாது. உள்ளத்தை விட்டு யகலாததொரு நிகழ்ச்சி என்று ஸ்ரீமதாண்டவன் அடிக்கடி சொல்லுவார்.

திருமலையப்பனின் அனுக்ரஹம்

அலஹாபாத்திலிருந்து கங்கைக்கரையை கடந்து 4 கி.மீ சென்றதும் திருமலை திருப்பதி அர்ச்சகர் ஸ்ரீ ராமதீக்ஷிதர் விடா முயற்சியோடு ஸ்ரீமதாண்டவனைத் தேடிப் பிடித்து ஸ்ரீமதாண்டவனைத் தெண்டனிட்டு திருவேங்கடமுடையானது ஸ்ரீபாதரேணு, சந்தன பிரஸாதங்களை ஸமர்ப்பித்து நின்றார். திருமலையப்பனது திவ்விய கடாக்ஷ மும், அலர்மேலு மங்கையின் அருமை அருள் நோக்கும், தமக்கு போகுமிட மெல்லாம் பொலிந்து வருகிறதை எண்ணி எண்ணி நைந்துருகி யாத்ரை விஜய யாத்ரையாய் தலைக்கட்டும் என்ற சுப சூசகமாகக் கொண்டு அர்ச்சகரைப் போற்றி பஹுமானித்து இந்த சுப சகுனத்தை எண்ணிக் கொண்டே ஸ்ரீமதாண்டவன் நடந்தார்.

நர்மதையின் நல்லழகு

காசி - நாக்பூர் பாதையில் ஸ்ரீமத் ஆண்டவன் ஜபல்பூரைவிட்டு சுமார் 18 கி.மீ தூரம் நடந்து நர்மதா நதிக்கரையில் தங்கினார்.

நதியின் போக்கில் 2 கி.மீ. தூரத்தில் விழும் நீர் வீழ்ச்சியைக்கண்டு, அங்கு நர்மதை இரண்டு பக்கமும் வெள்ளை சலவைக்கல் மலைகளுக்கு நடுவில் பிரவஹித்து வரு வதைக் கண்டார். கைங்கர்ய பரர்களை ஒரு படகு மூலம் அனுப்பி இந்த அழகை பார்த்து வரவும் செய்தார். ஓட்டம் தெரி யாமல் அமைதியாய் ஆனால் ஆழமதிக முள்ள நதி. 300 அடியிலிருந்து 500 அடி வரை ஆழமுள்ளது. முதலைகள் வாஸமுண்டு. நீர் வேகத்தில் குடையப் பட்ட வெள்ளை மலைகளில் ஏற்பட்டுள்ள குகைகள் பார்வைக்கு அழகாய் காட்சி யளிக்கின்றன. நிலவின் ஒளியில் வெண்மை மலைகளின் அழகு சொல்லுக்கு அப்பாற் பட்டது. மேற்கு முகமாய் பெருகும் நதி. வெள்ளைக் கல்லில் செய்த பல சித்திர வேலைப்பாடுள்ள சாமான்கள் விற்பனையாகின்றன. 1926, 1972 இவ் வருஷங்களில் அன்று கண்ட நீர்மட்டத்தை விட 150 அடி உயரத்தில் இருக்கும் தங்கும் விடுதி (Rest House) தாண்டி வெள்ளம் வந்த சுவடுகள் பார்க்க மெய் சிலிர்க்கும்.

பிரயாகைத் தல மஹிமையும் கும்பமேளா விழாவும். ஸ்ரீ மதாண்டவன் அருள் மொழிகள்

பிரயாகை என்றால் என்ன?

எழுமையுங்கூடி ஈண்டிய பாவம் இறைப் பொழுதளவினில் கழுவிடும் பெருமையும், கங்கை - கங்கை என்கிற வாசகத்தாலேயே கடுவினைகளை களைந்திடும் பெருமையுமுடைய கங்கா நதியும், கண்ணன் தன் கோலச் செயல்கள் கொண்டு உகந்து விளையாடின தூய பெருநீர் யமுனை நதியும், கண் ணுக்குப் புலப்படாமல் அந்தர்வாஹினி யாகப் பெருகும் ஸரஸ்வதீ நதியும், ஒன்று சேரும் (சங்கமம்) இடத்திற்குப் ''பிரயாகை'' என்று பெயர். இது ''அலஹாபாத்'' என்று இன்று அழைக்கப் படுகிறது.

புராணங்களில் இதன் பெருமை

இத்தலத்தின் புனிதத் தன்மையைப் பற்றி ப்ரஹ்மாண்ட, ஸ்காந்த, மத்ஸ்ய, அக்னி, பாத்ம புராணங்களும், ஸ்ரீமத் ராமாயணம் முதலான புராணங்களும் பேசுகின்றன. பிரயாகை என்ற பெயர் ருத்ரனால் வைக்கப்பட்டதென்று ஸ்காந்தம் கூறுகிறது. இது ஸோமன், வருணன், பிருகஸ்பதி முதலானோர் பிறந்த இட மாக மஹாபாரதத்தில் சொல்லப்படு

கிறது. வருண புராணம் இதனை ''ப்ரஹ்ம க்ஷேத்ரம்'' என்று வர்ணிக்கிறது. பிரயாகை என்ற சொல்லே, நமக்கு சொன்னவுடனேயே ''தர்மார்த்த காம மோக்ஷம்'' என்கிற நாலு வகைப் பயன்களையும் நமக்கும் நல்கிவிடும் எனப்பெரியோர் பணிப்பர். பிரயாகையில் செய்கின்ற தானமும், தவமும் மற்ற புண்யத் தலங்களில் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான பலனை இத்தலம் அளிக்கிறது.

ஸ்ரீமத்ராமாயணத்தில் பிரயாகையைப் பற்றிய உண்மைகள்

ஸ்ரீமத் ராமாயணத்தில் சக்ரவர்த்தித் திருமகன் கங்கையைக் கடந்து காட்டுக்குச் செல்லும்போது பிரயாகையிலிருந்த பரத்வாஜ முனிவரது ஆசிரமத்திற்கு எழுந்தருளி முனிவரது ஆசியைப் பெற்றார். பரதனும் அவ்வண்ணமே ஆராதிக்கப் பட்டதும் இங்குதான்.

மேலும் கயா க்ஷேத்ரத்திலுள்ள ''அக்ஷய வட விருக்ஷத்தின்'' (ஆலமரம்) வேர் இந்த சங்கமக் கரையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கங்கா நதியில் பல பிரயாகைகள் இருந்தாலும் கங்கையுடன் யமுனை - ஸரஸ்வதீ சங்கமமாகும் பிரயாகைதான் சிறப்பு வாய்ந்தது. இங்கு நீராடினால் இப்புவிதன்னில் எல்லா புண்ய தீர்த்தங்களிலும் நீராடின பலன் நமக்குக் கிடைக்கிறது. ஆதலால் இதற்கு ''தீர்த்த ராஜா'' எனப்பெயர்.

ரிக்வேதத்தில் ''ஸிதாஸிதே''—''யத்ர ஸங்கச்சதே'' என்று தொடங்கும் ரிக்கில் கருப்பு நிறமுள்ள யமுனையும் வெளுப்பு நிறமுள்ள கங்கையும் எங்கு சேருகிறதோ அது புண்யத்தலம் என்றும், அதில் ஆத்ம ஹத்தி பண்ணிக் கொள்கிறவர்களுக்கு மோக்ஷமுண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் சங்கமத்தின் கரையிலுள்ள ஆலமரத்திலிருந்து விழுந்து ஆத்மஹத்தி (தற்கொலை) பண்ணிக்கொண்டார்களாம். இது மாதிரி செய்தால் (இறந்தால்) பாவங்களிலிருந்து விடுபட்டு நோய், பிறப்பு, இறப்பு இவைகளிலிருந்து விடுபட்டு நித்யானந்தம் அடையலாமென்கிற நம்பிக்கை. இந்த வேத ருக்கின் வியாக்யானத்தில் ஆத்ம ஹத்தி அந்தணரைத் தவிர மற்ற ஜாதியர் விஷயம் என்று கண்டிருக்கிறது. அனுதியான வேதத்தில் சொல்லப் பட்ட புண்ணிய நதிகளின் சங்கமத்தலமானதால் மிகவும் பாவனமானது.

சரித்திரச் சான்றுகள்

இந்தப் பிரயாகை க்ஷேத்திரம் கௌதம புத்தர் காலத்தில் கோஸல தேசத்திலும், பிறகு மகத தேசத்திலும் இருந்திருக்கிறது. பிறகு மொகலாய அரசர்களில் முக்கியஸ்தரான அக்பர் பாதுஷா இந்த சங்கமத்தில் 1583ல் ஒரு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கோட்டையைக் கட்டி அல்லா-ஹா-பாத் (கடவுளின் நகரம்) எனப் பெயரிட்டதாகக் கூறப்படுகிறது. அந்தப் பெயர்தான் தற்சமயம் வழக்கிலிருக்கிறது. இங்குதான் நேரு குடும்பத்தினரின் சரித்திரப்புகழ் பெற்ற 'ஆனந்தபவனம்'' என்கிற கட்டிடம் இருக்கிறது. இந்திய சரித்திரம் கண்ட பல முக்கிய தீர்மானங்கள் இந்தக் கட்டிடத்தில் தான் உருவாயின.

இங்குதான் ஸாதுக்களையும், துறவிகளையும், இதர மதஸ்தர்களையும் ஒன்று சேரும்படி செய்து தங்கள் தங்கள் மதங்களைப் பற்றிச் சர்ச்சைகள் செய்து ஒருவர் மதத்தை மற்றொருவர் புரிந்து கொள்ள வகை செய்து இதற்கு ''மஹா மோக்ஷ பரிஷத்'' என்று தானேச்வர் வம்சத்தைச் சேர்ந்த ''ஹர்ஷவர்த்தன ராஜா'' பெயரிட்டார்.

சீனதேசத்து பிரபல யாத்ரீகரான ''ஹுவான் சுவாங்'' என்பவர் இந்த பரிஷத் பிரயாகையில் 2½ மாதங்கள் நடந்ததாயும், அநேக லக்ஷமக்கள் கூடியதாயும் எழுதி வைத்திருக்கிறார். இந்த நாட்களில் அவரவர்கள் தங்கள் தெய்வங்களான சூர்யன்-விஷ்ணு-சிவன்-புத்தர் இவர்களை வழிபட்டு ஏராளமான பொருளை தர்மம் செய்ததாயும் எழுதி இருக்கிறார். அரசன் ஹர்ஷவர்த்தனனும், ஏராளமான பொருளை பிராமணர்களுக்கும், புத்த பிக்ஷுக்களுக்கும், ஜைனர்களுக்கும் கொடுத்ததாகவும் சொல்லியிருக்கிறார்.

கும்பமேளா

திருப்பாற்கடலை தேவர்களும் அஸுரர்களும் கடைந்து ''அமிர்தம்'' வந்தவுடன் இந்திரனுடைய குமாரன் 'ஜயந்தன்' என்பவன் கருடனுடைய உதவியால் அமிர்த கலசத்தை அஸுரர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டு வேகமாய்ப் போகும் போது அஸுரர்கள் இவனைத்துரத்திக் கொண்டு வந்தனர். அவர்களுக்கும் எட்டாத ஒரு இடத்திற்கு வந்து அந்த அமிர்தத்தை நான்கு பாகங்களாக்கி நான்கு குடங்களில் (கும்பங்களில்) அடக்கி பிரயாகையில் ஒரு குடம்; நாசிக் பஞ்சவடி கோதாவரியில் ஒரு குடம்; உஜ்ஜயினி சிப்ரா நதியில் ஒரு குடம்; ஹரித்வார் கங்கையில் ஒரு குடம்; ஆக நான்கு இடங்களில் ஒளித்து வைத்தான். இது ஒரு வரலாறு.

பிறிதொரு வரலாறுமுண்டு. புராணங்களில் கூறப்படும் மோஹினி அவதாரத்தில் எம்பெருமான் திருப்பாற்கடலில் பிறந்த அமிர்தத்தை அஸுரர்களை வஞ்சித்து அமரர்களுக்கு அளித்து எஞ்சியதை உலகோர்களுய்ய நான்கு இடங்களில் ஒளித்து வைத்தான் என்பது. இதைத்தான் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம் பற்றுவது.

'மேளா' என்றால் ஏராளமான மக்கள் ஒன்று சேரும் கூட்டத்திற்குப் பெயர். கும்பம் வைத்த இடத்தில் கூடுவதால் ''கும்பமேளா'' எனப்படுகிறது. இந்த நான்கு இடத்திலும் இவ்விழா 12 வருஷத்திற்கு ஒரு முறை கொண்டாடப் படுகிறது.

1977ல் பிரயாகை., 1980ல் நாஸிக் பஞ்சவடி.

1983ல் உஜ்ஜயினி. 1986ல் ஹரித்வார் என்று ஒவ்வொரு இடத்திலும் 3 வருட இடைவெளியில் சங்கிலித் தொடர்போல் இவ்விழா வருகிறது.

தென்னாட்டில் மஹாமகம் போல் இந்த நான்கு இடங்களிலும் நடக்கும் இவ்விழா மிகச் சிறந்தது. பிரயாகையில் இவ்விழாவின்போது 100 லக்ஷம் மக்கள் புனித நீராடுகிறார்கள் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு நிறைந்த ஜன ஸமுத்ரம் உலகிலேயே இங்குதான்.

இந்தியாவில் வேதத்தை ஒப்புக் கொண்டு அதன் வழியே வரும் இந்து மதம் வேதமார்க்கத்துக்குப் புறம்பான புத்த, ஜைன, மதங்களால் சூழப்பட்டு வளம் குன்றி அழியும் தருவாயில், சிவனுடைய அம்சமாய் ஸ்ரீசங்கரபகவத் பாதாளும், ஆதிசேஷ அவதாரமாய் ஸ்ரீ பகவத் ராமானுஜரும், வாயுவின் அம்சமாய் ஸ்ரீமத்வாச்சாரியரும் அவதரித்து, மேற்படி மதங்களைக் கண்டனம் செய்து இந்துமதத்தை வளமடையச் செய்தார்கள். கி.பி. எட்டாவது நூற்றாண்டில் ஆதி சங்கரரும் பிறகு இராமானுஜரும் வடதேசத்தில் ஸஞ்சாரம் செய்து புத்த ஜைன மதத்தின் கொள்கைகளைக் கண்டித்து வந்தார்கள். அவர்கள் இந்த பிரயாகை க்ஷேத்ரத்திற்கு வந்து பல மதஸ்தர்களைச் சந்தித்து வாதம் செய்து வேதமார்க்கத்தில் நடக்கும் இந்து மதத்தை நிலை நாட்டியதாய் சொல்லப் படுகிறது.

ஆதிசங்கரர்தான் முதல் முதல் இங்கு வந்து இந்த கும்பமேளாவை ஒழுங்கு படுத்தி பல மதஸ்தர்கள் கூடும்படி செய்து ஒருவருடைய மதத்தை மற்றவர் உணரும்படி செய்தார்.

இதுமாதிரி விசேஷ தினங்களில் கிரஹங்களின் சேர்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை விபரமாய் அறிய முடியா விட்டாலும் 1977ல் பிரயாகையில் நடந்த கும்பமேளாவும் அங்கே ஸ்ரீமதாண்டவனது ஸான்னித்யமும் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்பதில் ஐயமேயில்லை.

ஸ்ரீ :

ஆன்மீகத் தலைவர்களும் அண்ணல் ஸ்ரீமதாண்டவனும்

ஸ்ரீமத் ஆண்டவன் ஸத்ஸம்ப்ரதாய பரம் பரையில் ஒரு ஆதவன் என்று விளங்கும் ஸ்ரீமத் ஆண்டவனது கல்யாண குணங்க ளுள் தலையாயன அவரது எளிமையும், பண்பும், நட்புறவின் மாட்சியும்.

ஸமுதாயத்தின் எத்துறையினரும் அவ ருடைய குணத்தால் ஈர்க்கப்பட்டு தங்க ளது பக்தியையும் அன்பையும் அறிவித்து பெருமையும், இன்பமும் நிம்மதியும் பெறு கின்றனர்.

ஆன்மீகத் துறையிலும் இணையில்லாப் பெருமகனர் ஆகையாலே இத்தலைமுறை மதத்தலைவர்கள் எல்லோரும் ஸ்ரீமதாண் டவனைப் போற்றிப் புகழாரமும், அஞ்ச லியும் அளிக்கத் தவறியதில்லை.

அங்ஙனே ஸ்ரீமதாண்டவனோடு கூடிக் குலவிய பெருமக்களையும், ஆன்மீக அறிவுச் செம்மல்களையும் இப்பகுதி வாசகர்களுக்கு அளிக்கிறது.

10-2-65. திருக்கோவிலூர் திருவிக்கிர மன் ஸன்னிதி. ஆதீனகர்த்தா ஸ்ரீ எம் பெருமானர் ஜீயர் ஸ்ரீமதாண்டவனோடு ஸந்திப்பு.

13-3-65. மேல்கோட்டையில் காஞ்சீ ஸ்ரீ அழகியமணவாள ஜீயர் ஸ்ரீமதாண்டவ னோடு ஸமாகமம்.

4-10-65. மைசூர் பரகால மடம் ஜீயர் மங்களாஸாசனம். கல்யாண மண்டபத் தில் ஒரு ஆஸனத்தில் இரண்டு யதிகளும் எழுந்தருளியிருந்தது.

4-6-66 — 26-2-67. வானமாமலை மடத்து ஜீயரை தெண்டன் ஸமர்ப்பித் தது.

6-6-66. திருக்குறுங்குடியில் ஜீயரை தெண்டன் ஸமர்ப்பித்தது.

18-6-66. சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் கீழ்நத்தம் வந்து ஸ்ரீமதாண்டவனை ஸேவித்து அன்று ஸ்ரீமதாண்டவன் நியமனத்திற்கிணங்கி வாமனவதார மஹிமை என்னும் பொருள் பற்றி உபந்யஸித்தது.

7-4-67. ஸ்ரீரங்கம் பவுண்ட்ரீகபுரம் ஆசிரமத்தில் எழுந்தருளியிருக்கும் ''விண் ணூற்றங்கரை ஸ்வாமி'' என்கிற ஸ்ரீரங்க ஞத மஹாதேசிகனை தெண்டன் ஸமர்ப் பித்து ஸம்பாவனை செய்தருளியது.

6-2-69 — 2-7-69. ஸ்ரீமதாண்ட வன் மைசூர் பரகால மடத்திற்கு எழுந் தருளி ஸ்ரீலக்ஷ்மீ ஹயவதன திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீனிவாஸ ப்ரஹ்ம தந்த்ர பரகால யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்வாமி ஸ்ரீமதாண்டவனுக்கு உபஹாரங் கள் ஸம்பாவனை - பொன்னாடை முத லியவைகள் ஸமர்ப்பித்து உபசரித்தார். காலக்ஷேப கூடத்தில் முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாசார்யர்களான இருவரும் அமர்ந்து அனைவரையும் அனுக்கிரஹித்தது.

4-69. பெங்களூர் இராமன் ஸன்னிதி யில் (ஜயநகர்) இராமநவமி உத்ஸவத்தில் திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீமந்நாராயண ஜீயர் இருவருடன் ஸ்ரீம தாண்டவன் இராம பட்டாபிஷேக கால க்ஷேப ஸமயம் சந்தித்தது.

4-69. பெங்களூரில் பரகால மடத்தில் மடத்து ஸ்வாமியுடன் சந்திப்பு.

22-6-69. திருப்பதி பெரிய ஜீயர் ஸந்திப்பு.



உபன்யாசத்தில் சிஷ்யர்கள்



மயிலேயில்
ஸ்ரீமதாண்டவன்

அநேக ஆசார்யர்களுடன் ஸ்ரீமதாண்டவன்



ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீமதழகியசிங்கருடன்



ஸ்ரீகௌடீயா மடாதிபதியுடன்



திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமியுடன்

திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமியும், ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமியும்







மைசூர் பரகாலமடத்து
ஸ்வாமியும்
ஸ்ரீமதாண்டவனும்





ஸ்ரீ வானமாமலை பெரிய ஜீயருடன்



ஸ்ரீ பௌண்ட்ரீகபுரம்
ஸ்ரீமத் விண்ணூற்றங்கரை ஸ்வாமியுடன்



ஸ்ரீ வானமாமலை ஜீயருடன்

பெங்களூரில் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீமதழகியசிங்கருக்கு வரவேற்பு





பெங்களூரில்
காஞ்சீ ஸ்ரீ அழகிய மணவாள
ஜீயர் ஸ்வாமியுடன்





முனித்ரயத்தின்
இரண்டு ஆசான்கள்

மயிலேயில் ஸ்ரீ பரகால மடத்து ஸ்வாமியுடன்





காஞ்சியில் நம்மாண்டவன்
பிருந்தாவனத்தில் தண்டனிடுகை

அருள் புரியும் ஸ்ரீமதாண்டவன்





பூர்ண ப்ரஜ்ஞ உடுப்பி ஆத்மார்
மடாதிபதியும் ஸ்ரீமதாண்டவனும்

த்ரிமதத்தின் ஆசார்யர்கள்



ஸ்ரீமதாண்டவன் — வியாஸராய மடாதிபதி — சிருங்கேரி மடாதிபதி

18-3-70. ஸ்ரீமதாண்டவன் 64வது திரு நக்ஷத்ரம். ஸ்ரீவிண்ணற்றங்கரை ஸ்வாமி, ஸ்ரீமந்நாராயண ஜீயரும் எழுந்தருளி அனுக் ரஹித்தபடி.

3-6-70. மைசூர் பரகாலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர பரகால யதீந்த்ர மஹாதேசிக ஸ்வாமியின் திருமேனி நலிந்து போனதின் காரணமாக அவர் ஸ்தானத் தில் மடத்து நிர்வாஹ ஸம்யமீந்த்ரராக ஸ்ரீ அபிநவ ராமானுஜ ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமியின் பட்டாபிஷேகத்தை அனு மோதித்து ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமுகம் அனுப்பியாயிற்று.

8-70. பவுண்ட்ரீகபுர ஸ்வாமி திருநக்ஷத் ரத்தில் ஆசிரமம் போய் ஸ்ரீமதாண்டவன் விண்ணற்றங்கரை ஸ்வாமியை தெண்ட னிட்டது.

21-8-70. தெம்பரையாண்டவன் திரு நக்ஷத்ரத்தில் விண்ணற்றங்கரை ஸ்வாமி யோடு ஸ்ரீரங்கம் சின்னச்ரமத்தில் ஸந் திப்பு.

3-6-71. மைசூர் பரகால மடத்தில் ஸம் யமீந்த்ரர் ஸ்ரீ அபிநவ ராமானுஜ ப்ரஹ்ம தந்த்ர பரகால ஸ்வாமியோடு ஸ்ரீரங்கப் பட்டிணம் தேசிகன் ஸன்னிதி உத்ஸவத் தில் சந்தித்தது.

10-71. பெங்களூர் கருத்மான் பார்க் ஆசிரமத்திற்கு மாலை 6 மணி அள வில் எதிர்பாராது விஜயம் செய்த காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமியுடன் ஸம்பா ஷணையும் அவருக்கு ஆதித்யமும் உகந் தருளியது.

19-2-72. ஸ்ரீரங்கம் கீழ உத்திர வீதி ஸ்ரீபாதுகா வித்யாலயத்தில் வேத திவ்ய ப்ரபந்த வித்வத் ஸதஸ்ஸில் ஸ்ரீவிண்ணற் றங்கரை ஸ்வாமியோடு ஸம்பாஷணை.

10-5-72. நம்பெருமாள் திருத்தேர் வீதியில் எழுந்தருளும்போது மத்வ ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஆசார்யாளான ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி வ்யாஸ ராய ஸ்வாமிகளுடன் திருத்தேரில் ஸ்ரீமதாண்ட வன் நம்பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளினர்.

13-8-72. சென்னை கௌடியா மடத் தில் கல்கத்தா கௌடிய மடாதிபதி ஸ்வாமிஜீயுடன் சந்திப்பு.

3-11-72. சென்னை ஸ்ரீ T.M. ரகுநாதன் திருமாளிகையில் பண்டிதராஜ திருமலை D. T. தாத்தாச்சாரியரோடு ஸஹயோக ஸம்பாஷணை.

1-4-73. சென்னை மயிலை ஆசிரமத்தில் பரகாலமடத்து ஸ்வாமியுடன் சந்திப்பு. பரகால மடத்து ஸ்வாமி மயிலை ஆசிரமத் திலேயே எழுந்தருளியிருந்தபடி.

7-73. சென்னை மயிலை ஆசிரமத்தில் ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான், மஹாமஹிமோ பாத்யாய பத்மபூஷண் ஸ்ரீ உ. வே. ப்ரதி வாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி எழுந்தருளி ஸ்ரீமதாண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்தார். ஸ்ரீமதாண்ட வனும் ஸ்வாமிக்கு ஸம்பாவனை செய்தருளி னர்.

18-6-74. ஸ்ரீமதாண்டவன் பெங்களூர் இராஜாஜி நகருக்குச் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீமத் அழகிய சிங்கரை தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மனை யும் கண்ணனையும் மங்களாசாஸனம் செய் தருளினர்.

19-6-74. ஸ்ரீமதாண்டவன் பெங்களூரி லிருக்கும் பரகால மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனை மங்களா சாஸனம் செய்தருளிப் பின் அங்கு முகாமிட்டிருந்த ஸ்ரீ அபிநவ இராமானுஜ ப்ரஹ்ம தந்த்ர பரகால யதீந்த்ர மஹா தேசிகனோடு ஸம் பாஷித்துத் திரும்பினர்.

1-10-74. உடுப்பி அஷ்டமடாதிபதி களில் ஒருவரான பெஜாவர் மடத்து ஸ்வாமிகள் பல சிஷ்யர்களோடு ஜயநகர் ஆசிரமத்திற்கு வந்து ஸ்ரீமதாண்டவனை புரஸ்கரித்தார்.

10-11-75. ஸ்ரீமதாண்டவன் ஸஞ்சா ரத்தில் ஆந்த்ரமாநில வியாபார ஸ்தலமான கதக்கிலிருந்து அன்னகரே போகும் வழி யில் பெஜாவர் மடாதிபதியையும், பலி மார் மடாதிபதியையும் சந்தித்து பரஸ் பரம் யோக க்ஷேமாதிகள் பரிமாறியது.

13-11-75. ஹுப்ளியில் உள்ள மூர்ச் சாவர் லிங்காயத்து மடம் ஜகத்குரு ஸ்ரீ கங்காதர ஸ்வாமிகள் ஆசிரமத்திற்கு வந் திருந்து ஸ்ரீமதாண்டவனுடன் லோகாயத மான பல விஷயங்களையும், மத ஸம்ப்ர தாயங்கள் குறித்தும் சுமார் ஒரு மணி நேரம் விசாரம் செய்து சென்றார்.

23-9-76. பதரிகாச்ரமத்தில் 'வேதாந்த குடீரம்' என்கிற ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ''திரிதண்டி ஸ்வாமி யதிகள்'' என்கிற ஸ்ரீ வேதாந்த இராமானுஜாசாரியர் ஸ்வாமியுடன் ஸ்ரீமதாண்டவன் சந்திப்பு.

7-10-76. பதரிகாச்ரமத்து ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி திரிதண்டி ஸ்வாமி பதரியிலிருந்து ரிஷிகேசம் 'பரத்மந்திர்' எழுந்தருளியவுடன் ஸ்ரீ ஸ்வாமியை ஸ்ரீமதாண்டவன் மிகப்ரீதியுடன் வர வேற்று தக்க ஸம்பாவனைகள் செய்தருளி னார். பதரியில் ஸ்ரீமதாண்டவனை மிகவும் உபசரித்த யோகியிவர்.

பாரத் மந்திர் மஹந்த் கூட இருந்தார். அன்று ஸ்ரீமதாண்டவன் விஜயத்தை அறி விக்கும் சிலாசாஸனத் திறப்பு விழா.

12-4-77. நாக்பூர் - ஹைதராபாத் மார்க்கத்தில் கிஸான் நகர் என்கிற ஊரில் கல்யாணராமஸ்வாமி கோவில் நிர்வாஹி ஸ்ரீ நிச்சலாநந்த ஸ்வாமி ஸ்ரீமதாண்டவனை வரவேற்று புரஸ்கரித்தார்.

23-6-77. சென்னை மயிலை ஆசிரமத்தில் மைசூர் பரகாலமடம் ஸ்வாமி எழுந்தருளி ஸதஸ்ஸில் அன்வயித்து ஸ்ரீமதாண்டவ னுடை அலங்கரித்தது.

14-9-77. சென்னை மயிலை ஆசிரமத்தில் திருக்குடந்தை அக்னிஹோத்ரம் ஸ்ரீ உ. வே. இராமானுஜதாத்தாச்சாரியர் ஸ்வாமி ஸ்ரீமதாண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்தார்.

29-11-77. மயிலை ஆசிரமத்தில் திருக் கோவலூர் ஜீயர் ஸ்ரீ உ. வே. திருவேங்கட ராமானுஜாச்சாரியர் ஸ்வாமி ஸ்ரீமத் ஆண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்தார். ஆசார்ய புருஷர். சிஷ்ய ஸம்பத் ஸம்ருத்தி யோடு திருவிக்ரமன் ஸன்னிதி பரம்பரை டிரஸ்டி. ஆத்மகுணபூர்த்தி யுடன் வைஷம் யமில்லாத சாத்வீக வ்யக்தி. ஸ்ரீமதாண் டவனிடம் அந்தரங்க அத்யந்த விச்வாசி.

10-2-78. காஞ்சியில் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி ஸ்ரீமதாண் டவனை தெண்டன் ஸமர்ப்பித்தார்.

15-3-78. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமத் பரமஹம் ஸேத்தியாதி விண்ணூற்றங்கரை ஸ்வாமியை தெண்டன் ஸமர்ப்பித்தது.

29-3-78. ஷி ஸ்வாமியின் 87வது திரு நக்ஷத்ரத்தில் மறுபடியும் ஸ்ரீமதாண்டவன் தெண்டன் ஸமர்ப்பித்தார்.

3-6-78. ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வந்திருந்து ஸ்ரீமதாண்டவனை வணங்கிப் போற்றிக் கோயில் திருப்பணிக்கு உதவ வேண்டினார்.

21-2-79. திருக்குறுங்குடி ஜீயர் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீபேரருளாள ஸ்ரீ இராமானுஜ ஜீயர் ஸ்வாமியை திருக்குறுங்குடி மடத் தில் சந்தித்து மடத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளினது.

23-2-79. வானமாமலை பெரியஜீயர் (40 சாதுர்மாஸ்யங்கள்) சின்ன ஜீயர் ஸ்ரீசடகோப இராமானுஜ ஜீயர் இவர் களை ஸேவித்தார்.

26-2-79. ஆழ்வார்திருநகரி எம்பெரு மானார் மடத்தில் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியோடு ஸம்பாஷணம்.

ஆசார்ய புருஷர்பெரியநம்பி ஸ்ரீ ரங்காச் சாரியர் ஸ்வாமி தெண்டன் ஸமர்ப்பித்தார்.

15-5-79. ஸ்ரீரங்கத்தில் தசாவதார ஸன்னிதிக்கு எழுந்தருளி அஹோபில மடம் ஸ்ரீமதழகிய சிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்தாயிற்று.

17-5-79. ஸ்ரீரங்கத்தில் பெரியாச்ரம த்திற்கு எழுந்தருளிய ஸ்ரீமதழகிய சிங்கரை வரவேற்று தெண்டன் ஸமர்ப்பித்தது.

27-5-79. ஸ்ரீரங்கம் பௌண்ட்ரீகபுர ஆசிரமத்தில் மன்னார் கோயில் ஸ்ரீரங்க ஸ்ரீத மஹாதேசிகன் திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீமதழகிய சிங்கரோடு எழுந் தருளி ஸ்ரீவிண்ணூற்றங்கரை ஸ்வாமியுடன் அன்வயித்தது.

7-6-79. ஸ்ரீரங்கம் தசாவதார ஸன்னிதியில் ஸ்ரீமதழகிய சிங்கரோடு ஸ்ரீரங்கம் ராஜகோபுர நிர்மாண விஷயங்கள் ஸம்பாஷணம்.

9-9-79. ஜயநகர் 13வது மெயின் 4வது T-பிளாக் பட்டாபிராம ஸ்வாமி கோவிலில் ஸோஸலே ஸ்ரீவியாஸ ராஜ மடாதிபதி ஸ்ரீவித்யாபயோநிதி தீர்த்த பாத ஸ்வாமிகளுடனும், சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபினவோத்தாந்த ஸ்ரீவித்யாரண்ய பாரதி ஸ்வாமியுடனும் ஸ்ரீமதாண்டவன் ஸம்பாஷணையும் ஸமாகமமும்.

15-2-80. ஸ்ரீரங்கம் ஸ்ரீவிண்ணுற்றங்கரை ஸ்வாமியுடன் ஸந்திப்பு. மிகுந்து நலிந்து துர்பல மாயிருந்த ஸ்வாமியை ஸ்ரீமதாண்டவன் ஆச்வாசப் படுத்தருளினார்.

அரசியல் தலைவர்கள், பெரியார்களுடன் ஸ்ரீமதாண்டவன்

17-8-64. தமிழக அரசு H.R.E. (ஹிந்து அறநிலைய நிர்வாகம்) உதவி ஆணையர் ஸ்ரீராமலிங்க ரெட்டியார் திருநீர்மலையில் ஸ்ரீமதாண்டவனைச் சந்தித்தது.

10-64 பாண்டிச்சேரி லெப்டினன்ட் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீசைலம் ஸ்ரீமதாண்டவனைச் சந்தித்தது.

10-64. பாண்டி புருஷோத்தம ரெட்டியார் M.L.A. சந்திப்பு.

28-8-65. பாரத நிதி மந்திரி T. T. கிருஷ்ணமாச்சாரியர் ஸ்ரீ T. S. ராஜம் பெங்களூரில் சந்திப்பு.

8-10-65. மைசூரில் மஹாராஜா ஸ்ரீ ஜயசாம்ராஜேந்திர வாடியார் பஹதூர் சந்திப்பு.

9-10-65. கர்நாடக முதல் மந்திரி ஸ்ரீ நிஜலிங்கப்பா சந்திப்பு.

10-10-65. கர்நாடக நீதிபதி (மைசூர் உயர் நீதிமன்றம்) நாராயண பை பெங்களூரில் சந்திப்பு.

15-10-65. ஹம்பாபுரம்: மத்ய சர்க்கார் துணை மந்திரி சௌந்தரம் இராமச் சந்திரன் சந்திப்பு.

10-4-66. திருக்குடந்தையில் திரு. பட்டாபிராமன் (Bar-at-Law) மத்ய அரசு சட்ட மந்திரி சந்திப்பு. திரு T. S. சுவாமிநாத உடையார்., (M.L.A.) உடனிருந்தார்.

2-11-66. இராமனாதபுரத்தில் குமார ராஜா ராமனாத சேதுபதியும், இராமனாத புரம் இராஜா இளவல் ஸ்ரீ விஜயநாத துரையும் அவரவர் குடும்பங்களோடு ஸ்ரீமதாண்டவனைத் தண்டனிட்டது.

22-2-67. கேரள மஹாராஜா சந்திப்பு. திருவனந்தபுரம் ஸன்னிதி நாடகசாலை மண்டபம்.

14-10-67. திருக்குடந்தையில் சிதம்பரம் ஸ்ரீ R. கனகசபை பிள்ளை M. P. சந்திப்பு.

17-11-67. சிதம்பரத்தில் (திருச்சித்திரகூடத்தில்) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. P. S. கைலாசம் தனது துணைவி திருமதி சௌந்தரா கைலாசத்தோடு தெண்டன் ஸமர்ப்பித்தார். ஸ்ரீமதாண்டவனது சொற்பெருக்கில், இயற்கையிலேயே ராஸக்ய முடைய திருமதி சௌந்தரா அம்மையார் பல காலங்கள் திளைத்து மகிழ்ச்சி அடைபவர்.

17-11-67. சிதம்பரத்தில் திரு. R. கனகசபை பிள்ளை M.P. அவரோடு G. வாகீசம் பிள்ளை (M.L.A.) சந்திப்பு.

7-4-68. இந்திய யூனியன் போக்குவரத்து மந்திரி Dr. V. K. R. V. ராவ் சந்தித்து ஸ்ரீமதாண்டவனை தெண்டன் சமர்ப்பித்தல்.

5-7-68. பெங்களூர் - ''பதங்கர் ஹவுஸில்'' கர்நாடக காங்கரஸ் துணைத்தலைவர் ஸ்ரீ காடி செல்வராய செட்டியார் சந்தித்தது.

6-7-68. திரு. B.D. ஜாட்டி, பாரதத் துணைத் தலைவர், பெங்களூரில் ஸ்ரீதேவராஜ அர்ஸ் (கர்நாடக முதலமைச்சர்) ஸ்ரீ H. V. கொஜல்கி (வருவாய்த்துறை அமைச்சர்). ஸ்ரீ புட்டு ஸ்வாமி (நகரமன்ற நிர்வாஹி) இவர்களோடு சந்தித்தது.



சென்னை ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியுடன்



பாரத மத்திய அரசு நீர்ப்பாசனத் துறை
மந்திரி **R.K.R.V.**ராவ் - மயிலை ஆசிரமம்



சென்னை ஆளுநர் ஸ்ரீ K. K. ஷா அவர்களுடன்



பெங்களூர் கீதா உபன்யாஸத்தில் ஸ்ரீ H. K. N. ஆச்சார்யா
முன்னாள் பாரத துணை ஜனாதிபதி ஸ்ரீ பதக்
கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் முதலானோர்

6-7-68. மைசூர் மாநில கவர்னர் Dr. பதக் and Mrs பதக் இராஜ்பவன்-பெங்களூர் சந்திப்பு. ஷிமோகா பதரீ நாராயணன் (M. L. A.) (காங்கரஸ் பிரமுகரும் தேவ ராஜ் அர்ஸ் அமைச்சரவையில் நீதித் துறையமைச்சர்) கூட இருந்தார்.

27-10-68. பெங்களூர் ரெஸிடன்ஸி ரோடு பாரதீய வித்யா பவனத்தில் மைசூர் உயர்நீதி மன்ற நீதிபதி ஸ்ரீகோபீ வல்லப அய்யங்கார் தண்டனிட்டது.

6-12-68. பெங்களூர் T.V.S. நிறுவனத் தில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்த போது T.V.S. நிறுவனத்தின் சேர்மன் ஸ்ரீ T. S. ராஜம் உடனிருக்கையில் யூனைடட் கமர்சியல் வங்கித் தலைவர் ஸ்ரீரங்கனுத பாங்கூர் ஸ்ரீமதாண்டவனைத் தெண்டன் சமர்ப்பித்தது.

16-12-68. பெங்களூர் மல்லேச்வரத் தில் அகில பாரத காங்கரஸ் கமிட்டியின் தலைவர் நிஜலிங்கப்பாவுடன் சந்திப்பு.

4-3-69. ஷிமோகா ஸ்ரீபத்ரீ நாராயணன் M.L.A. சந்திப்பு.

23-5-69. ஹிமாசல பிரதேசம் மக்கள் சபைத் தலைவர் (Speaker, Legislative Assembly., Himachal Pradesh) தாஸ் மஹா ராஜன்: மேல் சபைத் தலைவர் (Chairman Legislative Council) ஸ்ரீதுர்காதாஸ் பஞ்சாப் இவரோடு பெங்களூரில் சந்தித்தது.

4-6-69. மைசூர் மாநிலத்தின் முதல் மந்திரி திரு. வீரேந்திர படீல் ஸ்ரீமத் ஆண்டவனை தெண்டன் சமர்ப்பித்தது. இராஜாஜி நகர் வடமொழி ஆராய்ச்சி கூட நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டு விழா.

16-6-69. ஸ்ரீ N. கிருஷ்ணன்; தலைவர் இண்டர் நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனம், ஸ்ரீமதாண்டவனை தெண்டன் சமர்ப்பித்தார்.

21-7-69. பெங்களூர் பதங்கர் ஹவுஸில் பம்பாய் சேட் கதாதர ஸோமானி தெண்டன் சமர்ப்பித்தார்.

21-9-69. பெங்களூரில் பம்பாய் பாரத ஸ்டேட் பாங்கின் நீதித்துறை ஆலோசகர் (Chief Law Officer) ஸ்ரீ K. வெங்கடாச்சாரியர் தெண்டனிட்டது.

21-9-69. ஸ்ரீ R. கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, வக்கீல், தி.நகர் ஸ்ரீமதாண்டவனை பெங்களூரில் தெண்டன் சமர்ப்பித்தார்.

12-69. ஸ்ரீரங்கம் சின்னஜ்ரமத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சென்னை உயர்நீதி மன்றம் நீதிபதிகள் ஸ்ரீமான்கள் கைலாசம், சதாசிவம், மற்றும் மாவட்ட நீதித்துறை அதிகாரிகள் ஸ்ரீமதாண்டவனை தெண்டன் சமர்ப்பித்தார்கள்.

12-69. இராமனுதபுரம் ராஜா ஸ்ரீசேதுபதி அவர்கள் சந்தித்து திருப் புல்லாணி ஸன்னிதி ஜீர்ணோத்தாரணம் பற்றிப் பேசி பல மந்த்ராக்ஷதை பெற்று சென்றார். இடம் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம்.

18-7-70. T. V. S. நிறுவனத்தின் ஸதர்ன் ரோடு வேஸ் (Southern Roadways) அதிபர் ஸ்ரீ T. S. கிருஷ்ணு தனது துணைவி ஸ்ரீமதி அம்புஜம் கிருஷ்ணுவுடன் வந்து ஸேவித்து தன்னுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி முஹூர்த்தத்திற்கு அருளாசி பெற்றனர்.

8-70. பெங்களூர் இண்டர் நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ N. கிருஷ்ணன், பெங்களூர் டாம்கோ நிறுவனத்தின் பொருளாளர் நெடுவக்கரை ரங்காச்சாரியருடன் வந்து பெங்களூர் ஜயநகர் இராஜகோபுர நிர்மாண பிரதிஷ்டைக்கு எழுந்தருளவேண்டுமென்று ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் ஸ்ரீமதாண் டவனை பிரார்த்தித்தார்.

4-7-71. பம்பாய் சேட் ஸ்ரீகதாதர ஸோமானி பெங்களூர் ஆசிரமத்தில் ஸ்ரீம தாண்டவனை தெண்டன் சமர்ப்பித்து ஆசி ரம வேணுகோபாலனுக்கு லட்சார்ச்சனை செய்து வைத்தது. (30-6-71—5-7-71)

13-12-71. மைசூர் மாநிலத்தில் ஸ்ரீமதாண்டவன் சஞ்சாரத்தில் மாரஹள்ளி யில் ஓய்வு பெற்ற பாரத ரிஸர்வ் பாங்க் கவர்னர் ஸ்ரீ H. V. R. அய்யங்கார் தன் பத்னியோடு வரவேற்று ஸ்ரீமதாண்டவனை தெண்டன் சமர்ப்பித்தார்.

8-1-72. T. V. S. சேர்மன் ஸ்ரீ T. S. ராஜம் தனது 71வது திருநக்ஷத்திரத்தை யொட்டி பந்துக்களோடு ஸ்ரீமதாண்டவனை தண்டனிட்டது.

10-4-72. கல்கத்தா சேட் ஸ்ரீநரசிம்ம பாபு பங்கூர் ஸ்ரீமதாண்டவனை ஸேவித்தார்.

28-6-72. பாண்டி ஆளுநர் ஸ்ரீ B. D. ஜாட்டி ஸ்ரீமதாண்டவனுடன் சந்திப்பு.

24-7-72. சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள் கனம் ஸ்ரீராகவன், ஸ்ரீராம பிரசாத் ராவ், ஸ்ரீராமமூர்த்தி, ஸ்ரீவெங்கட ராமன், ஸ்ரீகிருஷ்ணசாமி ரெட்டியார், டெல்லி உயர் நீதி மன்ற நீதிபதி ஸ்ரீரங்க ராஜன் முதலானோர் ஸ்ரீமதாண்டவனை மயிலை பாதுகாச்ரமத்திற்கு வந்திருந்து ஸேவித்தனர்.

7-72. மயிலை ஆசிரமத்தில் மாநில ஆளுநர் K. K. ஷாவுடன் சந்திப்பு.

23-8-72. சென்னை கௌடிய மடத்தில் ஆளுநர் K. K. ஷா உடன் ஸ்ரீமதாண்டவன் சந்திப்பு.

8-10-72. மைசூர் மாநில அரசு கல்வித் துறை மந்திரி ஸ்ரீபதரீ நாராயணன் மயிலை ஆசிரமத்தில் ஒரு நாள் முழுவதும் இருந்து ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹம் பெற்றது.

9-10-72. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ K. S. வெங்கடராமன் I. C. S. அவர்கள் தலைமையில் சென்னை லக்ஷ்மிபுரம் யுவர்கள் சங்கத்தில் வரவேற்பும் உரையா டலும்.

5-11-72. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் கனம் K. S. வெங்கட்டராமன், இராமமூர்த்தி, கோகுலகிருஷ்ணன் சென்னை மயிலை ஆசிரமத்தில் சந்திப்பு.

2-2-73. பம்பாய் ரிஸர்வ் பாங்க் டெபுடி கவர்னர் ஸ்ரீ V. V. சாரியர் சந்தித் தது.

தமிழக அரசில் கல்வித்துறையின் செயலர் திருக்குடந்தை S. கிருஷ்ணஸ்வாமி I. A. S. ஸ்ரீமதாண்டவனை தெண்டன் சமர்ப்பித்து திருக்குடந்தையில் காவேரிக் கரையில் உள்ள தனது வீட்டை ஆசிரமத்திற்கு அளித்தார்.

8-73. பம்பாய் ஸ்டேட் பாங்க் Law officer ஸ்ரீவெங்கடாச்சாரியரும் ஆந்திர பிரதேசத்தின் உயர் போலீஸ் அதிகாரி ஸ்ரீ K. சரண்யன் I. P. S., ஸ்ரீமதாண்டவனை ஸேவித்தது.

12-73. ஆந்திர பிரதேச அறநிலைய பாதுகாப்பு மந்திரி சூர்யநாராயணராஜு திருப்பாவை உபந்யாசத்தில் ஸ்ரீமதாண்ட வனை சந்தித்தார்.

18-1-74. ஆந்திர அரசு முதல்வர் ஸ்ரீ J. வெங்கல்ராவ் சந்திப்பு.

11-4-74. பாரத மத்ய அரசு இராஜாங்க அமைச்சர் ஸ்ரீமதி சரோஜினி மஹிஷி சந்திப்பு. (கன்னட பாரத வனபர்வ வெளியீடு)

24-5-74. பெங்களூரில் ஆசிரமத்தில் கல்கத்தா சேட் மஹராஜ் பங்கூர் நரசிம்ம பாபு அவர்கள் குமாரர் குடும்பத்துடன் ஸ்ரீமதாண்டவனை தெண்டன் ஸமர்ப் பித்தார்.

9-8-74. கர்நாடக கவர்னர் ஸ்ரீ மோகன்லால் சுகாடியா பெங்களூர் ஜயநகர் ஆசிரமத்தில் சந்திப்பு.

9-8-74. சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி சோமசுந்தரம் சந்திப்பு.

11-8-74. இசைப் பேரறிஞர், சங்கீத கலாநிதி திருமதி M. S. சுப்புலக்ஷ்மி; தன் கணவர் திரு. சதாசிவத்தோடும், இராதா விசுவநாதனுடனும் தெண்டன் சமர்ப்பித் தார்.

1-10-74. பம்பாய் ஸ்டேட் பாங்க் சீப் லா ஆபீஸர் ஸ்ரீ K. வெங்கடாச்சாரியர் பெங்களூரில் சந்திப்பு.

16-9-75. சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி கனம் P. S. கைலாசமும் அவரது துணைவியார் திருமதி சௌந்தரா கைலாசத் துடன் சந்திப்பு. இடம்: திருச்சானூர்.

16-9-75. சென்னை 'கல்கி' சதாசிவமும், சங்கீத கலாநிதி M. S. சுப்புலக்ஷ்மியும் திருச்சானூரில் சந்திப்பு.

5-11-75. துங்கபத்ரா அணை., ரிஸர் வாயர் ஸைடு பெங்களூர் ஸ்ரீ N. கிருஷ்ணன் வந்து ஸேவித்தார்.

16-12-75. டோபே (பாம்பே அருகில்) பெங்களூர் N. கிருஷ்ணன் ஸேவித்தது.

24-12-75. பெங்களூரிலிருந்து T. V. S. சேர்மன் ஸ்ரீ T. S. ராஜம் and V. ரங்காச் சாரியர் பம்பாயில் ஸ்ரீ தேசிகபவனத்தில் சந்திப்பு.

8-1-76. பம்பாய் பிரபல தொழிலதிபர் R. இராமானுஜாச்சாரியர் ஸ்ரீமதாண்டவனே தெண்டன் ஸமர்ப்பித்தார்.

1-5-76. மஹாராஷ்ட்ர மாநிலத்தில் துலியா (Dhulia) என்கிற இடத்தில் ''காந்தி தத்வ ஜ்ஞான மந்திர்'' என்கிற இடத்தில் ஆசார்ய விநோபா பாவேயின் சகோதரர் சிவாஜி மஹாராஜ பாவே என்கிறவர், ஸ்ரீமதாண்டவனைச் சந்தித்து ''சங்கர பாஷ்யத்தை'' ஹிந்தியில் மொழி பெயர்த்து வருவதை ப்ரஸ்தாபித்தார்.

மாஜி மாநில மந்திரி Dr. சௌத்ரியும் உடனிருந்தார்.

17-5-76. மத்திய பிரதேச மாநிலம். தேவாஸ் ஜில்லா தொகுதி M.L.A. வும்., முனிஸிபல் சேர்மன் தீராஜ் சிங்ஜீ லோலங்கி குடும்பத்துடன் ஸ்ரீமதாண்டவனே தெண்டன் சமர்ப்பித்தார்.

19-5-76. ஷாஜாபூர் தொகுதி M.L.A. ஸ்ரீமோகாஷி லக்ஷ்மீ நாராயண ஜையின் ஸ்ரீமதாண்டவனே தெண்டன் சமர்ப்பித்தார். மத்ய பிரதேசத்தில் 'மாட்சி' என்கிற இடம்.

20-5-76. ஷாஜாபூரில் M.L.A. ரமேஷ் டூபே சந்தித்தார்.

23-5-76. கரணவாஸ் பஞ்சாயத்துக் கட்டிடத்தில் ராஜ்காடு ஜில்லா M.L.A. குலாப் சிங் சந்தித்தது.

23-6-76. புது டெல்லியில் இராம கிருஷ்ணபுரம் ஆசிரமத்து ஸ்ரீவைகுண்ட நாதன் ஸன்னிதியில் தொழிலதிபர் S. R. பலோடியா சந்தித்தார்.

25-6-76. பத்திரிகையாளர்கள் சம் மேளனம் - டெல்லி பாதுகாச்சரமம், ஸ்ரீ மான்; டைம்ஸ் ஆப் இண்டியா ப்ரதான நிருபர் பேட்டி.

26-6-76. டெல்லி ஆசிரமம்; ஸ்ரீ S. ரங்கனுதன் M. P. ஸ்ரீமதாண்டவனே ஸேவித்தார்.

18-7-76. டெல்லி ஆசிரமம்: ரிஷி கேசத்தில் 14 வது சாதுர் மாஸ்யத்தின் போது வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து தர உறுதி தந்து ஸ்ரீமதாண்டவனே உத்திர பிரதேச கவர்னர் Dr. M. சென்னு ரெட்டி ஸேவித்தார். அவர் பூர்ணகும்ப மரியாதை யோடு வரவேற்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார்.

15-8-76. ரிஷிகேசம் பரத்மந்திரில் டெல்லி தோல் வியாபாரி நரோத்தம தாஸ் தனது குடும்பத்துடன் ஸ்ரீமதாண்ட வனே ஸேவித்தார்.

23-10-76. ஷாஜாபூர் ஜில்லா கலெக்டர் ஸ்ரீ S. லக்ஷ்மீநாராயணன், டெல்லி உயர்நீதி மன்றம் நீதிபதி கனம் B. C. மிச்ரா அவர்கள் ஸ்ரீமதாண்டவனே டெல்லி ஆசிரமத்தில் ஸேவித்தார்.

24-10-76. ஸ்ரீ G. பார்த்தசாரதி, முன்னாள் பாரதத் தற்காப்பு மந்திரி, இரயில்வே மந்திரி ஸ்ரீ கோபாலஸ்வாமி அய்யங்கார் குமாரர், டெல்லி ஆசிர மத்தில் ஸ்ரீமதாண்டவனே ஸேவித்தார்.

27-10-76. கும்பமேளாவிற்கு அலகா பாத் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த் தித்து உத்திரபிரதேச கவர்னர் Dr. சென்னு ரெட்டி டெல்லி ஆசிரமத்தில் ஸ்ரீமத் ஆண்டவனே ஸேவித்தார்.

2-12-76. டெல்லி டெலிவிஷன் நிலைய அதிகாரிகள் ஸ்ரீமதாண்டவனுடன் பேட்டி ரிகார்டிங் ஆகி ஒளி பரப்பப்பட்டது.

18-1-77 உத்திரபிரதேச நெடுஞ்சாலைத் துறை மந்திரி ஸ்ரீ S. பால்சிங் ஸ்ரீமதாண் டவனே ஸைகண்ட்ராபாத் (U.P.) P.W.D., ஆய்வு மாளிகையில் சந்தித்தார்.

3-3-77. மத்தியபிரதேசத்தில் ரெய்ப் பூருக்கு 16 கி.மீ தூரத்திலுள்ள ரீவாவில்

மஹாராஜா மார்த்தாண்ட சிங் ஸ்ரீமத் ஆண்டவனை சேவித்தார்.

20-4-77. ஆந்திரபிரதேச முன்னாள் போக்குவரத்து மந்திரி Dr. M. லக்ஷ்மி நரசையா (Temple) ஆல்வாலில் சந்தித்தார்.

24-4-77. ஆந்திரபிரதேச மந்திரி ஸ்ரீ நரசப்பா ஸைக்கண்ட்ராபாத் மீரட் ஹள்ளி ஆசிரமத்தில் ஸ்ரீமதாண்டவனை சேவித் தார்.

3-5-77. ஆந்திரபிரதேச அரசு முதல்வர் J. வெங்கல்ராவ் ஹிந்து அறநிலையத் துறை கமிஷனர் ஸ்ரீ புருஷோத்தம நாயுடுவுடன் மீரட்ஹள்ளி ஆசிரமத்திற்கு வந்து ஸ்ரீமத் ஆண்டவனை அரசு சார்பில் கௌரவிக்க ஸ்ரீமதாண்டவனை பிரார்த்தித்தார்கள்.

5-6-77. திருச்சானூரில் பாரத மக்கள் சபை (Indian Parliament) முன்னாள் தலைவர் (Speaker) ஸ்ரீ அநந்தசயனம் அய்யங்கார் ஸ்ரீமதாண்டவனை சேவித்தார்.

7-6-77. ஆந்திரபிரதேச அரசின் அதி காரிகள் மேல் திருப்பதி பாதுகாச்ரமத்தில் ஸ்ரீமதாண்டவனை கௌரவித்தனர். சொக்க ராவ்., எண்டௌமெண்ட் மந்திரி, புருஷோத்தம நாயுடு., கமிஷனர் அநந்த ராவ் முதலியார்., தேவஸ்தான நிர்வாக அதிகாரி, சஞ்சிவரெட்டி I.A.S. கலெக்டர் டாக்டர் லக்ஷ்மிநரசய்யா A. P. அரசு முன்னாள் மந்திரி., சர்மா., நிருபர் ஆந்திர பத்திரிகா முதலானோர் கூட இருந்தனர்.

28-6-77. டெல்லி தோல் வர்த்தக தொழிலதிபர் ஸ்ரீ நரோத்தமதாஸ் சென்னையில் சந்தித்தார்.

3-7-77. சென்னை பாரதிய வித்யா பவனில் சர்வமத நட்புறவு மஹா நாட்டில் சென்னை ஆளுநர் ப்ரபுதாஸ் பட்வாரி தலைமையில் சொற்பொழிவு.

19-9-77. சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ ப்ரபுதாஸ் பட்வாரி சென்னை ஆசிரமத் திற்கு வருகை தந்து ஸ்ரீமதாண்டவனை சேவித்தார்.

16-2-78 பாண்டிச்சேரியில் ஸ்ரீ பார்த்த சாரதி தலைமைச்செயலர் பாண்டி அரசு., ஸ்ரீ R. இராமானுஜம், டெபுடி கலெக்டர் எக்ஸைஸ் துறை, ஸ்ரீமதாண்டவனை அரசு சார்பில் வரவேற்றனர்.

23-2-79. வானமாமலை மடத்தில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்தபோது திருநெல்வேலி கலெக்டர் திரு ஷண்முகம் ஸ்ரீமதாண்டவனை சேவித்தார்.

7-4-79. சென்னை ஆளுநர் ஸ்ரீ ப்ரபுதாஸ் பட்வாரி மதுரையில் (T.V.S.) T. S. ஸ்ரீநிவாஸன் பங்களாவில் ஸ்ரீமதாண்டவனை தெண்டனிட்டார்.

இராமனுதபுரம் ராஜா ஸ்ரீ S. இராமனுத சேதுபதி அவர்களும் அன்றே ஸ்ரீமத் ஆண்டவனை தெண்டனிட்டார்.

14-1-80. சங்கீத வித்வான் மஹாராஜ புரம் ஸ்ரீ V. சந்தானம் ஸ்ரீமதாண்டவனை சேவித்து சங்கீதக்கச்சேரி செய்தார்.

ஸ்ரீ :

பாரதத்தின் பல பகுதிகளில் பொது வரவேற்புகள்

8-2-65. விழுப்புரம் மெய்ப்பொருள் அருள்நெறி மன்றத்தில் வரவேற்பு.

பெங்களூரில் வரவேற்பு

5-5-65. முதன் முதலாக பெங்களூர் பட்டிணப்ரவேசம். பெங்களூர் மேயர் ஸ்ரீ K.M. நாகண்ணு முன்னிலையில், உதவிக் கமிஷனர் B. S. ஹனுமான் I. A. S. ஸ்ரீ S. K. வெங்கடரங்க அய்யங்கார், ஸ்ரீ T. S. ராஜம், சேர்மன் T.V.S. ஸ்ரீ C. T. கோபாலய்யங்கார், ஸ்ரீ M.P.L. சாஸ்திரி முதலானோர் உடனிருக்க, மல்லேச்வரம் 5வது கிராஸ்ஸில் ஸ்ரீமதாண்டவனுக்குப் பூர்ணகும்ப மரியாதைகளோடு மஹத்தான வரவேற்பு.

29-5-65. பெங்களூர் சேஷாத்திரி ரோடு, ஹெப்பார் ஸ்ரீ வைஷ்ணவ சபாவில் ஸ்ரீமதாண்டவனே வரவேற்று அவரைக் கொண்டு கல்யாணமண்டப திறப்புவிழா நடத்தியது.

24-6-65. ஸ்ரீமதாண்டவன் யாத்ரையில் ஹாஸன் எழுந்தருளியிருந்தபோது நகரசபை தலைவர் P.S. ராஜு பொது மக்கள் சார்பில் வரவேற்பளித்தார்.

1-10-65. மைசூர் பொது ஜனங்கள் சார்பில் நகரசபை தலைவர் ஸ்ரீ வெங்கட லிங்கய்யா, கமிஷனர் விச்வனாத், அவரது துணைக்கமிஷனர் ஸ்ரீ லிங்கய்யா இவர்கள் வரவேற்புரை வழங்கினர்.

மைசூரில் அரசாங்க வரவேற்பு

8-10-65. தலைமைச் செயலர் M. S. நாராயணசாமியுடன் மைசூர் மஹாராஜா ஸ்ரீ ஜயசாமராஜ வாடயார் பஹதூர் அவர்கள் இராஜாங்க முதல் மரியாதைகளோடு அரண்மனையில் ஸ்ரீமதாண்டவனே வரவேற்றார்.

விலையுயர்ந்த இரண்டு சால்வைகளும், ஜரிகை 10×6 வேஷ்டியும், ரொக்கமாய் ரூபாய் நூற்றெட்டும் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸம்பாவனை ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீமதாண்டவனே மஹாராஜாவின்தாயார் செம்பருஞ்சம்மணி தேவியாரும், மஹாராஜாவின் துணைவி ராஜபத்னி திரிபுர சுந்தரம்மணி தேவியாரும், யுவராஜா ஸ்ரீ கண்டதத்த நரசிம்ம வாடையார், ராஜாவின் குமாரத்திகள் காயத்ரி, சரஸ்வதி, சாவித்ரி முதலானோர் தெண்டன் சமர்ப்பித்து அனுக்ரஹம் பெற்றுக் கொண்டார்கள். பல பிரமுகர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஏராளமானவர்கள் கூடியிருந்தார்கள். மைசூர் ராஜாவிற்கும் யுவராஜாவிற்கும் ஸ்ரீ T. S. ராஜத்தைக் கொண்டு பொன்னாடைகள் போர்த்தி அனுக்ரஹித்தாயிற்று. உத்யோகஸ்தர்களுக்கு ஸம்பாவனையும் செய்தாயிற்று.

24-11-65. மைசூர் அரசு முதல்வர் ஸ்ரீ நிஜலிங்கப்பா அவர்களின் உத்திரவுப்படி யானைக்குட்டி ஒன்றை ஸ்ரீமத் ஆண்டவனுக்கு அளித்தது. கஜபுஷ்கரிணியில் அதைக் குளிப்பாட்டி திருவேங்கடமுடையான் விச்வரூப சேவைக்குப் பின் ஸ்ரீமதாண்டவன் அதை பெருமகிழ்ச்சியுடன் அங்கீகரித்தார்.

15-1-66. பாரதப் பிரதமர் ஸ்ரீ லால் பஹதூர் சாஸ்திரி டாஷ்கண்டில் அகால மரணமடைந்ததின் காரணமாக, அவரது மறைவு பற்றி ஓர் இரங்கல் செய்தியை

வடமொழியில் ஸ்ரீமதாண்டவன் அருளியதை பெங்களூர் ஆகாசவாணி ஏழு நிமிஷ நேரம் ஒலிபரப்பியது.

17-1-66. பெங்களூர் ஹெப்பார் ஸ்ரீ வைஷ்ணவ சபா கல்யாணமண்டப மேல் மாடித் திறப்பு விழா ஸ்ரீமதாண்டவன் தலைமையில் நடந்தது. 29-5-65-ல் இதன் முதல் திறப்பு விழா ஸ்ரீமதாண்டவன் தான் நடத்தித்தந்தது.

திருக்குடந்தையில் வரலாறு காணுத வரவேற்பு

13-6-66. தூய வெள்ளைத் திருப்பரிவட்டம் துறந்து துரீயாச்ரமத்தில் தூய்மையான காவித் திருப்பரிவட்டத்துடன் நல் வேதக் கொழுந்தண்டைத் திருக்கரத்தில் ஏந்தி, தாம் அவதரித்த புண்ணிய பூமி தன்னில் பொன்னடி சாத்தின நாள். உலகம் தழைக்க, உயர் குருவின் கோலத்தில் அழகன் அமுதனை ஆசாளிக்க ஓடி வந்த நன்னாள். தவழ்ந்த மண்ணில் தபஸ்வியாய் திருவடி பதித்த புனித நாள். வேதியனாய் நல்வேதமோதிய ஸன்னிதியில் வந்தனியனாய் வருகை தந்த நாள். வானத்தவர் வாழ்த்தவும், வையத்தவர் வணங்கவும், வாளிப்பான வடிவழகுடன் முக்கோல் பிடித்து முழங்கி வந்த பொன்னாள். பாஸ்கரத் தலத்தில் சமயக் கதிர்களை அள்ளி வீசும் ஆதவனது ப்ரதிபையோடு பவனி வந்த பொன்னாள் என்றெல்லாம் பரணி பாடுமளவிற்கு மஹத்தான வரவேற்பைத் திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவனுக்கு அளித்தது. பெருநிலக்கிழார் கபிஸ்தலம் திரு G. கருப்பையா மூப்பனார் அவர்களைத் தலைவராகவும், சிக்கா என்கிற திரு ரங்கஸ்வாமி, வக்கீல் திரு K. S. ராமஸ்வாமி அய்யங்கார், திரு K. நரசிம்ம அய்யங்கார் துணைத் தலைவர்களாகவும், கும்பகோணம் ட்ரக் ஸ்டோர்ஸ் N. தாசரதி., (கால்டெக்ஸ்) R. சீனிவாசராகவன், ஹிந்து நிருபர் N. R. இராமானுஜம், டாக்டர் R. மஹாலிங்கய்யர் முதலியோரைச் செயலர்களாகவும், மற்றும் 69 பேர்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட, பல துறைப் பெரியார்கள் அடங்கிய வரவேற்புக்குழு ஸ்ரீமதாண்டவனை நகரத்தின் எல்லையில் பூர்ணகும்பத்தோடும் எல்லா மரியாதைகளோடும் வரவேற்பு அளித்தது.

ஸ்ரீமதாண்டவன் பிறகு ஊர்வலமாய் நகரத்தின் முக்கிய வீதிகளின் வழியே அழைத்துச் செல்லப்பட்டு காமாக்ஷி ஜோஸ்யர் தெரு ஸ்ரீ மாதவராயர் சத்திரத்தில் எழுந்தருளப் பண்ணினார்கள்.

வரவேற்புக்கான செலவுகளை ஏற்றது பிரபல வாசனத்ரவ்ய வியாபாரம் T.S.R. கம்பெனி உரிமையாளர் திரு T.R. இராகவன் என்கிற குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் வரவேற்பு

26-4-66. ஸ்ரீமதாண்டவனுக அவதாரம் செய்த பிறகு கூடலழகன் உறையும் மதுரையம்பதிக்கு அன்பர்கள் அகங்குழைந்து அருளிப் பாடிட்டழைக்க, வாழ்த்தொலி வானைப் பிளக்க, வண்ணமுள்ள தோரணங்கள் வீதிகளுக்கு அழகூட்ட, பட்டொளி வீசும் விளக்குகள் பகலை இரவாக்க, படபடக்கும் பட்டாசுகள், பூக்கள் சிதற வெடித்துப் பாதைகளிலெல்லாம் பரந்து கிடக்க, வேத வல்லார்களின் வேத ஒலி பின்னணியில் பிணைந்துவர, முடிமன்னனது பவனியைப் பழிக்கும் சதுரங்க சேனையின் ஒரு பகுதி முக்கோல் பிடித்த முனிவன் இவன் முன்னே ஊர்ந்துபோக, கட்டுப்பாடுடைய தொண்டர் குழு ஜனத்திரளை அமைதியுடன் ஒழுங்குபடுத்த, ஸ்ரீமத் ஆண்டவனை ஊர்வலமாய் கோலாகலத்தோடும், நாதசுர இசையோடும், தாள வாத்யங்களோடும், சகல மரியாதைகளோடும் ரேஸ்கோர்ஸ் ரோடு- கோகலே ரோடு- அழகர் கோயில் ரோடு- கீழ்பாலம்- யானைக்கால் தெரு- திருமலை ராயர் படித்துறை- லக்ஷ்மிநாராயண புது அக்ரஹாரம்- பேச்சியம்மன் படித்துறைத் தெரு, கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, வடம்போக்கித் தெரு - கூட்ஸ் ஷெட் தெரு - இத்தெருக்களின் வழியே எழுந்தருளப்பண்ணி மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் வரவேற்று, மதுரையின் மகத்தான தொழிலதிபர் ஸ்ரீ T. S. ராஜம் தலைமையில் ஸ்ரீ பண்டிட் இலக்குமணச் சார் வடமொழியிலும், திரு அழகுசுந்தரம் செட்டியார் தமிழிலும் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

16-5-66. மதுரையிலிருந்து திருநெல் வேலி போகும் சாலையில் எட்டய புரத்தில் ஸ்ரீமதாண்டவனே எட்டயபுரம் மஹாராஜா தனது அரண்மனையில் சதுரங்க அணிவகுப்போடு அரண்மனை வரவேற்பு கொடுத்தது. ராஜா ஸ்ரீ ராஜ ஜகவீர ராமமுத்து குமார வெங்கடேச்வர எட்டப்ப நாயக்கரவர்கள் தன் குமாரர்களோடு ஸ்ரீமதாண்டவனே ஸேவித்து அருளாசி பெற்றார்கள்.

7-6-66 திருக்குறுங்குடி மாதர் சங்கம் ஸ்ரீமதாண்டவனுக்கு மஹத்தான வர வேற்பளித்தது. மாதர் சங்கத் தலைவி திருமதி பங்கஜம் ராஜம் முன்னிலையில், பல ப்ரமுகர்கள் புடை சூழ திரு ஸ்ரீநிவாஸய்யங்கார் வரவேற்புரை வாசித் தளித்தார்கள். பொது ஜனங்கள் சார்பில் 6-6-66 அன்று வரவேற்பும் மிகவும் சிறப் பாய் அமைந்தது.

25-9-66. கூடலழகர் ஸன்னிதியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்வாமி தேசிகன் ஸன்னிதியில் வக்கீல் இராமஸ்வாமி அய்யங்கார் தலைமையில் செயலர் ஸ்ரீ N. இராமஸ்வாமி வரவேற்புரை ஸ்ரீமத் ஆண்டவனுக்கு வாசித்தளித்தார்.

29-6-66. T. V. S. நகரில் திரு T. S. திருஷ்ணு தலைமையில் வரவேற்பு.

4-10-66. மதுரை தல்லாகுளம் சத்சபை காரியதரிசி வாஞ்சிநாதய்யர் சபைக்கு ஸ்ரீமதாண்டவனே வரவேற்றது.

6-10-66. மதுரை தானப்ப முதலித் தெரு மங்கள நிவாஸ் அன்பர்கள் ஸ்ரீமத் ஆண்டவனுக்குப் பொது வரவேற்பளித்து சேதுபதி உயர்நிலைப் பள்ளி ராமண்ணு ஹாலில் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தார்கள்.

3-11-66. ஸ்ரீமதாண்டவனுக்கு இராம நாதபுரம் சேஷாத்ரி மெமோரியல் ஹாலில் இராமனுதபுரம் திவான் P. S. இலக்குமண ராவ், வக்கீல், ஆராவமுதய்யங்கார், வாத்யார் இராமானுஜாச்சாரியர் முதலா னோர் வரவேற்பளித்தார்கள்.

7-12-66. கோயம்புத்தூர் மேட்டுப் பாளையம் ரோடில் T. V. S. லாரி ஆபீஸை ஸ்ரீமதாண்டவன் திறந்து வைத்து அனுக்ர ஹித்தார். ஸ்ரீ T. S. ராஜம் உடனிருக்க, T. V. S. யூனியன் தலைவர் பொம்மையா முதலானோரோடு வரவேற்பு.

திருவனந்தபுரத்தில் அரசு வரவேற்பு

19-2-67. அன்பர்கள் திரளும், சத்ர சாமரங்கள், பஞ்ச வாத்யங்கள் முன்செல்ல ஊர்வலமாய் ஸ்ரீமதாண்டவனே எழுந்தருளப் பண்ணி பூர்ணகும்பம் சமர்ப்பித்து மேல ராஜ வீதியிலுள்ள வேம்பய்யர் மஹாலில் வரவேற்பளித்தார்கள்.

அரசாங்கத்தின் சார்பில் திருவாளர்கள் E. N. S. இராகவாச்சாரியர். I. C. S. (ஆளுநரின் தலைமைச் செயலர், கேரள அரசு). R. கோபாலஸ்வாமி அய்யங்கார். I.A.S. நிதி அமைச்சரவைச் செயலர், K. நாராயண அய்யங்கார்., I.A.S. உணவுச் செயலர், தென்பிரை கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் I.A.A.S. (துணை கணக்கு ஆய்வு ஜெனரல்), பொது மக்கள்சார்பில் T. V. S. மானேஜர் சேஷன், யஜுர் கனபாடி ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய அய்யர், ருக்வேத கனபாடி ப்ரஹ்மஸ்ரீ கோபாலய்யர், சாம சாகை வாத்யார் சேஷாச்சாரியர் முதலா னோரும் கூட இருக்க வித்வான் ஸ்ரீநிவாஸாச்சாரியர் வரவேற்புரை வாசித்து அளித்தார்.

22-2-67. கேரள மஹாராஜா ஸ்ரீமத் ஆண்டவனே பக்தி புரஸ்ஸரமாய் அழைப்பு விடுத்து, ஸ்வாமியை பத்மநாபன் ஸன்னிதி நாடகசாலை மண்டபத்தில் நவராத்திரி அரங்கில் எழுந்தருளப்பண்ணி ஒரு வெள்ளித்தட்டில் உயர்ந்த தகடியும் (பட்டாடை) ரொக்கமாய் ரூபாய் முன் னூற்று ஐம்பதையும் (Rs. 350/-) மரி யாதையோடு சமர்ப்பித்து சேவித்து அரு ளாசி பெற்றார்.

7-4-67. ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று முடிவு எடுத்த கமிட்டியாரின் விருப்பத்திற் கிணங்க ஸ்ரீமதாண்டவன் மதுரையிலிருந்து

வேகமாக திருச்சி எழுந்தருளும்போது பொதுஜனங்கள் சார்பில் திருச்சியில் ஒரு கோலாகலமான வரவேற்பு அளிக்கப் பட்டது. அதை T. V. S. ரவீந்த்ரன், Dr. V. K. ரங்கனதனும் முன்னிருந்து நடத்திக் கொடுத்தார்கள். இராஜன் ட்ரான்ஸ் போர்ட்ஸ் ஸ்ரீ மூக்கப்பிள்ளையும் இந்த வரவேற்பு விழாவில் சீரிய பணியாற்றினர்.

திருச்சி ஜங்ஷன் நாஷனல் காலேஜ் முகப்பிலிருந்து ராஜன் ட்ரான்ஸ் போர்ட் வாசல் - ஸதர்ன் ரோடுவேஸ் - அம்மா மண்டபம் வரை வீதிகள் தோரணங் களாலும், அலங்கார வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டு திருச்சி ஒரு விழாக் கோலம் பூண்டது. அலங்கார வளைவுகளில் கீழ்க்கண்ட வாக்கியங்கள் பொறிக்கப் பட்டிருந்தன.

''ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் திருவடிகளே சரணம்''

''என் சரண் - என் கண்ணன்- என்னையாளுடை அப்பனே வருக''

''அருளிச்செயலால் அனைவரும் ஈடேற வந்த அண்ணலே வருக''

''ஆராவமுதாழ்வான் திருவடிகளே சரணம்''

''கிளரொளி மணிமுடி குடந்தையின் கோவலனே வருக''

''மாறன் பணித்த தமிழ் மறைக்கு மலர்ச்சி கொடுத்த மன்னனே வருக''

''என்னையும் என்குடி முழுதும் ஆட் கொள்ள வந்த வள்ளலே வருக''

மாலை 6 மணிக்கு ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத் துறையில் வரவேற்பு விழாவில் வடமொழியிலும் தமிழிலும் வரவேற் புரை வாசித்தளிக்கப் பட்டது.

18-4-67. ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் 60 வது திருநக்ஷத்ர நிறைவு விழாவை யொட்டி ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர புஸ்தக வெளியீட்டு விழாவில் ஸ்ரீமதாண்டவன் கலந்து கொண்டார்.

25-6-67. ஸ்ரீரங்கம் ஸ்ரீ வேதாந்த தேசிக ஸ்தோத்ரபாட கோஷ்டியாரால் நடத்தப்பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவு விழா ஸ்ரீமதாண்டவன் தலைமை யில் ஸ்ரீரங்கத்தில் நடந்தது.

20-9-67. தஞ்சை ஜில்லா மன்னார்குடி அக்ரஹாரம் மைனர் A. ஸ்ரீநிவாஸ அய்யங் கார் நடத்தி வரும் வேதபாட சாலைக்கு எழுந்தருளுதல். அன்றிரவு கோட்டூர் இரங்கசாமி முதலியார் எஸ்டேட்டுக்கு எழுந்தருளி கோவிந்த பட்டாபிஷேகம் நடத்தி 15 நாள் உபந்யாஸ பூர்த்தி செய் தருளியது. ஸ்ரீ கோ. பாலக்ருஷ்ண முதலி யார் உபசரித்தார்.

6-11-67. திருக்குடந்தை நகரப்பள்ளி யில் அதன் கரஸ்பாண்டெண்டண்ட் மஹாலிங்கய்யர் தலைமையில் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு வரவேற்பளிக்கப் பட்டது.

மாலை ஸ்ரீ ராமா ஆரம்ப பாட சாலைக்குப் பொன்னடி சாத்தினர். அதன் நிர்வாஹி சிங்கனூர் ஸ்ரீ ராமாமிர்தாச் சாரியர் பூர்ணகும்ப மரியாதையோடு வரவேற்றார்.

ஸ்ரீமதாண்டவன் அந்தப் பள்ளியின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது நம்மாண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனது திவ்ய கடாக்ஷத்திற்கு பரிபூர்ண பாத்ரமாய் விளங்கிய ஸ்ரீ உ.வே. V. K. இராமானுஜாச்சாரியரால் ஆரம் பிக்கப்பட்ட பள்ளி, கைராசியும் உடையது என்று அருளாசி வழங்கினர்.

25-12-67. சென்னை லாயிட்ஸ் ரோடு நல்வாழ்வு கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு வரவேற்பு. உயர்நீதி மன்ற ஜட்ஜுகள் ஸ்ரீ ராமமூர்த்தி, ஸ்ரீ கைலாசம் இவர்களோடு வக்கீல்கள் ஸ்ரீ K.S. தேசிகன், ஸ்ரீ R. கோபாலஸ்வாமி அய்யங்கார் முதலானோர் வரவேற்றனர். மண்ட பத்தில் திருப்பாவை உபன்யாசம்.

8-1-68. சென்னை விசிஷ்டாத்வைத ஸபை 12வது ஆண்டு நிறைவு விழாவில் ஸ்ரீமத் ஆண்டவன் கலந்து கொள்ள எழுந் தருளியபோது ஸபையின் கௌரவச் செயலாளர் புலவனூர், S. பார்த்தசாரதி அய்யங்காரும் ஸ்ரீ திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்காரும் வரவேற்றனர். ''ஏற்ற கலங்கள்'' என்கிற திருப்பாவை பாசுரம் ஸாதித்தார்.



மதுரையில்





திருக்குடந்தையில்
அமுதனுக்களித்த கஜேந்த்ரனுடன்



திருப்பதியில்
பத்ரியாத்திரைக்குப்பின்
மங்களாசாஸனம்



திருநீர்மலையில் வரவேற்பு



சேலத்தில்



பெங்களூரில்

ர உபன்யாஸ துவக்கவுரை
ர்னர் ஸ்ரீ G. S. பதக்



திருக்குடந்தையில்





திருக்குடந்தையில்



கபிஸ்தலம் பெருநிலக்கிழார்
ஸ்ரீ G.K. மூப்பனர் வரவேற்புரை



திருக்குடந்தை
அய்யங்கார் தெரு வரவேற்பு



பெங்களூர் வரவேற்பில்



மைசூரில் அரசு வரவேற்பு



பெங்களூர் விசிஷ்டாத்வைத ஸபா
அடிக்கல் நாட்டு விழாவில்
ஸ்ரீ வீரேந்திர பாட்டிலுடன்
கர்நாடக அரசு முதல் அமைச்சர்)



பெங்களூர், மேயோ ஹாலில் அரசாங்க வரவேற்பு



இராஜ்பவனில் ஸ்ரீ பதக் துணைவியார் வரவேற்பு

7-4-68. மாலே மயிலே விவேகானந்தா கல்லூரிக்கெழுந்தருளி வால்மீகி தினத்தைக் கொண்டாடி வால்மீகியின் பெருமை யினைப் பரக்க அருளியது.

13-4-68. சென்னை திருவல்லிக்கேணி பண்டாபீஸ் கல்யாண மண்டபத்தில் நடந்த வித்வத் ஸதஸ்ஸில் தலைமை வஹித்தார் ஸ்ரீமதாண்டவன்.

17-4-68. சென்னை ராயப்பேட்டை ஸ்ரீபுரத்தில் நடந்த ஸ்ரீமத் ராமாயண தொடர் சொற்பொழிவை யொட்டி ஸ்ரீ ராமபட்டாபிஷேக வைபவத்தைக் கொண்டாடி ஸ்ரீமதாண்டவனைக் கௌர வித்தார்கள். அதுசமயம் ஸ்ரீ வேதாந்த தேசிகன் 700 வது நூற்றாண்டு விழா மத்யக் குழுவினர் வெள்ளி மணி (கண்டா) எழுந்தருளப் பண்ணியது குறிப் பிடத் தக்கது.

6-5-68. மதராஸ் பரஸ்பரஸஹாய நிதி ஆபீஸில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வராஹாவதாரம் என்கிற தலைப்பில்உபன்யாஸம் செய்தருளியது.

13-5-68. சென்னை ராயப்பேட்டை லலிதாபுரம் கௌடியாமட் எதிரிலுள்ள ஸ்ரீ சைதன்யாமிஷின் ஆரம்பப் பள்ளிக்கு எழுந்தருளி அதை ஸ்ரீமதாண்டவன் ஆரம்பித்து வைத்து நல்லுரை வழங் கினார். முன்னாள் போலீஸ் கமிஷனர் ஸ்ரீ பார்த்தசாரதி அய்யங்கார், ஸ்ரீ T. S. ராஜம் இவர்கள் கூட இருந்தனர்.

27-6-68. வட ஆற்காடு சித்தூர் இராம விலாஸ் சபையில் வரவேற்பு.

5-7-68. பெங்களூர் கண்டோண் மெண்டில் பக்தர்களின் அமோக வர வேற்பு. ஸ்ரீ காடி செல்வராய செட்டியார், ஸ்ரீ கோபால் செட்டியார், ஸ்ரீ பார்த்த சாரதி அய்யங்கார், சுபேதார் ரங்கமணி இவர்கள் முக்யஸ்தர்கள்.

பெங்களூர் மேயோ ஹால் ஸர்க்கிளில் மஹத்தான வரவேற்பு

6-7-68 கர்நாடக அரசு சார்பில் ஸ்ரீ B.D. ஜாட்டி, தேவராஜ் அர்ஸ், புட்டுஸ்வாமி, கௌஜல்கி கலெக்டர் சென்னராஜ், தொழி லதிபர் T. S. ராஜம், டாம்கோ ரங்காச் சாரியர்., அட்வகேட் K. ஸ்ரீநிவாஸன், டாக்டர் ராமஅய்யங்கார், பின்னி ராம ஸ்வாமி அய்யங்கார், S. M. கிருஷ்ணமாச் சாரியர், N.N. அய்யங்கார், வெங்கட்டரங்க அய்யங்கார் இன்னும் பல அன்பர்கள் சேர்ந்த வரவேற்புக் குழு மேயோ ஹால் ஸர்க்கிளில் ஸ்ரீமதாண்டவனை வரவேற்று, பெரிய ஜன சமுத்ரத்தின் நடுவே மேயோ-ஹால், காந்தி ரோடு - க்வீன் சர்க்கிள்; கப்பன் பார்க் ஸர்க்கிள்; இராஜ்பவன்; குமரர் பார்க்; சேஷாத்ரி புரம்; Dr. சம்பகி ரோடு, 11வது க்ராஸ்; ராமபஜனை ஸபா; 6-வது மெயின் ரோடு வழியாக பதங்கர் பங்களாவிற்கு ஊர்வல மாய் அழைத்துச் சென்றது.

25-7-68. பெங்களூர் மல்லேச்வரம் கிழக்கு பார்க் ரோடிலுள்ள ஸ்ரீ ராம மந்திரத்தில் பொது ஜன வரவேற்பு. கீதா ப்ரவசனத் தொடக்கம். மாண்புமிகு கர்நாடக ஆளுநர் ஸ்ரீ G. S. பதக் தொடக்கவுரை நிகழ்த்தவும், ஷிமோகா பத்ரிநாராயணன்; H. K. N. ஆச்சார்யா; வெங்கடரங்க அய்யங்கார் வரவேற்புரை வழங்கவும் ஸ்ரீமதாண்டவன் கீதையைப் பற்றிய தொடக்கவுரை நிகழ்த்தியருளி னார்.

25-8-68. பெங்களூர் மல்லேச்வரத்தில் இராம மந்திரத்தில் ஸ்ரீ மஹாபாரத உபந்யாஸத்திற்காக ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு.

23-9-68 முதல் 2-10-68 வரை பெங்களூர் சேஷாத்ரி ரோடு 22 நெம்பர் ஹெப்பார் ஸ்ரீவைஷ்ணவ ஸபாவில் ''சாந்தி பவன்'' அரங்கில் ஸ்வாமி தேசிகனது 7 வது நூற்றாண்டு மஹோத்ஸவத்தில் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சபையோரால் வரவேற் கப்பட்டு பிரதி தினமும் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி அன்வயித்தருளினார்.

ஸ்ரீ A. R. பத்ரி நாராயணனைத் தலைவ ராகக் கொண்ட இச்சபை ஒரு விசேஷ மலர் வெளியிட்டதோடு, வேதபாராயண திவ்யப்ரபந்த, சாந்த காலக்ஷேபகோஷ்டி களுக்குத் தக்க சம்பாவனை, ததீயா ராதனங்களோடு, பல வித்வான்களுடைய

உபன்யாசங்களும், ஸ்திரீ புருஷ சங்கீத வித்வான்களின் இன்னிசைகளும் கலந்த மணத்தோடு பெரு விழாவினைக் கொண்டாடி பெருமகிழ்ச்சி கொண்டது, ஸ்ரீமத் ஆண்டவனுடைய ஸான்னித்யமும் ஸௌலப்யமும் கொண்டேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 5000 ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருங்கே ஒரே சமயத்தில் எழுந்தருளி அவரவர்கள் தங்களது தகுதிக்கேற்ப அன்வயித்துப் பொலிந்து நின்ற பொன் விழா.

இந்த விழா நிகழ்ச்சி முழுவதையும், ஸ்ரீமதாண்டவனது அருளாசிகளையும் பெங்களூர் ஆகாசவாணி அவ்வப்போது ஒலி பரப்பியது.

27-10-68. மாலை பெங்களூர் ரெஸிடென்ஸி ரோடு பாரதீய வித்யா பவனத்தில் மைசூர் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ கோபீ வல்லபய்யங்கார் தலைமையில் தொடங்கிய கீதா வகுப்புகளுக்கு ஸ்ரீமத் ஆண்டவன் ஆசியுரை நல்கினர்.

12-1-69. பெங்களூர் இராஜாஜிநகர் ஸ்ரீவைஷ்ணவ சபையில் தலைவர் S. M. கிருஷ்ணமாச்சாரியர் முன்னிலையில் அதன் முதலாண்டு நிறைவு விழாவை ஸ்ரீமத் ஆண்டவன் துவக்கி வைத்தார்.

12-1-69. ஜயநகர் ஸ்ரீ ராமாஞ்ஜனேய மண்டலாபிஷேக வைபவத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் பங்கு கொண்டார்.

30-1-69. இரண்டாவது முறையாக ஸ்ரீமதாண்டவன் மைசூரில் பட்டிணபிரவேசம் செய்தாயிற்று. அரண்மனைக்குச் சொந்தமான மூன்று கோவில்களின் மரியாதைகளோடும் அரண்மனை அதிகாரிகள் ஸ்ரீமத் ஆண்டவனை வரவேற்றனர். அரண்மனை வாயிலிலிருந்து, A. கிளாக்டவர் ஸ்குயர்; பழைய மைசூர் பாங்க் ரோடு, நியசாஜ் ரோடு, சரஸ்வதி இராம விலாஸ் அக்ரஹாரம், நாராயண சாஸ்திரி ரோடு, டபிள் ரோடு வழியாக சரஸ்வதிபுரம் ஸ்ரீவைஷ்ணவ சபை வரை ஊர்வலம்.

2-2-69. மைசூர் வித்யாரண்யபுரம் நமது ஆசிரமத்தில் ஸ்ரீமத் மாசி புஷ்ய மஹோத்சவம்.

22-2-69. கர்நாடகா-ஹாஸன் அடுத்துள்ள பேலூரில் ஸ்ரீவைஷ்ணவ சபாவில் கோலாகலமான வரவேற்பு. P. S. கஸ்தூரியும், ஸ்ரீநிவாஸ ராமானுஜ தீக்ஷிதரும் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

24-2-69. கர்நாடகா - சிக்மகளூரில் முனிஸிபல் ஹாலில் 6 நாட்கள் சொற்பொழிவு ஸ்ரீமதாண்டவன் நடத்தினர். ஸ்ரீமதாண்டவன் சிக்மகளூர் ப்ராஹ்மண சபை கல்யாண மண்டபத்தில் எம்பெருமானர் படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவு அருளினர்.

3-3-69. சக்கரேபட்டிணம் கேசவ - ரங்கனுதன் தேவஸ்தானத்தில் வரவேற்பு. ஸ்ரீமதாண்டவன் அவ்வூரின் பெருமையைப் பற்றிப் பேசி அவ்வூர் அரசன் உலகில் எல்லோரையும் ஏகாதசி வ்ரதம் அனுஷ்டிக்க வைத்து நரகத்திற்கு ஆளில்லாமல் செய்தான் என்று அருளினர்.

4-3-69. கடூர் ப்ராஹ்மண சபை வரவேற்பு.

4-3-69. கர்நாடகத்தில் ஷிமோகாவில் கோலாகலமான வரவேற்பு. நகரத்தந்தை, கௌன்சிலர்கள், M.L.A.க்கள் வரவேற்பு. விச்வஹிந்து பரிஷத், மத்வ, சங்கர சபைகள், க்ருபா - உப்பார் சபைகள், வித்யார்த்தி பரிஷத், ஹிந்து மஹாசபை, கேஸரீயுவக சங்கம், ஜனசங்க லக்ஷ்மீ நாராயண கோயில் கன்வீனர்கள் விஸ்வேச்வர சமிதி - விச்வகர்ம சபா - சோமக்ஷத்ரிய நயன சபை, இவர்களது தலைவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

12-3-69. கர்நாடகத்திலுள்ள பத்ராவதி ஜில்லாவில் தங்கிலி என்கிற கிராமம் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்திற்கு மிக உகப்பான திவ்யதேசம். சிரவணத்வாதசி, ஏகாதசி பாரணை இவைகளுக்கு 3 நாள் தங்கிய இடம். கிராமத்து ஜனங்களது ஏகோபித்த ஆதித்யமும், வரவேற்பும், வேதாவதி நதியும் ஸ்ரீமதாண்டவனை மிகக் கவர்ந்தன.

17-3-69. கர்நாடகா திப்டூர் ராம மந்திரத்தில் வரவேற்பு.

4-6-69. பெங்களூர் இராஜாஜி நகரில் ஸம்ஸ்க்ருத ரிஸர்ச் இன்ஸ்ட்டிடியூட் கட்டிட அஸ்திவாரக்கல் நாட்டு விழா. அஸ்திவாரக்கல்லை ஸ்ரீ மதாண்டவன் கர்நாட அரசு முதல்வர் ஸ்ரீ வீரேந்த்ர பாடீல் தலைமையில் நாட்டினர்.

21-9-69. ஸ்ரீ N. கிருஷ்ணன், (Managing Director International Instruments Ltd.) தன் சொந்த சிலவில் ஸ்ரீமதாண்டவனை ஸ்ரீ வைஷ்ணவ சபாவில் வரவேற்று 6 வது சாதுர்மாஸ்ய உத்தான மஹோத்சவத்தை நடத்திக் கொடுத்தார்.

7-11-69. மைசூர் சரஸ்வதிபுரம் ஸ்ரீ வைஷ்ணவ சபாவில் வரவேற்று 5 நாட்கள் ஸ்ரீமதாண்டவனை ஆராதித்தனர்.

7-4-70. மன்னர்குடி முதல் தெரு அக்ரஹாரம் அண்ணஸ்வாமி அய்யங்கார் வித்வத் சபையில் வரவேற்கப்பட்டு வித்வத் சபையை உபக்ரமித்து வைத்தார்.

21-12-70 பெங்களூர் ஜயநகரில் உள்ள குசலாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற காஞ்சி காமகோடி வேத சம்மேளன சமிதியில் ஸ்ரீமதாண்டவன் வரவேற்கப் பட்டார். ஸ்ரீமதாண்டவன் ''வேத மஹிமை'' என்கிற தலைப்பில் அருமையானதொரு உபந்யாசம் நிகழ்த்தி எல்லோரையும் பரவசப் படுத்தினர்.

10-1-71. பெங்களூர் ஸ்ரீரங்கமன்னர் ஆண்டாள் ஸன்னிதி மஹா மண்டப கட்டிட நிதிக்காக கமிட்டியார் வெளியிட்ட சிறப்பு மலர்(Souvenir) வெளியீட்டு விழா பெங்களூரில் ஜயநகர் ஆசிரம கல்யாண மண்டபத்தில் நடை பெற்றது. அன்று திருமதி சௌந்த்ரா கைலாசம் வந்திருந்தார்கள். முதல் பிரதியை ஸ்ரீமதாண்டவன், ஆலய நிர்வாகக் குழுத் தலைவர் ஸ்ரீ T.S. ராஜத்திடம் வழங்கினர்.

4-6-71. பெங்களூர் இராஜாஜி நகர் ஸ்ரீவைஷ்ணவ சபையின் ஆதரவில் ஒரு பாடசாலை, கல்யாணமண்டபம் இவைகளுக்கு ஸ்ரீமதாண்டவன் அஸ்திவாரக் கல் நாட்டினர்.

10-6-71. ஜயநகரில் இருக்கும் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஸன்னிதியில் ஆகம சில்ப சதஸ்ஸில் காஞ்சி காமகோடி புதுப் பெரியவாள் அவர்கள் தலைமையில் ஸ்ரீம தாண்டவன் அன்வயித்து உபந்யஸித்தா யிற்று. திருமேனி ஜ்வரத்தோடு எழுந் தருளியாயிற்று.

14-11-71. மைசூர் ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளியிருந்தபோது பரகாலமடம் ஸ்வாமியும் மைசூரிலிருந்து எழுந்தருளினர். இருவருக்கும் மஹத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீமதாண்டவன் தலைமை வகித்திட ஸ்ரீபரகாலமடம் ஸ்வாமி பெங்களூர் ஸ்ரீ N. அனந்தரங்காச்சாரியர் கன்னடத்தில் அச்சிட்ட தயாசதகத்தையும், ஸ்ரீ க்ருஷ்ணய்யங்கார் கன்னடத்தில் அச்சிட்ட ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸகஸ்ரநாமத்தையும் வெளியிட்டருளினர்.

4-2-72. சேலம் கோட்டை ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி ஸன்னிதியில் எம்பெருமான் கண்ணுடி அறைக்கு அஸ்திவாரக்கல் ஸ்ரீமதாண்டவன் நாட்டினர்.

7-72. சென்னை ஹால்ஸ்ரோடு ஸ்ரீ R. சீனிவாஸய்யங்கார் திருமாளிகையில் ஸ்ரீமதாண்டவனுக்கு மஹத்தான வரவேற்பு. அவரது மைத்துனன்மார்கள் கூடவே இருந்தனர்.

9-7-72. ஸ்ரீமதாண்டவனுக்கு 'கல்கி' என்ற பத்ரிகையின் காரியாலயத்தில் அழகிய வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீசதாசிவம் அவர்களும், அவரது துணைவியார் இசைப்பேரரசி திருமதி M.S. சுப்புலட்சுமி அவர்களும் கூடவே இருந்து ஸ்ரீமதாண்டவனை கல்கி, கோகுலம் பத்திரிகைகளின் அச்சுக்கூடத்திற்கு அழைத்து பொன்னடி சாத்தி வைத்து ஸ்ரீமதாண்டவனது பூர்ண கடாக்ஷத்தையும் அனுக்ரஹத்தையும் பெற்றனர்.

இத் தம்பதிகள் ஸ்ரீமதாண்டவனிடம் மிகுந்த பக்தியும் பேரன்பும் பூண்டவர்கள். ஸ்வாமி போகுமிடமெல்லாம் சென்று அவர் தாள் வணங்குவார்கள். இயற்கையிலேயே ஆன்மீக வளம் பெற்ற இவர்கள் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ள முகக்க பல ஸமயத்தில் இசையமுதம்

அளித்து திளைக்கச் செய்வர்கள். பங்க ளூர் ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னர் ஆலய நிர்மாணத் திருப்பணிக்காக திருமதி M. S. அவர்கள் இசைக் கச்சேரி வாயிலாக நிதி திரட்டித் தந்தார். ஸ்ரீமதாண்டவன் திரு வுள்ளமுகந்த அன்பர்கள். ஸ்ரீமதாண்ட வன் திருவுருவப் படத்தை கல்கி பத்தி ரிகை முகப்பில் பிரசுரித்தும், ஸ்ரீமதாண் டவனைப் பற்றிய கட்டுரைகளை வழங்கியும் நாடறியச் செய்தவர் கல்கி ஆசிரியர் திரு. சதாசிவம் அவர்கள்.

10-7-72. மயிலை தேசிகாச்சாரி ரோடில் ஸ்ரீமதாண்டவன் பாதுகாச்ரமம் நிர்மாணம் ஆனபிறகு முதன் முதலாக ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளின நாள். ஸ்ரீமதாண்டவன் திருவடிகள், அன்பர்கள் குழாங்கள் பூர்ண கும்ப, சத்ர சாமர மரியாதைகளோடு ஸ்ரீமதாண்டவனை வரவேற்றனர். சென்னை ஹால்ஸ்ரோடு ஸ்ரீ R. சீனிவாசன் அவர்கள் அமைத்துக் கொடுத்த ஆசிரம முகப்பி லுள்ள உபன்யாஸ மண்டபத்தில் தமிழ், ஆங்கிலம், வடமொழி, ஹிந்தி பாஷைகளில் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன.

பல திவ்விய தேசத்து எம்பெருமான் ஸன்னிதிகளிலிருந்து மாலை-பிரசாதங்கள் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமர்ப்பிக்கப் பட்டன. வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டவர்களுள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஸ்ரீராகவன், ஸ்ரீராம பிரசாத ராவ், ஸ்ரீராமமூர்த்தி, ஸ்ரீவெங் கடராமன், ஸ்ரீ கிருஷ்ணசாமி ரெட்டியார், டெல்லி உயர் நீதி மன்ற நீதிபதி ஸ்ரீரங்க ராஜன் முதலானோர்.

27-7-72. மயிலை வடமொழிக் கல்லூரி அதிபர் ப்ரஹ்மஸ்ரீ சந்திரசேகரய்யர் அழைப்பிற்கிணங்கி கல்லூரியில் வரவேற்பு. பண்டிதராஜ வேப்பத்தூர் ஸ்ரீ சுப்ரஹ்மண்ய சாஸ்த்ரிகள் ஸ்ரீமதாண்டவனுக்குப் புகழ் மாலை ஸமர்ப்பித்தார். Dr. ராகவன் அவர்கள் உரை நிகழ்த்தினர். ஸ்தாபகரின் இரண்டாவது குமாரர் சந்திரசேகரய்யர் வந்தனோபசாரம் சொல்ல சபை முடிவுற்றது.

13-8-72. சென்னையிலுள்ள கௌடியா மடத்தில் ஸ்ரீஜயந்தியை முன்னிட்டு அகில இந்திய ஸ்ரீ வைஷ்ணவர்கள் மஹாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு இருந் தது. கல்கத்தாவிலிருந்து கௌடியா மடாதிபதி ஸ்ரீஸ்வாமிஜி வந்திருந்தார்கள். மற்றும் வடநாட்டிலிருந்து பல மடாதிபதிகள் குழுமியிருந்தார்கள். ஸ்ரீமதாண்டவன் மாநாட்டின் தலைவராகப் பிரார்த்திக்கப் பட்டு சென்னை ஆளுனர் K. K. ஷா முன்னிலையிலும், தவத்திரு கோஸ்வாமிஜீ முன்னிலையிலும் ''ஸ்ரீ வைஷ்ணவம்'' என்னும் பொருள் பற்றி சிறப்புற சொற்பெருக்காற்றினர்.

24-8-72. மயிலை வடமொழிக் கல்லூரி யில் ''ஸம்ஸ்க்ருத தினம்'' ஸ்ரீமதாண் டவன் தலைமையில் கொண்டாடப்பட்டது. கீர்வாண பாஷையின் பெருமையை, ஸம் ஸ்க்ருதத்திலேயே மிக எளிமையாக, ஸரள மாக ஸ்ரீமதாண்டவன் உபந்யாசம் செய் தருளினர். Dr. ராகவனும், ப்ரஹ்மஸ்ரீ சந்த்ரசேகர அய்யரும் கூட இருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

9-10-72. சென்னை மயிலை லக்ஷ்மிபுரம் யுவர்கள் சங்கத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு மஹத்தான வரவேற்பு. ஓய்வு பெற்ற போலீஸ் கமிஷனர் ஸ்ரீ பார்த்தசாரதி அய்யங்கார், நீதிபதி K. S. வெங்கடராமன் I.C.S. முன்னிலையில் வைதிக தர்மத்தைப் பற்றி உபன்யஸித்தார் ஸ்ரீமதாண்டவன்.

5-11-72. மயிலை ஆசிரமத்தில் நடந்த ஸ்ரீமத்ராமாயண பட்டாபிஷேக மஹோத் ஸவத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற் பும், ஸம்பாவனையும். உயர்நீதி மன்ற நீதிபதிகள் ராமமூர்த்தி, வெங்கட்ராமன், கோகுலக்ருஷ்ணன் முதலான பெரியோர் கள் பிரசன்னமாயிருந்தனர்.

2-2-73 — 4-2-73. மூன்று நாட்கள் V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அறக் கட்டளை சார்பில் ஸ்ரீமதாண்டவன் நம் மாழ்வார் தர்சனம், ஸ்ரீராமானுஜ தர்சனம், ஸ்ரீதேசிக தர்சனம் என்கிற பொருள் கொண்டு மிக உயர்ந்த ஆழ்ந்த கருத்துச் செறிவு கொண்ட உபந்யாசம் செய்தருளி னர்.

4-2-73. அமரபாரதீ பரீக்ஷா சமிதி யாரால் பிரார்த்திக்கப்பட்டு ஸ்ரீராமக்ருஷ்ணா ஹோம் ஹாலில் ஸ்ரீமதாண்டவனுக்கு

திருமலையில் தேவஸ்தான வரவேற்பு





நீர்மலையில் ஆலய வரவேற்பு



காஞ்சீ ஸ்ரீ பாதுகாச்ரமத்தில் வரவேற்பு



திருஊக்ஷத்திரத்தில்
காஞ்சீ ஸ்ரீ தேவாதிராஜன் அனுக்ரஹம்



பெங்களூர் திருநகூஷத்ர மஹோத்ஸவத்தில்
எம்பெருமான்களுடைய அனுக்ரஹங்கள்





பம்பாய் ஸ்ரீ அஹோபில மடத்தில்



பம்பாய் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன் சங்நிதியில்



திருநாராயணபுரம்
ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்



பம்பாயில் வரவேற்பு



பெங்களூர் இண்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்
தொழிற்சாலையில் வரவேற்பு



பத்ரி யாத்திரைக்குப்பின்
சென்னையில் வரவேற்பும்
ஊர்வலமும்



பம்பாயில் (ஸ்டேட் பேங்க்)
ஸ்ரீ K. வெங்கடாச்சாரியார்
வரவேற்புரை



பம்பாயில் உபந்யாஸம்

சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. குழந்தைகளுக்கும் மாணவர் களுக்கும் நல்லாசியும், நல்வார்த்தை களும் நல்கி பரீக்ஷைகளில் முதலாவதாகத் தேறிய மாணவ மாணவிகளுக்கு தங்க மெடல் முதலிய பரிசுகளை வழங்கினர்.

3-3-73. தாம்பரத்தினருகே பெருங் களத்தூர் பிராமணர்கள் காலனியில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு. அவ்வூர் வாஸிகளால் நிர்மாணம் ஆகப்போகும் வெங்கடேசப் பெருமாள் ஸன்னிதிக்காக அஸ்திவாரம் இட்ட இடத்தில் ஸ்ரீமதாண் டவன் பொன்னடி சாற்றினர்.

4-73. மயிலை ரங்காச்சாரி ரோடி லிருக்கும் ஸ்ரீசந்திரசேகரய்யர் நிர்வாகத் திலிருக்கும் ஆயுர்வேத கலாசாலையில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு.

4-73. மயிலை தேசிக பவனத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு. தேசிக பவனத்தின் டிரஸ்டி ஸ்ரீஆக்கூர் வர தாச்சாரியர் ஸ்வாமி உடன் இருந்தார்.

ஆந்திர பிரதேசத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பு

8-12-73. ஹைதராபாத்திலுள்ள ஸீதாராம பாக் என்னுமிடத்தில் தங்கி யிருந்த ஆண்டவனை செக்கந்த்ராபாத் பிரமுகர்களும், பிரஸ் நிருபர்கள், சிஷ் யர்கள் இவர்கள் தங்கள் நகரத்திற்கு எழுந்தருளும் ஸ்ரீமதாண்டவனுக்கு நல் வரவு கூறி எதிர்கொண்டழைத்தனர். மறுநாள் பட்டிணப்பிரவேசத்தின் பொழுது ஊரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளாக வந்து ஸ்வாமியை பூர்ண கும்பமரியாதை யோடு வரவேற்றனர். வரவேற்புக் கமிட் டியார் நல்வரவு உரை வாசித்தளித்தனர்.

T.V.S. காரியாலயத்திலிருந்து யானை, குதிரை, வாத்யம் பாண்டு நாதசுர இசை மின்விளக்குகள் முன்னே செல்ல அனை வரும் பக்தி சிரத்தையோடு ஸ்ரீமதாண் டவனை 2 மைல் தூரம் ஊர்வலமாய் அழைத்துச் சென்றார்கள். ஸ்திரீகள் ஏராள மாய் வந்திருந்தனர்.

போலீஸ் கமிஷனரும் அதிகாரிகளும் கூடவே வந்து பந்தோபஸ்து அளித்த னர். மரியாதையும் செலுத்தினர். மாரட் பள்ளியில் ராம் கோபால் பங்களா விற்கு எழுந்தருளப் பண்ணினர்கள். அங் கேயே திருப்பாவை காலக்ஷேபம் ஸாதித் தருளினர்.

ஆந்திரபிரதேச அரசு ஸ்ரீமதாண்டவனை கௌரவித்தல்

4-1-74. ஆந்திர பிரதேச அரசு ஸ்ரீமதாண்டவனுக்கு மகத்தான வரவேற்பு அளித்தது மட்டும் அன்றி கௌரவமும் ஸம்பாவனையும் செய்து பெருமை கொண் டது.

ஆந்திர அரசு முதன் மந்திரி, அற நிலைய பாதுகாப்பு மந்திரி இருவரும் திருப் பாவை உபன்யாஸத்திற்கு வந்திருந்து ஒரு விலையுயர்ந்த சால்வை, ரொக்கமாய் ரூபாய் ஆயிரத்து நூற்றுப் பதினாறு மட் டும், (Rs. 1116/-) பழவர்க்கங்களோடு ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீமதாண்டவன் அரசின் பண்பினைப் பாராட்டி ஆசி நல்கினர்.

செகந்த்ராபாத் தேசிக சபை கமிட்டியார் ஸ்ரீமதாண்டவனுக்குத் திருப்பாவை கால க்ஷேப சம்பாவனை அளித்தல்

13-1-74. அன்று மாலை 6-30 மணி அளவில் திருப்பாவைச் சாற்று முறை காலக்ஷேபத்திற்கு ஸ்ரீமதாண்டவனை சத்ர சாமர வாத்ய கோஷங்களோடு ஆசிரமத் திலிருந்து காலக்ஷேப மண்டபத்திற்கு எழுந்தருளப்பண்ணினர்கள். ஆடவரை மிஞ்சும் பெண்டிரது எண்ணிக்கையும், உத்ஸாகமும் கரைபுரண்டோடின. கூடி யிருந்தோரின் எண்ணிக்கையைக் கொள் ளும் அளவிற்கு பந்தல் குறுகியிருந்ததால் உபந்யாச சபை ஜனங்களால் நிறைந்து வழிந்தது.

பந்தலின் முகப்பும், எல்லா இடங் களும் மின்னொளியால் மிகுந்த ப்ரகாசத் தோடிருந்தன. தேவலோகம் போலே இருந்தது அக்கல்யாண மண்டபம். இரவு 9 மணிவரை சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் திருமண வைபவத்தைப் பரக்க மக்கள் பரவசமடையும்படி நம் ஆசார்ய வள்ளல் ''அன்றீன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும்'' பசுவைப் போல், தெள்ளத் தெளிவாக ஸாதித்தருளினர்.

திருப்பாவைக் கமிட்டியார் ஸ்ரீமதாண்டவனிடம் தங்களுடைய நன்றிக் காணிக்கையாக ரூ. 10,000 (பத்தாயிரம்) ஸம்பாவனை செய்து மகிழ்ச்சி கொண்டார்கள். ஸ்ரீமதாண்டவன் உடனே டெல்லி ஆசிரமத்து வைகுண்டநாதன் ஸன்னிதியில் சிறிய திருவடிக்கு (ஆஞ்ஜனேயர்) ஒரு கோயில் கட்ட வேண்டி அவர்களிடமே ஒப்படைத்து விட்டார். ஸன்னிதி கட்டி முடித்த பிறகு அதன் நிர்மாண கர்த்தாக்கள் செகண்ட்ராபாத் - ஹைதராபாத் ஸ்ரீதேசிக சபை கமிட்டியார் அவர்களது உயரிய கைங்கர்யம் என்பதனை நிரந்தரமாய் கல்வெட்டாக ஆக்கி அருளினர். ஸ்ரீபார்த்தசாரதி அவர்களுக்கு பஹுமானம் செய்து அவரது கைங்கர்ய ஸ்ரீயை வெகுவாக ஸ்ரீமதாண்டவன் பாராட்டினர்.

9-8-74. ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீபாகவத உபன்யாசத்தை கர்நாடக ஆளுநர் ஸ்ரீமோகன்லால் சுகாட்யா, ஸ்ரீமான் T. S. ராஜம் தலைமையில் தொடங்கி வைத்தார். வரவேற்பும் அவதாரிகையும் அழகாய் அமைந்தன. ஜயநகர் பெங்களூர் ஆசிரமம்.

16-2-75. பெங்களூரில் அகில இந்திய தைவீக மஹா நாட்டில் (All India Divine-Society) ஸ்ரீமதாண்டவனுக்கு விசேஷ வரவேற்பு. கன்யாகுமரியிலிருந்து ரிஷிகேசம் வரையிலான ஸாதுக்கள் குழுமியிருந்தனர்.

24-10-75. ஆந்திர மாநிலத்தில் அனந்தப்பூரில் அவ்வூர் பொது மக்களின் சார்பில் ஸ்ரீமதாண்டவனுக்கு மாலை 6-30 மணிக்கு கிருஷ்ண கலா மந்திரத்தில் மஹத்தான வரவேற்பு.

12-11-75. கர்நாடக மாநிலத்தில் காலை 6 மணி அளவில் ஹுப்ளி நகரில் ஸ்ரீகோபிநாத் சாந்த்ரா M. L. A. தலைமையில் பொது மக்கள், பத்திரிகை நிருபர்கள் முதலானோர் எதிர்கொண்டு பூர்ண கும்ப மரியாதைகளோடு ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பளித்தனர். ஸ்ரீகிருஷ்ண கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி ''ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்'' என்னும் பொருள்பற்றி விரிவாகச் சொல்லி விளங்க வைத்தார். ''சோடா (சிறிய) பம்பாய்'' எனவழங்கப்பெறும் இவ்வூர் பிரபல வியாபார ஸ்தலமாகும். ஸ்ரீமதாண்டவன் உள்ளம் கனிந்து உகந்த இடம்.

28-11-75. மஹாராஷ்ட்ர மாநிலத்தில் 'சதாரா' என்னும் இடத்தில் சங்கேச்வர் சங்கரமடத்தில் வரவேற்பு. ஸம்ஸ்க்ருத வேத சாஸ்திர பாட சாலைக்கு எழுந்தருளி வித்யார்த்திகளை ஸ்ரீமதாண்டவன் பரீக்ஷை செய்து அவர்களுடைய திறமையை வியந்து பாராட்டினர்.

2-12-75. ஸ்ரீமதாண்டவன் மஹாராஷ்ட்ர எல்லையில் பூனை நகரத்திற்குள் எழுந்தருளும்போது ''ஸ்வார்கேட்'' என்கிற இடத்தையடைந்தார். பூனைவைச் சேர்ந்த ஏராளமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூர்ண கும்ப மரியாதைகளோடு ஆசார்யனை வரவேற்றனர்.

ஊர்வலமாக ஸ்ரீமதாண்டவனை அழைத்து ரவிவார் பேட்டையில் ''அக்ரேசர் பவன்'' என்கிற மிகப்பெரிய கல்யாணமண்டபத்தில் எழுந்தருளப் பண்ணி, ஸம்ஸ்க்ருதத்தில் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்கள். ''புண்யபதனம்'' என்கிற இந்த தலம் நாளடைவில் திரிந்து ''பூனை'' என்றும், தற்காலம் ''பூனே'' (Pune) என்றும் அழைக்கப்படுகிறது.

பம்பாய் தந்த வரவேற்பு

17-12-75. பம்பாய்க்கருகிலுள்ள தேவனரிலிருந்து புறப்பட்டு ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ அஹோபில மடத்திற்குச் சொந்தமான ஸ்ரீலக்ஷ்மீ நாராயணன், லக்ஷ்மீ நரஸிம்மன் ஸன்னிதியிலிருந்து ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு ஸகல மரியாதைகளுடன் ஸ்ரீமதாண்டவனை வரவேற்றார்கள்.

பிறகு திரளாக பக்தர்களுடன் மாதுங்கா தேசிக பவனத்தில் எழுந்தருளப் பண்ணினர்கள்.

திருப்பாவை தொடக்கத்திற்காக ஏற்பாடு செய்திருக்கும் மாதுங்கா S.I.E.S. High Schoolக்கு எழுந்தருளப் பண்ணி வரவேற்பளிக்கப்பட்டது.

24-12-75 மாலை 6 மணி அளவில் பம்பாய்த் தமிழ் சங்கத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு ப்ரஹ்மாண்டமான வரவேற்பளிக்கப்பட்டது. அதுஸமயம் பம்பாய் நகரவாசிகளின் சார்பில் ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும், வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன. தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலுள்ள செஞ்சொற்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட செந்தமிழ் நடை கொண்ட தீஞ்சுவை மடல் வரவேற்புரையாக வழங்கப் பட்டது. பம்பாய் மாநகரின் மேயர் திரு நாஞலால் மேத்தா அவர்களும், ஸ்ரீமதி கமலா ராமன் M.L.A. அவர்களும் பொதுமக்கள் சார்பில் வரவேற்பளித்தனர். வரலாறு காணுத வரவேற்பு. நோவு சாற்றிக் கொண்டு காமாலையினால் கஷ்டப்பட்ட திருமேனி நோவுநீங்கி திருவுள்ளமுகக்க பம்பாய் வாஸிகள் ஸ்ரீமதாண்டவனை உபசரித்த பெருமைகளுக்கு ஸ்ரீ K. வெங்கடாச்சாரியர், Law Officer of State Bank of India, ஸ்ரீ பாட்ராச்சாரியர் முதலானோரின் பக்தி சிரத்தையும்தான் காரணம் என்பதை இங்கு ஏடுபடுத்துகிறோம். அங்கொரு ஆசிரமம் நிறுவுவதில் அதிக ஆதங்கமுடைய ஸ்ரீமதாண்டவனின் அபிலாஷையை ஸ்ரீவேங்கடாசாரியர் பூர்த்தி செய்து வைப்பார்கள் என்றும் நம்புகிறோம்.

ஸ்ரீமதாண்டவன் பூனாவிலிருந்து பம்பாய் விட்டுப் போகும் வரை பட்டத்துன்பத்தின் சுவடுகளே யெல்லாம் ஸ்ரீமதாண்டவன் பதரி வணங்கி திரும்பி மயிலை ஆசிரமத்திற்கு எழுந்தருளின அன்று, வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய ஸ்ரீவெங்கடாச்சாரியரின் உருக்கமான பேச்சுகளிலிருந்து தான் உலகமறிந்தது. நமக்காக இப்படிக் கஷ்டப்பட்ட பொன்னடிகள் நமக்கு என்றும் துணை நிற்கட்டும்.

இந்தூரில் ஸ்ரீமதாண்டவன்

இது மத்யபிரதேசத்தில் ஓர் பெரிய நகரம். இங்கு ஸ்ரீமதாண்டவன் பதரியாத்ரையின் போது பாதயாத்ரையாக 15-5-76 அன்று பிரவேசித்தார். 'கீதா பவன்' என்கிற கட்டிடத்தில் ஸ்வாமிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த இடம் இந்தூரிலிருந்து 2 கி.மீ. தூரத்திலுள்ளது. ''அகிலபாரத இராம ஸ்நேஹி'' என்கிற ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ''பாபாபால் முகுந்தர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டு ''உம்மேத்ராம் ராமஸ்நேஹி'' என்பவரால் பராமரிக்கப்படுகிறது. இவர் ஸ்ரீமதாண்டவனை எதிர் கொண்டழைத்து கீதா பவனத்தில் இருக்கச் செய்து உபசார உபகாரங்கள் ஸமர்ப்பித்தார்.

தேவாஸில் வரவேற்பு

இந் நகரம் இந்தூரிலிருந்து 35 கி.மீ. தூரத்திலுள்ள வியாபாரஸ்தலம். வியாபாரிகளின் மண்டிகள் சங்கத் தலைவர் ''ஸ்ரீ கன்யாலால்ஜீ டாட்'' ஸ்ரீமதாண்டவனை வரவேற்று ரூ. 501/ ஸமர்ப்பித்தார். நகர கலெக்டர், போலீஸ் தலைமை யதிகாரி, அரசு பாதுகாப்பு அச்சக அதிகாரி (Security Press) தங்கள் குடும்பத்துடனும், பொதுமக்கள் சார்பில் நகரத் தந்தையும், M.L.A. யுமான ''ஸ்ரீ தீராத் சிங்ஜீ'' ''ஸோலங்கி'' முதலானோர் வரவேற்பில் கலந்து கொண்டனர். ''நாம ஸங்கீர்த்தன மஹிமை'' என்னும் பொருள் பற்றி ஸ்ரீமதாண்டவன் நல்லுரை வழங்கி குழுமியிருந்தோரை குதூகலத்திலாழ்த்தினர்.

மக்ஷியில் அரசாங்க வரவேற்பு

இது முன் சொன்ன தேவாஸிலிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ளது. இங்கொரு பயண மாளிகையில் ஸ்ரீமதாண்டவன் தங்கியிருந்தார். நகர தாசில்தார் தனிப்பட்ட முறையில் குடும்பத்துடனும், அரசு சார்பில் ஷாஜாபூர் ஜில்லா கலெக்டர், போலீஸ் அதிகாரி, உணவுத் துறை அதிகாரியும், பொதுமக்கள் சார்பில் மோகாக்ஷி இலக்ஷ்மிநாராயணஜையின் M.L.A. அவர்களும், வரவேற்பில் கலந்து கொண்டனர். ஸ்ரீமதாண்டவன் அருளிய பொன்மொழிகளை ஜில்லா கலெக்டர் ஹிந்தியில் மொழி பெயர்த்துச் சொல்லியது மிகவும் பெருமையுடையது.

குவாலியர் வரவேற்பு

7-6-76. அன்று குவாலியர் பட்டிண பிரவேசம் செய்தருளினார் ஸ்ரீமதாண்டவன். இங்கிருக்கும் ஜவஹர் நகரில் காம்பூ பஸ் ஸ்டாண்டு ஸமீபத்தில் ஹனுமான் மந்திர் என்கிறமிடமிருக்கிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும், அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிகின்ற மேல் நிலை அதிகாரிகளும், அவ்வூரிலேயே இந்த மந்திரைப் பேணிப் பராமரிக்கிறார்கள். அந்த ஸ்ரீவைஷ்ணர்கள் எல்லோரும் கூடி ஸ்ரீமதாண்டவனை வரவேற்றார்கள். முக்கியமாக ஸ்ரீரங்கத்தில் ''குவாலியர் ஸ்வாமி'' என்று அழைக்கப்படும் ஸ்ரீ S. ஸத்ய மூர்த்தி அய்யங்கார் குறிப்பிடத் தக்கவர். பெண்டிர்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர். இங்கு டெல்லியிலிருந்து ஸ்ரீ T. D. ரங்கராமானுஜம் எழுந்தருளி, மேற் கொண்டு யாத்ரை விபரங்களை ஸ்ரீமதாண்டவனோடு கலந்து முடிவு எடுத்தார்.

ஸ்ரீபாஷ்யகாரரை அடுத்து பாதயாத்ரையாக பாரதத்தின் தலைநகரில் ஸ்ரீமதாண்டவன்

22-6-76. பாரதத்தின் தலைநகரான புது டெல்லியில் ராமகிருஷ்ணபுரம் என்கிற இடத்தில் ஜவஹர்லால் பல்கலைக் கழகத்தருகில் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்திற்குச் சொந்தமாய் ஒரு திருக் கோயில் ஸ்ரீவைகுண்டநாதன் ஸன்னிதி என்று ஸ்ரீமதாண்டவன் நிர்மாணித்தருளியதை தாம் நேரில் கண்டுகளிக்க ஸ்ரீமதாண்டவன் புதுடெல்லி எழுந்தருளியாயிற்று.

கோவிலுக்குச் செல்லும் தெருவிற்கு ''ஸ்ரீவேதாந்த தேசிகர் மார்க்'' என்று பெயர். ஸ்ரீமதாண்டவன் இத்தெருவின் ஆரம்பத்தில் எழுந்தருளும்போதே சத்ர சாமர பூர்ண கும்ப மரியாதைகளோடு கோவிலிலிருந்து ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுவந்து ஸ்ரீமதாண்டவனுக்கு அருளிப்பாடிட்டு வரவேற்றார்கள். ஆண், பெண், குழந்தைகள் புடை சூழ. தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வீதிகளாடே, ஸ்ரீமதாண்டவனை ஊர்வலமாய் அழைத்துச் சென்றனர். ஸ்ரீமதாண்டவன் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்தருளினார். எம்பெருமான் திவ்ய மங்கள விக்ரஹங்களை வடித்துக் கொடுத்த மதுரை தல்லாகுளம் K. நாராயண ஸ்தபதியை ஸ்ரீமதாண்டவன் கௌரவித்தார்.

டில்லி நகர வாசிகள் சார்பில் வட மொழியிலும், தமிழிலும் பாமாலைகளாக வரவேற்பளித்தார்கள்.

இமயத்தில் இருக்கும் ரிஷீகேசத்தில் ஸ்ரீமதாண்டவனுக்கு அளித்த பிரியாவிடை

11-7-76 முதல் 9-10-76 வரை சுமார் மூன்று திங்கள், ரிஷீகேசம் பரத்மந்திர் என்கிற இடத்தில் 14வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அனுஷ்டித்தருளி, வாழ்க்கையில் விடாப்பிடியாக திருவுள்ளம் பற்றிய பதரிகாச்ரம யாத்ரையை பல இன்னல்களுக்கிடையில் வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வரும் ஸ்ரீமதாண்டவன் ரிஷீகேசத்தைவிட்டுப் புறப்படும் நாள் வந்தது. பதரீகாச்ரமம் சென்று பதரீநாராயணனை வணங்கி மண்ணில் இதுபோல ஆசார்யனைக் கண்டதில்லை என வையத்தெவரும் பாராட்ட, ஸ்ரீமதாண்டவனுடைய திருமேனியின் பொலிவையும், கொழுந்தண்டேந்திய திருக்கைகளையும், அனுஷ்டான அனுக்ரஹ சக்திகளையும் அனுபவித்த பெரிய மனமுடைய, பண்புடைய ரிஷீகேசத்து அன்பர்கள் ஸ்ரீமதாண்டவன் ரிஷீகேசத்தை விட்டுப் புறப்படுவதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஸ்ரீமதாண்டவன் தங்க இடம் கொடுத்த பரத்மந்திரின் நிர்வாஹி ''மஹந்த் ஸ்ரீ அசோக ப்ரபன்னாச்சார்'' என்கிற மஹான் ஸ்ரீமதாண்டவனுக்கு ஏராளமான பழவர்க்கங்களைச் ஸமர்ப்பித்தார். நெஞ்சு நிறைய கை கூப்பி நின்றார். விலையுயர்ந்த ஜரிகைச் சால்வையை அருளிப்பாடிட்டு ஸம்பாவனை செய்து ஸ்ரீமதாண்டவன் திருமேனியில் சாற்றி அதன் அழகினை அனுபவித்தார்.

ஸ்ரீமதாண்டவன் பரத்மந்திர் பாடசாலை உபாத்யாயருக்கும், மாணவர்களுக்கும் பஹுமானம் செய்து அனுக்ரஹித்தார்.

ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருந்த கட்டிடத்தின் கோடியில் இருப்பவரும், மஹந்தின் அன்பிற்குரியருமாயிருந்த ஒரு ப்ரஹ்மசாரிக்கு நல்ல கதர் சால்வையும், கதர் துணியும் அனுக்ரஹித்தருளினர்.

ஸ்ரீமதாண்டவன் 9-10-76 மாலை புறப் பட்டு பரத்மந்திரில் ஸேவை ஸாதிக் கும் 'பரத்' எம்பெருமானே மங்களா சாஸனம் செய்து வலமாய் வந்து, வடக் குச் சுற்று மதிள் சுவரில் ஸேவை ஸாதித் தருளும் பதரீநாராயணனையும், கங்கா தேவியையும் ஸேவித்துப் பிறகு ''முற்ற மூத்துக்கோல் துணையா'' என்கிற நகசம் தொடங்கி ''ஏனமுனகி'' என்று தொடங் கும் தசகம் வரை திருமங்கை மன்னனது பாசுரங்களை நெஞ்சுருகி அனுஸந்தித்த வண்ணம் ஸ்ரீ பதரீநாராயணனின் திவ்ய மங்கள விக்ரஹ ஸேவையின் எண்ண அலை கள் மோத நிறைந்த உள்ளத்தனாய், க்ருதார்த்தனாயும், க்ருதக்ருத்யனாயும் தன்னை எண்ணி நம்பெருமானை நினைவிற் கொண்டு யாத்திரையைத் தெற்கு நோக்கித் தொடங்கினர்.

ஏராளமான பக்தர்கள் பின் தொடர்ந் தார்கள். வீதியெங்கும் நீர் தெளித்து அலங்காரம் செய்து கோலங்கள் போட்டு மலர்களைத் தூவி மலர்மாரியும் பொழிந் தனர். திசைகள் மகிழ்ந்தன. தென்றல் தவழ்ந்து வந்து மலர்களின் மணத்தை சுகமாக ஏந்தி வந்தது. எல்லாம் மங்க ளத்தை அறிவிப்பதாய்க் காட்சியளித்தன. உலகமுய்ய, ஊருய்ய, மனுசருய்ய, இமயம் முதல் குமரிவரை யாத்திரையைத் தொடங்கி குவலயத்தைச் சுற்றிவரும் சுந்தரன் ஸ்ரீமதாண்டவனது புறப்பாடு உலகம் தழைக்கவே என்பதனை இயற்கை யன்னையும் தனது இன்பமயமான பசும் காட்சிகளாலே பறைசாற்றுவது போலும் பாருக்கு உறைப்பவள் போலும் சூழ்நிலை அமைந்திருந்தது.

நகரமக்கள் ''நமோநாராயண - நமோ நாராயண'' என்று கோஷம் செய்து கொண்டு, பஜனையோடு கலந்த பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு கூப்பிய கை களுடன் வெகுதூரம் ஸ்ரீமதாண்டவனைப் பின் தொடர்ந்தார்கள். ஊர் எல்லை வந் ததும் ஸ்ரீமதாண்டவன் பக்தர்களின் அன்பின் ஆழத்தினைக் கண்டு நெகிழ்ந்த நெஞ்சினராய் கண்ணீர் சோர, தேம் பியழுகின்ற உள்ளங்களிலே நீங்காத தன் அருளென்னும் முத்திரையிட்டு அவர் களிடமிருந்து பிரியாவிடை பெற்றார். உள்ளத்தையுருக்கு மண்ணும் நிகழ்ச்சியிது.

டெல்லி கரோல் பாக்கில் வரவேற்பு

2-12-76. அன்று டெல்லி ராமகிருஷ் ணபுரம் ஆசிரமத்திற்குச் சொந்தமான வைகுண்டநாதன் ஸன்னிதியிலிருந்து ஸ்ரீமதாண்டவன் பக்தர்கள் புடை சூழ சுமார் 15 கி.மீ. தூரத்திலுள்ள கரோல் பாக் எழுந்தருளினர். பாராயண, பஜனை கோஷ்டிகள் பின் தொடர ஏராளமான விளக்கு வாண வேடிக்கை களோடு ஆஸ்திகப் பெருமக்கள் ஸ்ரீம தாண்டவனை எழுந்தருளப் பண்ணினர் கள். வரவேற்றவர்களில் ஆடவரைப் பெண்டிர்குழாம் விஞ்சியது. வீதியில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளும் போது ஒவ் வொரு திருமாளிகை முன்பும் திருவடி களில் மலர் மாலை வைத்தும், மாதர்கள் மஞ்சள்நீர், கற்பூர ஆரத்தி எடுத்தும் வரவேற்று மகிழ்ந்தனர். கரோல்பாக் 11-A ப்ளாக் (Western Extn. Area) பார்க்கில் அமைந்திருந்த அலங்காரப் பந்தலில் ஸ்ரீமதாண்டவனை எழுந்தருளப் பண்ணினர்கள். ஆக்ரா Dr. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் Ph.D. ஆங்கிலத்திலும் ஸ்ரீ அனந்தாச்சாரியர் ஸம்ஸ்கிருதத்திலும் வரவேற்புரை வாசித்தளித்தனர்.

ஸ்ரீமதாண்டவன் இரண்டு நாள் தங்கி யிருந்து கைசிக புராண மஹிமையை உபன்யாஸம் செய்தருளினர்.

6-12-76. டெல்லி D.T.E.A. உயர் செகண்டரி பள்ளி ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பளித்தது.

23-12-76. டெல்லி ராமகிருஷ்ணபுரம் மீரா பஜனை மந்திரில் மாதர்கள் வர வேற்பு.

16-2-77. வெகு வேகமாக எழுந்தருளிய ஸ்ரீமதாண்டவனை காசிக்கு 10 கி.மீ தூரத்திலிருந்தே பொது ஜனங்கள் எதிர் கொண்டு வந்து ஊர் எல்லை வந்ததும்

வேத விற்பன்னர்கள் புடை சூழ ஹனுமான்காட் ஸ்ரீ ஸுப்ரமண்ய கனபாடிகளுடைய திருமாளிகையில் வரவேற்றார்கள்.

12-3-77. ஜபல்பூர் தென்னிந்தியா Community Hall, Plaza Road கழகத்தின் சார்பில் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமுதாயத்தினர் வரவேற்பு அளித்தனர்.

17-3-77. நாக்பூர் போகும் வழியில் பார்கி என்னும் சிற்றூரில் 250-க்கும் மேற்பட்ட சிறுவர் முதல் கிழவர் வரை ஸ்ரீமதாண்டவனே வரவேற்றனர்.

25-3-77. நாக்பூர் வாஸிகள் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்று பகவத் பாத ஸபாவிற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று எழுந்தருளப் பண்ணினர்கள். ஸ்வாமியின் 71-வது திருநக்ஷத்ரம் இங்கு விமரிசையாய் நடந்தது. சென்னையிலிருந்தும், பெங்களூரிலிருந்தும் பல சிஷ்யர்கள் வந்து திருநக்ஷத்ர வைபவங்களில் பங்கு பெற்றனர்.

21-4-77. செகண்ட்ராபாத் சிஷ்யர்களும் அன்பர்களும் ஊருக்கு 2 கி.மீ. முன்பே ஸ்ரீமத் ஆண்டவனே எதிர்கொண்டழைத்து சத்ர சாமர மேள வாத்யங்கள் புடை சூழ வரவேற்றார்கள். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணமும் உபநிஷத் பாராயணமும் செய்த ஸ்ரீ வைஷ்ணவர்கள், அன்பர்கள் பின் தொடர செகண்ட்ராபாத் பட்டிணபிரவேசம் செய்தருளினர். தேசிக ஸபைத் தலைவர் ஸ்ரீ வரதாச்சாரியர் ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரரின் 961 திருநக்ஷத்ரம் ஸ்ரீமதாண்டவன் தலைமையில் கொண்டாடப்படும் என அறிவித்தார்.

ஆந்திர பிரதேசம் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஸ்ரீமதாண்டவனுக்கு ஸம்பாவனே

3-5-77. ஆந்திரபிரதேச முதன் மந்திரி ஸ்ரீ J. வெங்கல்ராவ் அவர்களும், ஆந்திர அரசு இந்து மத அறநிலையக் கட்டளை ஆணையர் ஸ்ரீபுருஷோத்தம நாயுடு அவர்களோடு ஆசிரமத்திற்கு எழுந்தருளி ஸ்ரீமத் ஆண்டவனுக்கு அரசு சார்பில் அளிக்கும் கௌரவத்தை அங்கீகரிக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டார்.

அரசு வழக்கமாக அளிக்கும் சால்வையோடும், ரொக்கம் ரூ. 1116ஐ (ரூபாய் ஆயிரத்து நூற்றுப்பதினாறு). பழவர்க்கங்களோடும் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமர்ப்பித்தார். இது இவ்வரசு ஸ்ரீமதாண்டவனுக்கு அளிக்கும் இரண்டாவது ஸம்பாவனே. 6-1-1974-ல் ஆந்திர அரசு, மந்திரி S. சத்யநாராயணராஜு மூலம் முதன் முறை ஸம்பாவனே செய்ததை முன்பே எழுதியிருக்கிறது.

கர்நூலில் ஸ்ரீமதாண்டவன்

கடுமையான யாத்ரையால் வாடிய திருமேனி சற்று இளைப்பாற வசதியாய் இருக்கும்படி வரவேற்பு தந்த நகரமிது. துங்கபத்ரா நதியில் இரண்டு நாள் நீராட்டமும் விஞ்ஞான மந்திர் என்கிற கோவிலில் பார்த்தசாரதி மங்களாசாஸனமும் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளமுகந்தபடி. 18-5-77, 19-5-77 இரண்டு நாட்கள் இங்கு முகாமிட்டார்.

சென்னையில் வரலாறு காணுத வரவேற்பும் வற்றுத ஸ்ரீமதாண்டவன் கருணையும்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றுமை நன்று'' என்பது தமிழன் திருவாக்கு.

''துளஸீ அங்குரிக்கும்போதே (முளைக்கும்போதே) நறுமணத்தோடே அங்குரிக்குமாப் போலே'' என்பதும் வழிவழி வந்த பழமொழி. இவைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக, நம் பாரதம் செய்த நல் தவமோ, நம்போன்றுரது நல்வினைகளோ, நம்மிடையே ஸ்ரீமதாண்டவனே நாம் போற்றுதற்குரிய - போற்றி வணங்குதற்குரிய - வணங்கி வழிபடுதற்குரிய-வள்ளல் நம் ஆசானுய்ப் பெற்றிருப்பது. ''ஞாலத்துப் புத்திரனைப் பெற்றேன் நங்கை மீர் நானே மற்றுருமில்லை...'' என்று யசோதை கண்ணனைப் பெற்ற தால் மார் தட்டிப் பேசினாள். அது போல ஸ்ரீமதாண்டவனே ஆசார்யனுகப் பெற்ற நாம் அவனிவிட பாக்யம் செய்தவர்கள்.

சரித்திர காலங்களிலும், தமிழர்களின் நல்லாட்சி நாட்டில் நிலைநின்ற காலங்களிலும், களம் கண்ட வீரர்களுக்கு,

போரிலே வெற்றி வாகை சூடிய பெரு மகனுக்கு, வீரத்தைக் காட்டுகின்ற வல்ல வனுக்குப் பரணி பாடிப் போற்றி யுகந்தது தமிழ் நல்லுலகம். ஜெயித்த இடங்களில் தங்களது பேரரசுகளின் சின்னங்களை தங்கள் ஜயத்தின் வெற்றிச் சின்னங் களாகப் பொறித்து நிலை நிறுத்தினர்.

மதப் பெரியோர்களில் வைணவத்தின்-அதன் மரபின் நிறுவன கர்த்தா, எம் பெருமானர் - ஸ்ரீ பகவத் ராமானுஜர் இமயம் வரை நடந்து சென்று தாம் தோற்றுவித்த 'விசிஷ்டாத்வைத' நன்னெறிகளை ஆங்காங்கே பரப்பி குதர்க்க மத வாதியர்களை வென்று என்றும் குன்றுத வான் புகழ் கொண்டு வானேறிப்போனார். அவர் ஊன்றிய வித்து முளைத்தெழுந்து ஸ்வாமி தேசிகனால் வளம் பெற்று, மரமாகிப் பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றதனை ஸ்ரீமத் ஆண்டவன் தன்னுடைய அதிமானுஷ, அத்யத்புத, ஸ்வரூப, ரூப, குணங் களாலே நாட்டின் நாற்புறமும் அறியும் வண்ணம் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் கொண்டு போய் நாட்டிலுள்ளோர் அதனால் பயன்பட்டு இன்பம் பெற்றுய்ய வழி வகுத்துக் கொண்டிருக்கிறார். அவரது பணி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஓய்வு பெறவில்லை.

அங்ஙனே உயரிய பெருமை பெற்றதும் போற்றுதற்குரியதுமான செயல்களுள் ஸ்ரீமதாண்டவனது பதரிகாச்ரம விஜய யாத்ரையாகும். தென்பிரையாண்டவனது கனவை நினைவாக்கி, காவி பெற்று, பூர்வர்களது மரபிலிருந்தும், ஒழுக்குகளி லிருந்தும் கடுகளவும் பிறழாது, அவர்கள் காட்டிய வழிகளிலே நடந்து, நாள் முழுதும் நாட்டோர் நலமே நயந்து, அறத்தின் வழி நின்று, ஆக்கமும் ஊக்கமும் கொண்டு உண்மையை உணர்த்தி, அவர்களுக்கு வானேற வழிவகுத்துக் கொடுத்து, நமது மரபினை, குமரி முதல் இமயம் வரை தம் பொற்பாதங்கள் படும்படி நடமாடி, திருப்பாதங்கள் பட்ட இடங்களையெல் லாம் புனிதமாக்கித் தமக்கும், தம் பரம்பரைக்கும், தம் ஆசார்யர்களுக்கும், தம் சிஷ்யவர்க்கங்களுக்கும் பெருமை தேடித்தந்த ஒரு பெருமகனைப் போற்றி பேசுவதினால் நாக்கு சுத்தியாகிறது. திரு சுரக்கிறது. உணர்வு உண்டாகிறது. வாயமுதம் ஊறுகிறது. இருவினை நம்மை விட்டு ஓடுகிறது. நம் போற்றுதற்குரிய ஆண்டவனை, அகஸ்த்யரை ஈன்ற தமிழுலகம் சென்னையில் வரவேற்ற நிகழ்ச்சி, வையம் கண்டு வியந்த நிகழ்ச்சி.

7-6-77ல் திருமலைக்கு வந்து திருவேங்கடமுடையானை மங்களாசாஸனம் செய்து, தனது நன்றிப் பெருக்குக்குப் போக்குவீடென ''ஆயிரம் கலச 'திரு மஞ்சனம்', திருப்பாவாடை முதலான அவனுள்ளமுகக்கும் கைங்கர்யங்களைச் செய்து கண்குளிரக் கண்டு, நம்பெருமாளது எண்ணம் நினைவு நெஞ்சில் திளைக்க சென்னை நோக்கி விரைந்து எழுந்தருளினார் ஸ்ரீமத் ஆண்டவன்.

17-6-77 அன்று சென்னை ராயப்பேட்டை ஸ்ரீபுரத்தில் வழக்கறிஞர் ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸன் திருமாளிகை கோலாகலமாய் இருந்தது. ஸ்ரீ வைஷ்ணவர்களது தீதிலாத்திரள், ஒரு அரசனின் நகர பவனியை உணர்த்துகின்ற வகையில் சத்ர, சாமர, மகர தோரணங்களின் வரிசைகள்; காஞ்சி வரதனது கருட ஸேவைக்குப் பணி செய்த விரித்துப் பரந்த வெண்ணிறக் குடைகள்; எம் பெருமானர் ஸ்ரீ பெரும்பூதூரில் வீதி புறப்பாடு கண்டருளும்போது அவர் முன்னே வரிசையாக ஓங்கி நிமிர்ந்து ஒய்யாரமாய் வரும் குடைகள்; இன்ப மாரி பொழிவது போன்று இசைமாரி பொழியும் இளம் நாதஸ்வர வித்வான் கள்., இவைகளை அப்படியே படம் பிடிக்க முயலும் புகைப் படக்காரர்கள், டெலிவிஷன் காமரா மென், இங்கும் அங்கும் ஓடி சரியான இடத்தைப் (Vantage Point) பிடிப்பதில் ஏற்படும் சலசலப்பும், இனமறியாத சிறுமி சிறிய வர் கூட்டம் பந்தலுக்குள் ஓடி விளையாடு கின்ற சந்தடியும், திருமங்கையாழ்வார் திருவாக்கில் ''ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமா மயிலை'' என வான்புகழ் கொண்ட மாதர்களின் நிலா கண்டு நாணும் திவ்வியத் திருமுகங்கள் அழகு சொரிய நீர் தெளித்துக் கோலம் போட்டுத் திருவிளக்கு ஏற்றிப் பந்தலைத்

திருப்பொலியச் செய்து நிற்கும் செயல் களும், இவைகளெல்லாம் ஒரு மஹத்தான உத்ஸவத்தைப் பறைசாற்றி நின்றன.

கட்டுக் கடங்காத கூட்டம். இதனை ஒழுங்கு படுத்த இருந்த சீராடை கொண்ட காவல் படை, தன் பணியை மிடுக்காகச் செய்கின்ற காட்சி. ஸ்ரீபதரீகாச்ரமம் எழுந் தருளி விஜய யாத்ரையை வெற்றிகரமாக முடித்துத் தமிழகம் திரும்பி வருகை தரும் ஸ்ரீமதாண்டவனை நகர மக்கள் வரவேற்கத்தான் இத்தனை ஆரவாரங்கள். இவை ஸ்ரீமதாண்டவன்பால் ஆராது அன்பு கொண்டார் இதயத்திலிருந்து ஓங்கிப் புறப்படும் உணர்ச்சி வேகங் களின் உன்னதச் சிதறல்கள். பகட்டுக்கோ அன்றி படாடோபத்துக்கோ அல்ல.

களத்திலே வெற்றி கண்ட வீரனை வர வேற்பது மண்ணின் மரபு. மானம் காத்த மன்னனை மாநிலம் வரவேற்பது மாண்புமிகு செயல். அதுபோல மதம் காக்கும் மன்னனை இமயம் கண்ட இன்பத் தலைவனை, ஆசார்ய வள்ளலை, வர வேற்று முதலிடம் கொண்டது சென்னை. வான்புகழ் கொண்டது.

வீதி புறப்பாட்டுக்கு ஆயத்தமாகும் செங்கோல் பிடித்த திருவரங்கச் செல்வனார் போல், அவனது பொற்பாதக் கமலங் களாம் திவ்விய ஆசார்ய பரம்பரையின் ஆதவன் ஸ்ரீமதாண்டவன் முக்கோல் ஏந்தி, தன்னுடைய திருப்பொலியும் திரு முகத்தின் எழிற் கதிர்கள் அருள் சொரிய புன்முறுவல் பூத்த திருமுகத்தோடு திரு மாளிகையின் முகப்பில் உதயமானார்.

மாலை வேளையாதலால் ஜனத்திரள் ஏராளம். தன்னைச் சுற்றித்தாம் குளிர நோக்கியபோது இன்பத்தால்-வியப்பால்-பெருமையால் ஆசார்யனது கண்கள் குளங்களாயின. பாதுகா சார்யர்களை நினை வில் கொண்டு வந்தது போன்ற நன்றி யுணர்ச்சி சிந்தனையில் ஓடி இருக்க வேண்டும்! யாரை அருகில் அழைப்பது, யாருடன் பேசுவது, என்பதே புரிய வில்லை. ஏனென்றால் தன் திருக் கண் களுக்கு இலக்காகும் சிஷ்யர்கள் அன்பர்கள் எல்லோரிடமும் பேசவேண்டும், எல்லோ ரையும் அருகே அழைக்க வேண்டும் என்று பாரிக்கும் அளவிற்கு ஸ்ரீமத் ஆண்டவனைச் சுற்றி ஏராளமான சிஷ்யர்கள் அருகிருந்தனர்.

ஸ்ரீமதாண்டவன் வீதி புறப்பாடு கண்டருள நியமனம் ஸாதித்தார். நாதஸ் வர பாண்டு இசைகள் அமுதத்தைப் பெருக்கின. இருமருங்கிலும் கட்டுப் பாடான விளக்குத் தாங்கிகள் வரிசை களுக்குப்பின், ஓங்கி விரிந்த வெண்ணிறக் குடைகள் அவைகளின் உயரத்திற்கேற்ப வரிசையாய் நிறுத்தி வைக்கப்பட்டன. ஸ்வாமி தேசிகனது துதிப் பாடங்களைக் கணீரென்ற குரலில் கம்பீரமாக இசைக் கும் பக்தர்கள் இரண்டு வரிசைகளாக ஸ்ரீமதாண்டவன் முன் கைகோர்த்துச் சென்றனர். அதற்குப் பின்னல் நாதஸ்வர வித்வான்கள், அதற்குப்பின் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்தும் காவலர் படையும், சாரணர் படையும் பின் தொடர, சுற்றி இருக்கும் சிஷ்யர்கள் போட்டியிட்டு முண்டி யடித்துக்கொண்டு நான் - நீ என்று ஸ்ரீமதாண்டவன் அருகிலே போக நடக்கும் மல்யுத்தக் காட்சிகளுடனே ஸ்ரீமதாண்டவன் புறப்பாடு கண்டருளினார்.

நாதஸ்வரம் கம்பீர நாட்டையையும், மல்லாரியையும் முழங்க, டெலிவிஷன் வல்லுனர்களின் காமராக்கள் முடிக்கி விடப்பட்டபோது அவர்களால் எழுந்த மின்னல் போன்ற வெளிச்சம் வீதியை ப்ரகாசிப்பிக்கச் செய்தன. வண்ணமுள்ள மத்தாப்புக்கள், பூச்சொரிந்து இரவு பக லென்று அறிய முடியாமல் வழி நெடுக வீதிக்கு விளக்காயின.

ஸ்ரீமதாண்டவனுக்குப் பின் மூன்று வரிசைகளில் சீரேறு மறையாளர்கள் வலு வான குரல் கொண்டு வேத கோஷம் செய்து கொண்டு வர, ஊர்வலம் ஸ்ரீபுரம் சாலையைத் தாண்டி, ராயப்பேட்டை நெடுஞ்சாலை வழி திரும்பி, ஸ்ரீ ராதா கிருஷ்ணன் சாலையில் திரும்பியது. நகரத் தின் ஜன நெருக்கடியும், ஊர்திகளின் போக்குவரத்தும் மிகவும் உள்ள இந்த சாலையில், மாலை வேளையாதலால் கூட்டம் கரை புரண்டோடியது. காவல் படை யினர் போக்குவரத்து நடமாட்டத்தையும் நிறுத்தி ஊர்வலத்துக்கு வழி விட்டு,



ஸ்ரீ K.K. ஷா தலைமையில் சென்னை இந்து தர்ம மன்றத்தில் ஸ்ரீமதாண்டவன்

புதுவை அரசு வரவேற்பில்
போக்குவரத்து கமிஷனர் ஸ்ரீ ராமானுஜம்
மற்றும் வரவேற்புக்குழு உறுப்பினருடன்



ன்னையில் வரவேற்பு





சென்னை Dr. ராதாகிருஷ்ணன் சாலை ஊர்வலத்தில் சிஷ்யர்களுடன்



நெல்லை கீழ்நத்தத்தில் வரவேற்பு

கூடவே வந்து பந்தோபஸ்து அளித்தனர். செல்வச் சீமான்களும், வயது வந்தவர் களும், தங்களுக்கு நடந்து பழக்கமும் செயலும் இல்லாதிருந்தும் இப்புண்ணி யனது புறப்பாட்டு ஊர்வலத்தில் அனு யாத்ரை செய்வதிலே பேரவா பட்டு கூடவே 4 கி.மீ நடந்து வந்தார்கள்.

வழிநெடுக ஆடவரும், பெண்டிரும், ஸமுதாயத்தின் பலதரப்பட்ட பாதசாரி கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் இவர் கள் எல்லோரும் ஸ்ரீமதாண்டவனை வழி பட்டு வாயாரப் புகழ்ந்தனர். C. I. T. காலனி வழியே ஸ்ரீமதாண்டவன் எழுந் தருளும் பொழுது பரமக்ருபையோடு சுந்தரம் பைனான்ஸ் இயக்குனர் ஸ்ரீ T.A.T. சாரியர் திருமாளிகையில் பொன்னடி சாத்தினர்.

இராயப்பேட்டையில் மாலை 6-30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் மயிலை ஆசிரமம் வந்து சேர இரண்டு மணி நேரம் பிடித்தது. ஊர்வலம் மயிலை ஆசிரமம் வந்தடைந்தபோது ஸ்ரீமத்ஆண்டவனுக்கு ஆரத்தி எடுத்து, மஞ்சள்நீர் சுற்றி, சதிர்த் தேங்காய்கள் உடைத்து ஸ்ரீமதாண்டவனை அலங்காரப் பந்தலில் எழுந்தருளப் பண்ணி னர்கள். மும்மொழிகளில் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன. ஸ்ரீமதாண்டவன் உள்ளம் குளிர்ந்தது. எல்லோரையும் அனுக் ரஹித்தார். அவர்கள் அன்பு தந்த பலந் தான் தனக்கு வலிவூட்டின என்றார்.

இந்த நிகழ்ச்சி முழுவதையும் சென்னை டெலிவிஷன் நிலையத்தார் மறு நாள் 15 நிமிஷ நிகழ்ச்சியாக தங்கள் நிலையத் திலிருந்து ஒளிபரப்புச் செய்தனர். பத்திரிகைகள் பத்தி பத்தியாக இந்த வரவேற்பைப் பிரசுரித்தன. அவைகளுள்

இதைப் பற்றி பிரபல ஹிந்து பத்திரிகை எழுதியது:—

SRIMAD ANDAVAN IN MADRAS

The Hindu Dated 17th, June, 1977.

Madras. June - 17.

"His Holiness Srimad Andavan returned to Madras on June 15, after an interval of two years. Srimad Andavan left the city in July 1975, for an extensive tour 'BY WALK' of pilgrim centres, in North India. During this period he covered Badrinath, Varanasi, Allahabad (At the time of Kumbhamela) and several other Holy places. On his return padayatra he stayed in Hyderabad and before reaching Madras worshipped Lord Venkateswara in Tirumalai.

A reverential welcome was accorded to Him this evening at His Ashram in Mylapore when addresses were presented in English, Sanskrit and Tamil euologising his services to the community.

Mr T. S. Rajam welcoming His Holiness said the 'padayatra' in spite of the physical strain involved demonstrated His will power..".

3-7-77. மைலாப்பூர் பாரதீய வித்யா பவன் ஸர்வமத நட்புறவு மஹாநாட்டில் சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீ ப்ரபுதாஸ் பட்வாரி தலைமையில் மயிலை கீழமாட வீதியிலுள்ள பவன் கட்டிடத்தில் சிறப் பாய் வரவேற்கப்பட்ட ஆண்டவன் "ஸ்ரீ வைஷ்ணவ மதம்" என்கிற தலைப்பில் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினர்.

6-9-77. ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவத்தை யொட்டி மாலை 6 மணி அளவில் ராயப்பேட்டை கௌடியா மடத் தெரு வில் மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ கிருஷ்ண லீலா கண்காட்சியைத் திறந்து வைத்து ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் பற்றி ஸ்ரீமதாண்டவன் உபந்யஸித்தார்.

1-2-78. — 3-2-78. செங்கல்பட்டில் எழுந்தருளியபோது எல்லோரும் எல்லா மரியாதைகளோடும் பூர்ணகும்ப, பெரிய பூ சக்ர குடைகள், சாமரம் திருவடிப்பந்தம் இவைகளுடன் ஊர்வலமாக பட்டிண பிரவேசம் செய்து வைத்தனர். உபநிஷத் பாராயணத்தோடு G. S. T. ரோடு ராஜாஜி தெரு, சின்னசெட்டி தெரு, பெரிய மணிகாரர் தெரு, அழகேசன் தெரு வழியாக ஸ்ரீ T. S. நரசிம்மாச் சாரியர் திருமாளிகையில் எழுந்தருளப் பண்ணினர்கள்.

காஞ்சியில் ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீ பதரீ நாராயணனே மங்களா சாஸனம் செய்த பின்னர், வேங்கடத்தில் ஆடு கூத்தனைக் கண்டு மகிழ்ந்து, அவனே பள்ளி கொள்ளும் அரங்கத் துறைவனைக் காண விரைந்து வருகையில், உத்திரமேரூர் வந்ததும் ஓர் அவா உந்தித்தள்ள காஞ்சி பேரருளாளனைப் போற்றி வணங்க யாரும் எதிர் பாராமல், யாருக்கும் சொல்லாமல் மாகறல் கிராமத்திலிருந்து காஞ்சிக்கு 10-2-78 அன்று ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளினர். அன்று மாலை பல ஊர்களிலிருந்தும் வந்திருந்த சிஷ்யர்களோடு தேவாதிராஜனே மங்களா சாஸனம் செய்ய எழுந்தருளியாயிற்று. கோவில் நிர்வாஹஸ்தர்கள் ஸ்ரீமதாண்டவனே பூர்ணகும்ப மரியாதையுடன் எழுந்தருளப் பண்ணினர். பின்னர் ஸ்ரீரங்க ராஜ வீதியிலுள்ள பாதுகாச்ரமம் எழுந்தருளினர். தேவராஜன் ஸன்னிதியில் பிரதிவாதி பயங்கரம் - மஹாவித்வான் - மஹா மஹிமோபாத்யாய - பத்மபூஷண் - எனப் பலபல பிருதாலங்க்ருதராயும், சமதமாத்யந்த கல்யாண குண பூர்ணராயும், பாரத ராஷ்ட்ரீய உன்னத விருது பெற்றவராயும், ஆழ்வார்கள் அருளிச் செயலாகிற அமிர்தக் கடலில் என்றும் மூழ்கித் திளைக்கின்ற எல்லா அவயவத்துடையவராயும், வயோ விருத்தராயுமெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உ.வே. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி தனது திருமேனி தளர்ச்சியையும் பாராட்டாது, இமயம் தொட்ட ஸ்ரீமதாண்டவனது திருவடியை எட்டிப் பிடித்தாலன்றிவிடேன் என்கிற உண்மைப் பாரிப்போடு ''திருவடி என் தலைமேலவே'' என்கிறபடி, தடுத்து நிறுத்தத் தலைப்பட்ட ஸ்ரீமதாண்டவன் உள்ள நெகிழ்விலை அவர் கண்களினின்றும் உதிர்ந்த கண்ணீர் முத்துக்கள், தெண்டனிடும் பெரியாரின் திருமேனியை நனைக்க, ஸ்ரீமதாண்டவன் திருவடிகளிலே பெரியார் தெண்டனிட்டபோது கண்டோர் கண்களிலெல்லாம் ஆநந்தம் பெருக்கெடுத்து ஓடியது.

இனிமையான - வளங்குன்றுத - வலிமையான - கம்பீரமான தனக்கே உரித்தான ஸிம்ஹநாதம் கொண்டு வடமொழியில் ஒரு வரவேற்புரை ஸ்ரீமதாண்டவனுக்கு வழங்கினர். ஸ்ரீ ஸ்வாமியோடு அன்போடு அளவளாவினர். பேசினர்கள் - பேசினர்கள் - பேசிக்கொண்டே இருந்தார்கள். ஸ்ரீ உ. வே. அத்தி கிருஷ்ணமாச்சாரியர் வடமொழியில் பிறிதொரு வரவேற்புரை வாசித்தார். பிறகு நரஸிம்மன், தாயார், தேவாதிராஜனே மங்களாசாஸனம் செய்த பிறகு, தாயார் புறப்பாட்டினை ஸ்ரீ ப்ர - அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமியின் ஸஹயோகத்தோடு ஸேவித்தருளினர்.

14-2-78. மதுராந்தகத்தில் ஸ்ரீமத ஹோபில மடத்தில் ஸம்ஸ்கிருத பாடசாலையில் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பளித்தனர்.

பாண்டிச்சேரியில் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு அரசாங்க வரவேற்பு

16-2-78. வதரி வணங்கி மயிலையில் சாதுர்மாஸ்யம் கண்டருளி அரங்கம் நோக்கி வரும் அண்ணல் ஸ்ரீமதாண்டவனே புதுவை அரசாங்கம் வரவேற்றுப் பெருமை கொண்டது.

பாண்டிச்சேரி நகர எல்லையில் கோட்டைக்குப்பம் - முத்தியால் பேட்டைப் பகுதியில் மாலை 6.30 மணி அளவில் புதுவை அரசுச் சார்பில் அதன் தலைமைச் செயலர் ஸ்ரீ பார்த்த சாரதி I. A. S. உள்ளாட்சித் துறைச் செயலர் ஸ்ரீ ராமு, I. A. S. ஸ்ரீ ராமானுஜன் Dy. Collector, Central Excise முதலானோரும்; வரவேற்புக் குழு சார்பில் ஸ்ரீ திருமுடி ந. சேதுராம செட்டியாரும், வேதாந்த தேசிக ஸபா சார்பில் ஸ்ரீ மேல்பாக்கம் நரசிம்மாச்சாரியரும், ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் கோவில் சார்பில் புதுவை ஊதியக் கணக்கு வகையரு உயர் அதிகாரி ஸ்ரீ R.S. சாரி முதலானோரும் சத்ர சாமர பூர்ணகும்ப மரியாதைகளோடும், பற்பல வண்ண வெளிச்சம் தரும் விளக்கு வரிசைகளோடும் ஊர்வலமாக எழுந்தருளப் பண்ணி, புதுவை இராமகிருஷ்ண நகரில் ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவப் பெருமாள் ஸன்னிதி வீதியை அடைத்துப் போட்டிருந்த பந்தலில், உயரமான ஒரு பீடத்தில்

யாவரும் கண்டுகளிக்கும் வண்ணம் ஸ்ரீமத் ஆண்டவனே எழுந்தருளப் பண்ணி வர வேற்புப் பத்திரங்கள் பல பாஷைகளில் வாசித்தளித்து தங்களது அன்புப் பெருக் கினைக் காட்டி மகிழ்ந்தனர்.

ஸ்ரீமதாண்டவனே மதுராந்தகத்திலிருந்து பாண்டி வரை அழைத்து வரக் காரணமாயிருந்தவர் ஸ்ரீ இராமானுஜம் என்பவர். ஸ்ரீமதாண்டவனுக்கு ஸஹ்ரு தயரான திருக்குடந்தை ஸ்ரீ ராமா ஆரம்பப் பள்ளி ஸ்தாபகரான இராமா மிர்தாச்சாரியர் மூத்தகுமாரர். கல்லாத் துறையில் பணியாற்றும் புதுவையரசு உயர் அதிகாரியிவரை ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹித்தார்.

19-2-78. அகில பாரத பாண்டிச்சேரி வானொலி நிலையம் ''பாதுகையின் பெருமை'' என்கிற தலைப்பில் ஸ்ரீமத் ஆண்டவன் சொற்பொழிவை ஒலிப்பதிவு செய்து இரவு ஒலிபரப்பினர்கள்.

20-2-78 புதுவையில் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியதையொட்டி ஒரு சிறப்பு மலரை வரவேற்புக் கமிட்டியினர் ஸ்ரீமத் ஆண்டவனைக் கொண்டு வெளியிட்டனர்.

23-2-78. கடலூர் புதுப்பாளையத்தில் ஸ்ரீ திண்டுக்கல் இராமஸ்வாமி அய்யங்கார் ஆங்கில மொழியாக்கம் செய்த ஸ்வாமி தேசிகனின் ''தேவனுயக பஞ்சாசத்'' என்கிற ஸ்ரீகோசத்தை ஸ்ரீமதாண்டவன் வெளியிட்டருளினர்.

2-3-78. நெய்வேலி ஸத் சங்கம், மாத்வ சங்கத்திலும் ஸ்ரீமதாண்டவனுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

திருவரங்கத்தில் ஆசான் விஜயம்; அமோக வரவேற்பு

15-3-78. நமது போற்றுதலுக்குரிய புண்ணியன் ஸ்ரீமதாண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் சென்ற பன்னி ரெண்டு ஆண்டுகளுக்கு மேல் அகண்ட பாரதம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் பாதயாத்ரையாகவே எழுந்தருளி எல்லா திவ்ய தேசத்து எம் பெருமான்களையும் மங்களா சாஸனம் செய்தும், கங்கை முதலான புனித நீர் களில் எல்லாம் குடைந்தாடி, பூர்வாசார்ய பாதுகைகளையும், திருக்குடந்தை தேசிகன் ஸ்ரீ கோபாலார்ய மஹாதேசிகன் ஆராதித்து தத்சமயம் நமது பாதுகாசார்யர்களோடு கூடவே கோயில் கொண்டிருக்கும் வேணு கோபாலனையும், புண்ய தீர்த்தங்களாலே திருமஞ்சனமாட்டி, பாரதத்தின் பல திசைகளிலும் பல முக்கியமான இடங் களில் ஆசிரமங்கள், கோவில்கள், அவை களைப் பேணி வளர்க்கக் கல்யாண மண்டபங்கள் நிர்மாணித்து, பல மக்களை அவரவர் பிறவிப் பேற்றினை உணர்வித்து உத்ஸாகமூட்டி மறுமை வாழ்வை அளித்து, விஜயஸ்ரீ அணைத்து நிற்க தன்னுடான திரு வரங்க மாநகருக்கு 15-3-78 அன்று சீருடனும் சிறப்புடனும் எழுந்தருளினர்.

ஸ்ரீ எம்பெருமானுர்க்குப் பிறகு நம் ஆண்டவன் ஒருவருக்குத்தான் இமயம் முதல் குமரி வரை நடந்தே எழுந்தருளின பெருமையுண்டு எனப் பலகாலம் எழுதியிருக் கிறோம். அத்தகைய மஹானுக்கு அரங்கம் வரும்போது நல்லதொரு வரவேற்பினை யளித்துப் பயனடைய வேண்டுமென்று நல்லோர் பலர் ஆசைப்பட்டு, அவ்வவா வினைச் செயல்படுத்தச் சிறந்த ஆஸ்திகரும் கறையே படியாத புகழுடன் அரசுப் பல துறைகளில் பணியாற்றி, அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் துணை வேந்தர் பதவிக்கு ஒரு பெருமை தேடித்தந்து, மூதறிஞராய் ஞாலம் போற்ற வாழ்கின்ற பெரியார் திரு T. M. நாராயணசாமி பிள்ளையைத் தலைவ ராகக் கொண்ட ஒரு குழு அப்பணியினை ஏற்றது.

15-3-78. காலை திருவரங்கம் தெற்கு நுழைவு வாசல் ஸ்ரீ திருக்குறளப்பன் ஸன்னிதிக்கு எதிரில் ஸ்ரீமதாண்டவனை எதிர் கொண்டழைத்து பூர்ணகும்ப மளித்து, பெரிய பெருமாள் சாற்றிக் களைந்தருளிய மாலைகளை ஸ்ரீமத் ஆண்ட வனுக்கு அணிவித்து, சத்ர சாமரம், யானை முதலிய பார்வேந்தனுக்களிக்கும் பிருது மரியாதைகளுடனும், வேத பாராயண ஸ்தோத்ர பாட கோஷ்டி களுடனும் உத்திர வீதிகளின் வழியாக ஸ்ரீமதாண்டவனை ஸ்ரீ ரங்கநாத பாதுகா

வித்யாலய வரவேற்புப் பந்தலில் வரவேற்றார்கள்.

அன்பர்கள் அனைவருக்கும் ஆராது அருள் பாலிக்கும் அரங்கன், அண்ணல் ஆண்டவனைக் கண்டுகக்க அவாக்கொண்டு அரங்கநாயகியுடன் காத்திருந்தான். ஆத்மார்த்தமாகத் தானுகந்த ஜ்ஞானியும் அழகு பொலியும் திருமேனியும் கொண்ட இவருக்கு எதையளித்து இன்பம் காணலாம் என வாசல் நோக்குகிறான் ஸ்ரீமத்ஆண்டவன் வருகையினைக் காண. தான் செய்ய முடியாத காரியத்தைத் தன் திருவடித் துணைகொண்டு அதனைச் சாற்றி வளர்த்துத் தரணியெல்லாம் தத்தித் தத்தி நடந்து, தர்மத்தைச் சொல்லியும் நிலைநிறுத்தியும் அதன் வழி நடந்து, தஞ்சமடைந்தோரைக் கைதூக்கிவிட்டு, நலிவுறும் போதெல்லாம் தன் பிற உருக்களான அர்ச்சைகளின் பல வடிவழகுகளைப் பல திவ்ய தேசங்களில் எல்லாம் வழிபட்டுத் தம்மை வளப்படுத்திக் கொண்டு, வானும் மண்ணும் புகழ அசைந்தாடி வரும் பெருமகன் வருவான் வரட்டும் என அவனது வரவு பார்த்திருந்தான் போலும்!

ஸ்ரீமதாண்டவனும் தாய் நினைந்த கன்றே போல், அரங்கனது திவ்விய மணி பாதுகைகளின் அருள்தனைக் கண்கூடாகக் கண்டு நிச்சலும் அனுபவிக்கும் உள்ளத் தினராகையாலே, மத்ய ப்ரதேச சஞ்சாரத்தில் ஆசிரம கைங்கர்ய பரர்களையும், நமது ஆசிரம நிதியான ஆசார்யர்கள் பாதுகைகளையும் ஏற்றிய வேன் பின்நோக்கி நகர்ந்து வெள்ளத்தோடு போய் விடுகின்றதொரு அபாய வேளையில் அஞ்சேலென்று அதனைத் தாங்கிப் பிடித்துக் காத்தத் தாமரையன்ன பொன்னரடி அரங்கனிடம் தன் பரம்பரையையும், தம்மையும், காத்தளித்த கருணைக்குத் தமது நன்றியை ஸமர்ப்பித்திட ஸ்ரீமத் ஆண்டவனும் கடிதோடி வந்தார்.

பிரிந்தவர் கூடிலல் பேசவும் வேண்டுமோ? அரங்கன் பேசமாட்டான். ஆண்டவனுக்கோ பேச முடியவில்லை. கண்களிலிருந்து பெருகும் நீரூற்று வற்றவே இல்லை. அரங்கனிடம் அழுகிறார். தொழுகிறார். அவனைக் காண்கிறார். உள்ளத்திலே உவகையும் பெருமையும் உந்தித் தள்ள அரங்கத்துறையும் இன்துணைவனுடன் தான் அனுபவித்த மனங்கொள் இன்பமனைத்தையும் உரைக்கின்றவர்போல் அவனை அணுகி ஸேவித்துத் தெவிட்டாத வராய் பன்னிப் பன்னி ஸன்னிதியிலே நின்றுப் பிறகு தம் நன்றிப்ரவாஹத் திற்குப் போக்குவீடாக (Outlet) திவ்ய தம்பதிகளுக்கு மிக விலையுயர்ந்த பரியட்டங்கள் ஸமர்ப்பித்துத் தன்னிறைவு பெற்றார்.

அன்று மாலை ஸ்ரீரங்கனுத பாதுகா வித்யாலயா வாசலில் அமைந்திருந்த அழகிய பந்தலில் வரவேற்புக் கமிட்டியார் ஸ்ரீமதாண்டவனுக்கு மக்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக வரவேற்பளித்தனர்.

வடமொழியில் வித்வான் திருமலாச்சாரியர் ஸ்வாமியும், தாய் மொழியில் திரு T. M. நாராயணசுவாமி பிள்ளை அவர்களும், வரவேற்புரைகளும், ஸ்ரீநிவாஸநகர் ஆஸ்திகர்கள் சார்பில் ஸ்ரீ ரங்காச்சாரியர் ஓர் வரவேற்புரையும் வாசித்தளித்தனர்.

மஹாவித்வான் மதுராந்தகம் ஸ்ரீ வீர ராகவாச்சாரியர் ஸ்வாமி, கீர்த்தன குல சேகர ஸ்ரீ எம்பார் விஜயராகவாச்சாரியர் ஸ்வாமி, சேஷஸாயீ பொறியியல் கல்லூரி முதல்வர் ஸ்ரீ அநந்த நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமி, பாதுகா வித்யாலயா முதல்வர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் ஸ்வாமி, முதலிய பல பெரியோர்கள் ஸ்ரீமதாண்டவனுடைய கல்யாண குணங்களைப் பற்றியும், செயற்கரிய ஸாதனைகளைப் பற்றியும் பரக்கப் பேசி ஸ்ரீமதாண்டவனுக்குப் பல்லாண்டு பாடினர். முடிவில் ஸ்ரீமதாண்டவன் அருள்மாரி பொழிய ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் செயலர், நன்றி நவில வரவேற்பு விழா இனிதே முடிவு பெற்றது.

பிறகு கோலாகலமான வாண வேடிக்கைகளோடும், இரண்டு ஸெட் நாதஸ்வர இன்னிசையோடும், வேதபாராயண ஸ்தோத்ரபாட கோஷ்டிகள் புடை சூழ நான்கு சித்திரை வீதிகளூடே இதுவரை யாரும் கண்டிராத வகையில் அத்யத்புதமான வகையில் பட்டிணபிரவேசமாக ஸ்ரீமத் ஆண்டவனை எழுந்தருளப் பண்ணிய

வைபவத்தை அங்கே கூடியிருந்த மக்கள் ''கண்டோம் - கண்டோம் - கண்ணுக் கினியன கண்டோம்'' எனச்சொல்லிச் சொல்லி ஸ்ரீமதாண்டவனைக் கண்டுக் கரம் கூப்பி ஸேவித்தார்கள். பெண்டிர்கள் ஆரத்தி எடுத்தனர். ஆடவர் பூர்ண கும்பம் தந்தனர்.

அதே பிருதுகள் பின் தொடர இரவு 10 மணி அளவில் ஸ்ரீமதாண்டவன் பெரியாச் ரமம் எழுந்தருளி பெரியாண்டவனை மங்களா சாஸனம் செய்தருளினர். வழி யில் வெண்ணற்றங்கரை ஸ்வாமியையும் தெண்டன் சமர்ப்பித்தார்.

2-4-78. ஸ்ரீரங்கம் வடக்கு உத்தர வீதியுள் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் நடந்த ''ஸ்ரீ வேதாந்த தேசிக ஸித்தாந்த தேசிக ஸபா''வில் ஸ்ரீ S. R. ஸ்ரீநிவாஸ தாத்தாச்சாரியர் தலைமையில் ஸ்ரீமதாண்ட வனுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

11-4-78. ஸ்ரீரங்கம் வடக்கு உத்திர வீதியில் ஸ்ரீ கீதா மிஷன் சங்கத்தில் வரவேற்பு.

5-78 தஞ்சாவூரில் கோட்டூர் ஸ்ரீ T. திருவேங்கட முதலியார் தஞ்சை நாயகி கல்யாண மண்டபத்தில் வரவேற்பு.

தஞ்சாவூர் கிருஷ்ணகான ஸபையார் வரவேற்பு.

14-2-79. திருநெல்வேலி மாவட்டம் கீழ்நத்தம் அக்ரஹார வாசிகள் பெங்களூர் இண்டர்நாஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் லிமிடெட் தலைமை இயக்குனரும், உரிமை யாளருமான திரு. N. கிருஷ்ணன் தலைமை யில் ஸ்ரீமதாண்டவன் அனந்தகிருஷ்ணபுரம் வந்து தாமிரபர்ணி நதியைக் கடந்து கீழ்நத்தம் கரைக்கு எழுந்தருளியபோது யானை, சத்ர, சாமர, எடுபிடிகளோடு வாணவேடிக்கைகள் முழங்க மஹத்தான வரவேற்பளித்தார்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் வரவேற்புரை வாசித்தளித் தார்கள்.

31-3-79. ஸ்ரீவில்லிபுத்தூர் அத்யாபக தேசிக தர்சன பக்த ஸபா சார்பில் ஸ்ரீமதாண்டவனுக்கு ஸ்ரீ நாச்சியார் ஸன்னிதியில் வரவேற்பு. இரண்டு நாட் களிலும் ஸாயம் ஸ்ரீமதாண்டவனுடைய சொற்பொழிவுக்கும் ஏற்பாடு செய்திருந் தார்கள்.

4-4-79. மதுரை கூடலழகர் ஸன்னிதி யில் ஸ்ரீ தேசிகன் ஸன்னிதியில் வரவேற்பு.

28-6-79. சேலம் இரண்டாவது அக்ர ஹாரத்தில் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸபாவிற்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி ஷி ஸபாவின் மேல்மாடிகட்டும் திருப்பணி யினைத் துவக்கம் செய்தருளியது.

மாலை காமகோடி ஆச்ரமம் வித்யாலயா விற்கு எழுந்தருளி பையன்களை அனுக்ர ஹித்தாயிற்று.

5-7-79. பெங்களூர் செல்லும் யாத்ரை யில் ஹோசூருக்கு அடுத்து 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புதிதாக தொடங் கப்பட்ட T. V. S. ஸ்தாபனமாகிய ''சுந்தரம் க்ளேடன் மொபெட்'' தொழிற் சாலைக் கட்டிடத்திற்கும் பொன்னடி சாத்தி அனுக்ரஹித்தார் ஸ்ரீமதாண்டவன். தொழிற்சாலை நிர்வாஹிகள் கூட இருந் தனர்.

7-7-79. பெங்களூர் செல்லும் பாதை யில் ஹோசூரை அடுத்து பொம்மசந்த்ரா என்கிற இடத்தில் இண்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் எலக்ட்ரானிக் பிரிவின் தொழிற்சாலை கட்டப்படவிருக்கும் ஸ்தலத்தில் மேற்சொன்ன நிறுவனத்தின் நிர்வாஹகரும் உரிமையாளருமான ஸ்ரீ N. கிருஷ்ணன் குமாரர் ஸ்ரீ பதரியால் வரவேற்கப்பட்டு ஸ்ரீமதாண்டவன் அந்த இடத்தில் பாதுகாசார்யர்களை எழுந் தருளப்பண்ணி ஆராதனம் செய்து அனுக் ரஹித்தாயிற்று.

பெங்களூரில் ஸ்ரீமதாண்டவனுக்கு மஹத் தான வரவேற்பு

8-7-79 அன்று காலை எட்டு மணி அளவில் ஹோசூர் ரோடில் அமைந்துள்ள இண்டர் நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் தொழிற் சாலை முகப்பில் மேளவாத்ய மரியாதை எடுபிடிகளோடு கம்பெனியின் அதிபர் ஸ்ரீ N. கிருஷ்ணன் ஸ்ரீமத் ஆண்டவனை

வரவேற்று தொழிற்சாலையையும் அதன் விரிவுபடுத்தப் படுகிற பகுதிகளையும் கடாக்ஷித்தருள கூடவே அழைத்துக் கொண்டு போய் எல்லாவற்றையும் காண்பித்து அனுக்ரஹம் பெற்றார்.

அங்கிருந்து சுமார் காலை 10 மணியளவில் பெங்களூர் அசோகன் ஸ்தூபி அருகில் ஜய நகரில் ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் ஸ்ரீ ராமாஞ்ஜநேய ஸன்னிதிகளிலிருந்து, ஸ்ரீ சடாரிகளை முன்னே எழுந்தருளப் பண்ணி ஸகலமரியாதைகளோடு அரம்பை யர் ஆரத்தி எடுத்தும், அன்பர்கள் சதிர்த்தேங்காய்களை உடைத்தும், ஸ்ரீமத் ஆண்டவனுக்கு திருஷ்டி கழித்து ஊர் வலமாய் பாதுகாச்ரமத்திற்கு எழுந்தருளப் பண்ணினார்கள்.

பக்தியிலும், பரவசப் படுத்துவதிலும் பெங்களூர் வாசிகளுக்கு ஒப்பாரும் மிக் காரும் இல்லை. ஸ்ரீமதாண்டவனுக்குப் பெங்களூர் விடை கொள்ளும் போதெல் லாம் பிறந்தகம் போகும் ஒரு பெண் ணிற்குள்ள மனோபாவம் இருக்கின்றது. பெங்களூர் சென்றதும், பெண் வீடு தன் பெண்ணைச் சீராகக் கவனித்துக் காப்பதுபோல் பெங்களூர் வாஸிகள் ஸ்ரீமத் ஆண்டவனிடத்தில் பரிவை - பாசத்தைக் காட்டித் திருமேனியிலே கண்ணும் கருத்து மாய்க் கவனித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் பெற்ற பேறு வையத்தில் யாரும் பெற்றதில்லை என்பதில் பொருமைபட்டுப் பயனில்லை.

28-1-80. பெங்களூர் ஓயிட் பீல்ட் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள தக்ஷிணபாரத மாதர் சங்கத்தில் ஸ்ரீமத் ஆண்டவனுக்கு வரவேற்பு.

14-2-80. ஸ்ரீரங்கம் வடக்கு உத்தர வீதியில் ஸ்ரீ புத்தங்கோட்டம் ஸ்வாமி திருமாளிகையில் ஸ்ரீ மதுராந்தகம் வீர ராகவாச்சாரியர் ஸ்வாமி சதாபிஷேகத்தை யொட்டி நடைபெறும் வித்வத் ஸதஸ் ஸுக்கு எழுந்தருளியது. அங்கு முன்பே எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகிய சிங்கர் சீரிய சிங்காதனத்தினின்றும் எழுந்திருந்து ஸ்ரீமதாண்டவனை இன்முகங்கொண்டு வர வேற்று, நலங்களை நயமுடன் விசாரித்து இருக்கையில் அமர்த்தி வரவேற்றது கண் கொள்ளாக் காட்சி.

நிறுவிய அறக் கட்டளைகள்

ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்திற்குச் செய்துகந்த நற்பணிகள் போல் கல்வித் துறையிலும் நிலையான தர்மங்களைச் செய்து போந்தார். ஆன்மீகக் கல்வியைக் கற்பிக்கவும், ஆச்ரமத்தின் நடைமுறைகள் முறைவில்லாமல் நடந்து வரவும், நிர் மாணித்த கல்வி நிலயங்களைக் கட்டிக் காக்கவும் அறக்கட்டளைகளை ஏற்படுத்தி யிருக்கிறார். இதில் சிஷ்யர்கள் பலர் அங்கம் வஹித்து ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்தின் அடியொற்றிக் கைங்கர்யங்கள் செய்து வருகிறார்கள். அவைகளுள் ஸ்ரீ ரங்கநாத பாதுகா வித்யாலயா அறக்கட்டளையும், சென்னை ''பாதுகா சாரிடீஸ்'' அறக் கட்டளையும் முக்கியமானவை.

ஸ்ரீ பாதுகா சாரிடீஸ், சென்னை

இந்த அறக்கட்டளை சென்னை மயிலாப் பூர் தேசிகாச்சாரியர் தெருவிலுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்தைத் தலைமைய கமாகக் கொண்டு இயங்குகிறது. இது ஸ்ரீ பாதுகாச்ரமத்தோடு இணைந்திருக்கும் திருக்கல்யாண மண்டபத்தையும், சென்னை ஸ்ரீராம் நகர் தெற்குத் தெருவிலுள்ள ''ஸுஜாதாதர்ம வைத்திய சாலை''யையும் நிர்வஹிக்கிறது. மேலும் அவ்வப்போது தர்மோபநயனங்களையும், ஆன்மீகச் சொற் பொழிவுகளையும், வேத திவ்யப்ரபந்த பாராயணங்களையும் நடத்திக் கொடுக் கிறது. அத்துடன் ஸ்ரீமதாண்டவன் ஆசிரமத்து மாதப் பத்திரிகையான ஸ்ரீரங்கநாத பாதுகாவையும் இது நிர்வஹிக் கிறது. இதில் அங்கம் வஹிக்கும் பெரி யோர்கள்

ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸன் அட்வகேட், தலைவர்.

ஸ்ரீ M. ஸ்ரீநிவாஸன் அட்வகேட், செயலர்.

ஸ்ரீ A. S. V. வரதாச்சாரியர், உறுப் பினர்.

ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸ வரதாச்சாரியர், உறுப்பினர்.

ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன், (ஹால்ஸ் ரோடு) உறுப்பினர்.

ஸ்ரீ V. ஸ்ரீநிவாஸன் அட்வகேட், உறுப் பினர்.

ஸ்ரீ T. M. ரகுநாதன், உறுப்பினர்.

ஸ்ரீ V. ரெங்காச்சாரியர் (பெங்களூர்) உறுப்பினர்.

அறக்கட்டளை நிறுவிய காலத்தில் தலைவ ராக இருந்த ஸ்ரீ T. S. ராஜம் உடல்நலக் குறைவினால் தனது இயலாமையை அறி வித்ததால் அந்த ஸ்தானத்தை ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸன் பூர்த்தி செய்தார்.

ஸ்ரீ பாதுகா வித்யாலய அறக்கட்டளை

இது ஸ்ரீரங்கம் கீழ உத்தர வீதி யிலுள்ள ஸ்ரீ ரங்கநாத பாதுகா வித்யா லயத்தை நிர்வஹிக்கிறது. ஸ்ரீமத் ஆண்ட வன் நியமனங்களைச் செயல் படுத்துவது மட்டுமல்லாமல் இதில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், பயில்விக்கும் ஆசிரியர்களுக்கும் வேண்டிய ஸௌகர்யங் கள் செய்து தருகின்றது.

இதில் தற்சமயம் 31 வித்யார்த்தி களும் 5 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். மாணவர்களுக்கு வேத, சாஸ்திர, திவ்ய ப்ரபந்த பாடங்கள் போதிக்கப் படு கின்றன. இவர்கள் வித்யாலயத்திலேயே தங்கி கல்வி கற்க வஸதிகள் செய்து தரப்படு கின்றன. ஆசிரியர்களுக்கு இலவசமான இடவஸதியுண்டு. மாணவர்களுக்குத் தங்கி இருக்க இடமும், இலவசமாக, உணவும், உடுக்கையும் வழங்கப் படுகின்றன. அரசாங்கப் பரீக்ஷைகளுக்கான பாட திட்டங்கள்படி சாஸ்த்ர பாடங்கள்

போதிக்கப்பட்டு மாணவர்கள் அரசாங்க பரீக்ஷைகளுக்கு அனுப்பப் படுகிறார்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் (Course) ஆண்டு கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவை களில் பயிலும் ஒவ்வொரு மாணவனுக் கும் மாதம் உபகாரச் சம்பளமும், அதே அளவுள்ள தொகை அவர்களது பெற் ரோருக்கும் தரப்படுகிறது. குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சியும் நிறைவும் பெற்ற மாணவனுக்கு இறுதியில் கணிசமான தொகை அளிக்கப்படுகிறது. இதன் தொகை மாணவன் பயின்ற பாடங்களுக் கேற்ப வித்யாசப்படும். சாஸ்த்ர தேர்ச்சி பெற்ற மாணவனுக்கு ஸ்ரீமதாண்டவன் காலக்ஷேபம் ஸாதித்தருளுவது மட்டுமன்றி அவனுக்கு ப்ரத்யேகமாக ஸம்பாவனை களும் செய்தருளுகிறார். இந்த அறக் கட்டளையின் தற்சமய நிர்வாஹஸ்தர்கள் பின் வருமாறு.

ஸ்ரீ T. S. ராஜம், தலைவரும் நிறுவனரும்;
ஸ்ரீ T. S. சுரேஷ்கிருஷ்ணா, உறுப்பினர்.
ஸ்ரீ V. ரெங்காச்சாரியர் (Tamco) பெங்களூர், உறுப்பினர்.
ஸ்ரீ M. ஸ்ரீநிவாஸன் (அட்வகேட்) சென்னை,
ஸ்ரீ சாரங்கன் (அட்வகேட்) பெங்களூர், உறுப்பினர்.

வித்யாலயத்தின் அன்றாடத் தேவை களைச் செய்து தரவும், நிர்வாஹத்தின் கட்டளைகளைச் செயல்படுத்தவும் ஒரு அலுவலர் (care Taker) வித்யாலயத்தி லேயே உண்டு. தவிர ஆசிரமத்து வளர்ச்சிக்குத் தேவையான எல்லாநற்பணி களிலும் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்தை அப்படியே நிறைவேற்றித் தருகின்றது இந்த அறக்கட்டளை.



இமயத்தினுச்சியில் இணையிலா ஆசான்
—பதரிகாச் சிரமம் படிகளில்



ஸ்ரீ பெரியாச்ரமத்தில் பகவதாராதனம்



திருவரங்கம் இராஜகோபுர
இரண்டாம் நிலை நிர்மாணம்



திருவரங்கம் இராஜகோபுர
இரண்டாம் நிலை நிர்மாண
அலுவலர்களோடு
ஸ்ரீமத்தாண்டவன்



திருவரங்கம்
இராஜகோபுர
இரண்டாம் நிலை நிர்மாண
மேற்பார்வை



எழில்மிகு பரம்பரையில் ஏற்றமுடை
ஆசார்யன் ஸ்ரீரங்கம் பெரியாச்சரமம்,
காலக்ஷேப கூடம்

ஸ்ரீ :

ஸ்ரீரங்கம் தெற்கு கோபுர இரண்டாம்நிலை நிர்மாணம்

ஸ்ரீரங்கம் தெற்கு வாயிலில் தொடங்கி இருக்கும் ராஜ கோபுரம் இதுகாறும் பல்லாண்டுகளாக எழுப்பப் படாமல் மொட்டையாக இருப்பது நாடு நகரமும் நன்கறிந்த செய்தியாகும். ஸ்ரீபரமஹம் ஸேத்யாதி விசேஷண ஸம்பன்னராய் ஸ்ரீ அஹோபிலமடம் 44-வது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அழகியசிங்கர், 13 நிலைகள் கொண்டதாக இக்கோபுரத்தை எழுப்பி நிர்மாணம் செய்ய முன்வந்துள்ளது பாராட்டிற்கும் வியப்புக்குமுரியதாகும்.

ஸ்ரீ ராஜகோபுரத்தின் பெருமை, ஆகம சாஸ்திரங்களில் பரக்கப் பேசப் பெற்றுள்ளது. பகவான் எழுந்தருளியுள்ள கர்ப்ப கிருஹத்தின் விமானத்துக்குள்ள சிறப்பினைத்தும், இராஜகோபுரத்துக்கும் பொருந்தியுள்ளதாகப் போற்றப்பட்டு உள்ளது.

ஆயிரக்கணக்கான தலைகளையும், கண்களையும், கூந்தல்களையும், மகுடங்களையும், ஊர்திகளையும் கொண்டவனும், பல்லாயிர உயிரினங்களைப் காப்பவனும், ஆயிரங் கதிரவனையொத்த பொலிவுற்றவனும், ஆயிரம் சந்திரர் போன்ற முகமுள்ளவனும், திசையனைத்திலுமமைந்த மூக்குடையவனும், சங்கு, சக்கரம், கதைகளைக் கையிலேந்தியவனும், ஏனைய படைக்கலமனைத்தையும் தாங்கியவனும் கோபுர நிலைகள் வடிவினனுமான இறைவனைக் கண்ணுற்றவர் வீடு பேற்றினையெய்துவர் என்ற கருத்தைத் தாங்கும் கீழ்க்காணும்

''ஸஹஸ்ரசீர்ஷம் புருஷம், ஸஹஸ்ராக்ஷம் ஸஹஸ்ரபம்
ஸஹஸ்ரகுந்தளோபேதம், ஸஹஸ்ர மகுடாந்விதம்
ஸஹஸ்ராதித்ய ஸங்காசம், ஸஹஸ்ரேந்து நிபாநநம்
ஸஹஸ்ரவாஹநைர்யுக்தம், ஸர்வதிங்நா ஸிகான்விகம்
சங்கசக்ரகதாபாணிம், ஸர்வப்ரஹரணான்விதம்
ப்ராஸாத ரூபிணம்தேவம், த்ருஷ்டவா''

இச்சுலோகங்களைக் கூர்ந்து நோக்கின், கோபுரத்தைப் பகவானுடைய மூர்த்தியாகவே கருதித் தியானஞ் செய்ய வேண்டுமென்பது உய்துணரப்படுவதாம். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற தமிழ் மூதுரை இதனை வலியுறுத்து மன்றே! திருக்கோயினுட்புக்குப் பகவானை ஸேவிப்பதால் கிட்டும் பேறு, கோபுரத்தைத் தர்சனம் செய்தவளவிலே கிடைக்கின்றது.

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர் பதின்மூன்று நிலைகளுள்ளதாக இக் கோபுரத்தைத் தாமே கட்டுவதாகத் தொடங்கி எட்டு லக்ஷம் ரூபாய் செலவு கொண்ட அஸ்திவாரத்தைப் பூர்த்தி செய்து முதல் நிலையையும் கட்டி முடித்துள்ளார். மிக்க ஊக்கத்துடன் இப்பணியினைச் செய்து வருகிறார். இரண்டாவது நிலையைக் கட்டி நிறைவேற்றும் பணியை மேற்கொள்ளுமாறு ஸ்ரீமதாண்டவனிடம்

அன்னூர் வற்புறுத்திக் கூறினர். இது ஒரு ஸாஹஸமான கார்யமே! யதீச்வரரான அவர் தொடங்கிய இம்மாபெரும் கைங்கர்யத்தில் தாம் ஈடுபடுவதை நினைத்து வெள்கிப் போய் ஸ்ரீமதாண்டவன் விலவறச் சிரிக்கும் படியாயிற்று. 'பாலப்லவக இவ தரள: மாருதி ஜாதிரிதி ஸாகரம் தரிதுமநா: ('அநுமன் இனத்தவனெனக் கருதிக் கடலைத் தாண்டமுனைந்த சிறு குரங்கைப் போல') என்பதாக ஸ்ரீ தேசிகன் திருவாய் மலர்ந்தருளிய ''அச்யுதசதக''ப் பகுதியை நினைவு கூர்ந்தார். சாணி தட்டி உயிர் வாழும் குறத்தி, மன்னர் மன்னனுடைய இளங்குமரனைத் தழுவிக் கொள்ள விரும்புமாபோலாகிறது இம் முயற்சி என்று அதைர்யப்பட்டார் ஸ்ரீமத் ஆண்டவன். ஆயினும், பெரிய பெருமாள், ஸ்ரீரங்க நாச்சியார், பெருமாள் திருவடி நிலைகள் என்னுமிவர்களைப் பற்றுக் கோடாகப் பற்றித் துணிவுடன் இக் கைங்கர்யத்திலிறங்கினர்.

அதற்காக, இதற்கு முன் ஸ்ரீமத் ஆண்டவன் ஏற்றுக்கொண்ட திருவெள்ளியங்குடி கோலவில்லிராமன் திருக்கோயில் ஜீர்ணோத்தாரணப் பணியை விரைந்து முடித்துவிட்டுக் கோயிலுக்குத் (ஸ்ரீரங்கம்) திரும்ப எண்ணங்கொண்டு, திருக்குடந்தைக்கு வந்து, காவிரிக் கரையிலே, சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டித்து ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். இங்கு வந்தது, ஷை இரண்டாம் நிலைக் கைங்கர்யத்தை ஸ்ரீமதாண்டவன் நிறைவேற்றித் தர பாதுகாசார்யர்கள் துணைகொண்டு ஸங்கல்பித்துக் கொண்டார். இத்திருப்பணியில் திரவிய ஸஹாயத்தை மட்டிலும் ஸ்ரீமதழகியசிங்கரிடம் ஸமர்ப்பிக்க எண்ணமிட்ட தம்மை கைங்கர்யத்தில் ஈடுபடுத்திய அரங்கனைப் போற்றினர்.

சென்னையில் ஸ்ரீமதாண்டவனிடம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் காலக்ஷேபம் கேட்ட ஒரு ஸ்ரீ வைஷ்ணவர்—பெரிய தொழிலதிபர், முப்பத்திரெண்டாயிரம் ரூபாய் கொண்டு வந்து, 'அடியேன் காலக்ஷேபம் செய்த க்ரந்தத்தின் அதிகார எண்ணுள்ள இத்தொகை, இராஜகோபுரத்துக்காகப் பயன்படட்டும்' என்று கூறி ஸமர்ப்பித்தார். க்ரந்த சதுஷ்டயம் கால க்ஷேபம் செய்தவரும் ப்ரபல வக்கீலும், பெரிய பெருமாளிடம் மிகுந்த பக்தியுள்ளவருமான ஆச்ரமசிஷ்யர் ஸ்ரீ வைஷ்ணவர் ரூ. 10,000 ஸமர்ப்பித்தார். சென்னையிலிருக்கும் ப்ரபல தொழிலதிபரும் அத்வைத ஸித்தாந்தியுமான ஒருவர், தம்மிடத்தில் உத்யோகத்திலிருக்கும் ஆச்ரம சிஷ்யர் மூலம் ரூ. 10,000 கொடுத்தனுப்பினர்.

பெங்களூரிலிருக்கும் ஓர் கிறிஸ்துவ மாது ரூ 5000 கொடுத்தார். அவர், பால்யத்தில் ச்ரேஷ்டி குலத்தைச் சார்ந்தவர். பின்னர் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியவர்; அவர் இளம் பிராயத்தில் பதின்மர் பாடிய பெரிய பெருமாளிடத்தில் ஈடுபட்டிருந்தவராம். நம் பெருமாள், அவரிடம் கனவிற் கூறியபடி ஷை தொகையை ஒரு நண்பர் மூலம் கொடுத்தனுப்பியுள்ளார். ஸ்ரீமதாண்டவனும் அத்தொகையை அங்கீகரித்தாயிற்று. இவைகளிலிருந்து வேண்டிய பொருள் கிடைக்குமென்ற நம்பிக்கை நெஞ்சிலே நிறைந்தது.

சித்தார்த்தி ஸ்ரீ ஆடிமாதத்து ஸ்ரீ நருஸிம்ஹப்பிரியாவில், ஸ்ரீ அழகியசிங்கர், சென்னையில் ஒரு முஸ்லீம் ரூ 1000 கொடுத்ததாகவும் ''பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மின் ம்லேச்சேபி வர்த்ததே தஸ்மை தேயம் ததா க்ராஹ்யம், ஸபூஜ்யோ யதாஹ்யஹம்''.

என்ற ப்ரமாணத்தையும் எடுத்துக்காட்டி அந்த த்ரவ்யத்தையும் அங்கீகரித்துள்ளதாக எழுதியிருக்கிறார். இது ந்யாயமே; அதுதான் தர்மம். 'அநாலோசித விசேஷாசேஷ லோக சரண்ய' என்கிறார் ஸ்ரீ பாஷ்யகாரர் நம்பெருமாளை. ஸ்ரீ ராமாநுஜர் காலத்துக்கு முன்பு, இந்தியாவை ஆண்டுவந்த ஒரு மொகலாய சக்கரவர்த்தியின் பெண், பெரிய பெருமாளிடம் ஈடுபட்டு, டெல்லியிலிருந்து வந்து ஐக்யமானாள் என்னுமோர் ஐதிஹ்யமுண்டு. இதனைக் காட்டும் அறிகுறியாக ''துலுக்க நாச்சியார் ஸன்னிதி'' என்ற ஒரு ஸன்னிதி கிளி மண்டபத்தில் அமைந்துள்ளது. அந்த நாச்சியார் சித்திர வடிவில் அங்கு அமைந்துள்ளார். நம் பெருமாள், எழுந்தருளும்போது இங்குக்

கற்பூரார்த்தி ஸமர்ப்பித்தபின் எழுந்தருளுவது மரபு. அந்த நாச்சியாருக்காக, நம் பெருமாள், திருமஞ்சன காலத்தில் கைலி வஸ்திரம் தரித்துக்கொள்ளுதல், ரொட்டி வெண்ணெய் அமுது செய்தல், மருத்வாண்டத்தில் தளிகை செய்ததைக் கண்டருளுதல், ஆங்காங்கு (வெற்றிலை) அடைக்காய் ஸமர்ப்பிக்குங்கால் முன் பக்கத்தில் சுண்ணத்தைத் தடவியதைக் கண்டருளுதல் முதலியவை நடைமுறையில் உள்ளன. 'பக்தி: கிம் ந கரோதி ஹந்த யவனீ ஜாத்யாதி பக்தாயதே' என்றல்லவோ பெரியோர் வாக்கு!

ஸ்ரீமதாண்டவன் ஒரு நாள் காலையில், ஆச்ரமத்தின் வாசலில் உட்கார்ந்திருக்கும்போது, முதிர்ந்த வயதுள்ள ஒரு மாது, 'இருபது பைசா கொடுங்கள், மிகுந்த பசியாயிருக்கிறது' என்று கேட்டாள். உடனே பக்கத்திலிருந்த ஒருவரிடம் கொடுக்கும்படி ஸ்ரீமதாண்டவன் நியமனம் செய்தார். அவரும் அவ்வாறே அவளிடம் கொடுத்தார். அவள் அதைப் பெற்றவளவில், தன் ஆடைத் தலைப்பிலிருந்த சில்லறைகளுடன் அதைச் சேர்த்து இரண்டு ரூபாய் பணத்தை ஸ்ரீமதாண்டவன் முன்னர் வைத்தாள். ''இராஜகோபுரத்துக்கு ஏதேனும் ஸமர்ப்பிக்கவேணும் என்று நினைத்தேன். யாசித்து வந்தேன்; இன்று 2 ரூபாய்க்கு 20 பைசா குறைந்தது. அதனை இங்கு யாசித்துப் பெற்ற இத்தொகையைக் கொடுக்கிறேன்'' என்று கூறி, மல்கிய கண்ணீருடன் நின்றாள். உடனே ஸ்ரீமத் ஆண்டவன், 'அண்வப்யுபஹ்ருதம் பக்தைப்ரேம்ணைபூர்யேவ மே பவேத்' என்ற ரீதியில் இந்த 2 ரூபாய் தான் பெருமாளுக்கு மிக உகந்ததாயிருக்கும் என்று நினைத்து கண்ணீர் பெருக்கியாயிற்று. பழையது ப்ரஸாதம் வைத்துக் கொண்டு காத்திருக்கும் ஒரு பாட்டியம்மைக்காக, பங்குனி மாத வெய்யிலில் 10 மைல் போகும் பெரிய பெருமாளுக்கு, இந்தக் கிழவியின் பக்தி உகப்பாயிருக்கும் என ஸாதித்தருளினார் ஸ்ரீமதாண்டவன்.

ஆக, இந்தச் சுப ஸம்சகங்களால், இந்த இரண்டாவது நிலைக் கைங்கர்யத்தை ஸ்ரீமதாண்டவனைக் கொண்டே பெரிய பெருமாள் தலைக்கட்டிடத் திருவுள்ளம் கொண்டான் போலும்! எனவே ஆசிரமத்தில் பாதுகாராதனஸமயத்தில் தினந்தோறும் குரு பரம்பரா நுஸந்தானத்தில், 'ஸ்ரீ ரங்கநாத திவ்ய மணிபாதுகாப்யாம் நம:' என்பதை, 'லஜ்ஜாம் விஸ்ருஜ்ய யோதீதே' என்ற ரீதியில் அனுஸந்தித்து வரும் ஸ்ரீமத் ஆண்டவன் பெரியாச்ரம சிஷ்யர்களும் அபிமானிகளும் யதாசக்தி த்ரவ்ய உபகாரம் செய்யுமுகமாக பல லக்ஷம் செலவாகும் இக்கைங்கர்யத்தில் அந்வயித்து, க்ருதார்த்தர்களாக வேணும், என்கிற ஸ்ரீமதாண்டவன் நியமனத்தை ஏற்று ஏராளமான பக்தர்கள் அன்பர்கள், சிஷ்யர்கள் இன்றும் கொடுத்த வண்ணமிருக்கிறார்கள்.

திருவழுதிவளநாட்டைச் சேர்ந்த மற்றொரு பக்தர் ரூ. 25,000 கொண்டு வந்து கொடுத்தார். இவர்களுடைய திருநாமங்களையும், இனி கோபுர கைங்கர்யத்துக்கும் பொருளுதவி செய்யப்போகும் பக்தர்களின் திருநாமங்களையும், இரண்டாவது கோபுர நிலைக் கைங்கர்யம் பூர்த்தியான பின்பு, பரக்க அறிவிக்கப்பட இருக்கிறது. இரண்டாவது நிலைகைங்கர்யம் தொடங்கப்பட்டு நடந்து கொண்டு வருகிறது. பாதிக்குமேல் பூர்த்தியாகி விட்டது.

பங்குனி மாத முடிவிற்குள் ஸ்ரீமத் ஆண்டவன் மனோரதித்தபடியே ஸ்வாமி மேற்கொண்ட இரண்டாவது நிலை கைங்கர்யம் பூர்த்தியாகி விடுகின்ற முறையில் கட்டிட வேலைகள் விரைவாக நடக்கின்றன.

புகழ் மாலைகளும் சொல்லாரங்களும்

ஸ்ரீவானமாமலை ஸ்ரீராமானுஜ ஜீயர் ஸ்வாமி

''ஸ்ரீமத் உபய வேதாந்தங்களிலும் ஸம்யக் அவகாஹித்து ஸரஸமான முறையில் மிகவும் ஸாரமான அர்த்த விசேஷங்களை உபதேசித்துக் கொண்டு ப்ரக்ருதத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்தானத்தை அலங்கரித்து எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமதாண்டவன் பல்லாண்டு பல்லாண்டுகள் இப்படி ஜகத் உஜ்ஜீவன கார்யங்களால் அனுக்ரஹித்துக் கொண்டு எழுந்தருளியிருக்க எம்பெருமான் ஸன்னிதியில் ப்ரார்த்திக்கிறேம்'.

திருக்குறுங்குடி ஸ்ரீபேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

''துரீயாச்ரம நிர்வஹணத்திற்கு அவசியாபேக்ஷிதங்களான ஜ்ஞானானுஷ்டான வைராக்யாதி கல்யாண குணகணங்களினால் ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருக்கிறீர். ப்ரக்ருதத்தில் பாதசாரியாக திவ்யதேச யாத்திரை மேற்கொள்வது துர்லபமாகி விட்டது. இந்த ஸ்வாமி அனாயாஸமாக பாதசாரியாகவே யாத்திரை மேற்கொண்டு திவ்யதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளின திடவைராக்யம் ஆச்சரியமானது. யாத்ராமார்க்கமத்தியில் ஆங்காங்கே எம்பெருமானார் தர்சனமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும், ஆழ்வார் அருளிச் செயல் ரஹஸ்யங்களையும் உலகோர் போற்றும் வகையில் எளிய நடையின் உபந்யஸித்துக்கொண்டு எழுந்தருளுகிறீர். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பேரில் இதர மதாந்தஸ்தர்களின் துவேஷம் அதிகரித்து வரும் இந்நாளில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் செய்து வரும் பணி வாசாமகோசரம். பரம ஸாத்விகரான இந்த ஸ்வாமியின் ப்ரதிபா சக்தி பரம விலக்ஷணமானது. உபயவிபூத்யைச்வர்யங்களையுமுடைய எம்பெருமானார் திருநாமத்தையும், கவிதார்க்கிக ஸிம்ஹமான தேசிகனது திருநாமத்தையும் ஒருங்கே பூண்டவராதலால் ஸகல ஐச்வர்யங்களும் இந்த ஸ்வாமியிடம் பூர்ணமாக இருக்கிறது...''.

ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஆசிரியர், ''ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்''

''அனைவராலும் ஆதரிக்கப்பட்டுவரும் ஸ்ரீவைஷ்ணவ மதத்தை இக்காலத்திலும் நிலைநாட்டி வரும் விஜயஸ்தம்பம் போலே எழுந்தருளியிருப்பவராய், அதனாலேயே ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்தாசார்யர் என்னும் விருதுக்கு முக்கிய லக்ஷ்யமாயிருப்பவராய், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹா தேசிக ஸ்வாமி இந்நிலவுலகுய்யும்படியாக நீண்ட காலம் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று ஸ்ரீமந் நாராயணனைப் ப்ரார்த்திப்போமாக''.

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி மஹா மஹிமோபாத்யாய மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி

''எழுபத்தாறுவது ப்ராயப் பூர்த்தியிலிருக்குமடியேன் அறுபதாண்டு பூர்த்தியிலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஸ்வாமியை அறியாக் காலத்திலிருந்தேயறிவேன். ''விஹார சய்யாஸன போஜனேஷு'' என்று அர்ஜுனன் ப்ரஸ்தாவித்த விஹாராதிகள் அடியேனுக்கும் ''கண்ணன் ஸ்வாமிக்கும்'' நேர்ந்தவளவு கிருஷ்ணர்ஜுனர்களுக்கு நேர்ந்திராது என்பது திண்ணம். ஸௌலப்ய

ஸௌசீல்யங்களே வடிவெடுத்த கண்ணபிரானிடத்திலே பரத்துவம் பொலிந்த பேச்சுக்களைப் பேசினதற்குத் தான் க்ஷமை கொள்ள வேண்டுமென்று ஆய்ச்சிகளின் கருத்தாக இருந்தது. அதேபோலே அடியேன் ஸ்ரீஸ்வாமியென்று எழுதுவதற்கு க்ஷமை வேண்டவேணுமென்று நினைக்கின்றது அந்தரங்கம்''.

''பரிஷ்கரிக்க வேண்டாமல் ஸுபரிஷ்க்ருதமான ப்ரவசனப்ரணாளியை ஸ்ரீஸ்வாமி பக்கலில் நாடு நகரமும் நன்கு கண்டிருப்பதால் இதனை அடியேன் விவரிப்பது மிகையென்று நிற்கிறேன். வைதுஷ்ய வாக்மித்வங்களுக்கு மேற்பட விளங்கும் ராஸிக்ய ஸௌசீல்ய ஸௌஜன்யாதிகளை அடியேன் அனுபவிக்க நேருங்காலங்களில் ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவனுடைய ஆவேசாவதாரமென்றே அறுதியிட்டிருப்பேன்''.

ப்ரஹ்மஸ்ரீ சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர் அவர்கள்

''பூர்வாச்ரமத்திலேயே இவர்களுக்கு ஸ்ரீ ஆண்டவனிடத்திலுள்ள குணங்களெல்லாம் அமைந்திருந்தன. இப்பொழுது அவர்களுக்கு இருப்பது ஆச்சரியமில்லை. இவர்கள் பகவானுடைய குணங்களை உபந்யஸிக்கும் போது, சொற்களைத் தேடி எடுக்காமல், கங்கா ப்ரவாஹம்போல் அனாயாஸமாய் உபந்யாஸம் செய்வார்கள். பழங்களின் ரஸத்தை எடுத்துக் கொடுப்பதுபோல் உபந்யாஸம் அமைந்திருக்கும். முதன்முதலில் சென்னையில் இவர்கள் திருப்பாவை உபந்யாஸத்தைக் கேட்டேன். ஸ்ரீ ஆண்டவனே நேரில் உபதேசித்தால்கூட இவ்வாறு கூற முடியுமா என ஆச்சரியப்பட்டேன்''.

ஒப்பிலியப்பன் ஸன்னிதி ஸ்ரீ உ.வே.ந. சேஷாத்ரியாசார்யர் ஸ்வாமி

''நம் ஸ்வாமி இளமையில் ந்யாய சாஸ்த்ரத்தை அதிகரித்து அதில் வ்யவஹார சக்தியையும் பெற்றிருந்தது பிற்காலத்தில் நாம் இப்போது அனுபவிக்கும் தேனிலுமினிய சொற்பொழிவுகளுக்கு மூலகாரணமாகும். பூர்வாச்ரமத்திலேயே ஆயிரக்கணக்கில் உபந்யாஸங்களைச் செய்து நாவீறு பெற்ற நம் ஸ்வாமி உத்தமாச்ரமத்திலும் தம்முடைய ஆச்ரம தர்மங்களுக்கு வழுவின்றி நாடு முழுவதும் யாத்திரை செய்து அம்ருததாரையான உபந்யாஸங்களால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் செய்துவரும் கைங்கர்யத்திற்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் நன்றியறிவுடனிருக்கப் ப்ராப்தம்''.

ஸ்ரீ உ.வே. R. V. சேஷாத்ரி, அட்வகேட், சென்னை

''ஸ்வாமியின் விரக்தி அதிவிலக்ஷணமானது. கிரஹஸ்தாச்ரமத்தில் படும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளச் சிலரும், பல மடங்களுக்கு அதிபதியாகலாமென்கிற ஆசையால் பலரும் துரீயாச்ரமிகளாக மாறுகின்றனர். நம் ஸ்வாமிக்கோ க்ருஹஸ்தாச்ரமத்தில் அபரிமிதமான வஸதிகளும், ஐஹிக ஸாதனங்களும் நிரம்பியிருந்தன. அத்தையெல்லாம் விட்டு துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டது தான் பெரிய த்யாகம்''.

திருக்கள்ளம் ஸ்ரீ.உப.வே. நரஸிம்ஹராகவாசாரியர் ஸ்வாமி.

''வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களும் பகவத் விஷயமறிந்தவர்கள் என்ற நிலை ஸ்வாமியிலுலேயே ப்ரகாசப்படுத்தப்பட்டது. மடம் முநித்ரயம் என்கிற ஸம்ப்ரதாய பேதம் லேசதோபி கிடையாது''.

திருமதி சௌந்திரா கைலாஸம் அம்மையார். டெல்லி ஸுப்ரீம் நீதி மன்றத்து முன்னுள் நீதிபதி கனம் திரு P. S. கைலாஸம் அவர்களின் துணைவியார்.

''நீண்டவனே பெரும்புகழில் நிலைத்தவனே —திருக்குடந்தை
ஆண்டவனே செந்தமிழால் ஆனவனே !
சாந்தம் வளரும்படியருளும் வைணவத்துப் பூந்தமிழே !
நூலாயிரம் கற்றுலும் நுண்ணறிவு பெற்றுலும்
நாலாயிரம் தோய்ந்த நலம் வருமா? உனதிரண்டு
காலாயின கமலம் கண்டு கசிந்துருகிப்
பாலாயின மொழியைப் பருகி வளர்கின்றேம்''.
''நாலாயிரத்தெழிலே ! நாநலமே ! நாளெல்லாம்
மேலாயின காட்டும் விளக்கொளியே ! மறைகாட்டில்
பூத்த மலர் மணமெல்லாம் புகுந்து புகுந்தள்ளிவரும்
காற்றுக வந்து களிப்பருளும் மன்னவனே !
எத்தனை நற்பிறவிகளில் என்ன தவம் செய்தனளோ
தங்கத் திருநாவில் தமிழ்த்தாய் நடம் புரிய !
நினைக்கின்ற பொழுதே நெஞ்சினடித் தளத்தில்
இனிக்கும் தமிழன்றே எப்பொழுதும் பேசுவது !''
''தேனுக ஆண்டவன் நீ சிந்துமுரை கேட்பவர்க்குத்
தானுக ஊறும் தமிழின் சுவை தெரியும்.
சும்மாவா ! வெட்டவெளிச் சொல்லழகா ! கேட்டவுடன்
வெம்மாயைத்திரைவிலகும் வேதப்பொருள் புரியும்''.
''முன்னிரு வினையும்போக முடிவிலா இன்பம் சேர
பன்னிரு நாமத்தோயே ! பாலிக்க அருள் என்றிங்கே
நின்னிரு பாதம் வீழ்ந்தோம் நெகிழ்ந்தனம் எங்கள் நெஞ்சே''.

சென்னை, தி. நகர், அட்வகேட் விளக்குடி ஸ்ரீ. உ. வே. R. கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி

''நமது ஆசிரமத்தின் புகழ் மாசி புஷ்யத்தில் தோன்றி பங்குனி புஷ்யத்தில் நன்றுக தழைத்தோங்கி வளர்ந்து இருக்கிறது. ஸ்ரீ பெரியாண்டவனைப் போலவே அதிமானுஷ்யமான ஒரு ஜ்ஞானத்தை உடையவராயும், நாலாயிர திவ்யப்ரபந்தம் முழுதும் உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்ந்து உரைப்பவரும், தன்னுடைய இனிமையான உபந்யாஸங்களாலும், காலக்ஷேபங்களாலும், தெளியாத மறை நிலங்கள் பல தெளிய வைப்பவரும், பாரதம் முழுவதும் பரவிய புகழை உடையவருமான ப்ரக்ருதம் ஆண்டவன் ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அவதரித்த திருநக்ஷத்திரம் ''புஷ்யமே''. பெரியாண்டவனுடைய திருநக்ஷத்திரத்தையும் நம்மாண்டவனுடைய திரு நாமத்தையுமுடைய இவர் ஜ்ஞானத்திலும் உபந்யாஸத்திலும் இருவரையும் கொண்டிருக் கிறார் என்பது யாவரும் அறிந்த விஷயம். எம்பெருமானுர்க்குத் ''திருப்பாவை ஜீயர்'' என்றொரு சிறப்புப் பெயர் இருந்ததாகக் கேள்வி. நமது ப்ரக்ருதம் ஆண்டவனுக்கும் அந்தப் பெயர் பொருந்தும். ஸ்ரீ பாஷ்யகாரர் மதத்தை இந்நாட்டில் வேரூன்றச் செய்தது ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன். அதை இன்று தழைத் தோங்கச் செய்வது நமது ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி''.

Shri. Ubha. Ve., Prof. A. Srinivasa Raghavan, of Pudukkottai.

"Shrimad Andavan's love for the worship of the gods in the Divya-Desas, his passion for Tiruvaimozhi and his yearning for the concourse of ShriVaishnavas have endeared him to all. We are fortunate to have him in our midst spreading the fragrance of Thiruvaimozhi and devotion to the Archavatara".

Shri. S. Nijalingappa, (Former) Chief Minister of Mysore.

"Srimad Andavan has made tremendous contribution towards the spiritual upliftment of the people. His Holiness has made a deep study of Hindu Philosophy and interprets it in easy and understandable language to the masses and people whom He is happy to meet. I have had occasion to hear Him and be enlightened".

Shri. M. Ananthasayanam Ayyangar Former Governor of Bihar State.

"I have had the pleasure of having His Darshan in His purvashram and hearing His discourses on Prabandham and His religious and philosophical discourses at Delhi. He is one of our eminent scholars in visishtadvaita philosophy. As an early age he dedicated Himself to the propagation of our sampradaya. His discourses were highly interesting and instructive. His acceptance of the Ashram is the highest sacrifice that He has made for the benefit of ShriVaishnavas. His sweet temper, His knowledge and life of devotion has endeared Him to one and all of ShriVaishnava irrespective of Paramparas to which they may belong".

ஸ்ரீ :

ஸ்ரீ பெரியாண்டவன் வாழித்திருநாமம்

நமஸ்தஸ்மை ஸ்ரீநிவாஸ லக்ஷ்மணஹ்வய யோகினே |
ஸ்ரீமத்வேதாந்த ராமானுஜார்த்த ஸார்வக்ஞ சாலினே ||
தேசிகேந்த்ர தயா பாத்ரம் தாஸ வாத்ஸல்ய சேவதிம் |
யதீந்த்ரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகமாச்ரயே ||

வாழி திருவரங்க மாநகர் சீர்மாதகவால்
வாழி ஸ்ரீநிவாஸ முனி மாணடிகள்—வாழியவே
வேதமொரு நான்கும் வியன்தமிழின் மாமறையும்
தீதறு நங்கட்கருளும் சீர்.

வேதப் பகைச்சமயம் வேர்கலோவோன் வாழியே
வேதாந்த தேசிகர்போல் வீறவந்தோன் வாழியே
நீதிநெறி தவருமல் நிறுத்திஞேன் வாழியே
நேசமுடனுசாரம் நீளவைத்தோன் வாழியே
காதலுடன் தமிழ் மறையின் கருத்துரைப்போன் வாழியே
கருது தொண்டர் குழாத்தை நன்கு காத்தளிப்போன் வாழியே
பூதபுரீசனே மனத்துட் பொருந்தவைப்போன் வாழியே
புகழ் ஸ்ரீநிவாஸகுரு பூதலத்தில் வாழியே.

வேதயுகந்தான் வாழ வேதியர்கள் தாம் வாழ
ஏதமிலிராமானுசன் வாழ—மாதவனூர்
மன்னிய கோயில் ஸ்ரீநிவாஸனெனும் மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

ஸ்ரீ :

ஸ்ரீ பெரியாண்டவன் மங்களம்

ஜ்ஞானனுஷ்டான வைராக்ய சேவதி: ச்ரித வத்ஸல:|
ஸ்ரீநிவாஸயதீந்த்ரோ மே ஸன்னிதத்தாம் ஸதா ஹ்ருதி||

வேதமார்க்க ப்ரதிஷ்ட்டாத்ரே வேதாந்த ஜ்ஞான சாலிநே|
ஸ்ரீநிவாஸ யதீந்த்ராக்ய தேசிகாயாஸ்து மங்களம்||

பரவாதீபலிம்ஹாய பரிவ்ராஜக பூப்ருதே|
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸர்வஜ்ஞாயாஸ்து மங்களம்||

த்ரமிடோபனிஷத்ஸார ஜ்ஞாத்ரே வித்வத்ஸுரத்ரவே|
விக்யாத வைபவாயாஸ்து தேசிகாந்த்ராய மங்களம்||

ரஹஸ்யத்ரய ஸாராதி க்ரந்தஸாரஸ்ய வேதினே|
ராஜீவஸம நேத்ராய யமிராஜாய மங்களம்||

ப்ரபத்தி சாஸ்த்ரஸாரம் ய ஏகோ வேத்தி மஹீதலே|
ப்ரபன்னர்த்தி ஹராயாஸ்து தஸ்மை பஹுள மங்களம்||

நாத ஸ்ரீயாமுனசார்யோ யச்ச ஸ்ரீலக்ஷ்மணஹ்வய:|
தந்முநித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாயாஸ்து மங்களம்||

ரங்கேசபதி வேதாந்த லக்ஷ்மணஹ்வய யோகிநா|
ஸமர்பித பராயாஸ்து ஸத்வோத்ரிக்தாய மங்களம்||

ய: கும்ப மாஸி புஷ்யர்க்ஷே ஹ்வயதீர்ணச்சுபான்விதே|
தஸ்மை ஸ்ரீ ஸ்ரீநிவாஸாக்ய தேசிகேந்த்ராய மங்களம்||

சடஜித் ஸ்ரீபாஷ்யகாரோ யச்ச வேதாந்த தேசிக:|
ததாசார்ய த்ரயாம்சாய தஸ்மை ச்ரேஷ்டாய மங்களம்||

யதீந்த்ரஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜ குரூத்தமாத்|
அவாப்த ஸகலார்த்தாய குரவே பூரி மங்களம்||

ஜ்ஞானபக்தி விரக்த்யாதி கல்யாணகுண சாலிநே|
ஜ்ஞான ப்ரதாநைக்கண்டாய தஸ்மை நாதாய மங்களம்||

த்ருத த்ரிதண்டஹஸ்தாய ஸுர்த்வபுண்ட்ர விசோபிநே|
சுப்ரஸ்ரீ யஜ்ஞஸுத்ராய தஸ்மை சுத்தாய மங்களம்||

யஸ்யானுகம்பயா மந்தோப்யத்வா வ்யாக்ருதிக்ருத் பவேத்|
ஸ்ரீவாஸ தேசிகேந்த்ராய தஸ்மை பவது மங்களம்||

தத்தேசிக க்ருபா பூம்நா ஸ்ரீராமகவி நிர்மிதம்|
தந்மங்களம் ஸுபடதாம் மங்களம் படதி த்ருவம்||

வேதசீர்ஷ ரஸஜ்ஞாய வேதாந்தாசார்ய பக்தயே|
ஸ்ரீநிவாஸ யதீந்த்ராக்ய தேசிகாய நமோ நம:||

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:

கல்யாண மாவஹது கார்த்தயுகம் ஸ்வதர்மம்
ப்ரக்யாபயந் ப்ரணிஹிதேஷு நராதிகேஷு |
ஆத்யம் கமப்யதிகதோ ரதம் அஷ்டசக்ரம்
பந்து: ஸதாம் பதரிகாச்ரம தாபஸோ ந: ||

ஸ்ரீரங்க த்விரத விருஷாத்ரி பூர்வகேஷு
ஸ்தானேஷு ஸ்திரவிபவா பவத்ஸபர்யா |
ஆகல்பம் வரத விதூத வைரி பக்ஷா
பூயஸ்யா பவதனுகம்பயைவ பூயாத் ||

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ரங்கனாத மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே பாதுகா ஸேவக ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே கோபாலார்ய மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே வகுள பூஷண மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ரங்கநாயக்யை நம:

ஸ்ரீ ரங்கனாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கனாத திவ்யமணிபாதுகாப்யாம் நம:

ஸ்ரீ மத்யை கோதாயை நம:

ஸ்ரீ கோமளவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீமதபர்யாப்தாம்ருத
பரப்ரஹ்மணே நம: